
THAIVEEDU APRIL 2024 ஏப்பிரல் www.thaiveedu.com

# தாய்வீடு

## நினைவோடு ஒரு நினைவேடு



ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law



Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Your Trusted Realtor
Buying Selling Leasing Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
25 Karachi Drive #15, Markham ON L3S 0B5 - Office 905.209.8080
Dir. 416.803.7344
www.reon.ca


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent
416-939-8789
647-347-8790
thevenk1.tk@gmail.com
theven.kankesu@mtgarc.ca
50 New Delhi Dr, Unit 113,
Markham, ON L3S 0B5


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage*


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

# போர் எனும் பெருவணிகம்!

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
ரமணி (இலங்கை),
சௌந்தர் (இங்கிலாந்து),
றஷ்மி (இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
K. கிருஷ்ணராஜா,
சர்வேசன்,
துசியந்தன் துரைரத்தினம்.

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஜயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,
சசி,
மெய்யழகன்.

**மொன்றியால் தொடர்பு**
சுகுமாரன் சின்னையா.

**ஒட்டாவா தொடர்பு**
அலெக்ஸ் சிவசம்பு: 613-276-7253

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel :416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்புப் போரும் அதற்கெதிரான உக்ரைனின் தற்காப்புத் தாக்குதல்களும் இரண்டு ஆண்டுகளைக் கடந்தும் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. 2022 பெப்பிரவரி 24-ஆம் நாள் ரஷ்யா உக்ரைனை ஊடுருவியபோதே இந்தப் போர் உலகத்தின் கவனத்தைப் பெற்றதெனினும், 2014-ஆம் ஆண்டிலிருந்தே ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் போர்முனைப்புடனான முறுகல் நிலை நிலவிவந்திருக்கிறது. இதே காலகட்டத்திலேயே உக்ரைன், நேட்டோ அமைப்பில் முழு உறுப்பினராக இணைந்துகொள்வதற்கு உக்ரைனிய மக்களிடையே ஆதரவு வலுத்தது என்பது தற்செயலானது அல்ல.

சோவியத் யூனியன் உடைந்தது முதலே, முன்னர் சோவியத் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நேட்டோ பெருமுயற்சியெடுத்து வந்திருக்கிறது. அந்த முயற்சியின் பயனாகவே முதலில் 1999-இலும், பின்னர் 2004-இலும், மீண்டும் 2009-இலும் என பன்னிரண்டு முந்நாள் சோவியத் கூட்டு நாடுகள் நேட்டோவிலே இணைந்து கொண்டன. தொடர்ந்து 2017-இலே மொன்ரிநீக்ரோவும், 2020-இலே வட மசிடோனியாவும் இணைந்துகொண்டன. உக்ரைன் முழுமையான அங்கத்துவ நாடாக இதுவரை இணைந்துகொள்ளாவிட்டாலும், நேட்டோவின் பங்காளி நாடாக ஒத்துழைத்துவருவதோடு, முழுமையான அங்கத்துவ நாடாக ஆவதற்கும் முனைப்புக் காட்டிய நிலையிலேயே ரஷ்யாவின் ஊடுருவல் நிகழ்ந்தது.

ரஷ்யாவின் இந்தச் சமநிலை மீறலை நேட்டோ சார்ந்த மேலைத்தேய நாடுகளெல்லாம் பெருங்குரலெடுத்துக் கண்டித்தன. தம் கோபத்தை வன்மையாக வெளிப்படுத்தின. ரஷ்யாவின் நடவடிக்கையால் உலக அமைதிக்குப் பங்கமேற்பட்டிருப்பதாகப் பரிதவித்தன. தத்தமது நாடுகளில் உக்ரைனுக்காக மக்களாதரவைத் திரட்டின. உக்ரைனிலிருந்து வெளியேறிய மக்களுக்குத் தமது நாடுகளில் தாமதமின்றித் தஞ்சமளித்தன. உக்ரைனில் எஞ்சியிருந்த மக்கள் ரஷ்யாவை எதிர்த்துப் போரிட ஏதுவாக பணமும் ஆயுதங்களும் அனுப்பிவைத்தன. உக்ரைன் அதிபர் வொலடிமிர் செலன்ஸ்கியைத் தமது நாடாளுமன்றங்களுக்கு அழைத்து மதிப்பளித்து, போரைத்தொடர உற்சாகமூட்டின. மேற்குலகின் சஞ்சிகைகள் பலவும் தம்பங்குக்கு செலன்ஸ்கியையும் அவரின் துணைவியாரையும் கவர்ச்சிகரமான கோணங்களில், இராணுவத் தளபாடங்களோடு படம்பிடித்து வழுவழுப்பான பங்கங்களில் வெளியிட்டு செலன்ஸ்கியை ஒரு ஹொலிவூட் நாயகன்போல உருவகித்துப் புளகாங்கிதமடைந்தன.

இதனிடையே அதிகம் சந்தடியில்லாமலும் சில முக்கிய நிகழ்வுகள் நடந்தேறின. இரண்டாம் உலகப் போரின் முடிவில், உலக நாடுகள் பலவும் அமெரிக்கத் தலைமையின் கீழும் சோவியத் யூனியனின் தலைமையின் கீழும் எதிரெதிராக அணிதிரண்டபோது, தமது நடுநிலைமையை வலியுறுத்தி அணி-சேராது அடம்பிடித்து, அந்த வைராக்கியத்தை இவ்வளவு காலமும் காப்பாற்றிவந்த பின்லாந்தும் சுவீடனும், அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்ற பழமொழிக்கு உதாரணமாகின. 2023-இல் பின்லாந்தும், 2024-இல் சுவீடனும் நேட்டோ அமைப்பின் அங்கத்துவ நாடுகளாகின.

இந்த நேட்டோ அங்கத்துவ நாடுகள் அவ்வப்போது தாமே உலக அமைதியின் காவலர்கள் என்பது போலவும் உலகின் அநீதிகளுக்கு எதிரான போர்க்குரல்கள் என்பது போலவும் அறிக்கை வெளியிட்டுக்கொண்டிருந்தாலும், சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் பின் நேட்டோ அமைப்பு அனைத்துலக ஆயுத வியாபாரத்துக்கான ஒரு முகவர் அமைப்புப் போலவே செயற்பட்டுவந்திருக்கிறது என்பது கண்கூடு. இதற்கு ஆதாரந்தேட நாம் வெகுதூரம் செல்லவேண்டியதில்லை. கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் உலகின் அனைத்து நாடுகளுமே வாழ்வாதாரம் இழந்து தவித்த தமது மக்களின் நிவாரணத்துக்கான திட்டங்கள் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்க, நேட்டோவின் தலைமை மட்டும் தமது அங்கத்துவ நாடுகள் தாம் தீர்மானித்த அளவுக்கு பாதுகாப்புச் செலவினங்களைச் செய்யவில்லை என விசனப்பட்டுக்கொண்டிருந்தது. ஆனால், உக்ரைன் - ரஷ்யப் போர் ஆரம்பித்தபின் - நேட்டோவைப் பொறுத்தரை - நிலைமை முன்னேறியிருக்கிறது. நடக்கும் 2024-ஆம் ஆண்டின் இறுதிக்குள் பெரும்பாலான அங்கத்துவ நாடுகள் தமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு விழுக்காட்டைப் பாதுகாப்புச் செலவுகளுக்காக ஒதுக்கும் என்பதை நேட்டோவின் செயலாளர் நாயகம் மகிழ்ச்சிபொங்க அறிவித்திருக்கிறார்.

அவரின் மகிழ்ச்சியிலும் அர்த்தமிருக்கிறது. உலகின் மிகவும் செல்வமிக்க நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு விழுக்காட்டைப் பாதுகாப்புக்குச் செலவிடவேண்டும் என்பது நேட்டோ தனது அங்கத்துவ நாடுகளுக்கு விதிக்கும் மிக முக்கியமான விதி மட்டுமல்ல, போர் என்ற பெருவணிகத்துக்கான மூலதனமும் ஆகும்.

இம்முறை, நேட்டோ இந்த அடைவை எட்டுவதில் உக்ரைன் மீதான போரை நீடித்த ரஷ்யாவின் பங்களிப்பும் கணிசமானது என்பதே நாம் கூர்ந்து நோக்கவேண்டியது.

# இம்மாதத் தாய்வீட்டில்...


போர் எனும் பெருவணிகம்! 3

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் இலக்குகளும் இலக்கங்களும் 5
- தமிழகன்

செயற்கை நுண்ணறிவு – பயன் பாட்டுத் தளங்களும் விளைவு களும்
மனித இருப்பியலுக்கு அச்சு றுத்தலா? 8
- ரூபன் சிவராஜா

ட்ரோன் அரசியல் 12
- ரதன்

கல்வி மேம்பாடு
அறிவுபூர்வமாகச் சிந்திப்போம் 17
- அகமட் பிஸ்தாமி

கற்றல்,
கற்பித்தலும் தொழினுட்பமும் 20
- த. சிவபாலு

அங்காதிபாதம் 400
கன்மநிவர்த்தி 22
- பால. சிவகடாட்சம்

கணினிசார் பயன்பாட்டுக்கு அடிமையாகும் சிறுவர்கள் 24
- சுப்ரமணியம் ஜெயசீலன்

Blockchain தொழினுட்பமும் எதிர்கால உலகநடத்தைகளும் 26
- சின்னத்தம்பி குருபரன்

வசந்தகால வீட்டுப் பராமரிப்பு 28
- வேலா சுப்ரமணியம்

காப்புறுதியில் தவறான கருத்துகள் 30
- செந்தூரன் புனிதவேல்

வேலைக்குச் செல்லும் குழந்தைகள்: ஒரு பார்வை 32
- சி. நற்குணலிங்கம்

நாடு சிறக்க ஐந்து அணிகள் 34
- குமார் புனிதவேல்

உளவும் உழவும்... 36
- வேதநாயகம் தபேந்திரன்

பூர்வீக அமெரிக்கர்கள் எங்கு வாழ்ந்தார்கள்? 38
- குரு அரவிந்தன்

கருப்பும் வெள்ளையும் சாம்பலுமாக ஒரு பிரமயுகம்! 41
- ஓவியர் ஜீவா

தெய்வமாடும் சடங்கின் தனித்தலும் இணைத்தலும் மேனாட்டார் கோட்பாடுச் சிந்தனைக ளூடான ஓர் ஒப்பியல் நோக்கு 44
-சந்திரசேகரன் சசிதரன்

‘அறிவோம் தமிழர் பண்பாடு’ பொன்னையா விவேகானந்தனுடன் மலையகத்தில் ஓர் உரையாடல் 50
- பதுளை மனோ

‘செல்... வா... சேர்’
ஓர் ஆசிரியருக்குக் கிடைத்– திருக்கும் மகா அங்கீகாரம்! 52
- நா. கிருஷ்ணகுமார்

கவிதைக்கான காலாண்டிதழாக வெளிவந்த ‘வடம்’ 55
- மல்லியப்புசந்தி திலகர்

நீர்வழிப்படூஉம் 58
பொ. கருணாகரமூர்த்தி

ஈழத்தில் முற்போக்கு இலக்கியமும் வ.அ. இராசரத்தினம் கதைகளும் 60
- ஜிஃப்ரி ஹாசன்

கவிஞர் எஸ்தரின் ஊதா நிறத்துப் பெண்கள் 64
- பொ. திராவிடமணி

பொருநை முதல் நயாகரா வரை 66
- நெல்லை ஜெயசிங்

மேன்மக்கள் சரித்திரம் 69
- கந்தையா சண்முகலிங்கம்

சங்க நூல்களில் முதற்பதிப்புகளும் மறுபதிப்புகளும் 75
- சு. வேணுகோபால்

திருமலை நவத்தின் 1990:
திருமலையின் துன்பியலைப் பாடும் பாணன் 80
- மு. நித்தியானந்தன்

ஈழத்தின் முதற் பெண் கவிஞர் குறித்த விவாதம்:
பேராசிரியர் செ. யோகராசா ஆய்வுகளினூடான தேடல் 86
- சின்னராஜா விமலன்

ஒரு நூலின் உருவாக்கம்:
ஆசிரிய–வெளியீட்டாளருக்கான கைந்நூல் 91
- என். செல்வராஜா

நினைவோடு ஒரு நினைவேடு
- எஸ். ஜெகதீசன் 96
- பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் 101
- பால. சிவகடாட்சம் 102
- வாரணன் கந்தவனம் 104
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா 106
- துஷி ஞானப்பிரகாசம் 110
- தீவகம் வே. இராசலிங்கம் 113
- ‘வெற்றிமணி’ மு.க.சு. சிவகுமாரன் 114
- ஆர்.என். லோகேந்திரலிங்கம் 117
- குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன் 122
- கதிர் துரைசிங்கம் 126
- குரு அரவிந்தன் 128
- மா. சித்திவினாயகம் 131
- குமரகுரு கணபதிப்பிள்ளை 133
- போல் ஜோசேப் 136
- மல்லியப்புசந்தி திலகர் 138
- சேகர் தம்பிராஜா 140
- மனுவல் ஜேசுதாசன் 142
- இயல்வாணன் 144
- த. சிவபாலு 148
- டிலிப்குமார் 152

மனுநீதி 154
– த. ஜீவராஜ்

வவுனியா வடக்கில் பிராமி, தமிழ்க் கல்வெட்டுகள் 157
- நெடுங்கேணி சானுஜன்

இராசேந்திர சோழன் ஆட்சியில் சைவமும் பௌத்தமும் ஈழமும் சோழமும் 162
- வி. துலாஞ்சனன்

இனப் படுகொலையின் அரசியல்
இனப் படுகொலையின் வரலாற்று வழித்தடம் 165
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

தங்கமானவன் பாரதி 171
- கிருங்கை சேதுபதி

கம்பனின் கருவூலம் திறந்து... 174
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

காவலன் காவான் எனின்...? 178
- உஷாதீபன்

சுஜாத்தா 183
- அ. கந்தசாமி

கடைசிக் கேள்வி 189
- ஐசாக் அசிமோவ்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்




தேர்தல் நாள் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஏப்ரல் 19, 2024 அன்று தேர்தல் நடைபெறவுள்ளது.

அடுத்த ஒன்றிய அரசை யார் கைப்பற்றுவது என்பதைத் தீர்மானிக்கும் போட்டி. ஜூன் 4-ல் எல்லாம் வெளிச்சத்திற்கு வந்துவிடும். அரசியல் கட்சிகளின் அணி சேர்க்கைகளும் வியூ



கங்களுமே முடிவுகளைத் தீர்மானிக்கும் துப்பாக்கித் தோட்டாக்கள். தேசியளவில் தேர்தல் நடந்தாலும் மாநிலக் கட்சிகளே முடிவுகளைத் தீர்மானிப்பதில் முதன்மையான பங்கு வகிக்கின்றன.

இரு தேசியக் கட்சிகளான காங்கிரசும் பாஜகவும் மாநிலக் கட்சிகளுடன் கூட்டுச் சேரவே தீவிர முயற்சிகள் எடுக்கின்றன. மாநிலக் கட்சிகளோ தங்கள் கட்சி மற்றும் தலைமையின் நலனை முன்வைத்தே தேசியக் கூட்டணிகளை நோக்கிச் செல்கின்றன. இந்தத் தேர்தல் களக் காட்சிகள் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. இதில் ஒவ்வொரு கட்சிகளும் தனக்கேயுரிய தன்மைகளோடும் வியூகங்களோடும் தேர்தல் போரில் குதித்துள்ளன.

### பாரதிய ஜனதாக் கட்சி:

பாஜக எப்போதும் தந்திரங்களையே தன் அரசியல் வியூகங்களாகக் கொண்டுள்ளது. மக்கள் பிரச்சினைகள் அதற்கு இரண்டாம் பட்சமே. பாஜகவின் அரசியல் தந்திரங்களைப் பின்வருமாறு தொகுத்துக் காணலாம்.

- மாநிலக் கட்சிகளைப் பிளவுபடுத்துவது, அக் கட்சிகளுக்குள்ளிருக்கும் உள் முரண்பாடுகளைச் சரியாகப் பயன்படுத்தி அதன் ஒரு பிரிவைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வருவது.
- சாதி, மதம், இனம், பிரதேசம் போன்ற சமூகத்திலிருக்கும் வேறுபாடுகளைக் கூர்மைப்படுத்திப் பிளவுகளைப் பெரிதாக்கி அதில் ஒரு பிரிவினரின் வாக்குகளைப் பெறுவது.
- சாதி, மத, இனம் போன்ற ஏதேனும் அடிப்படையில் பெயருக்குச் சிறு கட்சி நடத்தும் நபர்களை ஒன்று சேர்த்துத் தன் பக்கம் கொண்டு வருவது.
- வாய்ப்புள்ள இடங்களில் சமூக முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்திக் கலவரங்களை ஏற்படுத்தி அதன் மூலம் வாக்குகளைப் பெறுவது.
- கடவுள், மதம், புனிதம் போன்ற போர்வையில் மூட நம்பிக்கைகளை வளர்ப்பது, இதன் அடிப்படையில் சமூகங்களுக்கிடையிலான வெறுப்பை உருவாக்குவது.
- அமலாக்கத்துறை போன்ற ஒன்றிய விசாரணை அமைப்புகளை ஏவி எதிர்க் கட்சிகளைப் பணிய வைப்பது.

### பாஜக எதிர்ப்பு அரசியல்:

பாஜக எதிர்ப்பு அரசியல் இன்று இந்தியாவின் முதன்மையான அரசியலாகவுள்ளது. எதிர்க் கட்சிகள் மட்டுமின்றி ஜனநாயக அமைப்புகளும் சமூக சிந்தனையாளர்களும் மிகக் கடுமையாக இதனை எதிர்த்து வருகின்றனர். பாஜக எதிர்ப்பு அரசியல் அமைப்புகள் மற்றும் கட்சிகள் கீழ்க்கண்ட நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

- மாநில உரிமைகளைப் பறிப்பது மட்டுமின்றி, காஷ்மீர் மாநிலச் சிறப்பு நிலையை ஒழித்துக் கட்டியது. ஆளுநர்கள் மூலம் எதிர்க் கட்சியினர் ஆளும் மாநில அரசைச் செயற்பட விடாமல் முட்டுக் கட்டை போடுதல்.
- ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒன்றிய அரசுத் திட்டங்களுக்கு இந்தியில் பெயர் வைப்பது போன்ற நடவடிக்கைகள் மூலம் நாட்டின் பன்முகத் தன்மைக்கு வேட்டு வைப்பது.
- நீட் தேர்வு மற்றும் புதிய கல்விக் கொள்கை போன்றவை மூலம் சமுதாயத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள மக்களின் வளர்ச்சியைத் தடுத்தல்.
- பொதுத் துறை நிறுவனங்களை அடிமாட்டு விலைக்கு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு விற்பது, பெரும் பணக்காரர்களுக்குக் கடன் தள்ளுபடி மற்றும் வரித் தள்ளுபடி அளித்தல். மேலும் பெரும் பண முதலைகள் பெருந்தொகையான கடனை வாங்கிக் கொண்டு வெளிநாடுகளுக்குத் தப்பியோட உதவுதல்.
- பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு மற்றும் சுங்கச் சாவடி முதலியவற்றின் விலை மற்றும் கட்டணங்களை அடிக்கடி உயர்த்தி விலைவாசி உயர்வுக்கு வழி வகுத்தல்.
- குற்றவியல் சட்டங்களை மாற்றி அவற்றுக்கு இந்திப் பெயர் வைத்தது. தொழிலாளர் சட்டங்களைத் திருத்தி நாசப்படுத்தியது மட்டுமின்றி குடியுரிமைச் சட்டத்தைத் தனது அரசியல் லாபங்களுக்காக மாற்றியது.

இவ்வாறு மக்கள் விரோத மனப்பான்மையுடன் இந்தியாவின் பன்முகத் தன்மை, சமூக நீதி, சமத்துவம் முதலிய அடிப்படை ஜனநாயகக் கொள்கைகளைப் பாஜக அரசு அழித்து வருவதால் அனைத்து ஜனநாயக சக்திகளும் ஓரணியில் திரள வேண்டும் என்ற கருத்து பரவலாக உருவானது.

## இந்தியாக் கூட்டணி:

காங்கிரஸ் தலைமையில் பல்வேறு எதிர்க் கட்சிகள் இணைந்து இந்தியாக் கூட்டணியை உருவாக்கினர். இக் கூட்டணி பலமான அரசியல் சக்தியாக உருவெடுத்துள்ளது. எனினும் மேற்கு வங்காளம் மற்றும் பீகார் போன்ற மாநிலங்களில் சற்றுச் சல சலப்பைச் சந்தித்து வருகிறது. குறிப்பாக, மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி இந்தக் கூட்டணிக்கு முழுமையான ஆதரவைத் தரவில்லை. ஏனெனில் மேற்கு வங்கத்தில் இவருக்குப் போட்டி, காங்கிரஸ் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சிகளே. இந்தக் கட்சிகள் இந்தியாக் கூட்டணியில் உள்ளவையே.

தென்னிந்தியாவைப் பொறுத்தவரை இந்தியாக் கூட்டணி பலமாகவுள்ளது. மேலும் பல்வேறு உள் முரண்பாடுகளைக் கொண்டுள்ள காரணத்தால் இந்தியாக் கூட்டணி தன் பிரதமர் வேட்பாளரை அறிவிக்க முடியவில்லை. பாஜக இதனை ஒரு பலவீனமாகச் சுட்டிக்காட்டிப் பரப்புரை செய்து வருகிறது.

## தமிழ்நாட்டின் தேர்தல் களம்:

தமிழ் நாட்டில் நான்கு முனைப் போட்டி ஏற்பட்டுள்ளது. பாஜக ஆதரவு - பாஜக எதிர்ப்பு என்ற அடிப்படையில் அமைய வேண்டிய போட்டியானது பல உள் முரண்களின் குழப்ப அரசியலாக மாறியுள்ளது.

இந்தியாக் கூட்டணியிலிருக்கும் திமுகக் கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் நீண்ட கால அரசியல் ஒருங்கிணைப்பைக் கொண்டுள்ளன. பாஜகவை வீழ்த்துவது, மாநில உரிமை மற்றும் சமூகநீதி ஆகிய அடிப்படைகளை முன்வைத்து இக் கூட்டணி ஆக்கபூர்வமாகச் செயற்பட்டு வருகிறது.

அதேவேளை பாஜகவால் ஊட்டி வளர்க்கப்பட்ட எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அதிமுக பெரும்பாலும் திமுகவின் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டது. எனினும் எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியில் பாஜக சொன்னதையெல்லாம் செய்தது. மேலும், அகில இந்தியளவில் நடைபெறும் இத் தேர்தலில் ஒன்றிய அரசு அமைக்க யாருக்கு ஆதரவு அளிப்பது என்பதை வெளிப்படையாகக் கூறவில்லை. வெற்றி பெற்றால் பாஜகவுக்கே அதிமுக ஆதரவளிக்கும் என்கிற கருத்தை முழுமையாக மறுத்துவிட முடியாது.

இக்கூட்டணியிலுள்ள சிறுசிறு கட்சிகளுக்குக் கொள்கை எதுவுமில்லை. அவ்வப்போது சந்தர்ப்பத்திற்கேற்பத் தலைமையின் சொந்த நலனுக்காகப் பேசி வருபவை. இவை ஒரு நகராட்சிக் கவுன்சிலர் இடத்தைக் கூடத் தனித்து நின்று பெற முடியாதவை. எனினும் மிகவும் பலவீனமான தலைமையைக் கொண்டுள்ள நிலையில் அதிமுக பல கட்சிகளுடன் பலமான கூட்டணி அமைத்திருப்பது போன்ற ஒரு தோற்றத்தைக் காட்ட இச் சிறு கட்சிகளை இணைத்துக் கொண்டுள்ளது.

பாஜகக் கூட்டணியானது தமிழ்நாட்டில் ஒரு இடத்தைக் கூட பிடிக்க முடியாது என்பதை உணர்ந்தே உருவாக்கப்பட்டுள்ளது. அதிமுக கூட்டணியில் இணைந்தால் அதிமுகவின் தலைமையை ஏற்க வேண்டும் என்பதால் தனது தலைமையில் ஒரு கூட்டணியைப் பாஜக உருவாக்கியுள்ளது. இக் கூட்டணியில் வாக்கு வங்கி உள்ள ஒரே கட்சி பாமக மட்டுமே. பாஜக உள்ளிட்ட மற்றக் கட்சிகளுக்குக் குறிப்பிடத்தக்க வாக்கு வங்கியில்லை.

இந்த தேர்தலில் வெற்றி பெற முடியாது என்பதை உணர்ந்தே பாமக இக் கூட்டணியில் இணைந்துள்ளது. அடுத்து பாஜக ஆட்சி அமைந்தால் டாக்டர் அன்புமணியை மாநிலங்களவை உறுப்பினராக்கி ஒன்றிய அமைச்சர் பதவி பெற முயற்சி செய்யலாம் என்பதே பாமகவின் ஒரே நோக்கம்.

ஓ. பன்னீர்செல்வத்தை ஆரம்பம் முதலே பலவீனப்படுத்தி எடப்பாடியை வளர்த்தது பாஜக. ஆனால் இப்போது எடப்பாடி பாஜகவுடன் இல்லை. ஆனால் தமிழ் நாட்டில் இரண்டாவது பெரிய கட்சியின் தலைவராக இருக்கிறார். ஆனால் ஓ. பன்னீர்செல்வமோ பாஜகவிடம் ஒரே ஒரு இடம் வாங்கியிருக்கிறார். இது தற்செயல் நிகழ்வல்ல. இது பாஜகவின் அரசியல் தந்திரத்திற்கு கிடைத்த வெற்றியே.

பாஜக தமிழ்நாட்டில் ஒரு பிரமாண்டமான அரசியல் நடத்துவது போன்ற ஒரு நாடகத்தை நீண்ட காலமாகவே நடத்தி வருகிறது.

திமுக தலைவரும் முதல்வருமான மு.க. ஸ்டாலினுக்கெதிராக ஒரு வலிமையான அரசியல் தலைமையில்லாத நிலையை

மிகத் தந்திரமாகப் பாஜக பயன்படுத்தி வருகிறது.

இந்தச் சூழ்நிலையில் நாம் தமிழர் கட்சியின் மூலம் சீமான் ஒரு அரசியல் நடத்திக் கொண்டிருக்கிறார். திராவிட இயக்கத்தின் செயற்பாடுகள் காரணமாக இன்று தமிழ் நாடு பெற்றுள்ள நிலையைக் கண்டு வெறுப்படைந்துள்ள சக்திகளால் நாம் தமிழர்க் கட்சி வளர்கிறது. தொடக்கத்தில் ஈழம் இதன் களமாகவிருந்தது. எதிர்காலத்தில் திராவிட இயக்கங்களுக்கெதிரான ஒரு சக்தியாக உருவெடுக்கும் நோக்குடன் இது பயணித்துக் கொண்டுள்ளது.

## இலக்கங்களே இலக்கு:

நாடாளுமன்றத்தில் எத்தனை இடங்களில் வெற்றி பெறுகிறார்களோ அந்த இலக்கங்களே அனைவரின் இலக்கு என்றால் அது மிகையாகாது. இந்தத் தேர்தலில் பாஜக கூட்டணியும் இந்தியாக் கூட்டணியும் சம பலத்துடன் இருப்பதாகவே தோன்றுகிறது. இந்தி பேசும் வட மாநிலங்களில் இன்னும் பாஜகவுக்கு ஆதரவு இருப்பது போன்ற தோற்றமேயுள்ளது. எனினும் தெற்கு, மேற்கு, கிழக்கு என்று பிற பகுதிகளில் பாஜகவின் செல்வாக்குப் பெருமளவு சரிந்துள்ளது. தென் மாநிலங்களில் பாஜக படு தோல்வியைச் சந்திக்கும் என்பதை உறுதியாகக் கூறலாம்.

அதே வேளை இந்தியாக் கூட்டணியிலுள்ள மாநிலக் கட்சிகளில் சில உறுதியாக இல்லை. ஒரு பொது நோக்கில் ஒன்றிணையும் போது சில சொந்த நலன்களை விட்டுக்கொடுக்க வேண்டும். ஆனால் இந்தப் போக்கைக் காணமுடியவில்லை. மம்தா பானர்ஜி மற்றும் கெஜரிவால் போன்றவர்கள் காங்கிரசின் தலைமையை முழுமையாக ஏற்கவில்லை.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஒரு புதிய அரசியல் சூழலுக்கு மாறத் தொடங்கியுள்ளது. மாநிலத்தில் ஆட்சியைப் பிடிக்க முடியாது என்பதை உணர்ந்து மத்தியில் ஒரு பலமான சக்தியாக வரும் நோக்கில் தமிழ் நாட்டுக்கு வெளியே பல மாநிலங்களில் போட்டியிடுகிறது. பிற மாநிலங்களிலுள்ள தலித் மக்களை இணைக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் இந்தக் காய் நகர்த்தப்படுகிறது.

## நிறைவாக...

இந்தியா ஒரு பெரும் அரசியல் மாற்றத்தை எதிர்நோக்கி நிற்கிறது. இந்தியாக் கூட்டணி வெற்றி பெறுவதன் மூலமே அது சாத்தியமாகும். மிக மோசமான, அதேவேளை ஜனநாயக விரோதமான பாஜக அரசின் கடந்த பத்தாண்டு கால ஆட்சிக்கு ஒரு முடிவை மக்கள் வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.



thamizhagan@thaiveedu.com






பொதுவாகச் செயற்கை நுண்ணறிவின் எந்த வடிவங்களையும் பொறுப்புடன் பயன்படுத்துவது அவசியம். அதன் வரையறைகளையும் அதனால் ஏற்படக்கூடிய எதிர்பாராத ஆபத்தான விளைவுகளையும் கருத்திற்கொண்டு அதனைப் பயன்படுத்துகின்ற விழிப்புணர்வு இன்றியமையாததாகின்றது. அத்தகைய கவனங்கள் தான் செயற்கை நுண்ணறிவின் பாவனையை உகந்த பயன் விளைவுகளுக்கு இட்டுச் செல்லும்.

சமகாலத்தில் அதிகம் பேசுபொருளாகியுள்ள கணினி, இணையத் தொழில்நுட்பங்களில் முதன்மையானது செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence - AI). செயற்கை நுண்ணறிவு குறித்த தொழில்நுட்ப விடயங்களைப் பேசுவது இக்கட்டுரையின் முதன்மை நோக்கல்ல. அதன் பயன்பாட்டு வெளி மற்றும் விளைவுகள் குறித்த பார்வையாக அமைகின்றது. அதிலும் குறிப்பாகப் பாதகமான விளைவுகள் குறித்து அதிகம் கவனஞ் செலுத்துகின்றது.

செயற்கை நுண்ணறிவும் அறிவாற்றல் தொழில்நுட்பமும் வணிகத்தில் வெற்றி பெறுவதற்குரிய முதன்மை அம்சங்களாக மாறியுள்ளன. அவை அனைத்துத் தொழில்கள் மற்றும் துறைசார் நிறுவனங்களின் இயங்குதலிற் கணிசமாகச் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியுள்ளன.

செயற்கை நுண்ணறிவு என்றால் என்ன என்பதற்குரிய திட்டவட்டமான வரைவிலக்கணத்தினை முன்வைக்க முடியாது. அதன் பயன்பாட்டுப் பரப்பு பெரியது. மனித நுண்ணறிவினைக் கோருகின்ற செயல்களை, நிறைவேற்றக்கூடிய மனிதரால் இயக்கப்படுவதற்கு மாற்றான தானியங்கிக் கணினி சிஸ்ரம்களும் (Computer systems) அவை தொடர்பான கோட்பாடுகள் மற்றும் உருவாக்க விருத்தி என்பதாகச் செயற்கை நுண்ணறிவிற்கான விளக்கத்தினை அல்லது வரைவிலக்கணத்தினை முன்வைக்கலாம்.

## பன்முகப்பட்ட தொழிற்பாடுகள்:

செயற்கை நுண்ணறிவின் தொழிற்பாடுகள் பன்முகப்பட்டவை, பலவகைப்பட்டவையுமாகும். ஓரளவு அறியப்பட்ட ரோபோ வகைத் தொழிற்பாடுகளைக் கொண்ட தானியங்கிகளும் இந்தச் செயற்கை நுண்ணறிவின் விளைவுகளே. ஆனால் தற்போது அதிகம் பேசப்படுவதும் பயன்படுத்தப்படுவதுமான செயற்கை நுண்ணறிவின் கூறு அல்லது அதன் கணினித் தொழிற்பாட்டுத் தொழில்நுட்பம் ChatGPT எனப்படும் ஒரு மொழிச் செயலி (Generative language model) ஆகும். அதனைச் செயற்கை மொழிக் களஞ்சியம், எழுத்துருவாக்கி எனவாகவும் சொல்லலாம். 2022 நவம்பர் இதனுடைய வெளியீடு (Launch) நிகழ்ந்தது. குறித்த ஒரு பேசுபொருளைப் பற்றிய ஓர் உரையை (Text) எழுதித்தருமாறு, கட்டமைத்துத் தருமாறு எழுத்து மூலமோ, குரல் மூலமோ பயனாளர்கள் கோரும் பட்சத்தில் அது அவற்றை உருவாக்கித் தரும். அதற்குரிய வகையில் தகவல்கள், தரவுகள் உள்ளீடு செய்து பரீட்சித்துப், பழக்கியெடுக்கப்பட்டுள்ள இயந்திர அமைப்புமுறைமையில் (Machine learning methods) அது இயங்குகின்றது எனப்படுகிறது.

## ChatGPT எனும் மொழிச் செயலி:

ChatGPT-ற்கான தனியான செயலி (App) இதுவரை உருவாக்கப்படவில்லை. ஆனால் அதனைத் துணையாகப் பயன்படுத்தித் தொழிற்படுகின்ற பல செயலிகள் உள்ளன. ChatGPT-இனை கணினி, ஐபாட், ஸ்மார்ட் போன் ஆகியனவற்றில் இணைய உலாவி (Browser) மூலமாகப் பயன்படுத்த முடியும். அதற்கான இணைய முகவரி: https://chat.openai.com/.

பயனாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பது, அதாவது குறித்த ஒரு விடயம் சார்ந்த தகவல்களை வழங்குவது, ஆலோசனை வழங்குவது, உரை (Text) அடிப்படையிலான கதைகள் அல்லது கட்டுரைகளை உருவாக்குவது மற்றும் மெய்நிகர் உதவியாளராகச் செயற்படுவது உள்ளிட்ட தொழிற்பாடுகளை நிறைவேற்றுகிறது.

இது ஒரு அதிநவீன உரை உருவாக்க மாதிரியாகும். பயிற்சியளிக்கப்பட்ட அடிப்படையில் உள்ளீடுகளின் தன்மைக்கேற்பப் பதிலளிக்கிறது.

கூகிள் தேடு இயந்திரம், முகநூல், Siri, Alexa போன்ற மென்பொருட்கள் (Siri அப்பிள் உற்பத்திகளான ஐபோன், ஐபாட்

போன்றவற்றைக் குரல்வழிக் கட்டளைகள், வேண்டுகைகள், உரையாடல் மூலம் இயக்குகின்ற தொழில்நுட்பம், Alexa: கூகிளின் குரல்வழிக் கட்டளை, உரையாடல் தொழில்நுட்பம்) Netflix, Spotify போன்ற திரைப்பட மற்றும் பாடல் தளங்கள், தானியங்கிக் கார்கள், முகங்கள் மற்றும் முகபாவனைகளைக் கண்டறியும் Snapchat lenses, முகநூலில் தரவேற்றப்படும் படங்களை அடையாளம் காணும் தொழில்நுட்பம் ஆகியன அதிகமதிகம் செயற்கை நுண்ணறிவுப் பொறிமுறையில் இயங்குகின்றன.

### ஒளி, ஒலி, இசை, பாடல், குரல், ஓவியம்:

ஒளிப்படங்கள், ஓவியங்கள், காணொளிகள், இசை, குரல், பாடல்களைக் கூடச் செயற்கை நுண்ணறிவின் துணை கொண்டு புதிதாக உருவாக்கவும் மீளுருவாக்கவும் முடிகிறது. உதாரணமாகப் பண்டைய தமிழ் அல்லது கிரேக்க அல்லது இன்னபிற நாகரீகத்தைப் பிரதிபலிக்கும் ஓர் ஒளிப்படத் தொகுப்பினையோ, காணொளித் தொகுப்பினையோ, ஓவியத் தொகுப்பினையோ உருவாக்கித் தருமாறு வேண்டுகோள் விடுத்தால், அவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் ஒளிப்பட, ஓவிய, காணொளித் துண்டுகளைச் செயற்கை நுண்ணறிவு உருவாக்கிக் கொடுக்கின்றது.

அண்மையில் லால் சலாம் என்ற திரைப்படத்தில் மறைந்த பாடகர்களான சாகு ஹமீது மற்றும் பம்பா பாக்யா ஆகியோரது குரல்களைச் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் மூலம் இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான் மீளுருவாக்கம் செய்திருந்தார். அச்சொட்டாக இல்லாவிடிலும் அவர்களது குரலின் சாயலை அப்பாடலில் உணர முடிந்தது. அவர்களின் குரலின் 70 வீதத்தினைத்தான் கொண்டுவர முடிந்தது என ரகுமான் பிபிசித் தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியொன்றிற் குறிப்பிட்டிருந்தார். இச்செயலின் அறஞ் சார்ந்த சிக்கல் குறித்த கேள்விக்குப் பதிலளித்த அவர், அப்பாடகர்களின் குடும்பத்தினரின் ஒப்புதலுடனும், அதற்கான ஊதியத் தொகை அவர்களுக்கு வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டார். ஆகவே அதில் அறச் சிக்கல் என்பதற்கான இடமோ, தவறான பயன்படுத்தலுக்கான இடமோ இல்லையெனத் தெளிவுபடுத்தினார். ஆனால் அது பரீட்சார்த்த முயற்சியென்ற அளவிலும், அதனை அவர் நேர்மையான அணுகுமுறையோடு கைக்கொண்டார் என்ற அளவிலும் அதில் சிக்கலில்லை. ஆனால் எதிர்காலத்தில் இத்தகைய முயற்சிகள் அதிகரிக்கும் போது அவற்றின் போக்கு எங்கு சென்றடையும் என்பதற்கான பதில்கள் இப்போதைக்கு இல்லை.

### செயற்கை நுண்ணறிவு எவ்வாறு செயற்படுகிறது?

ஒரு மொழி மாதிரியானது (Language model) பெருமளவிலான சொற்கள், வசனங்களின் உள்ளீடுகளால் பயிற்றுவிக்கப்படும்போது, அது ஒரு வடிவத்தைக் கற்றுக்கொள்கிறது. Text-ன் அடுத்த வார்த்தை என்ன என்பதைப் புரிந்துகொள்கிறது. இதுவே அது பதிலளிக்கவும் எழுத்தினை வடிவமைக்கவும் கேள்வி கேட்கவும் ஏதுவான இயங்குதலைச் சாத்தியப்படுத்துகின்றது.

செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டுப் பரப்புகளில் அறஞ் சார்ந்த சவால்கள் உள்ளனவா என்ற கேள்வியும் சிந்தனையும் முக்கியமானது. செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி மிகத் துரிதமாக நிகழும்போது அது மனிதர்களிடத்திலும் சமூகத்திலும் அச்சத்தையும் அறம் சார்ந்த சவால்களை உருவாக்கும் என்பதையும் மறுக்கமுடியாது. வெவ்வேறு அளவிலும் வெவ்வேறு மட்டங்களிலும் ஏற்கனவே பல பிறழ்வுகளையும் அச்சுறுத்தல்களையும் உண்டுபண்ணியிருக்கின்றது. இதன் துரித வளர்ச்சி என்பது பல தளங்களில் ஆபத்துகளை ஏற்படுத்தக் கூடியன. கட்டுப்பாடற்ற முறையில் இதன் பயன்பாடு விரிந்து பரந்து செல்லுமாயின், இன்று நாம் கற்பனை செய்ய முடியாத விளைவுகளுக்குக்கூட இட்டுச் செல்லும் என வல்லுநர்கள், அறிஞர்களும் அச்சம் வெளியிட்டுள்ளனர். செயற்கை நுண்ணறிவின் அடிப்படைக் கூறான தொழில்நுட்ப இயந்திரம் மனித சக்தியை, மனித அறிவைவிட மிகவும் மேம்பட்டதாகச் செயற்படுமாயின் அதன் விளைவுகள் எத்தகையன என்பது இயல்பான பதட்டமாகப் பல மட்டங்களில் வெளிப்பட்டுள்ளது. ஆனால் அத்தகைய ஆபத்துச் சூழல்களுக்கான வாய்ப்புகள் இல்லை என்று நம்பும் பல நிபுணர்களும் உள்ளனர்.

### செயற்கை நுண்ணறிவு எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?

எழுத்துகளை வடிவமைப்பதற்கும் நிறுவனங்கள், வாடிக்கையாளர்களுடனான தமது தொடர்பாடல் சேவையைத் தானியங்கிப் பொறிமுறைகள் மூலம் (ஆளில்லாத முறையில்) மேற்கொள்ளவும், கணினி மென்பொருள், செயலிகளுக்கான புரோக்கிராமிங் கோட்ஸ் (Programming codes) எழுதவும் எனவாகப் பல்வேறு தொழிற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. மில்லியன் கணக்கானோர் உலகளாவிய ரீதியில் வேலைவாய்ப்புகளை இழக்க நேரிடும் என்ற அச்சமும் நிலவுகின்றது.

### ChatGPT: சவால்கள் மற்றும் சிக்கல்கள்:

ChatGPT பயன்பாடானது சவால்கள், சிக்கல்களற்ற, அநுகூலங்களை மட்டும் முழுவதுமாகக் கொண்டதல்ல என்ற புரிதலும் அவசியப்படுகின்றது. அதன் சவால்களின் பட்டியல் பெரியது. குறித்த சூழமைவு சார்ந்த ஆழமான, விரிவான முழு அளவிலான புரிதலைக் கொண்டதல்ல ChatGPT. ஏனெனில் அது பயிற்றுவிக்கப்பட்ட தரவுகள், தகவல்களை அடிப்படையாகக் கொண்டது, உண்மையான அனுபவங்கள் அல்லது உலகம் பற்றிய புரிதல் அதன் தொழிற்பாட்டு அடிப்படையாக இல்லை. அது குறித்துப் பின்வரும் சவால்களையும் சிக்கல்களையும் பட்டியலிடலாம்:

#### கோரப்படாத உள்ளடக்கம்:

கட்டுப்பாட்டுப் பொறிமுறைகள் இருப்பினும் சில தருணங்களில் பொருத்தமற்றதும் இழிவுபடுத்துகின்ற, துன்புறுத்துகின்ற, அதாவது ஒவ்வாததும் கோரப்படாததுமான உள்ளடக்கத்தையுடைய Text உருவாக்கக்கூடும்.

**தவறாக வழிநடத்தும் தகவல்:**

தவறான அல்லது காலாவதியான தகவலை வழங்கலாம். தொடர்ந்து புதுப்பிக்கப்படாமல் இருப்பதாலும், நிகழ்நேரத் தரவுக்கான உள்ளீட்டுப் பொறிமுறை இல்லாமையினாலும் தவறான தகவல்களை வழங்கும் வாய்ப்புள்ளது.

**அதீத எளிமைப்படுத்தல்:**

ChatGPT பெரும்பாலும் சிக்கலான பேசுபொருளை மிகை எளிமைப்படுத்தலுடன் வெளிப்படுத்தக்கூடும். இது தவறான புரிதல்கள், தவறுகள், ஆழமற்ற மேம்போக்கான அறிதல், பார்வைகளுக்கு வழிவகுக்கும்.

**தரவு மற்றும் தனிநபர் பாதுகாப்பு:**

உரையாடல்கள், உரைகள், எழுத்துகள், பகிர்வுகளை ChatGPT நினைவில் சேமித்து வைத்திருக்கவில்லை. இருப் பினும்; தனிநபர் தகவல் பரம்பல் மற்றும் தரவுகளின் பாது காப்புக் குறித்த அச்சம் நிலவுவதற்கான வாய்ப்புள்ளது.

**உணர்ச்சி சார் நுண்ணறிவு இல்லாமை:**

ChatGPT-னால் மனித உணர்வுகளை நுணுகிப் பொருள்வி ளங்க முடியாது. உணர்ச்சிகரமானதும் நுண்ணுணர்வு சார்ந்த துமான உரையாடல்களில் தவறான புரிதல்களுக்கும் பொருத்தமற்ற எதிர்வினைகளுக்கும் இந்நிலை வழிவகுக் கும்.

**உரையாடலில் தனிப்பட்ட நெருக்கமின்மை:**

ChatGPT பல்வகைமை உரையாடல், தொடர்பாடல், எழுத் தாக்கப் பணிகளுக்கேற்ற இசைவாக்கத்தன்மையைக் கொண்டிருப்பினும், மனிதர்கள் தமக்கிடையே அல்லது இரண்டு மனிதர்களுக்கிடையில் நிகழ்த்தக்கூடிய ஆழமான, தனிப்பட்ட உணர்வு சார்ந்த உரையாடல் அனுபவத்தை வழங்குக்கூடியதல்ல. இன்னும் எளிமையாகச் சொல்வதா னால் அது ஒரு உணர்வற்ற பொருளுடனான அல்லது இயந் திரத்துடனான உரையாடல் அல்லது பகிர்வேயாகும்.

**தங்கியிருத்தல் / அடிமைநிலை:**

மனிதர்கள் தகவல்களுக்காக ChatGPT போன்ற செயற்கை நுண்ணறிவுச் செயல்முறைகளில் அதிகம் தங்கியிருக்கும் நிலைக்கு இட்டுச் செல்லப்படுவர். இது விமர்சனப் பார்வை மற்றும் சுய ஆய்வு சார்ந்த விடயங்களில் பின்னடைவை ஏற்ப டுத்தும். கண்மூடித்தனமாகச் செயற்கை நுண்ணறிவினை நம் பும் நிலைக்கு மனிதர்களை இட்டுச் செல்லும்.

**தவறான சித்தரிப்புகள் சார்ந்த வெளியும் ஆபத்தும்:**

சூழ்ச்சி, தவறான சித்தரிப்புகள், தனிமனித இழிவுபடுத்தல் கள், நடத்தைப் படுகொலைகள், அவதூறு பரப்புதல்கள் போன்ற நோக்கங்களுக்காகத் தீயசக்திகளால் ChatGPT உட்பட்ட செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த முடியும். இது தனிமனிதர்களும் சமூகமும் எதிர் நோக்கத் தொடங்கியுள்ள ஆபத்துகளில் ஒன்றாகும். உதார ணமாக ஒளிப்படங்கள், காணொளிகளில் முகங்களை மாற்றி ஏமாற்றுவித்தைகளையும் அவதூறு, இழிவுபடுத்தல்களைச் கச்சிதமாகச் செய்யக்கூடிய வாய்ப்புகளையும் செயற்கை நுண்ணறிவில் இயங்கக்கூடிய ஒளி, ஒலி மென்பொருட் செய லிகள் கொண்டிருக்கின்றன.

**அற முரண்களும் குறைபாடுகளும்:**

செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டினது தானியங்கித் தன் மையின் விளைவுகள் அறமுரண்களைக் கணிசமாகக் கொண்டுள்ளன. அதனால் உருவாக்கப்படும் உள்ளடக்கத் திற்கான பொறுப்புக்கூறல், தகவல் ஆதாரம், தொழிற்சந்தை விளைவுகள் உள்ளிட்டவை சார்ந்து பல்வேறு அறம்சார் கேள் விகளையும் எழுப்புகிறது.

## அச்சக் கலாசாரம் – Culture of fear:

ஏலவே சமூக ஊடகங்களின் வரவு அவதூறுக் கலாசாரத்தை யும் அச்சக் கலாசாரத்தையும் உருவாக்கி விட்டிருக்கின்றது. சமூக ஊடகங்களில் அவதூறு பரப்புவதும் தனிமனித தாக்கு தல்களில் ஈடுபடுவதும் அதிகரித்து வருகின்றன. நேர்மையா கவும் அறிவார்ந்தும் சிந்திப்பவர்கள், மனிதர்கள் மீதும் சமூ கத்தின் மீதும் உண்மையான அக்கறை கொண்டவர்கள் இத் தகைய செயல்களைச் செய்யமாட்டார்கள். இது சமூக ஊட கங்களின் வரவுக்கு முன்பிருந்தே நிலவி வருகின்ற போக்குத் தான். ஆனால் சமூக ஊடக வரவிற்குப் பின்னர் புற்றீசல் போல் அல்லது கிருமி போல் பல்கிப் பெருகிப் பரவியுள்ளது. இந்த அவதூறு கலாசாரமாகவும் அச்சக் கலாசாரத்தை உரு வாக்கும் நோக்குடனும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் நோக்கம் பல்வேறுபட்டது. தம்மோடு முரண்படுபவர் களை அவமானப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படுகி றது. தற்போதைய சூழலில் அதிகாரத்தைக் கட்டிப்பிடிப்ப தில் முனைப்பாக இருப்பவர்கள் இதில் அதிகம் ஈடுபடுகின்ற னர். தமக்கு ஜால்ரா போடும் சில்லறைகளைத் தூண்டிவிட் டும் முகநூல், வைபர், வாட்ஸ்அப் போன்ற இன்னபிற சமூக ஊடகக் குழுமங்களில் கீழ்த்தரமான தனிமனிதத் தாக்குதல்க ளிலும் அவதூறுகளைப் பரப்புவதிலும் கூச்சமின்றி ஈடுபட்டு வருகின்றனர்.

## சமூகப் பிறழ்வு:

ஒரு சமூகம் எத்தகைய பிறழ்வுக்குள்ளும் சிதைவுக்குள்ளும் சென்றுகொண்டிருக்கின்றது என்பதற்கான எடுத்துக்காட்டுக ளில் இது முக்கியமான அம்சம். அதிகாரத்தைத் தக்கவைப்ப தற்கான கெடுநோக்குடன் அச்சக் கலாசாரத்தினை (Culture of fear) உருவாக்குகின்ற போக்கு அரசியலில், வேலைத் தளங்களில், நிறுவனங்களில் நிலவுகின்ற ஒன்றுதான். வேலைத்தளங்களிற் தொழிலாளர்கள் இப்படியான பயக் கலாசாரத்தினால் தமது அதிருப்திகளையும் தலைமைக்கெ திரான கருத்துகளையும் வெளிப்படுத்தத் தயங்கும் நிலை திட்டமிட்டு ஏற்படுத்தப்படுவதுண்டு.

மனிதர்களின் உளவியலை ஒருவகைப் பய உணர்வுக்குட்பட்டதாக வைத்திருப்பதற்கு அதிகார சக்திகள் கைக்கொள்கின்ற உத்திதான் இந்த அச்சக் கலாசாரம். எதிர்மறையான விளைவுகளை எதிர்கொள்ள நேரும் என்ற பயத்தினால் வெளிப்படையாகத் தமது கருத்துகளைச் சொல்வதற்குத் தயங்கித் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளவைப்பது இதன் இலக்கு. இந்த அச்சநிலை மாற்றம் விரும்புவோரைக் கட்டுப்படுத்தும் என்பதும், ஏன் வீண்சோலி என ஒதுங்க வைக்கும் என்பதும் இவர்களின் நோக்கமாகும்.

அவதூறு பரப்பித் தனிமனிதத் தாக்குதல்களில் ஈடுபடுவோரின் ஒரு பொதுக்குணம் எந்தவொரு விடயத்தையும் கருத்து ரீதியாக எதிர்கொள்ளவே மாட்டார்கள். எதிர்வினையாற்ற மாட்டார்கள். திரும்பத் திரும்ப அவதூறுகள், பொய் பரப்புதல், தனிப்பட்ட தாக்குதல்கள், இழிவு படுத்தல்கள், வசைப் பாடல்கள் என்பதாகவே அவர்களின் அணுகுமுறை இருக்கும். இது தனி மனிதர்களை இலக்கு வைத்ததாகவும் எதிர்க்குரல் எழுப்புபவர்களைக் கூட்டாக இலக்கு வைத்ததாகவும் நடத்தப்படுகின்றது. இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்கள் தனிமனிதர்கள் மட்டுமல்ல, நிறுவனங்களும் தமக்கு ஆதரவாகச் செயற்படக்கூடிய ‘உஷார் மடையர்’களை வைத்தும் இச்செயல்களைச் செய்து வருகின்றனர்.

பெண்கள் மீதான வன்முறைகள், நடத்தைப் படுகொலைகள் மட்டுமல்லாமல் பாலியல் ரீதியான வசைகள், ஆண்களென்றால் பெண்களோடும் பெண்களை ஆண்களோடும் தொடர்புபடுத்தி வதந்திகளைப் பரப்புதல் எனவாக அடிப்படை மனித நாகரீகமற்றுப் பிறழ்வு மனநிலையுடன் தாக்குதல்களை மேற்கொள்வது இவர்களுடைய பாணி.

தற்போதைய செயற்கை நுண்ணறிவின் வரவும் பயன்பாட்டு வெளியும் இத்தகைய அவதூறுகள், தனிமனிதத் தாக்குதல்கள், இழிவுபடுத்தல்களுக்குரிய வெளியை அதிகரித்துள்ளன. குறிப்பாகப் பெண்கள் மீது உடலை முன்வைத்துக் கட்டவிழ்த்துவிடக்கூடிய உளவியல் துன்புறுத்தல்கள். ஒரு பெண்ணின் முகத்தை நிர்வாண உடலின் மீது பொருத்திப் படமாகவோ காணொளியாகவோ உலவ விடுகின்ற போக்குகள் அதிகரிக்கின்ற ஆபத்துகள் உள்ளன. ஏலவே இத்தகைய சம்பவங்கள் நடிகைகள் சிலருக்கு நேர்ந்துள்ளன.

## இருப்பியல் அச்சுறுத்தல்?

மனிதகுலத்தின் இருப்பியல் அச்சுறுத்தலாகச் செயற்கை நுண்ணறிவு குறித்து எச்சரிக்கும் அறிஞர்களும் உலகளவில் உள்ளனர். மனிதகுலத்தை அழிக்கக்கூடிய சக்திமிக்க செயற்கை நுண்ணறிவின் அபாயத்தைக் குறைப்பதற்குத் தொற்றுநோய்கள் மற்றும் அணுவாயுதப் போர் போன்ற பிற பாரிய சமூக அபாயங்களுக்கு இணையான உலகளாவிய முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஒன்று அண்மையிற் கவனத்தை ஈர்த்திருந்தது.

மேற்சொன்ன வார்த்தைகள் உலகின் முன்னணி விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் தொழிற்துறைத் தலைவர்கள் உட்பட 350 நிபுணர்கள் கூட்டாக விடுத்த கோரிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தன. 2023 மே 30-ம் திகதி மேற்சொன்ன கூற்றினை உள்ளடக்கி அவர்கள் கையெழுத்திட்டு வெளியிட்ட ஒரு மனு சர்வதேச கவனத்தைப் பெற்றிருந்தது.

கோவிட் -19-இனை எதிர்கொள்வதற்குரிய முன்னேற்பாடுகளுடன் உலக சமூகம் இருக்கவில்லை. காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வும் பல தசாப்தங்களுக்கு முன்பே தொடங்கப்பட்டிருக்க வேண்டும். செயற்கை நுண்ணறிவினால் ஏற்படக்கூடிய பேரழிவு விளைவுகள் குறித்த போதியளவு அறிவினை இன்றைய உலகம் கொண்டிருக்கின்றது.

அதாவது செயற்கை நுண்ணறிவு அபாயத்தைத் தீவிரமாக எடுத்துக்கொள்ளத் தேவையான அறிவு மனிதர்களிடத்தே உள்ளது என்பது அவர்களின் வாதம். இந்தத் தொழில்நுட்பம் தனிநபர்களுக்கு மட்டுமல்ல, மனித குலத்திற்கும் பேரழிவாக அமையக்கூடிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்பதே அவ்வறிஞர்களின் கவலை.

இதிலுள்ள வெளிப்படையான அம்சம் என்னவெனில், தீயசக்திகள் தொழில்நுட்பத்தைத் தவறாகப் பயன்படுத்தலாம். பேரழிவு ஆயுதங்களை உருவாக்கலாம். மனிதர்களை அழிவுக்கு இட்டுச் செல்லக்கூடிய அதி புத்திசாலித்தனமான தொழில்நுட்பங்களை மனிதர்களே உருவாக்குகிறோம் என்பது குறித்த அக்கறையை மேற்படி மனுவின் பின்னணியிலுள்ள வல்லுநர்கள் கொண்டுள்ளனர். அதி நுண்ணறிவுத் தொழில்நுட்ப அடைவுகள், மனிதர்களை விட அதீத நுண்ணறிவுடன் மனித இருத்தலியலுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன. ஏனெனில் ஓர் அதி நுண்ணறிவு கொண்டியங்கும் செயற்கைத் தொழில்நுட்பத்தைக் கட்டுப்படுத்துவதோ, நிறுத்துவதோ கடினம். அவை மனித சக்திக்குக் கட்டுப்படாத பாரிய பலத்துடன் செயற்படக்கூடியவை அல்லது தீய சக்திகளால் செயற்படுத்தக்கூடியவை.

## பயன்படுத்தலும் பொறுப்புணர்வும்:

பொதுவாகச் செயற்கை நுண்ணறிவின் எந்த வடிவங்களையும் பொறுப்புடன் பயன்படுத்துவது அவசியம். அதன் வரையறைகளையும் அதனால் ஏற்படக்கூடிய எதிர்பாராத ஆபத்தான விளைவுகளையும் கருத்திற்கொண்டு அதனைப் பயன்படுத்துகின்ற விழிப்புணர்வு இன்றியமையாததாகின்றது. அத்தகைய கவனங்கள் தான் செயற்கை நுண்ணறிவின் பாவனையை உகந்த பயன் விளைவுகளுக்கு இட்டுச் செல்லும்.

செயற்கை நுண்ணறிவு சார்ந்த அமைப்புகள் மனித மூளையை ஒத்த முறையில் வடிவமைக்கப்படுகின்றன. மனித மூளையையே முற்றிலும் புரிந்துகொள்ளும் வல்லமை மனிதருக்குக் கைவரவில்லை. அப்படியிருக்க மனித மூளையை ஒத்த மாதிரியை உருவாக்குவதும் அச்சொட்டாக அதனை மனிதமூளைபோல் இயக்குவதும் இலகுவானதல்ல.



rooban.s@thaiveedu.com




கென்யாவின் தலைநகரான நைரோபியிலிருந்து 226 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மெரு நகரத்தில் உள்ள வைத்திய சாலைக்கு அவசரமாக இரத்தம் கொண்டு செல்ல வேண்டிய நிலை. தரைவழிப் பாதையில் செல்வதாயின் சுமார் நான்கு மணித்தியாலங்களுக்கு மேல் தேவை. அவர்கள் ட்ரோன் மூலம் இரத்தத்தை அனுப்பினார்கள். பாதிக்கப்பட்ட நோயாளியும் காப்பாற்றப்பட்டார். ஒவ்வொரு விஞ்ஞான கண்டுபிடிப்பும் ஏதோ ஒரு வகையில் மனிதருக்கு உதவி செய்கின்றது. அணுசக்தி கண்டுபிடிக்கப்பட்ட போதும் அது அனைவருக்கும் பயன்படும் என நம்பப்பட்டது. ஆனால் ஆக்கத்துக்கு பயன்படாமல் ஆக்கியோரே அதிர்ச்சியடையும் அளவுக்கு, அழிவுக்கே அது பெருமளவு பயன்படுத்தப்படுகின்றது. ட்ரோனின் கண்டுபிடிப்பும் அவ்வகையைச் சேர்ந்ததாகும். ஒரு வகையில் ட்ரோனின் வருகை பல வழிகளில் போக்குவரத்து வேகத்தை அதிகரிக்கும். போக்குவரத்தில், பொருட்கள் விநியோகத்தில் ட்ரோன் பெருமளவு மாற்றத்தை கொண்டுவரும் என எதிர்பார்க்கப்பட்டது. வருங்காலங்களில் வீடுகளின் கூரையில் பொருட்கள் வந்திறங்கலாம் என கனவு கண்டோம். ஆனால்... நடைமுறை வித்தியாசமாகவுள்ளது.

1849 ஜூலை 15-ம் திகதி நடத்துநர்கள் இல்லாத அல்லது விமானிகள் அற்ற 200 பலூன்களை வெனிஸ் நகரத்துக்கு (July 15, 1849, when the Habsburg Austrian Empire launched 200 pilotless balloons armed with bombs against the revolution-minded citizens of Venice) ஒஸ்ரியா ஏவியிருந்தது. இதுவே இன்றைய ட்ரோன் தொடர்பான முதல் நிகழ்வாகும். அமெரிக்க சிவில் யுத்தத்தின் போது இரு தரப்பினரும் (Union and Confederate) பலூனுக்குள் வெடி மருந்தை நிரப்பி அனுப்பியிருந்தார்கள். 1930-களில் பிரிட்டிஷ் றோயல் கடற்படை Queen Bee றேடியோவால் கட்டுப்படுத்தக் கூடிய ட்ரோனை உருவாக்கியிருந்தது.

1944-1945 காலப்பகுதியில் 9000 bomb-laden பலூன்களை பசுபிக் பிராந்தியத்தை நோக்கி ஜப்பான் அனுப்பியிருந்தது. இவை அனைத்தும் சரியான இலக்கில் வீழ்ந்திருந்தால் பல அழிவுகளை ஏற்படுத்தியிருக்கும். காட்டுத்தீ போன்றவையையும் ஏற்படுத்துவது யப்பானின் நோக்கமாக இருந்தது. எனினும் பல பலூன்கள் பசுபிக் சமுத்திரத்தில் வீழ்ந்துவிட்டன. 300 பலூன்கள் கனடா, அமெரிக்காவை வந்தடைந்தன. பொஸ்னியா-சேர்பியா போர் மற்றும் ஆப்கான் போரிலும் சிறியளவில் ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டன. (தாக்குதலுக்கல்ல)

இவ்வாறான பலூன் பயன்பாட்டின் வளர்ச்சி இன்று ட்ரோன் என்ற வடிவத்தை எடுத்துள்ளது. ட்ரோன் இன்று பல்வேறு துறைகளிலும் பாவிக்கப்படுகின்றது. எனினும் இக் கட்டுரை போர் மற்றும் பாதுகாப்புத் துறைகளில் அதன் பயன்பாடு எனும் விடயத்தை மட்டும் மையப்படுத்தியதாக இருக்கும்.

போரின் போது மேற்கு நாடுகள் வானத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தன. இதனால் அமெரிக்கக் கூட்டணியின் வான்வழித் தாக்குதல்களை ஆப்கான், ஈராக் போன்ற நாடுகளின் படைகளும், தீவிரவாதிகளும் எதிர்கொள்ள முடியாமல் இருந்தது. வழக்கத்துக்கு மாறான சமச்சீரற்ற போர்முனைத் தாக்குதல்களுக்கு Improvised explosive device (IED) பெரிதும் உதவியது. இதனை முறியடிப்பது தீவிரவாதிகளுக்கும் போரிடும் குழுக்களுக்கும் அரசுகளுக்கும் சவாலாகவே அமைந்தது. அமெரிக்காவிடமும் நேட்டோவிடமும் தங்களை வெற்றிகொள்ள முடியாது என்ற ஆணவமும் தொழில்நுட்ப வளர்ச்சி சார்ந்த கர்வமும் இருந்தது. அத்துடன் தாங்கள் அழிவுக்கு அப்பாற்பட்டவர்கள், தனித்துவமானவர்கள் என்ற நம்பிக்கையும் மதிப்பீடும் இருந்துவருகின்றது. ஆனால் மேற்கின் வான்வழிக் கட்டுப்பாடுகளை சிறு குழுக்கள்கூட உடைத்துவிடும் தன்மையை ட்ரோனின் வளர்ச்சி ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

2022-ல் ஆரம்பமான ரஷிய-உக்ரேன் போரில் ட்ரோன் தாக்குதல்கள் பற்றி ஊடகங்கள் காட்சிகளையும் கருத்துக்களையும் வெளியிட்டன. அண்மைக் காலமாக நடைபெறும் போர்களில் அதிகளவு ட்ரோன் தாக்குதல்கள் பயன்படுத்தப்பட்டமை ரஷிய-உக்ரேன் போரிலாகும். பல வருடங்களுக்கு முன்னரே, அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ட்ரோனை போரில் பாவிப்பது பற்றியும் அதன் பயன்பாடுகள் பற்றியும் கொள்கைகளை மற்றும் திட்டங்களை வகுத்துள்ளன. இவை வெளியே தெரியாமல் இருந்தன. அதே சமயம் இவை ட்ரோன் உற்பத்தியில் அதிகளவு ஆர்வம் காட்டின. ட்ரோன் ஆராய்ச்சிக்கு நிதிகளை ஒதுக்கின. மறுபுறத்தில் ரஷியா, சீனா போன்ற நாடுகள் ட்ரோன் தாக்குதலை மேற்கொண்டால், அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பதற்கான தெளிவான திட்டங்கள் மேற்கு நாடுகளிடமிருந்தன. உக்ரேன்-ரஷியா போரானது ட்ரோன் தாக்குதல்களுக்கான பரீட்சார்த்த

களமாகவுமிருந்தது. மேற்கு நாடுகளின் பாதுகாப்பு மற்றும் போர்ப் பிரிவுகள் இத்தாக்குதல்களை மிகவும் உன்னிப்பாக கவனித்து, அவற்றிலிருந்து புதிய திட்டங்களை வகுக்கின் றன.

வியட்நாம் போர் இடம்பெற்ற காலத்திலிருந்தே, அமெரிக்கா புதிய தொழில்நுட்பங்களை பரீட்சித்துப் பார்க்கத் தொடங்கி விட்டது. GPS guided artillery shells தயாரிப்பிற்கு சுமார் US$ 100,000 செலவாகின்றது. ஆனால், ட்ரோன் தயாரிப்பிற்கான செலவு வெறும் ஆயிரம் டொலர்களுக்கு குறைவானதாகும். ஆனாலும், தற்போது தயாராகும் அல்லது பாவனையில் உள்ள ட்ரோன்கள் நீண்ட தூரத் தாக்குதல்களை மேற் கொள்ள முடியாதவையாகவுள்ளன. வருங்காலத்தில் இவை நிவர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ட்ரோன் தாக்குதல்கள் மூலம் 75 ரஷிய பீரங்கி-தாங்கிகளை தான் அழித்தாக உக்ரேன் கூறுகின்றது. FVP (First-person view) ட்ரோன்களே அதிகளவு உக்ரேன்-ரஷிய போரில் பயன் படுத்தப்பட்டுள்ளன. இவை சிறியவை. குறைந்த விலை கொண்டவை. மேலும் பீரங்கி தாங்கிகளினுள் சென்று அழிக் கக்கூடியவை. 2024-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில், 3000 ட்ரோன் தாக்குதல்கள் ரஷிய-உக்ரேன் போரில் மேற்கொள் ளப்பட்டன. 2024-ம் ஆண்டில் உக்ரேன் 1m-2m drones அதி களவு தயாரிக்கவுள்ளதாக அதன் அதிபர் தெரிவித்துள்ளார். அதே சமயம் FVP ட்ரோன்களை 3D அச்சு இயந்திரத்தால் பிரதி செய்யப்படும் சில பாகங்களை வைத்து மிக விரைவாக வும், குறைந்த செலவிலும் உற்பத்தி செய்ய முடியும். எனவே இது ஆபத்தானதுமாகும். தவறான வழிகளில் பயன்படுத்தப் படலாம் என்ற அச்சமும் நிலவுகின்றது. பர்மாவில் தீவிரவாதி களும் FVP ட்ரோன்களை பயன்படுத்தியுள்ளனர்.

உதாரணத்துக்கான ஒப்பீடு விலை இது.

- Unguided artillery shells cost $800-$9,000
- GPS guided shell $100,000
- Javelin anti-tank missile $200,000
- FVP Drone $400-$1000

ஆர்ட்டிலறீஸ் மலைப் பிரதேசங்களிலும் தாக்குதல்களை நடத்தக்கூடியவை. அதாவது, உயரம் ஒரு பிரச்சினையல்ல. கடுங் காற்றையும் ஊடுருவக் கூடியவை. ஆர்ட்டிலறீசுக்கு குளிர் ஒரு பிரச்சினையாக இருக்காது. கடும் மழையை கடந்து செல்லும். ஆனால், ட்ரோன்களின் நிலை அவ்வாறா னது அல்ல. அவற்றின் மின்கலங்கள் குளிரில் செயலிழந்துவி டக்கூடியவை. கடுங் காற்று ட்ரோன்களை அடித்துச் சென்று விடும். உயரமான பிரதேசங்களை நோக்கிச் செல்வது கடின மாகவிருக்கும். Donetsk பிரதேசங்களின் மீது, ட்ரோனை பாவித்து உக்ரேனால் தாக்குதல்களை மேற்கொள்ள முடியா திருந்தது. இப் பிரதேசங்கள் கடல் மட்டத்திலிருந்து அதி உயரத்திலுள்ளன. ஏவுகணைகளை வீழ்த்துவது போல் ட்ரோன்களையும் வீழ்த்த முடியும். ட்ரோன்களை இயக்கும் கணினி வல்லுநர் அனுப்பும் சமிக்ஞைகளை திசை திருப்பி னால், ட்ரோன்களால் இலக்கை அடைய முடியாது. தாக்க முடியாது. ஆனால், இதனை முறியடிக்கும் வகையில் புதிய தொழில்நுட்பம் வளர்ச்சி பெற்று வருகின்றது.

ட்ரோன்களைப் பயன்படுத்தி ரஷியாவின் அதிக மதிப்புள்ள போர்க் கருவிகளை உக்ரேன் அழித்தது. தாங்கிகள், போர் உதிரி உபகரண விநியோக வாகனங்கள் போன்றவற்றை ட்ரோன்கள் மூலம் அழித்து, ரஷியாவிற்கு நட்டத்தை ஏற்படுத் தியது. ரஷியாவும் ட்ரோன் தாக்குதல்களை முன்னெடுத்த போதும், அத்தாக்குதல்களால் உக்ரேனுக்கும் அழிவு ஏற்பட் டாலும் பெரும் நட்டம் ஏற்படவில்லை என மேற்கு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இலக்கை நோக்கித் தாக்கும் ட்ரோன்களும் தயாரிக்கப்படு கின்றன. எனினும் அவற்றின் விலை அதிகமாகவுள்ளது. அமெரிக்காவில் தயாராகும் Switchblade 300 அவ்வாறான தொன்றாகும். இதனைத் தயாரிக்க ஐம்பதாயிரம் டொலர்கள் செலவாகும். ரஷியாவும் Ovod (Gadfly) என்ற ட்ரோனை தயா ரிக்கின்றது. இதுவும் இலக்கை நோக்கித் தாக்கக் கூடிய அதி உயர் சக்திவாய்ந்த ட்ரோன். அமெரிக்க போரியல் ஆய்வாளர் Jack Watling இன் கருத்துப்படி, மிகக் குறைந்த விலையில் தயாரிக்கப்படும் ட்ரோன்கள் (garage-built drones) உக்ரேன் -ரஷிய போரில் அதிக நட்டத்தை எதிரிக்கு ஏற்படுத்தியுள் ளன.

உக்ரேனின் தலைநகரமான கீவ்வில் ட்ரோனை இயக்கும் கணினி வல்லுனர்களுக்கான பயிற்சிக் கல்லூரி ஒன்று ஆரம் பிக்கப்பட்டுள்ளது. பதினைந்து நாட்கள் பயிற்சியின் பின்னர், இவர்கள் சுயமாக இயங்கத் தொடங்குவார்கள். Kazhan Fly கல்லூரி ட்ரோன் இயக்க பயிற்சிக்கு சிறந்த ஒரு கல்லூரியாக கருதப்படுகின்றது. இங்கு பயிற்சி பெற்றவர்களே உக்ரேனுக் காக ட்ரோன்களை இயக்குகின்றார்கள்.

உக்ரேன் மாதமொன்றிற்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட ட்ரோன் களை ரஷிய படைகள் மற்றும் தளங்கள் மீது ஏவுகின்றது. பத் தாயிரம் ட்ரோன்கள் இவ்வாறு ஏவப்பட்டதாக, உறுதிப்படுத் தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன. அமெரிக்கா, மனிதா பிமான முறையில் Global Hawk Drones-ஐ அனுப்புகின்றது. இராணுவப் பாவனைக்கு சிறிய ட்ரோன்களை அனுப்புகின் றது. இவற்றுடன் ட்ரோன்களை வாங்குவதற்கு நிதியுதவியும் அளிக்கின்றது.

கனடா 2024-ன் ஆரம்பத்தில் 800 Sky Ranger R70 multi-mission Unmanned Aerial Systems ட்ரோன்களை உக்ரேனுக்கு வழங்கியிருந்தது. இவற்றின் மதிப்பீடு 95 மில்லியன் கனடிய டொலர்களாகும். ஒன்றின் விலை 118,750 கனடிய டொலர்க ளாகும் (US$ 87,533). இவை பல கமாராக்களை உள்ளடக்கி யதாகவும், 3.5 கிலோகிராம் பொருட்களைக் கொண்டு செல் லக்கூடியதாகவும் மிகவும் மோசமான காலநிலைக்குள்ளும் பயணம் செய்யக்கூடிய திறனையும் கொண்டிருந்தன. இவை சாதாரண FVP ட்ரோன்களிலிருந்து மிகவும் மாறுபட்டவையா கும். இவற்றை ஒன்ராரியோவின் வோட்டலோ நகரத்தில் இயங்கும் நிறுவனமான Teledyne FLIR தயாரித்ததுடன், கணினி மற்றும் தொழில்நுட்பக் கருவிகளையும் இந்த ட்ரோன் களில் பொருத்தியுள்ளது.

ஆனால் ஆச்சரியப்படும் வகையில், உக்ரேன் அதிகளவு ட்ரோன்களை சீனாவிடமிருந்தே ஆரம்பத்தில் வாங்கியது. DJI என்ற சீன நிறுவனமே, உக்ரேனுக்கு ட்ரோன்களை ஏற்றுமதி



செய்கின்றது. ஹொங்கொங்கில் உள்ள Hong Kong University of Science and Technology இன் பொறியியல் ஆய்வு மாணவர்கள் Frank Wang, Wang Tao ஆகியோரால் இந்த நிறுவனம் 2006-ல் தோற்றுவிக்கப்பட்டது. இன்று உலகின் 70 வீதமான ட்ரோன் சந்தையை இந்நிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ளது. 2016 காலப்பகுதியில் அமெரிக்காவில் DJI ட்ரோன்ஸ் வணிக நோக்கில் (Commercial purpose) பிரசித்தி பெற்றவையாகத் திகழ்ந்தன. அமெரிக்க காங்கிரஸ் இந்த நிறுவனத்துக்கு எதிராக தடையை விதித்தது.

Xinjiang சீனாவின் வடமேற்கில் அமைந்துள்ள மிகப் பெரிய பிராந்தியமாகும். இங்கு அதிகளவு வாழ்ந்த Uyghur முஸ்லீம் சமூகத்தை இனவழிப்பு செய்ததில் டிஜேஜ் நிறுவனத்துக்கும் நேரடித் தொடர்புகள் உள்ளதாகவும் அமெரிக்க அரசு குற்றஞ்சாட்டியிருந்தது. சீனாவின் சட்டங்களின் பிரகாரம் சகல சீன நிறுவனங்களும் சீன அரசின் மற்றும் கம்யுனிஸ்ட் கட்சியின் சகல நடவடிக்கைகளுக்கும், உளவு பார்த்தல் உட்பட ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அமெரிக்காவிற்கு இதுவே ஆபத்தானதாக தெரிந்தது. சீன நிறுவனங்களால் ஏற்படக்கூடிய Cybersecurity Risk அதிகம். அதுவும் இத்தடைக்கு ஒரு பிரதான காரணமாக அமைந்தது. கனடா, பிரித்தானியா முதலான பல நாடுகளும் சீனாவிற்கு எதிரான தொழில்நுட்பத் தடைகளை விதித்துள்ளன. இவ் வருட ஆரம்பத்தில் சீனா, ஈரான், ரஷியா போன்ற நாடுகளுக்கு எதிராக மிகக் கடுமையான தடை ஒன்றை கனடா விதித்துள்ளது. (In January, Ottawa announced strict new national-security rules to protect cutting-edge science and advanced technology from ending up in the hands of China, Russia and Iran, including research in unmanned aerial vehicles (UAVs)). இவற்றுடன் 90 சீனப் பல்கலைக்கழகங்களையும் ஐந்து ரஷிய இராணுவ ஆய்வு நிறுவனங்களையும், 12 ஈரானிய கல்வி நிறுவனங்களையும் சரீப் பல்கலைக்கழகத்தையும் இமாம் ஹொசெயின் பல்கலைக்கழகத்தையும், கனடா கறுப்பு பட்டியலிட்டுள்ளது. (Black listed).

DJI நிறுவனத் தடையின் பின்னர், உள்நாட்டு ட்ரோன் உற்பத்திக்கு ஊக்கமளிக்க அமெரிக்க அரசு முடிவு செய்தது. Drone Infrastructure Inspection Grant Act-ஐ காங்கிரஸ் அமுல்படுத்தியது. புளோரிடா மாநிலம் பொலிஸ் திணைக்களங்களில் சீன ட்ரோன்களை மாற்றீடு செய்வதற்காக 25 மில்லியன் நிதியை வழங்கியது. 2007-ல் அமெரிக்க Federal Aviation Administration (FAA) ட்ரோன்களுக்கான தடையை விதித்திருந்தது. இது 2014-ல் விலக்கப்பட்டது. இதன் பின்னர் பல அமெரிக்க நிறுவனங்கள் ட்ரோன்களை உற்பத்தி செய்யத் தொடங்கினார்கள். Skydio, 3D Robotics போன்ற நிறுவனங்கள் ட்ரோன் உற்பத்தியில் அதிக ஆர்வம் காட்டின. ஆனால் இவற்றால் சீன நிறுவனங்களின் ட்ரோன்களை மிஞ்சமுடியாமல் போய்விட்டது.

2000-களின் ஆரம்பத்திலேயே சீன நிறுவனங்கள் ட்ரோனை தயாரிக்கத் தொடங்கிவிட்டார்கள். சீன அரசிடமிருந்து ட்ரோன் தொடர்பான ஆராய்ச்சிக்கு இந்நிறுவனங்கள் நிதியுதவிகளைப் பெற்றன. டிஜேஜ நிறுவன ட்ரோன்கள் தரமானவையாக இருந்தன. 3D Robotics போன்ற நிறுவனங்கள் பெரும் சவாலைச் சந்தித்தன. அதே சமயம் 2014-ல் தடை நீக்கப்பட்ட பின்னர் பல அமெரிக்க தனியார் மற்றும் அரசு நிறுவ

னங்கள் ட்ரோனை பாவிக்கத் தொடங்கின. பொலிஸ் திணைக்களங்கள் உளவு பார்ப்பதற்கு, ரோந்து நடவடிக்கைகள் போன்றவற்றிற்கு ட்ரோன்களை பாவித்தன. வன பாதுகாப்பு திணைக்களம் காட்டுத்தீயை அணைப்பதற்கு ட்ரோன்களையும் பாவித்தது. இந்நிலையில் ட்ரோன்களின் தேவை அதிகமாகவிருந்தது. அதனை ஈடுகட்டுவதற்கு போதிய விநியோகமிருக்கவில்லை.

சீன நிறுவனங்கள் சீன கம்யுனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் இயங்க வேண்டும் என்ற கடுமையான சட்டத்தை, 2017-இல் சீன அரசு நடைமுறைப்படுத்தியது. இது அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ட்ரோன் போன்ற பாதுகாப்புடன் இணைக்கப்படும் பொருட்களை சீனாவிலிருந்து இறக்குமதி செய்வதில் சிக்கல்களை ஏற்படுத்தியது. பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவுமிருந்தது. அண்மையில் TikTok சமூகவலைத் தளத்தை தடைசெய்ததன் பின்னணியும் இதுவேயாகும். Autel Robotics என்ற சீன நிறுவனத்தின் ட்ரோன்கள் அமெரிக்காவில் பாவனையில் உள்ளன. இதனைத் தடைசெய்யுமாறு குடியரசுக் கட்சியினர் பைடனை வலியுறுத்திவருகின்றனர். இதுவரை அமெரிக்காவில் ஏழு மாநிலங்களே சீன ட்ரோன்களை முழுமையாகத் தடைசெய்துள்ளன.

உண்மையில் ட்ரோன் உற்பத்தி அமெரிக்க அரசுக்கு பெரும் சவாலாக மாறியுள்ளது. சீன ட்ரோன்களை விடவும் அமெரிக்க தயாரிப்புக்களுக்கான உற்பத்திச் செலவு நான்கு மடங்காக உள்ளது. Software, cameras, gimbals போன்ற முக்கிய ட்ரோனின் கூறுகள் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டவை. இவற்றினால் பெறப்படும் அல்லது பாதுகாக்கப்படும் தகவல்கள் முக்கியமானவை. ஆனால் இவற்றினை சீனாவிலிருந்து இறக்குமதி செய்வது உற்பத்திச் செலவை கணிசமான அளவு குறைக்கும். National Defense Authorization Act (NDAA) அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களங்கள் சீன நிறுவனங்களின் ட்ரோன்களை, உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதை கட்டுப்படுத்துகின்றது. என்.டி.ஏ.ஏ. ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியது. Blue UAS என்ற திட்டத்தின் மூலம் அமெரிக்காவில் ட்ரோன் உற்பத்தியை அதிகரிக்க முடியும் என என்.டி.ஏ.ஏ. கருதுகின்றது. இதன் ஆரம்பம் நம்பிக்கை அளிப்பதாகவே உள்ளது. அமெரிக்க தனியார் நிறுவனங்களுக்கும், அரசுக்குமான ட்ரோன் உற்பத்தி ஒப்பந்தங்கள் அமெரிக்க தயாரிப்பு ட்ரோன்களை அதிகப்படுத்தும் என நம்பப்படுகின்றது. இதனைவிட அமெரிக்க அரச நிறுவனங்கள் அரசின் நிதியை பாவித்து சீன ட்ரோன்களை இறக்குமதி செய்வதை இத்திட்டம் தடைசெய்துள்ளது. சீன ட்ரோன்களை மாற்றீடு செய்வதற்கும் அரசு நிதியுதவி வழங்குகின்றது. பெரும்பாலும் அமெரிக்க ட்ரோன் நிறுவனங்கள் தங்களது தயாரிப்பு ட்ரோன்களை போர் நடைபெறும் நாடுகளுக்கே அனுப்ப விரும்புகின்றன. அதனால் அதிகளவு லாபம் பெறமுடியும். உக்ரேனுக்கு இந் நிறுவனங்கள் ட்ரோன்களை விற்பனை செய்துள்ளன.

உக்ரேன் - ரஷிய போரில் பாவித்த FVP வகை ட்ரோன்கள், சீன நிறுவனமான டிஜேஜ தயாரிப்புகள் ஆகும். இதே நிறுவனம் ரஷியாவிற்கும் ட்ரோன்களை ஏற்றுமதி செய்கின்றது. மாதமொன்றிற்கு பத்தாயிரம் ட்ரோன்களை போரில் பாவிக்கும் உக்ரேனுக்கு சீனாவிடமிருந்து ட்ரோன்களை பெறுவதை விட வேறுவழியில்லை. ஆனாலும் பல தடவைகள் உக்ரேனால் ஏவப்பட்ட ட்ரோன்களை ரஷியா அழித்துவிட்டது. இதற்கான பிரதான காரணம் இரண்டு நாடுகளும் ஒரே நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட ட்ரோன்களை பாவிப்பதும், ரஷியா டிஜேஜ-இன் தொழில்நுட்ப முறையையும் அதன் மென்பொருளையும் கட்டுப்படுத்தும் முறையையும் அறிந்து கொண்டமையுமாகும். 2023-ன் இறுதிப் பகுதியில் சீனா தனது நாட்டு நிறுவனங்கள் தயாரிக்கும் ட்ரோன்கள் போரில் பயன்படுத்தப்படுவதைக் கட்டுப்படுத்துவதாக தெரிவித்தது. ஆனால், சீன சில்லறை பொருள் விநியோக நிறுவனங்களான அலிபாபா, அலி எக்ஸ்பிரஸ் போன்ற நிறுவனங்கள் ட்ரோன்களை வாங்கி ஏற்றுமதி செய்கின்றன. இவ்வாறான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன என்று வெளி உலகிற்கு சீனா கூறினாலும் மறுபுறத்தில் சீனா தனது வெளியை திறந்து விடுகின்றது.

சோவியத் யூனியன் காலத்தில், உக்ரேன் பல புதிய ஆயுதங்கள் தொடர்பான ஆய்வில் முன்னின்றது. பல புதிய ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகள் உக்ரேனிலேயே கண்டுபிடிக்கப்பட்டு சோவியத் யூனியனால் பாவிக்கப்பட்டது. கிறீமியாவை ரஷியா கைப்பற்றிய பின்னர், உக்ரேனில் புதிய ஆயுத ஆய்வுகள் மீண்டும் துளிர்க்கத் தொடங்கின. Aerorozvidka எனும் அரச சார்பற்ற நிறுவனம் உக்ரேனில் ட்ரோன்கள் உற்பத்தியில் அதிக ஆர்வம் காட்டியது. உக்ரேன் அரசுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்ட நிறுவனம் பல வழிகளில் ட்ரோன் உற்பத்திக்கும் ஆய்விற்கும் நிதியுதவிகளை வழங்கியது. Dzyga's Paw என்ற மற்றொரு அரச சார்பற்ற நிறுவனம் உக்ரேன் இராணுவத்துக்கு நிதியுதவி செய்து வருகின்றது. இந்நிறுவனம் ட்ரோன்களை எவ்வாறு இயக்குவது என, உக்ரேன் இராணுவத்துக்கு பயிற்சிகளை வழங்கிவருகின்றது. இன்று உக்ரேனில் இருபதுக்கு மேற்பட்ட ட்ரோன் பயிற்சி நிறுவனங்கள் இயங்குகின்றன. இந்த அரசு சார்பற்ற நிறுவனங்கள் உக்ரேனில் ட்ரோன் தயாரிப்பதனையும் ஊக்குவிக்கின்றன. கடந்த இரண்டு வருடங்களில் உக்ரேனில் ட்ரோன் தயாரிப்பு அதிகரித்துள்ளது. போரின் முடிவில் ட்ரோன் தயாரிப்பில் சீனாவை உக்ரேன் விஞ்சிவிடும் என நம்பப்படுகின்றது.

டிஜேஜ-யின் மூன்று வித ட்ரோன்களை, உக்ரேன் மீதான போரில் ரஷியா பாவிக்கின்றது. இவற்றுள் Aeroscope எதிரிகளின் நடவடிக்கைகளை கண்காணிக்கக் கூடியது. இது உக்ரேனுக்கு பல வழிகளில் அழிவை ஏற்படுத்தியுள்ளது. சீன ட்ரோன்களை PRC ட்ரோன்கள் எனவும் அழைப்பார்கள். PRC என்பது People's Republic of China ஆகும். இவற்றை விட சீன உற்பத்தியான Mavic drones-ஐயும் உக்ரேன் வாங்குகின்றது. 60 வீதமான Mavic ட்ரோன்களை உக்ரேனே இறக்குமதி செய்கின்றது.

ஈரானும் ட்ரோன்களை உற்பத்தி செய்கின்றது. Shahed-136 ‘kamikaze’ drone அதி சக்தி வாய்ந்தது. ரஷியா, உக்ரேனுக்கு எதிராக ஈரானிடமிருந்து பெறப்பட்ட ட்ரோன்களையும் பயன்படுத்திவருகின்றது. பல வெற்றிகரமான தாக்குதல்களுக்கு ஈரானிய ட்ரோன்களே காரணமாகவிருந்தன.

புதிதாக வடிவமைக்கப்படும் ட்ரோன்கள் மிகவும் நுணுக்கமான பல தொழில்நுட்பங்களைக் கொண்டுள்ளன. இவற்றை பல நாடுகளும் இன்று தயாரிக்கத் தொடங்கிவிட்டன. பைடனின் அமெரிக்க அரசு வெளிநாடுகளிலிருந்து ஏவப்படும் ட்ரோன்களை அழிப்பதற்கான முயற்சியிலும் இறங்கியுள்ளது. இதற்காக பல்கலைக்கழகங்களையும் ஆய்வு நிறுவனங்களையும் விஞ்ஞானிகளையும் அவ்வரசு நாடியுள்ளது.

தற்சமயம் அமெரிக்காவில் பொதுவெளியில் ட்ரோனை நகர்த்துபவரைக் (பைலட்) கண்டறிந்து ட்ரோனை கட்டுப்படுத்துவது சட்டபூர்வமான ஒரு முறையாகவுள்ளது. வேறு சில முறைகளும் உள்ளன. ட்ரோனுக்கு வழங்கப்படும் சமிக்ஞைகளை கட்டுப்படுத்துவது அல்லது திசை திருப்புவதன் மூலம் ட்ரோனை கட்டுப்படுத்தலாம். மூன்றாவது முறை ட்ரோன் மென்பொருளை ஊடுருவலுக்கு உள்ளாக்குவதாகும். இதன் மூலம் ட்ரோன்களை பாதுகாப்பு பிரிவினர், பாதுகாப்பான இடத்தில் தரையிறக்கச் செய்யலாம். நான்காவது முறை ட்ரோனின் இயக்கத்தை நிறுத்துவது அல்லது ட்ரோனை தாக்கி அழிப்பதாகும். சில ட்ரோன்கள் தற்கொலை ட்ரோன்களாக இயங்கும். அதாவது அவை தம் இலக்கையடைந்தவுடன் அதனைத் தாக்கி தாங்களும் அழிந்து கொள்ளும். இவற்றை அழிப்பது இலகுவானது. இவ்வாறான ட்ரோன்கள் சிறிய தாக்குதல்களுக்கே பயன்படுத்தப்படும்.

மேற்கு நாடுகளுக்குள்ள சவால்களுக்குள் முக்கிய இடம்பெறுவது கணினிகள் மீதான ஊடுருவலாகும். பல நிறுவனங்களின் கணினிகளை ஊடுருவி, பெறுமதி வாய்ந்த தகவல்களை இந்த ஊடுருவிகள் பெற்றுக்கொள்கின்றார்கள். இதனை சர்வசாதாரணமாக செய்துவருகின்றார்கள். ட்ரோன் தொழில்நுட்பத்தையும் இவர்கள் ஊடுருவலாம். ட்ரோன்களை ஏவுபவர்கள் மீதே இவர்கள் திசை திருப்பி ஏவலாம். போரில் மட்டுமல்ல. நாளை, சகல துறைகளிலும் ட்ரோன்களை நடைமுறைக்கு கொண்டுவரும்பொழுது, இந்த பிரச்சினை மேலும் தீவிரமடையலாம்.

உண்மையில் ட்ரோன் உற்பத்தி விடயத்தில் அமெரிக்கா பின்தங்கியேயுள்ளது. பென்டகன் 'Replicator' program-ஐ அறிவித்துள்ளது. அமெரிக்காவினுள் பல புதிய ட்ரோன் உற்பத்தி நிறுவனங்கள் தோன்றியுள்ளன. கனடா, மெக்சிக்கோ நாடுகளும் ட்ரோனை உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளன. ஆனாலும் உக்ரேனிடமிருந்து இரண்டு விடயங்களை கற்றுக்கொள்ள வேண்டும். ஒன்று ட்ரோன் உற்பத்திக்கான ஆய்வு அந்நாட்டில் அடிமட்டத்திலிருந்து ஆரம்பமாகியது. பல மட்டங்களில் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இரண்டாவது சீனாவிடமிருந்து பெறப்பட்ட ட்ரோன்கள் ரஷியாவிற்கு உதவி புரிந்தன என்பதனையும் உக்ரேன் தெளிவாக தெரிந்துள்ளது. எனவே, தகவல் தொழில்நுட்பங்களை மற்றும் ட்ரோன் உதிரிப்பாகங்களை தாங்களே உற்பத்தி செய்ய வேண்டும் என்பதனை நடைமுறைப்படுத்துகின்றது. பல சமயங்களில் நம்பத்தகுந்த நாடுகளிலிருந்து பெறப்படும் உதிரிப்பாகங்களின் சில பகுதிகள் சீனத் தயாரிப்பாகவிருக்கும். இவற்றிற்குள் இருப்பவை உளவு சொல்லக்கூடியவையாக இருக்கும். 2024-ல் ஒரு மில்லியன் ட்ரோன்களை உற்பத்தி செய்வோம் என உக்ரேன் இன்று கூறுகின்றது. எனவே உக்ரேனை உதாரணமாகக் கொண்டு அமெரிக்காவும், கனடாவும் முன்னேறும் என நம்பலாம்.



rathan@thaiveedu.com


# ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்

நடத்தும்

இணையவழிக் கலந்துரையாடல்



நாள் : 19 ஏப்ரல் வெள்ளிக்கிழமை 2024

நேரம் : இரவு 8:00 - 10:00 மணி (கனடா ரொறன்ரோ)

நாள் : 20 ஏப்ரல் சனிக்கிழமை 2024

நேரம் : காலை 1:00 - 3:00 மணி (இலண்டன்)

காலை 5:30 - 7:30 மணி (இலங்கை, இந்திய)

காலை 10:00 - 12:00 மணி (அவுஸ்திரேலியா சிட்னி)

"வைணவத் தமிழிலக்கியம்"

உரை நிகழ்த்துபவர் : பேராசிரியர் இ. குறிஞ்சிவேந்தன்

(தமிழ்ப் பல்கலைக்கழகம் , தஞ்சாவூர்)

Zoom ID: 84777257162 Passcode: 554268



# கல்வி மேம்பாடு அறிவுபூர்வமாகச் சிந்திப்போம்

– அகமட் பிஸ்தாமி

ஒரு சமூகத்தின் கல்வித்துறை மேம்பாடே அந்த சமூகத்தின் அனைத்து விதமான மேம்பாட்டுக்கும் அடிப்படையாக அமையும். கல்வித்துறை சரிந்து விழுந்து ஆட்டம் காணும் போது அனைத்துமே சரியும், பின்னடையும். மீண்டும் நிமிர்த்தி விட நீண்ட காலமும் பலத்த உழைப்பும் முதலீடும் அவசியப்படும். இந்தப் பின்புலத்தில் ஒரு நாட்டின் புத்திஜீவிகளும் புலமைத்துவத்தினரும் எதிர்காலக் கல்விக் கட்டமைப்பு குறித்து தீவிரமாகச் சிந்திக்கவும் செயற்படவும் வேண்டும். இன்றைய பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியில் அறிவுபூர்வமாக சிந்திப்பதற்கும் உணர்வு பூர்வமாக சிந்திப்பதற்கும் இடையில் கல்வி சிக்கித் தவிக்கின்றது.

கற்றல் கற்பித்தல், கற்றல் மேம்பாடு குறித்து கல்விப்புலத்தினர் தீவிரமாக சிந்திக்க கடமைப்பட்டுள்ளனர். ஏலவே அனுபவப்பட்ட முறைகளில் இருந்து விடுபட்டு காலமாற்றத்துக்கும் முன்னேற்றத்துக்கும் தொழிற் சந்தையின் கேள்வி நிரம்பல்களுக்கும் அமைவாக அது வடிவமைக்கப்பட வேண்டும். கொவிட் மற்றும் அரசியல் கொதிப்பின் பின்னரான பொருளாதார நிலை, வாழ்வாதார சிக்கல்களையும் மன அழுத்தங்களையும் தீவிரமாக்கியுள்ளது. கல்விக்கான செலவுகளும் வாழ்வாதார அழுத்தங்களும் ஒரு பக்கம் கற்றல் தீண்டத்தகாத ஒன்றாக கருதப்படுமளவு அதனை உருமாற்றியுள்ளது. அன்றாட வாழ்க்கைச் செலவையே சமாளிக்க முடியாத நிலையில், கல்விக்காக பாடசாலை மாணவர்களது உணவுத் தேவைக்காக செலவளிப்பதென்பது நினைக்க முடியாத சுமையாக மாறியுள்ளது. மந்தபோசனை, ஆரோக்கிய இழப்பு, கற்றலில் கவனம் செலுத்த முடியாமை, நினைவாற்றலில் பலவீனம், ஈடுபாடின்மை போன்றன கல்வி சார் பிரச்சினைகளாகும்.

இது உளவியல் சார்ந்து நோக்கப்பட வேண்டும். கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் உளவியலின் தாக்கம் தவிர்க்கவே முடியாதது. கல்வி உளவியல் என்றும் கற்றல் உளவியல் என்றும் கல்வியும் உளவியலும் என்றும் வெவ்வேறாக பிரித்து தனித்தனியாக நோக்கப்படுமளவு அது பிரதான பேசுபொருளாக உள்ளது. அடிப்படை உளவியல் தெரியாமல் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க முனைவதே படுதோல்வியின் ஆரம்பம் தான். கல்வி ஏன்? எதற்கு? என்ற அகன்ற பார்வை தான் அதன் மீதான அசைக்க முடியாத நம்பிக்கையையும் ஈடுபாட்டையும் அதிகரிக்கும்.

பாடசாலைக் கட்டமைப்பில் படி படி என்று போதிக்கத் தெரிந்த பலருக்கும் பொறுமையாக இருந்து எப்படிப் படிப்பது என்று சொல்லித்தரும் மூலோபாயங்கள் குறித்து தெளிவு இல்லை. கல்வி அலுப்புத்தட்டும் ஒன்றாக மாறி வருகிறது. அத்தகைய மனக்கட்டமைப்பு அவ்வளவு ஆரோக்கியமான ஒன்றல்ல. தற்பொழுது எமது நாட்டில் பொருளாதாரம் சரிந்து விழுந்து மக்களது அன்றாட வாழ்வியல் செயற்பாடுகளை தலைகீழாக புரட்டி விட்டுள்ளது. மக்களது ஒட்டு மொத்த வாழ்வும் எதிர்பாராத வகையில் தலை கீழாக கவிழ்ந்துள்ளது. அரசியல் சார்ந்த கொந்தளிப்புக்கும் கொதி நிலைக்கும் இடையில் நாடு சிக்கித் தவித்துள்ளது. வெளிப்படையில் நோக்கினால் நாட்டின் பொருளாதாரம் சரிந்துள்ளதானது, அதனது நிதியியல் சார் கட்டமைப்பு சரிந்துள்ளது என்பதை எடுத்துக் காட்டினாலும் உண்மையில் அதனது நிகழ்கால இருப்பும் கல்விப்புலமும் அதன் மீதான ஈடுபாடும் ஆட்டங் கண்டுள்ளன என்பதே உண்மை.

அதே நேரம் பிராந்திய மற்றும் சர்வதேச நாடுகளும் அமைப்புக்களும் எமது தேசத்துக்கு அதனது அவல நிலை கண்டு உதவிக்கரம் நீட்டுவதன் மூலம் அல்லது இலங்கை மீது கழுகுப் பார்வை கொண்ட சக்திகள் நிலைமையை தமக்கு சாதகமாக லாவகமாக கையாள்வதன் மூலம் கிட்டிய எதிர்காலத்தில் ஓரளவு நிமிர்ந்து நிற்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. அரசியல் மற்றும் பொருளியல் சார்ந்து மட்டும் நோக்கின் இது தற்காலிகமான சரிவும் வீழ்ச்சியும் மட்டும் தான். ஆனாலும் இந்த பரிதாபகரமான நிலை கல்வி மீதான ஈடுபாட்டை இளந்தலைமுறைக்கு சரியாகவும் முறையாகவும் கொடுக்குமா என்பது சிக்கலான வினா. ஆனால் வெற்றுக் கண்களுக்கு புலப்படாத இன்னும் ஒரு பாரிய சரிவு இதனால் நிகழ்ந்து வருகிறது. அதுதான் நிலையான சரிவு. எதிர்கால இருப்பையே ஆட்டம் காண வைக்கும் இமாலய சரிவு. கடந்த பல வருடங்களாக இலங்கை அரசியல் மற்றும் இனவியல் அம்சங்களில் ஏற்பட்ட அசாதாரண நிலைமை காரணமாக சரிந்துள்ள இன்னொரு முக்கியமான அம்சம் தான் அதன்

கல்விக் கட்டமைப்பு.

இது குறித்து ஆயிரக்கணக்கான வாதப் பிரதிவாதங்கள், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, பரிந்துரைகள் முன்வைக்கப் பட்டாலும் அவற்றை அமுலாக்கக்கூட முறையான போதிய அவகாசம் கிடைக்கவில்லை. இதற்குள் உலகளாவிய கொவிட் பெருந்தொற்று, நிலைமையை இன்னும் மோசமாக்கி யது. கல்விக் கட்டமைப்பும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுக ளும் சரிந்து விழுவதில் சாதகமான காரணிகளை அது தீவிர மாக துரிதப்படுத்தியது.

இப்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்பு நிலை காரணமாக மீண்டும் பாதிக்கப்பட்டிருப்பது எதிர்கால சந்ததிகளின் கல்வி தான். கல்வி அடித்தளமே இல்லாமல் மாணவர்கள் குறுகிய காலத்துள் தரம் 1-ல் இணைகின்றனர். எந்த ஒரு தேர்ச்சியையும் முழுமையாக முடிக்காமல் பரீட்சை கள் இல்லாமல் மாணவர்கள் அடுத்தடுத்த வகுப்புகளுக்கு நகர்த்தப்பட்டு வந்தனர். போதிய வாசிப்போ கிரகிப்போ இல் லாத நிலையில் அடுத்தடுத்த வகுப்புக்களில் இணைந்துள்ள னர். அடைய வேண்டிய கற்றல் இலக்குளை இழந்துள்ளனர். இனி ஒருபோதும் அவற்றை மீட்டவோ ஈடுசெய்யவோ முடி யாத அவலம் தலைதூக்கியுள்ளது. உரிய கல்விசார் செயற் பாடுகள் அதற்குரிய காலப்பகுதியில் நிறைவு செய்யப்படுவ தில்லை. மாணவர்கள் அடைய வேண்டிய தேர்ச்சிகளும் அடைவுகளும் இடையில் விடப்படுகின்றன. தேசிய பரீட்சை கள் தொடர்ந்தும் பிற்போடப்படுவதால் இயல்பான கட்ட மைப்பு சிதைந்து அது ஏனைய சகல தரப்பையும் பாதிக்கின் றன.

அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்படும் பிரதான அரச ஊழியர் அணியாக அதிபர், ஆசிரியர்கள் இருப்பதால் தமது எதிர்ப்பை வெளிக்காட்ட வாழ்வியல் இருப்புக்காக அவர்க ளும் போராட்டங்களையும் வேலை நிறுத்தங்களையும் முன் னெடுப்பதால் கல்விசார் நடவடிக்கைகள் இன்னும் பின்னடை கின்றன. வீட்டுச் சூழலில் பிள்ளைகளது இயல்பான கல்விக் கும் சுயமான கல்விக்கும் போதிய வசதிகளை செய்து கொள் ளும் அவகாசமோ, செய்து கொடுக்கும் அவகாசமோ, மனோ நிலையோ எல்லோருக்கும் வருவதில்லை. இதற்குள் விலை வாசி விண்ணை முட்டி எகிறிக் குதித்து இருப்பதால் வயிற்றுப் பிழைப்பு நடத்துவதிலும் மூவேளை உண்பதற்கும்தான் மக் கள் போராடி இரவு பகலாக அல்லோல கல்லோலப்படுகின்ற னர். அத்துடன் விலை வாசி உயர்வின் காரணமாக உரிய காலத்தில் கட்டணம் செலுத்தப்படாமையால் ஏற்படும் மின் துண்டிப்பு, எரிபொருள் தட்டுப்பாடு, தொழில் இன்மை போன் றவற்றால் உளப்பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

மாணவர்களது கற்றலில், வாசிப்பில், பரீட்சையில் வெறுப்பும் விரக்தியும் ஏற்பட்டுள்ளது. தமது நிகழ்காலமும், எதிர்கால மும், சுதந்திரமும், குதூகலமும் பறிக்கப்பட்டதாக அவர்கள் உணர ஆரம்பித்துள்ளனர். அவர்களது எதிர்காலம் இருண்டு வருவதை அவர்கள் படிப்படியாக புரிந்துகொள்ள தலைப்பட் டுள்ளனர்.

ஒரு நாட்டின் பொருளாதார அரசியல் ஸ்திரமின்மை தற்காலி கமானது. ஆனால் அந்த நாட்டின் கல்விக் கொள்கை ஸ்திர மின்மைக்கு உட்பட்டு சரிய ஆரம்பித்தால் கல்வி கற்கும் வாய்ப்பும் வசதியும் அற்றுப்போனால் சிந்திக்கின்ற, தீர்மானம் மேற்கொள்கின்ற, உண்மையான தேசப்பற்றுடன் நாட்டுக்காக உழைக்கின்ற எதிர்கால தலைமுறை ஒன்றே இல்லாமல் போகும். இது அந்த தேசத்தின் வீழ்ச்சிக்கு மட்டுமல்ல அடி மைத்தனம் குடிகொள்ளவும் காரணமாக அமையும். இந்த பயங்கர நிலைமை இன்னும் தீவிரமடையாமல் இருப்பதற் கான சில எளிய ஆரம்பமான பரிந்துரைகளை முன்வைக்கி றோம். இதனூடாக சரிந்து விழும் வேகத்தை தணித்து, ஓரள வேனும் தாக்குப்பிடித்து, நிமிர்ந்து நிற்க அவசியமான அடித் தளத்தை இடலாம்.

- மாணவர்களிடம் கல்வி கற்க வேண்டும் என்ற உளவியல் சார் ஆர்வத்தை ஊட்டுதல், அதற்காக ஊக்குவிப்பு நிபு ணர்களின் உதவியை நாடி தொடர்ச்சியாக நிகழ்சிகளை நடத்தல்.
- வகுப்பாசிரியர்கள் மற்றும் பாட ஆசிரியர்களின் பூரண ஒத் துழைப்பை பெறவும் கற்றலை கொண்டு செல்லவும் தேவையான ஏற்பாடுகளை செய்துகொள்ளல்.
- மாணவர்கள் வேறுபட்ட ஆர்வங்களுக்கும் ஆற்றல்களுக் கும் ஏற்ற வகையில் கற்றுக்கொள்ளும் மூலோபாயங்களை தெளிவுபடுத்தி அறிமுகம் செய்தல்.
- கிராம மட்டங்களில் மாணவர்களது கற்றலை தூண்டி விடும் போட்டி நிகழ்சிகளை நடத்தல்.
- மாணவர்களின் திறன்களை, ஆற்றல்களை, கலையாற்றல் களை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து அவற்றுக்கான சந்தர்ப்பம் வழங்கல்.
- வீட்டுச் சூழலில் கல்வி கற்பதற்கு வசதி உள்ளவர்கள் அதனை பயன்படுத்த ஊக்குவித்தல்.
- கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளும், ஆர் வமுள்ள ஆசிரியர்கள் அல்லாதவர்களின் உதவியை பெற் றுக்கொள்ள அவர்களை ஒன்றிணைத்தலும் ஒருங்கிணைத் தலும்.
- துரித செயற்றிட்டங்களை குறுங்காலத்தில் நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் முன்கொண்டு செல்லல்.
- கிராமங்களில் உள்ள பொது இடங்களை மையப்படுத்தி மேலதிக கற்றலுக்கு சாதகமான ஏற்பாடுகளை செய்தல்.
- மாணவர்களை தொடர்ந்தும் உற்சாகப்படுத்தி எதிர்கால தலைமைக்கு அவசியமான திறன்களை விருத்தியாக்க வழிகாட்டல்.
- கற்றலை இடையில் கைவிடாமல் தொடராக அதனை பெற் றுக்கொள்ளும் வகையில் வழிகாட்டல்.

பாடசாலைகள் கடந்த பல வருடங்களில் தொடர்ந்து விடுப்பு வழங்கப்பட்டே வந்ததால் இத்தகைய ஒழுங்குகளை தொட ராக மேற்கொள்ளும் போது கற்றலில் பாதிப்பு செலுத்தும் புறக்காரணிகளின் காரத்தையும் அகோரத்தையும் ஓரளவே னும் தவிர்க்கலாம், தணிக்கலாம், தடுக்கலாம்.

21-ம் நூற்றாண்டு வேண்டி நிற்கும் ஆசிரியர்களும் கல்வியியலாளர்களும் பன்முக பணியாற்றும் ஆசிரியரும் அவரது விரிதளங்களும் நொடிக்கு நொடி மாற்றமடைகின்றன. மாணவர்களது சிந்திக்கும் ஆற்றலும் எதிர்கால பார்வையும் பதிவும் கூட மாற்றம் கண்டு வருகின்றன. சமூக மாற்ற செயன்முறைச் செயற்பாட்டில் (process), ஆசிரியத்துவம் (padagogy) தவிர்க்க முடியாத அந்தஸ்தை பெற்றுள்ளது. நாட்டின் அபிவிருத்திக்கு (development) பங்காற்றும் வகையில் அறிவுக் கையளிப்பில் ஆசிரியர்களின் பங்கை குறைத்து மதிப்பிட (under evaluate) முடியாது. ஆசிரியரின் வாண்மையில் (professionalism) ஏற்படும் வீழ்ச்சி நாட்டின் கல்வித் துறையை (education) மட்டுமன்றி பொருளாதாரத்தையும் பாதிக்கும்.

உலகையே அச்சுறுத்தும் கொரோனா பெருந்தொற்றால் உலகளாவிய ரீதியில் பாடசாலைகள் மூடப்பட்டு கல்வித்துறை முழுமையாக பாதிக்கப்பட்ட நிலையில் தான் சமகாலத்தில் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்லும் மாணவர்களது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை முன்கொண்டு செல்ல தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தனது வாண்மைத்துவம் சார்ந்தவகையில் அதனை விருத்தி செய்யவும் மேம்படுத்தவும் ஆசிரியர் கடமைப்பட்டுள்ளார்.

அதற்கான அறிவு மற்றும் பயிற்சிகள் அவர்களுக்கு உரிய முறையில் வழங்கப்பட வேண்டும். கலைத்திட்டத்தை அமுலாக்க தொழில்நுட்பத்தை இணைக்க வேண்டிய கட்டாயத் தேவை ஆசிரியருக்கு உள்ளது. இந்த விடயத்தில் ஆசிரியர் குறித்தும் அவரது ஆற்றுகை (performance) குறித்தும் சமூகம் அவதானமாக உள்ளது. ஆசிரியர் வாண்மை என்பது தவிர்க்க முடியாத ஒன்று.

ஆசிரியர் வாண்மை சார்ந்த கல்விப்பரப்பு உலகளாவிய ரீதியில் கூடிய கவனயீர்ப்பை பெற்றுள்ளது. குறிப்பாக இலங்கை சூழலில் கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் ஆசிரியர் குறித்த அழுத்தமான, கூர்மையான அவதானம் பெருகியுள்ளது. இது தொளிநுட்ப உலகம் என்பதால் கல்வித் தொழில்நுட்பத்தை ஆசிரியர்களுக்கும் பாடசாலை சமூகத்துக்கும் உணர்த்தவும் வலியுறுத்தவும் வேண்டிய தார்மீக கடப்பாடு உள்ளது.

அறிவுசார் அம்சங்களை புதிய தகவலுடன் இணைத்துவிடும் பாத்திரத்தை செய்வோராக ஆசிரியர் மாறவேண்டும் என்பது 21-ம் நூற்றாண்டு எதிர்பார்க்கும் திறன்களுள் ஒன்று. சமகால உலகின் சவால்களை வெல்ல ஆசிரியர் தம்மை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். வாண்மைத்துவ விருத்தியில் கவனம் செலுத்தும் போது கல்வித் தொழில்நுட்பத்தின் சாதக பாதக விளைவுகளை அடையாளம் காணவும் அதனை வினைத்திறன் வாய்ந்தவகையில் உபயோகிக்கவும் வழிகாட்டவும் வேண்டிய தேவை ஆசிரியர் மீதுள்ளது.

ஆசிரியர் மீதுள்ள கடுமையான விமர்சனங்களை வெற்றி கொள்ள அவரது தொழில்நுட்ப ஆற்றுகையை மேம்படுத்துவதும் சிறப்பாக வழிகாட்டுவதும் முக்கியமான ஒன்று. ஆசிரியரின் வாண்மைத்துவத்தை வெளிப்படுத்துவதிலும் உடனுக்குடன் தன்னை இற்றைப்படுத்துவதிலும் இணைய பாவனை பிரதான அம்சமாகும். உலகளாவிய ரீதியில் ஆசிரியர்களை வாண்மைத்துவம் மிக்கவர்களாக மாற்றும் சட்டகத்தில் தொழில்நுட்பம் பிரதான கூறாக உள்ளது. (Shulman, 1986)

தகவல் பெருகி பிரளயமாக வழிந்தோடுகின்ற அறிவுமைய உலகில், ஆசிரியர் தனது வகிபாகங்களை உணர்ந்து பணியாற்ற வேண்டும். சமூக மாற்றத்தின் முகவர்களாக ஆசிரியர்கள் உள்ளனர். கல்விப்புலத்தில் நிகழும் மாற்றங்களை மாற்று சிந்தனைகளை அடையாளப்படுத்தி செயற்பட வேண்டும். கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிலும் மாற்றங்களை உள்வாங்கி ஜீரணிக்கும் மனோ நிலை உருவாக்கப்பட வேண்டும். ‘இலத்திரனியல் காலனித்துவம்’ மீளவும் திணிக்கப்படாமல் இருக்க அதனுடன் தொடர்பான டிஜிட்டல் தளத்தில் நிகழும் அறைகூவல்களில் தெளிவுடன் இருக்க ஆசிரியர் கடமைப்பட்டுள்ளார்.

மரபு ரீதியான கற்றல் - கற்பித்தல் ஆற்றுகையிலிருந்து விடுபட்டு நவீன நடிபங்கை வகிக்க வேண்டிய அறைகூவல் ஆசிரியர்களுக்கு முன்னால் மலை போல குவிந்துள்ளது. அந்த வகையில் 3T அடிப்படையில் கடத்தல் வகிபங்கு, கொடுக்கல் - வாங்கல் வகிபங்கு போன்ற இரண்டும் மாற்றமுற்று தற்காலத்தில் நிலைமாற்றும் வகிபங்கை ஆசிரியர் ஆற்ற வேண்டும்.

கட்டுருவாக்க ஆசிரியராக மாற அதற்கான அறிவை பெற ஆசிரியர் கல்வி அவசியமானதாகும். மாணவர்களின் கல்வித்தர மேம்பாட்டில் ஆசிரியர் பெறும் வாண்மை சார்ந்த பயிற்சிகள் கணிசமான தாக்கம் செலுத்துகின்றன. (Detya - 2005, Sethunga - 2007). கற்பித்தல் என்பதும் வாண்மைத்துவம் வாய்ந்த உயர் தரத்தில் அமைந்த பணியாகும். அதற்கான முறையியல்கள், பயிற்சிகள், உடனுக்குடன் நிகழும் உலகளாவிய மாற்றங்கள் நவீன, பின்நவீன செல்நெறிகள், துரித மாற்றங்கள் போன்றவற்றை கருத்தில் கொள்ளாமல் கற்பித்தலில் ஈடுபட முடியாது.

அப்படியான மனோ நிலையில் வகுப்பறைக்கு நுழைந்தால் மாணவர்களால், பெற்றோரால், பாடசாலை சமூகத்தால் தூக்கி வீசப்படலாம். நிராகரிக்கப்படலாம். இந்த இக்கட்டான நிலையிலிருந்து விடுபட ஆசிரியர் கல்வியின் முக்கியத்துவம் கருதி ஆசிரியர்கள் தம்மை மீளவும் ஒழுங்கமைக்க கடமைப்பட்டிருக்கின்றனர். எதிர்கால கல்விச் சமூகத்தை உருவாக்கும் பரந்த செயற்றிட்டங்களில் கவனம் செலுத்தாமல், வாங்கி விற்கும் பொருளாதாரத்தில் மட்டும் இன்பங்கண்டால் சமூகத்துக்கு தலைமையேற்று வழிகாட்டும் புலமைத்துவ வறுமை (Intellectual poverty) நிச்சயம் எம்மை பின்னோக்கி வேகமாகத் தள்ளும். இந்த இழுபறிகளும் சிக்கலும் எமது இருப்பை ஆட்டங்காண செய்யுமுன் கல்விப்புல எதிர்காலம் குறித்து துரிதமாக சிந்தித்து செயற்படுவோம்.



bisthamy.ahamed@thaiveedu.com




# கற்றல், கற்பித்தலும் தொழினுட்பமும்

– த. சிவபாலு

## அறிமுகம்:

எண்ணிமத் (Digital) தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence - AI) என்பன வகுப்பறையில் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை அவசியமாக்கியுள்ளன. வகுப்புகளை நடத்துவதற்கும், வளங்களைப் பகிர்வதற்கும், மதிப்பீடுகளைச் செய்வதற்கும் மற்றும் கல்வி நிறுவனங்களின் அன்றாட நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கும் இணைய இயங்குதளங்கள் (Online Platforms) கிடைக்கின்றன. இந்தத் தளங்கள் கோவிட்-19 தொற்றுநோய்க் காலத்தில் கல்வி முறையைத் தக்கவைக்க அதிகளவு பயன்படுத்தப்பட்டன. இந்த இக்கட்டான நேரத்தில் எண்ணிமத் தொழில்நுட்பங்கள் பெருமளவில் பயன்பாட்டுக்கு வந்தன.

## கல்வியும் தொழில்நுட்பப் பயன்பாடும்:

எண்ணிமத் தொழில்நுட்பங்கள் மாணவர்களின் தொழில்முறை செயல்திறன் தேவைப்படும் திறன்களை வளர்ப்பதில் உதவுகின்றன. அதாவது சிக்கலைத் தீர்ப்பது, சிந்தனை அமைப்பு உருவாக்கம் மற்றும் செயன்முறை என்பனவற்றில் கைகொடுத்தன. இலக்கியத்துறை மற்றும் பாரம்பரியக் கற்றல் நெறிகள் சாராத வகையில் மாணவர்களைத் தொழில்நுட்பம் திசை திருப்பி விட்டுள்ளது. இது மாணவர்களின் ஒழுக்கவியல், சமூகவியல், மனிதவாழ்வியல், வரலாறு, இலக்கியம் போன்ற கற்கை நெறிகளைத் தலைகீழாக மாற்றியுள்ளது. மாணவச் சமுதாயத்தின் எதிர்காலத்தை இது எங்கு கொண்டு சென்று விடுமோ என்னும் கேள்வியும் கல்வியியலாளர்கள், மானிடவியலாளர்கள் போன்றோரின் முன்பு எழுகின்றது.

## தொழில்நுட்பம் சார்ந்த கல்வியின் போக்கு:

மனிதப் பண்பியலை அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட சமூக வாழ்வியலைத் தொழில்நுட்பம் முற்றாக மாற்றிப்போட்டு வருகின்றது.

தொழில்நுட்பம், செயற்கைத் திறன்கள், றோபோக்களின் வருகை முதலானவை புதிய யுகத்துக்கான கல்விக் கட்டமைப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன. கணிக்க முடியாத மற்றும் மாறும் எதிர்காலத்திற்காக மாணவர்கள் தயாராகி வருகின்றனர். கல்வி வளங்கள் மற்றும் எண்ணிமக் கருவிகள் ஆகியன, வகுப்பறைச் சுற்றாடலை மேம்படுத்தவும், கற்பித்தல்-கற்றல் செயல்முறையை மேலும் வலுவூட்டவும் உதவுகின்றன. தொழில்நுட்பம் சார்ந்த கல்வியின் போக்கானது மாணவரின் தனித்துவத் திறன்கள் மற்றும் தேவைகளின் அடிப்படையில் ஒவ்வொரு கல்வி நிறுவனத்திற்கும் அதிக நெகிழ்வுத்தன்மை மற்றும் பாடத்திட்டத்தின் தனிப் பயனாக்கலை வழங்குவதாகவும் உள்ளது. இது கற்றல் நடத்தையின் வரவேற்கத்தக்க ஒரு திருப்பு முனையாக அமைந்துள்ளது என்பது மறுப்பதற்கில்லை.

## வகுப்பறைப் பயன்பாட்டின் சவால்களும் பயன்களும்:

வகுப்பறையில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினால் குழந்தைகள் கற்றலில் அதிக ஈடுபாடு காட்டக்கூடும். இன்று குழந்தைகள் பிறந்த சிறிது காலத்திலேயே தொழில்நுட்பத்தை ஏதோ ஒரு வகையில் பயன்படுத்தத் தொடங்கிவிடுகின்றனர். பெற்றோர் வளர்ந்த சூழ்நிலைக்கும் இன்றைய குழந்தைகள் வளரும் சூழ்நிலைக்கும் இடையே பெரும் இடைவெளியைக் காணமுடிகின்றது. இளைஞர்கள் இலத்திரனியல் உபகரணங்களின் பயன்பாட்டிற்கு மிகவும் பழக்கமாகி விட்டதால், தொழில்நுட்பக் கருவிகளை பள்ளிப் படிப்பில் இணைத்துக்கொள்வது, அவர்களின் ஆர்வத்தையும் ஈடுபாட்டின் அளவையும் மேம்படுத்துவதற்கு உதவும். எனவே, கல்வியில் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பது மாணவர்களைக் கவர்ந்துகொள்ளும் கற்றல் அனுபவத்தை வழங்குகிறது. மேலும் அவர்கள் கவனத்தைச் சிதறடிக்காமல் பாடத்தில் அதிக ஆர்வத்துடன் ஈடுபட வைக்கின்றது. வகுப்பறையில் LCD Projectors, கணினிகள் மற்றும் பிற அதிநவீன தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்துவது சர்வ சாதாரணமாகக் காணப்படுகின்றது. பொழுதுபோக்குத் தொழில்நுட்ப வளங்கள், வாய்வழி விளக்கக் காட்சிகள் மற்றும் குழுப் பங்கேற்பு ஆகியவற்றை உள்ளடக்கிய வகுப்பில் மாணவர் கற்றல் மிகவும் சுறுசுறுப்பாகவும் ஈடுபாட்டுடனும் காணப்படும் என்பது தொழில்நுட்பக் கல்வியாளர்களின் கருத்தாகவுள்ளது. மாணவர்களின் பங்கேற்பு மற்றும் பங்களிப்பு என்பன வாய்மொழித் தொடர்புக்கு அப்பால் செயல்வடிவத்திலும் நீடிக்கப்படலாம் என்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

எண்ணிமத் தொழில்நுட்பத்துடன் இணைந்து கணினிகள் மற்

றும் பிற சாதனங்களைப் பயன்படுத்துவதால், மாணவர்கள் அதிக செயல்திறன் மிக்கவர்களாக அறிவு விருத்தி பெற்றுக் கொள்ளவும், தேர்ச்சி பெற்ற ஒருவராகச் செயல்முறையின் மையத்தில் இருக்கவும் தொழில்நுட்பம் அனுமதிக்கிறது.

பயிற்றுவிப்பாளர் அல்லது ஆசிரியர் என்பவர் கற்பிப்பவராக அன்றி, இந்தச் செயற்பாட்டில் வழிகாட்டியாக மாறுகிறார். இதனால் ஆசிரியரின் பங்களிப்புப் பாரம்பரியக் கற்பித்தல் முறைகளிலிருந்து மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. மாணவர்களுக்கு மட்டுமன்றி ஆசிரியர்களுக்கும் புதிய எண்ணிம மற்றும் செயற்கைத்திறன் தொழில்நுட்பம் பெரும் சவாலாக அமைந்தும் விடுகின்றது. ஆசிரியர்கள் அல்லது பயிற்றுநர்கள் பரீட்சை வைக்காமலேயே மாணவர்களின் கற்றல் திறனையும் மேம்பாட்டையும் மதிப்பிட்டு அங்கீகரிக்க முடியும்.

இன்று அதிகரித்துக் காணப்படும் எண்ணிம ஆதாரங்களைப் பயன்படுத்தி, கற்பவர்கள் தேவையான தகவல்களைப் பதிவிறக்கலாம் அல்லது அவர்களின் உள்ளடக்கத்தைப் பதிவேற்றலாம். எண்ணிமத் தொழில்நுட்பங்கள், Gamification போன்ற கற்றலுக்கான போட்டி விளையாட்டு போன்ற வகுப்பறை உத்திகளைப் பயன்படுத்துவதை இலகுவாக்குகின்றன. இவை கற்றல் பரப்புகளை ஒரு செயற்கையான கருவியாகவே வடிவமைத்துள்ளன. இது பல நுட்பங்களைக் கலந்து ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனியான பயணத் திட்டங்களை வழங்க உதவுகிறது. தொழில்நுட்பமானது அறிவுறுத்தலை மிகவும் ஊக்கமளிக்கும் மற்றும் அர்த்தமுள்ளதாக ஆக்குகிறது என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

### எண்ணிமத் தொழில்நுட்ப (Digital Technology) வகுப்பறைக் கருவிகள்:

எண்ணிம வகுப்பறைகள் மாணவர்களுக்குக் கற்பிப்பதற்காக மின்னியல் சாதனங்கள் அல்லது பல்நோக்கு சமூக ஊடகங்கள், செல்லிடப்பேசிகள், தொலைபேசிகள், ஐபாட் போன்ற தொழில்நுட்பச் சாதனங்கள் முதலானவற்றையும் இணையத் தளங்களையும், பிரயோக இணையத் தளமேடைகளையும் (Platforms) பயன்படுத்துகின்றன. எண்ணிமத் தொழில்நுட்பத்துடன், இன்றைய கல்விமுறையானது எதிர்பார்க்கும் இலக்கை நோக்கிச் செல்வதற்குச் சிறப்பாக மாற்றப்பட்டுள்ளது.

எண்ணிமக் கற்றல் என்பது கற்றல் உத்திகளுள் ஒன்றாகும், இது முழுப் பாடத்திட்டத்தையும் நிறைவேற்றத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது மற்றும் மாணவர்கள் விரைவாகக் கற்றுக்கொள்ள வழிவகுக்கின்றது. எண்ணிம வகுப்பறை என்பது முழுமையாகத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கற்பிப்பதில் கவனஞ் செலுத்துவதாகவுள்ளது. மாணவர்கள் மடிக் கணினிகள், Taplets, Chromebooks போன்ற தொழில்நுட்ப அல்லது இணையத்துடன் இணைக்கப்பட்ட உபகரணங்களை (Gadgets) பயன்படுத்துகின்றனர். ஆசிரியர் கற்பித்தவற்றைக் குறிப்பெடுப்பதற்குப் பதிலாக, பெரும்பாலான பாடத்திட்டங்கள் மாணவர்களுக்கு ஈடுபாடும் ஊடாடும் வல்லமையையும் வளர்க்கின்றன. இவற்றிற்கான தளங்கள் நேரலையில் கிடைக்கின்றன. அதில் பல அம்சங்கள் இருந்தபோதிலும், கல்வி என்பது அடிப்படையில் ஒரு வகையான தொடர்பாடல் தன்மையில் அமைந்துள்ளமையை மறுப்பதற்கில்லை. இணையத்தளம் புதிய தகவல் தொடர்பு சாதனங்களின் வழிகளில் எழுச்சிக்கு வழிவகுத்தது என்பது கண்கூடு. இது கல்வித் தகவலைப் பரிமாற்றம் செய்யவும் இலகுவாக அணுகவும் மாணவர்களை ஈடுபடுத்தியுள்ளது. ஊடகங்கள் மற்றும் மெய்நிகர் தளங்கள் முதலானவை கற்றல் வசதிகளை அள்ளி வழங்குகின்றன.

கல்வி சார்ந்த பயன்பாடுகள் மற்றும் இணையதளங்கள் எண்ணிம வகுப்பறைகளில் மாணவர்களின் கற்றல் அனுபவத்தை மேம்படுத்த உதவுகின்றன. பின்னூட்டம் மற்றும் தொழில்நுட்பம் எண்ணிம வகுப்பறையின் இரண்டு முக்கிய கூறுகள் ஆகும். மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களிடமிருந்து நிகழ்நேரக் கருத்துகளைப் பெறுவதற்குப் பின்னூட்டச் செயற்பாடுகளை மீண்டும் மீண்டும் மேற்கொள்ளுவது அவசியம். பாடம், குழு, தனித்துவமான மாணவர்கள் போன்ற பல காரணிகள் குறித்த கருத்துகளை வழங்க ஆசிரியர்கள் பின்னூட்ட வசதி




யினைப் பயன்படுத்தமுடியும். இதன் விளைவாக, வகுப்பறைப் பயிற்றுவிப்புச் செயற்பாடானது பங்கேற்பதற்குரியதாக மாறிவருகிறது. இணைய வளங்கள் மற்றும் எண்ணிம வகுப்பறைகளைப் பயன்படுத்தி மாணவர்கள் தாம் விரும்பும் பல தலைப்புகளைத் தாங்களாகவே தீர்மானித்துக் கற்க முடியும்.

பாடசாலைகளில் வெவ்வேறு நிறங்களிலான விளக்கப்படங்கள், வரைபடங்கள் மற்றும் மாதிரிகள் வகுப்பின் சிறந்த வழிமுறைகளை எடுத்துக்காட்டுவனவாக அமைகின்றன. எனினும், அவை கல்வியை வழங்கும் பாரம்பரியக் கற்பித்தல் முறைகளாகக் கருதப்படுகின்றன. வகுப்பறையில் கல்வி என்பது பாரம்பரிய முறையிலிருந்து விலகிப் புத்தகங்களைப் படிப்பது, கரும்பலகையில் அத்தியாயங்கள் மற்றும் கருத்துகளை எழுதி விளக்குவது மற்றும் மாணவர்கள் குறிப்புப் புத்தகங்களில் தாங்களே குறிப்புகளை எடுத்துக்கொள்வது என்று வற்புறுத்துவதற்கு மாறாக, நவீன எண்ணிம வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் முறையானது ஆசிரியர் எனும் வழிகாட்டி இல்லாமல் சுயாதீனமாகக் கற்கும் முறைக்கு மாணவர்களை வழிப்படுத்துகின்றது.



sivapalu@thaiveedu.com

# அங்காதிபாதம் 400
# கன்மநிவர்த்தி

– பால. சிவகடாட்சம்

*‘போச்சது நோயாளிக்குப் பொருந்திய பிணிகள் எல்லாம்*
*வீச்சுறு குருவி னாலே மிக்க யந்திரத்தைக் கட்டி*
*வாச்சுதென் றயனு மாலும் வருந்தியுங் காண வொண்ணாத்*
*தீச்சுடர் வடிவாம் தேவ சிவநம வென்று போற்றே’ - 388*

ஆதிக்கம் பெற்றுள்ள ஆற்றலுள்ள குருவின் இயந்திரம் கட்டப்பெற்ற நோயாளியின் நோய்கள் எல்லாம் தீர்ந்துவிடும். பிரமனும் மகா விஷ்ணுவும் அடிமுடி தேடியும் காணாத ஒளிப் பிழம்பான இறைவனை ‘சிவாய நம’ என்ற ஐந்தெழுத்து மந்திரத்தைச் சொல்லிப் போற்றுவாயாக.

*‘சிவத்தைமுன் னாக மாறிச் செபிக்கும் அட் டாட்ச ரத்தால்*
*அவத்தமாம் கன்ம நோய்கள் அடுத்தபேய்ப் பிசாசும் தீரும்*
*தவத்தொடு தான தன்மம் தயவுடன் மிடியோர்க் கீந்தால்*
*நிவப்புற வளர்ந்து கன்ம வினைகளு நிவர்த்தி யாமே - 389*

‘சிவாயநம’ என உச்சரிக்கும் போது குழந்தைகட்குண்டாகும் எட்டுவித அட்சர நோய்கள் சூலியட்சரம், நீலியட்சரம், சோதியட்சரம், வீழியட்சரம், குண்டியட்சரம், கபாலியட்சரம், குமரியட்சரம், உள்ளட்சரம் ஆகியவையும் கரும பயனாகத் தோன்றிய நோய்களும் அண்டிய பேய், பிசாசுகளும் விட்டகலும். விரதம் இருந்து ஏழைகளுக்குத் தானம் கொடுத்து தர்மம் செய்தால் அவற்றின் பலன் வளர்ந்து கர்மவினைகள் தீர்ந்துவிடும்.

*‘நிவிர்த்திய தாகும் இங்கு நிகழ்ந்திடும் கன்ம மட்டோ*
*பவத்தினுக் குறுவித் தாய பாழ் இருண் மலமும் தீரும்*
*தவித்திடு மாந்தர்க் கெல்லாம் சார்ந்திடும் கன்மம் தன்னைப்*
*பவித்திரம் செய்யா விட்டால் பாவம்பண் டிதனைச் சுற்றும்’ - 390*

கர்ம வினைகள் மட்டுமன்றி பாவத்திற்கு மூல காரணமான, நன்மை தீமைகளைத் தரும் மும்மலங்களும் தீரும். இவற்றால் அல்லலபடும் எல்லோருக்கும் வந்து சேர்ந்திருக்கும் பாவவினை தன்னை நீக்க அதற்கான நிவாரணத்தைச் செய்யாவிட்டால் அதன் தாக்கம் வைத்தியரையும் சூழ்ந்து கொள்ளும்.

*‘சுற்றிய தோடத் தாலே வயித்தியன் தூய்மை கெட்டுப்*
*பற்று தீ நரகில் வீழ்வன் பழிவழி யாக நிற்கும்*
*உற்றசந் ததியும் அற்றே ஒழிவிலாக் கன்மம் சேரும்*
*முற்றும் ஈதுணர்ந்து செய்யும் வயித்தியன் முதன்மை யானே’- 391*

சூழும் பாவங்களினால் வைத்தியருடைய அறமும் கெட்டுக் கொடிய நரகத்தில் விழ நேரிடும். பழியானது வழி வழியாக அவரது சந்ததியையும் பற்றி முடிவில்லாத கன்மத்தைச் சேர்த்துவிடும். இவற்றை முழுமையாக உணர்ந்து செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்யும் வைத்தியர் சித்தி பெறுகின்றார்.

*‘முதன்மையாம் வைத்தியன் கன்ம முதலிலே நிவர்த்தி செய்தல்*
*அது தனக் குறுதி யென்றே அறிந்துடன் செய்து நாளும்*
*மதியணி சடையெம் கோமான் மலரடி பணிந்து போற்றில்*
*கதுமெனப் பிணியும் தீரும் கன்மமோ சனமு மாமால்’ - 392*

வைத்தியரானவர் கன்ம வினைகளுக்கான நிவர்த்தியை முதலில் செய்து அதற்குரிய பலன் கிடைப்பது உறுதி என்பதை அறிந்தவுடன் தினமும் பிறை சூடிய பெருமானின் பாதங்களைத் தொழுது போற்றி வருவாராயின் விரைவில் நோய் தீருவதோடு கன்ம விமோசனமும் கிடைக்கும்.

*‘மோசன மாம் உரோக முறைப்படி விகாரம் செய்யில்*
*காய்சின வியாதிக் குற்ற குறிகுணம் கண்டி டாமல்*
*பேசிய கிரியை தப்பிப் பிசகாக மருந்து செய்வோர்*
*நீசராய்ப் பிறந்து மண்ணில் நெடுந்துயர் உழப்பர் தாமே’ - 393*

தீங்கு விளைவிக்கும் உக்கிரமான நோயின் தீய குறி குணங்களை ஆராயாமல், சொல்லப்பட்ட முறைகளைப் பின்பற்றாது, பிழையாக மருந்து செய்வோர் ஒடுக்கப்பட்டவர்களாகப் பிறந்து உலகில் பெருந்துயர் அடைவர்.

*‘உழப்பதா நோய்கட் கெல்லாம் உறு தியா மருந்து செய்யில்*
*களைப்பற நீங்கிப் போகும் காலபே தங்கள் கண்டே*
*திளைப்புறு குறிகுணங்கள் செவ்வையாய் நன்றா ராய்ந்தே*
*இளைப்பறு மருந்தை ஈந்தால் ஏங்கியே மாயும் என்னே’ - 394*

வருத்தும் நோய்களுக்கெல்லாம் முறைப்படி தீவிரமாக மருந்து செய்தால் துன்பம் நீங்கிவிடும். கால வித்தியாசங்களைக் கருத்திற் கொண்டு, நோய்க் குறிகுணங்களை நன்கு ஆராய்ந்து, இடைவிடாது மருந்தைக் கொடுத்தால் நோயானது அகன்றுவிடும்.

*‘மாயமாய் மருந்து தப்பின் மறுபடி நோய் உண் டாகும்*
*ஏயநோய் வந்த நாட்கோள் எய்திய வலிமை கண்டே*
*ஆயதோர் சுகாசு ளாய்ந்துணர்ந் தவற்றைப் பார்த்துச்*
*சாய்வற வயித்தி யம்செய் வதுமிகத் தக்க தன்றே’ - 395*

கொடுக்கப்பட்ட மருந்தானது பிழைத்துவிட்டால் மறுபடி நோய் உண்டாகும். நோய் ஏற்பட்ட நாள் கிரகநிலை என்பவற்

றின் பலத்தைக் கருத்தில் கொண்டு நோயாளியின் சாத்திய மற்றும் அசாத்தியக் குறிகுணங்களை ஆராய்ந்து அறிந்து சோர்வின்றி வைத்தியம்செய்வதே மிகவும் விரும்பத்தக்கதாகும்.

*'தக்கதோர் மருந்துக் கெல்லாம் சாற்றிய மருந்து சுத்தி*
*பக்குவம் செய்ய வேண்டும் அல்லது பலித்திடாது*
*மிக்கதாம் பத்தி யம் கெட்டிடுகில் மீறிக் கொல்லும்*
*ஒக்கவே மருந்துண் டோர்க்கும் உறுபிணி ஒழிந்தி டாதே' - 396*

நோய்க்கேற்ற சிறந்த மருந்துகளுக்கெல்லாம் சொல்லப்பட்ட சுத்தி செய்யும் முறைகளைப் பக்குவமாகச் செய்ய வேண் டும். அவ்வாறு செய்யாவிடின் மருந்து செயற்படாது. மருந்தை எடுப்போர்க்கு அறிவுறுத்தப்படும் பத்தியம் கெட்டுப்போனால் ஒழுங்காக மருந்தை எடுத்தாலும் உற்ற பெரு நோய் மாறிவி டாது.

*'ஒழிந்திடும் பிணிகள் எல்லாம் உரியபண் டிதனைக் கண்டால்*
*விழைந்திடும் வயித்தி யோனை மிகமனம் வருந்தச் செய்தால்*
*அழுந்திய பிணியா ளன்தான் அதிகமாய் உபாதிப் பட்டுச்*
*செழுந்திருப் பொலிவு நீங்கிச் சேர்குவன் நரகில் அம்மா' - 397*

பொருத்தமான வைத்தியரைக் கண்டால் பிணிகளெல்லாம் ஓடிப்போய்விடும். அக்கறையுடன் மருந்துசெய்யும் வைத்தி யர் மனம் நோகும்படி நடந்துகொண்டால் நோயாளி நோயி னால் மிகவும் வருந்தி அவதிப்பட்டு அழகிய தோற்றமும் இழந்து நரகத்தை அடைவான் தாயே.

*'நரத்துவ மில்லா தார்க்கு நோயுறின் நன்மை யாகா*
*துரத்து நின் றிடும்தி யான செபதபத் துண்மை யாலே*
*பரத்துவம் உணர்ந்து பின்னைப் பரிகாரம் பண்பிற் செய்யில்*
*வருத்து நோய் தீர்ந்துபோகும் வளர்முலை மலையன் னாளே'-398*

மனிதப்பண்பு இல்லாதோர்க்கு நோய்கள் வருமாயின் நற்ப லன் கிட்டாது நோயானது தொடர்ந்துவரும். இறைவன் நாமத்தை உச்சரிப்பதாலும் விரதம் அனுட்டிப்பதாலும் இறை தத்துவத்தை உணர்ந்து பின்னர் தோஷங்களுக்குப் பரிகாரம் செய்வதாலும் ஒருவரை வருத்துகின்ற நோயானது தீர்ந்து போகும் என்பதைப் பூரித்த கொங்கைகளையுடைய பெண்ணே அறிந்து கொள்வாய்.

*'மலைவுறு நோய்கள் வந்தால் வயித்தியம் செய்ய முன்னே*
*அலைவுறு கணேசனுக்கு நிவேதனம் அவல் எள் ளுண்டை*
*தொலைவுறு பணிகா ரம்கள் துய்யமோ தகம்பருப்பு*
*நிலவிய பொங்கல் ஆவின் நெய்யுடன் அப்ப மாமே' - 399*

பயப்படக்கூடிய நோய்கள் வந்தால் அவற்றுக்குச் சிகிச்சை பெறுமுன்னர் விநாயகப் பெருமானுக்கு அவல், எள்ளு ருண்டை, குறைவில்லாத பணிகாரங்கள், இனிமையான மோதகம், பருப்பு கலந்த பொங்கல் என்பவற்றைப் பசுநெய்யு டன் சேர்த்துப் படைத்து வழிபடுவாயாக.

*'அப்பம்பிட் டுடனே தோசை அரியதோர் நாளி கேரம்*
*முப்பழம் இள நீர் ஆவின் முதியபால் பொரிக ரும்போடு*
*ஒப்பிலா வடைதேன் ஆதி உரியதாம் பூலத் தோடு*
*செப்பிய மலர் தூய்ப் பூசை சிறக்கச்செய்து ஏத்தி டாயே' - 400*

அப்பம், பிட்டு என்பவற்றுடன் தோசை, தேங்காய், மா, பலா, வாழை என்னும் முக்கனிகள், இளநீர், பசுவின் பால், பொரி உருண்டை, கரும்பு என்பவற்றையும் வடை, தேன் முதலான வற்றையும் வெற்றிலை பாக்கோடு படைத்து மலர்கள் தூவி சிறப்பான பூசைகள் செய்வாயாக.

*'ஏத்தியே தான தன்மம் இன்பம தாகச் செய்து*
*காத்திர மாக வேதான் மருந்தினைக் கருதி யுண்ணில்*
*தீத்திறம் அதனிற் பட்ட பஞ்செனத் தேகத் துற்ற*
*நோய்த்திறம் எல்லாம் தீரும் நூல்போல் நுண்இடையினாளே' - 401*

மெல்லிய இடையையுடைய பெண்ணே! இறைவனை வணங் கித் தான தர்மங்களை மகிழ்வோடு விரும்பிச் செய்வதுடன் மருந்தையும் மிகக் கவனமாக உட்கொண்டு வந்தால் நெருப் பினில் விழுந்த பஞ்சுபோல் நோயெல்லாம் தீர்ந்துவிடும்.

### நூல் வழி:

*'நுண்ணிய இந்நூலைப் போல் நூல் எங்கும் கிட்டி டாது*
*மண்ணுளோர்க்கு இரங்கி யெங்கள் மலைமட மாது போற்றி*
*அண்ணலை வணங்கிக் கேட்க அருளுமா மறையின் தன்மை*
*உண்மையைக் கேட்டு வேதற்கு ஓதினார் நந்தி தானே' - 402*

நுட்பமான இந்த நூலைப்போல சிறந்த நூல் வேறு எங்கும் கிடைக்கமாட்டாது. இவ்வுலகில் வாழும் மாந்தர்மேல் கொண்ட கருணையால் மலை மகளாம் பராசக்தி சிவபி ரானை வணங்கிக் கேட்டுக்கொள்ள அப்பிரான் கூறியவற் றைக்கேட்டு வேதங்களின் பொருளும் உண்மையும் அறிந்து நந்தியானவர் பிரமனுக்கு ஓதியவை இவையாகும்.

*'நந்தலின் வேதன் மேக நாதனுக்கு உரைத்த தந்த*
*இந்திர னிடத்தில் பெற்ற குறுமுனி இப்பார் மீதில்*
*வந்தநை மிசர்க்குச் சொன்ன வகைவழு வாமல் கூறும்*
*முந்திய கவி நானூறு முற்றுறச் சொன்ன தாமே' - 403*

பிரமன் இவற்றை மேகநாதனாகிய இந்திரனுக்குக் கூற இந்தி ரனிடமிருந்து குறுமுனியாகிய அகத்தியர் கேட்டறிந்து நைமி சாரணிய முனிவர்களுக்குக் கூறியவற்றை அவற்றின் ஒழுங்கு முறை தவறாமல் எடுத்துரைக்கும் நானூறு பாடல்கள் இத்து டன் முற்றுப்பெறுகின்றன.

(நானூற்று மூன்று பாடல்களுள் முதல் மூன்று பாடல்களும் கடவுள் வாழ்த்துப் பாடல்களாகும். இவற்றுக்கு அடுத்துவரும் பாடலையே முதலாவதாக எண்ண வேண்டும். எனினும் அங் காதிபாதத்தை ஏட்டில் எழுதியவர் கடவுள் வாழ்த்துப் பாடல் களையும் சேர்த்து எண்ணியதால் நானூறு என்பது நானூற்று மூன்றாகிவிட்டது.)

அங்காதிபாதம் 400 என்னும் நூல் இத்துடன் முற்றுப்பெறுகின்றது.

(சில பாடல்களுக்கு உரைகாண உதவிய சிவபாலு மாஸ்டர் அவர்கட்கு எனது நன்றி.)



Sivakadadcham@thaiveedu.com




எமது குழந்தைகளுக்குச் சிறுவயதில் உணவு ஊட்டுவதற்காக அல்லது அமைதியாக வைத்துக்கொள்வதற்காக அவரது கைகளில் அலைபேசியை வழங்குவோம். அவ்வாறு அலைபேசிகளைச் சிறுவர்கள் கைகளில் வழங்குவதால், அந்த நேரம் அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது நாம் கூறுவதை அவர்கள் கேட்க வைப்பதற்கு எமக்கு இலகுவாக இருக்கின்றது. ஆனால், அதில் பாரிய பல ஆபத்துகள் மறைந்துள்ளது என்பது உங்களுக்குத் தெரியுமா? இந்த விடயத்தைப் புரிந்து கொள்வதற்காகக் கீழே குறிப்பிடப்படும் உண்மைச் சம்பவங்கள் உதவிசெய்யும்.

பாணந்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதான மாணவரின் பெற்றோர் ஒரு சோக அனுபவத்தினை எதிர் நோக்கினர். அந்த மாணவனின் தந்தையும் தாயும் சட்டத்தரணிகளாகக் கடமையாற்றுகின்றார். தமது மகனின் தற்போதைய வாழ்வு தொடர்பில் அவரது தாயார் தெளிவுபடுத்துகின்றார்.

'எனது மகன் அதிகாலை வரையில் கேம் விளையாடுவார். காலையில் எழுவதில்லை. உணவு உட்கொள்வதில்லை. வழமையாக காலையில் எழுவதில்லை என்பதனால், காலையில் செய்யவேண்டிய எதனையும் அவர் செய்வதில்லை. அவரைக் கணினிப் பயிற்சிநெறி ஒன்றில் இணைத்தோம். அதற்கும் அவர் செல்லவில்லை. அவருக்குத் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்ளவும் முடியவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் நாம் இருக்கின்றோம்.'

மேலே குறிப்பிட்ட அந்த தாயின் அனுபவம், அப்பிள்ளையின் நடத்தை, கணினி விளையாட்டுக்கு அடிமையான பெரும்பான்மையானவர்களின் அன்றாட வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் வகையில் காணப்படுகின்றது. அவ்வாறான குழந்தைகளுடன் தொடர்பாடுவது தாய் தந்தையருக்குச் சற்றே கடினமான விடயமாகும்.

கணினி அல்லது அலைபேசியை அப்பிள்ளைகளின் கைகளிலிருந்து நாம் வாங்குவது என்பதும், அவர்கள் உயிரை மாய்த்துக் கொள்ளக்கூடிய அளவிற்குப் பாரதூரமான நிலைமையை ஏற்படுத்துகின்றது.

அலைபேசி வழியாக இணையத்தைப் பயன்படுத்தி விளையாட்டுகளில் ஈடுபடுவதற்கு அடிமையாகியுள்ள சிறுவரை, அதிலிருந்து மீட்பதற்காக அந்த அலைபேசியை அவரது தாய் பெற்றுக்கொண்டு வைத்திருந்த காரணத்தினால், மனமுடைந்து போன மாணவர் வீட்டில் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் ஒன்று கடந்த 2021-ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் மாத்தறை - ரொடும்ப காவல்துறைப் பிரிவிற்குட்பட்ட பகுதியில் பதிவாகியிருந்தது. ரொடும்ப - பல்லேகந்த பிரதேசத்தைச் சேர்ந்த மாத்தறை மகிந்த ராஜபக்ஷ கல்லூரியில் தரம் பத்தில் கற்கும் மாணவர் ஒருவரே, இவ்வாறு பாரிய துயரச் சம்பவத்திற்கு உள்ளாகினார்.

இந்த மாணவர் கல்வியில் நாட்டம் காட்டவில்லை என ஆசிரியர்கள் பெற்றோரிடம் அறிவித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து, பெற்றோர் குறித்த மாணவரின் செயற்பாடுகள் குறித்துக் கண்காணித்த போது, மாணவர் இணையவழிக் கல்வியைப் புறந்தள்ளி, கணினி விளையாட்டுகளில் அதிக நாட்டம் கொண்டு, அப்பழக்கத்திற்கு அடிமையாகியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பின்னர், அந்த மாணவனின் தாய் சிறுவன் பயன்படுத்திய அலைபேசியைக் கையகப்படுத்தி வைத்துள்ளார். இதனால் மனமுடைந்து போன சிறுவன் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில், உயிரை மாய்த்துக்கொண்டார். இந்தச் சம்பவத்தின் மூலம் கணினி விளையாட்டில் ஈடுபடும் அல்லது பழக்க அடிமைத்துவத்திற்குள்ளான சிறுவர்களை மீட்கும் போது, மிகவும் நிதானமாக, கவனமாக அந்த விடயத்தை மேற்கொள்ள வேண்டும்.

## பழக்கத்திற்கு அடிமையாதல் என்றால் என்ன? அதனை எவ்வாறு அடையாளம் காண்பது?

ஒரு பிள்ளை அலைபேசி அல்லது கணினி விளையாட்டுகளில் ஈடுபடும் பழக்கத்துக்கு அடிமையாகியுள்ளதா என்பதனை பெற்றோர் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். பழக்கத்திற்கு அடிமையாதல் என்பது அன்றாட செயற்பாடுகளைப் புறந்தள்ளி ஏதேனும் அதீத ஈர்ப்புடைய விடயம் அல்லது செயலில் ஈடுபடுவதையும் அதற்காக நேரத்தைச் செலவிடுவதனையும் குறிக்கின்றது என உளவியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். யாதேனும் ஒரு குழந்தை கணினி விளையாட்டுகளுக்கு அடிமையாகி இருக்கின்றதா என்பதனை அறிந்து கொள்வதற்கு, விசேட சில பண்புகளை அவதானிக்க வேண்டும் என, இலங்கையின் சிரேஷ்ட உளவியல் மருத்துவர்கள் தெரிவிக்கின்றார்கள். பழக்கத்திற்கு அடிமையாகும் நிலைக்குள்ளாகிய சிறுவர்கள், அலைபேசி அல்லது

கணினி இல்லாத சந்தர்ப்பங்களில் பின்வரும் நடத்தைகளை வெளிப்படுத்துவர் எனத் தெரிவிக்கப்படுகிறது:

- ஆக்ரோஷமான மனநிலை
- பதற்றம்
- எரிச்சல்
- கவனக்குறைவு
- நினைவாற்றல் குறைவு

பழக்கத்துக்கு அடிமையாகிய பிள்ளைகள் ஏக்கமடையத் தொடங்குகின்றனர். இதனைத் தடுப்பதற்காக மாணவர்கள் மீண்டும் மீண்டும் அப்பழக்கம் சார்ந்தவற்றைத் தேடிச் செல்லும் நிலையைக் காண முடிகின்றது. இதனால் அவர்களால் வேறு எதற்காகவும் காலத்தைச் செலவிட முடிவதில்லை. நண்பர்களுடன் பேசுவதற்கு, விளையாடுவதற்கு, படிப்பதற்கு, வேறு செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கென எவற்றையும் செய்ய முடியாத அல்லது அவற்றுக்கு நேரத்தை ஒதுக்காத நிலையைப் பிள்ளையில் அவதானிக்க முடியும். இவ்வாறான நடத்தையியல்புகளைக் கொண்ட பிள்ளைகளை இலகுவில் அடையாளம் காண முடியும். பழக்கத்திற்கு அடிமையாகுதலினால் பாதிக்கப்பட்டவர்கள் நாளொன்றுக்கு இரண்டு மணித்தியாலங்கள் முதல் 24 மணித்தியாலங்கள் வரையில், ஒவ்வொருநாளும் கணினியுடன் நேரத்தைச் செலவிடுவார்கள்.

## பழக்கத்திற்கு அடிமையாகிவிட்ட பிள்ளையொன்றை எவ்வாறு நல்வழிப்படுத்துவது?

பழக்கத்திற்கு அடிமையாகிவிட்ட பிள்ளை ஒன்றுடன் தொடர்பாடும் செயலானது, மிகவும் நிதானமாக மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாகப் பெற்றோர் இது குறித்து மிகுந்த கவனம் செலுத்த வேண்டுமென, மருத்துவர்கள் குறிப்பிடுகின்றார்கள். முதலில் பிள்ளை கணினி விளையாட்டுகள் சார் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளாரா என்பதைப் பெற்றோர் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். அதன் பின்னர் சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது. ஒருவேளை பிள்ளை அடிமையாகியிருந்தால், அதிலிருந்து அப்பிள்ளையை மீட்பதற்கு பெற்றோரும் பெரியவர்களும் மிகவும் பொறுமையுடன் செயற்பட வேண்டும்.

இந்த நிலைமைக்குள்ளான சிறுவர்களிடமிருந்து கணினியை அல்லது அலைபேசிப் பயன்பாட்டைக் கிரமமான முறையில் படிப்படியாகவே அகற்ற வேண்டும். இப்படிச் செய்யும்போது, பிள்ளைகளுக்கு அதிகளவு கோபம் ஏற்படுவதுடன், அவர்கள் கவலையும் அடைவார்கள். எனவே, அவர்களிடமிருந்து கணினி அல்லது அலைபேசிப் பயன்பாட்டைக் குறைக்கும் செயல், ஒரு படிமுறைச் செயற்பாடாக மிகக்கவனமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால் பிள்ளைகள் 'பிழையான திடீர்த் தீர்மானங்களை' எடுக்கக்கூடிய அபாயம் காணப்படுகின்றது. ஐந்து வயதிற்கும் குறைந்த சிறுவர், சிறுமியருக்குக் கணினி மற்றும் அலைபேசியை வழங்குவது எந்த வகையிலும் பொருத்தமற்றது. 5 வயதிற்கும் மேற்பட்ட பிள்ளைகள் நாளொன்றுக்கு அதிகபட்சமாக இரண்டு மணித்தியாலங்களே, கணினி அல்லது அலைபேசியைப் பயன்படுத்த வேண்டும். பிள்ளைகளைக் கணினி அல்லது அலைபேசிப் பயன்பாட்டிலிருந்து, மீட்டெடுக்க வேண்டுமாயின், பெற்றோர் சில அர்ப்பணிப்புகளையும் தியாகங்களையும் செய்யவேண்டியுள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெற்றோரும் இணையப் பயன்பாட்டை நிறுத்திவைக்க வேண்டியுள்ளது. மேலும் ஆசிரியர்களுக்கு இது குறித்து அறிவித்து, அலைபேசிக்குப் பாடசாலைக் கற்றல் நடவடிக்கை குறித்த தகவல்களை அனுப்புவது நிறுத்தப்பட வேண்டும். ஆசிரியர்கள் திறன்பேசிகள் வழியாக பாடசாலைப் பயிற்சிகளை அனுப்புவது தற்பொழுது பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. ஆசிரியர்கள் இணைய வழியைப் பயன்படுத்திக் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதனால் மாணவர்கள் இலகுவில் அவற்றைக் காரணமாகக் கொண்டு, கணினி மற்றும் அலைபேசிகளைப் பயன்படுத்த நேரிடுகின்றது. இதற்கு ஆசிரியர்கள் மாற்று வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். குறிப்பாக அச்சுப் பிரதிகளைக் கொண்ட பாடப் பயிற்சிகளை வழங்குவது இதற்கு ஒரு மாற்று வழியாகும்.

பழக்கமொன்றுக்கு அடிமையாகியுள்ள மாணவர்களை அந்தப் பிரச்சினையிலிருந்து மீட்டெடுப்பதற்கு, அவர்களை நன்றாக உடற்பயிற்சிகளில் ஈடுபடச் செய்ய வேண்டும் என உளவியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். சுற்றுலாக்கள் செல்வது, திறந்த வெளியில் விளையாட்டுகளில் ஈடுபடுவது, செல்லப் பிராணிகளுடன் நேரத்தை செலவிடுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்தல், நல்ல நண்பர்களுடன் பழகுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல், புத்தகங்களை வாசிப்பதற்குச் சிறந்த சூழலை உருவாக்கி அதன் மீது நாட்டத்தை ஏற்படுத்தல் முதலான செயற்பாடுகளின் ஊடாகப் பிள்ளைகள் அலைபேசி மற்றும் கணினி என்பனவற்றுக்கான பழக்க அடிமைத்துவத்திலிருந்து மீள்வதற்குச் சந்தர்ப்பம் ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வகையில் பாதிக்கப்பட்ட பிள்ளையொன்றை உடனடியாக உரிய மருத்துவச் சிகிச்சைக்குட்படுத்த வேண்டும் எனவும் மருத்துவர்களின் ஆலோசனைகளுக்கமைய நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் இலகுவில் பிள்ளைகளை நல்வழிப்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. உலக சனத்தொகையில் 6.09 சதவீதமானவர்கள் இணையப் பயன்பாட்டுப் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளதாகப் புள்ளிவிவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவை மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட ஆய்வொன்றில், அந்நாட்டு மக்களில் 46 சதவீதமானவர்களுக்கு இணையப் பயன்பாடின்றி வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு முடியாத நிலை உருவாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்காவில் 98 வீதமான மக்கள் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர். உலகில் அதிகளவு சனத்தொகையினர் இணையத்தைப் பயன்படுத்தும் நாடாகச் சீனா காணப்படுகின்றது. அங்கு சுமார் 746 மில்லியன் மக்கள் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர்.



jeyaseelan.s@thaiveedu.com




இப்போது செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் பிரபலமடைந்து கொண்டிருக்கிறது. இத்தொழில்நுட்பம் தொடர்பான பாதுகாப்புச் சட்டங்களை அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய சமூக நாடுகள், கிழக்காசிய நாடுகளில் சில, அவுஸ்திரேலியா முதலான நாடுகள் இயற்றியுள்ளன. இருந்தும், செயற்கை நுண்ணறிவுத் தொழினுட்பத்தின் பிரயோகத் தன்மை, சட்டங்களையும் தாண்டியதாக அமைவதாக உலகில் பரவலான வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. அவற்றின் இருண்ட திரைகளுக்குள் பல மர்மங்கள் நிறைந்துள்ளதாக சட்ட, அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் இக்னேசி பெல்ரான் டி ஹேர்டியா சுட்டிக் காட்டுகின்றார். இதனைப் பல ஆய்வாளர்களும் வழிமொழிகின்றனர். இதன் முழுமையான தாக்க விளைவுகளை உடனடியாகக் கணிப்பிட முடியாது. இந்நிலையில்தான் Blockchain தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

Blockchain தொழில்நுட்பம் என்பது 2024-ம் ஆண்டில் ஆரம்பமாகி ஒரு சில நாடுகளில் இருந்து வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கும் தகவல் தொழில்நுட்பமாகும். இது ஒரு பரவலாக்கப்பட்ட, வெளிப்படைத் தன்மையான எண்ணிம (Digital) சேமிப்பு முறையாகும். ஒரே நேரத்தில் மில்லியன் கணக்கான கணினிகளில் தரவு, தகவல் பரிவர்த்தனைகளைப் பதிவு செய்து சேமித்து வைக்கக் கூடிய சேமிப்பகமாகும். இது வங்கிகள், பாரிய வணிக நடவடிக்கைகள் மற்றும் ஏனைய துறைகளில் பாரியளவில் பயன்படுத்தப்படும் மத்திய தரவுத் தளங்களைப் போலல்லாது, தனியான அமைப்புசார் தரவுத் தளமாகச் செயற்பட்டுக் கோடிக் கணக்கான பரிவர்த்தனைகளைக் கட்டுப்படுத்தி, உடனுக்குடன் தரவுகள் தகவல்களை ஒப்பு நோக்கிச் சரிபார்த்து, சேமித்தும் வைக்கக் கூடியது Blockchain தொழில்நுட்பம். இதன் மூலம் ஒரே செயற்பாட்டில் உலகம் முழுவதும் பல கிளைகளைக் கொண்டிருக்கும் நிறுவனங்கள், ஒரே நேரத்தில் கோடிக்கணக்கான கணினிகளுடன் பரிவர்த்தனைகளைச் சரிபார்த்துப் பதிவு செய்து தரவுகளைச் சேமித்து வைக்க முடியும். Blockchain தொழில்நுட்பத்தில் அதி உச்ச பாதுகாப்பு, நம்பிக்கை, வெளிப்படைத் தன்மை, இலகு தன்மை ஆகியன காணப்படுவதனால் எதிர்காலத் தரவுத்தளச் சேமிப்பகத்தின் முன்னோடியாகவும் மைல்கல்லாகவும் அமையப் போகின்றது.

உலகின் பல நாடுகளிலும் பரந்திருக்கின்ற பாரிய நிறுவனங்களும் அரச அமைப்புகளும் இத்தொழில்நுட்பத்தின் ஊடாகத் தமது நடவடிக்கைகளை மேலும் பரவலாக்கம் செய்ய முடியும். இணையத் தளத்தில் இணைக்கப்படும் நபர்கள் தமது தரவுகள், தகவல்களைச் சேமித்து வைத்து, பாதுகாப்பாகப் பராமரிக்க முடியும். இடைத்தரகர்களின் உதவி இல்லாமல் இதனைச் செய்ய முடியும். பரிவர்த்தனையின் போது ஒவ்வொரு தரவுகள், தகவல்களும் உடனுக்குடன் பதிவு செய்யப்படுவதனால் இன்னொருவர் நுழைந்து தகவல்களைத் திருத்துவதற்கோ, திருடுவதற்கோ முடியாதளவு, பாதுகாப்பான சேமிப்பகமாக Blockchain தொழில்நுட்பம் காணப்படும்.

உரிமையாளர் தகவல்களைத் திருத்தியமைத்து மேலும் தரவுகளைச் சேர்த்துக் கொள்ளவும் முடியும். இதில் ஒரு விடயம் அல்லது பல விடயங்கள் தொடர்பான பதிவுகள் தொடர்ச்சியாகப் பதிவு செய்யப்பட்டுப் பேணப்படும். இதனால் அவ்விடயம் தொடர்பான வரலாற்றினையும் அறிந்து கொள்ள முடியும். உதாரணமாக, ஒரு நோயாளியின் சிகிச்சைகள், தொடர் கண்காணிப்புப் பதிவுகள், வழங்கப்பட்ட மருந்து - மாத்திரைகள், ஆலோசனைகள், கண்காணித்த வைத்தியர்கள் பற்றிய வரலாற்றினையும் பூரணமாக அறிந்து கொள்ளலாம். அத்தோடு வெளிப்படைத் தன்மை அதிகம் இருப்பதனால் உரியவரின் அனுமதியுடன் அந்த வரலாற்றினைப் பார்ப்பதற்கும் அனுமதியளிக்கிறது.

Blockchain தொழில்நுட்பத்தில் ஒரு பரிவர்த்தனையானது, பதிவு செய்யப்பட்டால் அது நிரந்தரமாகிவிடும். பதிவு செய்தவர்களை அல்லது கடவுச் சொல் உள்ளவர்களைத் தவிர, எவராலும் தரவுகள், தகவல்களை மாற்றி அமைக்க முடியாது. இத் தொழினுட்பத்தில் பரிவர்த்தனைகளைப் பாதுகாக்க மிகவும் மேம்படுத்தப்பட்ட கிரிப்டோகிராபிக் நுட்பங்களைப் பயன்படுத்துகிறது. ஒவ்வொரு பரிவர்த்தனையும் மறையாக்கம் (encrypt) செய்யப்பட்டு, முந்தைய பரிவர்த்தனையுடன் இணைத்துச் சரிபார்க்கப்பட்டு, ஒரு இணைப்பை உரு

வாக்குகிறது. இவ்வாறு பரிவர்த்தனை இணைப்புகள் சங்கிலித் தொடராக உருவாக்கப்பட்டிருப்பதனால் மிகப் பாதுகாப்பான சேமிப்பகமாகக் கொள்ளப்படுகிறது. அதனால், ஊடுருவும் ‘ஹாக்கர்’கள் குறிப்பிட்ட தரவுகளைக் கண்டறிந்து கையாள்வதும் களவாடுவதும் மிகவும் கடினமானது என நம்பப்படுகிறது. அத்தோடு தற்போது பயன்பாட்டிலுள்ள தரவுத் தளச் சேமிப்பகம் செயலிழந்தால் தரவுகள், தகவல்கள் சிதைந்தோ, அழிந்தோ போவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. ஆனால், Blockchain தொழில்நுட்பத்தில் அந்த வாய்ப்பு முற்றாகத் தவிர்க்கப்படுகிறதெனக் கூறப்படுகிறது.

Blockchain தொழில்நுட்பத்தினை நவீன தகவல் தொழில்நுட்ப உலகில் மிகவும் பாதுகாப்பான, நம்பகரமான, வெளிப்படைத் தன்மையான, இலகுவான முறையாகப் பயன்படுத்தலாம். கொடுக்கல் வாங்கல் பரிவர்த்தனைக்கு தற்போது பயன்படுத்தப்படுகின்ற பிட்காயின் மற்றும் இத்திறியம் முதலான கிரிப்டோ நாணயச் செயற்பாடுகளுக்கு, இத்தொழில்நுட்பம் உதவக்கூடிய ஒன்றாக அமையப் போகின்றது. இன்றைய நவீன பரிவர்த்தனைச் செயற்பாடுகளுக்கு எதிர்காலத்தில் மிகப் பாதுகாப்பான முறையாக அமையப் போகின்றதெனப் பலரும் தெரிவிக்கின்றனர். கிரிப்டோ நாணயப் பரிவர்த்தனைகளைப் பதிவு செய்வதற்கும், டிஜிட்டல் நாணயங்களின் ஒருமைப்பாட்டை பராமரிக்கவும் பாதுகாப்பான தளத்தை இதன் மூலம் உருவாக்க முடிகிறது. எதிர்கால டிஜிட்டல் நாணயப் பரிவர்த்தனைகளுக்கு இத்தொழில்நுட்பம் மிகப் பிரபலமான, பாதுகாப்பான முறையாக அமையப் போகின்றது.

ஒரு நாட்டில் தேர்தல் காலத்தில் வாக்காளர் பதிவுகள், தேர்தல் நடவடிக்கைக்கான ஆளணிகள், வாக்குப் பதிவுகள் என்பன தொடர்பான தரவுகள், தகவல்களைத் துல்லியமாகப் பதிவு செய்து பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு Blockchain தொழில்நுட்பம் சிறந்ததாக நம்பப்படுகிறது. தேர்தல்களை நடத்துவதற்குப் பாதுகாப்பான மற்றும் வெளிப்படைத் தன்மையான தளத்தை இத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கலாம். ஒவ்வொரு வாக்குப்பதிவும் தனித் தனி புளோக்கில் (Block) பதிவு செய்வதன் மூலம், பதிவு செய்யப்பட்ட வாக்குகளை மாற்றி அமைப்பதும் மோசடி செய்வதும், இறுதி முடிவினை மாற்றி அமைப்பதும் இத்தொழில்நுட்பத்தின் மூலம் முற்றிலும் சாத்தியம் அற்றதாகிறது. எதிர்காலத்தில் ஜனநாயகத்துக்கு விரோதமற்ற நம்பிக்கையான தேர்தல்களை நடத்தி, வெளிப்படைத் தன்மையுடன் முடிவுகளை வெளியிடுவதற்கு Blockchain தொழில்நுட்பம் சிறந்த முறையாகக் கொள்ளப்படுகிறது.

மருத்துவத் துறையிலுள்ளோர் நோயாளிகளின் நோய்கள் தொடர்பான தகவல்கள், தரவுகளைப் பாதுகாப்பாகச் சேமித்து வைத்திருப்பதற்கும், விரும்பியபோது ஒருவரின் நோய் தொடர்பான விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் இத்தொழில்நுட்பம் சிறந்த மாற்றீடாக இருக்கப் போகிறது. இதன் மூலமாக, நோயாளிகள் தமது நோய் தொடர்பாகவும் மருத்துவச் சிகிச்சைகள் தொடர்பான வரலாறு குறித்த சகல விடயங்களையும் சரியாக அறிந்து கொள்வதற்கும் பதிவு செய்து வைத்திருக்கவும் உதவுகிறது.

வணிக, நிதி நிறுவனங்கள், கைத்தொழில் துறை, சேவைகள் துறைசார்ந்த நிறுவனங்கள் அவர்களின் உற்பத்திகளை, சேவைகளைக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்யவும் கண்டு பிடிப்புக்களை மேற்கொள்ளவும், ஊழல், மோசடிகள், விரயம் ஆகியவற்றைத் தவிர்க்கவும் தர உறுதிப்பாட்டைப் பேணவும் இத்தொழில்நுட்பம் உதவப் போகின்றது. நிறுவனங்கள் சிறந்த தீர்மானங்களை எடுத்து உற்பத்திகள் மற்றும் சேவைகளை மேம்படுத்தவும் சிறந்த பரிவர்த்தனைகளை மேற்கொள்ளவும் இத்தொழில்நுட்பம் பாரிய பங்களிப்புச் செய்யும் என நம்பப்படுகிறது.

உள்நாட்டு, வெளிநாட்டு, சர்வதேச தரை, நீர், ஆகாய வழிப் போக்குவரத்தின் வலைப் பின்னல்களைத் துல்லியமாகக் கண்காணிப்பதற்கும் அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கும், விபத்துக்களைத் தவிர்ப்பதற்கும், விபத்துக்கான காரணங்களை இலகுவாகக் கண்டறிவதற்கும் பிரயாணிகள், பொருட்கள் தொடர்பான விபரங்களைத் தெளிவாக அறிந்து கொள்வதற்கும் பிரயாணப் பாதைகளைச் சந்தர்ப்பம் சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றிக் கொள்வதற்கும் இது சிறந்த முறையாக அறிமுகப்படுத்தப்படுகிறது. அத்தோடு விமானங்கள் விபத்துக்குள்ளாகும் போது, கறுப்புப் பெட்டி இல்லாமலே விபத்துக்கான காரணங்களைக் கண்டறிய முடியும் எனவும், காணாமல் போகும் விமானங்களைப் பற்றித் துல்லியமாக அறிந்து கொள்வதற்கு இது பக்கபலமாக அமையும் எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இது நம் டிஜிட்டல் கண்டுபிடிப்புக்களின் எதிர்காலத்தையே முற்றிலுமாக மாற்றிவிடும் வாய்ப்புள்ளதால், இது குறித்த அறிவினை மேலும் பெருக்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில், எதிர்கால உலகம் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்துக் கூடாகவும் Blockchain தொழினுட்பத்தினதும் ஆளுகைக்கு உட்படப் போகின்றது என்பது திண்ணம். செயற்கை நுண்ணறிவுத் தொழினுட்பம் தொடர்பாக வாதப் பிரதிவாதங்களும் விமர்சனங்களும் எழுந்திருப்பது போல் எதிர்காலத்தில் இதுதொடர்பிலும் மாற்றுக் கருத்துக்கள் வெளிவருவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.



kuruparan.s@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***




கடந்தகாலக் கட்டுரைகளில் குறிப்பிட்டது போல் காலநிலைக்கு ஏற்றவகையில் வீட்டைப் பராமரித்து வந்தால் திடீரென ஏற்படும் பாரிய செலவுகளைத் தவிர்த்துக்கொள்ளலாம். அந்தவகையில் குளிர்காலம் முடிவடைந்து கோடைகாலத்தை எதிர்பார்த்து நிற்கும் எங்களுக்கு வசந்த காலத்தில் எந்தவகையில் வீட்டைப் பராமரிக்கலாம் அல்லது கோடைகாலத்திற்கு தயார்ப்படுத்தலாம் என்பது பற்றி குறிப்பிடுவது பொருத்தமானது.

### மரத்தளம் - Deck:

பொதுவாகக் குளிர்காலத்தில் தேங்கிக்கிடந்த பனிப்படிமானங்கள் கரையத் தொடங்கியதும் நீர், மரப்பலகைக்குள்ளேயோ அல்லது மரச் சட்டங்களுக்குள்ளேயோ உட்புகத் தொடங்கலாம். மரச்சட்டங்களில் உரிய எதிர்ப்புத் தன்மையற்றுப் போய்விட்டால் உட்புகும் நீரால் மரம் உரிய காலத்திற்கு முன்னர் உக்கிப் பழுதடைந்து விடும். இக்காலத்தில் நீர்க்கறை, பொருமல் என்பவற்றை அவதானிப்பதன் ஊடாக கோடைகாலம் வரும்போது உரியமுறைப்படி நீர் எதிர்ப்புக்குரிய பூச்சுக்களை பூச (Water Resistent Paint) எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளலாம். அத்துடன் Mold, Moss போன்ற பங்கஸ் பிடிக்காமல் இருப்பதற்காக ஒருதடவை Power Washer உதவியுடன் கழுவியும் விடலாம்.




### குளிரூட்டி - Air conditoner:

குளிரூட்டியைச் சுற்றி சருகுகள், குப்பை கூழங்கள் குவிந்திருக்க வாய்ப்பு உள்ளது. அவற்றைச் சுத்தப்படுத்துவதோடு குளிரூட்டியைச் சுற்றியுள்ள வலைப்பகுதியினை (Net) Garden hose மூலமோ அல்லது Vacum Cleaner-ன் உதவியுடனோ, சுத்தம் செய்து காற்றோட்டம் தடைப்படாதவாறு குளிரூட்டி இயங்கக்கூடிய நிலையை உறுதிசெய்தல் வேண்டும்.

### அத்திவாரம் - Foundation:

பனி உருகி கரைந்தோடும் காலப்பகுதியாகவும் மழைப்பொழிவு அதிகமுள்ள காலமாகவும் இக்காலம் விளங்குவதால் பொதுவாக நிலக்கீழ் அறையில் தண்ணீர் உட்புகும் இடர் இக்காலத்தில் தான் அதிகமாக இருக்கும். எனவே, மயிரளவு (Hairline Crack) வெடிப்பினாற்கூட தண்ணீர் உட்புகும் வாய்ப்பு இருப்பதால், நிலைமை மோசமாகுமுன்னர் சற்று கூர்ந்து அவதானித்தால் உரிய நடவடிக்கைகளை ஆரம்பத்திலேயே எடுத்துவிடமுடியும்.

### வாகனக் கொட்டகைக் கதவு:

வாகனக் கொட்டகைக் கதவு திறப்பதற்குப் பொதுவாக மோட்டர்கள் பொருத்தப்பட்டிருக்கலாம். அதன் தொடர்பைத் துண்டித்துவிட்டு கையால் கதவை ஒரு தடவை திறந்து பார்த்து, கதவு தடைகளின்றி இலகுவாக திறந்து மூடுகிறதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். தடைகள் இருந்தால் over head spring-ஐ சரிசெய்ய வேண்டிய தேவை இருக்கலாம். அத்துடன் உரிய முறையாக வேலை செய்கின்றனவா? என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

### தண்ணீர் பீலிகள் - Gutters:

அடைபட்டு இருக்கக்கூடிய பீலிகளை நன்கு சுத்தம் செய்து இலகுவில் நீர் வழிந்தோடும் தன்மையை உறுதி செய்தல் வேண்டும். அத்துடன் கீழ் நோக்கி விழும் குழாய்கள் (Downspout) உரிய முறையில் நீரை வெளியேற்றுகிறதா? என்பதையும் அவதானித்தல் நல்லது. முக்கியமாக அதன் அடியில் பொருத்தப்பட்டிருக்கும் Leader pipes அடைக்காதிருக்கின்றதா என்பதை உறுதி செய்வதோடு நீர் நேரடியாக அத்திவாரத்திற்கு அடியில் உட்புகாதவாறு பார்த்துக்கொள்ளல் வேண்டும். குறிப்பாக அத்திவாரத்தில் இருந்து 5 அடிக்கு வெளியே நீர் சென்றடையும் விதத்தில் அவை பொருத்தப்பட்டிருப்பது சாலவும் சிறந்தது.



## கூரை - Roof:

Chimney, Skylight-ஐ அண்டிய பகுதிகளில் நீர்க்கசிவு ஏற்படலாம். இக்காலப்பகுதியில் Attic ஊடாக நீர்க்கசிவுக்கான அடையாளங்களை இலகுவாகக் கண்டுகொள்ளலாம். பொதுவாக 15-20 வருடங்களுக்கு கூரையில் போடப்பட்டிருக்கும் Shingles நின்றுபிடிக்கும் என்றாலும், காற்று மற்றும் புறக்காரணிகளால் பழுதடைந்துள்ள அல்லது இடைவெளியாக உள்ளவற்றை பழுதுபார்ப்பது அவசியம்.

## மரங்கள்:

வீட்டைச் சுற்றி மரங்கள் இருப்பது ஆரம்பத்தில் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் காலப்போக்கில் அதுவே பெரிய பிரச்சினை ஆகிவிடும். வளர்ந்த மரங்கள் கூரையையோ, யன்னல்களையோ தாக்கி சேதங்களை உண்டு பண்ண வாய்ப்பு இருக்கின்றது. கொப்புகள் வளர்ந்து பாரம் ஏறமுதல் அவற்றை கத்தரிப்பதற்குரிய சிறந்த காலம் இதுவே. மரங்கள் அளவுக்கு அதிகமாக வளர்ந்திருந்தால் அதற்குரிய தொழில்சார் வல்லுனர்களை நாடுவதே சாலவும் சிறந்தது.


## வாகனப்பாதை - Driveway:

வாகனப்பாதைக்கு குளிர்காலத்தில் உப்பால் குளிப்பாட்டி இருப்போம். இந்த வருடம் அவ்வளவாக இல்லாவிட்டாலும் போட்ட உப்பு தங்கி இருந்து அதற்குரிய பணியைச் (அரிப்பு) செய்து கொண்டே இருக்கும். Asphalt, Inter-lock, congrete என்று எந்த வகை வண்டிப் பாதையாக இருந்தாலும் இக்காலப் பகுதியில் Power washer உதவியுடன் முதலாவது வேலையாக வண்டிப் பாதையை நன்றாகக் கழுவி உப்பின் தன்மையை இல்லாது செய்தல் வேண்டும்.

குறிப்பாக Inter Lock உள்ளவர்கள் கல்லின் இடைவெளிகளில் பூண்டுகள் முளைப்பதை அவதானிக்கலாம். எனவே அவை முளைக்க முன்னர் அதனைத் தடுக்கக்கூடிய விதத்தில் உரிய மண்ணைப் போட்டு (Brush stone dust) பாதுகாக்கலாம். Congrete வாகனப்பாதையாக இருந்தால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையாவது அதனை Seal பண்ணத் தவறக்கூடாது. Asphalt வாகனப் பாதையாக இருந்தால் இருக்கக்கூடிய வெடிப்புகளை, அடைத்த பின்னர் நல்ல வெப்பமான காலநிலை வரும்போது இரண்டு வருடத்திற்கு ஒருமுறையாவது Seal பண்ணத் தயாராதல் வேண்டும்.

## கவனத்தில் கொள்ளவேண்டிய மேலும் சில...

- வெப்பமாக்கியுடன் பொருத்தப்பட்டிருக்கும் ஈரப்பதனாக்கியை (Cenral humidifier) முற்றாக நிறுத்தி விடுங்கள்.
- வெப்பமாக்கிக்கோ (Furnace), Fire place-க்கோ முதன்மை விளக்குகள் (Pilot Lamps) பொருத்தப்பட்டிருந்தால் அவற்றை நிறுத்தி விடலாம்.
- வெளி வளவிற்கோ அல்லது முன்வளவிற்கோ (Back Yard & Front Yard) போகும் குழாய்களின் நீரை நிறுத்தி இருந்



தால் (Shut Off) அவற்றைத் திறந்துவிடலாம்.
- 3 மாதத்துக்கு ஒருமுறை வெப்பமாக்கிக்குரிய வடிகட்டியை (Filters) மாற்றிவிடவேண்டும் என்ற அடிப்படையில் அதனையும் உறுதி செய்து கொள்ளுங்கள்.
- யன்னல்களுக்குரிய வலைகளைச் (Net) சுத்தப்படுத்தி அல்லது அவசியம் ஏற்பட்டால் பிரதியீடு செய்து தயார்ப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
- தண்ணீர் வெளியேற்றத்திற்குரிய வெளிப்புறப் பாதைகள் அடைபட்டிருந்தால் அவற்றை சுத்தம் செய்தல் வேண்டும்.
- பூக்கன்றுகள், காய்கறி வைப்பவர்கள் மண்ணைத் தயார் செய்து தேவை ஏற்பட்டால் பசளைகளைப் போட்டு தமது பணிகளை ஆரம்பிக்கலாம்.



velasubramaniam@thaiveedu.com




எதிர்பாராத அனர்த்தங்களிலிருந்து எம்மைக் காத்துக் கொள்வதற்காகவே அமைக்கப்பட்டது காப்புறுதி அமைப்பாகும். ஒரு மாதத்தில் பத்தாயிரம் பேரில் ஒருவருக்கு அனர்த்தம் ஏற்படுமென வைத்துக் கொள்வோம். ஒவ்வொருவரிடமுமிருந்து மாதத் தொடக்கத்தில் பத்து டொலர்கள் பெற்று வைத்தால், மாதக்கடைசியில் இழப்பு ஏற்பட்டவருக்கு அதனை ஈடு செய்வதற்காக நூறாயிரம் டொலர்கள் இழப்பீட்டினைக் கொடுக்கலாம். இச்செயற்பாட்டைச் செய்வது தான் காப்புறுதி அமைப்பாகும். மாத ஆரம்பத்தில் பணத்தை சேகரிப்பதனால் அதில் வரும் ஒரு மாத வருவாய் அல்லது வட்டி அந்தக் காப்புறுதி அமைப்பிற்குக் கிடைக்கும். அந்தக் காப்புறுதி நிறுவனத்தை நடத்துவதற்கு அது உதவும்.



### தவறான கருத்து 1:

காப்புறுதி செய்வது வீண் செலவு என்று கேள்விப்பட்டுள்ளேன். இழப்புகள் ஏற்படும் வேளையில் உங்களைக் காக்கும் என்பதுதான் உண்மை. இழப்புகள் ஏற்படாவிட்டால் நீங்கள் அதிர்ஷ்டசாலிகள். ஒரு நாட்டிற்கு அரணாகக் கோட்டை கட்டிவிட்டு, ஒருவரும் படை எடுக்கவில்லையே என்று அரசரும் நாட்டு மக்களும் வேதனைப்படுவது முட்டாள்தனம். எதிர்பாராத இழப்புகளிலிருந்து, அதாவது வாகன விபத்து, வீடு தீக்கிரையாகுதல் அல்லது இறப்பு போன்ற அனர்த்தங்களால் வாழ்க்கை சீர்கெட்டுப் போகாமல் காப்பதற்காகவே காப்புறுதி செய்வார்கள். அதன் பெயரிலேயே, காப்பை உறுதி செய்வது காப்புறுதி எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

உதாரணத்திற்கு உங்களுடைய $750,000 பெறுமதியான வீட்டிற்கு வருடாவருடம் $1,500 கட்டி வந்தால், உங்கள் வீடு முற்றாகத் தீக்கிரையாகுமிடத்து அதை மீளக் கட்டுவதற்கு காப்புறுதியிலிருந்து பணம் கிடைக்கும். அதற்காக $1,500 கட்டிவிட்டு 'வீடு எரியவில்லையே! வீணான செலவு!' என்று வேதனைப்படுவது வேடிக்கையான விடயம். எனவே, அனர்த்தம் நடக்கவில்லை என்றாலும் காப்புறுதிக்கான செலவு வீண் செலவல்ல என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

### தவறான கருத்து 2:

எல்லாக் காப்புறுதியும் ஒன்றே, அதாவது காப்புறுதி என்றால் காப்புறுதி என்றும் சிலர் சொல்வார்கள். இக்கருத்து எப்படி உள்ளது எனில் 'எல்லாப் பழமும் பழம்தானே' என்பது போலுள்ளது. பழத்திற்குப் பழம் வித்தியாசப்படுவது போல், காப்புறுதிக்குக் காப்புறுதி வித்தியாசப்படும். ஆகவே, காப்புறுதி பெறும்வேளை தமது தேவையை உணர்ந்து காப்புறுதியைப் பெற்றுக் கொண்டால் கூடிய பயன் கிடைக்கும். உதாரணத்திற்கு ஒரு வாகனக் காப்புறுதியை எடுத்துக் கொண்டால், அது எத்தகைய வாகனம், அதனைச் செலுத்துபவரின் முன் அனுபவம், அது என்ன தேவைக்குப் பயன்படுத்தப்படுகிறது, வருடத்திற்கு எவ்வளவு தூரம் செலுத்தப்படுகிறது, கேட்பனவுகளில் கழிவுத்தொகை என்ன, என்பதாகப் பல காரணிகளால் தாக்கமடையும்.

வீட்டுக் காப்புறுதியை எடுத்துக் கொண்டால், உங்கள் சொந்தவீடா? அல்லது சொந்த வீடாக இருப்பினும் Condo எனும் தொடர்மாடிக் கட்டடமாகில் உங்கள் வீட்டுக் கட்டடம் அந்தக் காப்புறுதிக்கு உரியதாகும், மேலும் பல காரணிகளால் தேவைகளும் கட்டணங்களும் நிர்ணயிக்கப்படுகின்றன. எனவே, ஒவ்வொரு காப்புறுதியைச் செய்யும் வேளையிலும் ஆவணங்களைக் கவனமாக வாசித்துச் சந்தேகங்களைத் தீர்த்து உடன்படிக்கையில் கையொப்பமிடுங்கள்.

### தவறான நம்பிக்கை 3:

காப்புறுதி எல்லா இழப்புகளையும் ஈடுசெய்யும் என நம்புவது தவறு. பெரும்பங்கு இழப்புகளை ஈடுசெய்யினும் சில இழப்பு

களை ஈடு செய்யாது என்பதைத் தயவுசெய்து மறக்க வேண்டாம். உதாரணத்திற்கு ஒரு வீட்டுக் காப்புறுதிக்கு வெள்ளத்தால் கேட்பனவுகள் வருவது உண்டு. வீட்டுக்குக் காப்புறுதி செய்யும்போது இப்படியான அனர்த்தம் ஏற்படலாம் என்று ஒருவரும் எதிர்பார்ப்பதில்லை. இதனால் ஏற்பட்ட இழப்புகள் கேட்பனவில் முடிவதும் உண்டு.

## சில வித்தியாசமான காப்புறுதிகள்:

**விமான விபத்தால் வரும் இழப்புக்கான கேட்பனவு:**

உதாரணத்திற்கு 2020-ம் ஆண்டில் ஒரு விமானம் விபத்துக்குள்ளாகி, ஒருவருடைய வரவேற்பறையில் சென்று தங்கியது. அதிஷ்டவசமாக விமானத்தில் பயணித்தவருக்கு உயிருக்கும் உடலுக்கும் இழப்பு ஏதுமில்லாது, பொருட்செலவுடன் மட்டுமே அவ்விபத்து முடிந்தது. அதனைக் காப்புறுதி ஈடு செய்தது.

**காலுறை இழப்பவர்களுக்கான காப்புறுதி:**

இது மிகவும் வேடிக்கையான காப்புறுதி. பல சந்தர்ப்பங்களில் Socks எனும் இரு காலுறை கொண்ட ஒரு சோடியில் ஒன்று மட்டும் துணி துவைக்கும் இயந்திரத்தில் இடக்குப்பட்டு தொலைந்து விடுவதுண்டு. இந்நிலையில் பீட்டாபிராண்ட் (Betabrand) எனும் காலுறை தயாரிக்கும் ஸ்தாபனம் ஒரு புதுவிதமான காப்புறுதியை அறிமுகப்படுத்தியது. காலுறைச் சோடியை வாங்கி ஒரு வருடத்துக்குள் ஒன்றைத் தொலைத்துவிட்டால், தொலையாமல் தனியனாக இருக்கும் காலுறையை முகநூலில் பதிவு செய்தால் அதற்கேற்ற மற்றக் காலுறை அந்நிறுவனத்தால் இலவசமாகத் தரப்படும்.

**திருமணக் காப்புறுதி:**

அமெரிக்காவில் ஒரு சராசரி திருமணத்திற்கான செலவு அண்ணளவாக $28,000 வரை வரும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக ஒருவர் மனதில் எழும் கேள்வி 'இத்தகைய திருமணக் காப்புறுதியில் எத்தகைய கேட்பனவுகள் வரலாம்' என்பதாக இருக்கும்.

விமானத்தில் பொதிகள் தொலைந்தமை காரணமாக ஒரு திருமணத்தில் கிடைத்த அனைத்துப் பரிசுப் பொருள்களையும் இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டதென, ஒரு கேட்பனவு வந்தது. அடுத்ததாக, ஒரு திருமணத்தில் தொடர்ச்சியாகப் பத்தங்குல கனமழை பெய்ததால் திருமணம் நின்றுபோனதைச் சுட்டிக்காட்டி அதனால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்வதற்கெனவும் கேட்பனவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**பல குழந்தைப் பேற்றுக் காப்புறுதி:**

ஆங்கிலத்தில் இதனை Multiple Birth Insurance எனக் குறிப்பிடுவர். பொதுவாக ஒரு பெண் கருத்தரித்தால் ஒரு குழந்தை பிறப்பது இயல்பு. அதனை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பார்கள். ஆனால் சில சந்தர்ப்பங்களில் ஒன்றுக்கு மேலாக இரண்டு, மூன்று அல்லது நான்கு குழந்தைகள் ஒரே தடவையில் பிறந்தால், அவர் வாழ்வில் பெரும் பொருளாதார கஷ்டம் ஏற்படலாம். அவ்வேளையில் அதற்கு முகம் கொடுப்பதற்காகக் கருத்தரித்த உடனேயே பல குழந்தைக் காப்புறுதி செய்ய முடியும். அப்பெண் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகளைப் பெறின், அவர்களுக்குக் காப்புறுதி அமைப்பு பணம் கொடுக்கும்.

**பெறுமதியான உடல் அவயக் காப்புறுதி:**

இதனை ஆங்கிலத்தில் Most Valuable body parts Insurance என்பார்கள். உலகப் பிரசித்தி பெற்ற மிருதங்க வாத்தியக்காரர் அல்லது நாதஸ்வர வாத்தியக்காரருக்குக் கை இன்றியமையாதது. உலகப் பிரசித்தி பெற்ற அழகிக்கு அவருடைய கால்கள் இன்றியமையாதவை. எனவே, பெறுமதியான உடல் அவயங்களுக்கான காப்புறுதி செய்து வைப்பது அவசியம் என்று ஏற்றுக் கொள்வீர்கள்.

எனவே, தேவைக்குரிய காப்புறுதியைப் பெற்று நலமுடன் வாழுங்கள்.



senthuran.p@thaiveedu.com





# வேலைக்குச் செல்லும் குழந்தைகள் : ஒரு பார்வை

– சி. நற்குணலிங்கம்

உழைக்க ஆரம்பிப்பதற்கேற்ற உடல் மற்றும் மனப்பாங்கு முதலானவை இன்னும் சரியாக வளர்ச்சியடையாதவர்களே சிறுவர்கள். அவர்களைப் பணிக்கமர்த்தி அவர்கள் செய்யும் வேலைக்குச் சம்பளம் அளித்தாலும் அது ஒரு குற்றச் செயலே! உடல்-உள விருத்திக்குத் தேவையான சூழல் மறுக்கப்பட்டு, அவர்கள் மீது கூலிக்கு வேலை செய்யும் சூழல் திணிக்கப்படுவது கண்டிக்கப்பட வேண்டியது. ஒரு குழந்தைகளின் உடல்நிலை, மனம், கல்விச் சுதந்திரம், பாதுகாப்பு உள்ளிட்டவைக்கு நாம் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

தொழில் புரியும் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்ல முடியாமலும் பிற குழந்தைகள் போல விளையாட முடியாமலும் கஷ்டப்படுகின்றனர். போதிய உணவும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இவர்கள் குழந்தைகளாகவே இருப்பதற்குத் தேவையான வாய்ப்பும் சூழலும் மறுக்கப்படுகிறது. இதிலும் கொடுமையான விடயம் என்னவெனில், சிலர் மோசமான சுற்றுச்சூழலில் கொத்தடிமைகளாக ஆண்டுக் கணக்கில் வேலை வாங்கப்படுகின்றனர். போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட சட்ட விரோத நடவடிக்கைகளிலும் இக் குழந்தைகளைச் சமூக விரோதிகள் ஈடுபடுத்துகின்றனர். பெரும்பாலான குழந்தைகள் குடும்பச் சூழ்நிலை காரணமாகத்தான் இவ்வாறான கட்டாய வேலைக்கு அனுப்பப்படுகின்றனர்.

கடினமான வேலைகளுக்கு 18 வயதுக்கு மேற்பட்டவர்களை மட்டுமே ஈடுபடுத்த வேண்டும். 16 வயது வரை கல்வி கற்பிக்கப்பட வேண்டும். உலகளவில் 21.5 கோடிக் குழந்தைகள் முழுநேரத் தொழிலாளர்களாக உள்ளனர். சில வளர்ச்சியடைந்த நாடுகள் உட்பட பெரும்பாலான எல்லா நாடுகளிலும் சட்டவிரோதமாகக் குழந்தைகள் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஆசியாவில் 61%, ஆபிரிக்காவில் 32%, இலத்தீன் அமெரிக்காவில் 07% வீதமெனக் குழந்தைகளின் துன்பியல் தரவுகள் தொடர்கின்றன. ஆய்வுகளின்படி ஒவ்வொரு 10 குழந்தைகளில் ஒருவர் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். உலகில் ஏழ்மையான நாடுகளில் நான்கு குழந்தைகளில் ஒருவர், தங்கள் உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

குழந்தைத் தொழிலாளர்களுக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட பொதுவான முதல் சட்டமான தொழிற்சாலைகள் சட்டம் 19-ம் நூற்றாண்டின் முதற்பாதியில் பிரிட்டனில் அமுல்படுத்தப்பட்டது. அதன்படி 9 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பணிபுரிவதற்கு அனுமதிக்கப்படவில்லை; 18 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஒரு நாளைக்கு 12 மணிநேரம் வேலைசெய்ய அனுமதிக்கப்பட்டனர். வளர்ச்சியடைந்த பல நாடுகளில் குழந்தைத் தொழிலாளருக்கான வயது மாறுபட்டதாகவுள்ளது. ஐ.நா சபையின் குழந்தைத் தொழிலாளர் நியதிப்படி, 16 வயது நிறைவு பெறுவதற்கு முன்பாகக் குழந்தைகளைப் பணியில் அமர்த்தக் கூடாது.

குழந்தைத் தொழிலாளர் முறை உலகின் பல்வேறு பகுதிகளிலும் தொழிற்சாலை மற்றும் சுரங்கங்களிலுமுள்ளது. பாலியல்தொழில், விவசாயம், பெற்றோரின் தொழிலில் உதவுதல் போன்றவற்றுடன் சிறிய வணிகத்திலும் குழந்தைகள் தொடர்ச்சியாக ஈடுபடுத்தப்படுகின்றனர். சில குழந்தைகள் சுற்றுலா வழிகாட்டியாகவும், உணவு விடுதி மற்றும் கடைகளில் பரிமாறுவோர்களாகவும் வேலை செய்கின்றனர். சில குழந்தைகள் அட்டை தயாரித்தல், பொருட்களை அடுக்குதல், சுத்தம் செய்தல் போன்ற வேலைகளிலும் வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தப்படுகின்றனர். யுனிசெப் அறிக்கையின்படி உலகம் முழுவதிலும் 5 தொடக்கம் 14 வயதுக்குட்பட்ட 158 மில்லியன் சிறுவர், சிறுமிகள் வீட்டுவேலை தவிர பிற வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

1999-ம் ஆண்டு உலகளாவியரீதியில் குழந்தைத் தொழிலாளர் முறைக்கெதிரான இயக்கச் செயற்பாட்டில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர். இந்த இயக்கம் 1998 ஜனவரி 17-ஆம் திகதியில் தொடங்கப்பட்டது. உலகத்தின் ஒவ்வொரு மூலைக்கும் சென்ற அவ்வியக்கம் அதிகளவு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியதோடு, அம்மக்களையும் பங்கேற்கவும் வைத்தது. ஜெனிவாவில் நடைபெற்ற குழந்தைத் தொழிலாளர் அமைப்புக் கருத்தரங்கில் இந்த இயக்கம் நிறைவுபெற்றது. இதில் பங்கேற்றவர்கள் குழந்தைத் தொழிலாளர் அமைப்பு உடன்படிக்கையை ஆதரித்துப் பேசினர். தொடர்ந்த ஆண்டில் இந்த உடன்படிக்கையானது ஜெனிவாவில் நடந்த குழந்தைத் தொழிலாளர் அமைப்புக் கருத்தரங்கில் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 169 நாடுகள் இந்த உடன்படிக்கைக்கு ஒப்புதல் அளித்தன. உலகளவில் பரப்பப்

பட்ட பாரிய விழிப்புணர்வே, உடன்படிக்கை ஒப்புக்கொள்ளப் பட்டதற்கு மிகப்பெரிய காரணமாகும். 1998-ம் ஆண்டு அமெ ரிக்கப் பொருளாதார மறுபார்வையில் வெளிவந்ததும் 'குழந் தைத் தொழிலாளர் பொருளாதாரம்' என்ற தலைப்பில் அமைந்ததுமான கட்டுரையில், கவுசிக்பாசு மற்றும் பாம்ஹோ வாங்வான் ஆகியோர் 'குழந்தைத் தொழிலாளர் முறைக்கு முக்கிய காரணம் குடும்ப வறுமையே' என்ற காரணத்தை முன் வைத்தனர்.

நாட்டின் எதிர்காலம் இருண்ட நிலைக்குத் தள்ளப்படுகின் றது. 1919-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட வெர்சாய்ஸ் உடன்ப டிக்கை முதலாம் உலகப்போரை முடிவுக்குக் கொண்டுவந் தது. இந்த உடன்படிக்கை சமூக நீதியின் வழியாக மட்டுமே நிலையான அமைதியை அடைய முடியுமென்ற கொள்கை யின் அடிப்படையில் அமைந்தது. இதன் விளைவாக 2002-ம் ஆண்டில் குழந்தைத் தொழிலாளர்களுக்கெதிரான உலக நாள் நிறுவப்பட்டது. குழந்தைத் தொழிலாளர் பிரச்சினையை, அரசு, சிவில் சமூக அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் ஒரு விரிவான மற்றும் ஒருங்கிணைந்த முறையில் தீர்ப்பதற்கும் சாத்தியமான தீர்வுகளைக் கண்டறிந்து மதிப்பீடு செய்வதற்கு மான ஒரு தளத்தை இந்நாள் வழங்குமென எதிர்பார்க்கப்படு கின்றது. குழந்தைகளைப் பணியமர்த்தும்போது அவர்களது வயதானது, கட்டாயப் பள்ளிப்படிப்பு வயதைவிடக் குறை வாக இருக்கக்கூடாதென, 1999-ம் ஆண்டில் வரையறுக்கப் பட்டது. அதன்பின் 2015-ம் ஆண்டில் ILO அமைப்பினால் நிறுவப்பட்ட உலகளாவிய நிலையான வளர்ச்சி இலக்குகள், இப்பணிக்குக் கூடுதல் வேகத்தையளித்தன. குழந்தைத் தொழிலாளர் விதிமுறைகளெனப், பொதுவாக அறியப்படும் நியாயமான தொழிலாளர் தரநிலைச்சட்ட விதிகள் 1938-ம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. பன்னாட்டுத் தொழிலா ளர் அமைப்பில் 187 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

ஐக்கிய நாடுகள் மற்றும் சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு கள் குழந்தைத் தொழிலாளரின் உழைப்புச் சுரண்டலைக் கவ னத்தில் கொண்டுள்ளன. குழந்தைத் தொழிலாளர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகப் பன்னாட்டுத் தொழி லாளர் அமைப்பினால் (ஐ.எல்.ஓ.) யூன் 12-ம் திகதியானது அங்கீகரிக்கப்பட்டது. இது 2002-ம் ஆண்டு முதல் கடைப்பி டிக்கப்படுகிறது. ஐ.எல்.ஓ-வின் 138 மற்றும் 182-வது உடன்ப டிக்கைகளின் ஏற்பினால் தூண்டப்பட்டுத்தான் இந்த நாள் உருவாக்கப்பட்டது.

குழந்தைகளின் கனவுகளைக் கலைப்பதற்கு ஈடான வன்செ யல் எதுவுமில்லை. சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு குழந் தைத் தொழிலாளர்களைக் 'குழந்தைப் பருவத்தை இழந்த குழந்தைகள்' என்று குறிப்பிடுகிறது. அவர்களின் ஆற்றல் மற் றும் சுய கௌரவத்தை இழந்து நிற்கும் நிலையை, உடல் மற் றும் மனவளர்ச்சிக்குத் தீங்கு விளைவிக்கும் செயல் என்று அவ்வமைப்பு வரையறுக்கிறது. 'குழந்தைத் தொழிலாளர் விநியோகச் சங்கிலியை ஒழிப்பது' 2023-ம் ஆண்டின் மையக் கருத்தாகும்.

2025-ம் ஆண்டுக்குள் குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றாக ஒழித்துவிட இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தா லும் இது எவ்வளவு தூரம் சாத்தியமான ஒன்று என்பது மிகப் பெரிய கேள்விக்குறி. குழந்தைத் தொழிலாளர்களை அடி யோடு வேரறுக்க வேண்டும் என நோபல் பரிசு வென்ற கைலாஷ், சத்யாத்ரி போன்ற தன்னார்வலர்களும் குழந்தைத் தொழிலாளர்களுக்கெதிரான உலகளாவிய அமைப்புகளும் (THE GLOBAL MARCH AGAINST CHILD LABOUR) ACE, SAVE THE CHILDREN பல நடவடிக்கைகளை எடுத்துவரு கின்றன. என்னதான் இவ்வமைப்புகள் பாடுபட்டாலும் ஒவ் வொரு தனிநபரின் ஒத்துழைப்பும் இல்லாமல் இது சாத்தியப்



படாது. வேகமாக வளர்ந்துவரும் நாகரீக உலகத்தின் அதிக ரித்துவரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, நிறுவனங் களுக்கு மலிவான மனித உழைப்பு தேவைப்படுகிறது. அது குழந்தைத் தொழிலாளர் வடிவில் இலகுவாகவே கிடைக்கி றது. தற்போது பல நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளில் குழந்தைத் தொழிலாளர் ஈடுபடுத்தப்படவில்லை என்பதைச் சமூகப் பொறுப்போடு உறுதிப்படுத்துகிறார்கள். இதனை எமக்குக் கிடைத்த ஒரு நல்ல விடயமாகக் கருதலாம்.

எதிர்கால உலகை அவர்கள் நேர்மையாக அணுக வேண் டுமா? இல்லை எதிர்மறையாக மாற்றவேண்டுமா? என்பதை இன்று நாம்தான் தீர்மானிக்கப் போகிறோம். உங்கள் கண் முன்னே ஒரு குழந்தை அதன் சுதந்திரத்தை இழந்து நிற்குமா யின், அங்கு உங்கள் மௌனம் களையட்டும். ஒவ்வொரு குழந்தைத் தொழிலாளி உருவாகும்போதும் நாட்டின் முதுகெ லும்புத் தூண் ஆட்டம் காண்கின்றது, சாதனையாளர் ஒருவர் இழக்கப்படுகின்றார். இதனை மனங்கொண்டு இத்தினத்தை நினைவு கொள்வது சிறப்பு.



natkunalingam@thaiveedu.com

# நாடு சிறக்க ஐந்து அணிகள்

**– குமார் புனிதவேல்**

நண்பர்களுடன் அரட்டை அடித்துக்கொண்டிருந்த வேளை, ஒரு கேள்வி வந்தது. உலகில் எது சிறந்த நாடு என்பதே அக் கேள்வி. சிலர், கடன் கூடிய 'செல்வந்த' நாடான அமெரிக்கா என்றார்கள். இன்னும் சிலர், முன்பு சூரியன் அஸ்தமிக்காத பிரித்தானியா என்றார்கள். வேறு சிலர், ரஷ்யாவையும் சீனா வையும் குறிப்பிட்டார்கள். அதில் ஒருவர் கூறினார், 'காக் கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு' என்பது போல், ஒவ்வொரு வருக்கும் அவரவர் பிறந்த நாடு தான் சிறப்பு என்றார். இதற்கு மறுப்பு கூறுவது கடினமாயிருந்தது.

தமிழருக்கு அறம் கூறிய கொப்பாட்டர் இந்த விடயத்தில் என்ன சொல்லியுள்ளார் என்பதை அறிவதற்கு திருக்குற ளைப் புரட்டினேன். என்னை ஏமாற்றாமல் வள்ளுவர் அழகாக அதனை தெரிவித்திருந்தார். மனிதர் சிறப்பதற்கு ஐம்புலன் வேண்டுவது போல், ஒரு நாடு சிறப்பதற்கு ஐந்து அணிகள் இன்றியமையாதன என்று தெரிவித்துள்ளார். அந்த 738-வது குறள்:

***பிணியின்மை, செல்வம் விளைவின்பம் ஏமம்***
***அணியென்ப நாட்டிற்வ் வைந்து***

அந்த குறளில் முதலாவது அணியாக குறிப்பிடுவது பிணி இன்மை. அண்மைக் காலம் வரை வள்ளுவர் வாக்கு மீண்டும் உறுதிப்பட்டுள்ளது. உலக வரலாற்றில் பல நாடுகள் பிணி யால் பெரும் வீழ்ச்சியடைந்ததை அறிவோம். உதாரணமாக மலேரியா, தொழுநோய், கசம், போலியொ என்று பட்டியல் நீண்டுகொண்டே செல்லும். கோவிட் பெருந்தொற்று எவ்வ ளவு தாக்கத்தை ஏற்படுத்தியது என்று நாம் அறிவோம். உல கின் மிக பெரிய பணக்கார நாடுகளைக்கூட கொரோனா விட்டு வைக்கவில்லை. எவ்வளவு செல்வந்த நாடக இருந்தா லும் அதன் முதல் தேவையும் சிறப்பும் நோய் இல்லாத நிலை யாகும்.

ஒரு நாட்டிற்கான செல்வமே அடுத்த அணியாகும். செல்வம் இல்லை என்றால் என்னாகும் என்ற நிலைமையை மிக அழ காகச் சொன்னவர் ஔவையார். இதோ அந்த நல்வழிப் பாடல்:

***கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்***
***எல்லாருஞ் சென்றங்கு எதிர்கொள்வர்-இல்லானை***
***இல்லாளும் வேண்டாள்மற்று ஈன்றெடுத்த தாய்வேண்டாள்***
***செல்லாது அவன்வாயிற் சொல்***

கையில் செல்வம் இருந்தால், படிக்காத முட்டாளையும் அழைத்துப் போற்றுவர்கள், ஆனால் செல்வம் இல்லாத வனை மனைவியும் மதிக்க மாட்டாள்; தாயும் மதிக்க மாட் டாள் என்கிறார். செல்வந்த நாடுகள் என்ன சொன்னாலும் மற் றைய நாடுகள் மறுப்பதில்லை. 'பொருளின் வலிமை' பற்றி அழகாக திருவள்ளுவரே தனது 751-வது குறளில் தெளிவு படுத்துகிறார். இதோ அக்குறள்:

***பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்***
***பொளல்ல தில்லை பொருள்***

ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிப்புடையவரா கச் செய்யும் பொருள் அல்லாமல், சிறப்புடைய பொருள் வேறு இல்லை என்கிறார்.

மூன்றாவது அணி விவசாயம். பசிவந்தால் பத்தும் பறக்கும் என்பார்கள். மனிதர் செல்வத்தைத் தேடுவதும் உணவு பெறு வதற்கே. அதனால் தான் வள்ளுவர் உழவுத்தொழில் வளர்ச் சிக்கு முக்கியத்துவம் கொடுத்து, உழுது உண்டு வாழ்பவர் களே வாழ்பவர்கள்; மற்றைய அனைவரும் அவரை தொழுது, அவர் தரும் உணவை உண்டு வாழ்பவர்கள் என்றார். இக்க ருத்தைச் சொல்லும் 1031-வது குறள்:

***சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்***
***உழந்தும் உழவே தலை***

அதாவது, உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த் தொழிலின் பின்னால்தான் நிற்கிறது. அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது என்கிறார்.

நாட்டின் நான்காவது அணியாக வள்ளுவர் கூறுவது இன்பம். இன்பத்தை அடைவது தான் ஒருவரின் வாழ்க்கையின் இலட் சியம். யாருமே வாழ்க்கையின் இலக்கு துன்பம் என்று கூற மாட்டார்கள். இன்பத்தையும் இரண்டாக வகுத்து முதலா வதை சிற்றின்பம் என்றும் இரண்டாவதை பேரின்பம் என்று சொன்னோம். இதில் இன்னும் ஒரு முக்கிய விடயத்தை குறிப் பிட வேண்டும். அதாவது பேரின்பம் எனும் அணியை அடைவ தற்கு சிற்றின்பம் எனும் அணி சிறப்பாய் அமைய வேண்டும். அதனால் தான் தமிழில் ஒரு வழக்கு உண்டு: 'வீட்டிற்கு வீடு வாசற்படி'. அதாவது பேரின்ப வீட்டிற்கு சிற்றின்பவீடு தான் வாசற்படி. எனவே, எந்த எந்த நாடுகளில் வாழ்க்கையில் இன் பம் எனும் அணி சிறந்து விளங்குகிறதோ, அதுவே சிறந்த

நாடாக அமையும்.

ஐந்தாவதாக, ஒரு நாட்டின் அணியாக குறிப்பிடப்பட்டுள்ளது: ஏமம். அதாவது வீரம். எவ்வளவு சிறந்த நாடாக இருப்பினும் தம்மை புறப்படையெடுப்புகளில் இருந்து காக்க முடியாவிடில், கட்டாயம் அடிமைப்பட்டு பெரும் துயருக்கு உள்ளாக வேண்டி வரும். வியாபாரம் செய்ய வந்த மேற்கு நாட்டு மக்கள் தமிழரை அடிமைகளாக்கி ஆட்சி செய்தார்கள். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன், தமிழர் பெரும் வீரர்களாக வாழ்ந்தார்கள். புறநானூற்றில் 74-வது பாடலை பாடினார் சேர நாட்டு வேந்தன். வீரம் பற்றிய குறள்களில் 774-வது குறள் முக்கியமானது.

***கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்***
***மெய்வேல் பறியா நகும்.***

அதாவது கையிலிருந்த வேலினை யானையின் மீது வீசி விட்டதால் களத்தில் போரிட வேறு வேல் தேடுகிற வீரன், தன் மார்பில் பதிந்திருந்த வேலைக் கண்டு அதை பயன்படுத்தலாம் என எண்ணி அதனைப் பறித்து, எதிரி யானை மீது வேலை எறிந்தானே என்று வள்ளுவர் கூறுகிறார். அக்காலத்தில் தமிழர் பெரும் வீரர்களாக இருந்தனர். அத்தகைய மறவர் இருந்திருந்தால் வடக்கிலிருந்து ஆரியர் படையெடுத்தபோதும் பின் மேற்கிலிருந்து ஐரோப்பியர் படையெடுத்தபோதும் சிறந்த தமிழர் பண்பாடும் நாகரிகமும் மொழியும் காக்கப்பட்டிருக்கும் அல்லவா? எனவே வீரத்தையும் போற்றி வளர்ப்போம்.

வள்ளுவர் கூறியபடி, நாடு சிறக்க ஐந்து அணிகளான பிணி இன்மை, செல்வம், விவசாயம், இன்பம் என்பவற்றுடன் வீரத்தையும் சேர்த்து போற்றுவோம்.



kumar.punithavel@thaiveedu.com






*'உழவு செய்து போரடித்துப் பொன்*
*குவிக்கும் வளமிருக்கப் - பின்புறத்தில்*
*உளவு சொல்லிப் பதராக வாழ்வதா?'*

எமது தாயக மண்ணில் போர் தீவிரமாக நடைபெற்ற காலத்தில் யாழ்ப்பாணம் நகரில் வாசித்த சுவரோவியக் கவிதை இது.
உழவு என்பது விவசாயத்திற்கு உரியது. உளவு என்பது நாடுகளின் அரசாங்கங்கள் தங்களது ஆட்சியின் உறுதிப்பாட்டுக்காகக் கடைப்பிடிக்கும் ஒரு செயலாகும்.

நாடுகளது, நிறுவனங்களது, அரசியல் கட்சிகளது, குடும்பங்களது உறுதியைத் தீர்மானிப்பதில் ஏன் வெற்றியைத் தீர்மானிப்பதில் உளவு என்பது முக்கியமான ஒன்றாகும். பிழையான உளவுத் தகவலைப் பெற்று நடைமுறைப்படுத்தினால் அதுவும் அழிவுதான்.

நாடு ஒன்று தனது உள்ளக வெளியகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அறிவதற்கு உளவு அமைப்பை வைத்திருப்பது கட்டாயமானதாகும்.

அது போல நிறுவனங்கள் தமது வெற்றியைத் தீர்மானிக்க, வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ள ஏதோவொரு பெயரில் உளவு பார்த்தலைச் செய்து கொள்வது வழமையானதாகும்.

இலங்கையில் தமிழர் பிரதேசங்களில் அரசதுறை நிறுவன உயரதிகாரிகள் சிலர் தம்மைப்பற்றி அங்கு பணி புரியும் ஊழியர்கள் என்ன கதைக்கின்றனர் என்பதை அறிய உளவாளிகளை வைத்திருக்கும் வழக்கமுமுண்டு.

உளவாளிகளது சொல்லை மட்டும் கேட்டு நடவடிக்கை எடுத்துப் பழியையும் பகையையும் தேடி, ஓய்வுபெற்ற பின்பாக யாராலும் தேடப்படாமல் போன உயரதிகாரிகளும் உண்டு.

குடும்பங்களிலும் குடும்பத் தலைவர்கள் தமது உறுப்பினர்களை உளவு பார்த்தல் நல்லதொரு குடும்பக் கட்டமைப்புக்கு உதவும்.

காலங்கெட்ட காலமாக தற்காலம் மாறி வருகிறது. இதனால் நன்னடத்தை, ஒழுக்கப் பண்பாடுகள் குறித்து இரகசியமாக உளவு பார்த்தல் நன்று.

குறிப்பாக இலங்கையில் தற்கால இளைய தலைமுறையினர் போதைப் பொருள் பாவனை, பண்பாட்டிற்குத் தகாத நடத்தை போன்றவற்றில் ஈடுபடும் வீதம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இதனால் குடும்பத் தலைவர்கள் தமது உறுப்பினர்கள் குறித்து உளவு பார்த்தல் நல்லதொரு பண்பாட்டுக் கட்டமைப்புக்கு உதவும். இதனைப் பழைமைவாதம் என்பதை விட, எமது குடும்பச் சீரழிவைத் தவிர்ப்பதற்கான பண்பாடுகளைக் காத்தல் அவசியமானதாகும்.

நவீன அரசியல் நோக்கர்கள் உளவு எனும் சொல் மேற்கத்தைய வழிவந்த அரசியல் விஞ்ஞானச் சொல் என்கின்றனர். அதனைவிட கற்றவர்களதும், வல்லாதிக்க நிறுவனங்களுக்கு மட்டும் தெரிந்த சொல் என்ற அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளனர்.

ஆனால் உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவர் இற்றைக்கு 2056-ம் ஆண்டுக்கு முன்பாகவே ஒற்றாடல் எனும் அதிகாரத்தின் மூலமாக 10 குறள்களில் உளவு பார்த்தல் என்ற விடயத்தைக் கூறியுள்ளார்.

இதனால் தான் திருக்குறளை உலகப் பொதுமறை எனக் கூறுகின்றனர்.

*'ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்*
*தெற்றென்க மன்னவன் கண்'*

எனும் குறள் மூலமாக ஒரு மன்னருக்கு ஒற்றர்களும், புகழ் வாய்ந்த அறநூல்களும் இரண்டு கண்களைப் போன்றவை எனக் கூறுகின்றார்.

*'ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்*
*கொற்றங் கொளக் கிடந்தது இல்'*

பகை நாட்டு நிகழ்ச்சிகளை ஒற்றர் மூலமாகத் தெரிந்து கொண்டு அவற்றின் பொருளையும் ஆராய்ந்து தெளியாத மன்னர் போரில் வெற்றி கொள்ள முடியாது என்கின்றார் வள்ளுவப் பெருந்தகை.

*'ஒற்றொற்றித் தந்த பொருளையும்*
*மற்றொரு ஒற்றினால் ஒற்றிக் கொளல்'*

ஓர் ஒற்றர் ஒற்றி வந்து அறிவித்த செய்திகளையும் மற்றும் ஓர் ஒற்றர் மூலமாக அச்செய்தி சரியானதா என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

இவ்வாறாக மேலும் 7 குறள்கள் மூலமாக வள்ளுவப் பெருந்தகை உலக மானிடர்களில் தமிழரது சிந்தனைத் திறன் மேம்பாட்டை உலகுக்குத் தந்தார்.

ஒரு காலத்தில் அமெரிக்கா தலைமையிலான நாடுகள் ஒரு அணியாகவும், முன்னாள் சோவியத் ஒன்றியம் தலைமையிலான நாடுகள் இன்னொரு அணியாகவும் பிரிந்து ஏட்டிக்குப் போட்டியாக நின்றன.

ஆயுதங்களால் பெருமளவு பேசாமல் கருத்துகளால், நடைமுறைகளால் மோதிய அக்காலத்தைப் பனிப்போர்க் காலம் என்பார்கள்.

பனிப்போர்க் காலத்தில் யார் முன்னணியில் இருப்பார்கள் என்பதை உளவு தான் தீர்மானித்தது.

உளவு என்பதைப் புலனாய்வு என அழைக்கும் வழக்கமும் உள்ளது. உளவு நிறுவனங்கள் எனும் சொல்லும் புலனாய்வு நிறுவனங்கள் எனும் சொல்லாடலும் வழக்கத்திலுள்ளது. இச்சொற்களுக்கிடையிலான தாற்பரியங்கள் வேறானதாகும்.

இரு வல்லரசு அணிகளும் தமது தேசியப் பொருளாதாரத்தில் கணிசமான பகுதியை உளவாளிகளுக்கும் உளவு நடவடிக்கைகளுக்குமாகச் செலவழித்தார்கள்.

இதற்காக உளவு நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. அமெரிக்காவின் சி.ஐ.ஏ நிறுவனமும், சோவியத் ஒன்றியத்தின் கே.ஜி.பி நிறுவனமும் முனைப்புடன் செயற்பட்டார்கள்.

உளவு நிறுவனங்கள் தமது உளவாளிகளை நீரிலும் நிலத்திலும் ஆகாயத்திலும் செயற்படக் கூடிய அதி வல்லமை பொருந்தியவர்களாக உருவாக்கினார்கள். அதற்காகப் பெருந்தொகைப் பணத்தைச் செலவழித்தார்கள்.

அமெரிக்கா தமது உளவாளிகளது தகவல் தொடர்பாடலுக்காக உருவாக்கிய கணினி, டிஜிற்றல் கமெரா, சீடிஎம்ஏ தொலைபேசி, ரேடர் தொழிநுட்பங்கள், ட்ரோன் ரக விமானங்கள் ஆகியவை யாருக்கும் தெரியாமல் மிக ரகசியமாகப் பாவிக்கப்பட்ட இலத்திரனியல் உபகரணங்களாகும்.

அது போல லேசர் தொழிநுட்பத்தில் அமைந்த பாதுகாப்பு வலயங்களெனப் பலவற்றைத் தமது உளவாளிகள் பயன்படுத்துவதற்காகவே உருவாக்கினார்கள்.

இத் தொழிநுட்பங்கள் மிக மிக இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும். இவற்றை விட முன்னேறிய தொழிநுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் முன்னைய தொழிநுட்பங்கள் வியாபார நோக்கில் வெளியுலகத்திற்கு விடப்பட்டுவிடும்.

இந்த நிறுவனங்களது உளவாளிகள் தமது நாடுகளின் உறுதிப்பாட்டுக்காக எதிரி நாடுகளுக்குள் ஊடுருவினார்கள். பல சாகசங்களைக் காட்டினார்கள்.

இந்தச் சாகசங்கள், வீரதீரச் செயல்கள் புனைகதைகள் சேர்த்துப் பேசப்பட்டன. சினிமாப் படங்களாக எடுக்கப்பட்டன. அவை வசூல் மழை பொழிந்தன.

ஜேம்ஸ்பாண்ட் 007 எனும் கற்பனைக் கதாபாத்திரம் இந்த வகையில் பிரபலமானது. பிரித்தானிய நாவலாசிரியர் லான் பிளேமிங் என்பவரால் 1953-ம் ஆண்டு இக் கற்பனைக் கதாபாத்திரம் உருவாக்கப்பட்டது.

உளவாளிகளது கதைகள் சொல்லும் படங்கள் பல அந்நாட்களில் வெளியாகி வீறுநடை போட்டன.

குறிப்பாகப் பிரபலமாகப் பேசப்பட்ட பெண் உளவாளிகளது படங்கள் கதையமைப்பால் அதிகம் பேசப்பட்டன.

வல்லரசுகளுக்கிடையிலான பனிப்போர் காலத்தில் ஒரு நாட்டின் உளவாளியாகச் செயற்பட்டுக் காலப் போக்கில் இன்னொரு நாட்டின் உளவாளியாக அதாவது இரட்டை உளவாளியாக மாறிய நிகழ்வுகளும் உண்டு. பணத்திற்கு ஆசைப்படும் மனிதர்களைப் பெரும் விலை கொடுத்து இன்னொரு நாடு வாங்கிவிடும்.

தங்களது உளவாளி அவ்வாறு மாறியது தெரிந்தால் அவரைப் 'போட்டுத் தள்ளினார்'கள் அல்லது தந்திரமாகத் தமது நாட்டுக்கு வரவழைத்துக் கொடும் சிறையினுள் தள்ளினார்கள்.

இஸ்ரேல் நாட்டின் உளவு அமைப்பான மொசாட் 1948-ம் ஆண்டு இஸ்ரேல் உருவாகியது முதல் இன்றுவரையும் பேசப்படும் ஒரு உளவு அமைப்பாக உள்ளது.

மொசாட் உளவாளிகள் நுண்ணிய இடங்களிலெல்லாம் புகுந்து விளையாடுவார்கள். உளவாளிகளுக்கேயுரிய தனித்துவமான குணமாகிய நாடுகளது சட்ட திட்டங்களை மதிக்காமல் தமது கருமங்களைச் சாதிக்கும் குணமும் உண்டு.

தமக்குத் தேவையானவர்களை மிகவும் சூட்சுமமாகக் கடத்தி வரும் ஆற்றலும் உண்டு.

ஆனாலும் என்ன ஒக்ரோபர் 07, 2024-ம் திகதி ஹமாஸ் இயக்கத்தின் பேரலைத் தாக்குதலை மொசாட்டால் அறிய முடியாமல், தடுக்க முடியாமல் போனது.

இந்தியாவின் றோ உளவு அமைப்பும் பாகிஸ்தானின் ஐஎஸ்ஐ உளவு அமைப்பும் பரம்பரைப் பகைமையுடன் உள்ளன.

தமது நாடுகளின் தேசிய பாதுகாப்பை முன்னிறுத்தித் தமது செயற்பாடுகளை முன்வைத்து வருகின்றனர்.

உலக மாந்தர்களது அசைவியக்கம் யாவற்றுக்கும் உளவு எனும் ஒற்றைச் சொல் ஏதோவொரு வகையில் தொடர்புபடுகிறது.

ஆனாலும் தமிழர் தலைநிமிர்ந்து கூறும் வள்ளுவப் பெருந்தகை உளவு என்பதை ஒற்றாடல் எனும் அதிகாரத்தின் மூலமாகத் தந்து எமக்குப் பெருமை தேடித் தந்துள்ளார்.



thabendran.v@thaiveedu.com




அமெரிக்காவில் நவம்பர் மாதத்தை அமெரிக்கப் பூர்வீக குடி - முதற்குடி மக்களின் மாதமாகக் கொண்டாடுகின்றார் கள். அமெரிக்காவில் பல இடங்களில் முதற்குடி மக்களைப் பற்றிய காட்சியகங்கள் இருக்கின்றன. அலாஸ்காவிலும் முதற்குடி மக்களின் காட்சியகத்தைப் பார்த்திருக்கின்றேன். அதேபோல, வாசிங்டனில் பல நினைவிடங்களும், அருங்காட் சியகங்களும் இருக்கின்றன. அவற்றில் ஒன்றான அமெரிக்க இந்தியர்களின் தேசிய அருங்காட்சியகமும் (National Mu-seum of the American Indian) பிரபலமானது. வாசிங்டன் டி.சி-யிலுள்ள தேசிய அங்காடியில், அமெரிக்க முதற்குடிக ளின் தேசிய அருங்காட்சியகம் 2004-ம் ஆண்டு செப்ரெம்பர்




21-ம் திகதி பொதுமக்கள் பார்வைக்காகத் திறந்து வைக்கப் பட்டது. இந்த இடம் நான்காவது தெரு மற்றும் தென்மேற்கின் சுதந்திர அவென்யூ சந்திக்கும் இடத்தில் இருக்கின்றது.

அருங்காட்சியகம் சுமார் நாலு ஏக்கர் தளத்தில் அமைக்கப் பட்டுள்ளது. இந்த அருங்காட்சியகத்தில் ஆண்டு முழுவதும் கண்காட்சிகள், திரைப்படம் மற்றும் வீடியோக் காட்சிகள், பள் ளிக் குழுக்களுக்கான நிகழ்ச்சிகள், பொது நிகழ்ச்சிகள் மற் றும் வாழ்க்கைக் கலாசார விளக்கப் படங்கள் போன்றவை இடம்பெறுகின்றன. இந்த அருங்காட்சியகத்திலுள்ள சேகரிப் பில் 800,000-க்கும் மேற்பட்ட பொருள்களும் 125,000 படங்க ளின் காப்பகமும் அடங்கும். இவற்றை இனம் காண்பதற்கு இலகுவாக இக்காட்சிப் பொருட்களைச் சில பகுதிகளாகப் பிரித்துள்ளார்கள்.

1903-ம் ஆண்டு தொடக்கம் 1954-ம் ஆண்டு வரை ஜார்ஜ் குஸ்டாவ் ஹே (1874-1957) என்பவரால் வடக்கு மற்றும் தென் அமெரிக்கா முழுவதும் பூர்வீக மக்களை அடையாளப்படுத் தும் பொருட்கள் சேகரிக்கப்பட்டன. இவரது சேகரிப்புகள் பல இங்கே காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

முதற்குடி மக்களைப் பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வ முள்ள பலரை இங்கே சந்திக்க முடிந்தது. சிலர் முதற்குடி மக்களைப் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவதற்காகவும், சிலர் தங்கள் முன்னோரின் வரலாற்றை அறிந்து கொள்ளவும் அமெரிக்காவின் பல பாகங்களிலிருந்தும் இங்கு வந்திருந் தார்கள். அவர்கள் புகைப்படங்கள் எடுப்பதும், சிலர் வரைப டங்களை வரைவதிலும் கவனஞ் செலுத்தினார்கள். அலாஸ் காவிலிருந்து வந்திருந்த குடும்பத்தினருடன் உரையாடும் போது, அலஸ்காவில் நான் பார்த்த இடங்களைப் பற்றியும் சந்தித்த மக்களைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். இதற்கா கவே, பூர்வீக மக்களைப் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்காகத் தாங்களும் அலஸ்காவிலிருந்து வாசிங்டன் வந்ததாக அவர்கள் தெரிவித்தார்கள்.

அமெரிக்கப் பழங்குடி மக்கள் ஆசியாப் பகுதியிலிருந்து அலாஸ்கா வழியாக வந்திருக்கலாமென ஆய்வாளர் குறிப்பி டுகின்றனர். ஆதிகாலத்தில் ஆசியாவுடன் அலஸ்காவுக்குத் தரைத் தொடர்பு இருந்ததாகப் புவியியல் ஆய்வாளர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். காலப்போக்கில் காலநிலை, உணவு, குழுக்களுக்கிடையிலான மோதல் போன்ற காரணங்களால் பூர்வீக மக்கள் தெற்கு நோக்கி நகர்ந்திருக்கலாம். வடக்குப் பகுதிகளிலிருந்து புளோரிடாவின் வளைகுடாக் கடற்கரை வரையான நிலப்பகுதிகளில், இவர்கள் இப்பொழுதும் வாழ்ந்து வருகின்றனர். ஒன்பது மில்லியனுக்கும் அதிகமான பூர்வீக அமெரிக்கர்கள் இப்போது அமெரிக்காவில் வாழ்ந்து வருவதாகக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. சுமார் 300-க்கும் மேற்பட்ட பல்வேறு மொழிகள், கலாசாரங்கள் மற்றும் பாரம்ப ரியங்களைக் கொண்ட மக்களாக இவர்கள் இருக்கின்றார் கள். இதன் காரணமாக இவர்களுக்கிடையே மொழி, பண் பாட்டு, வரலாற்று, வாழ்வியல் வேறுபாடுகள் இருப்பதையும்



அங்குள்ள காட்சிப்படுத்தலிலிருந்து அவதானிக்க முடிந்தது. இவர்கள் ஐரோப்பியர் வருகைக்கு முன்பிருந்தே நீண்டகாலமாக அமெரிக்க மண்ணில் வசித்து வருகிறார்கள். ஆனாலும் இவர்களது மண்ணில் வந்து குடியேறிய ஐரோப்பியக் குடியேற்றவாசிகளால், ஆயுத பலம் கொண்டு இவர்கள் தோற்கடிக்கப்பட்டு அடக்கப்பட்ட வரலாறு இவர்கள் எல்லோருக்கும் இருக்கின்றது.

வியாபார நோக்கத்தோடு வந்த ஐரோப்பியர் அமெரிக்காவில் குடியேறியதால், இங்கு வாழ்ந்த பழங்குடி மக்களின் மொழி, பண்பாடு போன்றவை அவர்களால் சிதைக்கப்பட்டன. 16-ம் நூற்றாண்டிலிருந்து இப்பகுதிகளில் வாழ்ந்த பழங்குடி மக்களுக்கு, ஐரோப்பியக் குடியேற்றங்களால் பல வழிகளிலும் இழப்புகள் ஏற்பட்டன. ஐரோப்பியக் குடியேற்றக்காரர் கையாண்ட வன்முறை மற்றும் இனவழிப்புக் காரணமாக மட்டுமல்ல, அவர்கள் கொண்டுவந்த தொற்று நோய்களும் பல பழங்குடி மக்களின் இனம் அழிவதற்குக் காரணமாகின. மேலும் இவர்கள் அடிமைகளாக்கப்பட்டு. சொந்த நிலங்களிலிருந்தும் துரத்தப்பட்டனர். உள்நாட்டுப் போரும், ஐரோப்பியருடனான கலப்பு மணங்களும் கூட இவர்களின் இனவழிவுக்கு வழிவகுத்தன.

அமெரிக்க அரசாங்கத்தின் ஒருங்கிணைப்புக் கொள்கைகளின் காரணமாக, இவர்களின் பயன்பாட்டிலிருந்த மொழிகளில் பல இப்போது மறைந்துவிட்டன. 1800-களில் தொடங்கி, பூர்வீக அமெரிக்கர்கள் தங்கள் சமூகங்களிலிருந்து இடம்பெயர்ந்து வேறு பகுதிகளுக்கு மாற்றப்பட்டனர், அவர்களின் பிள்ளைகளும் மேற்கிந்திய உறைவிடப் பள்ளிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஆங்கிலத்தில் கல்வி கற்பிக்கப்பட்டனர். இதனால் இளைய தலைமுறையினர் சொந்த மொழியை மறந்து ஆங்கில மொழியைப் பேசத் தொடங்கினர். 1972-ம் ஆண்டுக்குப் பின்புதான் பூர்வீக அமெரிக்கப் பழங்குடியினர் தங்கள் சொந்த மொழிகளைப் பிள்ளைகளுக்குக் கற்பிக்க அனுமதிக்கப்பட்டனர்.

அமெரிக்கப் பழங்குடியினரின் மொழி என்று எடுத்துப் பார்த்தால், முக்கியமாக நாவஹோ மொழியைச் சுமார் 178,000 மக்களும், கிறீ மொழியைச் சுமார் 117,000 மக்களும், ஒஜிவி மொழியைச் சுமார் 56,600 மக்களும் பேசுகின்றார்கள். இதைவிட இனுக்ரிருற் மொழி, செரோக்கீ மொழி, லாகோட்டா மொழி போன்ற பழைய மொழிகளும் பழங்குடி மக்களால் பரவலாகப் பேசப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்த மொழிகளில் ‘நாவஹோ’ மொழி ஐக்கிய அமெரிக்காவின் நாவஹோ பழங்குடி மக்களால் இன்றும் பேசப்படும் மொழியாக இருக்கின்றது. அதபாஸ்கா மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த இம்மொழியை இரண்டாம் உலகப் போரின் போது அமெரிக்க இராணுவத்தினர் தமக்குத் தேவைப்படும் போது, குறியீட்டு மொழியாகப் பயன்படுத்தினர். இதே போல அமெரிக்காவிலும், கனடாவிலும் கிறீ மொழியை அதிக முதற்குடி மக்கள் பேசுகின்றார்கள். இந்தக் கிறி மொழி கனடாவின் எல்லாப் பாகங்களிலும் பேசப்படுகிறது. சுமார் 117,000 மக்களால் பேசப்படும் கிறீ மொழியிலுள்ள தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட ஒரு வார்த்தை இது:

***‘கடைசி மரத்தை வெட்டிய பிறகுதான்,<br>கடைசி ஆறு மாசுபட்ட பிறகுதான்,<br>கடைசி மீனும் பிடிபட்ட பிறகுதான்,<br>பணத்தை உண்ண முடியாது என்பதை<br>நீ உணர்ந்து கொள்வாயா?’***

பழங்குடி மக்களின் புள்ளிவிபரக் கணக்கின்படி, 2013-ம் ஆண்டு வரை அமெரிக்காவில் 169 பூர்வீக மொழிகள் பேசப் பட்டன. இந்த இனங்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் உள்ளவர்கள்தான் இந்த மொழிகளைப் பேசுகின்றனர். 1990-ஆம் ஆண்டில், பூர்வீக அமெரிக்க மொழிச் சட்டத்தைக் காங் கிரஸ் நிறைவேற்றியது. இதன் மூலம் பூர்வீக அமெரிக்க



மொழியைப் பாதுகாக்கவும், அதற்குப் புத்துயிர் கொடுப்ப தற்குமான ஆதரவும் பழங்குடி மக்களுக்குக் கிடைத்தது. காலப்போக்கில் சில பூர்வீக அமெரிக்க மொழிகளைத் தவிர, ஏனைய பூர்வீக மொழிகள் அழிந்து போவதற்கான சாத்தியங் கள் இருக்கின்றன. இதற்குப் புதிய தலைமுறையினர் தங்கள் மொழியைக் கற்க மறந்ததும் ஒரு காரணமாகும். காலனித்து வத்திற்கு முன்னர், பூர்வீக அமெரிக்க மொழிகள் வாய்வழி யாக மட்டுமே பேசப்பட்டன. ஐரோப்பியர்களின் வருகைக்குப் பிறகு, பல பழங்குடியினர் பேச்சு வழக்கோடு எழுத்து முறை வடிவங்களையும் பின்பற்றத் தொடங்கியிருந்தனர்.

கூட்டாட்சி அங்கீகாரம் பெற்ற 574 பழங்குடி இனத்தவர்களில் சுமார் 229 பழங்குடி இனத்தவர்கள் வடக்கேயுள்ள அலாஸ் காவில் காணப்படுகின்றனர். அலாஸ்கா சென்றபோது, அங்க ரேச் நகரிலுள்ள சமூகக் கலாசார நிலையத்தில் அவர்களை யும் சந்தித்து உரையாட முடிந்தது. ஆனால், அவர்களில் அதிகமானவர்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி இருப்பதைத் கவனித்தேன். ஈயாக், ஹைடா, அதாபாஸ்கன், டிலிங்கிட், அலுதிக், யூபிக், சிம்சியன், கப்க், உனங்காக்ஸ், சைபீரியன் யூபிக், இனுபியாக் போன்ற பழங்குடி இனத்தவ ரின் பூர்வீகக் குடியிருப்புகள், ரியுலானா ஏரியைச் சுற்றி இருக் கின்றன.

அலாஸ்காவைச் சேர்ந்த, இனுப்பியாக், யூப்பிக், எஸ்கிமோக் கள், அலெயுத்துகள் இனங்களைத் தொடக்கத்தில் பழங்குடி அமெரிக்கர்களாகக் கருதவில்லை. ஆனாலும் 2000-ம் ஆண் டுக்கான குடித்தொகைக் கணக்கெடுப்பு ஆவணங்களில், இவர்கள் எல்லோரையும் சேர்த்து அமெரிக்க இந்தியர்களும், அலாஸ்காப் பழங்குடியினரும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், ஹவாய் தீவுகளுக்குச் சென்றபோது, அங்குள்ள பழங்குடி மக்களுடன் பழக முடிந்தது. அவர்கள் இவர்களை விட ஓரளவு முன்னேறி நல்ல நிலையில் இருப்பதையும் அவ தானிக்க முடிந்தது.

இந்தக் கூட்டாட்சி அங்கீகாரம் பெற்ற பழங்குடியினர் மற்ற இறையாண்மை நாடுகளைப் போலவே, அமெரிக்காவுடன் அரசாங்க உறவுகளைக் கொண்டுள்ளனர். ஆனால் சில பழங்குடியினருக்குக் கூட்டாட்சி அங்கீகாரம் கிடைக்க வில்லை, அதாவது அவர்கள் அரசாங்கத் திட்டங்கள் மற்றும் அரசாங்கத்தின் ஆதரவு போன்றவற்றுக்குத் தகுதியற்றவர்க ளாகவே இருக்கின்றார்கள். 2020-ம் ஆண்டு நிலவரப்படி, 13 மாநிலங்களில் 66 பழங்குடி இனத்தவர் மாநில அங்கீகாரத் தைப் பெற்றுள்ளனர். மாநில அங்கீகாரம் எப்போதும் பழங்கு டியினருக்கு மாநில அல்லது கூட்டாட்சி நலன்களுக்கு உரி மையளிப்பதில்லை, ஆனால், அது அவர்களின் வரலாற்று மற்றும் சமகால இருப்பை ஏற்றுக்கொள்கிறது.

1838-ம் ஆண்டில், பழங்குடி இனத்தவரான செரோக்கி இனத் தவரை, ஜோர்ஜியாவிலிருந்து வலுக்கட்டாயமாக வெளி யேற்றி, ஒக்லகோமா என்ற இடத்திற்கு இடம்பெயர வைத்தார் கள். இந்த நிகழ்வே அமெரிக்காவின் ‘கண்ணீர்த் தடங்கள்’ (Trail of Tears) என வரலாற்று ஆசிரியர்களால் குறிப்பிடப்படு கின்றது. இந்த இடத்தில் ஒரு நினைவுத் தூபியும் நடப்பட்டி ருக்கின்றது. சொந்த இடத்தைவிட்டு இடம்பெயரும்படி பல வந்தமாகச் செயற்பட்டதன் பாதிப்பால், சுமார் 5,000 வரையி லான செரோக்கி இனத்தவர்கள் இறந்து போனதாகச் சொல் லப்படுகிறது. இதேபோல அமெரிக்க அரசினால் இந்தியானா, புளோரிடா ஆகிய இடங்களில் பாரம்பரையாக வாழ்ந்த பழங் குடி இனத்தவர்களும் வலுக்கட்டாயமாக அகற்றப்பட்டனர். கண்ணீர்த் தடங்கள் என்பது, பிற பூர்வகுடிக் குழுக்கள் தொடர்பிலான பலவந்தமான இடப்பெயர்வு நிகழ்வுகளையும் குறிக்கப் பயன்படுத்தும் வார்த்தையாக இருக்கின்றது. இச் சொற்றொடர்ப் பயன்பாடு 1831-ம் ஆண்டில் சொக்டாவ் இனத்தவர் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டபோது உரு வானது. சுமார் ஆயிரத்தி இருநூறு மைல்களுக்கு அப்பா லுள்ள ஒக்லகோமா என்ற இடத்திற்கு இவர்கள் சொந்த மண் ணைப் பறிகொடுத்து வலுக்கட்டாயமாக இடம்பெயர்ந்து நடந்தே செல்ல வேண்டியிருந்தது.

புதிய எக்கோட்டா, இன்றைய கோர்டன் கவுண்டியில், வட மேற்கு ஜார்ஜியாவில், கால்ஹவுனுக்கு வடக்கே அமைந்துள் ளது. இது ரெசாக்காவின் தெற்கே, இன்றைய புதிய நகரத் திற்கு அடுத்ததாகவுள்ளது, இந்த இடம் இப்போது மாநிலப் பூங்காவாகவும், வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாகவும் பாது காக்கப்பட்டு வருகிறது. இது 1973-ல் தேசிய வரலாற்று அடை யாள மாவட்டமாகத் தெரிவு செய்யப்பட்டது. ஆனாலும் அமெ ரிக்கப் பழங்குடியினர் பொதுவாகப் பின்தங்கிய நிலையி லேயே இப்பொழுதும் அப்பகுதிகளில் வாழ் கின்றார்கள்.



kuruaravindan@thaiveedu.com



# கருப்பும் வெள்ளையும் சாம்பலுமாக ஒரு பிரமயுகம்!

– ஓவியர் ஜீவா

காடுகளும் காவுகளும் நிறைந்தது கேரளம். காவுகள் என்றால் வனச்சூழலில் இருக்கும் சிறிய கோவில்கள். இன்று நகரமயமாகிக்கொண்டிருந்தாலும் பழைமையில் கொஞ்சம் மிச்சம் வைத்திருக்கும் மாநிலம். பிரம்மாண்டமான நாலு கெட்டு வீடுகள் இன்று பொழுதுபோக்கு ரிசார்ட்கள் ஆக மாறிக் கொண்டிருக்கின்றன. மின்சாரம் வரும் முன் இருளில் இருந்த காலத்தில் மாயத்தன்மை மிக்க கதைகளை தங்களுக்குள் புதைத்து வைத்திருந்தன இந்த தரவாட்டு வீடுகள். இருண்ட தாழ்வாரங்களும் பூட்டிய பிரம்மாண்ட கதவுகளும் பல மர்மக் கதைகளை புதைத்து வைத்திருக்கும் பொக்கிஷக் கிடங்குகள். வைக்கம் முகமது பஷீர் எழுதி வின்சென்ட் இயக்கிய 'பார்கவி நிலையம்' முதல் 'மணிச்சித்திரத்தாழு' வரை எத்தனை இருள் படர்ந்த வீடுகள், ஹரிக்கேன் விளக்குகள், படபடக்கும் ஜன்னல்கள், அலையாடும் திரைச்சீலைகள், நீண்ட நிழல் நகரும் சுவர்கள்...

கடவுள் என்ற பிம்பத்திற்கு இருந்த முக்கியத்துவம் எதிர் கடவுளான சாத்தனுக்கும் உண்டு.

ஏ. வின்சென்ட் இயக்கிய வேறு படங்களான மோகன்லால் நடித்த 'ஸ்ரீ கிருஷ்ண பருந்து', கமல் ஹாசன் நடித்த 'வயநாடன் தம்பான்' போன்ற திரைப்படங்கள் இந்த அம்சங்களை பயன்படுத்தியிருந்தன. ஓரிரண்டு வருடங்களுக்கு முன் வெளிவந்த 'குமாரி' என்ற மலையாளப் படமும், இப்போது வெளிவந்து ஓடிக்கொண்டிருக்கும் 'பிரமயுகம்' படமும், நிகழ்கால தொழில்நுட்ப திறனை பயன்படுத்தி அழகியல் கூட்டி உருவாக்கப்பட்டவை. குமாரி 'படத்தில்' கதாநாயகியின் புகுந்த வீட்டை பழி வாங்கும் நோக்கில் சூறையாடிக் கொண்டிருக்கும் சாத்தனுடன் நடைபெறும் போராட்டம் என்றால், 'பிரமயுகம்' நமக்கு காட்டும் மர்ம உலகம் முற்றிலும் வேறானது! 'குமாரியில்' வீட்டின் இருண்ட பகுதியில் 12 தலைமுறை காலமாக சாத்தனால் தண்டிக்கப்பட்ட காரணவர் ஒருவர் இன்னும் மரணம் அடையாமல் கடும் அவஸ்தையில், உடலெல்லாம் சுருங்கி படுத்துக்கிடக்கிறார் என்றால் பாருங்கள்!

'பிரமயுகம்' திரைப்படம் 17-ம் நூற்றாண்டில் நிகழ்கிறது. பொன்னாணி போர்த்துக்கீஸ் அடிமைச்சந்தையில் சிக்காமல் தப்பிக்க இரண்டு நண்பர்கள் காட்டு வழியே பயணம் செல்கிறார்கள். அடர்ந்த காட்டில் ஒரு அழகிய காமரூபம் கொண்ட யட்சியின் சந்திப்பு நிகழ நண்பர்களில் ஒருவன் உயிரிழக்கிறான். மற்றவன் புகலிடம் தேடி காட்டின் நடுவே இருக்கும் ஒரு பிரம்மாண்ட பாழடைந்த மாளிகையில் தஞ்சம் புகுகிறான். பாட்டிசைக்கும் பாணன் இவன். பசியில் ஒரு தேங்காயை




உடைத்து உண்ணும்போது, அங்கிருக்கும் சமையல்காரனிடம் சிக்கிக்கொள்கிறான். தொடர்ந்து வீட்டின் அதிபருடன் சந்திப்பு ஏற்படுகிறது! அங்கு ஆட்சி செலுத்தும் அந்த தனிய

னின் பெயர் கொடுமோன் போற்றி. வந்தவன் தலை நிமிர்ந்து கூட பார்க்கத் தயங்குகிறான். சாதீயக் கொடுமைகள் குறித்த அச்சம்! வாத்தியம் எதுவும் கையில் இல்லாத பாணன் என்று அறிந்ததும், தன்னை நிரூபிக்க ஒரு பாடல் பாட சொல்கிறார் போற்றி. அவனும் இனிமையாகத்தான் பாடுகிறான். சமையல் காரனுக்கு இது எதுவும் பிடிக்கவில்லை. ஆனாலும் என்ன செய்ய. எஜமான் சொற்படி பாணனுக்கு அங்கே ஒரு அறை ஏற்பாடு செய்யப் போக வேண்டிய சூழல். பெண்கள் இல்லாத வீடு. எங்கும் குப்பைக்கூளம்... இடிபாடுகள்!

இன்னும் கிடக்கிறான் என்பதை சமையல்காரன் போட்டு உடைக்கிறான்.

யார் இந்த சாத்தன்?

அது ஒரு தொன்மையான உருவம். இப்படி ஒன்று இருந்ததா என்பது ஒரு துலங்காத மர்மம். வட கேரளத்தில் குட்டிச்சாத் தன் ஒரு இளம் குறும்புக்கார உருவகம். உயர் வகுப்பை சேர்ந்த தம்புரானின் கட்டுப்பாட்டில் இருப்பவன் அவன். மத்



பாணனுக்கு பல புதிய அனுபவங்கள். எஜமான் எப்போது, எப்படி பேசுவார் என்று தெரியாது. கடவுளின் அனுகிரகம் என்ற வார்த்தையை கேட்டால் கூட அவருக்கு கோபம் வருகி றது. வீட்டிலேயே வாற்று சாராயம் பெரிய மண்கலயங்களில் ததும்பி நிற்கிறது. களஞ்சியத்தில் நெல்லுக்கும் பஞ்ச மில்லை. போற்றிக்கு சில சமயங்களில் அசைவ சமையல். அப்படி அசைவமாய் சமைக்கப்படுபவைதான் எவை! கொஞ் சம் நம்ப முடியாத உயிரினங்கள்தான்! கடும் மழை பெய்யும் காலத்தில் விரும்பினால் கூட தப்பிச் செல்ல முடியாத சூழல் பாணனுக்கு. பெருமழைக்காலம்தான் அது. ஒரு மர்மச் சூழல் அங்கிருப்பது புலப்படுகிறது. அவன் காணும் கொடுமோன் போற்றி உண்மையில் போற்றியே அல்ல, சாத்தன் அவர் உருவத்தில் உலாவுகிறான். உண்மையான போற்றி, சவமாய்

திய மற்றும் தென் கேரளத்தில் கதையே வேறு. அங்கு சாத் தன் சேவை என்ற வழிபாடு இருக்கிறது. கருப்பு மாந்திரீகத் தில் நம்பிக்கை உடைய பலருக்கு சாத்தன் அங்கு ஒரு இஷ்ட தெய்வம்!

ஒரு காட்சியில் சமையல்காரன், பாணன் தேவனிடம் சொல் வது போல இதில் சாத்தனுக்கு இரண்டு குணச்சித்திரங்கள். அடக்குபவன் மற்றும் அடக்கப்பட்டவன். இன்னொரு உடலில் சிறைப்பட்டிருக்கும்போது மட்டுமே அவனால் அதிகாரம் செலுத்த முடிகிறது என்பதால் இந்த விசித்திர இரட்டை நிலைகள்! சாத்தன் என்பது சாஸ்தா என்ற வணங்கப்படும் ஒரு தெய்வ நிலையின் அடுத்த பரிமாணம் என்பது இன் னொரு நம்பிக்கை. சாதீய வெறுப்பின் கீழ்நிலையில் இருப்ப வர்கள் அதை வணங்கியபோது அதன் குணநலன் இன்

னொரு தரப்பாரிடம் மாறியது. அது கெடுதல் விளைவிக்கும் சாத்தனாக உருவகப்படுத்தப்பட்டது.

திரைப்படத்தில் கொடுமோன் போற்றிக்கும் வேறு தாழ்த்தப்பட்ட குலத்தை சேர்ந்த பெண்ணுக்கும் பிறந்தவன் தான் இந்த சமையல்காரன் என்று பின்னர் சொல்லப்படுகிறது. அவன் பாணனை தூண்டிவிட்டு போற்றிக்கு எதிராக கலகம் செய்து வெல்கிறான். வென்றும் போர்த்துக்கீசிய படைவீரர்களால் சுட்டுக் கொல்லப்படுகிறான். இறுதியில் அந்த வீடு நொருங்கி விழுகையில், பாணன் நசுங்கி சாகிறான். ஆனால் சாத்தன் அவன் உடலில் புகுந்து கொள்ள, மர்மப் புன்னகை புரிகிறது பாணனின் முகம்.

இந்த திரைப்படத்தில் போர்த்துக்கீசிய வீரர்கள் அல்லாமல் நாம் ஐந்தே கதாபாத்திரங்களைத்தான் சந்திக்கிறோம். பாணன் தேவனுடன் வரும் கோரன், யக்ஷியின் பின்னால் சென்று மரணத்தை தழுவ நேர்கிறது. கோரனாக மணிகண்டன் ஆச்சாரி நடித்திருக்கிறார். கம்மாட்டிப்பாடம் போன்ற நல்ல திரைப்படங்களில் நடித்தவர். எந்த வசனமும் இல்லாத அழகிய யட்சியாக அமல்டா லிஸ் காந்தக் கண்களும் காமப் பார்வையுமாக வருகிறார்.

பெயரற்ற சமையல்காரனாக வருபவர் சித்தார்த் பரதன். உன்னத இயக்குனரும் ஓவியருமான பரதன், அற்புத நடிகையான கே.பி.ஏ.சி. லலிதா தம்பதியினரின் மகன். தந்தையைப் போலவே ஒரு நல்ல ஓவியர். சில திரைப்படங்களில் நடித்திருக்கிறார். நாலைந்து திரைப்படங்களையும் இயக்கியிருக்கிறார். இந்த திரைப்படத்தில் அவரது தோற்றமும் உடல் மொழியும், முகபாவனைகளும் ஒரு 17-ம் நூற்றாண்டு சமையல்காரனை நம் கண் முன்னால் நிறுத்தி விடுகின்றன. சிறப்பான நடிப்பு இவருடையது.

பாணன் தேவனாக நடித்தவர் அர்ஜுன் அசோகன். மலையாளத் திரையுலகில் பெரும்பாலான நகைச்சுவை நடிகர்கள் போல் மேடையில் மிமிக்ரி செய்யும் கலைஞர்களாக அறிமுகமாகி சினிமாவுக்கு வந்தவர்கள். ஹரிஸ்ரீ மற்றும் கலாபவன் குழுக்கள் மிகப் புகழ் பெற்றவை. ஹரிஸ்ரீ குழுவில் இருந்து வந்ததால் ஹரிஸ்ரீ அசோகன் என்று பெயர் வைத்து இயங்கியவர், மலையாளத் திரையுலகில் புகழ் பெற்ற நகைச்சுவை நடிகராக இருக்கிறார். இவரது மகன்தான் அர்ஜுன். அர்ஜுன் தந்தையை போல இல்லாமல் நல்ல உடற்கட்டு கொண்ட நாயக உருவம் படைத்தவர். சமீபத்தில் ஏராளமான திரைப்படங்களில் நடித்து வந்தவர், இந்தத் திரைப்படத்தில் மிக சிரத்தையெடுத்து நடித்திருக்கிறார். பயம், மகிழ்ச்சி என்று பல விதமான உணர்வுகளை பிரதிபலிக்கும் காட்சிகள் இவருக்கு உண்டு. இந்த திரைப்படம் இந்த இளைஞருக்கு ஒரு திருப்பு முனை என்று சொன்னால் மிகையில்லை.

மலையாளத்தின் பிரபல நாயகன் மம்முட்டி எந்த விதமான வேடங்களிலும் நடிக்கத் தயங்கியதில்லை. ஒரு சிறிய வேடத்தில் சத்யனின் கடைசிப் படமான 'அனுபவங்கள் பாளிச்சக்கல்'-இல் முதன் முதலில் தோன்றியவர். ஆரம்பத்தில் அவர் நடித்ததெல்லாம் சிறிய வேடங்களே. பல மலையாள நடிகர்களைப் போல அவர் இமேஜ் வலையில் விழுந்ததில்லை. அடூர் கோபாலகிருஷ்ணன் இயக்கிய 'விதேயன்' படத்தில் முற்றிலும் எதிர்மறை பாத்திரம் அவருக்கு. பணியாளரின் மனைவியை கட்டாயப்படுத்தி இன்பம் தோய்ப்பது, அவனை கொடுமைப்படுத்துவது என்ற பாஸ்கர பட்டேலர் வேடம், அதில் அவருக்கு. 'பலேரி மாணிக்யம் - ஒரு பாதிரா கொல பாதகத் திண்டே கத' திரைப்படத்திலும் ஒரு எதிர்மறை பாத்திரம் தான். 'சதியன் சந்து' என்ற ஒரு கர்ணபரம்பரை வில்லன் கதா பாத்திரத்தை இன்னொரு கோணத்தில் பார்த்து எம்.டி. வாசுதேவன் நாயர் எழுதிய 'ஒரு வடக்கன் வீர காத'யில் அந்த வேடத்தை ஏற்று நடித்தவரும் மம்முட்டிதான். வித்தியாசமான வேடங்கள் அவருக்கு எப்போதும் நெருக்கமானவையே. 'மிருகயா', 'பொந்தன் மாட', 'ஆவநாழி', 'மதிலுகள்' என்று சொல்லிக்கொண்டே போகலாம். சமீபத்தில் லிஜோ ஜோஸ் பெல்லிசேரி இயக்கத்தில் வெளிவந்த 'நண்பகல் நேரத்து மயக்கம்' என்ற தமிழ்ப் பெயர் கொண்ட மலையாளப்படம், மம்முட்டியின் திரைப்பட வாழ்க்கையில் வெகு வித்தியாசமான ஒன்று.

இந்த வரிசையில் அவர் எதிர்கொண்ட சவால்தான் 'பிரமயுகத்தின்' கொடுமோன் போற்றி கதாபாத்திரம். இனிமையும் கலாரசனையும் பூத்து நிற்கும் வெளிப்பூச்சு தோற்றம், தந்திரமும் நயவஞ்சகமும் நிரவி நிற்கும் குணநலன் என்று இரு விதமான பாவங்களை முகத்திலும் உடல்மொழியிலும் வெளிப்படுத்தும் திறன் மம்முட்டிக்கு அல்வா போல. நெடிய உடல்வாகு, இடையில் மட்டும் ஒரு வேட்டி, தோளில் ஒரு துண்டு, திறந்த மேனி, தந்திரமான கண்கள், கறை படிந்த பற்கள், வயதால் தொய்ந்த வயிறு என்று உடலையே ஒரு கான்வாசாக மாற்றக் கூடிய திறன் படைத்த சாத்தனை, தன் முழுத் திறனையும் காண்பித்து உருவகப்படுத்துவதில் வெற்றி கண்டிருக்கிறார் மம்முட்டி.

இயக்குனர் ராகுல் சதாசிவன், ஏற்கனவே 'ரெட் ரைன்', 'பூதகாலம்' என்று இரண்டு படங்களை இயக்கியவர். இந்த திரைப்படத்தையும் திறம்பட இயக்கியிருக்கிறார். 17-ம் நூற்றாண்டில் கதை நடக்கும் பிரமயுகம் படத்தை, கதையின் பழமைக்காகவும், இருளும் ஒளியும் கலந்து நிற்கும் அந்த வீட்டின் திகில் சூழ்ந்த சூழலுக்காகவும், வண்ணத்தின் கவர்ச்சி இருக்கக்கூடாதென்பதற்காகவும், கருப்பு வெள்ளையிலேயே உருவாக்கியிருக்கிறார். வெளிப்புறக் காட்சிகளில் சாம்பல் வண்ணத்தின் பல்வேறு படிமங்கள் பிரமிப்பு ஊட்டுகின்றன. வீட்டுக்குள் பயத்தை கூட்டும் கருப்பு நிழல்கள் இன்னும் அழுத்தத்தை தருகின்றன. ஒளிப்பதிவாளர் ஷெஹநாட் ஜலால் பாராட்டுக்குரியவர்.

முக்கிய பெண் கதாபாத்திரம் இல்லாமல், புகழ் பெற்ற நடிகரை ஓர் எதிர்மறை பாத்திரத்தில் நடிக்க வைத்து, கருப்பு வெள்ளையில் உருவான இந்தத் திரைப்படம் மக்களின் ஆதரவையும் அபரிமிதமாகப் பெற்றது ஒரு அதிசயம். அரங்கு நிறைந்த காட்சிகளாக இன்னொரு மாநிலத்தில் வெற்றி பெறுவது என்பது எப்போதும் நடக்கக்கூடியதல்லவே!



jeeva@thaiveedu.com

# தெய்வமாடும் சடங்கின் தனித்தலும் இணைத்தலும்
## மேனாட்டார் கோட்பாடுச் சிந்தனைகளூடான ஓர் ஒப்பியல் நோக்கு

- சந்திரசேகரன் சசிதரன்



### அறிமுகம்

சமய வாழ்வின் ஆரம்ப வடிவங்களின் மூலவேர்களைத் தேட முற்பட்ட எமைல் டேர்க்கீம் கூறுவார்: 'நகர்ப்புறங்களில் பின் பற்றப்படும், மாற்றங்கள், திரிபுகளுக்குட்பட்ட சமயக் கூறு களை விடவும், மூடிய, பழங்குடிச் சமூகங்களில் பேணப்படு கின்ற சமயக் கூறுகளை ஆராய்வதன் மூலமே மனித சமய வாழ்வின் மூலாதாரங்களைக் காண்பதற்கு வாய்ப்புண்டு (1905/1911:7-14). ஓரளவு அதன்படி இன்றளவும், ஆகமம் சாராமல், சமஸ்கிருத மயமாக்காமல் 'மக்கள் சமயமாகவே' மட்டக்களப்பின் சமயநிலை திகழ்கிறது.

இச் சமநிலையை அதன் தனித்துவத் தொடர்ச்சியையும் இருப்பையும் அழிந்துபடாமல் காப்பாற்றும் துணைக் கருவிக ளாகப் பல்வேறு சடங்குகள் திகழ்கின்றன. ஈழத்தின் ஏனைய பிராந்தியங்களோடு ஒப்பிடுமிடத்து மட்டக்களப்புச் சடங்குக ளின் அமைப்பியலும் இயல்புகளும் அவற்றின் சமூக ஒத்தி சைவும் தனித்து நோக்கத்தக்கனவாகவே உள்ளன.

தொல் பழங்கால ஈழத்தின் கிழக்குப் பகுதியானது வடக்கே வெருகலாறு தொடங்கி தெற்கே மாணிக்ககங்கை ஈறாகவும் வியாசித்திருந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின் றன. அவ்வாறாயின், இன்றைய சிங்களவர்களாக அறியப்படு வோரின் கிராமிய நிலைப்பட்ட வழிபாட்டு மரபுகளும் மட்டக்க ளப்புச் சமய வெளியினுள் சங்கமித்திருக்க வாய்ப்புண்டு. எடுத்துக்காட்டாக, 'தொவில்' சடங்கைக் குறிப்பிடலாம் கதிர் காமத்தில் இன்னும் இறுக்கமாகப் பேணப்படும் 'கப்புறா ளைப்' பூசை முறையானது, மட்டக்களப்பிலே 'மண்டூர் முரு கன் கோயிலில் நடைமுறையிலுள்ளது.'

எது எவ்வாறாயினும், இன்றைய உலகமயமாதற் சூழலிலும் ஈழத் தமிழரின் பெருமெடுப்பிலான புலம்பெயர்வுக்குப் பின் பாகவும் எந்தவொரு சமூகப் பொருண்மையும் மூடிய கதவுக ளுக்குள் சிறைப்படுத்தி நோக்கமுடியாத ஒரு நிலை ஏற்பட் டுள்ளது. மட்டக்களப்பின் பூர்வகுடிகளின் சமய உணர்வின் மூல ஊற்று யாது? உத்தியாக்களின் வழிபாடு எனப்படும் மிகத் தொன்மையான வழிபாட்டு மரபு எப்போது தொடங்கி யது? வேறு இடங்களைப் போலன்றி, இங்கே தெய்வங்களுட னான காரணங்கள் எவை? இங்கு முன்னெடுக்கப்படும் சடங் காற்றுகையில் தனித்துவமான பண்பாட்டுக் கோலங்கள் யாவை? துரிதமான சமஸ்கிருதமயமாக்கலின் மத்தியிலும் அதனையும் தாண்டி 'பத்ததி' வழிபாடும் கதவு திறத்தலும் வருடாந்தச் சடங்கும் மக்களின் மிக நெருக்கமான கூட்டினை வும் எவ்வாறு ஏற்பட்டன என்பதெல்லாம் எமக்கு முன்னாலே மேற்கிளம்பி நிற்கின்ற கேள்விகள். இவை புறக்கணிக்க முடி யாதவை மட்டுமல்ல. இவற்றுக்கு ஆய்வு நோக்கிலான விடை காண வேண்டிய கடப்பாடும் எமக்கே உண்டு.

மட்டக்களப்பின் சமயவெளியினுள், தெய்வம் உருவேறி 'கட் டுக் கூறும்' வழிபாட்டு மரபு எப்போது தொடங்கியது என் பதை காலகட்ட ரீதியில் மிகச் சரியாக உறுதியிட்டுக் கூறமுடி யாதுள்ளது. அதேவேளை, இச் சடங்கானது முற்றிலும் இச்ச மூகம் சார்ந்ததே அன்றேல் புறச் செல்வாக்குகளும் இதில் கலந்துள்ளனவா என்று எடுத்துரைக்க இயலாத தெளிவின் மையும் நிலவுகிறது.

ஆயினும், இத்தகைய உருவேறி தெய்வமாகும் சடங்கின் தொடக்கம் 'வட சைபீரியா' என்று இனங்காணப்படுகிறது. அங்கு அதீத மந்திரசக்தி தீராத நோய்களைக் குணப்படுத் தல், ஆவிகளுடன் பேசி அடியவருக்குரிய தீர்வைப் பெற்றுக் கொடுத்தல் என்று பல செயற்பாடுகள் அதனூடாக முன்னெ டுக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது. இதன் தொடர்ச்சி யாக ஐரோப்பா, வடஅமெரிக்கா, யப்பான், தாய்லாந்து, நேபாளம், வியட்னாம் இந்தியா, சீனா, வடகொரியா வரையி லும் பின்னர் இச்சடங்கு பரவலுற்றதை அறிகிறோம். எந்த வொரு விடயத்தையும் மேலைப்புலம் சார்ந்து தேடும் தமிழ் நிலைப்பட்ட மானிடவியலாளரின் முற்சாய்வைக் கண்டிக்கும் தென் தமிழகச் சமகால ஆய்வாளர்கள், தமிழின் தொல்சீர் இலக்கியத் தொகுப்பான சங்கப் பாடல்களில், குறிப்பாக அகத்திணை, புறத்திணை இரண்டு மரபுகளிலும் இதே சடங்கு 'வேலன்' வெறியாட்டாக இடம்பெறுவதைத் திடமாக எடுத்துக்காட்டுகின்றனர். (பக்தவத்சல பாரதி,1999, 2002).

எனவே குறிப்பிடப்பட்டவரை இச்சடங்கின் தனித்த பண்பு களை மட்டக்களப்புச் சமூகத்தினுள் தேடுவதும், பின்பு அதன் இணைந்த குணாம்சங்களை அல்லது தொடர்பு நிலை களை மானிடவியலாளர் தம் ஆய்வுகளுடன் பருமட்டாக ஒப் பிட்டு நோக்குவதுமே இக்கட்டுரையின் இலக்காக அமைகிறது.

## மட்டக்களப்பின் சமயவெளியில் தெய்வமாடும் சடங்கு தனித்துவமும் தனித்த கட்டமைப்பும்:

நடைமுறை அம்சங்களை நோக்குவதற்கு முன்பாக, அடிப்பபடையான கோட்பாடுச் சிந்தனைகளைத் தெளிவுபடுத்திக் கொள்வது இங்கு முன் நிபந்தனையாக அமைகிறது, அதன் படி நான்கு வகையான அடிப்படை வரையறைகளை மட்டும் சமயச் சடங்கோடு தொடர்புபடுத்தி நோக்கலாம்.

## சடங்கு பற்றிய படிமலர்ச்சியியலாளர்களின் பரிதல்:

டைலர், பிறேஸர் மற்றும் ஹென்றி மோர்க்கன் உள்ளிட்ட பலரும், சமயம் கூட ஒரு நிறுவனக் கட்டமைப்புடையது எனவும் சமூகப் படிநிலைகளைப் போல அதுவும் படிமலர்ச்சியுற்று வந்திருக்கலாம் என்று உரைப்பர். சமயத்தின் தொடக்க வடிவத்தை அவர்கள் மந்திரம் அல்லது சமயத்துக்கு முற்பட்ட ஏனைய வடிவங்கள் ஆவியுலகவாதம் என்று டைலர் வரிசைப்படுத்தியுள்ளார்.

மட்டக்களப்பில் கிடைத்த மிகத் தொன்மையான ஏடுகளிலும் இப்பிரதேசத்தில் மந்திரப் பயில்வின் செல்வாக்கு மிகுதியாக இருந்தமையை அறிய முடிகிறது. குறிப்பாக இன்று தெய்வமாக அறியப்படும் காடேறி நீலயசோதையன், காளி, மாரி, புள்ளியன் முதலான சிறு தெய்வங்களின் பேரிலான மந்திரங்கள் பயின்று வந்திருப்பதாக அறியப்படுகிறது. விசேடமாகப் பால்வளம் பெருகவும் எதிரியை வெல்லவும் அதிக மீன்களைக் கொள்முதல் செய்யவும் என்று பிரத்தியேகமான மந்திரங்கள் பேணப்பட்டு வந்துள்ளன. அதிலும் குறிப்பாகப் பெரும்பாலும் பூசாரிமார்களே இந்த மந்திரங்களைப் பேணி வந்துள்ளமையும் இது ஒரு வகையான 'வாய்மொழி மரபில்' தொடர்ந்து வந்துள்ளமையினால் அறிய முடிகிறது. புனிதம், தெய்வீகம் என்ற நிலைக்கும் அப்பால், இம் மந்திரங்கள் சில போது 'சமூகத் தீமைகளுக்காகவும் பிரயோகிக்கப்பட்டிருக்க வாய்ப்புண்டு. அத்துடன் தமது பரம்பரைக் குடும்ப மட்டத்துக்கு வெளியில், பிறருக்கு இந்த மந்திரப்புலமையானது செல்லாமலும் பார்த்துக்கொண்டனர். இன்றும் கூட மட்டக்களப்பிலே கோளாவில் தேற்றாத்தீவு, ஊறணி, முறக்கொட்டான்சேனை முதலான கிராமங்களில் இத்தகைய பாரம்பரிய மந்திரப் புலமையாளர்கள் காணப்படுகின்றனர். இவர்களில் அநேகர் கோயில் பூசாரிமார். அதிலும் பெண் தெய்வங்களை நெஞ்சுருகி வழிபடுவோர். ஆகமம் சாராத கோயிற் சடங்குகளில் தலைமையேற்பதுடன் விஷக்கடிக்கு மந்திரம் பாராட்டுதல் பெரியம்மையின் போது அதனைத் தணிக்கும் பொருட்டு 'மாரியம்மன் தாலாட்டு' இசைத்தல், சுளுக்கு, முறிவு, தீராத தலைவலி முதலான பிணிகளுக்கு மருத்துவம் பார்த்தல், கண்திருஷ்டி கழித்தல், வளவு காவல் பண்ணுதல், வளவுகளில் புதைத்த சூனியத்தை எடுத்தல் என்று பன்முகப்பட்டதாக அமைந்துள்ளது.

இவற்றுக்கும் அப்பால் தெய்வமாடும் சடங்கின் போது உருவேறி தெய்வமாகும் 'தெய்வாதிகளை' மந்திர சக்தியால் கட்டுதலிலும் ஈடுபடுகின்றனர். இங்குதான் எமக்கொரு கேள்வி எழுகிறது. நவீன விஞ்ஞானம், நவீன மருத்துவம், சத்திரசிகிச்சை, தகவல் தொடர்பாடல் உச்சத்தைத் தொட்ட நிலையிலும் மட்டக்களப்புக் கிராமங்களில் மேலே தொகுத்துக் காட்டி வழங்குகின்றனர்.

பாரம்பரியச் சடங்குகள், மந்திரங்கள் அவை சார்ந்த பொதுப் புலனோடு கூடிய, நிலையான நம்பிக்கை மரபுகள் தொடர்ந்து நிலவுதல் ஏன் என்பதே அந்த வினா. இதற்கு விடைகாண இலங்கையின் கீர்த்தி பெற்ற மானிடவியலாளர் துணை புரிகிறார். அவர் கூறுவதாவது; நகர்ப்புற மனிதரை விட துண்டாடப்பட்ட பிராந்தியங்களில் மிகக் குறுகிய தேவைகள் அபிலாஷைகளுடன், இயற்கையை வழிபட்டு வாழும் கிராமிய மாந்தரின் மனவெளியில் எழுகின்ற விசாரங்கள், கவலைகள், ஐயுறவுகள், உணர்வெழுச்சிகள் பெரிதும் வேறுபட்டவை. அவனுக்கு / அவளுக்கு தனது மாடு களவு போனால் ஒரு திருப்திகரமான விடை கிடைக்க வேண்டும். போன ஆண்டு போல இந்த முறை வயல் விளையவில்லை எனில், சேனைப் பயிர்ச்செய்கை செழிப்பாக அமையவில்லை எனில், தீராத நோய்க்கு ஆளாகித் தன் குழந்தை இறந்து விட்டால், கணவன் மனைவிக்கிடையில் ஓயாத சண்டை சச்சரவு ஏற்பட்டால், வழமை போல உணவுண்ணல் தூங்குதலில் பிரச்சினை ஏற்பட்டால் இனம் புரியாத ஒரு விடை கிடைக்க வேண்டும். அந்த விடைகளையே உள்ளூர்ப் பூசாரிகளே மந்திர வடிவில் வழங்குகின்றனர். இப்போது மட்டக்களப்பின் சமயவெளியில் படிமலர்ச்சிக் கோட்பாட்டின் இணைப்பையும் மந்திரப் பயில்வின் உள்ளார்ந்த தொடர்பு, இருப்பினையும் எம்மால் ஓரளவு புரிந்துகொள்ள முடிகிறது.

## சடங்குகள் தொடர்பான செயற்பாட்டு வாதப் பிரிவுகள்:

செயற்பாட்டுவாதியான எமில் டேர்க்கீமின் சமயம் தொடர்பில் எழுப்பும் கேள்வி முக்கியமானது. குறிப்பிட்ட நம்பிக்கைகளுடன் பங்குபற்றும் மக்களுக்கு அச் சடங்குகள் ஆற்றும் பணியாது ? என்பதே அவரது கேள்வி.

இச் செயற்பாட்டுவாத நோக்கானது அடிப்படையில் சமூகத்துக்கும், சடங்குகளுக்குமான தொடர்புகளை ஆராய முற்படுகிறது. அனைத்து மனிதச் சமூகங்களும் எதிர்நிலையான இரண்டு பெரும்பகுதிகளால் பிரிவிடப்பட்டுக் காணப்படுதாக டேர்க்கீம் குறித்துக் காட்டுகிறார். 'புனிதம்' என்பது தவிர்ப்புகள், விலங்குகளோடு தொடர்புபட்டதாகக் காணப்படும்.

மட்டக்களப்புப் பிரதேசத்தினுள் கோயில் திறந்து சடங்கு ஆரம்பித்தவுடன் மச்சம், மாமிசம் விடுவித்தலும், அகப்புறச் சுத்தங்களும் முக்கிய இடத்தைக் கூறுகின்றன. கோயில் சார்ந்த சுற்றாடலைத் துப்பரவு படுத்தல், அலங்கரித்தல், மது மாமிசத் தடை, இறைச்சி, மீன் விற்பனைக்கான தடை என்பன டேர்க்கைமின் கூற்றுடன் ஒத்திசைந்து போவதனை அவதானிக்கலாம்.

எமைல் டேர்க்கீம் தொழிற்பாட்டியல் ரீதியில் வைத்து சடங்குகளின் அமைப்பு, செயல்கள் இடைவினை என்பவற்றை ஆழ



மான ஆய்வுப் பார்வையில் வெளிக்கொணர்ந்த ஒரு நூலாக அமைவது ‘The Elementary Froms of Religions Life’(1912-1955) என்பதாகும். அவரைப் பொறுத்தவரையில் சமயமும், சடங்கும் ஒரு குழுநிலையான தோற்றப்பாடாகவே கருதினர். சடங்கான, அதன் ஆற்றுகையின் வழியே சமூக உறுப்பினர்களிடையில் உறுதியான பிணைப்பையும், பயபக்தியையும், ஒருங்கிசைவையும் ஏற்படுத்துகிறது. எனினும் சமயம் அல்லது சடங்கின் பிறப்பிட மூலம் தனி மனிதரின் மனமன்று: மாறாக சமூகமேயாகும் எனவும் அவர் வாதிடுகிறார்.

இச்சிந்தனைகளை நாம் அப்படியே மட்டக்களப்பின் தெய்வமாடற் சடங்கின் அமைப்பு முறையிலும் பிரதியிட்டுப் பரீட்சிக்கலாம். மட்டக்களப்புச் சமயவெளியில் நிகழ்த்தப்படுகின்ற தெய்வமாடற் சடங்கில் பங்குபற்றும் அடியார்களும் குறிப்பிட்ட நேரத்தையும் அந்த வெளியையும் புனிதம் வாய்ந்ததாகவே பகிர்ந்து கொள்கின்றனர். அத்துடன் தெய்வமாடல் சடங்கு ‘கதவு திறத்தல்’ சடங்கு இடம்பெறுகின்ற அக்கிராமத்தின் பௌதீகவெளி சார்ந்த பரப்பும், வீடு மனைகளும் கோயிற் புறச் சூழலும் தெய்வம் ஆடுவோரும் அடியவர்களும் புனிதம், மாசு என்கிற கட்டிறுக்கமான பிரிப்பினை பயபக்தியோடு முழுமையாக அனுசரிக்கின்றனர்.

குறிப்பாக:

- ஊர் முழுமைக்கும் இறைச்சி, மீன் மற்றும் மாமிச உணவு விற்பனைக்கான தடை.
- மக்கள் தம் மனைகளில், உண்டிகளில் மச்சம், மாமிசம் தவிர்ப்பு. தாவர உணவுப் பழக்கம்.
- ஊர் எல்லைக்குள் எவரேனும் மரணிக்குமிடத்து உரிய பிரயச்சித்தப் பூசைகள் செய்தல்.
- தெய்வமாடுகின்ற ஆண்களும்,பெண்களும் இக் காலகட்டத்தில் தாம்பத்திய உறவைத் தவிர்த்தல்.
- சடங்கு முடியும் வரையிலும் அவர்களுக்கென்று புறம்பாக ஒதுக்கப்பட்ட மண்டபத்தில் தங்கியிருத்தல்.
- தெய்வமாடும் ஆண்கள் மது அருந்துதல், புகைத்தல், போதையூட்டும் ‘லாகிரிப்’ பண்டங்கள் உட்கொள்வதைத் தவிர்த்தல்.
- இயன்ற வரை லௌகீக விஷயங்கள், வேண்டாத கதைகள், வன்சொற்கள், பயனற்ற பேச்சுகளைத் தவிர்த்தல்.

இவை ஒருசில எடுத்துக்காட்டுகளே. இங்கே வியப்பூட்டும் விடயமாக அமைவது, சுமார் இரண்டரை நூற்றாண்டுக்கு முன்பாக எவ்வளவோ தொலைவில் அவுஸ்ரேலியப் பழங்குடியினரான ‘Arenda’ சமுதாயத்தின் கட்டமைப்புக்குள் பங்குபற்றி அவதானித்தல் ஊடாக டேர்க்கீம் கண்டுதெளிந்த இந்தப் ‘புனிதம் - மாசு’ என்னும் சமயம், சடங்கியல் சார் பிரிப்பானது, மட்டக்களப்பின் தெய்வமாடற் சடங்கிற்கும் பொருத்தமாக அமைவதே. ஆனால் மறுபுறம் இதில் ஆச்சரியப்படவும் தேவையில்லை. ஏனெனில் டைலர் தொடக்கம் டேர்க்கீம், லெவி, பார்ஸன்ஸ், பிரிட்சார்ட், பிறேஸர், கீர்ஸ் முதலானவை ஒருவகையில் ஒத்ததன்மை வளர்ச்சியும் உலகப் பொதுவானது என்று ஏலவே தெரிவித்துள்ளனர். இத்தகைய கருத்தியல் சாளரத்தின் வழியேதான் மேற்படி விடயத்தையும் நாம் அணுக வேண்டியுள்ளது.

It is this empirical emphasis to the study of religion that brought about a substation increase in anthropological fields studies of the domain of the sacred... Malinowskhi Radchife brown, evans - pritchart and other studied the religions beliefs and practies of various tribal societies with a view further examining the intro relationship between society Religion.

இன்னும் ஒரு நிலையில் டேர்க்கீம் கருத்துக்கு மாறாகப் பார்ஸன்ஸ் என்பார் சமயச் சடங்குகளை மனிதர்களுக்கு அவசியமான, ஆனால் பகுத்தறிவு சாராத அல்லது இயல்பு மிக்கதாகக் காண்கிறார். இதனுடைய ஆழமான கட்டவிழ்ப்பு யாதெனில் மனிதர்களின் இச் சடங்கியல் சார்பான நடத்தை என்பது உண்மையில் மனிதர்களின் பகுத்தறிவோடு கூடிய காரண காரிய உறவு சார்ந்து இடம்பெறவில்லை என்பதேயாகும்.

மேலும் மனிதர்களின் புலமை மற்றும் சாமான்யமான பொதுப் புத்தி சார்ந்து சிந்திக்குமிடத்து இந்தச் சடங்கு சார் நடத்தை என்பது விசேடமாக மனிதர்களின் நரம்பியல் தொகுதியோடு இணைத்துச் சிந்திக்கவே பெருமளவுக்கு முற்பட்டுள்ளார். சடங்கு தொடர்பான ஃபுரூடியன் புலப் பதிவானது மனிதர்களின் நனவிலி மனது எவ்வகையில் 'புனிதப் பொருள்களின் உலகத்தோடு இடையூடாடலை நிகழ்த்துகிறது' என்று விஞ்ஞானபூர்வமாக ஆராய்ந்தார்.

ஒரு வகையில், கள ஆய்வின் போது மட்டக்களப்புப் பிராந்தியத்திலும் தெய்வமாடுவோர் மேற்படி முன்வைத்த நரம்பியல் தொகுதியின் இயல்பு மீறிய உணர்ச்சிப் பெருக்கையும் நனவிலி மனதின் சக்திப் பிரவாகத்தையுமே தமது உருவேறலின் பின்புலக் காரணிகளாகக் குறிப்பிட்டமை இங்கே விசேடமாகும் சுட்டிக் காட்டத்தக்க பொருண்மையாக அமைகிறது. பூசகரால் நீராட்டப்பட்டு வேப்பிலைக் கொத்து வழங்கி ஆலயத்தினுள் பிரவேசித்து உடுக்கை ஒலியோடு மந்திர உச்சாடமை புரியத் தொடங்கியதும் தமது உடல் முழுவதும் இனம்புரியாத அதீத சக்தி பாய்வதாகவும் அதனைத் தெளிவாக விபரிக்க முடியாது எனவும், மின்சாரத் தாக்குதலுக்கு இணையாக அமைவதாகவும் நேர்காணலின் போது தெரிவித்தனர்.

அத்துடன் மேல்மட்டத்திலுள்ள அல்லது தொழிற்பாட்டு எல்லையின் கட்டுப்பாட்டிலிருக்கும் வலயத்துக்கு அப்பால் நனவிலி மனதின் வட்டத்திற்குள் ஆளுமைக்குள் ஆட்பட்டவாறே 'கட்டுக்கூறுவதாகவும், தெய்வம் ஆடிய பின்னர் நடைபெற்ற நிகழ்வுகளையும் அவற்றின் வரிசைக் கிரமத்தையும் தாம் அடியவர்களுக்கு எடுத்துரைத்த விடயத்தையும் சரியாக நினைவு கூரமுடியாதுள்ளது எனவும் எடுத்துரைத்தனர்.

அவ்வாறாயின் தெய்வாதிகளின் இந்த நிலையானது எடுத்துரைத்த நரம்பியல் சார் சக்தியின் பிரதிபலிப்பே எனப்படும் தன்வசம் இழந்த தன்மையின் எதிர் விளைவா, அன்றேல் பண்டைக்கால சைபீரியா, மொங்கோலியா, தாய்லாந்து, யப்பான், நேபாளம் முதலான நாடுகளில் நோக்கப்பட்ட கிராமிய நாட்டாரியல் மருத்துவர்கள் தெய்வம் சிறிது கணம் தங்கிச் செல்வதற்கு வாய்ப்பாக அமையும் ஊடகம் குணப்படுத்தும் ஆற்றல் மிக்கவர்கள் என்று நாம் இவர்களை நோக்கலாமா என்பது ஆழமானதாகவுள்ளது.

## சடங்கு பற்றிய குறியீட்டு வாத நோக்கு:

அடிப்படையில் சடங்கு என்பது மொழி போல மனிதகுல நாகரீகப் படிமலர்ச்சியில் படிப்படியாக உருவகித்து விருத்தி பெற்ற குறியீடுகளின் ஒழுங்கமைப்பே ஆகும். ஒரே குழுவினருள் பகிர்ந்து கொள்ளப்படும் பண்பாட்டுக் கூறுகள் போல இயற்கை மீதான அதீத நம்பிக்கை, ஆரம்பகால அச்சம், இயற்கை மீதான தவறான புரிதல், பகுத்தறிவு சாராத் தன்மை, துன்ப துயரங்களுக்கான வடிகால் முயற்சி, இழப்பும் வேதனையும், தொடர் இன்னல்கள் வியாககூலங்கள், வன் கொடுமைகள், பிணிகளின் பற்றுகை... இவை காரணமாக மனிதமனம் வரித்துக் கொண்ட சமூக ஸ்தாபனமே சமயமாகும். இச்சமயத்தின்பாற்பட்ட பிரதான அங்கமாக சடங்குகள் தொன்று தொட்டே பலவகையான 'குறியீட்டு தன்மைகளை' சாயலாகப் பெற்றுள்ளன. ஒரு மொழியின் அர்த்தம் போல நாம் சடங்குகள் புலப்படுத்தும் குறியீடுகளையும் மொழிபெயர்த்துப் படிக்க வேண்டிய அவசியப்பாடு உள்ளது. அடிப்படையில் ஒரு பண்பாட்டு மானிடவியல் தளத்திலே இயங்கும் புலமையாளர்கள், இப் பார்வையின் கீழ் சடங்குகளுக்கு ஒரு புதிய உள்ளார்த்தமான வியாக்கியானத்தை வழங்க முற்படுகின்றனர். இதன்வழி எட்மண்ட் லீச் என்பார், 'rituals culturally oriented behavioral patterns which seek to make a symbolic statement about human begings relationship with a supreme being' என்பதாக வரையறுத்தார். இதன் கருத்து பருமட்டாகத் தமிழில் எடுத்துக்கொண்டால் 'மனித ஜீவிகளுக்கு அவற்றுக்கு மேம்பட்ட உயர்வான சக்திகளோடு உள்ள தொடர்பு, அத்தொடர்பானது ஒரு குறியீடு சார் கட்டமைப்பு நிலையிலே பண்பாட்டியல் சார்போடு திசை வழிப்படுத்தப்படும் நடத்தைக் கோலங்களாக அமையும். அந்தக் கோலங்கள் ஒரு வகையான குறியீட்டு வடிவங்களை உருவாக்க முற்படும்.

இக் கோட்பாடு சார் நடைமுறைகளையும் நாம் பிரத்தியட்சமாக மட்டக்களப்பின் தெய்வமாடற் சடங்கு முறைகளில் துலாம்பரமாகவே அவதானிக்க முடிகிறது. சடங்கு ஆற்றுகை தொடங்கி முடியும் வரையில் புலப்படுத்தும் குறியீடுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தி நோக்குவது வசதியாக அமையும்.

## ஆடை அணிகலன் சார்பான புறவயமான குறியீடுகள்:

தெய்வாதிகள் ஆடை கட்டும் முறையானது கடுமையான வர்ணங்களைக் கொண்டிருப்பதும், விசேடமாகப் பெண் தெய்வங்கள் விழையும் வடிவமைப்பைக் கொண்டிருப்பதும் ஒரு குறியீட்டுப் பாங்கானது. அத்துடன், ஆண்கள் வேட்டிக்குப் பதிலாக மஞ்சள், சிவப்பு, பச்சை, நீலம், செவ்வூதா வண்ணங்களால் இழைக்கப்பட்ட சரிகைக் கரை இழையோடி நிற்கும் பட்டுச்சேலை அணிந்து, தலையை மூடி முக்காடும் இடுகின்றனர். சில தெய்வங்களில் காற் சலங்கை, வளையல் அணிகின்றனர். இது தெய்வமானது குறிப்பிட்ட தெய்வாதியின் உடலை ஊடகமாகக் கொண்டு உறையப் போகிறது என்னும் புனிதமான அல்லது அதி பௌதீகவாத சமிக்ஞைக்குரிய குறியீடாக அமையலாம்.

## மொழி, சொல்லாடல் ஒலி சார்பான குறியீடுகள்:

மனிதரின் வேட்டையாடல் மற்றும் சேகரிப்பு யுகத்திலே மொழியின் வருகைக்கு முன்பாக மனிதர்கள் பெருத்த குரலிலே கூச்சலிட்டனர். அது அர்த்தமற்ற ஒலிக் கூட்டத்திலே கோவையாக அமைந்திருந்தது. கால ஓட்டத்திலே அவர்கள் மகிழ்ச்சி, சினம், துயரம், ஆபத்து முதலான உணர்ச்சிகளைப் பிரயோகித்ததாக வரலாறு பதிவு செய்கிறது. இதன் ஒரு நீட்சியாக இங்கும் தெய்வமாடுவோர் உருவேறியதும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் 'ஆ.., ஊ.., ஐ.., அஃ.., ம்ம்.., ஆம்...' முதலான ஒலிக் குறிப்புகளை ஆவேசமாக வெளியிடுகின்றனர். அத்துடன், இவர்கள் சொற்களாக அடியாரிடம் எடுத்தியம்பும் 'சூது, மண்டை, எச்சில், கூடு, முக்கண் குஞ்சான், வாலயம், எம்மான், பொலி முதலான பல்வேறு சொற்களும் சொற்றொடர்களும் அவற்றின் இயல்பான நேரடிப் பொருளை வழங்கி நிற்காமல் உள்ளுறைந்த குறியீட்டு ரீதியிலான அர்த்தங்களை வழங்கி நிற்காமல் உள்ளுறைந்த குறியீட்டு ரீதியான அர்த்தங்களையே வழங்கி நிற்கின்றனர். அத்துடன் இப் பிராந்திய மாந்தருக்கும் - அதிலும் மூத்த தலைமுறையினருக்குமே எளிதில் விளங்கத்தக்கனவாக உள்ளன.

இதனை விட சடங்கின் தொடக்கம், இடை, கடை நிலைகளில் இணை நிகழ்வாக இடம்பெறும் பூசாரிமார்களின் இடையீட்டு நிகழ்வுகள், பூசைகளிலும் ஒரு வகையான குறியீட்டுத் தன்மையை அவதானிக்கலாம். வீரக் கம்பம் வெடுதல், அதை நடுதல், முளைநெல் இடுதல், கோயில் முன்றலில் பூசாரி, தெய்வாதிகள் இணைந்து நெல்லுக் குத்தல் என்றவாறு அவை விரிந்து செல்கின்றன. இவற்றை விட தெய்வம் ஆடுவோரின் ஆட்டமுறைமை, உடல் மொழி, நாக்கை வெளியில் நீட்டுதல், கண்ணை உருட்டுதல், சினமேறி ஆடுதல், ஒவ்வொரு தெய்வப் பந்தலின் முன்பாகவும் ஆட்ட முறைமையை மாற்றுதல் என்பவற்றிலும் ஒரு வகையான குறியீட்டுப் பாங்கினை இங்கு உற்று அவதானிக்க முடிகிறது.

## உலகளாவிய சில முதன்மை ஆய்வுகளும், மட்டக்களப்பின் தெய்வமாடலும் ஒரு சுருக்க ஒப்பீடு:

பாரட் என்பார், ஆபிரிக்கப் பழங்குடிகள் மத்தியில் நிகழ்த்திய தனது ஆய்வின் முடிவிலே, தெய்வம் ஆடுவோரைத் தொழில்வான்மை மிக்க உளநல நிபுணர்களாக ஏற்றுக்கொள்ள இயலாது என்கிறார். ஆனால், இவர்கள் கிராமிய மட்டத்திலுள்ள புனைவுகள், தற்காலிக அதீத ஆற்றலைப் 'போலக் காண்பித்து' சில பணிகளைத் தீர்த்து வைப்பதில் வல்லவர்கள் என்கிறார்.

மட்டக்களப்பிலும் கள ஆய்வின் போது, பன்முகத் திறனாற்றல், எழுத்தாற்றல், கவிதை, இலக்கியத் திறன் மிக்க ஒரு கத்தோலிக்கப் பெண்மணி, அவர் சோதிடத்திலும் தேர்ச்சிமிக்க ஓய்வு பெற்ற ஆசிரியை. அவர் கையிலும், காலிலும் ஒரு வகையான நமைச்சல் ஏற்பட்டு காயம் பெரிதான பின் பல்வேறு மருத்துவம் செய்தும் குணமாகவில்லை. இந்நிலையில் தனது மத நிலைக்கும் அப்பாற்பட்டுத் தனக்கு எவரோ சூனியம் செய்து விட்டார்கள் என்று அவர் திடமாக நம்பினார். அந்த நிலையில் தான் காளியை மரபார்ந்த நிலையில் பன்னெடுங்காலம் வழிபடும் மட்டக்களப்பின் பூர்வீகக் கிராமத்தின் காட்டல் பகுதியில் அமைந்துள்ள மிகச் சக்தி வாய்ந்த ஒரு சிறிய பந்தலில் வழிபடப் பெற்ற வீரமாகாளி கோயிற் கதவு திறந்த போது அங்கேயே தங்கி ஒரு 'தெய்வாதி' மூலம் தான் முற்றிலும் குணமானதாகத் தெரிவித்தார். குறிப்பிட்ட தெய்வாதி பச்சைச்சேலை அணிந்து கிளி போல இரகசியமாகப் பேசி தண்ணீர் தெளித்துக் காயங்களில் வேப்பிலைக் கொத்து, மஞ்சள் கொண்டு தடவியதாகவும் குறிப்பிட்டார். அதன் பின்தான் அனுபவித்து வந்த பசியின்மை, தூக்கமின்மை, விரக்தி, அச்சம், மனக் குழப்பம், மனச் சோர்வு முற்றாக அகன்றதாகவும் தெரிவித்தார். எவ்வாறாயினும் இது 'உளமருத்துவத்தின்' அல்லது 'ஆழ்மனக் குழப்பத்தின்' பிரதிபலிப்பே என்பது ஆய்வுக்குரியது.

ரெக்ஸ் என்னும் அறிஞர் நிகழ்த்திய ஆய்வில், வட-கிழக்கு இந்தியப் பழங்குடிகள், இமாலயப் பழங்குடிகளின் சடங்குகளை இவர் ஆய்வுக்குட்படுத்தினார். அஸாம் மற்றும் மத்திய இந்திய பிரதேசங்களில் தன்னை மறந்த நிலை கீழ்நோக்கி இரங்குதல் முதலிய நிலைகள், பிணியுற்றவர்களையும் விழிக்கச் செய்தல், தாமே பாதாளத்துக்குள் சென்று மீளுதல் முதலான புதிர்த் தன்மையான அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

வார்னர் என்னும் மானிடவியலாளர் அந்தமான் தீவுகளில் நடத்திய தன் ஆய்வின் அடிப்படையில் தெய்வமாடுவோரும் உளநல மருத்துவரும் ஓர் அளவுக்குச் சமய ஏமாற்றம் புரிதல் பொருட்டுத் தங்களின் வகிபாகங்களை ஏற்றுக்கொள்வதற்கான முதற்சாய்வான தீர்மானத்தை வகித்துக் கொள்கின்றனர். இதனையே பிணியாளர்களின் ஆழ்மனதில் பதியச் செய்கின்றனர் அல்லது நுட்பங்களைப் பிரயோகிக்க முற்படுகின்றனர். இதுவும் ஒரு வகையான சூழ்ச்சியே ஆயின், அந்தச்சூழ்ச்சியை நியாயப்படுத்தவும் முனைவர். எனவே வார்னர், இவர்கள் இருவரும் தமக்குப் புறம்பான மனிதரை மட்டுமன்றி தம்மைத் தாமே ஏமாற்ற விளைகின்றனர். ஆனால், அத்தகைய ஏமாற்றுகை சார் உந்தலானது முற்றிலும் 'வஞ்சகம்'. பித்தலாட்டத்தின் பால் சேராது, மாறாகத் தாம் சார்ந்த சமூக அங்கத்தவரின் நலம் சார்ந்ததே, ஒன்றில் அவர்கள் ஏமாற்றம் பிரக்ஞையுடன் தொழிற்படலாம் அன்றேல் அத்தகைய பிரக்ஞையின்றி வினையாற்றலாம் என்கிறார்.

மட்டக்களப்பிலும் நகைத்தொழில் செய்யும் வகுப்பைச் சார்ந்த ஒருவர் சிவன் ஆதிசேடனை மையப்படுத்தி ஆலயம் அமைத்து பில்லி, சூனியம், தீராத நோய்களைத் தீர்ப்பதற்காகவும் திடீரென்று தனது 'அதீத சக்தியை' அறிவித்துக் கொண்டார். இன்றைய மன நெருக்கீட்டு நிலையில் இத்தகையோரைச் சனத்திரளானது நாடி நிற்பதில் வியப்பேதுமில்லை.

கட்டுரையாளரின் நண்பர் பொறியியலாளராக இருந்தும் திடீர் மனச்சோர்வு, மாயத் தோற்றங்கள் சார்பான அச்சத்துக்குட்பட்ட நிலையில், குறிப்பிட்ட தடவைகள் அத்தலத்துக்குச் சென்று வந்தார். ஆனால் பலன் கிடைக்கவில்லை. பின்பு குடும்ப உறுப்பினர்கள், மனைவியின் உற்ற ஆலோசனையின் பேரில் மிகச்சிறந்த இரகசியம் பேணும் ஒத்துணர்வு மிக்க ஓர் உள மருத்துவ நிபுணரை நாடித் தொடர்ந்து சிகிச்சை பெற்று, இறுதியில் நலமடைந்தார்.

இது ஒரு புறநடையே ஆகும். இதற்காக அனைவரையும் ஏமாற்றுப் பேர்வழிகள் எனும் வட்டத்துக்குள் கொண்டு கூட்ட முடியாது என்பதும் அவதானத்துக்குரியது. இறுதியாக, மத்திய ஆசியாவிலும் சைபீரியாவிலும் நடத்திய ஆய்வு குறிப்பிடத்தக்கது. அதன்படி, தெய்வம் ஆடுவோருக்கு 'ஆவிகளிடமிருந்து' அல்லது அமானுஷ்ய சக்திகளிடமிருந்து அழைப்புக் கிடைக்கிறது. ஆவிகள், தெய்வம் ஆடுபவரின் மனத்தூய்மை, செயற்றூய்மை என்பவற்றைப் பூர்வாங்கிச் சோதனை முறைகளுக்கூடாக உறுதி செய்து கொண்ட பின் அவருக்கு உத்தரவு வழங்குகின்றன. அதன்பின் ஆவிகளின்துணையோடு அவர் மெய் மறந்த நிலையிலே மிக நீண்ட பயணத்தைத் தனது 'மனோ' சக்தியைப் பிரயோகித்து விண்ணுலக வலயங்களுக்கு அல்லது பாதாள உலகுக்குப் பயணிக்கிறார். அங்குள்ள பல்வேறு ஆவிகள் அல்லது சிறுதெய்வங்கள், அமானுஷ்ய சக்தி உருக்கள் மூலம் தகவல் பெற்று இவ்வுலக மாந்தருக்கான தீர்வை அளிக்கிறார் என்னும் முடிவை அவர் வெளியிட்டார். இங்கே ஆவிகள் பற்றிய விஞ்ஞான பூர்வ ஐயுறை நாம் எந்தளவு எடுத்துக்கொள்கிறோம் என்பது தனிநபர் நிலைப்பட்டது.

எனினும் பைசாசம், பேய், அணங்கு முதலான தகவல்கள் பண்டைய கிரேக்க இலக்கியங்களில் மட்டுமன்றிப் புராதன தமிழ் இலக்கியங்களிலும் இடம்பெற்றுள்ளன. புலவர் நக்கீ-ரரை பூதங்கள் அடைத்து வைத்த சம்பவம், பக்தி இலக்கியங்களில் தெரிவிக்கப்படும் சில சம்பவங்கள் பெரும் போர்களின் போது உண்பதற்குப் பேய்கள் கூடிய சம்பவங்களை இங்கே விஷேடமாகச் சுட்டலாம். இது மட்டுமன்றி இந்து மதத்தின் புனைவுகளில் எடுத்தியம்பப்படும் 'ஏழு உலகங்கள்', 'கைலயங்கிரி', 'வைகுண்ட புரி', 'பிரம்மலோகம்', 'நாகர்கள் உறையும் பாதாள புரி' பற்றிய ஐதீகங்களும் கட்டுடைத்துப் பார்க்கத்தக்கனவே.

கள ஆய்வின் போது பேட்டியளித்த ஆகவும் முதிர்ந்தவர் (கொம்மாதுறை), தனது இளம் பராயத்தில் தெய்வம் ஆடியவரின் கை மறுபுறம் திரும்பியதாகவும், அவர்கள் இமைக்கும் பொழுதில் அருகிலிருந்த நாவல் மரக்கிளையில் சென்று அமர்ந்து பல கட்டுரைகளை எவருடனோ உரையாடும் பாங்கிலே கேட்டு உரைத்ததாகவும், அவை அப்பிடியே நிகழ்ந்ததாகவும் தெரிவித்தார். எனினும் இதன் உண்மைத்தன்மை பற்றியும் நாம் கேள்வி எழுப்பலாம். இங்கு பிரச்சினை மையம் யாதெனில் முன்கூட்டிய முற்சாய்வுகளுடன் இச் சடங்கு பற்றிய ஆய்வினுள் இறங்கும் போது ஆய்வாளருக்குத் தீராத குழப்பம், மயக்கம் ஏற்பட இடமுண்டு. அத்துடன் உண்மையின் சார்பும் இடத்துக்கிடம் மாறுபட வல்லதே.

## முடிவுரை:

முடிவாகத் தொகுத்து நோக்குமிடத்து மட்டக்களப்பு சமயவெளியில் வாழும் மரபாகவும் பண்பாட்டு முறை மையமாகவும் பொதுமக்கள் வழிபாட்டின் தனித்துவ அங்கமாகவும் கூட்டுணர்வு, கூட்டான மனச்சான்று, சமூக ஒற்றுமை, குணப்படுத்தல், கிராமத்தவரின் சின்னஞ்சிறிய ஐயுறவுகள், அபிலாஷைகளுக்கு விடை பகிர்தல், உள, ஆன்மபலம் நல்குதல், தொழில் விருத்தி, கண்ணூறு கழித்தல், மகப்பேறு சார் நம்பிக்கை நல்குதல் மற்றும் மருத்துவ பணிகளையும் முன்னெடுப்பது நன்கு புலனாகிறது.

இது மட்டுமன்றி இதர நாடுகளின் பழங்குடி சமுதாயங்களில் முன்னெடுக்கப்பட்டு முடிவுகள் பரிசீலனைகள் முன்வைக்கப்பட்டு முன்னைய மானிடவியல் ஆய்வில் கண்டறிவதுடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

**அடிக் குறிப்புகள்:**

சடங்கு: தன்னிலையோடும் அல்லது தன்னிலை கடந்த தெய்வீக ஆற்றலாகும். மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்படும் செயற்



பாடாகும். எந்தவொரு சமயத்தின் தொடர்ச்சிக்கும் இது அவசியம். மனித உடலின் கட்டமைப்பு, சமூக நம்பிக்கை முறைமை, அதிகார உறவு நிலை என்பவற்றையும் இதனூடாகக் கண்டறிய வாய்ப்புண்டு.

தெய்வமாடுதல்: சிறிது நேரம் மனித உடலிலும் மன வெளியிலும் 'தெய்வம்' உருக் கொள்வதாக அதீத நம்பிக்கையின் தொடர்ச்சி, ஒப்பீட்டளவில் கிழக்கிலங்கையின் சமய வெளியில் தான் இதன் தொடர்ச்சியையும் இயக்காற்றல் உயிர்ப்புடன் கூடிய சமூகப் பங்கேற்பையும் அவதானிக்க முடிகிறது.

ஆரம்பத்தில் மட்டக்களப்பில் இது 'பேயாடுதல்' என்று அழைக்கப்பட்டது. பின்னர் 'தெய்வமாடுதல்' என்று மருவியிருந்திருக்கலாம்.

இந்த ஆய்வுக் கட்டுரை மேலைப்புலத்துக் கோட்பாடு நிலைக் கருத்தியல்களையும் பண்பாட்டிடை ஆய்வுகளையும் நிலைப்பட்ட ஆய்வோடு ஒப்பீட்டு நோக்கத்திற்காக ஒரு புத்தாக்க முயற்சி: மானிடவியல் தனமே அடிப்படை ஆய்வுக்கான முதல் நிலைத் தரவுகள். 2023 ஏப்ரல் தொடக்கம் 2024 ஜனவரி களத்திலே பெறப்பட்டன.



sasitharan.chandrasekaran@thaiveedu.com



# அறிவோம் தமிழர் பண்பாடு

## பொன்னையா விவேகானந்தனுடன்

### மலையகத்தில் ஓர் உரையாடல்

**- பதுளை மனோ**

கிளிநொச்சியை பிறப்பிடமாகக் கொண்டவரும், கடந்த கால்நூற்றாண்டு காலமாகக் கனடாவில் வாழ்ந்து வருபவரும் கனடாவின் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி விரிவுரையாளராகப் பணியாற்றிவருமான திரு. பொன்னையா விவேகானந்தன் அவர்கள் அண்மையில் தாயகத்துக்கு வந்திருந்தபோது, மலையகப் பகுதிகளுக்கும் வருகை தந்திருந்தார். அவ்வேளை, பெப்பிரவரி 29 ஆம் திகதி வியாழக்கிழமையன்று பதுளை மாவட்டத்தில் உள்ள பதுளை நிவ்பர்க் தமிழ் மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் மாணவர்களுடனான கலந்துரையாடலில் கலந்துகொண்டார்.

விவேகானந்தன் எழுதிய 'அறிவோம் தமிழர் பண்பாடு' எனும் நூலை அடிப்படையாகக் கொண்டும், மாணவரின் தன்முனைப்பை ஊக்குவிக்கும் முகமாகவும் கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

நிவ்பர்க் தமிழ் மகாவித்தியாலத்தின் அதிபர் சுப்ராயன் இராசமாணிக்கத்தின் தலைமையில் பூனாகலை தமிழ் மகாவித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் ஆர். மோகன் மற்றும் ஆசிரிய ஆலோசகர் ந. மனோகரன் உள்ளிட்டவர்களின் பங்கேற்புடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

கனடாவில் வாழும் தமிழர்களின் வாழ்வியல் அம்சத்தின் சாயலும் ஈழத்து பன்முக தன்மை கொண்ட தமிழ் மரபில் மலைநாட்டவரின் பண்பாட்டு அம்சம் உச்சம்பெறும் விதமும் எங்ஙனம் அமையப்பெற்றுள்ளது என்ற விமர்சனக் கண்ணோட்டத்துடன் பொன்னையா விவேகானந்தனின் உரை அமைந்ததுடன், தொல் தமிழர் கலாச்சாரம், பண்பாட்டு நடைமுறைகள், கல்விமுறைமையில் அதன் தாக்கம் எனப் பல தலைப்புக்களுடனான தொடர் கருத்தாடல்களும் கலந்துரையாடல்களும் இடம்பெற்றன.

அரசியல் அங்கிகாரத்தன்மையை புறக்கனித்து இருட்டடிக்கப்பட்ட இனமாக நடத்தப்படும் மலைநாட்டவரின் இருப்பு குறித்து சர்வதேசத்தின் ஏற்புத்தன்மை எத்தகையது? என சபையில் எழுந்த வினாவுக்கு 'ஈழத்தில் தமிழினங்கள் பண்பாட்டு அடிப்படையிலும், மதம்சார் பிரிப்புக்களுக்கும் உட்பட்டு அரசியல் சுய இலாபத்துக்காக பலவகையில் கூறுகளாக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து விடுபபட்டு, இனம் மானு





டம் சார்ந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல், இலக்கியம் மற்றும் சமூக தன்னார்வியல் சார் செயற்பாடுகளால் மட்டுமே சாத்தியமாகும்' என்று தெளிவானதொரு விளக்கத்தை விவேகானந்தன் முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது.

பலமான சமூக மாற்றத்துக்கான ஆயுதம் கல்வியே என்ற அடிநாதத்தின் தன்மையில் கனடா நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் பண்பாட்டு கடவுக்கும் அங்குள்ள கல்வி முறை எவ்வாறு துணை நிற்கின்றது எனவும் அதனை இலங்கையில் கட்டியெழுப்புவதில் எத்துணை முட்டுக்கடைகளை தகர்க்க வேண்டும் எனவும் கலந்துரையாடப்பட்டது.

உயர்தரம் கற்கும் மாணவர்களாலும் பன்முகம் வாய்ந்த பல காத்திரமான வினாக்கள் வினவப்பட்டதுடன் பயன்மிகு பல விடயங்களும் பேசப்பட்டன. நடைமுறைச் சான்றுகளை முன்னிறுத்தி, தெளிவூட்டும் விளக்கங்கள் மாணவருக்குக் கிடைத்தன.

இலக்கியவாதியும் பண்பாட்டு மீளாக்கம் தொடர்பில் ஆய்வுக்கட்டுரைகளை எழுதிவருபவரும் சமூக ஆர்வலருமான பொன். விவேகானந்தனின் பதுளை வருகை, மலையக மண்ணிற்கு பெருமை சேர்த்த நிகழ்வாகும். இவர் அங்கம் வகிக்கும் 'தாய்வீடு' இதழ், பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த 'மலையக மண்ணின் சிறுகதை சிற்பி' என்.எஸ்.எம். ராமையா நினைவாக மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் நடத்திய சிறகதைப் போட்டிக்கு அனுசரணை வழங்கியதுடன் தொடர்ச்சியாக 'தாய்வீடு' மலையகத்துக்கு ஆற்றிவரும் பங்களிப்பு குறித்தும் பகிரப்பட்டது.

இந்த நிகழ்வின் நினைவாக நிவ்பேர்க பாடசாலை நூலகத்துக்கு 'தாய்வீடு' மாதாந்த இதழ்களுடன் ஒரு தொகுதி நூல்களையும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் மல்லியப்புசந்தி திலகர் வழங்கி வைத்தார்.

mano@thaiveedu.com



# செல்... வா... சேர்

## ஓர் ஆசிரியருக்குக் கிடைத்திருக்கும் மகா அங்கீகாரம்!

- நா. கிருஷ்ணகுமார்

இலங்கை மலையகச் சமூகத் தளத்தில் 1948-ம் ஆண்டு குடியுரிமைப் பறிப்புத்தான் பிரதானமான ஒடுக்குமுறையாக இன்று வரை பேசப்பட்டாலும் அதற்கு முன்பதாக 1943-ம் ஆண்டுகளில் இலங்கையில் அறிமுகமான இலவசக் கல்வியும் மலையகத் தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்டமை அப்பட்டமான உரிமை மீறல் ஆகும். அனைத்து இலங்கை மக்களுக்குமான இலவசக் கல்வியைப் பெற்றுக்கொள்ள அந்தச் சமூகம் சுமார் நாற்பது ஆண்டுகள் போராட வேண்டியிருந்தது. ஆக, 1980-களின் பின்னரே மலையகத்தில் பெரும்பங்கினராக வாழும் பெருந்தோட்டப் பகுதிகளுக்கு இலங்கை அரசின் இலவசக் கல்வி கிடைக்கப்பெற்றது. அதற்கு முன்பதாக அவர்களுக்குக் கிடைத்ததெல்லாம் தோட்டப் பாடசாலை முறைமையும் தோட்ட ஆசிரியர்களும்தான். இத்தகைய தோட்டப் பாடசாலை ஆசிரியர்களாகவும் கூட இலங்கையின் வடபகுதித் தமிழர்களே பெருமளவில் ஈடுபடுத்தப்பட்டனர்.

எனினும் 1980-களில் இருந்தே சிறுகச் சிறுக ஆசிரியத் தொழில் நோக்கி மலையகத் தமிழர் உள்வாங்கப்படும் நிலைமை உருவானது. அவர்கள் பயிற்சி பெறுவதற்காக முன்னர் வடக்கில் பலாலி, கிழக்கே அட்டாளைச்சேனை, தெற்கே அளுத்கம என்றே பயணிக்க வேண்டியிருந்தது. அதனையடுத்து கொட்டகலை, யதன்சைட் தேயிலைத் தோட்டத் தொழிற்சாலையொன்றை ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையாக மாற்றியமைத்தமை முதலாவது அடைவானது. அதனை அடுத்து 1991-ம் ஆண்டு அதே கொட்டகலையை அண்மித்ததாகப் பத்தனை ஸ்ரீபாதக் கல்வியியல் கல்லூரி, மலையகத்துக்கான முதலாவது மலையகக் கல்லூரியாக அமையப்பெற்றது. அது 100 சதவீதம் சாத்தியமாகாதபோதும் 75 சதவீதம் மலையகத் தமிழ் மாணவர்களை உள்வாங்கும் கல்வியியற் கல்லூரி என்ற வகையில் மலையகத்தின் முதலாவது உயர் கல்வி நிறுவனம் என்ற அந்தஸ்த்தைத் தனதாக்கிக் கொண்டது. அடுத்து மலையகப் பல்கலைக்கழகம் என்ற ஒன்று அமையப்பெறும் வகையில் பத்தனையில் அமைந்துள்ள ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரிதான் மலையகத்துக்கெனக் கல்விப் பணி ஆற்றக்கூடிய உயர் கல்வி நிறுவனம் எனும் பெருமை பெறுகிறது.

தற்போது 25 ஆண்டுகளைக் கடந்து பயணிக்கும் இந்தக் கல்லூரி சுமார் 6000-க்கும் மேற்பட்ட மலையக ஆசிரியர்களை உருவாக்கியுள்ளது. இந்தச் சீரிய பணியின் பின்னணியில் கல்லூரி தொடங்கப்பட்ட நாள் முதல் 2016-ம் ஆண்டு தான் ஓய்வுபெறும்வரை அங்கே தமிழ்மொழி, வரலாற்றுப் பாட விரிவுரையாளராகக் கடமை புரிந்தவர் வ. செல்வராஜா அவர்கள். அந்தக் கல்லூரியின் வெள்ளி விழாவுடன், 2016-ல் விரிவுரையாளர் பணியிலிருந்து விடைபெற்றுக்கொண்ட இவர், கடந்த 2023 இறுதி நாளன்று இந்த உலகில் நின்றும் விடைபெற்றுக் கொண்டார்.

இவரது இந்த மறைவு அவரது சிலகால உடல்நலக் குறைவினால் உண்டானது. ஆனால் அவரது 67 ஆண்டுகால வாழ்க்கை பல்வேறு தளத்தில் தாக்கத்தை ஏற்படுத்திச் சென்றிருப்பதை, அவரது மறைவினை அடுத்து வெளியிடப்பட்டிருக்கும் ‘செல்...வா.. சேர்’ சிறப்பிதழின் உள்ளடக்கத்திலிருந்து புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது.


நோட்டன் வாசகர் வட்டத்தினரின் முயற்சியில் ஊடகவியலாளர் ஜீவா சதாசிவம் தொகுத்திருக்கும் இந்த 100 பக்கங்களைக்கொண்ட இதழைப் பாக்கியா பதிப்பகம் பதிப்பித்திருக்கிறது. ‘பதிப்புரையாகச் சில பதிவுகள்’ எனும் தலைப்பில் பாக்கியா பதிப்பகத்தின் முன்னுரையோடு தொடங்கும் இதழின் அடுத்த கட்டுரையாக ‘வரலாற்றை ஆவணமாக்கும் வாசகர் வட்டமும் வ. செல்வராஜா நினைவுகளும் எனும் கட்டுரையில் நோட்டன் வாசகர் வட்டம் தனது நோக்கத்தை எழுதியுள்ளது. எனது துணைவரின் பன்முக ஆளுமை எனும் தலைப்பில் செல்வராஜா அவர்களின் துணைவியார் திருமதி. சுகிர்தகலா செல்வராஜாவின் சுருக்கமான, ஆனால் உருக்கமான பதிவு இடம்பெற்றுள்ளது. ஸ்ரீபாதவில் செல்வாவின் சுவடுகள் எனும் தலைப்பில் கல்லூரியின் தற்போதைய உப பீடாதிபதி அ. மெதியூஸ் எழுதியுள்ள கட்டுரை வ. செல்வராஜாவின் விரிவுரையாளர் பணியின் சிறப்புகளைப் பேசுகிறது. இப்போதைக்குச் செல்... எப்போதும் வா... எங்களோடு சேர்... எனும் தொகுப்பாசிரியர் ஜீவா சதாசிவத்தின் குறிப்பு தொகுப்பின் நோக்கத்தையும் அதன் பின்புலங்களையும் விளக்குகிறது.

‘வ. செல்வராஜா: போராளியும் புத்திஜீவியும்’ எனும் தலைப்பில் லண்டனிலிருந்து மு. நித்தியானந்தன் எழுதியுள்ள கட்டுரை செல்வராஜாவின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவக் காலத்தையும் நித்தியானந்தனுடனான நினைவுப்படுத்தல்களையும் பதிவு செய்கிறது. அத்துடன் வ. செல்வராஜாவின் இலக்கிய விமர்சன உரைகளின் முக்கியத்துவத்தையும் அவரது அரசியல் பங்களிப்புகளையும் கூட அலசுகின்றது.

வரலாறு படைத்த வ. செல்வராஜா எனும் தலைப்பில் அவரது

வாழ்விடமான தலவாக்கலைத் தளத்திலிருந்து மு. சிவானந்தன் எழுதியுள்ள கட்டுரை வ. செல்வராஜாவின் பல்துறைப் பக்கங்களையும் பதிவு செய்கிறது. செல்வராஜாவின் மூத்த சகோதரர் வி.டி. தர்மலிங்கம், தலவாக்கலை பாடசாலை அதிபரும் மலையக மக்கள் முன்னணி எனும் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவருமாவார். எனவே, தலவாக்கலைத் தளத்தில் செல்வராஜாவின் பல்வேறு பரிமாணங்கள் இவரது கட்டரையில் மேலோட்டமாக எழுதப்பட்டுள்ளது.

மலையக இலக்கியத் தளத்தில் பல்துறை ஆளுமையாளர் வ. செல்வராஜா எனும் தலைப்பில் அவரது மாணவர் ஸ்டாலின் சிவஞானசோதி எழுதியுள்ள கட்டுரை இலக்கிய விமர்சனப் பக்கத்தை மாக்சியக் கண்ணோட்டத்தில் எவ்வாறு செல்வ-ராஜா கையாண்டார் என்பதை எடுத்துக்காட்ட முயல்கிறது. ஸ்ரீபாதக் கல்வியியல் கல்லூரியில் விரிவுரையாளராகச் சேர்வதற்கு முன்னதாகப் பாடசாலை ஆசிரியராகப் பணியாற்றிய




செல்வராஜா ஹட்டன் ஹைலன்ஸ் உயர்தர வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ் மற்றும் வரலாறு ஆகிய பாடங்களைக் கற்பித்தபோது ஸ்டாலின் சிவஞானசோதி அவரது முதன்மை மாணவர்களில் ஒருவராக இருந்துள்ளார். தற்போது பாடசாலை ஆசிரியராகப் பணியாற்றும் இவர் செல்வராஜாவை மிகமிக உயர்வான இடத்தில் வைத்து நேசிக்கிறார் என்பதை அவரது கட்டுரையில் எடுத்துக் காட்டியுள்ளார். அவரது வகுப்புத் தோழராக, வ. செல்வராஜாவின் முதன்மை மாணவராகத் திகழ்ந்த இரா. ஜெ. ட்ரொட்ஸ்கியின் 'மலைகளைப் பேசவிட்ட வெண்கட்டிப் புரட்சியாளன் எனும் கட்டுரையும் கூட இதனைப் பிரதிபலித்து நிற்கிறது. தற்போது கல்முனை மேல் நீதிமன்றத்தில் நிதிபதியாகப் பணியாற்றும் இவர் மறைந்த எழுத்தாளரும் விமர்சகருமான லெனின் மதிவானத்தின் இளைய சகோதரர் ஆவார்.

'மலைகளைப் பேசவிடுங்கள்' என்பது செல்வராஜா தயாரித்தளித்த மேடை நாடகம். இந்தத் தலைப்பையே எழுத்தாளர் மல்லியப்புசந்தி திலகர் தனது அரசியல் கட்டுரையின் தொகுப்புக்குத் தலைப்பாகத் தெரிவு செய்திருந்தார். அவர் செல்வராஜாவிடம் தனது இடைநிலைக் கல்வியைப் பூண்டுலோயா தமிழ் மகா வித்தியாலயத்தில் கற்ற அனுபவங்களுடன் அவரது பிறந்த ஊரான மடகொம்பரைத் தோட்டத்தில் செல்வராஜாவின் குடும்பப் பின்னணிகள் பற்றியும் இன்னோரன்ன அனுபவங்களுடன் கலந்த சரளமான நினைவுப் பதிவொன்றைச் செய்துள்ளார். அவரது 'எத்தனை சரியோ அத்தனை அடி' தனக்கேயுரிய கோட்பாடுகளைக் கொண்டிருந்த செல்வராஜா எனும் ஆக்கத்துடன் அவர் இணைத்துத் தந்திருக்கும் நிழற்படங்களின் சேகரிப்பும் தொகுப்பும் ஆதாரங்களுடன் அவரது விபரிப்பை நகர்த்திச் செல்வதாகவுள்ளது. அவரது சேகரிப்பிலிருந்தே தெரிவு செய்யப்பட்ட செல்வராஜாவின் நிழற்படம் ஒன்று முன்னட்டைப் படத்தை அலங்கரிக்கிறது. சுரேஷ் ராஜ் அட்டைப்படத்தை, மலைகளைப் பேசவிடுங்கள் எனும் பிரதிபலிப்புத் தருவதாகக் கவர்ச்சிகரமாக வடிவமைப்புச் செய்துள்ளார். அதே மலைகளைப் பேசவிடுங்கள் எனும் நாடகத் தலைப்பில் எழுத்தாளர் சிவனு மனோகரன் எழுதிய கவிதை ஒன்றும் அன்னாருக்கு அஞ்சலியாகப் பதிவு பெற்றுள்ளது.

எங்கள் செல்வம் எனும் தலைப்பில் செல்வராஜாவின் இளைய சகோதரர் வ. விஜயரட்ணம் எழுதியுள்ள கட்டுரை அவரது குடும்பப் பின்னணியை விளக்குவதாகவுள்ளது. 'பன்முக ஆளுமை மிக்க மலையக உயர்மட்ட புத்திஜீவி வ. செல்வராஜா' எனும் தலைப்பில் எம். வாமதேவன் எழுதியுள்ள கட்டுரை செல்வராஜா எவ்வாறு தனது ஆசிரியர்களைக் குறிப்பாகத் திருச்செந்தூரன் அவர்களை நேசித்தார் என்பதையும் அதே உணர்வைத் தனது மாணவர்களுக்குத் தனது கற்பித்தலூடாகக் கடத்தினார் என்பதையும் எடுத்துரைக்கிறது.

'நிலம், மலை, நிறைகோல் மலர் நிகர் மீனாட்சி: வ. செல்வ-ராஜா எனும் நல்லாசிரியர்' எனும் தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழகச் சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எம். ஜெயசீ-லன் எழுதியுள்ள கட்டுரை; நல்லாசிரியர் ஒருவரின் சிறந்த பண்புகள் செல்வராஜாவிடத்தில் எவ்வாறெல்லாம் நிலைபெற்றிருந்தது என்பதாக, வாமதேவனின் கட்டுரையின் நீட்சியாகவும் சாட்சியாகவும் அமையப்பெற்றுள்ளது. கூடவே 'செல்வா சேர்' எனும் தலைப்பில் அவரது ஆசிரிய மாணவரும் தற்போதைய கம்பளை வலயக் கல்விப் பணிப்பாளருமான ரா. உமேஷ்நாதன் எழுதிய கவிதை ஒன்றும் பிரசுரமாகியுள்ளது.

மலையகத்தின் இலக்கியச் சொல்வேந்தனும் நானும் எனும் தலைப்பில் அவரது இன்னொரு ஆசிரிய மாணவரான வெள்ளையன் கணேசலிங்கம் எழுதியுள்ள கட்டுரை மாணவர்களுடன் செல்வராஜா எந்தளவு நெருக்கமாகப் பணியாற்றியுள்ளார் என்பதைக் காட்டுகிறது.

'மலையகத்துத் தோழனின் மறைவு... எனக்குள் உணர்வாக' எனும் தலைப்பில், கனடாவிலிருந்து சிவா முருகுப்பிள்ளை எழுதியுள்ள கட்டுரை முழுக்க முழுக்க வரலாற்றுத்துறை மாணவராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் செல்வ

ராஜா வகித்த பாகத்தினைப் படம்பிடித்துக் காட்டுவதுடன், படங்களுடன் இந்தக் கட்டுரையும் ஒரு திரைப்படம் போல விரிகிறது. இந்தக் கட்டுரையைப் போலவே அவரது பாட சாலை மாணவப்பருவ கால நினைவுகளை மீட்கும் கட்டுரை யாக ஒரு நேர்கோட்டில் பயணித்தவர்கள்' எனும் தலைப்பில் இரா. சடகோபன் எழுதியுள்ள ஆக்கம் அமைகிறது. அவர் கொண்டுவரும் நினைவுகள் அழியாதவை என அவரது நண் பர்கள் இருவர் எழுதியதைப் போலவே கவிஞர் சேரன் எழு திய சிறுகுறிப்பும் பதிவாகிறது. கவிஞர் சேரனுக்குச் செல்வ ராஜா மலையகத்தை அறிமுகப்படுத்திய விதம், அவர்களது நட்புக் குறித்த உருக்கமான சிறு குறிப்பு அது. ஒரு தோழ னின் மறைவு என அவரது யாழ் நண்பர் மா. நாகராஜன் எழு திய முகநூல் குறிப்பும் இதழில் பதிவாகிறது. இந்த அழியாத நினைவுகளைப் போலவே அவரது ஆசிரிய மாணவர் நல்ல தம்பி ராஜ்குமார் எழுதிய 'அழியாத உன் நினைவுகள்' எனும் அஞ்சலிக் கவிதையும், மல்லிகை சி. செழியன் எழுதிய அம ரர் வ. செல்வராஜாவின் வானுரையும் மறைவு, திருமதி. யோக லக்ஸ்மி சிவஞானம் எழுதிய என் தமிழ் ஆசானுக்குச் சமர்ப்ப ணம், எஸ்.பி. சந்திரகலா எழுதிய 'மலையகம் போற்றும் மாம னிதராய்', திருமதி. சிவஞானஜோதி எழுதிய இனிய எம் ஆசானே, க. ஜெயஜீவனி எழுதிய காணிக்கை, செ. மயில்வா கனம் எழுதிய ராஜாவின் தமிழ் ஆகியன கவிதை எனும் கொதாவில் அவருக்கான புகழ் மாலைகளாகப் புனையப் பெற்றுள்ளன.

விஜயகாந்த் Sir-க்கு ஒரு மடல் என, அவரது பள்ளிக்கூட மாணவியும் தற்போது தலை நகரில் முன்னணிப் பாடசாலை ஒன்றின் ஆசிரியராகவும் கடமையாற்றும் புவனேஸ்வரி செல் வகுமார், மலையகச் சமூக அசைவியக்கத்தில் வ. செல்வ-ராஜாவின் வகிபங்கு என அ. லெட்சுமணன், மலையகக் கல் விப் புலத்திலும் சமூகப் புலத்திலும் அமரர் செல்வராஜா எனும் தலைப்பில் எம். அகிலன், தண்டனையிலும் தமிழே! எனும் தலைப்பில் வி. ஜெயசீலன், எங்கள் ஆசான் எனும் தலைப்பில் சு. தியாகராஜா, தமிழ் மொழி என்ற செல்வத்தின் ராஜா எனும் தலைப்பில் ச. வில்சன், எண்ணற்ற மாணவர்க ளின் நெஞ்சில் குடியிருக்கும் அன்பு ஆசான் - ரா. கமலதாஸ், வ.செ. என மின்மினி செ. ராஜ்குமார் போன்ற அவரது ஆசிரிய மாணவர்களின் கட்டுரைகள் அமையப் பெற்றுள்ளன.

மலையகத் தமிழ் நாட்டார் வழக்காற்றியலும் வ. செல்வராஜா வின் இயங்குதளமும் எனும் தலைப்பில் பேராதனைப் பல்க லைக்கழகச் சிரேஷ்ட்ட விரிவுரையாளர் கலாநிதி. பெ. சரவண குமார் எழுதியுள்ள கட்டுரை; மலையக நாட்டார் பாடல்களின் முக்கியத்துவத்தையும் அதனைப் போற்றிப் பாடும் செல்வ-ராஜா பற்றியும் பதிவு செய்யும் மிக முக்கியமான ஒரு கட்டுரை யாகும். அதேபோல செல்வராஜா அவர்களின் பார்வையில்: மலையக மக்கள் - மலையக புத்திஜீவிகள் எனும் தலைப் பில் கொத்மலை வலயக் கல்விப் பணிப்பாளர் சு. இங்கர்சால் எழுதியுள்ள கட்டுரை புத்திஜீவிகள் என்போர் யார்? அவர் கள் மலையகத்தில் ஆற்ற வேண்டிய பல்வேறு பணிகள் என்ன என்பதைச் செல்வராஜா எடுத்துக் கூறியுள்ள விதத்தை அழகாக விதந்துரைப்புச் செய்வதாகவுள்ளது.

ஒரு சமூக ஜீவியின் வகிபாகங்கள் எனும் தலைப்பில் சாகித் யரத்ன மு. சிவலிங்கம் எழுதியுள்ள கட்டுரை கல்வி, கலை, அரசியல், இலக்கியம், சமூகம் எனப் பல்வேறு தளத்தில் செல்வராஜாவின் வகிபங்கு எவ்வாறு இருந்தது என்பதை எடுத்துக்காட்டுவதாக அமையப் பெற்றுள்ளது. குறிப்பாக வட்டுக்கோட்டை மாநாட்டுக்கு நிகரான ஹட்டன் மாநாட்டுத் தீர்மானத்தை, மலையகமே எங்கள் தேசம் என முன்மொ ழிந்த செல்வராஜாவின் வகிபாகம் சிறப்பாகப் பதிவு செய்யப் பட்டுள்ளது. நான் பார்த்த செல்வராஜா Sir என மட்டக்களப்பி லிருந்து ச. மணிசேகரன் எழுதியுள்ள சிறுகுறிப்பு அரசியல் கட்சித் தளத்தில் அவர்களின் இணைந்த செயற்பாடுகளை எடுத்துச்சொல்ல வருகிறது.

நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யாருக் கும் அஞ்சாத ஞானச் செருக்கு: வ. செல்வராஜா எனும் தலைப்பில் நா. கிருஷ்ணகுமார் எழுதியுள்ள கட்டுரை பாட விதான உருவாக்கம், ஆசிரிய வழிகாட்டித் தயாரிப்பு, மாண வர்களுக்கான வாசிப்பு ஊக்குவிப்பு முறைகளில் செல்வ-ராஜா எவ்வாறு ஒரு சிறந்த வளவாளராகத் திகழ்ந்தார் என்ப தையும் எடுத்துக் கூறும் முக்கியமான கட்டுரையாகிறது. கூடவே செல்வராஜாவின் இலக்கிய விமர்சனங்களும் ஆய்வு களும் இணைந்ததாக வெளிவந்துள்ள ஒரே நூலான 'வ. செல் வராஜாவின் விமர்சனங்களும் ஆய்வுகளும்' எனும் நூலின் உள்ளடக்கத்தையும் அலசுகிறது. அந்த நூலில் மலையக அரசியலும் ஆசிரியர்களும் எனும் தலைப்பில் வ. செல்வ-ராஜா எழுதிய கட்டுரையும் மீள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

மலையகத்தில் இயங்கும் ஆசிரியத் தொழிற்சங்கங்களான மலையக ஆசிரியர் ஒன்றியம், இலங்கை ஆசிரிய சங்கம், மலையக ஆசிரியர் முன்னணி, ஆசிரிய விடுதலை முன்னணி, தேசிய ஜனநாயக ஆசிரிய சங்கம், இலங்கை கல்விச் சமூகச் சம்மேளனம் ஆகியவற்றின் நினைவுக் குறிப்புகளும் இதழில் சேர்க்கப்பட்டுள்ளது.

முதற் பதிப்பு வெளியீட்டு நிகழ்வுகள் சாகித்யரத்ன மு. சிவ லிங்கம் தலைமையில், தலவாக்கலை தமிழ் மகா வித்தியா லய அதிபர் கிருஷ்ணசாமி முன்னிலையில் இடம்பெற்றன. பல்வகை ஆக்கங்களுடன் நினைவுகளைப் பதிவு செய்யும் பல நிழற்படங்கள் சேர்க்கப்பட்டுள்ளமை இந்த இதழுக்கு வலிமை சேர்த்துள்ளது எனலாம்.

இறுதியாகத் தமிழ்முரசு கலை இலக்கிய வார இதழில் அதன் பொறுப்பாசியரும் 'செல்..வா..சேர்' எனும் இதழின் தொகுப்பா சிரியருமான ஜீவா சதாசிவம் தமிழ்முரசு இதழில் செல்வராஜா வின் மறைவினை அடுத்து எழுதிய, 'ஈடு செய்ய வேண்டிய இழப்பு' எனும் ஆசிரியத் தலையங்கம் அப்படியே சேர்க்கப் பட்டுள்ளது. அவர் எழுதியுள்ள தலையங்கம் போலவே மலை யகக் கல்வி, கலை, இலக்கிய, அரசியல், தொழிங்சங்க, ஆசிரிய, ஆய்வு விமர்சனப் பக்கங்களைத் தன்னகத்தே கொண்ட ஆளுமைகளைக் கொண்டு மலையகம் தன்னை ஈடு செய்துகொள்ள வேண்டியுள்ளது என்பதை வ. செல்வரா ஜாவின் இழப்பு மலையகத்துக்கு எடுத்துச் சொல்லும் இத ழாக 'செல்..வா...சேர்' அமைகிறது. அதன் அர்த்தமாக இப் போதைக்குச் செல்... எப்போதும் வா... எங்களோடு சேர்... என விடுக்கும் அழைப்பாகவும் அமைகிறது
இந்த இதழ்.



krishnakumar.n@thaiveedu.com

## கவிதைக்கான காலாண்டிதழாக வெளிவந்த

# வடம்

## மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி

### மல்லியப்புசந்தி திலகர்

1960-களில் மலையகக் கவிதைகளின் கவிஞர் ஈழகுமார் தொகுத்தளித்த ‘குறிஞ்சிப்பூ’, 1980-களில் வெளிவந்த ‘குன்றத்துக் குமுறல்கள்’, 1990-களில் அந்தனி ஜீவா தொகுத்தளித்த ‘குறிஞ்சிக் குயில்கள்’, 2000-களில் தினகரன் தொகுத்தளித்த ‘இசை பிழியப்பட்ட வீணை’ முதலான மலையகக் கவிதைகளின் கதம்பத் தொகுதிகளிலிருந்து மாறுபட்டதாக வெளிவந்த கவிதை இதழ் ‘வடம்.’

கவிதைக்கான காலாண்டிதழ் என்ற அடிக்குறிப்புடன் காவத்தை குயில்தோப்புக் கலை இலக்கிய ஒன்றியத்தினால் வெளியிடப்பட்ட மலையகக் கவிதைகளுக்கான இதழ் வடம். பா. மகேந்திரன், இரா. நெல்சன், வே. தினகரன் ஆகியோரை ஆசிரியர் குழுவினராகக் கொண்டு 2005-ம் ஆண்டு வெளிவந்த முதல் இதழின் ஆலோசகராக ஜெ. சற்குருநாதன், ம. திலகராஜ் (மல்லியப்புசந்தி திலகர்) ஆகியோர் செயற்பட்டுள்ளனர். அட்டைப் படத்தினை அர்ஜூன் ரோய் வரைந்துள்ளார்.

எம்.ஏ. நுஃமான், சி. சிவசேகரம் ஆகிய மூத்த கவிஞர்களின் கவிதைகளுடன் மூதூர் கலைமேகம், குயிலன், மிஸ்வாக், கெ. ஸ்டாலின், யூ.எல். மப்ருக், பா. இந்திரன், ஜி. சர்மிளா, து. பிரபாகர், மயன், ஆர்த்தி, லறீனா ஏ ஹக், சிவலிங்கம் சிவகுமார், ஆர். பிரேமா, யதார்த்தன், மலைவாசி, ஏ. உம்மல் கைர், முல்லை அமுதன், கனிமொழி, சி. சார்ள்ஸ், பி. சுதர்ஷினி, ஏ. புனிதகலா, வீ. கணேஸ், ஆ. சிற்றம்பலம் ஆகியோரின் கவிதைகளுடன் எழுத்தாளர் சாரல் நாடனின் நேர்காணல் ஒன்றும் பதிவு பெற்றுள்ளது. மலையகத் தளத்திலிருந்து (இரத்தினபுரி மாவட்டம்) வெளிவந்த கவிதைகளுக்கான இதழாக இருந்த போதும், முழு நாடு தழுவியதாகச் சமகாலத்தில் கவிதை எழுதிக் கொண்டிருந்த பல கவிஞர்களினதும் கவிதைகளோடு வடம் முதலாவது இதழ் வெளிவந்துள்ளமை சிறப்பு.

எந்த நாட்டு வரலாற்று ஆவணப்படுத்தலிலும் இலக்கிய இதழ்கள் காத்திரமான பங்களிப்பினை வழங்கியிருக்கின்றன. ஈழத்து இலக்கிய வரலாறும் இதற்குள் அடங்கும். மலையக மக்களின் வரலாற்றுப் பதிவுகளுக்கு ஒவ்வொரு காலகட்டத்திலும் தோன்றிய இலக்கியமும் இலக்கிய இதழ்களும் இலக்கிய நூல்களின் மணமும் துண்டுதல்களாக நின்றிருக்கின்றன. 60-களில் பிரயோகித்த மலையக இலக்கியங்கள் இதற்குச் சான்று. எழுத்திலக்கியப் பிறப்பிற்குப் புதிய இரத்தம் பாய்ச்சிய எழுத்துகளின் நீட்சி எண்பதுகளின் பின் பலவீனமடைந்ததை ஈழத் தமிழிலக்கியத் தளம் நன்கறியும். குறித்த காலகட்டத்திற்குப் பின் கணிசமான படைப்பாளிகள் தோன்றியிருப்பி




னும் அவர்களது அடையாளப்படுத்தலுக்கும் வலிமையூட்டலுக்கும் உரிய களங்களில்லை என்பது இறுக்கமான உண்மை. இந்த இருமை நிலையிலிருந்து ஓரளவேனும் நீட்டித்தரும் நோக்கிலேயே குயில் தோப்பு வடத்தினை வெளிக்

கொண்டு வருகிறது. இதனூடாகக் கவிதைத் துறையில் ஆர் வமுள்ள பயிற்சிக் களமற்ற படைப்பாளிகள் நிறைந்துள்ள காலகட்டத்தைத் தன் எளிமையின் வரம்பு வரை பயன்படுத்த முன்வந்துள்ள வடம் 2005 தை-மாசி இதழில் 'மீட்சிக்கான பிர யத்தனங்கள்' எனும் தலைப்பில் ஆசிரியர் குழுவில் அங்கம் வகிக்கும் பா. மகேந்திரன் எழுதியுள்ள கவிதை இவ்வாறு அமைகிறது.

*'நீள் தொலைவிலிருப்பவளே!*
*மிகத் தாமதமாய்*
*இம்மடல் வரைகிறேன்*
*பசுமை விரிந்தடர்ந்திட்ட*
*நம் காதலை எழுதுகையில்*
*என்னிதயம் கனத்து வலிக்கிறது*

*திரும்பும் திசையெங்கும்*
*நாறியவாறு...*
*அடக்கு முறையின் சீழ்மைகள்*
*நிறைமாதக் கருவேந்தி*
*நிரைபிடிக்க மலையேறும் தாய்மைகள்*
*விசுவாசமிகையுற*
*உழைத்த கருந்தோள்கள்*
*இச்சூரிய பொழுதில் இரையாகுமவலம்*
*காய்ப்பேறிய கரங்களில்*
*உழைப்புச் சுரண்டுகை*
*கட்சிக் கொடியாகி*
*பறக்கிறதெங்கும்*

*என்னூரெங்கும் மாட்சி மிகையுறு*
*மதுக் கோவில்கள்*
*அறிவு செழித்தவனும் கியூவில் நிற்கிறான்*
*பனிக்கத்தோடு மந்திரி எச்சிலுக்காய்*
*இந் நரகத் துயர் கண்டு*
*இச்சந்தேகம் சிலிர்த்து*
*பற்களிருகி சப்தமிட*
*இக்குரூர பசுமை அழிக்க*
*இன்றென் பேனை குருதி வடிக்கும்*
*நாளையோ...*
*இந்த ரத்தமுமாத்மமும்*
*வடிந்து மடியலாம்*

*அன்படர்ந்தவளே..!*
*நம் தேசத்தைப்போல்*
*மெய்மையுறு என் மனிதம்*
*இவ்வலி சுமந்து கரைகிறது*
*மீளுகைக்கான பிரயத்தனங்களோடு'*

பா. மகேந்திரன் கூறும் இத்தகைய பிரயத்தனங்களோடு வடம் 2, '2005-சித்திரை-ஆனி' இதழாக வெளிவந்துள்ளது. அனுர-வின் அட்டைப் படத்துடன் ச.அ. ஷெல்டனின் வடிவமைப்பு டன் மெருகுபெற்ற இதழ் இம்முறை எம்.ஏ. நுஃமான், சி. சிவ-சேகரம் ஆகியோருடன் சி.வி. வேலுப்பிள்ளை, இ. முருகை யன் எனும் மூத்த கவிஞர்களின் கவிதைகளுடன் ஆ. புனித-கலா, இரத்னஜோதி, மு. காசிம், யுகாந்தினி, குயிலன், யதார்த்தன், எஸ்.பி. பாலமுருகன், பஹீமா ஜஹான், முதிய-வன், சிவனு மனோகரன், அருணா, சடாயு, அ. சிற்றம்பலம், கிருபா,இந்திரன், சூர்ப்பனகை,சண்முக சுப்பையா,எம். அமு-தவேணி, வே. கணேஷ்', பாத்திமா பஸ்னியா, ஆதிபகவன், ஆர்த்தி, வேதி ஆகியோரின் கவிதைகளுடன் எஸ்த்தர் லோகநாதனின் 'புதுக்கவிதை எப்படி இருக்க வேண்டும்' (விமர்சன நோக்கு) எனும் கட்டுரையும் இடம்பெற்றுள்ளது.

மலையகத்திற்கோர் மனு - எனும் தலைப்பில் பி. கிருபா (காவத்தை) எழுதியிருக்கும் கவிதை இவ்வாறு அமைகிறது.

### மலையகத்திற்கு ஒரு மனு!

*'இளைஞனே!*
*எங்கே போகிறாய்*
*சற்றே திரும்பி பார்*
*சரியான பாதை*
*உன் எதிரில்*
*நாறும் சாக்கடைகள்*
*நாகரிக மை பூசி*
*பகட்டாய் அழைத்து*
*படுகுழியில் தள்ளிவிடும்*
*மாயை மெய்யென*
*மயங்கியதால் அன்று*
*மைதிலி சிறையானாள்*
*சினிமாவும் சின்னத்திரையும்*
*உனக்கினின்று சிறையாய்...*
*நாளைய தேசத்தின்*
*நம்பிக்கைச் சூரியன் நீ*
*பகட்டில் மயங்கி*
*பருவத்தை தொலைக்காதே!*
*சங்கத் தலைமைகளின்*
*சவாரிக்குக் குனிந்திருக்கையில்தான்*
*குடியுரிமை பறிபோனதன்று*
*இன்றோ...*
*கருக்கலைப்பிலோர்*
*இனவழிப்பு.*
*தமிழன் மட்டுமா?*
*தமிழுந்தான்.*
*உதிரத்தை உறிஞ்சிய தேயிலை*
*கொதி நீரில் குளித்து*
*குருதி வடிக்கிறது*
*மிஞ்சும் ரத்தம்*
*அட்டைக்கும் அரசியல்வாதிக்கும்*
*வறுமை தெளிந்த சோகையில்*
*வெளிறிய மேனிகள் வன்கூடுகளாய்*
*மலைவளம் வந்தபடி*
*எங்கே தேடுகிறாய்*
*தொலைந்த இடம்*
*தொலைவில் இல்லை*
*விரைந்து வா விடுதலைக்காக...'*

இந்த இரண்டு இதழ்களுக்குப் பின்னர் சிற்றிதழ்களுக்கே யுரிய தடை தாமதங்களைக் கடந்து 2007-ம் ஆண்டு ஜுலை- செப்ரெம்பர் இதழாக வடம் வெளிவந்தது. காலம் தாழ்த்தி வந்ததற்கான காரணத்தை இவ்வாறு பதிவு

செய்கிறது ஆசிரியர் குழு.

இந்த இதழில் மூத்த கவிஞர்கள் வரிசையில் கவிஞர் எலியாசன் எழுதி அப்போது வெளிவந்த ‘எலியாசன் கவிதைகள்’ குறித்து அறிமுகம் இடம்பெற்றிருக்கிறது. அத்தோடு வேதி, மார்க்ஸ் பிரபாகர், க. கணேசமூர்த்தி, வே. தினகரன், காவத்தை மோகன், ஆ. புனித கலா, வெதமுல்லையூர் பிரபா, டி. அப்துல் காதி, சூர்ப்பனகை, ஆதிபகவன், இரா.-தவேந்திரன், திருவாரூர் ஜெகன், வீமன் ராஜ், நா. கிருஷ்ண-சாமி, எஸ். யோகராஜன், சி. செழியன், மு. கீர்த்தியன், நிலாமகள், சடாயு ஆகியோரின் கவிதைகள் இடம்பெற்றிருப்பதுடன் ‘மலையகப் பாடசாலைகள் வெறும் தொழிற்களங்களா?’ எனும் தலைப்பில் கவிதை இதழொன்றுக்கு நேரடியாகத் தொடர்பில்லாத ஆனால் மலையகத் தளத்தில் பேசவேண்டிய ஒரு விடயத்தினை ஆசிரியத் தலையங்கமாகத் தரவிளைந்துள்ளது.

‘வடம்’ காலம் தாழ்த்தி வெளியிடுகின்றமைக்காகத் தனது மன வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. படைப்பாளிகளும் பொருளாதாரமும் எம்மோடு இணைந்து வர அடம்பிடிக்கின்றன(ர்). அன்பான இலக்கிய நெஞ்சங்களே எங்களோடு ஒத்துழைப்பது நீங்கள் செய்யும் நற்பணி அல்லவா? என ஆசிரியர் குழு தமது மனக் குமுறலை வெளிப்படுத்தியுள்ளதுடன் தொடர்ச்சியாகவும் ‘வடம்’ தனது கவிதைத் தேரை இழுக்க முடியாமலே நின்று போனது. ஆனாலும் வடம் இழுக்கப்பட்ட அந்த இரண்டாண்டு காலத்தில் அக்காலகட்டத்தில் முகிழ்ந்த கவிஞர்களுக்குக் காத்திரமான வாய்ப்புகளை வழங்கியது என்பதை மறுக்க முடியாது. இன்று மலையகக் கலை இலக்கியத் தளத்திலிருந்து தேசிய விருதுகள் பெற்றுக் கொண்டுள்ள கந்தையா கணேசமூர்த்தி, எஸ்.பி. பாலமுருகன், சிவனு மனோகரன் போன்றவர்கள் ‘வடம்’ பிடித்தே வந்துள்ளார்கள் என்பதை இந்த இதழ்களில் அவர்கள் எழுதியுள்ள கவிதைகள் சான்று பகர்கின்றன.




2014-ம் ஆண்டுக்கான தேசிய சாகித்திய விழாவில் தனது ‘தழலாடி வீதி’ எனும் கவிதைத் தொகுப்புக்காக முதல் பரிசினைப் பெற்றுக்கொண்ட வெதமுல்லையூர் கந்தையா கணேசமூர்த்தி ‘வேதம் பிறந்த கதை’ எனும் தலைப்பில் 2007-ம் ஆண்டு வடம் இதழில் எழுதிய கவிதை இவ்வாறு அமைகிறது.

***‘ஒரு விரதம் முடிந்து***
***எழுகிறேன்***
***இருட்டை விளிக்கின்ற - என்***
***குருட்டு விழிகளை பொசுக்கி***
***ஓர் இருட்டு மண்ணைப் பார்க்கிறேன்!***

***தக்கனை அழித்த***
***சிவனை அழிக்க - ஒரு***
***தக்கனை ஏவி நிற்கிறேன்***
***உன்னை ஊன்றி***
***என்னைச் சாய்த்த - உன்***
***மண்ணைப் பிளந்து சிரிக்கிறேன்!***

***ஒரு வாய் சோறு***
***தின்றிருக்கவில்லை நான்***
***ஒருவன் பக்க வாதமும்***
***மீதமுள்ளவன் பக்க மீதமும்***
***என் பசியை நிரப்பி எரித்தன!***

***சோறிடு என்றவனுக்கு***
***நீரிடு என்கிறாய் நீ***
***இரண்டுமே கிடைக்கின்றதென***
***உச்சி குளிர்ந்த***
***மகிழ்ச்சியின் உச்சத்தில்***
***நான் நிற்கையில் - நீ***
***நீரை நிறுத்து அல்லது***
***நான் சோறை நிறுத்துகிறேன்***
***என்றாய் நீ!***

***நீர் சோறு***
***சோறு நீர் தூ!***
***உன் நீரும் சோறும் எரியட்டும்***
***என் பசி விரதங்கள் பசியை உண்பதில்லை***
***வெளிச்சத்தை உண்டு உண்டு***
***இரட்டைக் கக்குகின்ற - உன்***
***தீமையின் நாக்குகளை அறுத்தெறிந்தேன்***
***நேற்று நான்***
***அடடா ..!***
***உன்னையும் என்னையும்***
***துளைத்தெங்ஙனும்***
***காற்றில் எதிரொலிக்கும்***
***ஓர் ஊமையின் தேசிய கீதம்***
***கேட்கிறேன் இன்றோடு நான்***
***ஒரு விரதம் முடித்து***
***எழுகிறேன்’***


(தொடரும்...)



thilagar@thaiveedu.com




'நீர்வழிப்படூஉம்'-இல் தேவிபாரதி புதினத்தை ஓட்டிச்செல்லும் உத்தியிலும், வாசகரை ஈர்த்துக் கட்டிவைத்திருக்கும்




சாதுரியப் பொறிமுறையிலும் வெற்றியடைகின்றார். படைப்பில் கொங்குப் பிரதேசத்திற்கேயுரிய பொடகாணி, இட்டேறி, ஒப்புட்டு, ஒரம்பறை என்று ஏழெட்டு வரையிலான சொற்கள் உள்ளனவாயினும் வாசிப்போட்டத்தில் அவை என்னவாக இருக்குமென்று ஊகித்துவிடமுடிகிறது. அல்லாவிடினும், பிரதியின் வாசிப்போட்டத்தில் தடையுண்டாக்கவில்லை.

கைவிடப்பட்ட பழைய வீடொன்றில் ஒரு பாத்திரத்தின் இறப்போடும் அதையடுத்து அங்கே செய்யவேண்டிய சடங்குகளுக்கான ஏற்பாடுகளின் சித்தரிப்போடும் புதினம் ஆரம்பிக்கிறது. ஆசிரியர் தன் சிந்தனையை முன்னிகழ்வு (Flashback) களைக் கால ஆவர்த்தனத்தோடு பதிவதன் மூலம் புதினத்தை விரிக்கின்றார். இறந்துபோகும் அப்பாத்திரமான காரு மாமாவையும் அவர் கணவி இராசம்மாவுடனும் பல்லூர்களிலும் வாழும் அவர்களின் உறவுகளுடனான ஊடாட்டங்களும் சடங்குகளான சுற்றி நிகழ்ந்த நிகழ்வுகளுமே இதில் முதன்மையான சித்தரிப்பு. அச்சித்தரிப்பில் கொங்கு நிலப்பரப்பின் நாவிதர்கள் எனப்படும் ஒரு சமுதாயத்தினதும் அவர்கள் வாழ்ந்துதீர்த்த வாழ்வும் சொல்லப்படுகிறது.

ஆசிரியர் காட்டும் ஒரு 50 ஆண்டுகளுக்கு முன்னதான கொங்குநாட்டுச் சமூகத்தில் ஆண்டான்கள், பண்ணையக்காரர்கள், அடிமைகள், குடிமைகள் அனைவருமுண்டு. ஆனாலும் எவருக்கும் எதையும் மாற்றியமைத்துவிடச் சிந்திப்பதோ எதிர்க்கிளர்ச்சி செய்வதோ இல்லை. ஒரு தேர்தல் காலத்தில் கம்யூனிஸ்ட்டுகள் வந்து கூட்டம் போடுகிறார்கள், அவ்வேளை ஊருக்குள் இருவருக்கிடையே நிகழும் மோசமான கைகலப்பைக் கலைத்து விடுகிறார்கள், அவர்களது செயற்பாடு அவ்வளவுதான்.

தேவிபாரதி அரவக்குறிச்சி, ஆம்பரந்துறை, அவல்பூந்துறை, சுந்தராடி வலசு, நாயக்கன் வலசு, முத்தையன் வலசு, நாச்சி வலசு, நாச்சிப் பாளையம், கருங்கல் பாளையம், கள்ளி மந்தை, உடையாம் பாளையம், வெள்ளக்கோவில், அரச்சலூர், லோகநாதபுரம், கஸ்பாப்பேட்டையென்று நாம் தெரிந்திராத பல ஊர்களைத் தன் வேகமான எழுத்து முறையினால் புதினத்தின் ஆரம்ப அத்தியாயங்களிலேயே நிறைத்துச் செல்கிறார். அங்கே ஈரோடு, திருச்சி, திருமங்கலம், தாராபுரம் ஆகிய பரிச்சயமான ஊர்களைத் தவிர பிற ஊர்களை நமக்கு மனதில் வைத்துக்கொள்வதும் சற்றே சிரமந்தான். நல்வினையாக அவ்வூர்கள் அனைத்திலும் தவறாது ஒவ்வொரு அத்தைமாரோ, பெரியம்மாக்களோ, பெரியப்பாக்களோ, அண்ணாக்களோ உறவுகள் இருப்பதால் தப்பித்தோம். எனினும் ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு பெரியம்மாக்கள் இருந்ததால்

வாசிக்கையில் எவ இவவென்று அவர்களை ஞாபகம் வைப்ப தில் கொஞ்சம் சிரமமிருந்தது நிஜம்.

நாவிதர்கள் எனப்படும் இக்குழுமத்தின் உறவுகள் கிளைக ளாகப் பிரிந்து பரவி எல்லாவூர்களிலும் வாழ்கின்றார்கள். கதைசொல்லியின் மாமரான காரு மாமா எனும் நல்ல மனிதர தும் அவர் கணவி இராசம்மாவினதும் அந்திமகாலம் வரையி லான எளிய வாழ்க்கையும், அவர்களைச் சுற்றி நடைபெறும் சடங்குகள், சம்பிரதாயங்கள், உறவுகளுக்கு இடையேயான ஊடாட்டங்கள், குதூகலங்கள், அவ்வப்போது இடம்பெறும் சண்டைகள், கொண்டாட்டங்களை வாசகர் சலிப்பின்றித் தொடரும்படியாகத் தேவிபாரதியின் தூரிகை புதினத்தின் அனைத்துப் பக்கங்களிலும் விளையாடிச் செல்கிறது. ஊரில் கூட்டமாகவிருந்த சிறு சமூகமாக வாழ்ந்த இக்குடியினர் வேலைவாய்ப்பு, திருமணம் போன்ற காரணங்களினால் தாம் வாழ்ந்த வீடுகளை ஒவ்வொருவராக அப்படியே விட்டுவிட்டுப் புலம்பெயர்ந்து போகவும் அக் குறிச்சியே மனிதர்கள் வாழாத ஒரு பாழ்வெளியாக அமைந்துவிடுவதும் பெருஞ்சோகம்.

கவுண்டர்களினதும், பண்ணையக்காரர்களினதும், கிடாய் வெட்டு நிகழ்ச்சிகளில் நாவிதர்களுக்குக் கிடாய்களை அறுத் தல், உரித்தலென விசேட குடிமைச் சேவகங்கள் இருப்பதை யும் அவர்களுக்குக் கூலியாக வெட்டப்படும் கிடாய்களின் தலைகளும், குடல்களும், கால்களுமே கொடுக்கப்படுகின் றன. ஆனாலும் அதையிட்டுச் சலிக்காமல் ஒரு கொண்டாட்ட மனோநிலையில் இராஜகாரியங்கள் போலச் செய்துமுடிப்பதி லும் அச்சமூகத்தவரின் அப்பாவித்தனங்கள் சித்தரிக்கப்படு கின்றன. மேட்டுக்குடியினருக்குக் கௌரவம் செய்வதிலி ருந்து, இழவு வீடுகளிலிருந்து திருமணம் போன்ற சுபகாரியங் களிலும், சாதகங்களைப் பொருத்தம் பார்க்க ஜோதிடர் வீடு களுக்கு எடுத்துச் செல்வதிலிருந்து, விருந்துகளுக்கு வேண் டிய தானியங்களைக் குற்றிப் புடைத்துத் தயார் பண்ணுதல், அணுக்கத்தில் தூரத்திலுள்ள உறவினர்களுக்கு வெற்றிலை வைத்துப் பண்ணையக்காரர் சார்பில் அழைத்தல் முதலான வற்றையும் அவர்களே பார்க்கவேண்டியுள்ளது.

கதை சொல்லிக்கு அந்தப் பிராந்தியம் பூராவும் உறவுகள் பரந்து வாழ்ந்திருந்தாலும் அவரை உரிமையோடு ‘மாமா’ என்று அழைக்கும் மைத்துனிகள் ஈஸ்வரி, சாவித்திரி என்கிற இருவர் மட்டுமே இருப்பதும் அதிசயம்.

கதை சொல்லியின் அம்மா தன் மைத்துனி இராசம்மா மாமிக்கு சிவாஜி - சாவித்திரிக்கிடையேயான அண்ணன் - தங்கை பாச உறவைப் புரியவைப்பதற்காக அப்பாசமலர் காவியத்தைக் காட்டத் தவியாய்த் தவிக்கிறார். அம்முயற்சி யில் அரச்சலூரில் அச் சித்திரம் ஓடுவதாக ஒருநாள் அறிந்த தும், யாருக்கும் சொல்லாமல் அவளைக் கூட்டிப்போய் இர வுக் காட்சியைப் பார்த்துவிட்டு ஊர் திரும்பப் பேருந்து இல் லாததால் ஓர் உறவினர் வீட்டில் இரவைக் கழித்துவிட்டு வந்த வர். மேற்படி தப்புக்காகக் கணவரிடம் அடியெல்லாம் வாங்கு கிறார். ஆனால் பின்னர் கடைசி அத்தியாயமொன்றில் காரு மாமா திருமணமான புதிதில் இராசம்மாவைக் கூட்டிப்போய் பாசமலர் படத்தைப் பார்த்தாரென்றும் சொல்லப்படுகிறது.

நாவலின் தலைப்பு எளிய வாசகரை விரட்டும் வகையிலுள் ளது, அதையும் இன்னும் எளிமையாக ரஞ்சகமாக வைத்தி ருக்கலாம்.

புதினத்தின் நிறைவில் தேவிபாரதி குடும்ப உறவுகளிடையே ஒரு தாயவிளையாட்டுக் கச்சேரியை வைத்ததுவும், அப்படி மத்தின் மூலம் அவர் சாவித்திரியைக் கட்டுறாரோ, ஈஸ்வரி யைக் கட்டுறாரோ என்று ஒரு சஸ்பென்ஸுடன் முடித்திருந்த துவும் ரசிக்கக்கூடியது.

பிரதியில் வெகுசில தட்டல் வழுக்கள் இருந்தாலும், பாரிய வழுக்கள் இல்லாதது அதன் சிறப்புக்களில் ஒன்று.

ஒரு குடும்பத்திடையே என்னதான் முரண்கள், அதகளங்கள், துரோகங்கள் இருந்தாலும் விட்டுக்கொடுத்தல், மன்னித்தல், தாளாண்மை இருப்பின் அன்பென்னும் காலப்பெரு நீரோட் டத்தில் அனைத்தும் மெல்லமெல்லக் கரைந்து சென்றுவிடும் என்பதை வாசகருக்கு உணர்த்தியிருக்கிறார் தேவிபாரதி.

சிறப்பான பொறிமுறையுடனான கட்டுமானமும், மொழியழ கும், கலைப் பெறுமதியும், தனித்துவமுமுள்ள புதினம் ‘நீர்வ ழிப்படூஉம்’.



karunaharamoorthy.p@thaiveedu.com


சிந்தனைக் களம்
(இசை, நடனம்)

இணையவெளி உரை நிகழ்வும் கலந்துரையாடலும்.

Zoom ID: 862 0723 2600 Passcode: 937 456

20 ஏப்ரல் 2024 (சனிக்கிழமை) 9:00pm-11:30pm (கனடா-ரொறன்ரோ)

(இலங்கை, இந்தியா - 21 ஏப்ரல் 2024 ஞாயிற்றுக்கிழமை 6:30am-9:00am
(சிட்னி,மெல்பன் - 21 ஏப்ரல் 2024 ஞாயிற்றுக்கிழமை 11:00pm-1:30pm)

சிறப்பு நிகழ்ச்சி

உரைப் பொருள்
‘நடனங்களில் மரபுகளின் வழி புத்தாக்கங்கள்’

உரையாளர்
பேராசிரியர் சே.இரகுராமன்



Website: www.chinthanakkalam.org E-mail: chinthanakkalam@gmail.com

# ஈழத்தில் முற்போக்கு இலக்கியமும் வ.அ. இராசரத்தினம் கதைகளும்

– ஜிஃப்ரி ஹாசன்

தமிழ் இலக்கிய உலகில் வ.அ. என அறியப்படுபவர் வ.அ. இராசரத்தினம். கிழக்கிலங்கையின் திருகோணமலையைச் சேர்ந்தவர். புனைவழகியல் மிக்க மொழியில் அவர் தன் படைப்புகளை எழுதினார். 1940-களில் எழுத வந்தவர் என்ற வகையில், அவரை ஈழத்தின் முன்னோடிச் சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவராகக் கொள்ளலாம். தவிர்க்க முடியாமல் அக் காலப்பகுதியின் ஈழத்து இலக்கியத்தின் மையச் செல்நெறியான முற்போக்கு என்ற எல்லைக்குள்ளேயே அவரும் தன்னை நிறுவிக்கொள்ளவேண்டியிருந்தது. எனினும் முற்போக்குக் கருத்தியலை அவ்வப்போது அவர் கடந்துசென்ற சம்பவங்களும் நிகழ்ந்திருப்பதற்கு அவரது சில கதைகள் சாட்சியாக இருக்கின்றன.

துறைக்காரன், கொழுகொம்பு, கிரௌஞ்சப் பறவைகள், ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கின்றது ஆகிய நான்கு நாவல்களை எழுதினார். ஒரு காவியம் நிறைவு பெறுகிறது, தோணி உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளும் வெளிவந்தன. ஒரு காவியம் நிறைவு பெறுகிறது குறுநாவலளவு நீளமான கதை. ஈழ எழுத்தாளர்களில் இலக்கியத்தையும், இலக்கியச் செயற்பாட்டையும் தன் வாழ்வின் முக்கிய பகுதியாக அமைத்துக்கொண்ட எழுத்தாளர்களுள் வ.அ-வும் ஒருவர். தனது இலக்கியச் செயற்பாடுகளுக்காகவே சொந்த அச்சுக்கூடம் ஒன்றையும் நிறுவிச் செயற்பட்டவர் அவர்.

வ.அ-வின் படைப்பு மொழி உண்மையில் படைப்பு சார்ந்து தமிழகம்-ஈழம் என்ற பிரிகோட்டை அழித்தது. இதனால் தமிழ் தரத்துக்கு அப்போதே ஈழப் படைப்புகளைக் கொண்டு சென்ற மிகச் சொற்பமான ஈழப் படைப்பாளிகளின் வரிசையில் வ.அ-வும் இடம்பெறக் கூடியவர். ஈழ எழுத்தாளர்களில் மிக அரிதாகவே இத்தகைய இலக்கிய அழகியலுடன் கூடிய மொழியும், வாழ்வு குறித்து நுணுக்கமான அவதானமும் கொண்ட எழுத்தாளர்களைக் காணலாம். அதிலும் குறிப்பாக ஈழத்தின் முன்னோடிப் படைப்பாளிகளின் எழுத்துகள் இலக்கிய அழகியல் மீதோ வாழ்வின் பல்வேறு தரிசனங்கள் மீதோ பெரிதளவு கவனமின்றி எழுதப்பட்டவைதான். படைப்பின் உள்ளீடு மட்டுமே அவர்களால் மிக கவனமாகத் தேர்வு செய்யப்பட்டன. அப்போது போடப்பட்டிருந்த முற்போக்கு அரசியல் நோக்கின் தனித்த பாதையில் தங்களுக்கான அடையாளங்களைப் படைப்பாளிகள் தேடினர். தங்களின் இலக்கியச் சேரிடமாக (Literary destination) அவர்கள் சமூகச் சமத்துவக் கனவைக் கருதினர். இதனால் பெரும்பாலும் எல்லோரும் ஒரு புள்ளியில் சந்தித்தனர். பின்னர் இது போன்றதொரு நிகழ்வைப் போர்க்கால ஈழக் கவிஞர்களிடமும் கண்டோம். எண்பதுகளுக்குப் பின்னர் (எம்.ஏ. நுஃமானின் பாலஸ்தீனக் கவிதைகளுக்குப் பின்) போரும் வாழ்வும் சார்ந்த கவிதைகளே ஈழக் கவிதைகளின் அடையாளமாக மாறியது. அங்கும் ஈழக் கவிஞர்கள் அனைவரும் ஒரே புள்ளியில் சந்தித்துக் கொண்டனர்.

அதனால் தனித்துவமான பயணங்கள் பெரியளவில் ஈழத்தில் இக்காலப்பகுதியில் (முற்போக்குக் காலம்) நடந்தேறவில்லை. தங்களை ஒரு குறித்த எல்லைக்குள் நிலைப்படுத்திக் கொள்வதில் அதீத அக்கறை எடுத்துக்கொண்டு எழுதினார். புனைவழகியல் மொழி கொண்ட சில படைப்பாளிகளையும் அந்நிலைமை பாதித்தமை ஈழ இலக்கியத்தின் எழுச்சிக்கு ஒரு வரையறுத்த தடையை ஏற்படுத்தி விட்டது என்றே நான் கருதுவேன்.

வ.அ. தன் முதல்நிலை ஆசிரியர்களாக புதுமைப்பித்தன், வல்லிக்கண்ணன், சிதம்பர ரகுநாதன், கு. அழகிரிசாமி போன்றோரைக் கருதினார். வ.அ-வின் தொடக்கக் கதைகளில் புதுமைப்பித்தனின் தாக்கம் இழையோடுவது உண்மைதான் ஆனால் புதுமைப்பித்தனிடம் வெளிப்படும் சமூக விமர்சனத்தின் ஆழமும், அழகியலும் வ.அ-விடம் ஒரு குறித்த கோட்பாட்டின் அடிப்படையிலேயே முன்வைக்கப்படுவதைக் காண்கிறோம். அதனால் அந்த சமூக விமர்சனம் தங்குதடையின்றி வ.அ-விடம் வெளிப்படுவதில்லை. ஆயினும், தனது கதைமொழி, அழகியல் விவரணம் போன்றவற்றில் ஈழப் படைப்பாளிகளிடையே உச்சமாகத் தன்னைத் தகவமைத்துத் தனது வெற்றிகரமான பக்கத்தை நிறுவியவர். வ.அ-வின் புனைவுலகு நூற்றுக்கு மேற்பட்ட கதைகளாலும், நான்கு நாவல்களாலும் ஆனது. இதில் அவர் சிருஷ்டித்த மானுடர்கள் சாமான்ய கீழ்த்தட்டு மக்களின் வாழ்க்கைப் பாடுகளையும், நெருக்கடிகளையும், அதன் சாரத்தையும் பிரதிபலிப்பவர்கள். வாழ்க்கையின் மிக எளிய கனவுகளைச் சுமந்த மனிதர்கள்.

பெரும்பாலும் விவசாயிகளும் மீனவர்களுமே அவரது படைப் புலக மனிதர்களாக உள்ளனர். எப்போதும் சமூக அடுக்கமை வில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் கீழ்மைப்படுத்தப் பட்ட மனிதர்களின் அகக் காயங்களுடனேயே அவர் திரும்பத் திரும்ப இடைவினை செய்தார். இந்த ஊடாட்டம் (முற்போக் கான கருத்தியலின் செல்வாக்கு இருந்தாலும்) அவரால் வேண்டுமென்றே செய்யப்பட்ட ஒரு செயற்கையான கவன யீர்ப்பல்ல என்றும் சிலவேளைகளில் தோன்றுகிறது. அவர் வாழ்ந்துகொண்டிருந்த மக்களிடம் கண்ணுற்ற அல்லது அனு பவித்த கூட்டுத் துயரம்தான் அவரது கதைகளின் மையமாக இருக்கிறது. இந்த வாழ்க்கை வட்டத்தையே அவரது படைப் பின் மையச் சுழற்சியாக மாற்றியதில் அப்போதைய முற் போக்கு விமர்சனச் சூழலுக்கு மறைமுகமான பங்களிப்பு இருந்திருக்கலாம். இது அவரது படைப்பூக்கத்துக்கு ஈழ விமர்சனத் தளத்தில் அறிவுஜீவிகளால் ஏற்படுத்தப்பட்ட சவா லாகும். இந்தச் சவால் மட்டும் இல்லாதிருந்திருந்தால் அப் போதே ஈழத்தில் வேறு சாதனைகள் நிகழ்ந்திருக்கலாம். அதற்கான முழுத்தகுதியும் கொண்டிருந்தவர் வ.அ.

வ.அ. தன் புனைவுலகில் சிருஷ்டித்த கதாபாத்திரங்கள் மிகச் சாதாரண மனிதர்கள் என்பதைப் போலவே தமிழ்ச் சமூகத் தின் எல்லாத் தரப்பையும் சேர்ந்தவர்கள். தமிழ்ச் சமூகத்தின் பல்வேறு வாழ்நிலைமைகளை, தமிழ்ப் பண்பாட்டின் வெவ் வேறு தளங்களைப் பிரதிபலித்தவர்கள். அவரது புனைவுல கத்துக்குள் இந்து, கிறிஸ்த்தவ, இஸ்லாமியப் பண்பாடுக ளும் அதன் கதாபாத்திரங்களும் தமிழ்ச் சமூகத்தின் விரிந்த பண்பாட்டுத் தளத்தையும், வாழ்வியல் கோலத்தையும் பிரதி பலிக்கின்றனர். தமிழர்களை ஒரு மத எல்லைக்குள் மட்டுப்ப டுத்தி அவர் தன் புனைவுலகைச் சுருக்கிக் கொள்ளவில்லை. கருத்தியல் ரீதியாகத் தமிழ்ப் பண்பாடு குறித்த இந்த ஆழ மான புரிதலை கா. சிவத்தம்பி, எம்.ஏ. நுஃமான் போன்றோர் வெளிப்படுத்தியிருந்தனர்.

வ.அ. தன் படைப்பு மனத்தை ஒரு பரந்தவெளிக்குள் பொருத் திப் பார்த்தார். அவரும் மதத்தை முன்னிறுத்தித் தமிழ்ச் சமூ கத்தை ஒரு குறுகலான தளத்தில் நின்று புரிந்துகொள்ளாமல் மொழியை வைத்தே தமிழ்ச் சமூகத்தைத் தன் படைப்புகளின் வழியே உற்றுநோக்கினார். இதனால்த்தான் அவரால் இஸ்லா மியரினதும், கிறிஸ்தவர்களினதும், இந்துக்களினதும் சமூக வாழ்வியலையும், பண்பாட்டு வாழ்வையும் தமிழின் வரிந்த படைப்புவெளியில் பதிவுசெய்ய முடிந்திருக்கிறது. தமிழ்ச் சமூக அடையாளம் வெறும் மதங்களால் கூறுபடுத்தப்படு வதை எதிர்க்கும் அவரது மனநிலையை அவரது பெரும்பா லான படைப்புகளில் காண்கிறோம். உதாரணமாக, அறு வடை, தலாக், அபேதவாதி போன்ற கதைகளை எடுத்துக் காட்டலாம்.

சாமான்ய மனிதர்களின் வாழ்வை அதன் அந்தரங்கத்துக்குள் ஆழமாக ஊடுருவி விசாரணை செய்யும் வகை எழுத்துக ளைத் தருவது அவ்வளவு எளிதானதல்ல. அந்த மக்களின் வாழ்வியலை அந்த மனிதர்களின் அகத்தையும், புறத்தையும் நெருங்கி அறிய அவர்களுடன் ஒரு படைப்பாளி நெருங்கி ஊடாட வேண்டும். போகிற போக்கில் கதையை எழுதிவிட் டுப் போக விரும்பும் ஓர் எழுத்தாளரால் இந்த வாழ்வை அவ் வளவு ஆழமாகப் பதிவுசெய்ய முடியாது. அவர் எழுதும் பெரும்பாலான மனிதர்கள் அவர் சொல்வதைப் போன்று 'ஆரம்பப் பாடசாலைக்கேனும் சென்றிராத' மனிதர்கள்தான். அறுவடைக் கதையில் வரும் அப்துல்லா இத்தகையதொரு மனிதர். அவரை ஒத்த மனிதர்களின் கலைஞராகவே வ.அ. தன்னை வெளிப்படுத்துகிறார். ஒரு விவசாயியான அப்துல்-லாவின் வாழ்க்கையையோ அல்லது அவரை ஒத்த விவசாயி களின் வாழ்க்கையையோ எழுதும் போது, ஒரு விவசாயி யைப் போலவே அந்த வாழ்வின் எல்லாப் பரிமாணங்களை யும் அறிந்துகொண்டு கதைக்குள் கொண்டு வருகிறார். அவர் கள் தங்களுக்குள் கையாளும் வழக்குச் சொற்களைக்கூட அதன் அசலான புரிதலோடு வ.அ. கொண்டு வருகிறார். வய லோடும், வேளாண்மையோடும் சம்பந்தப்பட்ட பிரத்தியேக மான மொழியையும் சொற்களையும் தேர்வுசெய்து கையாள்கி றார். விவசாயிகளிடம் மட்டுமே புழக்கத்திலுள்ள வழக்குச் சொற்களையும் அதன் பிரயோகங்களையும் கொண்டு வ.அ. தன் கதைகளை உயிர்ப்புள்ளதாக்குகிறார். கலப்பையன் கொழு, நுகத்தடி, தலையுழவு எடுத்தல், பரம்படித்து, கார் முடிந்தது, கூதிர் போயிற்று போன்ற சொற்களை எடுத்துக் காட்டாக முன்வைக்கலாம்.

ஈழத்தமிழ் இலக்கிய சூழலில் அதிக கவனத்தைப் பெற்ற அவரது கதை 'தோணி'. கதையில் 'இன்னமும் தோணி எனக் குக் கனவுப் பொருளாகத்தான் இருக்கின்றது. அதனா லென்ன? உயர்ந்த கனவு செயல்மிக்க நனவின் ஆரம்பம் தான். எப்போதாவது ஒரு நாளைக்குக் காலம் மாறத்தான் போகிறது. அன்றைக்கு எனக்கு மட்டுமல்ல, என் நண்பர்கள் எல்லோருக்குமே சொந்தத் தோணி இருக்கும். எங்கள் தோணிகள் சப்த சமுத்திரங்களிலும் சுதந்திரமாகச் சென்று மீன் பிடிக்கும். அந்த மீன்களைச் சந்தையில் பகிரங்கமாக விற்போம். விற்ற பணத்திற்குச் சந்தையில் அரிசி வாங்கு வோம். அரிசி வாங்கும் பணம் என்னைப் போன்ற உழைப்பா ளியான ஒருவருக்கு நேரடியாகக் கிடைக்கும். அப்போது உழ வருக்கு நிலமும் சொந்தமாக இருக்கும் அல்லவா?'

தோணிக்கு ஏங்கும் ஒரு சிறுவனின் ஏக்கம் கதையை செறி வூட்டுகிறது. சாமான்ய மீனவர் ஒருவருக்கு மாபெருங் கன வாக இருக்கும் தோணி, அவரது மொத்த வாழ்வினதும் உரு வகமாகத் தெரிகிறது. அலைகளில் அல்லாடும் தோணி போன்றது அந்த மக்களின் வாழ்க்கை. அது கூடச் சொந்தமற் றது. இன்னொரு விதத்தில் சொன்னால் நிஜமற்றது. எட்டாக் கனவு போன்றது. தோணியின் கதை நாயகனான சிறுவன் சொல்லும் இந்த வார்த்தைகள் முழுக்க அரசியல் சாயத்துட னும் முற்போக்கு முகத்துடனும் இருந்தாலும் அவனது ஏக்கம் நம்மைப் பிராண்டுகிறது. அவனது கனவு ஒரு தனிமனிதக் கனவு என்ற நிலையிலிருந்து ஒரு சமூகக் கூட்டுக் கனவு எனும் பரிமாணத்தைப் பெறுகிறது. அதனாலேயே அது அரசி யலாகவும் ஆகிறது. இந்தக் கதைக்குள் அரசியல் சித்தாந் தத்தைக் கலக்காமல் ஓர் அற்புதமான புனைவாக வ.அ-வால் வளர்த்தெடுத்திருக்க முடியும் என்றே எனக்குத் தோன்றுகி றது.

சமமற்ற மக்களுக்கிடையேயான இடைவெளிக்குள் மறைந்தி ருக்கும் இதுபோன்ற ஏக்கமும், துடிப்பும் கிட்டத்தட்ட எல்லாக்

கதைகளுக்குள்ளும் நிறைந்திருக்கிறது. அறுவடைக் கதையில் வரும் சாமான்யரான அப்துல்லா ஹாஜியாரின் கம்பளிப் போர்வையைப் பார்த்து ஏங்கும் போது, தோணிக் கதையில் தோணிக்காக ஏங்கும் சிறுவனும் கூடவே நினைவுக்கு வருகிறான்.

வ.அ. சம்பவங்களை மட்டுமே பதிவுசெய்யும் ஒரு படைப்பாளியல்ல. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அதைத் தாண்டியும் செல்கிறார். அறுவடை கதையில் நிலச்சுவாந்தர்கள் மீதான கூரிய விமர்சனத்தையும் அவர்களின் சுரண்டலை நிராகரிக்கும் கலகத் தன்மையையும் இந்தக் கதையின் முக்கிய பண்பாக அமைக்கிறார். போடிமார்களின் நில ஆதிக்கத்தின் மீதும், சமமற்ற நிலப் பங்கீட்டின் மீதும் சாமான்ய மக்களிடமிருந்த குமுறலைக் கதைக்குள் கொண்டு வந்திருக்கிறார். 'உழுபவனுக்கே நிலம்...' என ஒரு கதாபாத்திரத்தின் மூலம் அறிவிக்கிறார். கோயில் பூசாரிகள், முதலாளித்துவ ஒடுக்கும் சக்திகள், மதகுருக்கள் என அனைத்து ஒடுக்கும் சக்திகள் குறித்தும் வ.அ-விடம் கடுமையான விமர்சனங்கள் இருந்தன.

பொருளாதார அடித்தட்டிலிருக்கும் ஒரு மனிதரின் வாழ்வியல் சவால்கள் எல்லையற்றவை. அவற்றுடன் போராடி வாழ்வது மிகவும் சவால் நிறைந்தது. அதில் தோற்றுப்போகும் மனிதர்களே வ.அ-வின் கதைகளில் அதிகம் வருகின்றனர். அப்துல்லாவுக்கும் மகனின் சுன்னத், மகளின் திருமணம் என நிறையத் தேவைகள் இருந்தன. ஹாஜியாரான போடியார் ஒருவரின் வயலைக் குத்தகைக்கு எடுத்து வேளாண்மை செய்திருக்கிறார். அதன் விளைச்சல் மீது நம்பிக்கை கொண்டிருந்தார். இரவும் பகலும் உழைத்தார். காவல் காத்தார். அறுவடையை இன்னும் சில நாட்களில் செய்ய முடியும் என மகிழ்ச்சியாக இருந்தார். கடைசியில் ஒரு நாடகீயத் துயரம் நடந்தேறுகிறது. அவர் களைத்துக் கண்ணயரும் இரவொன்றில் காட்டு விலங்குகள், பன்றிகள் வந்து அவர் வயலைச் சேதப்படுத்திவிட்டன. இறுதியில் அவர் 'அல்லா' எனக் கதறியபடி மண்ணில் சரிகிறார். அந்த அலறல் பொருளியல், சமூகம், கல்வி, அரசியல் என எல்லாத் தளங்களிலிருந்தும் புறந்தள்ளப்பட்ட ஒட்டுமொத்த சாமான்யரினதும் குரலாக உயர்கிறது. கடைசியில் கடவுளிடம் சரணாகதி அடைகிறது.

வ.அ-வின் பெரும்பாலான கதைகள் இத்தகைய சோக முடிவையே கொண்டிருக்கின்றன. இந்த முடிவு ஒருவகையில் சலிப்பூட்டக்கூடியதாக இருக்கிறது. கதாபாத்திரங்களின் நலிவடைந்த வாழ்வினிடையே துளிர்க்கும் நம்பிக்கையான சூழல் ஒரு தற்காலிக மகிழச்சிதான் என்பதை கதையின் இடைநடுவிலேயே ஊகித்துக் கொள்ள முடிகிறது. இத்தகைய சம்பவங்கள் திரும்பத் திரும்ப அவரது கதைகளில் நிகழ்வதால் இந்த அனுபவம் நமக்குக் கிடைக்கிறது. இதனால் கதையின் சுவாரஸ்யம் முடிவில் நீர்த்துப் போவது போன்று உணர்கிறோம். தோணிக் கதையிலும் இத்தகையதொரு முடிவையே காண்கிறோம். வ.அ-வின் கதைகளில் ஒரு சமான்யரின் வாழ்வில் நிகழும் துயரங்கள் நித்தியமானவையாகவும், மகிழ்ச்சி தற்காலிகமானதாகவும் இருக்கிறது என்ற முடிவை நோக்கி நாம் வருகிறோம். மனித வாழ்வில் நிகழும் திடீர் திருப்பங்கள் எப்போதும் அவரைத் துயரத்திலேயே ஆழ்த்த வேண்டுமா என்ன? ஒரு சாமான்யரின் வாழ்வு எப்போதும் துயர் நிறைந்தாகவே இருக்க வேண்டும் என்பதே முற்போக்கு விமர்சகர்களின் எதிர்பார்ப்பாக இருந்ததா? இத்தகைய நேர்கோட்டு முடிவுகளை நோக்கி படைப்பாளிகள் அடித்துச் செல்லப்பட அப்போதைய ஈழ விமர்சனச் சூழலே காரணமாக இருந்தது என்றே நம்புகிறேன்.

முதலாளித்துவம், நிலவுடைமை போன்ற கருத்தியல்கள் சாமான்ய மக்களின் வாழ்க்கையோடு கொண்டிருந்த முரணை வ.அ. எழுதியது போன்றே மத ஆதிக்கம் நிலவிய புள்ளிகளையும் தன் கதைகளில் எழுச்சியோடு தொட்டார். கோயில் மணி, அபேதவாதி போன்ற கதைகள் இந்த இடத்தில் நினைவு கூரத்தக்கவை. கோயில் மணி, வேதநாயகம் எனும் வாத்தியாரைச் சுற்றி நகரும் கதை. கிறிஸ்த்தவ ஆசாரங்கள் புனிதமாக, அதிகாரமாக சாமான்யர்களை நெருங்கும் போது தன் எதிர்வினையை இந்தக் கதைக்குள் வ.அ. கொண்டு வந்தார். அபேதவாதி கதையும் இத்தகையதொரு தளத்தில் நகரும் கதைதான். கிறிஸ்த்தவ மத ஆசாரங்கள் காலப்போக்கில் சமூகத்தில் அடையும் மாற்றங்கள், தலைமுறை இடைவெளியும் அது குறித்த பதட்டங்களும் கதையை நிறைக்கின்றன.

இராசரத்தினம் ஆசியராகப் பணிபுரிந்து அனுபவங்கள் பெற்றவர். அதனால் பலவித இயல்புகளும் நோக்கும் போக்கும் உடைய ஆசிரியர்களைக் கதாபாத்திரங்களாகக் கொண்டு பெரும்பாலான கதைகளை எழுதியிருக்கிறார். ஆசிரியர்களது பிரச்சினைகள், வாழ்க்கைச் சிக்கல்கள், குழப்பங்கள், நம்பிக்கைகள், நிலைமைகள் முதலிய பல விஷயங்களை இக்கதைகள் விவரிக்கின்றன. அக்கால இலங்கைச் சமூக, அரசியற் சூழலில் ஆசிரியர் சமூகத்தின் கூட்டுணர்வுகளும், பிரச்சினைகளும் கூட இந்தக் கதைகளுக்குள் சித்திரமாக்கப் பட்டிருக்கின்றன. இவற்றில் சில கதைகள் சுயசரிதைத் தன்மை வாய்ந்தவை. ஈழத்தமிழ்ச் சமூகத்தில் எழுத்தாளர்களின் கனவுகளும்கூட முதலாளியத்தின் கனரகச் சில்லுகளுக்குள் சிக்குண்டு சிதைந்த சாமான்ய மானுடத்தின் வலி, ஏக்கங்களுக்குச் சமாந்தரமானவைதான் என்பதையும் எழுதி நிறுவினார். அவரது தீர்த்தக்கரை கதை இந்த விடயத்தைப் பேசும் கதைதான். ஒரு எழுத்தாளரின் மிகப்பெரிய எதிர்பார்ப்பு ஒரு புத்தகத்தை வெளிக்கொண்டு வந்து, அதன் இழப்பிலிருந்து மீண்டு வருவது பற்றிய ஏக்கம்தான். அந்த எதிர்பார்ப்பின் அழுத்தம் அவரது வாழ்விலும் மிக ஆழமாகப் பதிந்திருக்கிறது என்பதன் குறிகாட்டி அந்தக் கதை. ஈழத் தமிழ்ச் சமூகச் சூழலில் ஒரு எழுத்தாளருக்கு இருக்கும் இந்த அச்சம் இன்றுவரை தொடரத்தான் செய்கிறது.

ஒரு காவியம் நிறைவு பெறுகிறது. அவரது இலக்கிய வாழ்விலும், மொத்த வாழ்விலும் அவரது மனைவியின் இடத்தையும் அதேநேரம் ஒரு கணவன்-மனைவிக்கிடையிலான அன்பையும், இணக்கத்தையும் புனைவழகியலோடு பேசும் கதை. வ.அ-வின் மனைவி அவரது இலக்கியப் பணிக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கியவர். அதனாலேயே அவருக்கு இவ்வளவு அதிகமாக எழுத முடிந்திருக்கிறது. தனது மனைவி இறந்ததும் அவர் அனுபவித்த உணர்வுகளையும், அவரது மனநிலையையும் உணர்ச்சிகரமாக இந்தக் கதை சித்தரிக்கிறது.


முஸ்லிம் வாழ்வியல் மீதான அவரது கரிசனம் கவனத்துக்குரி

யது. இலங்கைத் தமிழ் முஸ்லிம் வாழ்வியலை ஈழ இலக்கி யத்தின் தொடக்க காலகட்டங்களில் புனைவுகளில் கொண்டு வந்தவர் வ.அ. இராசரத்தினம். எடுத்துக்காட்டாக அவரது தலாக் என்கிற கதையைக் குறிப்பிடுவேன். முஸ்லிம் பண் பாட்டுச் சூழலிலும், தமிழ் இலக்கிச் சூழலிலும் அதிக கவ னிப்பையும் உரையாடலையும் நிகழ்த்திய கதை இது. இலங்கை, குறிப்பாக கிழக்கிலங்கை முஸ்லிம் பண்பாட்டின் இறுக்கமான தன்மையை ஜாஃபர், பாத்தும்மா எனும் இரு கதாபாத்திரங்களினூடே சித்தரித்துக் காட்டுகிறார். பொதுத் தளத்தில் பேசப்பட வேண்டிய ஆனால் மௌனமாக்கப்பட்டி ருந்த முஸ்லிம் பண்பாட்டின் ஓர் இறுக்கமான பண்பாட்டு நடைமுறையை இந்தக் கதை திறந்த உரையாடலுக்குக் கொண்டு வருகிறது. இஸ்லாமியரிடையே திருமணத்துக்கு முன் ஓர் ஆணும்-பெண்ணும் பேசிப் பழகி ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்கான பண்பாட்டுத் தடை மிக இறுக்கமாக இருந்த காலகட்டத்தில் எழுதப்பட்ட கதை அது. இந்த சூழ லால் ஜாஃபர் பாதிக்கப்படுகிறான். அவனது கனவுகளுக்குப் பொருந்தாத பாத்தும்மாவை அவன் திருமணம் செய்ய வேண்டி ஏற்படுகிறது. அதுபோலவே பாத்தும்மாவும் தனக் குப் பொருந்தாத ஜாபரை மணமுடிக்க வேண்டி நேர்கிறது. பின்னர் ஒரு கட்டத்தில் அவர்கள் பிரிந்து செல்கின்றனர். முஸ்லிம் படைப்பாளிகள் கூடப் பயணிக்க விரும்பாத ஒரு வெளிக்குள் வ.அ. சஞ்சரித்தார். முற்போக்குச் சட்டகத்தை வ.அ. மீறும் சில இடங்களில் இது ஒரு குறிப்பிடத்தக்க புள்ளி.

வ.அ-வின் மொத்தப் படைப்புகளும் அவரது உலகநோக்கின் அடிப்படையில் உருவானவைதான். அவரது உலகநோக்கை முற்போக்கு இலக்கிய விமர்சனச் சூழல் முழுமையாகத் தீர் மானித்திருந்தது. இலக்கியத்தை ஒரு சமூக அலகாக, கூட் டுப் பிரக்ஞைகளை, சிக்கல்களை பேசுபவையாகவே அவ ரும் கருதினார். தனிமனித உணர்ச்சிகளும் போராட்டங்களை யும், வாழ்வு குறித்த நுண்ணோக்குகளையும், அவர் காலத் தேய தமிழகப் படைப்பாளிகள் எவ்வளவு நுண்ணோக்குடன் தன் படைப்புகளில் வெளிப்படுத்தினர் என்பதில் வஅ. போன்ற ஈழப் படைப்பாளிகள் பெரிதளவில் அக்கறை கொள் ளவில்லை. கதையின் மைய உள்ளீடான சமூகப் பிரச்சினைக ளில் மட்டுமே கவனம் கொண்டனர். ஒரு சிறு நிகழ்வின் விஸ் தாரமாக ஒரு நிகழ்வைக் கொண்டு செல்லும் நுட்பத்தைக் கதைகூறலில் பின்பற்றத் தவறினர். பெரும்பாலான கதைக ளில் வ.அ-வுக்கும் ஒரு சிறிய நிகழ்வை முன்வைப்பதற்கு, கதைசொல்வதற்கு நிறைய கதாபாத்திரங்கள் தேவைப்பட் டன. அரசியல் சித்தாந்தம் தேவைப்பட்டது. சமூக சமத்துவம் பேச வேண்டியிருந்தது. தனிமனிதரை அவரது உணர்ச்சி களை விட சமூகத்தின் தேவைகளையும், சமூகப் பிரக்ஞைக ளையுமே முன்னிறுத்த வேண்டி ஏற்பட்டது. எடுத்துக்காட்டா கத் தோணிக் கதை. ஒரு சிறுவனின் தோணிக்கான ஆசையை அற்புதமாகச் சித்தரிக்கும் கதை அது. ஆனால் அவனது மன வெழுச்சியும் வேட்கையும் கதையில் பெரிதாகத் திரள வில்லை. அதற்குள்ளும் சமூகக் கூட்டுணர்வும், முற்போக்குக் கருத்தியலும் ஊடறுத்து கதையின் மையக் குரலை சவாலுக் குள்ளாக்குகிறது. இயல்பான கதையோட்டத்தில் நிகழும் இடையூறான பக்கம் அது. சிறுவனின் கனவுகள் இங்கு புறந் தள்ளப்படுகின்றன. வேறொன்று வந்து அந்த இடத்தை நிரப் புகிறது.

ஆனால் மறுதலையாகத், தமிழகப் படைப்பாளிகள் இத னைக் கலைத் தன்மையோடும் புனைவுத்தியோடும் வெளிப்ப டுத்தினர். வெளிப்படையாக அரசியலில் கொண்டுபோய் கதையை முடிக்கவில்லை. ஒருவித தர்க்கரீதியான சமூக விமர்சனமாக அதனை முன்வைத்தனர். கதையின் மொத்த அர்த்தமும், அழகியலும், முன்வைக்கும் விமர்சனமும் அதன் முடிவிலேயே அதிகம் வெளிப்படும் இடமாக சித்தரித்தனர். எனவே முடிவு சற்றுப் புதுமையானதாக இருந்தது. முன்னரே ஊகித்துக் கொள்ள முடியாத பூடகத்தன்மையோடு கதை நகர்ந்தது. சில கதைகள் உருவகமாகவும், குறியீடாகவும் ஒரு கருத்தை முன்வைத்து முடிந்தன. இந்தப் போக்கை வ.அ. போன்ற ஈழ எழுத்தாளர்களிடம் காண முடியவில்லை. எடுத் துக்காட்டாக வ.அ-வின் ஆதர்ச எழுத்தாளர்களுள் ஒருவரான கு. அழகிரிசாமியின் திரிபுரம் எனும் கதையை இங்கு எடுத் துக்கொள்கிறேன். விருதுநகரிலிருந்து சாத்தூருக்கு நெருக்க டியான வாழ்வின் பாடுகளோடு வெங்கடம்மாளும் கருத்தம் மாவும் நடந்தே செல்கிறார்கள். வறுமையும், பசியும் அவர் களை வதைக்கிறது. சாத்தூர் பஸ் நிலையம் முன்பு ஒரு சூத்தை வெள்ளரிக்காய் கிடக்கிறது. பசியின் கொடுமை இரு வரையும் வதைக்கிறது. ஆனாலும் அதைப் பொறுக்கி உண்ண தன்மானம் தடுக்கிறது. பசியோடு மேலும் நடந்து செல்கிறார்கள். அப்படியே ஆற்றங்கரை மணலில் அயர்ந்து தூங்கிவிடுகிறார்கள். பசி தாங்க முடியவில்லை. பசியைப் போக்க வெங்கடம்மாள் தன் உடலை விற்கிறாள். அதன் மூலம் அவளுக்குப் பணம் எளிதாகக் கிடைக்கிறது. சாத்தூர் ரயில் நிலையத்தில் வெங்கட்டம்மாள் அந்தப் பணத்தை இந் தக் கைக்கும், அந்தக் கைக்குமாகச் சிரித்துக்கொண்டே மாற் றிக் கொண்டிருக்கிறாள். அவள் ஏன் இதனைச் சிரித்துக் கொண்டு செய்கிறாள். ஓர் அவல வாழ்வின், கொடுமையான நிகழ்ச்சிகளின் முடிவில் அழுது புலம்பித் தீர்க்க வேண்டிய கணத்தில் அவள் சிரிக்கிறாளே என்று நமக்கு யோசனை வரு கிறது. ஆனால் அவள் சிரிப்பதன் அர்த்தம் இந்த மனிதர்க ளின் இழிவை உருவகப்படுத்துகிறது. சாமான்ய மனிதர்க ளின் வாழ்க்கையை விட இருண்டுவிட்ட உயர்தட்டு மனிதர்க ளின் மனங்களைப் பார்த்து அவளது சிரிப்பு கேலி செய்கிறது. போலி பிம்பங்களைப் பார்த்து அருவருக்கிறது. அது - சாமான்யர்கள் இந்த உயர்தட்டு மனிதர்களின் இழிந்த குணத் தைக் குற்றவுணர்ச்சிக்குள்ளாக்கும் குறியீட்டுச் செயலாக அர்த்தம் கொள்கிறது. ஒருவகையில் பார்த்தால், நேரடியான சித்தரிப்புகளை விட இது போன்ற புனைவுத்திகள் கதையை அழகியல்மயப்படுத்துகின்றன. நம்மீதும் மிகப்பெரிய தாக் கத்தை உண்டுபண்ணுகின்றன. அழகிரிசாமியின் இந்தக் கதைக்குள் தேவையற்ற அரசியல் உட்புகுத்தல்கள் இல்லை. கோட்பாட்டுக் கலப்புகள் வெளிப்படையாக இல்லை. அத னால் கதை இங்கு அதன் இயல்பை இழக்கவில்லை.

இத்தகைய நுண்ணிய நோக்குகள் ஈழ முற்போக்கு எழுத்தா ளர்களிடம் வெளிப்படுவதற்கான சூழல் இங்கு நிலவவில்லை. வ.அ. அந்த எல்லையை அவ்வப்போது மீறினாலும் அதனை அவர் முழுமையாகத் தகர்த்துத் தன்னை நிறுவியவரல்ல.



jiffry.hassan@thaiveedu.com




# கவிஞர் எஸ்தரின் ஊதா நிறத்துப் பெண்கள்

**– பொ. திராவிடமணி**

தற்கால ஈழத்துக் கவிஞர்களில் சுட்டத்தக்கவர் கவிஞர் எஸ்தர். இவர் பிறப்பிலிருந்து தான் பார்த்து வளர்ந்த மனிதர்களின் அன்றாடத்தின் பாடுகளையும் வலிகளையும் தம் கவிதைகளில் தொடர்ந்து பதிவுசெய்து வருகிறார். மலையகத்தில் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் மக்களின் வாழ்வியல் சிக்கல்களைப் புறவுலகிற்குக் கடத்தும் கருவியாக இவரது கவிதைகள் மிளிர்கின்றன. அம்மக்களின் சமூகப், பொருளாதாரச் சிக்கல்களைப் பேசும் நுண்ணரசியலை இவரது கவிதைகளில் காணமுடிகிறது.

கவிதை என்ன செய்யும் என்று கேட்காதீர்கள். அது வாஞ்சையுடைய வாசகரின் விழி வாசலை அடையும் பொழுது, புலப்




பாட்டு நெறி, வர்ணனை, ஓசை ஒழுங்கு, கவிதைக் கட்டமைப்புப் போன்ற இத்யாதிகளைக் கடந்து அதன் பாடு பொருளால் மனதைக் கனக்கச் செய்யும். பிறரிடம் சொல்லிச் சொல்லி ஆறுதல் தேட முயலும். அதன் வெளிப்பாடு பேசுபொருளாகும். பேசுபொருள் விவாதப் பொருளாகும். விவாதம் மையப் பொருளான மக்களின் பாடுகளைத் திரும்பிப் பார்க்க வைக்கும். விடியலுக்கான தீர்வை நோக்கி நகரவும் செய்யும். எனவே, கவிதை என்ன செய்யும் என்று கேட்காதீர்கள் என்பேன்.

அவ்வகையில் எஸ்தர் எடுத்துக்கொண்ட பாடுபொருள் மலையக மக்களின் வாழ்வியலை நுட்பமாகப் புறத்தாரை நோக்கச் செய்கிறது.

வறுமையும், நம்பிக்கை ஏற்பும், புலப்பெயர்வும், ஏமாற்றமும், அடிமை வாழ்வும், உழைப்புச் சுரண்டலும், கூலிகளாகப் பரிதவிப்பதும் போன்றவை ஆதியிலிருந்தே தமிழரிடம் இரண்டறக் கலந்துவிட்ட வாழ்வியல் தழும்புகள். அத்தகைய தமிழினத்தின் சான்றாக இன்றும் ஈழத்தில் அஞர்படும் மலையக மக்களின் அவலத்தை எஸ்தர் தமது கவிதையில் இப்படிச் சொல்கிறார்.

*'தொழிலாளியின் முகத்தில்*
*சதா வழியும் வியர்வை உலகத்துக்கு*
*ஏதோ சொல்ல வருகின்றது*

*குரலற்ற இம்மக்கள் மனங்களின் பதுங்கி வாழும்*
*துயரங்கள் ஒரு நாள் தோட்டங்களில் நடமாடும்*
*சிறுத்தையெனப் பாயும் உங்கள் முகங்களைக்*
*குளவிகளாக்கிக் கொட்டும்*

*அவனின் மூதாதையர் தவமாய் தவமிருந்து*
*மண்ணுக்குத் தன்னை விதைத்த*
*அவர் தம் வாழ்வும் உடலும் தேயிலைக்கடியில்*
*எஞ்சிய எலும்புக் கூடுகளையும் தவிர*
*கள்ளத்தோணிகளெனச் செல்லமாய் தீண்டத்தகாத*
*இப்பெரும் அப்பாவிகளை*
*எஞ்சிடாத இந்தத் தேயிலைப் பெருமலைக்கு*
*எங்களை ஏவி விட்டவன் யார்?'*

என்று வினவுகிறார். எப்போதோ யாரோ வரித்துக்கொண்ட வாழ்வைப் பற்றி நடக்கும் பரம்பரை எத்தனை காலம்தான் விடியலுக்கான ஒளியைத் தேடிக் களைக்கும் எல்லாவற்றிலும் விடுதலை பெற்றுவிட்டதாகத், தன்னிறைவு அடைந்துவிட்டதாகப் பிரகடனப்படுத்திக்கொண்டு முன்னேறிச் செல்லும் உலகில் எங்கோ ஒரு மூலையில் தமது அன்றாடத்தைக்

கடத்தவே மனிதர் கடினப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அடிப்படைத் தேவைகளைக் கூடப் பூர்த்திசெய்துகொள்ளும் நிலையில் அவர்களது பொருளாதார நிலை இல்லை என்பதை எஸ்தரின் 'பெருநோவு' எனும் கவிதை விளக்கிச் செல்கிறது.

***'ஒரு சோடிச் செருப்பு வாங்கக் கடைக்குச் சென்றேன்***
***செருப்பின் விலை காலின் நோவை விட***
***சற்று அதிகமாகக் கேட்டது***

***இப்பாதங்களின் வெடிப்புகள்***
***மலையகத்தின் முகத்தில் வரையப்பட்ட***
***வரலாற்றுக்கோடுகள்***
***அவ்வப்போது வெடிப்பிலிருந்து கசியும் இரத்தம்***
***தேயிலைச்சாயம்***

***இன்றும் என் கால்களுக்குக்***
***காலணிகள் பொருந்தவில்லை***
***என் கால்களுக்குப் பெருநோவு மட்டும்***
***எல்லாக் காலத்திலும் பொருந்துகின்றது'***

விடியலிலிருந்து மாலை வரை கடுமையாக உழைத்தாலும் தன்னிறைவற்ற குறைவுடைய வாழ்வுதான். ஒரு குவளை சாயத் தேநீரும், ரொட்டித் துண்டும் கிடைத்தாலே போதும் நிரம்பிவிடுகிறது மனம். அவற்றைத் தாண்டி அவர்களுடைய எண்ணங்கள் விரிவடைவதற்கான சூழல் அமையாத அவல வாழ்வு குறித்து 'நிலமற்றவள்' எனும் கவிதையில் பின்வருமாறு பதிவு செய்துள்ளார் எஸ்தர்.

***'மழைக் குளிரில் உறைந்து நானும்***
***வீடு திரும்புகிறேன்***
***இரவில் ஒரு குவளை சாயத் தேநீர்***
***விடிந்ததும் அதே ஒரு குவளை சாயத் தேநீர்***
***கடித்துக் கொள்ள துண்டு ரொட்டி***
***உடலும் மனமும் அதுவே போதும் என்கிறது'***

லயத்துப் பெண்கள் எனும் கவிதையில் கடினப்பட்ட வாழ்வையேற்ற மலினப்பட்டுப் போன மலையகப் பெண்களின் வடிகாலாக அவர்களது குழந்தைகள் இருக்கிறார்கள் என்பதை,

***'அதிகாலை ஐந்து மணிக்கு***
***அலாரமின்றி எழுந்து விடுவார்கள்***
***லயத்துப் பெண்கள்***
***24 மணி நேரமும் தங்களுக்குப் போதாது என***
***அடிக்கடிப் புலம்பிக் கொள்வார்கள்***
***... ... ...***
***மலை வீடு இறங்கி***
***வேக வேகமாய்த் தூமைத் துணிகளைக்***
***கழுவி இருளில் காயப்போடுகிறார்கள்***
***தன் மடியில் வந்து விழும்***
***பிள்ளையின் பொன் சிரிப்பில்***
***களைப்பைப் பாம்புச் சட்டையென உருவி***
***பிள்ளையை அள்ளுகிறார்கள்***
***பேரழகு முகம் வைத்திருக்கும் என்***
***இனிய ஊதா நிறத்துப் பெண்கள்'***

என்று சொல்லிச் செல்கின்றார். இப்படியாகப் பெரும்பான்மையான கவிதைகளில் மலையக மக்களின் வாதையைச் சொல்லும் கவிஞர் தனி ஈழம் என்று சூளுரைத்துப் புலம்பெயர்ந்து சென்றவரைக் காணவில்லை அவர்கள் சூளுரைத்த சொற்கள் மட்டும் பொருளற்றதாகிப் புதருக்குள் சிதறிக்கிடக்கின்றன என்கிறார்.

***'வருவோம் திரும்புவோம் சந்திப்போம்***
***ஈழம் வெல்லுவோம் என்றவர்களின் வார்த்தை மட்டும்***
***பாழடைந்த பங்கருக்குள் சிதறிக் கிடக்கின்றது'***

பொய்யான வாக்குறுதிகளையும் ஆசை வார்த்தைகளையும் நம்பி வந்து அடிமைப்பட்ட சமூகம் 200 ஆண்டுகளுக்குப் பின்னும் எவ்வித முன்னேற்றமுமின்றித் தொடங்கிய இடத்திலேயே நிற்கும் அவலநிலையை,

***'தேயிலைக்கு அடியில் மாசியும் இல்லை***
***தேங்காயும் இல்லை***
***தோண்டத் தோண்ட மூதாதையனின்***
***மண்டையோட்டுத் துண்டுகளும்***
***சில எலும்புத் துண்டுகளும் எஞ்சியும்***
***எஞ்சியும் கிடக்கின்றன'***
என்கிறார்.

மேலும் பாரதியிடம்,

***'நிலங்களில்லை கேட்கிறோம் கேட்கிறோம்***
***200 வருடங்களாய்க் கேட்டுக் கொண்டிருக்கிறோம்***

***இப்போது சொல் பாரதி***
***நாங்கள் எந்தச் சக்தியிடம் எந்த அதிகாரத்திடம்***
***எதைக் கேட்பது எப்படிக் கேட்பது'***

என்று கேட்கும் இவரிடம் 200 ஆண்டுகால ஏமாற்றத்தின் வலி தென்படுகிறது. தொகுப்பில் பெரும்பான்மையான கவிதைகளில் மலையக மக்களின் சிக்கலான வலிகள் நிறைந்த வாழ்வியலைப் பற்றிப் பேசும் இவர், சில கவிதைகளில் காதலிலும் கரைந்து போகச் செய்கின்றார். எஸ்தர் கவிதைகளுக்காகச் சொற்களை வலிந்து இழுத்துப் புகுத்தாமல் வெகு இயல்பாக எழுதிச்செல்வது சிறப்பு. கனத்த வாழ்வியலைப் பதிவுசெய்த கவிதைத் தொகுப்பு இது. என் வாசிப்பு அனுபவத்தை மீறிய புதிய தெறிப்பை உங்களுக்குத் தரக்கூடும்.

'ஊதா நிறத்துப் பெண்கள்' எனும் இக்கவிதைத் தொகுப்பு எஸ்தரின் நான்காவது நூல். இவரது படைப்புகளால் மலையகம் ஒளிரட்டும். தனித்துவம் மிக்க படைப்பாக இவரது படைப்புகள் மிளிரட்டும் என வாழ்த்துகின்றேன்.



thiravidamani.p@thaiveedu.com




தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி வருவதை அங்கீகரிக்கும் வகையில் தமிழக அரசின் உயரிய உ.வே.சா. விருது பெற்ற, நெல்லையின் அடையாளமாகத் திகழும் எழுத்தாளர் தோழர் நாறும்பூநாதன் அவர்களின் 'பொருநை முதல் நயாகரா வரை' என்ற அற்புதமான பயணக் கட்டுரை நூல் அண்மையில் வெளிவந்து பலராலும் பேசப்பட்டு வருகிறது. கனவில் உதிர்ந்த பூ, மரத்துப்போன சொற்கள் உள்ளிட்ட 4 சிறுகதைத் தொகுப்புகளும், தட்டச்சுக் காலக் கனவுகள் என்ற குறுநாவலும், திருநெல்வேலி - நீர், நிலம், மனிதர்கள், யானைச் சொப்பனம் உள்ளிட்ட 10 கட்டுரைத் தொகுப்புகளையும் வெளியிட்ட எழுத்தாளர் தோழர் நாறும்பூநாதன் அவர்களின் 'பொருநை முதல் நயாகரா வரை' என்ற இந் நூல் நெல்லை ஆவாரம்பூப் பதிப்பகத்தால் வண்ணமயமான புகைப்படங்களை உள்ளடக்கி மிக நேர்த்தியாக வெளியிடப் பட்டுள்ளது.


இலங்கை, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு ஏற்கெனவே சென்று வந்த அனுபவத்தை இந்நூலாசிரியர் கொண்டிருந்த போதும் தனது மகன் மருமகள் வாழ்ந்து வரும் கனடா நாட்டிற்குச் சென்று வந்த அனுபவத்தை எழுத்து வாயிலாக நம்மோடு பகிர்ந்துகொள்ள முன்வந்துள்ளமை வரவேற்கத் தக்கதாகும். நூலாசிரியர் குறிப்பிடுவதைப் போன்று பயண அனுபவங்களை எழுதுவது என்பது தமிழ் இலக்கியத்தில் புதியதல்ல என்றபோதும், இவர் அனுபவித்து எழுதியுள்ள பயண கட்டுரைகளை வாசிக்கும் போது நாமும் அவருடனே பயணிப்பதைப் போன்ற ஓர் உணர்வு ஏற்படுவதை உணர முடிகிறது. ஒரு கலைச்சிற்பி பார்த்துப் பார்த்துக் கல்லில் கலை வடிவத்தை செதுக்குவதைப் போன்று தோழர் நாறும்பூநாதன் தனது துணைவியார் திருமதி. உஷா சகிதம் கனடா சென்று வந்த பயணத்தை தனக்கே உரிய பாணியில் தொய்வில்லாமல் சுவாரஸ்யம் குறையாமல் வடிவமைத்துள்ளார். பல வருடங்களுக்கு முன்னர் ஆனந்த விகடனில் மணியன் அவர்கள் எழுதிவந்த பயணக் கட்டுரைகளை நினைவு படுத்தும் வகையில் இவரது பயண அனுபவக் கட்டுரைகள் உயரிய தரத்துடன் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

'பொருநை முதல் நயாகரா வரை' என்ற இந்நூலில், 23 தலைப்புகளில் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. 23 கட்டுரைகளும் தொடர்ச்சியாக இருந்த போதும் அவைகளை இரு பகுதிகளாகப் பகுத்துப் பார்க்கக் கூடியதாக இருப்பதையும் காண முடிகிறது. நூலாசிரியர் தேடித்தேடி பார்த்து இரசித்த இடங்களை ஒரு பகுதியாகவும் அவர் சந்தித்து உரையாடிய பலதரபட்டஆளுமைகளை மற்றொரு பகுதியாகவும் பார்க்க கூடியதாக இருக்கிறது. எழுத்தாளர்களுக்கேயுரிய கூர்மையான பார்வையுடனும் கனிவான மனதுடனும் ஒவ்வொன்றையும் அவதானித்து இருப்பதை அவரது எழுத்துகள் வெளிப்படுத்ததவறவில்லை.

சென்னை சர்வதேச விமான நிலையத்திலிருந்து பயணத்தைத் தொடங்கிய நாள் முதல் கனடாவின் ரொறன்ரோ விமான நிலையத்திலிருந்து தாயகம் திரும்பும் நேரம் வரை தான் கண்டும் கேட்டும் அனுபவித்த பல்வேறு சம்பவங்களை உரையாடல் வழியாகவும் கட்டுரை வடிவிலும் இலகு தமிழ் நடையில் தந்திருப்பது சிறப்பு அம்சமாகப் பார்க்கப்படுகிறது. ஒவ்வொன்றையும் கூர்ந்து கவனித்து அதனை வாசிப்போரும் புரிந்து கொள்ளும் வகையில் அவர் பகிர்ந்து கொள்ளும் பாங்கு பாராட்டுதலுக்குரியதாகும். சென்னை விமான நிலைய காபி (coffee) விலை நூலாசிரியரை அச்சப்பட வைத்த போதும், அதன் பின்னர் ஒவ்வொரு விமான நிலையச் சூழலையையும் அவர் ரசித்துப் பார்த்ததாகக் குறிப்பிடுகிறார். குறிப்பாக Frankfort விமான நிலையத்தில் சிறிய ஒரு இசைக் குழுவினரின் ரம்யமான இசையைக் கேட்டு மிகவும் மகிழ்ந்ததாகக் குறிப்பிடுகிறார். பொதுவாக மேலை நாடுகளில் இவ்வாறு பொது இடங்களில் இன்னிசை நிகழ்ச்சிகள் நடப்பது வழக்கமான ஒன்றெனக் கூறப்படுகிறது. ரொறன்ரோ விமான நிலையத்தையடைந்த போது மகன், மருமகள் மலர் தந்து வரவேற்க மறுபுறம் சில்லென்ற குளிர் காற்றும் தங்களைத் தொட்டு அரவணைத்து வரவேற்றதாகக் கூறும் தோழர் நாறும்பூநாதன் மகனின் வீட்டிற்கு வாகனத்தில் செல்லும் வழியில் பிரமாண்டமான அடுக்கு மாடிக் குடியிருப்புக் கட்டடங்களைக் கண்டு பிரமிப்பு அடைந்ததாகக் கூறுகிறார். கனடா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் 100 அடுக்குகள் கொண்ட மிக உயர்ந்த கட்டடங்கள் இருப்பது மிகவும் சாதாரண விடயமாகப் பார்க்கப்படுகிறது. அது அந்நாடுகளின் வளர்ச்சியின் ஒரு அடையாளமாகவும் பார்க்கப்படுகிறது.

நூலாசிரியரின் கவனத்தை ஈர்த்ததும் அவர் நம்முடன் பகிர்ந்து கொள்ள விரும்பியதுமான பல விடயங்களில் அங்கு வண்ணமயமாகப் பரந்து விரிந்து காணப்படும் பூங்காக்கள் மிக முக்கியமான ஒன்றாகத் தெரிகிறது. ஜப்பான், கனடா இரு நாடுகளும் இணைந்து உருவாக்கிய 'கரியாப் பூங்கா' (Kariya Park)-வின் அழகினை, அதன் பெருமைகளை அவர் அனுபவித்துக் கூறும் விதம் நாமும் கண்டு களித்தது போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது. உயர்ந்த மரங்கள், வண்ண மலர்கள், நகர்ந்து செல்லும் ஆமைகள், ஓடி ஆடும் கறுப்பு

அணில்கள், ஏரிக் கரையோரம் நீந்தும் வாத்து எனப் பலவற்றையும் நம் கண்முன் நூலாசிரியர் நிறுத்துகிறார். பார்த்தோம், ரசித்தோம் என்றில்லாமல் அதன் வரலாற்றுப் பின்னணிகளையும் கூறுவது மிகச் சிறப்பான விடயமாகும். இரண்டாம் உல




கப் போருக்குப்பின் இரு நாடுகளுக்கிடையே நல்லுறவை மேம்படுத்த உருவாக்கப்பட்ட இந்தக் 'கரியாப் பூங்கா' அங்குள்ளவர்களின் நடைப் பயிற்சிக்கான இடமாகவும் இருப்பதாகக் கூறுகிறார்.

நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவிலமைந்துள்ள டெர்ரா கிரீன் ஹவுஸ் (Terra Green House) பூந்தோட்டம் மிஸ்ஸிசாகுகா நகரில் (Mississauga Town) பிரசித்தி பெற்ற ஒன்றெனக் கூறும் நூலாசிரியர், அது திறந்த வெளியாகவும் கண்ணாடிக் கட்டடங்கள், செயற்கை நீரூற்றுகள், பழமையான கற் சிற்பங்கள், மரச் சிற்பங்கள், நூற்றுக்கணக்கான பூச்செடிகள் உள்ளடக்கிய மனதைக் கொள்ளை கொள்ளும் வகையிலும் இருப்பதாகவும் கூறுகிறார். பூங்கா அருகில் அமைந்துள்ள கிராண்ட் ரிவர் அணைக்கட்டு (Grand River Dam) என அனைத்தையும் பார்க்கும் போது கனவுலகில் மிதப்பது போன்றதொரு உணர்வு ஏற்பட்டதாக வியந்து பாராட்டுவதைக் காண முடிகிறது. ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்லும் எழில் கொஞ்சும் இந்த இடங்கள் அவர்களின் பல்வேறு அழுத்தங்களைக் குறைக்கும் இடமாகவும் திகழ்கிறது. எழுத்தாளர் கூறுவதைப் போன்று தங்களின் அன்றாடங்களிலிருந்து தப்பிக்க உலகம் முழுவதும் எல்லா மனிதர்களும் முயற்சிப்பதன் ஓர் அம்சமாகவே இவைகள் பார்க்கப்படுகின்றன.

ரொறன்ரோ லோயர் டான் நதி (Lower Don River Trail) கரையில் அமைந்துள்ள ரிவர் டேல் பூங்கா (River Dale Park) அங்கு பிரசித்தி பெற்ற ஒன்றாக விளங்குகிறது. இப் பூங்காவில் வண்ண மலர்கள் மட்டுமல்லாமல் விளையாட்டு மைதானங்கள் குளங்களெனப் பலதையும் காணக் கூடியதாக இருப்பதாக நூலாசிரியர் கூறுகிறார். இதேபோன்று Lake Front Promenade பூங்காவும் மிகவும் பிரபலமானதாகக் கூறப்படுகிறது. இது ஒரு ஏரிக்கரைப் பூங்கா என்பதால் சீகல் பறவைகளின் கீச் ஒலிகளைக் கேட்டவாறே நடைப்பயிற்சி போகலாம் என நூலாசிரியர் மிகவும் களிப்புடன் கூறுகிறார். இங்கே மேபெல் இலைகள் பச்சை மஞ்சள் பொன்னிறம் என நிறம் மாறுவது பேரழகு என வியந்து கூறுவதையும் இறுதியில் இலைகள் உதிர்ந்த வேளையில் அவைகள் மீது பாதம் பட நடப்பது தனியொரு சுகம் எனவும் தோழர் நாறும்பூநாதன் குறிப்பிடுகிறார். மேலும் சற்றுத் தூரத்திலுள்ள க்ரூக்ஸ் ஹெட்லண்ட் பூங்காவில் சீகல் பறவைகள் புல்வெளியில் மேய்வதும் அன்னப் பறவைகள் ஏரியில் நீந்துவதும் கண் கொள்ளாக் காட்சி என்கிறார். இதேபோன்று மோனோப் பூங்கா அதனை ஒட்டிய காடுகள் எனப் பலவற்றையும் தனக் கேயுரிய வகையில் சொல் அலங்காரத்துடன் நூலாசிரியர் பதிவிட்டுள்ளமை மேபெல் இலைகளைப் போல இதயத்தைத் தொட்டுச் செல்கிறது.

பல்வேறு பூங்காக்களை அடுத்து நூலாசிரியரை ஈர்த்த இடங்களாகப் பிரமாண்டமான வணிக வளாகங்கள், வணிகக் காட்சியகங்கள், ஏரிகள் இடம்பெற்றிருப்பதைக் காண முடிகிறது. இந்தியாவிலும் அறிமுகமாகியுள்ள IKEA வீட்டுத் தளபாட Show room பல இலட்சம் சதுர அடிகள் கொண்டு மிகப் பிரமாண்டமாக இருப்பதாகக் கூறும் நூலாசிரியர் மனிதர்கள் தவிர வீட்டிற்குத் தேவையான அனைத்தும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறார். ஆச்சரியமூட்டும் ரொறன்ரோவின் நேதன் பிலிப்ஸ் சதுக்கம் அனைத்து விதமான சிறுவர் முதல் பெரியவர்கள் வரை இரசித்து அனுபவிக்கக் கூடிய பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த, வருடந்தோறும் 15 இலட்சத்திற்கும் மேல் மக்கள் வந்து போகும் இடமாகவும் இருப்பதைக் காண முடிகிறது. வணிக வளாகத்திற்கு மத்தியில் சத்யநாராயணா கோவில் அதைத் தொடர்ந்து இன்னும் சில இடங்களில் முருகன் கோவில், சிவன் கோவில் இருப்பதைக் கட்டுரைகளை வாசிக்கும் போது அறிய முடிகிறது. கனடாவில் இலங்கைத் தமிழ் மக்கள் அதிகம் இருப்பதால் தமிழில் அர்ச்சனை நடைபெறுவதாகவும் தமிழ் பாடல்கள் ஆங்காங்கே ஒலிப்பதாகவும் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

உலக அருங்காட்சிகளில் உயர்வான ஒன்றாகக் கருதப்படும் நயாகரா நீர்வீழ்ச்சியைக் கண்டு இரசித்த அனுபவத்தை நூலாசிரியர் கூறும்போது, நாமும் அவருடன் இணைந்து இரசித்த உணர்வு ஏற்படுகிறது. படகு மூலம் அருகில் சென்றும் பக்கவாட்டில் நடந்து சென்றும் அதன் அழகினை, நீர்ச் சிதறல்களைக் கண்டுகளித்த உணர்வை தோழர் நாறும்பூநாதன் உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தியிருப்பதை நூலில் காணலாம். கனடாவையும் அமெரிக்காவையும் இணைக்கின்ற நீர்நிலையாக நயாகரா நீர்வீழ்ச்சி திகழ்கிறது. கனடா அல்லது அமெரிக்கா செல்பவர்கள் கண்கொள்ளா நயாகரா நீர்வீழ்ச்சியைப் பார்க்காமல் நாடு திரும்ப மாட்டார்கள் என்று கூறுமளவிற்கு வருடந்தோறும் ஒரு கோடிக்கு மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதாகவும் கூறப்படுகிறது.

தோழர் நாறும்பூநாதன் அவர்களின் கனடாப் பயணத்தில் அவர் சந்தித்த எழுத்தாளர்கள் இலக்கிய ஆளுமைகள் பால்ய கால நண்பர்கள் எனப் பலரையும் தனது நூலில் குறிப்பிட்டுள்ளமை அவரது மனித உறவுகளின் அவசியத்தை நினைவுபடுத்துவதாக இருக்கிறது. கனடாவில் அரசியல், இலக்கியம், கலை, கலாசாரம் எனச் சமூகம் சார்ந்த பல்வேறு அம்சங்களை வளர்த்தெடுக்கும் வகையில் சமூக உணர்வு

டன் எழுத்துப் பணியினை மிக மேலான வகையில் 'தாய்வீடு' என்ற இதழின் வாயிலாகத் திறம்பட நடத்திவரும் ஆசிரியர் தோழர் டிலிப்குமார் அவர்களைக் கண்டு கதைத்து உரையாடக் கிடைத்தமை பெருமை தரும் சந்திப்பாக நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும் இலங்கை எழுத்தாளர் திரு. பால. சிவகடாட்சம் அவர்களின் அழைப்பின் பேரில் அவர் எழுதிய 'தமிழர் மருத்துவம் ஒரு வரலாற்றுப் பார்வை' என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டமை, பிரபல எழுத்தாளர் திரு. அ. முத்துலிங்கம் அவர்களை அவரின் இல்லத்தில் சந்தித்து உரையாடக் கிடைத்தமை, மற்றுமொரு இலங்கை எழுத்தாளர் திரு. அருள்மொழிவர்மன் அவர்களின் 'தாயகக் கனவுகள்' நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டமை எனப் பல அரிய நிகழ்வுகளை இலக்கிய உணர்வுகளுடன் நம்மிடையே பகிர்ந்து கொள்ளும் சிறப்பை நூலில் காண முடிகிறது.

எழுத்தாளர்களின் சந்திப்புகளுக்கு மத்தியில் தனது பால்ய கால கோவில்பட்டிப் பள்ளித் தோழர்களான மனோகர், அன்பழகன் ஆகியோர்களைச் சந்தித்த பெருமகிழ்ச்சியையும் தனது நூலில் பதிவிடத் தவறவில்லை. இவ்வாறான நிகழ்வுகளுடன் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை மலையக மண்ணின் இலக்கிய அடையாளமாகத் திகழும் மறைந்த பிரபல எழுத்தாளர் சாகித்திய ரத்னா திரு. தெளிவத்தை ஜோசப் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் தோழர் நாறும்பூநாதன் அவர்கள் கலந்துகொண்டு ஆற்றிய சிறப்புரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 2014 அளவில் தமிழக நண்பர்கள் சகிதம் திரு. தெளிவத்தை ஜோசப் அவர்களை இலங்கையில் நேரில் சந்தித்து உரையாடிய நிகழ்வையும் நினைவு கூர்ந்தமை நிகழ்ச்சியில் முத்தாய்ப்பாக அமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

எழுத்தாளர் தோழர் நாறும்பூநாதன் கனடாப் பயணத்தில் கண்டும் கேட்டும் அனுபவித்த பல்வேறு சம்பவங்களை 'பொருநை முதல் நயாகரா வரை' நூலில் இலகு தமிழில் நிறையவே கூறியுள்ளார். அவற்றை நாம் வாசிப்பினூடாக அறிந்து கொள்ளலாம் என்ற போதும், நம் நாட்டில் காணப்படாத மாறுபட்ட பல அம்சங்கள் கனடாவில் காண முடிந்ததை எழுத்தின் மூலம் நம்முடன் பகிர்ந்து கொள்வதையும் காணலாம். பெரும்பாலான கனடியர்கள் செல்லப் பிராணிகளாக நாய்களை வளர்ப்பதுடன் நடைப்பயிற்சியின் போது அவற்றையும் உடன் அழைத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனராம். பூங்கா உட்பட எந்த ஒரு இடத்திலும் நம்மை இந்தியாவில் அதிகம் தொல்லைப்படுத்தும் எறும்பு, நுளம்பு, ஈ என்பவற்றை அங்கு காணமுடியவில்லை என்கிறார். பாதசாரிகளுக்கென்றே அமைக்கப்பட்டுள்ள நடை பாதை, எந்தச் சூழ்நிலையிலும் தடைப்படாத மின்சாரம், எப்போதும் எல்லா இடங்களிலும் குழாய்களில் கிடைக்கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், வீடுகளில் உள்ளேயும் வெளியேயும் பூச்செடிகள் வளர்க்கும் மனநிலை, தனி வீடுகளைச் சுற்றிச் சுற்றுச் சுவரில்லாத நிலை, குளிர் காரணமாக வீடுகளில் ஜன்னல்கள் அதிகம் இல்லாமை, இருபாலாரும் சர்வ சாதாரணமாக புகைபிடிக்கும் பழக்கம், மிக அரிதாகக் காணப்படும் இரு சக்கர மோட்டார் வாகனங்கள், நகரின் மையப்பகுதியிலும் சிறிய ரயில் வண்டிகள் (dram) செல்லும் அழகு, ஹார்ன் ஒலி எழுப்பாத வாகனங்கள், பெருவீதிகளிலும் இசைக் கருவிகளை இசைக்கும் கலைஞர்களென நம்மை வியக்க வைக்கும் ஏராளமான விடயங்களை நூலாசிரியர் நூலில் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.


காற்று மாசு போன்று ஒலி மாசு குறைந்த கனடாவில் வாழும் இடம் மிக அமைதியாக இருப்பதாகக் கூறும் நூலாசிரியர், நமது சுவாசமே நமக்கு தெரியும் அளவிற்கு அமைதியான சூழ்நிலை நிலவுவதாகக் குறிப்பிடுகிறார். கூச்சல் கூப்பாடில்லை. இதனை வேறுவிதமாகப் பார்க்கும் நூலாசிரியரின் மகன் திரு. திலக் 'மனவழுத்தம், பரபரப்பு எதுவுமின்றி அமைதியாய் வாழ்க்கையை ரசித்து வாழ்கிறவர்கள் கனடியர்' என்கிறார். முதுமை ஒரு சுமையல்ல என்ற கோட்பாட்டின் வழியில் வாழும் கனடிய மக்கள் பணி ஓய்வு என்று இல்லாமல் பல்வேறு தளங்களில் பணிபுரிவதாகக் கூறும் நூலாசிரியர் அம்மக்கள் அனைவருமே வார இறுதி நாட்களில் சுற்றுலா சென்று மன இறுக்கத்தைத் தளர்த்திக் கொள்வதையும் சகஜமாகக் காண முடிகிறது என்கிறார். அங்கும் சரவணபவன் போன்ற இந்திய உணவகங்கள் இருப்பதாகவும் கூறுகிறார். கஞ்சா போன்ற போதைப் பொருட்களைக் கண்டு இந்திய மக்கள் அதிர்ந்து போயிருக்கும் நிலையில் கனடாவில் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் கஞ்சா விற்பனை இருக்கிறது என்ற அதிர்ச்சி தரும் தகவலையும் அறிய முடிகிறது. சனநாயகம் அங்கே வளர்ந்து வருவதாகவும் சிறியளவிலான போராட்டங்களும் முக்கியத்துவம் பெறுவதாகவும் தொழிற்பயிற்சி பெற்றவர்கள் (skilled labours) மிக அதிக ஊதியம் பெறுவதாகவும், திறந்த வெளிகளில் ஒலி மாசின்றி மனித குரல்கள் மட்டுமே கேட்பதாகவுமென ஏராளமாக நூலாசிரியர் அவதானித்த விடயங்கள் நயம்பட நூலில் பரவலாக இடம்பெற்றுள்ளதைக் காணலாம். தாயகம் திரும்பும் இறுதி நாளில் பனிப் பொழிவைப் பார்த்து அனுபவிக்க முடிந்தமை தனக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் என்றும் கூறியுள்ளார்.

எழுத்தாளர் தோழர் நாறும்பூநாதன் அவர்களின் கனடாப் பயணத்தில் அனைத்து இடங்களிலும் பெரும்பாலும் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் குறிப்பாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்களே அதிகளவில் இருந்ததாகக் கூறுகிறார். அதனால், அங்கு அழகுத் தமிழ் கேட்க முடிந்ததை மகிழ்வோடு பகிர்ந்து கொள்ளும் நூலாசிரியர், தான் தேடிய போதும் தேடி வந்து யாரும் தன்னுடன் கதைக்கவில்லை, அது ஏனென ஆதங்கத்துடன் பதிவிட்டுத் தனது கேள்விக்கான விடையைக் கனடா வாழ் தமிழ் மக்களிடமே விட்டு விடுகிறேன் எனக் கூறியிருப்பது கவலையுடன் கவனங்கொள்ள வேண்டிய விடயமாகும்.

தோழர் நாறும்பூநாதன் அவர்களின் கனடாப் பயணத்தில் அவர் கண்டுணர்ந்த ஏராளமான தகவல்கள் விடயங்கள் சமூகச் செயற்பாடுகள். 'பொருநை முதல் நயாகரா வரை' நூலில் கொட்டிக் கிடக்கின்றன. அவரது நூல்கள் அனைத்துமே படிப்போருக்கு உற்சாகத்தையும் உத்வேகத்தையும் தருவன. அதன் காரணமாகவே இவரது சில நூல்கள் தென் தமிழகத்தில் பிரசித்தி பெற்ற, நெல்லையில் சில தன்னாட்சி பெற்ற கல்லூரிகளிலும் பல்கலைக்கழகத்திலும் பாட நூல்களாக இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். பயண நூல்கள் வரிசையில் முக்கியத்துவம் பெறக்கூடிய 'பொருநை முதல் நயாகரா வரை' நூலினை வாய்ப்புள்ளவர்கள் படித்துப் பயன் பெற வேண்டும்.



jeyasingh@thaiveedu.com




# நூல் அறிமுகம்

# மேன்மக்கள் சரித்திரம்

- கந்தையா சண்முகலிங்கம்

மேன்மக்கள் சரித்திரம் என்னும் இந்நூல் 1930-ம் ஆண்டு தைமாதம் பிரசுரிக்கப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பை இலங்கை அரசின் இந்து சமய கலாசார திணைக்களம் 2008-ஆம் ஆண்டு மீள்பதிப்பு செய்தது.

இலங்கைத் தமிழர்களின் சமகால வரலாறு (Contemporary History) 19-ம் நூற்றாண்டில் ஆரம்பிக்கிறது எனக் கொள்ளலாம். 1800 முதல் 2024 வரையான இரண்டு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட காலத்து இலங்கைத் தமிழர்களின் சமகால வரலாற்றை ஆராய்ந்து அறிவதற்குத் தேவையான ஆவணங்கள் பல ஆவணக் காப்பகங்களிலும் தனியார் நூலகங்களிலும் உறங்கிக் கிடக்கின்றன. இத்தகைய நூல்களை மீட்டெடுத்து மீள்பதிப்புச் செய்வதும், அவ்வாவணங்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும் முறையிலான நூல் முகவுரைகளை அந்நூல்களின் மறுபதிப்புகளிலேயே எழுதிச் சேர்த்து வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதும் இக்கால அறிஞர்கள் செய்ய வேண்டிய பணிகளில் முதன்மையானதொன்றாகும். அவ்வகையில் இந்து சமய கலாசார திணைக்களம் 'மேன்மக்கள் சரித்திரம்' நூலை மீள்பதிப்பு செய்துள்ளமை பாராட்டத்தக்கதொரு பணியாகும்.

மேன்மக்கள் சரித்திரம் நூலின் ஆசிரியர் தம் சமகாலத்தில் மேல்நிலையில் வாழ்ந்த பெருமக்கள் பற்றிய சரித்திரத்தை இந்நூலில் கூறியுள்ளார். இப்பெருமக்களில் சிலர் நூலாசிரியருக்கு ஓரிரு தலைமுறைகள் முற்பட்டவர்களாகவும் ஐயரவர்களின் சமகாலத்தில் மேல்நிலை பெற்றிருந்த குடும்பங்களைச் சேர்ந்தோராகவும் விளங்கினர். சமகால வரலாறு எழுதும் பணி மிகச் சிரமமானதொன்று. கொழும்பு நகரைப் பிரதானமான மத்திய இடமாகக் கொண்டு உருவாக்கம் பெற்றுக் கொண்டிருந்த மேன்நிலையினர் பற்றிய சுருக்க வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளை ஐயர் தேடித் தொகுத்து இந்நூலில் தந்துள்ளார். நூலறிவும், உலகியல் அறிவும் பெற்றிருந்த ஐயரவர்கள் தம்காலத்தின் சமூக மாற்றங்களையும் அரசியல் நடப்புகளையும் நுண்ணியதாக ஆராய்ந்து அறியும் திறன் படைத்தவராக இருந்தார்.

மேன்மக்கள் சரித்திரம் நூலின் ஆசிரியர் கொழும்பு கொம்பனித் தெரு புதிய அரசினர் பாடசாலைத் தமிழ்ப் பண்டிதராகக் கடமையாற்றியவர். பின்னர் சென் பிரிட்ஜற் கல்லூரியிலும் ஆசிரியராகக் கடமையாற்றியவர். இசைத்துறை விற்பன்னர், மதுரைத் தமிழ்சங்கப் பண்டிதர், தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வல்லவர். கொழும்பு நகரில் அக்காலத்தில் வாழ்ந்த துரைத்தன உத்தியோகத்தர்கள், நீதிபதிகள், பிரபல நியாய துரந்தரர்கள், அரசியல் பிரமுகர்கள் ஆகியோருடன் நட்புப் பூண்டு பழகியவர்.

'...யாம் பல வருடங்களாக, சமஸ்தானப் பிரபுக்களோடும் தனவான்களோடும் உத்தியோகஸ்த்தர்களோடும் நெருக்கமாகப் பழகி, அவரவர்களுடைய மனைவி மக்கள் முதலானோர்க்குக் கல்வி கற்பித்து அன்னியோன்னிய சினேகமாய் ஊடாடியதால் ஞானாசிரியன் அல்லது உபாத்தியாயன் என்ற முறையில் அவர்கள் எம்மைக் கனம் பண்ணவும், யாம் அவரவர்களுடைய பெருமையையும் புகழையும், சந்ததி வரலாற்றையும் தெரிந்து புத்தக ரூபமாய் எழுதவும் ஆரம்பித்தோம்'

என்று நூலாசிரியர் சு. இரத்தினசாமி ஐயர் நூலின் முகவுரையில் குறிப்பிடுகின்றார். கொழும்பு நகரின் பிரமுகர்களுடன் நெருங்கிப் பழகிய அவரால் இந்நூலிற்கான தகவல்களை பெற்றுக் கொள்ள முடிந்தது எனக் கருதலாம்.


## உயர்குழாம் (Elites) என்னும் கருத்தாக்கம்:

ஆங்கிலத்தில் 'எலைட்ஸ்' என அழைக்கப்படும் 'உயர் குழாம்' என்னும் கருத்தாக்கம் இலங்கையில் நவீன காலத்தில் ஏற்பட்டு வந்த சமூக மாற்றத்தினை விளக்குவதற்கு சில வரலாற்று ஆய்வாளர்களால் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. உயர் குழாம் என்னும் கருத்தாக்கத்தின் துணையுடன் இலங்கைத் தமிழர் சமூக வரலாற்றை ஆராயப்புகும் ஒருவருக்கு 'மேன்மக்கள் சரித்திரம்' ஒரு தகவல் களஞ்சியமாக அமையக் கூடிய வரலாற்று ஆவணம் என்பதில் ஐயமில்லை. 'எலைட்ஸ்' என்ற சமூகவியல் கலைச்சொல்லை ஒரு கலைச்சொல் என்ற உணர்வோடு 'மேன்மக்கள்' என்று ஐயரவர்கள் குறிப்பிட்டார் என்று நாம் கருதுவதற்கு இடம் இல்லை.

'...மேன்மக்களென்றது' மானிடவருள் கல்வியறி வொழுக்கம்,

சமய பக்தி, தான தருமம், நற்குண நற்செய்கை, சாந்தம், பொறை அடக்கம், பரோபகாரம், பிரபுத்துவம், பகுத்தறிவு, இன்சொல், ஈகை, இரக்கம் இவை முதலாய இன்னோரன்ன சிறந்த குணங்களையுஞ் செயல்களையுமுடைய உத்தமர் களே மேன்மக்களெனப்படுவார்கள்'

ஐயரவர்கள் முகவுரையில் காணப்படும் மேற்கூறிய கூற்று 'மேன்மக்கள்' பற்றிய அகவயப்பட்ட அளவு கோல்களுக்கே




முதன்மையளிக்கின்றது. இருந்த போதும் ஐயரவர்கள் மேன் மக்கள் யார் என்பது பற்றிய புறவயமான அளவு கோல்கள் பற்றிய தெளிவு உடையவராயும் இருந்தார் என்பதை முகவு ரையில் காணப்படும் கீழ்வரும் கூற்றின் மூலம் நாம் உணரமு டியும்.

'இந்நகரிலிருக்கும் தமிழ் மக்களுள் அநேகர் அரசாங்க உத் தியோகத்தர்களாகவும், சட்டசபை அங்கத்தவராகவும் நீதிப திகளாகவும், பிரபல நியாயதுரந்தரர்களாகவும், டாக்டர்மார்க ளாகவும், புறோக்கர்மார்களாகவும், வியாபாரிகளாகவும், சீமை வர்த்தகர்களாகவும், அட்டைஸ்வரியப் பிரபுக்களாகவு மிருக்கின்றனர்'

இக்கூற்றில் பலவகைப்பட்ட குழுவினரை நூலாசிரியர் குறிப் பிடுகின்றார். இவர்களை மூன்று குழுக்களாக நாம் இனம் பிரித்துக் கொள்ள முடியும்.

- உயர் தொழில்களில் ஈடுபடுவோர் (Professionals), அர சாங்க உத்தியோகத்தர்கள், சட்டசபை அங்கத்தவர்கள், நீதிபதிகள், நியாயதுரந்தரர்கள், டாக்டர்கள் ஆகியோர் இப்பிரிவில் அடங்குவர்.
- வியாபாரம், வங்கித் தொழில் ஆகியவற்றில் இடைத் தரகர் களாக செயற்பட்டோர், புறோக்கர்கள், சிறாப்பர்கள் (Shroffs).
- சீமை வர்த்தகர்கள் - ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபட்டோர், பெரிய தனவந்தர்கள், அட்டைஸ்வரியப் பிர புக்கள் - பெருந்தோட்டங்களிலும் நகரச் சொத்துக்களி லும் (Urban Property) முதலீடுகள் செய்துள்ளவர்களான தொழில் முயற்சியாளர்கள்.

'உயர்குழாம்' என்ற கருத்தாக்கத்தோடு சமூக வர்க்கங்கள் (Social Classes) என்ற கருத்தாக்கத்தையும் நாம் தொடர்புப டுத்தியும் நோக்குதல் முடியும். சமூக வர்க்கங்கள் என்னும் கருத்து மனிதர் உற்பத்தி முறைமையொன்றுடன் தொடர்பு கொள்ளும் உறவு கொண்டு வரையறை செய்யப்படுவதாகும்.

'ஒரு குறிப்பிட்ட உற்பத்தி முறைமையின் கீழ் தாம் பெற்றுக் கொள்ளும் அமைப்பியல் நிலை (Structural Position) கொண்டு தம்மிடையே வேறுபடும் சமூகக் குழுக்களே வர்க் கங்கள் எனப்படும். உற்பத்திச் சாதனங்களுடன் கொள்ளும் தொடர்பு, சமூகவேலைப் பிரிவினையில் அவை பெறும் இடம், சமூகம் உருவாக்கும் செல்வத்தில் (Wealth) அவை பெற்றுக் கொள்ளும் அளவு, அந்த செல்வத்தை பெற்றுக்கொள்ளும் முறை என்பனவற்றைக் கொண்டும் வர்க்கங்களை இனம் காணலாம்'. (நியூட்டன் குணசிங்க).

19-ம், 20-ம் நூற்றாண்டுகளில் தோன்றிய சமூக பொருளாதார மாற்றங்களின் விளைவாகத் தோன்றிய புதிய சமூகக் குழு ஒன்று பற்றிய தகவல் களஞ்சியமாக விளங்கும் 'மேன்மக்கள் சரித்திரம்' நூலை நவீன சமூகவியல் கருத்துக்களின் துணை யுடன் ஆராய்தல் பயன்தரும். 'உயர் குழாம்', 'சமூக வர்க்கங் கள்' என்னும் இரு கருத்தாக்கங்களும் இந்த நூல் பற்றிய சமூக வரலாற்றியல் நுண்ணாய்வுக்கு பயன்படக் கூடியன என் பதால் அவை பற்றிச் சுருக்கமாக மேலே குறிப்பிட்டோம்.

### உயர்குழாம் வரைவிலக்கணம்:

இலங்கையின் நவீனகால சமூக வரலாற்றை ஆராய்ந்து பல நூல்களையும், கட்டுரைகளையும் எழுதியவர் மைக்கல் றொபர்ட்ஸ் என்னும் வரலாற்று ஆய்வாளர். இவர் 'உயர்கு ழாம் உருவாக்கமும் உயர்குழாம்களும் 1832-1931' (Elite Formation and Elites 1832-1931) என்னும் தலைப்பிலான கட் டுரையினை (1973) எழுதினார். இக்கட்டுரையில் உயர்குழாம் பற்றிய பயனுள்ள வரைவிலக்கணம் ஒன்றை அவர் தந்துள் ளார். உயர்குழாம் ஒன்றின் அடிப்படை இயல்புகளாக ஆறு விடயங்களை அவர் குறிப்பிடுகின்றார். அவர் கூறியிருப்ப வற்றை எமது வார்த்தைகளில் கீழே தந்துள்ளோம்.

- உயர்குழாம் உறுப்பினரின் தகுதிகளில் ஒன்று பெருஞ் செல்வத்தை உடைமை கொண்டிருத்தலாகும், சமூகத் தால் பெறுமதி மிக்கதாகக் கருதப்படும் பண்டங்களையும் சேவைகளையும் ஏனைய சமூகக் குழுவினரை விடக் கூடிய

அளவில் பெற்றுக் கொள்ளும் ஆற்றல் உடையவர்களே செல்வந்தர் எனப்படுவர்.

- உயர்குழாத்தினர் அரசியல் அதிகாரம் (Power) உடையவராய் இருப்பர். அரசியல் அதிகாரம் இல்லாதவிடத்து அந்த அதிகாரத்தை உடையவர்களை அணுகிக் கருமம் ஆற்றும் வல்லமை உடையவராய் இருப்பர்.
- சமூகத்தால் மதிப்பு மிக்கதெனக் கருதப்படும் உத்தியோகப் பதவிகளை வகிப்பராய் உயர்குழாத்தினர் இருப்பர். அரசியல் அதிகாரத்தில் இருந்து வேறுபட்டதான உத்தியோகப் பதவி வழி அதிகாரம் (Authority) உயர்குழாத்தின் சமூக அந்தஸ்தின் ஆதாரமாகும்.
- உயர் குழாத்தினர் வெகுஜனங்களில் இருந்து வேறுபட்ட வாழ்க்கை முறையினையும் நடை, உடை, பாவனைகளையும் கொண்டிருப்பர். இவை ஏனைய சமூகக் குழுக்களால் உயர்ந்தன எனப் போற்றப்படுத்தலும் உண்டு, ஏற்புடையன அல்ல எனக் கண்டிக்கப்படுவதும் உண்டு.
- சமூகத்தால் மதிக்கப்படும் அறிவுத்துறை ஈடுபாடுகளில் நாட்டமும் விருப்பமும் கொண்டோராயும் புலமை பெற்றவராயும், கல்வியாளர்களாயும், கலைகளில் வல்லோராயும் இவர்கள் விளங்குவர்.
- உயர் சமூக அந்தஸ்து (High Social Status) உயர்குழாத்தின் முக்கிய அடையாளம். இந்த அடையாளம் இலங்கை போன்ற சமூகங்களில் சாதியை அடிப்படையாகக் கொண்டும் நிர்ணயிக்கப்படும்.

உயர்குழாம் உறுப்பினராகும் தகுதி மேலே குறித்த எல்லா அம்சங்களையும் ஒருசேரப் பெற்றுக் கொள்வதால் தான் ஏற்பட முடியும் என்று கூறுவதற்கில்லை. இவற்றுள் ஒன்றோ இரண்டோ அம்சங்கள் குறைவுபட்ட போதும் ஒருவர் உயர்குழாம் தகுதியைப் பெற்றுக் கொள்ள முடியும். நவீன சமூகவியல் கோட்பாடுகளுக்குப் பொருந்தக்கூடிய முறையில் அமையும் மேற்குறித்த வரைவிலக்கணத்தின் பின்னணியில் நூலாசிரியர் விபரிக்கும் மேன்மக்கள் பிரிவினரின் இயல்புகளை பகுத்தாராய்தல் முடியும்.

## சமூக அசைவியக்கம் (Social Mobility):

இலங்கையில் 19-ம், 20-ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்களின் பயனாகப் புதிய சமூக வர்க்கங்கள் தோற்றம் பெற்றன. 'மேன்மக்கள் சரித்திரம்' எடுத்துக் கூறும் குண இயல்புகளைக் கொண்ட மாந்தர் புதிதாகத் தோற்றம் பெற்ற சமூகவர்க்கம் ஒன்றின் பிரதிநிதிகளேயாவர். ஐயரவர்கள் இந்நூலில் 250-றக்கு மேற்பட்ட தனிநபர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை விபரித்துச் சொல்கிறார். இவர்களில் சிலர் தம் வாழ்க்கைக் காலத்திலேயே கல்வியாலும் முயற்சியாலும் சமூக ஏணிப்படியில் உயர்ந்தவர்கள். இன்னும் சிலர் சமூகப்படி நிலையில் தம்மை ஏற்கனவே உயர்த்திக் கொண்ட குடும்பங்களில் தோன்றி குடும்ப பலத்தின் உதவியோடு தம்மையும் தம் குடும்பத்தினரையும் மேலும் உயர்நிலைக்கு உயர்த்தியவர்கள். தனிநபர் ஒருவரின் வாழ்க்கைக் காலத்தில் அடையும் உயர்ச்சியையும் (Intra Generational Mobility) தந்தை, பாட்டன், முப்பாட்டன் என்ற தலைமுறைவழிவரும் (Inter Generational Mobility) உயர்ச்சியையும் நாம் ஒருங்குசேர்த்து பார்த்தலும் முடியும். மேலே நாம் மேற்கோள் காட்டிய மைக்கல் றொபர்ட்ஸ் கட்டுரையில் அவர் வரையறுத்துக் கொண்ட கால எல்லை 1832-1931 என்பதைக் கண்டோம். சு. இரத்தினசாமி ஐயர் தம் நூலை எழுதி வெளியிட்ட ஆண்டு 1930 ஆகும். ஐயரவர்களும் ஒரு நூற்றாண்டு கால எல்லையுள் உயர்ச்சி பெற்று மேன்நிலை பெற்ற தனிநபர்களையும் குடும்பங்களையும் பற்றிய வரலாற்றையே தம் நூலில் விபரிக்கின்றார்.

சமூக அசைவியக்கம் (Social Mobility) என்ற சொல் சமூக ஏணிப்படியின் மேல் நோக்கிய உயர்ச்சியை மட்டுமல்லாது கீழ் நோக்கிய தாழ்ச்சியையும் குறிப்பது. இதனைவிட கிடைப் பெயர்ச்சி (Lateral Mobility) என்னும் புவியியல் சார் பெயர்ச்சியையும் சமூக அசைவியக்கம் என்பதில் சேர்க்கலாம். 1930 வரையான ஒரு நூற்றாண்டு காலத்தில் கொழும்பு நகரில் உருவாக்கம் பெற்ற தமிழ் உயர்குழாம் தமது மேல்நோக்கிய பெயர்ச்சியின் இன்றியமையாத அம்சமாக கொழும்பு நோக்கிய இடப்பெயர்ச்சியையும் கொண்டிருந்தது. 1830-களின் பின்னரான பொருளாதார மாற்றங்களின் அமைப்பியல் அம்சங்கள் கொழும்பு நோக்கிய இடப்பெயர்வைக் கட்டாயத் தேவையாக்கின. 'பட்டணம் போனதால் கெட்டவன் இல்லை' என்பது 1830-1930 காலத்தின் அனுபவ உண்மையும் ஆயிற்று. எழுச்சி பெறும் மத்திய வகுப்பின் உயர்ச்சி மேல் நோக்கியதாகவே இருந்தது. அது புவியியல்சார் கிடைப்பெயர்ச்சியாகவுமிருந்தது. குமாரி ஜெயவர்த்தன அவர்கள் யாழ்ப்பாணத் தமிழர்களின் கொழும்புநோக்கிய இடப்பெயர்ச்சியால் 'கொழும்புத் தமிழ் முதலாளித்துவம்' உருவாகியதென்று கூறியுள்ளார். ஏ.ஜே. வில்சன் அவர்கள் இலங்கைத் தமிழர்களில் 'கொழும்புத் தமிழர்' என்ற தனித்துவமான சமூகக் குழு உருவாகியதென்று குறிப்பிட்டுள்ளார்.

## சமூக அசைவியக்கம் – ஒரு மாதிரி:

மேன்மக்கள் சரித்திரம் நூல் பல நிலைகளிலும் ஏற்படும் உயர்ச்சியை எடுத்துக் கூறுகிறது. ஆங்கிலப் பாடசாலையில் கல்வி கற்று 'சீனியர்' பரீட்சையில் தேறிய பின் 'கிளறிக்கல் லைனில் உயரும்' இளைஞர்கள் முதல், கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை சென்று கல்வி கற்று சிவில் சேவைப் பரீட்சையில் சித்தி பெற்ற முதலாவது இலங்கையர் என்ற பெருமையைப் பெறும் பொ. அருணாசலம் வரை உயர்ச்சியின் படித்தரங்கள் வேறுபடுகின்ற போதும் எல்லோரிலும் வெளிப்படும் பொது அம்சங்களாக விடாமுயற்சி, ஊக்கம், கடின உழைப்பு, கல்வியின் மீதான வேட்கை என்பன அமைந்திருப்பதைக் காணலாம். மரபு வழிச் சமூகங்களின் உயர்குழாம்களின் தகுதியும், நிலையும் (Position) நபர்களின் முயற்சியால் அடையப்படுவன அல்ல, மாறாக அவை நபர்கள் மீது மரபுரிமையாக ஏற்றப்படுவனவாக இருந்தன. மேன்மக்கள் சரித்திரத்தில் விபரிக்கப்படும் ஆளுமைகளில் பெரும்பான்மையினர் 'உழைப்பால் உயர்ந்தோர்' என்றே கூறுதல் வேண்டும். அவர்கள் அடைந்த சிறப்புக்கள் அனைத்தும் அடையப்பட்டனவே (Achieved). தற்போது இராசதானியாக விளங்கும் இக் கொழும்பு மாநகரில் 'றிக்வெஸ்ற் கோடென்னும்' நீதிஸ்தலத்திற்குக் கொம்மிஷராய் விளங்கும்' W.D. நைல்ஸ் வாழ்க்கைச் சரிதத்தை சு. இரத்தினசாமி ஐயர் பின்வருமாறு எழுதுகிறார்.

'... இப்பேரறிஞருடைய சந்ததி வரலாற்றை இங்குள்ளாரிடம் விசாரித்த போது எமக்கு விபரமாகக் கூறுவாரில்லை. ஆகவே யாம் ஒரு வயோதிகரிடம் சென்று விசாரித்த பொழுது அவர் ஆதியோடந்தமாகச் சிலவற்றைத் தெரிவித்தார். அதனை இங்கு தருகின்றோம். அதாவது புன்னாலைக்கட்டு வன் என்னுமிடத்தில் வேளாண் மரபிலேயுதித்த வேலாயுதர் என்று ஒருவர் இருந்ததாகவும், இவருக்குக் கதிரேசர் என்ற ஒரு புத்திரர் இருந்ததாகவும் இக்காலத்தில் இவர் மிஷனரி யிற் சேர்ந்து கல்வி கற்று கிறிஸ்து மதத்தைத் தழுவி 'Nathanielz Niles' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றிருந்தன ரென்றும், இந்த நதானியல் நைல்சுக்கு ஜோன் நைல்ஸ் என் றும் டானியல் பூர் நைல்ஸ் என்றும், சாம்யூல் நைல்ஸ் என்றும் மூன்று புத்திரர்கள் உண்டென்றும் தெரிவித்தார். இந்த மூவ ருள் Danial Poor Niles என்பவர் வட்டுக்கோட்டை மிஷன் பாட சாலையில் கல்வி கற்று அரங்கேறியதாகவும் அக் காலத்திலி ருந்த பாதிரியாரைத் தமக்குத் துணையாகக் கொண்டு, வட் டுக்கோட்டையிற்றானே ஹைஸ்கூல் என்ற நாமத்துடன் ஓர் வித்தியாசாலையை ஸ்தாபித்து பல மாணவருக்குக் கல்வி கற்பித்து உலகில் நற்கீர்த்தி பெற்று விளங்கினாரென்றும், இவருடைய புத்திரரே இப்பொழுது நீதவானாயிருக்கின்றா ரென்றும் அறியலானோம். ஆகவே ஸ்ரீமான் W.D. நைல்ஸ் அவர்களுடைய திறமையைப் பற்றிப் பலரும் மெச்சியதால் இப்பேரறிஞரை யாமும் நன்கு மதித்து எழுதலானோம். இவர் யாழ்ப்பாணத்திற் பல காலம் பிரபல நியாயதுரந்தராயிருந்து பிரக்கியாதி பெற்று விளங்கினார். இவருடைய திறமையை நன்குணர்ந்த அரசினர், டிஸ்திறிக் நீதிபதியாக நியமித்தனர். இவர் இதுகாறும் மட்டக்களப்பு, சிலாபம், திரிகோணமலை என்னுமிடங்களிற் கடமை பார்த்துப் பலராலும் நன்கு மதிக் கப் பெற்றனர். வடமாகாணத்திலுள்ள நியாயவாதிகளுள் முத லாவதாக இவ்வுத்தியோகத்தைப் பெற்றவர் இவர் ஒருவரே யாம். இவர் ஆழ்ந்த அறிவும் அமைதியான போக்கும் விவேக புத்தியும் சாந்த குணமும் மிக்க பொறுமையுடையவராய்க் காணப்படுகிறார்'

வடகிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட சமூக அசைவியக்கத் தின் போக்கை மிகச் சிறப்பாக எடுத்துக் கூறும் இது போன்ற சரிதங்கள் பலவற்றை இந்நூலின் பக்கங்கள் தோறும் காண லாம். W.D. நைல்ஸ் அவர்களின் சரித்திரம் 1830-1930 காலப் பகுதியில் உயர்நிலைக்கு முன்னேறிய கொழும்புத் தமிழ் மேன்மக்களின் ஒரு பிரிவினரான உயர்தொழில் வகுப்பினரின் (Professional Class), வகை மாதிரியாகக் கருதக் கூடியது.

## உயர்தொழில் வகுப்பினர்:

உயர்தொழில் வகுப்பினரில் சட்டம், மருத்துவம், பொறியியல் ஆகிய மூன்று துறைகளிலும் அரசாங்க உயர் பதவிகளிலும் சிறப்பிடம் பெற்றோர் அடங்குவர். குறிப்பாக மருத்துவத்து றையில் யாழ்ப்பாணத்தவர்கள் வியத்தகு முன்னேற்றத்தை எட்டினர். டாக்டர் எஸ்.எவ். கிரீன் (1822-84), என்னும் அமெரிக் கர் 1848-ம் ஆண்டில் யாழ்ப்பாணம் மானிப்பாய் என்னுமிடத் தில் மருத்துவக் கல்லூரியை நிறுவி யாழ்ப்பாணத்து இளை ஞர்கள் பலரை மேலைத்தேச மருத்துமுறையில் பயிற்றுவித் தார். 1870-ம் ஆண்டில் கொழும்பில் இலங்கை மருத்துவக் கல்லூரி அரசாங்கத்தால் தொடக்கப்பட்டபொழுது, கிறீனின் மாணவர்கள் கொழும்புக்கு மாற்றப்பட்டனர். 19-ம் நூற்றாண் டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தின் கிராமங்களில் இருந்து வந்த மருத்துவர்கள் அரச சேவையிலும் தனியார் துறை மருத்துவ சேவையிலும் பிரகாசித்தனர். இதுபற்றி, குமாரி ஜய வர்தன பின்வருமாறு கூறுகிறார்.

'முன்னணியில் திகழ்ந்த தமிழ் மருத்துவர்களிற்கு சில உதார ணங்களைக் கூறலாம். Dr.M.G. றொக்வூட் (பிறப்பு 1843), சென்னை மருத்துவக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற வர். 40 ஆண்டுகள் வரை இவர் அரச மருத்துவமனைகளில் கடமையாற்றினார். Dr.S.C. போல் (பிறப்பு 1872), LRCP, FRCS போன்ற உயர் பட்டங்களைப் பெற்றார். அவர் அரச சேவை யில் உயர்ச்சி பெற்றுத் தனிச்சிறப்புக்களை அடைந்ததோடு மருத்துவக் கல்லூரியில் ஆசிரியராகவும் கடமையாற்றினார். Dr.M. சின்னத்தம்பி (பிறப்பு 1859), FRCS (எடின்பேர்க்), MD (பிரஸ்ஸல்ஸ்), ஆகிய பட்டங்களைப் பெற்றதோடு டி. சொய்சா மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை நிபுணராக வும் அரச சேவையில் சிறப்புற பணியாற்றினார். Dr.E.V. றட்-ணம் மருத்துவக் கல்வியை முடித்த பின் 1900 ஆண்டு முதல் அரசுப் பொது மருத்துவமனையில் கடமையாற்றத் தொடங்கி னார். பின்னர் 1906-ம் ஆண்டில் தனது சொந்த மருத்துவம னையை ஆரம்பித்தார். Dr. யொனாதன் ஹோமர் (பிறப்பு 1878), தமது மருத்துவமனையை ஆரம்பிக்க முன்னர் அரச மருத்துவராகப் பணிபுரிந்தார். Dr.P.M. முத்துக்குமாரு (பிறப்பு 1865), அபர்டீன் சென்று கல்வி கற்றவர், தனியார் மருத்துவமனை மூலம் விசாலித்த சேவையை வழங்கினார். 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிற துறைகளிலும் யாழ்ப் பாணத்தவர்கள் தடம் பதித்தனர். சட்டத்துறை, பொறியல் துறை என்பனவற்றிலும் பிற உயர் தொழில்களிலும் இவர்கள் பிரகாசித்தனர். யாழ்ப்பாணத்தின் இரண்டாம் நிலைக் கல்விக் குரிய பாடசாலைகளில் பெறக் கூடியதாய் இருந்த தரமான கல்வி அவர்களின் உயர்ச்சிக்குக் காரணமாக இருந்தது. இந் தியாவிற்கோ அல்லது பிரித்தானியாவிற்கோ சென்று மேற்ப டிப்பையும் இவர்கள் மேற்கொண்டனர்.'

## வர்த்தகம், வங்கித்தொழில் – இடைத்தரகர்கள்:

உயர்தொழில் துறையினரில் 'புறோக்கர்கள்', காசாளர்கள் (Cashiers), சிறாப்பர்கள் (Shroffs), என்ற பதவிகளில் இருந்த தமிழர்களை தனித்த ஒரு பிரிவினராக நோக்குதல் வேண்டும். இந்நூலாசிரியர் சு. இரத்தினசாமி அவர்கள் கொழும்புத் தமிழ்ச் சமூகத்தில் புறோக்கர்கள், சிறாப்பர்கள், கொமிசன் ஏஜன்டுகள், காசாளர்கள் போன்ற பிரிவினர் வகித்த முக்கி யத்துவத்தை மிகத்தெளிவாக உணர்ந்திருந்தார் என்பதை இந்நூலினைப் படிப்போர் தெரிந்துகொள்வர். மானிப்பாய், அராலி, வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய், ஆனைக்கோட்டை முதலிய ஊர்களைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழர்கள் பலர் வர்த்தகத்திலும் வங்கித் தொழிலிலும் இடைத்தரகர்களாக நுழைந்து உயர்நிலை பெற்றனர். காலனித்துவ கட்டத்தில் வர்த்தக முதலாளித்துவம் எழுச்சியுற்ற போது மிக இன்றிய மையாத பணியை 'புறோக்கர்'கள் செய்தனர். அக்காலத்தில் வர்த்தக மொழியாக (Language of Commerce), தமிழ் இருந் ததென்றும் தென்னிந்திய செட்டியார்களினதும் முஸ்லிம்களி னதும் கையில் இருந்த இந்த வர்த்தகத்தில் ஆங்கில அறிவு பெற்றவர்களான யாழ்ப்பாணத்தவர்கள் இடைத்தரகர்களா கப் புகுந்து சிறப்பெய்த முடிந்ததென்றும் குமாரி ஜயவர்தன குறிப்பிடுகின்றார்.

'கோப்பிச் செய்கையின் ஆரம்ப கட்டத்தில் வங்கித்தொழில் வளர்ச்சிபெற்று இருக்கவில்லை. உண்டியல்களை கழிவு செய்யும் அடிப்படையான வங்கிச் சேவையைப் 'புறோக்கர்கள்' வழங்கினர். கொமிசன், வட்டி என்பன நல்ல வருவாயாக இருந்தன. கல்வி கற்ற யாழ்ப்பாணத்தவர்கள் இத்துறையில் முன்னேறுவது இலகுவாயிற்று. அவர்களின் ஆசிரியர்களான அமெரிக்கர்கள் வர்த்தக முயற்சிசார் திறன்களைப் போற்றும் நாட்டில் இருந்து வந்தவர்கள். யாழ்ப்பாண மாணவர்கள் ஊக்கத்தோடு இவர்களிடம் கற்றார்கள், வர்த்தகம் சார் திறன்களையும் வளர்த்துக் கொண்டார்கள்.'

சுதேச வர்த்தகர்கள், ஐரோப்பிய வங்கியாளர்கள் என்ற இரு சாராருக்கும் இடையில் நின்ற இடைத்தரகர்கள் தமது வாடிக்கையாளரின் நாணயம் (Credit Worthiness) பற்றியும், வியாபாரம் பற்றியும் சிபார்சு அறிக்கைகளை வழங்கி வங்கிகளில் கடன் பெறுவதற்கு உதவினார்கள். தமிழ் புறோக்கர்கள் 1830 காலத்திலேயே புறக்கோட்டையில் செயற்படத் தொடங்கினர் என்றும் கப்பர் (Capper) என்பவரை மேற்கோள் காட்டி குமாரி ஜயவர்த்தன குறிப்புரைகளைத் தருகின்றார். மருத்துவர்கள் முதல் 'புறோக்கர்கள்' ஈறாக உள்ள உயர்தொழில் துறைகளில் தமிழர்கள் ஏன் நாட்டம் கொண்டனர் என்பது குறித்து குமாரி ஜயவர்த்தனா கூறும் கருத்துக்களை அடுத்து நோக்குவோம். 'மேன்மக்கள் சரித்திரம்' நூலின் வாயிலாக வெளிப்படும் கொழும்புத் தமிழ்ச் சமூக உருவாக்கம் பற்றிய புரிதலுக்கு இவை உதவக் கூடியன.

## முன்னேற்றத்திற்கான தடைகள்:

ஜோர்ஜ் பேர்ட் (George Bird), என்பவர் பேரளவு உற்பத்தி முறையில் அமைந்த கோப்பி தோட்டம் ஒன்றை 1823-ம் ஆண்டில் கம்பொலவில் ஆரம்பித்தார். பெருந்தோட்ட உற்பத்தி முறையின் அறிமுகம் இவ்வாண்டில் இலங்கையில் நிகழ்ந்தது. இந்த உற்பத்தி முறை 1833-1843 காலத்தில் பல மடங்கு விருத்தியுற்றது. பெருந்தோட்ட பொருளாதார முறையின் அறிமுகம் மூலதனத்தின் திரட்சிக்கும், புதிய வியாபார தொழில் முயற்சிகளில் முதலீடு செய்வதற்கும் வாய்ப்புக்களையும் வழங்கியது.

- பெருந்தோட்ட முதலீடுகள்
- சாராய உற்பத்தியும் குத்தகையும்
- காரியச் சுரங்க அகழ்வுத் தொழில்
- ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம்

என்ற நான்கு துறைகளின் ஊடாக 19-ம் நூற்றாண்டில் முதலாளித்துவ வளர்ச்சி இலங்கையில் ஏற்பட்டது. மத்திய மாகாணமும், கொழும்பை மையமாகக் கொண்ட மேற்கு மாகாணமும் இப்புதிய வளர்ச்சியின் குவிமையங்களாயின. இந்தப் பின்புலத்தில் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நிலை என்னவாக இருந்தது என்பதை குமாரி ஜயவர்தன பின்வருமாறு விளக்குகிறார்.

'இலங்கையில் 19-ம் நூற்றாண்டில் மூலதன ஆக்கம் ஏற்படுவதற்கு பிரதான வழிகளாக இருந்தவை என்று கூறத்தக்க வழிகள் எதுவும் வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழர்களுக்குக் கிடைக்கவில்லை. மதுபான உற்பத்தித் தொழில், பெருந்தோட்ட முதலீடுகள், காரீயச் சுரங்க அகழ்வு, ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் ஆகியனவே அக்காலத்தின் பிரதான முதலீட்டு வழிகளாக இருந்தன. வடக்கு கிழக்கின் மக்கள் தொகை அடர்த்தி குறைவான காரணத்தால் வர்த்தகம், மதுபான உற்பத்தி வியாபாரம் ஆகிய இரண்டு துறைகளிலும் வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டனவாய் இருந்தன. இயற்கை வளங்களில் ஒன்றான காரீயம் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இருக்கவில்லை. கோப்பி, தேயிலைத் தோட்டங்கள் மத்திய மலைநாட்டிலேயே உருவாகின. கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் மட்டும் தென்னந் தோட்டங்கள் உருவாக்கப்பட்டன. மூலதன ஆக்கத்திற்கான வழிகள் இவ்வாறாகத் தடைப்பட்டிருந்தன. மது வரி வருவாய் பற்றிய தரவுகள் இதனை எடுத்துக் காட்டுகின்றன.'

மூலதன ஆக்கத்திற்கும் முதலீட்டுக்குமான வாய்ப்புகள் தடைப்பட்ட நிலையில் ஆங்கிலக் கல்வியின் துணை கொண்டு உயர்தொழில்களிலும் புறோக்கர்கள் என்னும் இடைத்தரகர் தொழிலிலும் கொழும்புத் தமிழர்கள் உயர் நிலை பெற்று முன்னிலைக்கு வந்தனர். கொழும்பு நகரின் வர்த்தகத்தில் தமிழர்களான செட்டிகள் முக்கிய பங்கு வகித்தனர். செட்டிகள் வங்கிகள் வளர்ச்சியுறாத அக்காலத்தில் வங்கியாளர்களாகவும் இருந்தனர்.

## கொழும்பு நகரின் தனவந்தர்கள்:

மேன்மக்கள் சரித்திரம் நூலில் ஏறத்தாள 250 வரையான பெருமக்கள் பற்றிய சரித்திரக் குறிப்புக்கள் உள்ளன. இப்பெருமக்களில் ஏறத்தாள அரைப்பங்கினர் 'வியாபாரிமார்கள்', 'சீமை வர்த்தகர்கள்' என்ற வகையினராயும் தனியார் துறை வர்த்தக முயற்சிகளுடன் தொடர்புபட்ட 'புறோக்கர்களாகவும்' இருந்தனர். நூலாசிரியர் குறிப்பிட்டிருப்பது போல் 'சிலர் அட்டைஸ்வரியப் பிரபுக்களாகவும்' விளங்கினர். கொழும்பு நகரில் வாழ்ந்த தமிழர்களான தனவந்தர்களின் தொழில் வியாபார முயற்சிகள், முதலீடுகள், சொத்துக்கள் பற்றிய பொருளாதார மதிப்பீட்டை செய்வதோ அவை பற்றிய தகவல்களைத் தருவதோ நூலாசிரியரின் நோக்கமாக இருக்கவில்லை. இத் தனவந்தர்கள் செய்துவரும் தான தருமங்கள், சமயத் தொண்டுகள் நற்குண நற் செய்கைகள், குடிப்பிறப்பு, மனைவி, மக்கள், சுற்றத்தவர் பற்றிய விபரங்களை ஆசிரியர் வழங்குகிறார். பிற இனத்தவர்களுடன் ஒப்பீடு செய்வதும், மதிப்பிடுவதும் கூட அவரது நோக்கமாக இருக்கவில்லை.

## பொன்னம்பலம் – குமாரசாமி குடும்பம்:

19-ம், 20-ம் நூற்றாண்டுகளில் இலங்கையின் சமூக அரசியல் வாழ்வில் முதன்மை பெற்று விளங்கிய சேர். முத்துக்குமாரசாமி (1833-79), சேர். பி. அருணாசலம் (1853-1924), சேர். பி. இராமநாதன் (1851-1930), ஆகியோர் பற்றிய வாழ்க்கைச் சரிதைக் குறிப்புக்களை நூலாசிரியர் விபரமாகத் தருகின்றார். இவர்களுள் சேர்.பி. அருணாசலம், ஐயரவர்களின் இலட்சிய புருஷராகவும், 'மேன்மக்கள் சரித்திரம்' நூலின் சிறப்புக்குரிய கதாநாயகனாகவும் விளங்குகிறார். அவரின் உருவப்படத்தை நூலின் முற்பகுதியில் அச்சிட்டிருப்பதோடு நூலின் அனுபந்தம் என்ற பகுதியில் 'கௌரவ சேர். அருணாசலம் இலங்கை அரசாங்க முறையைச் சீர் செய்து இராச்சியத்தைத் திருத்திய விதங்கள்' என்ற தலைப்பிட்டு நீண்ட கட்டுரையொன்றையும்

எழுதிச் சேர்த்துள்ளார். மரபு வழித் தமிழ்க் கல்வியோடு, ஆங்கில அறிவும், கலைகளில் ஆழ்ந்த ஈடுபாடும், உலகியல் அறிவும் நிரம்பப்பெற்றவராய் இருந்த இரத்தினசாமி ஐயர் அக்காலத் தமிழறிஞர்களில் இருந்து வேறுபட்ட பண்புகளை உடையவராயும், அரசியல் சமூக விவகாரங்களில் பிறரிடத்துக் காணப்படாத முதிர்ச்சியை கொண்டவராயும் இருந்ததை சேர்.பி. அருணாசலம் தொடர்பாக அவர் எழுதியிருப்பவை வெளிப்படுத்தி நிற்கின்றன.

பிரித்தானியர் ஆட்சியின் தொடக்க காலத்திலேயே கொழும்புக்கு வந்து சேர்ந்தவரான குமாரசாமி முதலியார் முதல் தமது நூலை எழுதிய காலம் வரையாக (1930), கொழும்பு நகரில் சிறப்புற்றிருந்த இக்குடும்ப உறுப்பினர்கள் பலரின் தகவல்களை ஐயரவர்கள் இந்நூலில் தொகுத்து வழங்குகிறார். நன்னித்தம்பி, நமசிவாயம், சண்முகம், தம்பையா, த. சண்முகம், த. முருகேசு, தியாகராஜா ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்புக்களையும் தருகின்றார். ஒவ்வொருவரது வாழ்க்கைச் சரிதக் குறிப்புக்களை எழுதும் போதும் தாய், தந்தை, பாட்டன், மனைவி, மக்கள் ஆகிய உறவு முறை விபரங்களையும் தருகின்றார்.

## விரிந்த நோக்கு:

மேன்மக்கள் சரித்திரம் நூலிற்கு மதிப்புரை வழங்கியவர்களுள் ஒருவரான ஸ்ரீமான் க. சிதம்பரநாதன் பிறக்டர் ஆசிரியரின் நோக்கத்தைத் தெளிவுபடுத்தும் முறையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

‘இத்தகைய நூல்கள் ஐரோப்பிய நாடுகளிலும், இந்தியாவிலும் எழுதப்பெற்று அவ்வத்தேச மேன்மக்களை ஒரு திரட்டில் யாவரும் எளிது காணுறுமாறு இயற்றப்பெற்றுள்ளன. நம்மீழத்திலும், அதுவும் நந்தமிழ் மேன்மக்கள் சாலவும் செறிந்துள்ள இந்நாட்டில் இத்தகைய நூலொன்று வேண்டப்பட்டுள்ளதே.’

நூலின் விடயத்தை ‘தமிழ் மேன்மக்கள் சரித்திரம்’ என நூலாசிரியர் வகுத்துக் கொண்டார். அவ்விதம் வகுத்துக் கொண்ட நூலாசிரியர் தம் நூலில் சேர்த்துக் கொண்ட பெருமக்களின் அட்டவணையை வகுத்துக் கொள்வதில் நடுவுநிலை, விரிந்த நோக்கம் ஆகியனவற்றை வெளிப்படுத்தியுள்ளார்.

M.A. அருளானந்தம் (சிலாபம்), C. அரியநாயகம் (மாத்தளை), பிரிட்டோ பபாப்பிள்ளை (கொழும்பு), A.C. செல்லையா திரிகோணமலை), A.S இளையதம்பி (பொலிஸ் சுப்பிரின்டன்ட், மட்டக்களப்பு), S. கந்தசாமி (நில அளவையாளர், மாத்தளை), P. கதிரைவேற்பிள்ளை (பொறியியலாளர், கல்முனை), R. குமாரசாமி செட்டியார் (வர்த்தகர், கொழும்பு), A. காசிச்செட்டியார் (வர்த்தகர் கொழும்பு), பெரி. சுந்தரம் (மலையகம்), ஈ.ஆர். தம்பிமுத்து (மட்டக்களப்பு), வ. மயில்வாகனம் (முல்லைத்தீவு/திருகோணமலை), ஆகியோர் பற்றிய பதிவுகள் சில உதாரணங்களாகும். நூலாசிரியர் சைவாபிமானம் மிக்கவராயினும் கிறிஸ்தவம், கத்தோலிக்கம் என்னும் இரு மதப்பிரிவுகளைச் சார்ந்தவர்களான மேன்மையும், கீர்த்தியும் மிக்க பெரியோர்களைப் பற்றிய வாழ்க்கைச் சரிதங்களை நடுவுநிலையோடு விபரித்துச் சொல்கிறார். றொக்வுட், நைல்ஸ், சரவணமுத்து, S.C. போல், A.R. ஹலக், திசவீரசிங்கம், புவிராஜசிங்கம் முதலியோரது வாழ்க்கைக் குறிப்புக்கள் கிறிஸ்தவர்களும், கத்தோலிக்கர்களும் தமிழர் சமூக வாழ்விலும், கல்வி பண்பாட்டுத் துறைகளிலும் ஆற்றிய அரும் பணிகளை வாசகர்கள் மனதில் பதிப்பனவாக உள்ளன.

## முடிவுரை:

ஆளுமைமிக்க தனிநபர்களைத் தொகுத்து வழங்கும் மேன்மக்கள் சரித்திரம் போன்ற நூல்கள் சில இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றின. கல்லடி க. வேலுப்பிள்ளை எழுதிய யாழ்ப்பாண வைபவ கௌமுதி (1918), எச். யோன் மார்ட்டின் எழுதிய Notes on Jaffna (1823) ஆகியன இவ்வகையில் குறிப்பிடத்தக்க நூல்களாகும். இவ்விரு நூல்களும் தனிநபர் ஆளுமைகள் பற்றிய குறிப்புக்களை பதிவு செய்துள்ளன. 1930-க்கும் 2020-க்கும் இடைப்பட்ட காலத்தில் ஏராளமான கட்டுரைகளும் நூல்களும் தமிழ் ஆளுமைகள் பற்றித் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளன. தமிழ் ஆளுமைகளின் வாழ்க்கை வரலாறுகள் என்னும் தலைப்பில் நூலகவியல் கல்வியாளர்களால் இக்கட்டுரைகள், நூல்கள் பற்றிய நூற்பட்டியல் தயாரித்து தயாரிக்கப்படுதல் வேண்டும். இவைபற்றிய ஆய்வு நூல்களும் எழுதப்படுதல் வேண்டும்.

வாழ்க்கை வரலாறுகளை எழுதுதல் குறித்த முறையியல் (Methodology), ‘மேன்மக்கள் சரித்திரம்’ காலத்தில் இருந்ததைவிட இன்று முன்னேற்றம் அடைந்துள்ளது. சமூக விஞ்ஞானிகள் கையாண்டுவரும் சமூக விஞ்ஞான ஆராய்ச்சி முறையியலின் வழிநின்று எழுதப்படும் உயரிய ஆய்வுகள் பல ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளிவந்துள்ளன. ஆயினும் தமிழில் எழுதப்படும் வாழ்க்கை வரலாற்று ஆய்வுக் கட்டுரைகள், நூல்களில் பெரும்பான்மையானவை முறையியல் சார் குறைபாடுகளைக் கொண்டனவாய் விளங்குகின்றன.

ஆங்கிலத்தில் ‘Hagiography’ என்ற வகை வாழ்க்கை வரலாறுகள் எழுதப்பட்டுள்ளன. இவற்றை வாழ்க்கை வரலாறுகளில் (Biographies), இருந்து வேறுபடுத்தி நோக்கும் மரபு நவீன காலத்தில் வளர்ச்சியடைந்துள்ளது. முன்னதை தமிழில் ‘மெய்யடியார்கள் வரலாறு’ எனக் குறிப்பிடலாம். இவ்வகை வாழ்க்கை வரலாறுகளை எழுதுவோர் தாம் தேர்வு செய்த ஆளுமைகளைப் புனிதர்களாகவும், வழிபாட்டுக்குரியவர்களாகவும் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்களாகவும் கருதும் மனப்பாங்குடையவர்களாக இருப்பதைக் காணலாம். ‘மெய்யடியார்கள்’ என்ற நோக்குமுறை இக்காலத்துக்கு ஒவ்வாத ஒன்றாகும். நம் மத்தியில் வாழ்ந்து மறைந்த அரசியல் தலைவர்கள். புலமையாளர்கள், அறிஞர்கள் பற்றிய வாழ்க்கை வரலாறுகள் நடுநிலை நின்று காய்தல், உவத்தல் இன்றி எழுதப்படுதல் அவசியம். அவர்களின் ஆக்கங்களும் நடுவுநிலை நின்று மதிப்பிடப்படுதல் வேண்டும். ‘மேன்மக்கள் சரித்திரம்’ போன்ற நூல்களில் கூறப்படும் வரலாற்றுச் செய்திகளையும், தகவல்களையும் மதிப்பீடு செய்தலும், வரலாற்று எழுதியல் (Historiography) என்னும் அறிவியல் சிந்தனைக்கு அமைவானதாக செய்யப்படுதலும் வேண்டும்.



shanmugalingam@thaiveedu.com

# சங்க நூல்களில் முதற்பதிப்புகளும் மறுபதிப்புகளும்

– சு. வேணுகோபால்

தமிழ் செவ்வியல் நூல்களின் முதற் பதிவுகளும் மறு பதிப்புகளும் ஒப்பாய்வு என்னும் தலைப்பில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழ் மாணவர்களுக்கு ஏழு நாட்கள் பயிலரங்கை ஏற்பாடு செய்திருக்கிறது. இந்நிகழ்வில் என்னைத் தொடக்கவுரையாற்றும்படி பணித்திருக்கிறார்கள். இப்பெரிய நிகழ்வில் என்னைச் சிறப்புரையாற்றும்படி செய்த அனைவருக்கும் என் வணக்கங்கள். இளந் தமிழ் ஆய்வு மாணவர்கள் பதிப்புத்துறையில் புதிய உத்வேகத்துடன் செயலாற்றிட இம்மாதிரியான பயிலரங்குகள் உதவக்கூடும்.

ஆங்கிலேயரின் வருகைக்குப் பின் பண்டைத் தமிழ் இலக்கியம் புதிய எழுச்சியைத் தொட்டது. பண்டைத் தமிழர்களின் பண்பாடும் இலக்கியத் தகைமையும் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டன. பதிப்புப் பணியின் மூலம் தமிழறிஞர்கள் மறுமலர்ச்சியை உண்டாக்கிக் காட்டினர். நீரில் விட்டதும், சிதையில் ஏற்றியதும், கரையான் தின்றதும் போக மீதி இருந்ததைத் தேடிக் கண்டுபிடித்து நமக்குக் கையளித்த பெரியவர்களின் பணிக்கு ஈடாக ஒன்றை ஒப்புமையாகச் சொல்லவே முடியாது. 19-ம் நூற்றாண்டைத் தமிழ்ப் பதிப்புலகில் நேர்ந்த புரட்சி நூற்றாண்டு எனலாம்.

காலங் காலமாக இலக்கிய இலக்கண மருத்துவ ஏடுகளைப் பாதுகாத்துவந்த தமிழ் ஆதீனங்கள் தமிழுக்குப் பெருந்தொண்டாற்றியிருக்கின்றன. பண்டைத் தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்து அவற்றை ஏட்டுப் பிரதியிலிருந்து அச்சுப் பிரதிகளுக்குக் கொண்டுசென்ற பென்னம் பெரிய காரியத்திற்கு அடிப்படையாகத் திகழ்ந்தவை தமிழ் ஆதீனங்கள். திருவாவடுதுறை ஆதீனம், தருமபுரி ஆதீனம், திருப்பனந்தாள் காசிமடம் முதலிய சமய நிறுவனங்கள் இல்லையென்றால் தமிழ் இலக்கியத்தின் ஒரு பகுதி இன்று இல்லை எனக் கொள்ளலாம். திருவாவடுதுறை ஆதினம் தமிழுக்குத் தந்த கொடை உ.வே. சாமிநாத ஐயர் என்று பதிப்புலகில் ஒரு வழக்காறையே உண்டாக்கியிருக்கிறது.

தமிழில் முதல் அச்சு நூல் 1557-ல் வருகிறது. இது கிறிஸ்த்தவப் பாதிரிமார்களின் வரவால் நிகழ்ந்தது. தரங்கம்பாடியில் 1712-ல் அச்சுக்கூடம் நிறுவப்பட்ட பின் பல சமய நூல்கள் தமிழில் பதிப்பிக்கப்பட்டன. அச்சு என்ற நவீனத் தொழில்நுட்பக் கருவி தமிழ்ப் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்வதற்கு ஒரு கருவியாக அமைந்தது.

இராமாநுஜக் கவிராயர், ஆறுமுகநாவலர், திருத்தணிகை விசாகப்பெருமாளையர், சரவணப்பெருமாளையர், களத்தூர் தேகிரி முதலியார், எழும்பூர் வேங்கடாசல முதலியார், புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் போன்றோர்கள் ஏடுகளில் மறைந்திருந்தவற்றை வெளிக்கொணரத் தலைப்பட்டனர். தமிழ்க் கன்னி நிலத்தில் பதிப்பாசிரியர்கள் உலகத் தலைபட்டுப் புதிய விளைச்சலைக் கொண்டுவந்தனர்.

திருமுருகாற்றுப்படையை ஆறுமுகநாவலர் 1851-ல் பதிப்பித்து வெளியிட்டார். சி.வை. தாமோதரம் பிள்ளை நீதிநெறி விளக்கத்தை 1853-லும் வீரசோழியத்தை 1881-லும் கலித்தொகையை 1887-லும் பதிப்பித்து வெளியிட்டார். ஈழத்து அறிஞரான சி.வை. தாமோதரம் பிள்ளை ஆங்கில அரசின் நீதித்துறையில் பணியாற்றியதால் ஆங்கிலப் புலமை பெற்றிருந்தார். அவரது ஆங்கில அறிவு மேலைநாட்டுப் பதிப்பு முறைகளை அறிந்துகொள்ள உதவியது. தமிழ் நூல்களை நெறிமுறையோடு பதிப்பிக்க உதவியது. உ.வே.சா. பதிப்புத் துறையில் சி.வை. தாமோதரம் பிள்ளையின் பதிப்புமுறை தனக்கு வழிகாட்டியாக அமைந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

'சுப்பிரமணித் தேசிக விலாசச் சிறப்பும் வேணுவலிங்க விலாசச் சிறப்பும்' என்ற நூலை 1878-ல் உ.வே. சாமிநாத ஐயர் முதன்முதலில் பதிப்பிக்கிறார். 22 வயதில் பதிப்புப் பணியில் ஈடுபட்ட உ.வே. சாமிநாத ஐயர் சீவக சிந்தாமணி (1887), நச்சினார்க்கினியர் உரையுடன் பத்துப்பாட்டு (1889), புறநானூறு (1894), சிலப்பதிகாரம் (1892), மணிமேகலை (1898), புறப்பொருள் வெண்பாமாலை (1895) என்று தீவிரத்துடன் பதிப்புப் பணியில் ஈடுபட்டு வெளியிட்டார். தமிழ்ப் பதிப்பியலின் முன்னோடிகளில் ஒருவரான சி.வை. தாமோதரம் பிள்ளை 1901-ல் மறைந்தது ஒரு பேரிழப்பு.

ரா. ராகவையங்கார், சிங்காரவேலு முதலியார், திருக் கண்ணபுரம் சௌரிப்பெருமாளரங்கன் என்று பலர் பதிப்புப் பணியில்

ஈடுபட்டு தமிழுக்குத் தொண்டாற்றத் தொடங்கினர். 88 வயது வரை நீண்ட ஆயுளுடன் உ.வே. சாமிநாதையர் வாழ நேர்ந்தது தமிழன்னைக்குக் கிடைத்த பாக்கியம் என்றே சொல்லலாம். தாம் பதிப்பித்த நூல்களைத் திரும்பச் செம்மைப்படுத்தி மறுபதிப்பு செய்தார். அதனைத் திரும்பத் திரும்பச் செய்தார். விடுபட்ட பகுதிகளைப், பிழையான பகுதிகளைப், புதிய தகவல்களை, புதிய ஏடுகளைக் கொண்டு செம்மையாக்கிச் செம்மையாக்கி வெளியிட்டார்.

இப்படியாகத் தமிழ்ப் பதிப்பு வரலாற்றில் ஏற்பட்ட தொடர் செயற்பாடுகள் தமிழ் இலக்கியப் பரப்பில் பெரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது என்பது ஓரளவு நமக்குத் தெரிந்த வரலாறு. இப்பயிலரங்கில் 'முதற் பதிப்பும் மறு பதிப்பும்' என்ற பொருண்மையை நோக்கமாகக் கொண்டதற்குக் காரணங்கள் இருக்கின்றன. உண்மையைத் தேடுவது, வரலாற்றை மேலும் நுணுகி அறிவது, வரலாற்றுப் பிழைகளை நேர்செய்வது, மறைக்கப்பட்ட உண்மைகளை முன்வைப்பது, மேலும் தமிழ் இலக்கியத்தைச் செம்மைப்படுத்துவது என்று பல உண்மைகளுக்கான முதலடியாக இப்பயிலரங்கம் இருக்கும் என்று நம்புகிறேன். அந்தவகையில் நற்றிணையை முதன்முதலில் 1915-ல் உரையுடன் பதிப்பித்த பின்னத்தூர் நாராயணசாமி ஐயரவர்களின் பதிப்புப் பணியை நியூ செஞ்சுரிப் புத்தக நிறுவனம் கு.வை. பாலசுப்பிரமணியம் அவர்களின் உரையுடன் வெளியிட்ட பதிப்பை ஒப்பிட்டுப் பயிரங்க வகுப்பில் உரையாற்றவிருக்கிறேன். அது இப்போதைக்குத் தேவையில்லை.

வை.மு. கோபாலக்கிருஷ்ணமாச்சாரியார் கம்பராமாயணத்தை முதன்முதல் பதிப்பித்து வெளியிட்டார். அதனை மறுபதிப்புச் செய்தவர்கள் வை.மு.கோ. தந்திருந்த பின்னிணைப்பைத் தூக்கியெறிந்துவிட்டார்கள். தொடக்கவுரை பேச்சிற்கு அழைக்கப்பட்டிருந்ததை அறிந்ததும் தமிழறிஞர் பொ. வேலுச்சாமி ஐயா அவர்கள் தொடர்புகொண்டு பதிப்பு சார்ந்து சில புத்தகங்களைக் கோடிட்டுக் காட்டினார். 1889-ல் திருக்குறள் மூலத்துடன் அகத்தியர் இயற்றிய கருத்துரையட்டவணையும் - பொழிப்புரையும் அச்சிடப்பட்ட பழம்பதிப்பு இருப்பதைச் சொன்னேன். வேலுச்சாமி அய்யா 'அதைப் படிக்க வேணாம்பா, குறுந்தொகை முதல் பதிப்பைப் படி' என்றார், சரி என்றேன். என்றாலும் அந்தத் திருக்குறள் பதிப்பில் என்னதான் இருக்கிறது என்று முகவுரையைப் படித்தேன். அதில் சொல்லப்பட்டிருந்த விஷயம் சற்றுத் திகைப்பாகவிருந்தது. 'இது ஒரு அறநூலாய் இருந்திருக்க வேண்டியது, பல குற்றங்கள் சேர்ந்த நூலாக இருக்கிறது. என்றாலும், முன்னோர் பதிப்பித்தவழி பதிப்பிக்கிறோம்' என்ற கருத்துப்பட இருந்தது. அந்தக் குற்றங்கள் என்ன என்பதை அவர் நடையிலே கீழே தருகிறேன்.

'இந்நூல் முழுமையும் அற நூலாகவேயிருக்க அதனுட் சில பதிகங்களாய் மட்டும் மறத்திற்குரியதென்ற குற்றமும் அறத்திற்கும் புறம்பாய பொருளாய் அநேக பதிகங்களாலும் இன்பத்தைச் சில பதிகங்களாலுங் கூறிய குற்றமும் அறம் பொருளின்பங்களில் சிறந்த வீடு என்பதில் பொருற் பாலாற் கூறாத குற்றமும் நூலாசிரியருக்கேற்றினார். அது எவ்வாற்றாயினும் எவருக்கும் பொருத்தமின்மையாலும் அறம் பொருளோடு இன்பமும் நூற்பயனேயன்றி நூலினுறுப்பாகுதலின்பயாலும் காமப்பாலென வய்த்த 25 பதிகங்களுக்குங் காமநோக்கமாகப் பொருள் செய்ததோடு இதற்கு வேறொரு பொருளுளதெனக் கூறியிருந்தாலும் அவய் இயன்முறியீறத்திற்கேற்ப பொருடந்து நிற்றலாலும் முறயின் கடயிலம்ய்க்லாயின...' என்று எழுதிச் செல்கிறார்.

அதாவது ஒரு அறநூலாக இருக்க வேண்டியதில் அதில் பொருட்பாலைச் சேர்த்தது குற்றம். அறம் பொருள் இன்பம் வீடு நாற்பொருள் உணர்த்த வராமல் வீடுபேற்றை சொல்லாமல் விட்டது குற்றம். அறம் - பொருள் - இன்பம் மூன்றிற்கும் அத்தியாய வைப்பும் பாடல் எண்ணிக்கையும் ஒன்றேபோல் இல்லாமல் மாறிமாறி இருப்பது குற்றம். காமத்துப்பால் காமநோய் குறித்துக் குறிப்பது குற்றம் என்றும் அடுக்கிக் கொண்டே போகிறார். என்றாலும் முன்னர் பதிப்பித்த வழி பதிப்பிப்பதற்கு ஒரு அமைதி காண்கிறார்.

'பிந்தின வுரயாசிரவ்வாறு பால்வழுவச் செய்ததுமன்றி அவற்றிற்கிணங்க உறுப்புகளயும் வரயின்றி வகுத்துப் பொருள் வழுவப் பதிகப் பெயரிட்டனர். ஆதலால் நூலின் பொருட் தொடர்பு...' கொண்டு பதிப்பித்ததாகவும் 'திருக்குறளில் எவ்வித வழுவும் இராவென்னும் நிச்சயத்தாலும் எதுகய் மோனய் வழுவாதிருக்க அநேகங் குற்றங்களுக்கு எதுகய் மோனய் திருத்தி சுத்த மூலம் கண்டு வெளியிடப்பட்டது' என்று கூறுகிறார். பதிப்பாசிரியர் தான்கொண்ட கருத்தைத் திருக்குறள் மேல் செலுத்திச் செய்திருக்கும் திருத்தங்களைப் படிக்கும் போது அதிர்ச்சியளிக்கிறது. இப்படியெல்லாம் பதிப்பரசியலில் சிக்கித்தான் திருக்குறள் போன்ற பழம்பெறும் நூல்கள் நல்ல பதிப்புகளாக மற்றவர்களால் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

மலையப்பப்பிள்ளை - ஞானப்பிரகாசனால் 1812-ல் பதிப்பிக்கப்பட்ட 'திருக்குறளும் நாலடியாரும்' என்ற நூல் கிடைத்தது. அதன் முன்னுரையை மட்டுமல்ல நூலே புதுமையாகவிருந்தது. இதனை மரவெழுத்தால் அச்சிடப்பட்ட நூல் என்றார்கள். அப்புறம் புரிந்தது ஏட்டில் என்ன எழுத்து வடிவில் இருந்ததோ அதே வடிவில் அச்சிடப்பட்டிருப்பதை மரவெழுத்துப் பதிப்பு என்பது தெரிந்தது. புள்ளி வைக்காமல் எழுதப்பட்ட ஏட்டுப் பிரதியை முன்னோர் மொழிப் பொருளைப் பொன்னே போல் போற்றி நூலை அச்சிட்டிருக்கிறார்கள்.

'கறறுணாநத தமிழாசிரியராகப் பெருமையினியறறிய இலக்கண விலக்கியஙகளாகிய - அரிய நூலகளெல்லாம் இந்நாட்டில் - அச்சிற பதிகபும பயிறசியினறி...' நூல் முழுக்கப் புள்ளி வைக்காமல் அச்சிடப்பட்டிருக்கிறது. அச்சுப் பதிப்புமுறை வந்தபின்பும் புள்ளிவைத்து அச்சிடக்கூடாது என்ற மரபு பின்பற்றியிருப்பது புன்னகையை வரவழைத்தது. எளிய வாசிப்புப் பழக்கம் இருப்பவர்களுக்குப் புள்ளி தன்னியல்பாக அமைந்து வாசிக்கமுடிகிறதும் விந்தையாக வெளிப்பட்டது.

1875-ல் திருத்தணிகை கந்தப்பையர் குமாரர் சரவணப்பெரு-மாளையரால் முன்பதிப்பிக்கப்பட்ட பிரதிக்கிணங்கச் செந்தமிழ்ப் பாடசாலைக் காரியதரிசியாகிய ஆர்ட்னன்ஸ் - ஆடிட் - ஆபீஸ் மை. வீராசாமி பிள்ளையவர்களால் பார்வையிடப்பட்டு வந்த திருக்குறள், 1885-ல் சரவணப் பெருமாளையரால் முன்பதிப்பித்த பதிப்பிற்கிணங்க இது திருமயிலை வைத்தியலிங்கத் தேசிகரால் பார்வையிடப்பட்டு, காவாந் தண்டலம்,

பாலசுந்தர முதலியாரால் பதிப்பிக்கப்பட்ட திருக்குறள் நூல் எனச் சில பதிப்புகளைப் பார்த்தேன். ஒரு பதிப்பின் தொடர்ச்சியாக மற்றவர் வெளியிடும்போது முன் பதிப்பித்தவர் பெயர்களைக் குறிப்பிட்டுப் பதிப்பிக்கின்ற நல்ல பழக்கம் இருந்ததைக் காண முடிந்தது.

1915-ல் திருக் கண்ணபுரத்தலத்தான் திருமாளிகை சௌரிப் பெருமாளரங்கன் தமது புத்துரையுடன் பதிப்பித்த குறுந்தொகையைப் பார்க்கும்போது பல புதிய செய்திகள் தென்பட்டன. இவ்வரிய நூலுக்குப் பேராசிரியர், நச்சினார்க்கினியர் உரை முயன்றும் கிடைக்கப்பெறா வருத்தம் மேலிட சௌரிப் பெருமாளரங்கன் புத்துரை எழுத நேர்ந்தது என்று குறிப்பிடுகிறார். முகவுரை எழுதியிருக்கும் முத்துரத்தின முதலியார் குறுந்தொகையின் சிறப்பாகச் சொல்லப்பட்டதில் ஒரு வழமையும் கனதியான வேலையையும் சேர்ந்தே குறிப்பிட்டிருக்கிறார்.

‘தருமிக்கு ஓராயிரம் பொன் பொற்கிழியளித்த செய்தி வருதனாலும் ‘கொங்குதேர் வாழ்க்கை’ என்னும் தெய்வப் பாசுரம் வருவதால் பெருமை மிக்கதாகிறது’ என்றும் ‘தாமரைப் புரையும் காமர்சேவடி’ என்ற செய்யுள் குமரக்கடவுளைக் காப்புச் செய்யுளாகக் கொண்டதால் மேலும் குறுந்தொகைச் சிறப்புப் பெறுகிறது’ என்றும் பெண்பாற் புலவர்கள் நிரம்பப் பங்களித்திருப்பதால் ‘பெண் கல்வி இன்றியமையாததாமெனக் கருதும் நவீனர்கட்டுப் பண்டைத் தண்டமிழ் நாகரிகம் இதைச் செய்திருக்கிறது என்பதைக் காட்டும்’ என்றும் குறிப்பிடுகிறார். எனக்கு இதைவிட முகவுரை எழுதிய முத்துரத்தின முதலியார் குறிக்கும் ஒரு செய்தி முக்கியமாகப்பட்டது. சௌரிப் பெருமாளரங்கன் இந்தப் பதிப்பில் ‘ஸ்ரீமத் பண்டிதர் J.S. அரங்கசாமி ஐயங்கார் அவர்கள் இயற்றிய திணை, உள்ளுறை, இறைச்சி, மேற்கோள், இலக்கணக் குறிப்பு முதலியவற்றைப் பயன்படுத்தியுள்ளதைச் சுட்டிக்காட்டியிருப்பது கவர்ந்தது.

சௌரிப் பெருமாளரங்கன் ‘உதவியுரைத்தல்’ என்ற முன்னுரைப் பகுதியில் ‘குறுந்தொகை’-யைப் பதிப்பிக்க நேர்ந்த செய்திகள் பலவற்றைக் குறிப்பிடுகிறார். அற்புதமான முன்னுரை அது.

‘தொல்காப்பியம் பொருளதிகாரத்தை மீண்டும் மீண்டும் படித்து வந்தேன். அதில் நற்றிணை, அகநானூறு, குறுந்தொகைப் பாடல்கள் மேற்கோள் காட்டப்பட்டன. அதைப் படிக்கப் படிக்க குறுந்தொகை முழுக்கக் கிடைக்கும் என்ற துணிவு உண்டானது. அதன்பின் குறுந்தொகை ஏடுகளைத் தேடத் தொடங்கினேன்’

‘300-வது பாடலைத்தேடி மதுரைத் தமிழ்ச்சங்கம் போய் ஏடுகளை ஒப்பிட்டபோது அதுவரை கிடைக்காதிருந்த 316-வது செய்யுள் கிட்டியது’

‘இடக்கர் சொல்லாகிய குஃறொடர் மொழி ஒன்பது இடங்களில் வந்துள்ளன. அவற்றை அறவொழித்துச் செய்யுளிற் குறைவு தோன்றாதவாறு ஏற்றவற்றை என் சிற்றறிவுக்கு எட்டியவாறு சேர்த்து அதற்கேற்ப உரையெழுதியிருக்கிறேன். இது சி.வை. தாமோதரம் பிள்ளை பதிப்பு முறையை ஒட்டியது’



ஒரு செய்யுளில் ‘முல்லை ஒன்றின் சொல்லின் இடைக்குறைவான இல்லை என்னும் சொல்லைப்போட்டு செப்பனிட்டால் அடிகள் அனைத்தும் மாற்ற வேண்டியதாயிற்று. இக்கருத்து தவறு என்று நீக்கி முல்லை என்ற சொல்லைப் போடும்போது பொருள் சரியாக அமைந்தது’

‘பழையவுரை கிட்டாததால் முயன்று உரை எழுதியிருக்கிறேன்’ இவ்விதம் உதவியுரைத்தல் என்ற முன்னுரையில் பல செய்திகளைச் சௌரிப் பெருமாளரங்கன் குறிப்பிடுகிறார்.

குறுந்தொகைப் பதிப்பில் நேர்ந்த சில சிக்கல்களைப் பார்க்கலாம். குறுந்தொகை - இத்தொகை நூலை முடித்தோன் பூரிக்கோ. தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை என்பது ஏட்டிலுள்ள செய்தி. எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் முடித்தோன் என்பது தொகுத்தோன் என்பதைக் குறிக்கும் சொல். அகநானூரைத் தொகுத்தோன் மதுரை உப்பூரிக்கிழார் மகன் உருத்திரசன்மன். தொகுப்பித்தோன் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி. குறுந்தொகையை முடித்தோன் பூரிக்கோ என்பதால் அகநானூற்றைத் தொகுத்தவரும்

இவரே எனக்கொண்டு குறுந்தொகையும் அகநானூறும் முறையே தந்தையும் மகனாரும் தொகுத்தனராதல் வேண்டும் - அதாவது பூரிக்கோவும் உப்புரிக்குடிகிழாரும் ஒருவரே என்று அமைதி தேடியுள்ளார் வையாபுரிப்பிள்ளை. ஆனால் இது பொருத்தப்பாடாகத் தோன்றவில்லை வலிந்து ஒரு பெயரைக் கண்டு பெய்யும் நோக்கம் மட்டுமே தெரிகிறது.

குறுந்தொகையைப் பலர் பதிப்பித்திருந்தாலும் 1937-ல் உ.வே. சாமிநாதய்யர் பதிப்பித்த குறுந்தொகையே மிகச் சிறப்பான ஒரு பதிப்பாக இருக்கிறது. இதற்கு முன்னும் பின்னும் உதாரணம் சொல்லமுடியாத பதிப்பாக உ.வே.சா. பதிப்புத் திகழ்கிறது. 50 ஆண்டுகள் சங்க இலக்கியத்தில் ஊறித் திளைத்துப் பதிப்பித்த பழம்பதிப்பு என்பதால் உ.வே.சா-வின் உரையும், பொருள் விளக்கமும், மேற்கோள் தகவல்களும், குறிப்புப் பொருளும், மிகப் பொருத்தமுடனும் மிக உயர்ந்த தளத்திலும் இருக்கின்றன. நுண்மான் நுழைப் புலத்தோடு பாடலுக்குத் தரும் விளக்கம் மிகச் சிறப்பாக இருக்கின்றன. கூற்று, கூற்றுவிளக்கம், மூலம், பிரதிபேதம், பழைய கருத்து, ஆசிரியர் பெயர், பதவுரை, முடிபு, விசேஷவுரை, ஒப்புமைப் பகுதி என 12 கூறாகப் பகுத்துக்கொண்டு ஒவ்வொரு பாடலுக்கும் விளக்கமான உரை எழுதியுள்ளார். பிற சங்க உரையாசிரியர்களின் குறிப்புரைகளையும் தெளிந்து ஏற்றுச் செய்த ஆராய்ச்சிப் பதிப்பு பதிப்புலகில் ஒரு மைல் கல் எனலாம்.

உ.வே.சா. பதிப்பித்திருக்கும் நூல்களில் வெளிப்படும் நேர்மை அபாரமானது. குறுந்தொகை எட்டடி பேரெல்லையைக் கொண்டது. 307 மற்றும் 391-ம் பாடல்கள் எல்லா ஏடுகளிலும் ஒன்பதடிகள் கொண்டனவாக இருக்கின்றன. இவை முற்றுப்பெறாத பாடலாக இருக்கலாம். பாட வேறுபாடு ஏடுகளிலிருக்கிறது. பொருள் அடிப்படையில் பார்த்தாலும் அவ்விதமே தோன்றுகிறது. எனவே இப்பாடல்களைக் குறுந்தொகையில் சேர்ப்பது பொருந்தாது என்று குறிப்பிடுகிறார். பொ.வே. சோமசுந்தரனார் மற்றொரு செய்யுளின் ஓரடி உள்ளே சேர்ந்து 9 அடியாக மாறியிருக்கலாம் என்று சொன்னாலும் நீக்க வேண்டிய அடி எது என்று சுட்டிக்காட்ட முடியவில்லை.

குறுந்தொகை நூலுக்குப் பேராசிரியர் உரை வகுக்காத 20 பாடல்கள் உள்ளன. அவை எவை என்பதில் பதிப்பாசிரியர்கள் வேறுபடுகின்றனர். வையாபுரிப்பிள்ளை பொருள் வெளிப்படத் தெரிந்த பாடல்களுக்கு உரை எழுதாமல் விட்டிருக்கலாம் என்கிறார். அப்பாடல்களின் அருமை உணர்ந்து பின்வந்த நச்சினார்க்கினியர் உரை எழுதினார் என்று குறிப்பிடுகிறார்.

உ.வே. சாமிநாதையர் ‘அவர் உரை எழுதாது விடுத்த 20 செய்யுள்கள் குறுந்தொகையின் இறுதியான பின் 20 செய்யுட்களாக இருத்தல் கூடும். இடையிடையே பொருள் தோன்றாமல்விட்ட செய்யுட்கள் எனக் கொள்ளுதல் நல்லறிவுடைய தொல் பேராசானாகிய அவரது பெருமைக்கு இழுக்காகும். அவர்தம் முதுமையில் குறுந்தொகைக்கு உரை எழுதத்தொடங்கி 380 செய்யுட்களுக்கு எழுதிமுடித்த பின்னர் நோய் வாய்ப்பட்டதாலோ பிற காரணத்தாலோ மேல் எழுத இயலாத நிலையை அடைந்தார் என்று கொள்ளுதல் ஏற்புடையதாகும். பிற்காலத்தில் நச்சினார்க்கினியர் அவ்வரிய உரையைப் பின்பற்றி அதற்கேற்ப எஞ்சிய செய்யுட்களுக்கு உரை எழுதியிருத்தல் கூடும்’ என்கிறார்.

உ.வே.சா. குறுந்தொகையைப் பதிப்பித்த முதல் பதிப்பில் ஐந்து பாடல்களுக்கு ஆசிரியர் பெயர் கிடைக்கப்பெறவில்லை என்று எழுதுகிறார். மறு பதிப்பில் இதற்கான விடையைத் தேடியலைகிறார். 1884-ல் குறுந்தொகையைக் கையால் எழுதப்பட்ட காகிதச் சுவடி இருப்பதாக அறிகிறார். டாக்டர் பர்னல் துறையின் தூண்டுதலால் எழுதப்பட்ட 118 பக்கம் கொண்ட கைப்பிரதி லண்டன் அருங்காட்சியகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். இத்தகவல் கிட்டியதும் உ.வே.சா. லண்டன் மியூசியத்திலிருந்து பிரதிபெற்று முதல் பதிப்பை ஒப்புநோக்கப் பல விடயங்கள் கிடைக்கின்றன. குறிப்பாகக் குறுந்தொகைப் பாடல்கள் 24, 25, 26, 32, 355 பாடல்களுக்குரிய ஆசிரியர் பெயர் கிடைக்கிறது. இந்தக் காகிதப்பிரதி மதுரைப் பகுதியில் கிடைத்த ஓர் ஏட்டுச் சுவடியிலிருந்து எழுதப்பட்டது என்பதும் தெரிய வருகிறது. உ.வே.சா. குறுந்தொகை இரண்டாம் பதிப்பில் அப்பாடல்களின் ஆசிரியர்கள் பரணர், கபிலர், வெள்ளிவீதியார், அன்னூர் நன்முல்லையார், கபிலர் என்று பெயர் தந்து பதிப்பிக்கிறார்.

சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே. சாமிநாதையர் இருவரிடையே சீவகசிந்தாமணிப் பதிப்பு சார்ந்து நிகழ்ந்த சிறு உரசலையெடுத்து பொதிய வெற்பன் ஆராய்ந்து ஒரு கட்டுரை எழுதியுள்ளார். சி.வை. தாமோதரம் பிள்ளை சீவகசிந்தாமணியைப் பதிப்பிக்க ஆவல்கொண்டார். பலநாட்கள் சிந்தாமணிப் பதிப்பிற்காக உழைத்துக்கொண்டிருந்த பதிப்பு வேலைகளை வாசித்துப்பார்க்க ஆசைபட்டார். சி.வை. தாமோதரம் பிள்ளை உ.வே.சா-விடம் அணுகிக் கேட்டிருக்கிறார். செய்த வேலைகளைத் தூக்கித் தந்தபின் உ.வே.சா-வின் மனம் நிலையில்லாமல் அல்லலுறுகிறது. உ.வே.சா-வின் தந்தையாரும் நீயே பதிப்பிக்க வேண்டியதுதானே என்று சொல்ல, மறுநாள் சி.வை. தாமோதரத்திடம் சென்று வாங்குகிறார். அன்றைய தினத்தில் சமணம் சார்ந்து பல விளக்கங்களைச் சி.வை. தாமோதரம் பிள்ளை கேட்கிறார். சி.வை. தாமோதரம் பிள்ளையின் உதவியாளர் உங்களைவிட உ.வே .சா-வே இதில் ஆழங்கால் பட்டிருப்பதாகக் கூறுகிறார். சி.வை. தாமோதரம் பிள்ளை தான் பதிப்பித்து அதில் உங்கள் பெயரை நான் குறிப்பிடும்போது உங்களுக்குத் தனித்த கௌரவம் கிட்டும் என்றும் சொல்கிறார். உ.வே.சா. தான் செய்திருக்கும் பணியை உணர்ந்து திரும்ப வாங்கிவந்துவிடுகிறார். பின் உ.வே.சா. பதிப்பிக்கிறார். இந்தச் சந்திப்பின் பின்னணியை ஆராய்ந்த பொதிய வெற்பன் தாமோதரம் பிள்ளையின் செயற்பாட்டைச் சரியானது என்று நிறுவப் பார்க்கிறார். உ.வே.சா-வின் உழைப்பை அவர் பொருட்படுத்திப் பார்க்கவில்லை. உ.வே.சா-வின் ‘என் சரித்திரம்’ நூலில் இச்சம்பவத்தை விரிவாகவே பதிவு செய்துள்ளார். உ.வே.சா-விடம் சில குறைகள் இருந்தன என்பது உண்மை. மற்றவர் செய்த உதவியைக் குறிப்பிடமாட்டார், மற்றவர்கள் செய்திருக்கும் முன்பதிப்புப் பணியைத் தன் பதிப்பில் குறிப்பிடமாட்டார் என்று சில குறைகளைச் சொல்கின்றனர். இருக்கலாம்தான் ஆனால் அவரின் பதிப்புப் பணியைக் குறைத்து மதிப்பிடவே முடியாது. பதிப்பு நெறிமுறையில் சி.வை.தா-விடம் மேலை

நாட்டு ஒழுங்கு இருக்கவே செய்தது. உ.வே.சா. தன் பதிப்புப் பணி அனுபவத்தின்வழி தானே சில நெறிமுறைகளை வகுத்துக்கொண்டு செயற்பட்டார். அது சுயம்புவாகப் பகுத்துச் செயற்பட்ட பணி. அனுபவம் உண்டாக்கிய ஒரு நெறிமுறை. பல்வேறு சாத்தியங்களை உ.வே.சா. அதில் வெளிப்படுத்தினார் என்பது தெரியவருகிறது. ஆங்கிலம் தெரியாததை ஒரு குறையாகப் பார்ப்பவர்களுக்கு மாறாக சுயசிந்தனையில் உண்டாக்கிக்கொண்ட பதிப்பு நுட்பங்கள் அபாரமாக இருக்கின்றன.

சங்க இலக்கியத்தில் மிகச்சிறந்த பகுதி அகநானூறுதான். தமிழ்ப் பண்பாட்டின் கலைக் களஞ்சியம் அகநானூறு. பல விந்தைகள் நிரம்பியது. பல்வேறு தகவல்களை உள்ளடக்கியது. வாழ்வின் விரிந்த சித்திரங்களை அளிப்பது. நிலமும் பொழுதும் செறிந்து காணப்படுவது. இவ்விதம் பல்வேறு சிறப்புகள்கொண்ட அகநானூறு, குறுந்தொகையளவு சிறப்புப் பெறவில்லை. ஏன் சிறக்கவில்லை என்று ஆராய்கிறபோது, அகநானூறுக்கு இதுவரை சிறப்பான உரை எழுதப்படவில்லை என்பதே காரணம். உ.வே.சா. இதற்கு உரை எழுதிப் பதிப்பித்திருப்பாரேயானால் சங்க இலக்கியத்திலேயே கொடி முடியாகத் திகழ்ந்திருக்கும். உ.வே.சா-வும் அகநானூறைப் பதிப்பிக்க விரும்பினார். காலம் கனியாமலே போய்விட்டது. யார் தொட்டால் மின்னும் என்பது உ.வே.சா-வின் பதிப்புரையை வைத்துத்தான் முடிவிற்கு வரவேண்டியதாயிருக்கிறது.

'யாயும் ஞாயும் யாராகியரோ' என்ற பாடலுக்கு உ.வே.சா. உள்ளத்துப் புணர்ச்சி என்று குறிப்பிடுகிறார். சங்க இலக்கியத்திலும் தொல்காப்பியத்திலும் தோய்ந்த வ.சுப. மாணிக்கம் அப்பாடலில் உரிப்பொருளை உடற்புணர்ச்சி என்கிறார். 'செம்புலப் பெயல்நீர்போல அன்புடை நெஞ்சம் தாம்கலந்தனவே' என்பது உயர்ந்த உள்ளத்துப் புணர்ச்சியைக் குறிப்பிடும் தகைமையே வெளிப்படுகிறது. உ.வே.சா. வலிந்து தனது மேதமையைக் காட்டமாட்டார். மாறாக அவ்வகை இலக்கியத்தின் உட்கிடக்கையை நுணுகி நுணுகி ஆராய்ந்து கருத்துச் சொல்வார்.

'செங்களம் படக்கொன்று அவுணர் தோய்த்த' என்ற குறுந்தொகைப் பாடலுக்குப் பயின்று வந்துள்ள கருப்பொருள் சார்ந்து குறிஞ்சித் திணைப் பாடல் என்று சொல்கின்றனர். இப்பாடலில் தலைவன் கையுறையாகக் காந்தள் பூவைத் தருகிறான். ஏது காரணம் கருதியோ தலைவி ஏற்றுக்கொள்ள மறுக்கிறாள். அது காதலாகவுமில்லை, 'இதனைக் குறிஞ்சித் திணை எனக் கொள்ளலாமோ எனின் நெஞ்சு துணுக்குறுகிறது' என்று எழுதிவிட்டு இப்பாடல் கைக்கிளையைச் சார்ந்தது என்கிறார் உ.வே.சா.

உ.வே.சா. பதிப்பில் இடம்பெறும் நூல் ஆராய்ச்சிப் பகுதிகள் பல முனைவர் பட்டத் தகுதிக்குச் சமமானவை. 'தமிழ்விடு தூது' நூலை வெளியிட 20 ஆண்டுகள் காத்திருந்து செம்மை செய்து வெளியிட்டிருக்கிறார். சில தரவுகளுக்காக விளக்கங்களுக்காக பல ஆண்டுகள் தேடிப்பெற்றுத்தான் வெளியிட்டிருக்கிறார். 1892-ல் முதன்முதல் சிலப்பதிகாரத்தை அடியாருக்கு நல்லார் உரையுடன் பதிப்பிக்கிறார். மூன்றாம் பதிப்பை அரும்பதவுரையைச் சேர்த்து 1927-ல் பதிப்பிக்கிறார். 30 ஆண்டுகள் கழித்துப் பதிப்பிக்கும்போது 23 ஏட்டுப் பிரதிகளை ஒப்பிட்டுப் பார்த்து செம்மையாக்கிப் பதிப்பித்திருக்கிறார். இதுவே எனக்கு மன நிறைவான பதிப்பு என்கிறார். எத்தகைய உழைப்பு, எத்தகைய தேடல், எத்தகைய விரிந்த மனம் என்பது பதிப்பைப் படிக்கும்போது விளங்குகிறது. ஒவ்வொரு முறையும் புதிய ஏட்டுப்பிரதி கிடைத்தால் தான் பதிப்பித்த பதிப்பில் நேர்ந்த தவறுகளைக் கண்டு களைய முற்படும் குணம் அவருடையது.

சங்க இலக்கியம் பதிப்பு சார்ந்து சில கேள்விகள் எழுகின்றன. அகநானூற்றைப் பாலைப் பாடல்கள் 200, அவை 1,3,5,7,9 என்ற ஒற்றைப்படை வரிசையில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. குறிஞ்சிப் பாடல்கள் 2,8,12,18 என்ற வரிசையிலும் முல்லை 4, 14, 24 என்ற வரிசையிலும் மருதம் 6, 16 என்ற வரிசையிலும் நெய்தல் 10, 20, 30 என்ற வரிசையிலும் பகுத்து வகுத்து வைக்கப்பட்டுள்ளன. இந்த வைப்பு முறையைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் களிற்றுயானைநிறை (120), நித்திலக்கோவை (100), மணிமிடைப் பவளம் (180) என்ற பகுப்பு எதன் அடிப்படையில் அமைகின்றன என்று உரையாசிரியர்களும் குறிப்பிடவில்லை. தமிழ் அறிஞர்களும் குறிப்பிடவில்லை. காரணம் இன்றும் காணப்படவில்லை. ஒருவேளை அகநானூறை உ.வே.சா. ஆய்வுசெய்து பதிப்பித்திருந்தால் இதற்கு விடைகாண முயன்றிருப்பார். விடை கிடைக்கவில்லையானால் சரியான விடை கிடைக்கவில்லை என்று எழுதுவார். யாரேனும் கண்டு சொன்னால் சிறப்பு என்பார். அடுத்து பிற்காலத்தில் உரிய விளக்கம் கிடைத்தால் அடுத்த பதிப்பில் வெளியிடுவதாகக் குறிப்பார். முதல் பதிப்பில் கிடைக்காத சில வரிகளை அடுத்த பதிப்பில் பதிப்பித்திருக்கிறார். கிடைக்கும்வரை விட்டுவைத்திருப்பதைச் சொல்வார்.

'அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்' பாடலைப் பாடியவர் பாரியின் மகளிர். அவர்களின் பெயர்கள் என்று குறிக்கப்படும் அங்கவை, சங்கவை என்பது சரிதானா ? எந்த உரையாசிரியர்கள் அப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்கள் ? அவ்விதம் குறிப்பிடவில்லை. பாரியின் மகள்களின் பெயர்கள்தான் என்பதற்குரிய சான்று இல்லை.

சிறந்த பதிப்பு என்பது பிழைகளை நீக்கிச் செம்மையாக்குவதோடு நில்லாமல் மேலதிகமாக உண்மைகளை நாடிச்செல்வது. தவறான புரிதலைச் சுட்டிச் சரியான பொருளை எடுத்துரைப்பது. விடுபட்ட பகுதிகளுக்கான விடைகளைக் கண்டடைவது. பதிப்பியல் நெறிமுறையோடு உருவாக்குதல், சரியான உதாரணங்களை ஒப்புக்காட்டி விளக்குதல் என எத்தனையோ விஷயங்களைச் செம்மையாக்கி வெளியிடுவது தான் மறுபதிப்பு. முதற்பதிப்புகளும் மறுபதிப்புகளும் என்கிற இப்பயிலரங்கம் பதிப்புலகில் நல்லதோர் மாற்றத்தை உருவாக்க வேண்டுமாய் விரும்புகிறேன். பண்டைத் தமிழ் இலக்கிய பதிப்பியல் முன்னோடி சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களை இக்கணம் வணங்கி
விடைபெறுகிறேன்.



venugopal@thaiveedu.com



# திருமலை நவத்தின் ‘1990’:
## திருமலையின் துன்பியலைப் பாடும் பாணன்

- மு. நித்தியானந்தன்

ஏர்னஸ்ட் ஹெமிங்வேயின் ‘பாலத்தடியில் ஒரு கிழவன்’ என்ற கதை. ஸ்பானிய சிவில் யுத்தம் நடந்துகொண்டிருக்கும் நேரம். எப்ரோ நதிக்கு மேலால் ஒரு தொங்கு பாலம். அந்தப் பாலத்தின் மறு கோடிவரை சென்று, பாசிச எதிரிப் படைகள் எவ்வளவு தூரம் எப்ரோ நதியை நோக்கி முன்னேறி வந்து கொண்டிருக்கின்றன என்று அவதானித்துக்கொண்டிருக்கும் ஒரு போர்வீரன். அவன்தான் கதைசொல்லி.

புழுதி படிந்த ஆடைகளோடு, வெள்ளி வளையமிட்ட கண்ணாடியுடன் மிகவும் களைத்துப்போன நிலையில் பாலத்தடியில் ஒரு கிழவன் நின்று கொண்டிருக்கிறான். அந்தக் கிழவனின் கிராமத்திலிருந்த அனைத்து மக்களும் எதிரிப்படைகள் எந்த நேரமும் வந்துவிடும் என்ற அச்சத்தில் கிராமத்தை விட்டு வெளியேறிவிட்டார்கள். அக்கிராமத்தை விட்டு வெளியேறவேண்டிய கடைசி மனிதன் அந்தக் கிழவன்தான்.

பாலத்தில் நிற்கும் போர்வீரனுடன் உரையாடல் நடக்கிறது.

‘நான் சில மிருகங்களைப் பராமரித்து வருகிறேன்’ என்கிறான் கிழவன்.

‘என்ன மாதிரி மிருகங்கள் ?’

‘எல்லாமாய்ச் சேர்த்து மூன்று. இரண்டு ஆடுகள், ஒரு பூனை, நான்கு ஜோடி புறாக்கள். படைத்தலைவன் கிராமத்தை விட்டு வெளியேறுமாறு சொல்லிவிட்டான். பூனை ஒருமாதிரி தன்பாட்டில் ஏதாவது செய்து கொள்ளும். புறாக்களைத் திறந்துவிட்டால் அவை பறந்து போய்விடும். ஆனால், மற்ற மிருகங்கள் என்ன செய்யும்? நான்தான் அவற்றை இத்தனை காலம் கவனித்துக்கொண்டிருந்தேன்.’ என்று கவலையோடு பேசுகிறான் கிழவன்.

‘இங்கிருந்து கிளம்பும் ஏதாவது ஒரு வாகனத்தில் ஏறி பார்சிலோனாவிற்குப் போய்விடு’ என்கிறான் படைவீரன்.

‘எனக்கு அங்கு யாரையும் தெரியாது’ என்கிறான் கிழவன்.

‘நான் அந்த மிருகங்களைப் பாரமரிக்கவேண்டும்’ என்று கிழவன் தனக்குள் பேசிக்கொள்கிறான்.

எதிரிப்படைகள் அந்த இடத்தை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கின்றன. கிழவன் நகரவில்லை. அங்கேயே நின்று கொண்டிருக்கிறான்.

இதுதான் கதை.

கிழவனுக்கு ஒரு அரசியலும் இல்லை. அவன் எதிரிப்படைகளால் கொல்லப்படலாம் அல்லது அவன் சிறைப்படுத்தப்படலாம். அதைப்பற்றி அவனுக்கு எந்தச் சிந்தனையும் இல்லை. அவனுடைய ஆடுகளை யார் பராமரிப்பது ?

யுத்தம் இப்படி அப்பாவி மக்களின் வாழ்வில், அரசியலோடு எந்தத் தொடர்புமில்லாத எளிய மக்களின் அன்றாட வாழ்வில் எப்படி ஊடுருவுகிறது என்பதைச் சொல்லும் அற்புதமான கதை இது.

1990-ல் திருகோணமலையில் அப்பாவித் தமிழ் மக்கள் அனுபவித்த அவலத்தைப் பேசுகிறது இந்த நாவல். திருமலை நவத்தின் சிருஷ்டி. நாவலின் தலைப்பு :1990

இந்திய அமைதிப்படை 32 மாதங்கள் இலங்கையில் நின்று, மார்ச் 13, 1990 அன்று முற்றாக இலங்கையிலிருந்து வெளியேறியது. இதனை அடுத்து விடுதலைப் புலிகளுக்கும் ஆர். பிரேமதாசாவிற்கும் இடையிலான பேச்சு வார்த்தைகள் தோல்வியடைந்த நிலையில், ஜூன் 10, 1990-ல் இருசாராருக்குமிடையிலான உடன்படிக்கை முறிந்தது.

1989 -1990 காலப்பகுதி இலங்கையில் உக்கிரமான - பயங்கரக் கொலைகள் இடம்பெற்ற காலப்பகுதியாக இலங்கை இரா



ணுவ ஆய்வாளர்களே குறிப்பிடுகின்றனர். 1989-ம் ஆண்டு ‘சடலங்களின் ஆண்டு’ என்றார் ரீட்டா செபஸ்தியான் என்ற

ஆங்கிலப் பத்திரிகையாளர். 1989-1990 காலம், தமிழ் மக்கள் அதுகாலவரை அனுபவித்திராத அவலங்களைச் சந்தித்த காலம். பின்னர் அனுபவிக்க வேண்டிய துயரங்களுக்கு அது முன் சமிக்ஞையாக அமைந்தது.

துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்த உடலங்கள், அடையாளம் தெரியாமல் உருக்குலைந்த சடலங்கள், துண்டிக்கப்பட்ட தலைகள், கொளுத்தப்பட்ட டயரால் எரியூட்டப்பட்ட சடலங்கள், வீதிகளில், கிராமங்களில், நதிகளில் அநாமதேயமாகக் கிடந்த பிணங்கள், தொகை தொகையாக கொல்லப்பட்டவர்களின் சவக் கிடங்குகள்.

மக்களின் வாழ்விடங்கள் மயான பூமியாகியது, குடியிருப்புகள் சுடலைக் காடாகின. மக்கள் அச்சத்திற்கும் பீதிக்கும் உள்ளானார்கள், பாதுகாப்பற்றவர்களாக உணர்ந்தார்கள், சாதாரண மக்களின் உயிருக்கு எந்தப் பெறுமதியும் இல்லை என்றாகியது. மக்கள் எங்குமே சுயமரியாதையோடோ, கௌரவமாகவோ நடத்தப்பட்டதேயில்லை. குடிமக்கள் அகதிகளானார்கள், சொந்த வீடுகளை விட்டு ஓடினார்கள், காடுகளில் தஞ்சம் புகுந்தனர். அகதி முகாம்கள் கொலைக் களங்களாகின. இராணுவங்களின் கொடூரம் தலை விரித்தாடியது. அகதி முகாம்களில், தெருவில், வீடுகளில் கைது செய்யப்பட்டு, இராணுவ வாகனங்களில் கொண்டு செல்லப்பட்டவர்கள் திரும்பவேயில்லை. வீதிகள், வீடுகள், கிராமங்கள் வெறிச்சோடிக்கிடந்தன. தமிழ் வீடுகள் தோறும் ஓலங்கள், மரணத்தின் நிழல் தமிழர் வாழுமிடமெல்லாம் விரவியது.

திருகோணமலை போன்ற பல்லின மக்கள் வாழ்கின்ற, சிங்கள ஆக்கிரமிப்புக் கூடிய, தமிழ்-சிங்கள மோதல் நாளாந்த நிகழ்வாக மாறிவிட்ட சூழலில், இந்த அவலம் எத்தகைய கோலங் கொண்டது என்பதைப் பற்றிய பதிவு மிக மிக அரிதாகவே கிடைக்கிறது.

இந்திய அமைதிப்படையின் சாதனை-வெற்றி-தோல்விகள் பற்றி டசன் கணக்கில் நூல்கள் வெளியாகியுள்ளன. சுழிபுரத்தைச் சுற்றி வளைத்ததைப் பற்றி, புங்குடுதீவில் நடத்திய அதிரடித் தாக்குதல் பற்றியெல்லாம் நுட்பமான விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகளும் தங்களின் வீரப்போராட்டச் சாதனைகளைக் குறித்து கணிசமான பதிவுகளைத் தந்துள்ளனர். போர்க்கால இலக்கியங்கள் நாவல்களாக, சிறுகதைகளாக, கவிதைகளாகக் குவிந்து கொண்டிருக்கின்றன. ஆனால், இந்த யுத்த காலங்களில் சிக்குண்ட தமிழ் மக்களின் அவலம் பற்றிப் பேசும் படைப்புகள் மிக அருந்தலாகவே காணக்கிடைக்கின்றன.

1990-ம் ஆண்டு ஜூன் மாதத்திற்கும் டிசம்பர் மாதத்திற்கும் இடையில் மட்டும் திருகோணமலையில் ஆயிரம் பேர்வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. ஜூன் மாதத்தில் மட்டும் தமிழ் மக்கள் பொதுவெளிகளுக்குக் கொண்டுவரப்பட்டு, விசாரிக்கப்பட்டு, நூற்றுக்கணக்கில் கைது செய்யப்பட்டு, இராணுவத்தால் கொண்டு செல்லப்பட்டவர்கள் மீண்டு வரவேயில்லை. மூதூரில் பிளாண்டின் பாயிண்ட் முகாம் கொலைக்களமாகவே செயற்பட்டிருக்கிறது. அகதிகளின் நிவாரணத்திற்காக வழங்கப்பட்ட ஓலைக் கிடுகுகள் திருகோணமலையில் சடலங்களை எரிப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. 1990-ம் ஆண்டில் திருமலையில் இராணுவத்தினர் வெறியாட்டம் ஆடியிருக்கின்றனர். கால்நடைகளைக் கவர்ந்து செல்ல முயன்ற இராணுவத்தினரின் நடவடிக்



கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் கைது செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர். இராணுவத்தின் செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறுவார் யாருமில்லை. வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்றாகியது.

இந்திய அமைதிப்படை வெளியேறியதை அடுத்து, திருகோணமலைக்குள் விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக உள்நுழைந்தனர். 1990, ஏப்ரல் 18-ம் திகதி காளி கோயிலுக்கருகில் உள்ள பொது மைதானத்தில் இருபதாயிரம் பேர் கொண்ட கூட்டத்தின் மத்தியில் உரையாற்றிய விடுதலைப்புலிப் பிரமுகர் மாத்தியா, 'அரசுடன் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன, ஆனால் ஆயுதங்களைக் கீழே போடமாட்டோம்' என்று தெரிவித்தார்.


பேச்சு வார்த்தைகள் தோல்வியுற்று மோதல் தீவிரங் கொண்ட போது, தந்திரோபாயரீதியில் புலிகள் பின்வாங்கிச் சென்று விட்டனர். 'யுத்த நிறுத்தம் ஒருபோதும் இல்லை. இறுதிவரை



யுத்தம் தொடரும்' என்று பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன சூளுரைத்தார். விடுதலைப் புலிகளும் முழு யுத்தத்திற்குத் தயாராகினர். ஆனால், திருகோணமலையில் நடந்த யுத்தம் தமிழ் மக்கள் மீதான யுத்தமாகவே மாறியது. யுத்தம்

ஆரம்பித்த சில நாட்களிலேயே இராணுவம் தமிழ் மக்கள் மீது ஈவிரக்கமற்ற நிலையில் வெறியாட்டம் நடத்தியது. விஷேட அதிரடிப்படையினரும் இந்த வெறியாட்டத்தில் இணைந்தபோது தமிழ் மக்கள் திக்கற்றவர்களாய் மரணவாச லுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். இனசங்காரம் என்பது நாளாந்தம் நடந்தது. ஒவ்வொரு தமிழ்க் கிராமத்திலும் நடந் தேறியது.

ஜூன் 13-ம் திகதி திருகோணமலையில் உப்புவெளி, கிண் ணியா, மூதூரில் அமைந்திருந்த இராணுவ முகாம்களின் மீதும் பொலிஸ் நிலையங்கள் மீதும் விடுதலைப் புலிகள் கடுந் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். திரியாய், கிண்ணி



யாவில் பொலிஸ் நிலையங்கள் புலிகளின் தாக்குதலுக்கு நின்று பிடிக்கமுடியாமல் வீழ்ந்தன. திருகோணமலையின் விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பா ளர் ரூபன் காயமுற்ற செய்தி வெளியானது. உப்புவெளியில் இராணுவ லெப்டினன்ட் மீகொட புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

ஜூன் 13-ம் திகதி லக்ஷ்மன் இலங்ககோன் என்ற படை அதி காரியின் தலைமையில் ஐந்து உயர் அதிகாரிகள் உட்பட நூறு இராணுவ கமாண்டோக்களுடன் எஸ்.எல்.என். கந்துல என்ற, சுடுகலனோடு கூடிய சீனப் படகுடனும் இரண்டு இஸ் ரேலிய விரைவுப் படகுகளுடனும் மூதூர் கடற்கரையில் இறங்க முயன்றபோது, புலிகளின் அதிரடித் தாக்குதலுக்குள் ளாயினர். இராணுவத்தினர் பதில் தாக்குதலில் ஈடுபட்டனரா யினும், தாக்குப்பிடிக்க முடியாத நிலையில், மேஜர் ஏ.எம். ஆசாத் திருகோணமலையில் உள்ள தனது உயரதிகாரிகளு டன் கலந்தாலோசித்து, தங்கள் இராணுவ நடவடிக்கையைக் கைவிட்டு, கந்துல படகினைத் திருகோணமலைக்குத் திருப் பினார். சில மணித்தியாலங்களின் பின், திருகோணமலையின் புறௌன் ரொக் பொய்ண்டிலிருந்து தாக்குதல் நடத்த கமாண் டோக்களைக் கொண்டுசெல்லக் கட்டளை பிறப்பிக்கப்பட் டது. மறுநாள் அதிகாலை 2.30 மணி அளவில் கடற்படையி னர் கமாண்டோக்களை பிரச்சினையின்றி மூதூர் ஜெட்டியில் தரையிறக்கினர். இந்த நடவடிக்கையை எதிர்பார்த்திருந்த விடுதலைப் புலிகள் இங்கு மேற்கொண்ட தாக்குதலில் 60 கமாண்டோக்கள் கொல்லப்பட்டனர். ஜூன் 15-ம் திகதி புலிகள் நடத்திய தாக்குதலில் திருகோணமலையில் ஐந்து இராணுவ அதிகாரிகளும் நாற்பத்தொரு இராணுவ வீரர்க ளும் கொல்லப்பட்டனர்.

இலங்கை முப்படைகளின் 'ஒப்பரேசன் ஸ்ட்ரைக் ஹார்ட்' நட வடிக்கை திருகோணமலையின் விடுதலைப் புலிகளின் முக் கிய தளங்களின் மீது தாக்குதல் மேற்கொண்டது. கோவிலடி, ஆலங்கேணி, கிண்ணியா, மூதூர், கட்டைபறிச்சான், சம்பூர், ஃபவுல் பொயிண்ட் ஆகிய புலிகளின் தளங்கள் மீது தாக்கு தல்கள் நடந்தன. ஜூலை 7-ம் திகதி சிங்க ரெஜிமன்ட், கெமுனு வோட்ச் ஆகிய படையணிகளைச் சேர்ந்த ஆயிரத் திற்கும் அதிகமான சிங்களத் துருப்புகள் கட்டைபறிச்சானின் புலிகளின் தளத்தின்மீது பெருந்தாக்குதலை நடத்தியது. கடற்படையினரும் விமானப் படையினரும் மூர்க்கமான தாக் குதலை மேற்கொண்டனர்.

ஜூலை 11-ம் திகதி திருகோணமலைக் கடற்பரப்பில் இலங் கைக் கடற்படைக் கப்பல்கள் மீது கடற்புலிகள் நடத்திய தாக் குதலில் அரசு கடற்படகு பெருஞ் சேதத்திற்குள்ளானது. ஒரு கடற்படை வீரர் கொல்லப்பட்டதுடன் மூன்று வீரர்கள் காயமுற் றனர். நீண்ட போராட்டத்தின் பின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலையின் கிழக்குக் கடற்கரைத் துறை அரசின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டதாக லண்டனின் 'த கார்டி- யன்' பத்திரிகை அறிவித்தது. திருகோணமலையிலிருந்து கிறிஸ்தோப்பர் லொக்வுட் என்ற பத்திரிகை நிருபர் 'டெய்லி டெலிகிராஃப்' பத்திரிகைக்கு அனுப்பிய செய்தியில், அவதா னமில்லாமல் மூதூரில் இறங்கிய நாற்பதுக்கும் அதிகமான இராணுவ கமாண்டோக்களை, ஐந்துக்கு ஒன்று என்ற அள வில் இராணுவத்தைவிட ஆளணி வலிமை கொண்டிருந்த புலிகள் நாற்பதிற்கும் அதிகமான வீரர்களை இத்தாக்குத லில் கொன்றொழித்தனர் என்று குறிப்பிடுகிறார்.' எங்களை அச்சுறுத்துவதற்காக புலிகள் அவர்களின் சடலங்களைத் தலைகீழாக மரங்களில் கட்டித் தொங்க விட்டிருக்கிறார்கள்' என்று ஒரு சிங்கள வீரர் தன்னிடம் கூறியதாக அவர் தனது செய்திக்குறிப்பில் கூறுகிறார்.

'துரதிஷ்டவசமாக, அப்பாவி மக்களைக் கொல்வதை எங்க ளால் தடுத்துக்கொள்ள முடியவில்லைதான்' என்றும் ஒரு சிங் களப் போர்வீரன் அவரிடம் கூறியிருக்கிறான். 'சிலநாட்க ளுக்கு முன்னர்தான், 2500 மக்களைக்கொண்ட வெல்லா வெளி என்ற தமிழ்க் கிராமத்தை அரச படைகள் முற்றாக அழித்துவிட்டிருந்தன. மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியதும், அவர்கள் வீடுகளில் மிச்சம் விட்டுச் சென்றி ருந்த பொருட்களைக்கொண்டு அந்த வீடுகள் அனைத்தை யும் இராணுவத் துருப்புகள் எரியூட்டிச் சென்றுள்ளன. 'தபால் நிலையம், பாடசாலை, மருத்துவமனை எல்லாவற்றையுமே எரித்துவிட்டுப்போயிருக்கிறார்கள். தமிழ் மக்களைப் பழி வாங்கும் நடவடிக்கைதான் இது' என்கிறார் ஒரு முதியவர் என்று தன் குறிப்பில் கிறிஸ்டோப்பர் லொக்வுட் மேலும் குறிக்கிறார்.

திருகோணமலையின் தம்பலகாமம் உதவி அரசாங்க அதி பரின் கீழ் அடங்கும் ஒன்பது பிரிவுகளில் ஒன்று. தம்பலகாமம் திருமலையின் தானியக் களஞ்சியம் என்று போற்றப்படுவது. நூறு சதுரமைல் பரப்பளவைக் கொண்ட தம்பலகாமம் முப் பது தமிழ்க் கிராமங்களையும் இருபதுக்கும் மேற்பட்ட முஸ் லிம் கிராமங்களையும் உள்ளடக்கியது. 1990-ல் இந்த நூறு சதுரமைல் பிரதேசத்தில், 41 இராணுவ முகாம்கள், 3 கடற்

படை முகாம்கள், 3 விமானப்படை முகாம்கள், 10 பொலிஸ் நிலையங்களும் சோதனைச் சாவடிகளுமாக முற்று முழுது மான இராணுவப் பிராந்தியமாக தம்பலகாமம் மாறியது. நெற் களஞ்சிய நிலையங்களும் பரமேஸ்வரா வித்தியாலயம், அல் -அக்ஸா மகா வித்தியாலயம் போன்ற பல பள்ளிக்கூடங்க ளும் தமிழ் அகதி முகாம்களாக மாறின. பத்தாயிரம் அகதி கள் இந்த முகாம்களில் குவிக்கப்பட்டனர். ‘இந்த முகாம்க ளில்தான் அழித்தொழிக்கப்படவேண்டிய பயங்கரவாதிகள் இருக்கிறார்கள்’ என்று அப்போதைய கிழக்கு மாகாண கமாண்டர் பிரிகேடியர் சிறி பீரிஸ் பிரகடனம் செய்தார். கிட்டத் தட்ட இப்பிரதேசம் எதிரி நாடாகவே இராணுவத்திற்குத்



தோன்றியிருக்கிறது. முற்றாக உணவுப்பொருட்கள் இங்கி ருந்த முகாம்களுக்குச் செல்வது தடை செய்யப்பட்டது. தண் ணீர், உணவு, கழிப்பறை வசதிகள் எதுவுமின்றி இங்கு மக் கள் பட்ட துயரம் சொல்லி மாளாது.

கிளப்பன்பேர்க் அகதிமுகாம் ஹிட்லரின் வதைமுகாமாக மாறியது. கருஞ் சீருடைகளில், இலக்கமிடப்படாத வானங்க ளில் இந்த முகாம்களுக்குள் பின்னிரவில் நுழையும் இராணு வத்தினரால், கைது செய்து, கடத்திச் செல்லப்பட்டவர்கள் பின்னர் அந்த முகாம்களுக்கு மீண்டதில்லை. திருமலையின் இராணுவத்தின் விசாரணைக் கூடமாகக் கருதப்பட்ட செவன் ஐலண்ட்ஸ் ஹோட்டலிலிருந்து, சடலங்கள் ரயரினால் எரியூட் டப்பட்டு, அவற்றிலிருந்து எழும் புகை மாலையில் வியாபித் துப் பரவுவது அன்றாடக் காட்சியாக இருந்துள்ளது. திரு- மலை கொலைக்களமாக மாறிய நாட்கள் அவை. பயங்கரவா தம் கோலோச்சிய கொடுமையான நாட்கள்.

அக்காலகட்டத்தில் வட- கிழக்கு மாகாண ஆளுநராகவிருந்த லெப்டினன்ட் கேணல் நளின் செனவிரத்ன சாம்பல்தீவு, சல்லி ஆகிய கிராமங்களிலிருந்த அனைத்து மக்களையும் கிராமங் களை விட்டு வெளியேற்றினான்.

திருகோணமலையின் அரசாங்க அதிபராகவிருந்த ஜி.ஏ. விஜேக்கூன், இனவன்முறை வெடித்தெழுந்த நிலையில், எரி கிற தீக்கு எண்ணை வார்த்துக் கொண்டிருந்ததாக செய்தி கள் வெளியாகின.
1990 டிசம்பர் 17-ம் திகதியன்று நிலக் கண்ணிவெடித் தாக்கு தலில், திருகோணமலையின் அனைத்து ஆயுதப் படைகளின் கட்டுப்பாட்டு அதிகாரியாகவிருந்த பிரிகேடியர் லக்ஷ்மண் விஜேரத்ன, திருமலையின் பொலிஸ் அத்தியட்சகர் ரிச்சர்ட்



விஜயசேகர போன்றோர் கொல்லப்பட்டதை அடுத்து, திரு மலை இராணுவத்தின் பழி தீர்க்கும் கொலைக் கிடங்காக மாறியது.

வெகுவிரைவில், இந்த யுத்தம் தமிழ் மக்கள்மீது இராணு வம் தொடர்ந்த மூர்க்கமான இனசங்காரமாக முடிந்தது. ‘இந்த யுத்தம் விடுதலைப் புலிகளுக்கு எதிரானதே தவிர, தமிழ் மக் களுக்கு எதிரானதல்ல’ என்ற பாதுகாப்பு அமைச்சரின் பிரகட னம் பொருளற்றதாக, போலித்தனமனதாக, பொய்யான கூற் றாகவே அமைந்தது. அந்த யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரா னதாகவே முடிந்தது. கிட்டத்தட்ட நான்கு லட்சம் தமிழ் மக் கள் அகதிகளானார்கள். அச்சத்தினால், மக்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டு, ஆலயங்கள், பாடசாலைகள், பொதுக் கட்டடங்கள் ஆகியவற்றில் தஞ்சம் புகுந்தனர். தமி ழர்கள் காலங்காலமாக தாங்கள் வாழ்ந்த சொந்த வாழ்விடங் களிலேயே அகதிகளானார்கள்.

ஹெமிங்வேயின் பாலத்தடிக் கிழவர்கள் திருமலையின் சகல கிராமங்களிலும் செயலற்று நின்றார்கள்.

இரண்டாம் கட்ட ஈழயுத்தத்தில் திருமலை மக்கள் அனுப வித்த மாபெருந் துயரத்தின் வதையை திருமலை நவம் தனது நாவலில் ரத்தமும் சதையுமாகப் பதிவு செய்கிறார். திருமலை யின் வரலாற்றைத் தனது இரத்த நாளங்களில் தேக்கி வைத் திருக்கும் திருமலை நவம், தன் முழு வாழ்நாளையும் அந்த மண்ணிலே வாழ்ந்து தீர்த்தவர். மாணவனாக, பட்டதாரி மாண வனாக, ஆசிரியராக, குடும்பஸ்தனாக, தந்தையாக, கண்டிப் பான கல்லூரி அதிபராக... திருமலை மண் மட்டுமே அவனது பூமி. கொத்துக் கொத்தாகப் பூத்துக்கொட்டும் பூவரச மரங்க ளையும் விகாரை வீதிக்கு வேலி போட்டாற்போல் அடர்ந்து படர்ந்திருக்கும் நொச்சி மரங்கள், மாரியம்மன் கோவில், கிழட்டு மாமரம், பக்கத்தே தோட்டக் கிணறு என்று வன்னியர் வளவின் இதமான சூழலில் கனவு காண்பவன். திருமலையின் இயற்கைத் துறைமுகத்தின் அழகை, வங்காள விரிகுடாவின்

சீதளக் காற்றை அள்ளி முகர்ந்து ரசிப்பவன். திருமலையின் அழகிய தெருக்களில், வீதி முடுக்குகளில், ஆலயங்களில் அவன் கால்கள் படாத இடமே இல்லை. அது அவனின் ஊர். சொந்த ஊர். அங்கு அவனுக்குத் தெரியாத மக்கள் இல்லை. அவன் கையில் வளர்ந்த ஆயிரம் ஆயிரம் மாணவர்கள், அரசியலாளர்கள், அதிகாரிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள், நல்லுள்ளம் கொண்ட சமூகத் தொண்டர்கள், சமயாபிமானிகள், இயக்ககாரர்கள் என்று திருமலையின் ஏகோபித்த குரலாக ஒலித்தவன். வாழ்விலும் தாழ்விலும் அந்த மக்களின் அனைத்து வாழ்வுக் கோலங்களிலும் பூரண பங்கு கொண்டவன்.

திருகோணமலையில் வளர்ந்த தம்பிமுத்து என்ற ஆங்கிலக் கவி, தனது இருபத்து நான்காவது வயதில், இங்கிலாந்திற்கு வந்த ஒரே ஆண்டில் ஆங்கிலக் கவிதைச் சஞ்சிகையை வெளியிட்டு, ஒரு பத்தாண்டுக் காலம் ஆங்கிலக் கவியுலகின் தனி நட்சத்திரமாகத் திகழ்ந்த இவர், தான் வாழ்ந்த திருகோணமலை வாழ்வைப் பதிவு செய்திருக்கிறார். அது அவரின் சொப்பன உலகம். போதை தரும் நினைவு மீட்டல் அது.

***Beside the Eastern harbour full of ships,***
***And pretty shells on the deserted lunar beach:***
***Goatsfoot underfoot, and a lyric poem***
***In the screw-pine smell. The harbour lips***
***Enclosed a town beyond the railroad's reach.***
***There was peace in Trincomalee too:***
***With leopard, deer and buffalao I roamed***
***The jungle paths with Elizan and my brothers;***

1930-களில் திருகோணமலையில் அமைதி உலா வந்த கனவு அது. இன்று அவலத்தின் ஓலம் பிரபஞ்சத்தை நிறைக்கும் கோலமே வியாபகம் கொண்டு நிற்கிறது.

1990-ல் திருமலையில் தமிழ் மக்கள் அனுபவித்த அவலத்தை, அந்த மக்கள் கூட்டத்தில் ஒருவராக நின்று அனுபவித்த துயரத்தை திருமலை நவம் இந்த நாவலில் அள்ளித் தெளித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் முதுகலைமாணிப் பட்டத்திற்கான இறுதிப் பரீட்சையை முடித்து விட்டு, திருகோணமலை திரும்ப முயலும் பவன் என்ற ஆசிரியரின் கூற்றாகக் கதை நகருகிறது. பவன் என்ற கதைசொல்லிக்குள் திருமலை நவம் செறிந்து நிற்கிறார் என்பதில் ஐயமில்லை. இந்த நாவலில் கதாநாயகர்கள், கதாநாயகிகள் என்று யாருமில்லை. நாளாந்த வாழ்வில் நாம் அன்றாடம் காணும், பழகும், சந்திக்கும் மனிதர்கள் இந்த நாவலின் ஒவ்வொரு பக்கத்திலும் நிறைந்துபோய்க் காணப்படுகிறார்கள். திருமலைவாழ் சாமானிய மக்களின் கூட்டுக் குரலாக இந்நாவல் வெளிப்பட்டிருக்கிறது. 1990-ன் திருமலைத் தமிழர்களின் அந்தர வாழ்வின் நிகரற்ற ஆவணமாக இந்நாவல் சிறப்புப் பெறுகிறது.

திருமலையின் வன்னியர் வளவு, திருஞானசம்பந்தர் வீதி, விகாரை வீதி, மாரியம்மன் ஆலயம், சிவபுரி, சமாது லேன், சிவன் ஆலயம், மகேஸ்வரி சத்திரம், மடத்தடிச் சந்தி, கடற்காட்சி வீதி, காசுத்தெரு வீதி, மத்திய வீதி, பாலம்போட்டாறு, வில்கம் விகாரை, மட்கோ, அயனபுரம், சுங்கவீதி, பிரடெரிக் கோட்டை, சனீஸ்வரன் கோவில், மொட்டைப்புளி வைரவர் கோயிலடி முடக்கு, அலஸ் தோட்டச் சந்தி, நாலாங்கட்டைச் சந்தி, கிளப்பன் பேக், மணிக்கூட்டுக்கோபுரம், மீன் சந்தை, மக் ஹெய்சன் விளையாட்டரங்கு, பத்ரகாளியம்மன் ஆலயம் என்று திருகோணமலையின் சந்து பொந்துகள் எல்லாம் நாவல் புகுந்து செல்கிறது. திருகோணமலையின் அயல் தமிழ்க் கிராமங்களின் அவலம் பற்றிப் பேசுகிறது. அக்கால கட்டத் திருகோணமலைத் தமிழ் மக்களின் ஆத்மத் துடிப்பின் நாதமாக இந்நாவல் ஒலிக்கிறது.

சாதாரண மக்கள் கூட்டத்தில் ஒருவனாய், இராணுவச் சுற்றிவளைப்பில் அகப்பட்டு, அந்த மக்களின் அவலத்தை கண் முன்னே கொண்டுவரும் நேர்த்தியில் அசலான தனது எழுத்தின் வலிமையை நிரூபிக்கிறார் திருமலை நவம்.

83-ம் ஆண்டு ஆடிக் கலவரம் திருமலையில் கொதிப்பை ஏற்படுத்தி, அலை அலையாய்த் தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் இணைந்துகொள்வதை, விடுதலை இயக்கங்கள் திருமலையில் வேரூன்றுவதை, இந்திய அமைதிப்படையின் அதிரடி நடவடிக்கைகளை, பிரேமதாச - புலிகளின் பேச்சு முறிந்து போவதை உரிய அரசியல் பின்னணியில் விபரித்து, 1990 திருகோணமலையை எழுத்தில் வடித்திருக்கிறார் திருமலை நவம்.

1985-ல் திரியாய் என்னும் தமிழ்க் கிராமம் பூண்டோடு அழிக்கப்பட்ட கதையைச் சொல்கிறார்.

திரியாய்க் கிராமத்தின் 1500-க்கு மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்ட கொடுமையைப் பதிவு செய்கிறார்.அதிபர் மகா-தேவன், கிராம சேவகர் நாராயணபிள்ளை, கூட்டுறவுச் சங்க முகாமையாளர் அருணாசலம் ஆகியோர் உட்பட எட்டுப் பேர் கைகால் கட்டப்பட்டு, இராணுவத்தால் கடத்தப்பட்டு, கல்லம்பத்தைக் காட்டிற்குள் நிரையாக நிறுத்தப்பட்டு, சுட்டுக் கொல்லப்படும் காட்சியை இந்த நாவலில் வாசிக்கும்போது, துயரம் நம்மைக் கௌவிக் கொள்கிறது.

இயக்கத்தில் இணைந்து கொள்ளும் தன் மாணவனும் மாணவியும், மனமொத்து இயக்கத்தின் அனுமதியோடு மணமுடித்து வாழ, திருமலையில் தங்கள் கிராமத்திற்குத் திரும்பும் நிலையில் அவர்கள் குடும்பத்தால், இராணுவத்தால் எதிர் கொள்ள நேரும் பிரச்சினைகள் மிக இயல்பாக நாவலில் விரிகின்றன. வலிந்து கட்டப்பட்ட கதைகளோ, காலத்திலும் களத்திலும் வேர் கொள்ளாத கற்பனைச் சித்திரிப்புகளோ இல்லாமல் கதை வீதிகளில் உலவுகிறது, கிராமத்துப் புழுதியில் தோய்கிறது. இராணுவக் கொடூரங்களில் முக்குளிக்கிறது. பொதுமக்கள் படும் துயரம் நமது துயராகிறது. அம்மண் மயான பூமியாகும்போது நமது நெஞ்சமும் வறண்டு போகிறது.

திருமலையின் துயர் பாடும் பாணனாக, அவலச் சுவையைப் பிழிந்துதரும் எழுத்தோவியனாக திருமலை நவம் மிளிர்கிறார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வார்ப்பான திருமலை நவம் திருகோணமலையின் ஆவணச் சிற்பியாகத் தன்னைச்

செதுக்கியிருக்கிறார். 'இராவண தேசம்: திருகோணமலை மண்ணின் வரலாற்றுப் பதிவுகள்' (2017), திருமலை நவத்தின் திருமலை மண்ணின் மீதான அவரின் தாகத்தை வெளிப்படுத்தி நிற்கிறது. அவரின் ஆழ்ந்த வரலாற்றுப் புலமை அந்நூலில் பக்கத்திற்குப் பக்கம் பளிச்சிடுகிறது. 'திருகோணமலை கலை, இலக்கிய வரலாறு' (2012) திருமலையின் இலக்கிய வரலாற்றை விளக்கும் அரிய கையேடாகச் சிறக்கிறது. திருகோணமலைப் பிரதேச நாடக, அரங்கியல் பாரம்பரியமும் திருமலை நவத்தின் பிறிதொரு ஆய்வுப்புலமாகும்.

எஸ். இன்னாசித்தம்பி, த. சரவணமுத்துப்பிள்ளை, வ.அ. இராசரத்தினம், ந. பாலேஸ்வரி போன்றோரின் நாவல் இலக்கியப் பாரம்பரியத்தில் திருமலை நவமும் இணைகிறார். திருகோணமலையின் நாவல் பாரம்பரியத்திற்கு நீண்ட வரலாறு உளதெனினும், அதனைச் செழுமைப்படுத்தும் நாவல்கள் பெருமளவில் வந்துசேரவில்லை என்பதைக் குறித்தாக



வேண்டும்.

நம் காலத்தில் நம் கண்முன் நிகழ்ந்த இனவன்முறையினை, இராணுவ அட்டூழியங்களை, அப்பட்டமான அடிப்படை மனித உரிமை மீறல்களை, நிர்வாக அராஜகங்களை, திட்டமிட்ட குடியேற்ற முனைப்புகளை, அன்றாட இன மோதல்களை எடுத்துச் சொல்ல நிறையக் கதை சொல்லிகள் தேவை. திருமலை நவத்தின் இந்த நாவல் திருமலையின் கறை படிந்த, இருண்ட காலத்தைப் பேசும் நாவல். திருமலையின் துன்பியலைப் பாடும் நவீன பாணனாக திருமலை நவம் இலக்கிய வரலாற்றில் தன்னை நிலைநிறுத்துகிறார்.

திருகோணமலையோடு எனக்கொரு பந்தமுண்டு. காலத்தால் நான் என்றென்றும் கைம்மாறு செய்யமுடியாத பந்தம் அது. மட்டக்களப்புச் சிறையுடைப்பினை அடுத்து, இராணுவம் சல்லடை போட்டுத் தேடும் சூழலில், எனக்கு அடைக்கலம் தந்த மண் திருமலை. யாழ்ப்பாணம் செல்லும் சரியான தருணம் கனிந்துவரும் காலம் வரை, எனக்கு வீட்டில் அடைக்கலம் தந்த அந்த ஆசிரியையினை மாண்புமிகு மாதரசியை நெகிழ்ச்சியோடு நினைவு கூர்கிறேன்.

நினைத்துப்பார்க்க முடியாத மற்றுமொரு உதவியைச் செய்த அதி உயர் நிர்வாக அதிகாரியையும் இந்தக் கணத்தில் எண்ணிப்பார்த்து நெஞ்சம் சிலிர்க்கிறேன்.

'1958-ம் ஆண்டுக்குப் பின் இலங்கையில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட காட்டுமிராண்டித்தனமான இனக் கொடுமைகள். இதன் உச்ச கட்டமாக 83-ம் ஆண்டு ஆடிக் கலவரம் திருகோணமலையைச் சுடுகாடாக்கியது. தமிழருக்குச் சொந்தமான கடைகள், வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.' என்று திருமலை நவம் இந்த நாவலில் ஓரிடத்தில் குறிக்கிறார். திருகோணமலைக்குள் நான் நுழைந்தபோது, அழகு பொலியும் திருகோணமலை சுடுகாடாய், எரியுண்ட கட்டடங்களும், கடைகளும், வீடுகளுமாய் சிதிலமடைந்து கிடந்த கோரக் காட்சியைப் பார்த்துத் திகைத்துத்தான் போனேன். வெளியுலகம் தெரியாத எனக்குத் தெரிய வந்த காட்சிகள் உவப்பானதாக இருக்கவில்லை.

ஐந்தாம் வகுப்பில் என் இலக்கிய ஆர்வத்திற்குப் பதியமிட்ட தாமரைத்தீவான் என்னும் சோ. இராசேந்திரம் அவர்கள் கிண்ணியாவைச் சேர்ந்தவர். அவரிடம் பயின்ற மாணவர்கள் தமிழகத்திலிருந்தும் சென்று அவரைத் தரிசித்துச் செல்வார்கள். மிக நீண்ட இடைவெளிக்குப் பின் திருகோணமலையில் அவரைச் சென்று பார்த்த தருணங்கள் பொன்னானவை.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் என்னுடன் பயின்ற சூசை நோபேர்ட் எனப்படும் கோவிந்தன் திருமலை மண்ணின் புதல்வன். தனது 'புதியதோர் உலகம்' நாவலை, அச்சகத்திலிருந்து, தாளின் அச்சின் மைகூடக் காயாத நிலையில், நள்ளிரவில், அவனே ஆயுததாரிகளால் தேடப்படும் சூழலில், சென்னையில் என்னிடம் தந்ததையும், அரவணைக்கும் கரங்கள் என்று நம்பிய இடம், கொடிய நச்சுப் பாம்புகளின் வாழ்விடம் என்று தெரியாமல் சிக்குண்டு கொல்லப்பட்டுவிட்டான் என்ற செய்தியறிந்து நான் திகைத்துப்போனதையும் இன்று நினைத்துப் பார்க்கிறேன். கள்ளங்கபடமற்ற நல்ல மனதின் சொந்தக்காரன். ஆனால், அவன் வைத்துவிட்டுச் சென்ற நாவலில் அவன் இன்னும் வாழ்கிறான்.

விடுதலைப் புலிகளின் மாவீரர் வரிசையில் ஆரம்பத்தில் இடம்பெறும் சார்ல்ஸ் அன்டனி எனப்படும் சீலன் திருகோணமலையைச் சேர்ந்தவர் என்ற தகவலை சென்னையில் வாழ்ந்த தர்மு சிவராமுவிடம் சொன்னபோது, அச்செய்தி அவருக்கு ஆர்வத்தை ஊட்டியிருந்தது. சீலனைக் கதாபாத்திரமாக வைத்து அவர் எழுதிய கதைதான் 'அங்குலிமாலா'.

'காலம் என்பது கறங்கு போல் சுழன்று' என்ற வரிகளை பேராசிரியர் க. கைலாசபதி அடிக்கடி கூறுவார்.

பாரசீகக் கவிஞன் உமர் கயாமின் வரிகள் இவை:
'எழுதிச் செல்லும் விதியின் கை எழுதி எழுதி மேற்செல்லும்'



nithiyananthan.m@thaiveedu.com




பேராசிரியர் செ. யோகராசா அவர்கள் சென்ற வருடம் காலமான போது, மல்லியப்புச்சந்தி திலகர் அவர்கள் எழுதிய முகநூல் அஞ்சலிக் குறிப்பில், *'ஈழத்தின் முதற் பெண் கவிஞர் திருமதி. மீனாட்சியம்மை நடேசய்யர்', 'ஈழத்தின் முதல் அரசியல் நாடக நூலாசிரியர் கோ. நடேசய்யர்'* (- பேராசிரியர் *செ. யோகராசா), 'மலையகம் குறித்த உங்கள் ஆய்வுத் தேடல்கள் எமக்கு நம்பிக்கையை வலுப்படுத்தியது பேராசானே!'* எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கட்டுரைக்கான பொறி தட்டியது அப்போது தான். பேராசிரியர் அவ்வாறு குறிப்பிட்டது உண்மைதான். இந்தக் கட்டுரை மீனாட்சியம்மை நடேசய்யர் பற்றியதனால் அவர் குறித்த பேராசிரியரின் பதிவை மட்டும் அவசியம் கருதி இங்கே பதிவிடுகின்றேன்.

'இளங்கதிர்' - 2000 / 2001 சஞ்சிகையில் பேராசிரியர் எழுதிய 'ஈழத்தின் முதற் பெண் கவிஞர்' என்ற கட்டுரையில்,

*'ஈழத்தில் நவீன கவிதையின் தோற்றம் பிரக்ஞைபூர்வமாக (சென்ற நூற்றாண்டில்) நாற்பதுகளின் பிற்பகுதியில் ஆரம்பமாயினும் அதற்கான கால்கோள் முப்பதுகளிலேயே உருவாகி விட்டது என்று அண்மைக்கால ஆய்வுகளால் தெரிய வருகிறது. இத்தகைய உருவாக்கம் இருவேறு பிரதேசக் கவிஞர்களிடம் முகிழ்த்தது. இவர்களுள் ஒரு சாரார் யாழ்ப்பாணப் பிரதேசம் சார்ந்த (ஈழகேசரி) கவிஞர்கள், மறுசாரார் மலையகத்தைச் சார்ந்த கவிஞர்கள். மலையகம் சார்ந்த குறிப்பிடத்தக்க இரு கவிஞர்களுள் (மற்றொருவர் கோ. நடேசய்யர்) ஒருவரான மீனாட்சியம்மாள் நடேசய்யரே ஈழத்தின் முதற் பெண் கவிஞருமாகின்றார்.*

*இன்று மீனாட்சியம்மாள் நடேசய்யரின் பாடல்கள் அனைத்தையும் தொகுத்துப் பார்க்கின்ற போது உள்ளடக்க ரீதியில் இரு சிறப்புகள் வெளிப்படுகின்றன. இவை அரசியல் சார்ந்த எதிர்ப்புக் குரலாக விளங்கியமை ஒன்று. தொழிலாளர்களைப் போராட்டத்திற்குத் தூண்டுவனவாக விளங்குகின்றமை மற்றொன்று. இதனாலேயே இவரது பாடல்கள் உணர்ச்சி மிகுந்தனவாகவும் வெளிப்பாட்டு முறையில் வித்தியாசமானவையாகவும் அமைகின்றன எனலாம்.*

*வெளிப்பாட்டு முறையிலான வித்தியாசங்களுள் முக்கியமானது பெரும்பாலான பாடல்கள் கூத்து அல்லது சினிமாப் பாடல் மெட்டுகளில் அமைந்துள்ளமையாகும்.*

*நவீன கவிதையின் உத்தியாக இசை, மெட்டு என்பனவற்றைக் கையாளுதல் என்று சிந்திக்கும் போது நவீன கவிதையின் பிதாமகனான பாரதியின் நினைவு எழுவது தவிர்க்கவியலாததாகி விடுகின்றது. ஏனெனில் பாரதியே நவீன கவிதையில் இத்தகைய உத்திகளை முதன் முதல் கையாண்டவர். அதற்குக் காரணம் உண்டு. ஆண்டவர் குரலாக, வித்துவத்தின் குரலாக ஒலித்த கவிதையை மக்கள் குரலாக்கியவர் பாரதியல்லவா? இரண்டொரு வருசத்து நூற் பழக்கமுள்ள பொது ஜனங்களுக்காக, பொதுஜனங்கள் விரும்பும் மெட்டுகளை அவர் கையாண்டமை இயல்பானதே.*

*ஈழத்தில் குறிப்பாக மலையகத்தில் பாரதி புகழ் பரப்பிய முன்னோடிகளுள் ஒருவரான மீனாட்சியம்மாள் நடேசய்யரின் கவிதைகளும் மேற்கூறியவாறு பாரதியார் கவிதைகளின் ஓரிரு அம்சங்களைப் பெற்றுக் கொண்டமை வியப்புக்குரியதன்று. ஆக ஈழத்தின் முதற் பெண் கவிஞராகத் திகழும் மீனாட்சியம்மாள் நடேசய்யர் ஈழத்தின் நவீன கவிதை முன்னோடிகளுள் ஒருவராகவும் காணப்படுகின்றமை கண்கூடு'* எனப் பதிவு செய்திருப்பார்.

இந்தக் கட்டுரை 2007-ம் ஆண்டு வெளிவந்த அவரது 'ஈழத்து நவீன கவிதை: புதிய உள்ளடக்கங்கள், புதிய தரவுகள், புதிய போக்குகள்' நூலிலும் இடம்பெற்றுள்ளது.

அந்தவகையில் மீனாட்சியம்மாள் நடேசய்யரின் 'இலங்கையில் இந்தியத் தொழிலாளர் அந்தரப் பிழைப்பு' பாகம் ஒன்று மற்றும் பாகம் இரண்டு நூல்கள் 1931-ம் ஆண்டில் வெளிவந்தன. (பார்க்க: எம்.எம். ஜெயசீலன், ஜெ. ஹறோசனா (தொகுப்பாசிரியர்கள்) - கோ.ந. மீனாட்சியம்மாள் படைப்புகள்)

பேராசிரியர் ஈழத்தின் முதற் பெண் கவிஞர் மீனாட்சியம்மாள் நடேசய்யர் என்று குறிப்பிட்டாலும் ம.பா. மகாலிங்கசிவம் கடந்த 15 வருடங்களுக்கு மேலாகப் புலோலியைச் சேர்ந்த பண்டிதை பத்மாசனி அம்மையாரே ஈழத்தின் முதற் பெண் கவிஞர் எனத் தொடர்ச்சியாக ஆதாரங்களின் ஊடாக வலியுறுத்தி வருகின்றார்.

அந்த வகையில் செப்ரெம்பர் 2008-ம் ஆண்டு வெளிவந்த ‘ஞானம்’ நூறாவது இதழான ‘ஈழத்து நவீன இலக்கியச் சிறப்பிதழில்’ ம.பா. மகாலிங்கசிவம் ‘புலோலியின் பெண் கல்விப் பாரம்பரியம்’ என்ற கட்டுரையை எழுதியிருந்தார்.

அதில் 1922-ம் ஆண்டில் முதற்பதிப்பாக வெளிவந்த ‘புலோலி பசுபதீசுவரர் பதிற்றுப் பத்து அந்தாதியில்’ பண்டிதை பத்மாசனி தமது 22-வது வயதில் இயற்றியதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் பதிப்பிக்கப்பட்ட போது இவருக்கு என்ன வயது என்பதோ இவர் எத்தனையாம் ஆண்டு பிறந்தார் என்பதோ கூறப்படவில்லை. எனினும் 1900-ற்கு முன்னராக அவரது பிறந்த ஆண்டு இருக்குமென ஊகிக்க முடிகிறது. இந்த நூலைப் படிப்பவர்கள் பண்டிதை பத்மாசனி சிறந்த கவியாற்றலும் கற்பனை வளமும் உடையவராக இருந்தார் என்பதை அறிந்து கொள்ளலாம். இந்நூல் பற்றிக் கூறும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், ‘செய்யுள்களில் அவரின் தமிழ்ப் புலமை நன்கு வெளிப்படுகிறது. அவர் வாழ்ந்த காலத்தில் செய்யுட் புலமை பெரிதும் மதிக்கப்பட்டது. இறைவனைப் பற்றிப் பாடும் போது மூவகைப்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார்.

- புலோலி நகர்ச் சிறப்பு
- பசுபதீசுவரர் வீற்றிருக்கும் கோயிற் சிறப்பு
- பசுபதீசுவரர் அருட்சிறப்பு

இவ்வமைப்பு திருஞான சம்பந்தருடைய பாடல்களைப் பெரிதும் ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கது. நாயன்மார் பாடல்களில் பெற்றிருந்த பயிற்சி, பத்மாசனி அம்மாள் பாடல்களிலும் பதிந்துள்ளது’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே ‘புலோலி பசுபதீசுவரர் பதிற்றுப் பத்தந்தாதியை’ இயற்றிய பண்டிதை பத்மாசனியை ஈழத்தின் முதற் பெண் கவிஞராகக் கொள்ளலாம் போல உள்ளதென ம.பா. மகாலிங்கசிவம் அந்தக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

இதனைப் பேராசிரியர் செ. யோகராசாவும் பிற்பட ஒத்துக் கொண்டிருப்பதை ‘ஜீவநதி’ - 2009 கார்த்திகை / மார்கழி வெளிவந்த ‘கவிதைச் சிறப்பிதழில்’ அவர் எழுதிய கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது. இதனை வலுவான ஆதாரமாக 2011-ம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற ‘சர்வதேசத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டுச் சிறப்பு மலரில்’ ம.பா. மகாலிங்கசிவம் எழுதிய ‘ஈழத்தின் முதற் பெண் கவிஞரும் முதற் பெண் மொழிபெயர்ப்பாளருமான பண்டிதை பத்மாசனி அம்மாள்’ கட்டுரையில் பயன்படுத்தியுள்ளார்.

அந்தக் கட்டுரையில் ஈழத்தின் முதற் பெண் கவிஞராகப் பண்டிதை பத்மாசனி அம்மாளை முதன்முதலில் இனங் கண்டு இக்கட்டுரை ஆசிரியரால் முன்வைக்கப்பட்ட கருத்து (‘ஞானம்’ நூறாவது இதழில் இடம்பெற்ற ‘புலோலியின் பெண் கல்விப் பாரம்பரியம்’ என்னும் கட்டுரை) இன்று பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஈழத்தின் நவீன கவிதை பற்றிய முனைப்பான ஆய்வுகளை மேற்கொண்டு வரும் கலாநிதி செ.யோகராசா அவர்களும் தமது ‘ஈழத்துப் பெண்கள் வளர்ச்சியும் தளர்ச்சியும் வளமும்’ கட்டுரையில், *‘ஈழத்தில் மரபுக் கவிதை எழுதிய முதற் பெண் கவிஞர் பண்டிதை இ. பத்மாசனி அம்மாள். அவர் எழுதிய முக்கியமான நூல் ‘புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப் பத்தந்தாதி’ ஆகுமென (தகவல்: பேராசிரியர் அ.சண்முகதாஸ், வேலாயுதம் மகாவித்தியாலய நிறுவன நினைவுப் பேருரை - 2009) இக்கருத்தை முழுமையாக ஏற்றுக்கொள்கின்றார் (ஜீவநதி - கார்த்திகை / மார்கழி - 2009)’* எனச் சுட்டிக்காட்டுகின்றார்.

அதே வேளை தை 2017 வெளிவந்த ‘ஜீவநதி’ நூறாவது இதழான ‘ஈழத்துப் பெண் எழுத்தாளர்கள் சிறப்பிதழில்’ ம.பா.-மகாலிங்கசிவம் எழுதியுள்ள ‘ஈழத்தின் முதற் பெண் புலவர் பண்டிதை இ. பத்மாசனி’ கட்டுரையில்,

‘மிகச் சிறு வயதிலேயே பண்டிதர் பட்டம் பெற்றுக்கொண்ட பத்மாசனி தனது 22-வது வயதில் (1925) ‘புலோலி பசுபதீசுவரர் பதிற்றுப் பத்தந்தாதி’ என்னும் நூலை வெளியிட்டார். ஈழத்தில் பெண் புலவரால் இயற்றப்பட்ட முதற் தமிழ் நூலாக இந்நூல் இருப்பதால் ஈழத்தின் முதற் பெண் புலவராகப் பண்டிதை பத்மாசனியே கொள்ளப்படுகின்றார். ஆரம்பத்தில் முதற் பெண் கவிஞராகக் கொள்ளப்பட்ட மலையகத்தைச் சேர்ந்த மீனாட்சி நடேசய்யர் 1930-களிலேயே கவிதைகளை இயற்றத் தொடங்கினார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்’ என மீளவும் பதிவு செய்துள்ளார்.

ம.பா. மகாலிங்கசிவம் 2011-ம் ஆண்டு எழுதிய கட்டுரையில் ‘ஈழத்தின் முதற் பெண் கவிஞராகப் பண்டிதை இ. பத்மாசனி பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக்’ கூறினாலும்...

2017-ம் ஆண்டு வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட ‘ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்’ புதுக்கிய பதிப்பில் மீனாட்சியம்மாள் நடேசய்யர் பற்றி குறிப்பிடுகையில், *‘மீனாட்சியம்மாள் நடேசய்யர் மலையகத் தமிழ்க் கவிஞர், எழுத்தாளர், சமூகச் செயற்பாட்டாளர். இவரின் பல கவிதைகள் மலையகத் தமிழர்களின் அரசியல், பொருளாதார, வாழ்வியல் சிக்கல்களை எடுத்துரைத்து அவர்களைத் தமது உரிமைகளுக்காகப் போராடும் படி தூண்டி அமைந்துள்ளன. இவர் மலையகத்தின், ஈழத்தின் முதல் பெண் கவிஞர் என்றும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்’* என்றே குறிப்பிட்டுள்ளனர்.

அது போலவே 2017 தை வெளிவந்த ‘ஜீவநதி’ நூறாவது இதழான ‘ஈழத்துப் பெண் எழுத்தாளர் சிறப்பிதழில்’ லெனின் மதிவானம் எழுதிய ‘மீனாட்சியம்மாள் நடேசய்யர் : இலங்கையில் சமூக மாற்றத்துக்கான முதலாவது பெண் குரல்’ கட்டுரையில், *பேராசிரியர் செ. யோகராசா, அம்மையாரின் கவிதைகளை ஒப்பியல் நோக்கில் அணுகி இலங்கையின் முதலாவது பெண் கவிஞர் எனக் குறிப்பிடுகின்றார். இதற்கான ஆதாரங்களையும் அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை’* என்றே பதிவு செய்துள்ளார்.

அதே சமயம் பேராசிரியர் செ. யோகராசாவின் மறைவுக்கு மல்லியப்புச்சந்தி திலகர் எழுதிய அஞ்சலிக் குறிப்பின் வாயிலாகப் பேராசிரியரின் ஆய்வு முடிவுகள் மலையக இலக்கியத்திற்கு வழங்கிய உந்துசக்தியை அறிய முடிந்தாலும் ஈழத்தின் முதற்பெண் கவிஞர் மீனாட்சியம்மை நடேசய்யர் தான் என்பதை மல்லியப்புச்சந்தி திலகர் தற்போதும் ஏற்றுக்கொள்கின்றாரா இல்லையா என்பதை அவரது கூற்றின் மூலம் அறிய முடியவில்லை.

ம.பா. மகாலிங்கசிவம் பண்டிதை பத்மாசனி குறித்து முதலில் எழுதிய 2008 'ஞானம்' கட்டுரையில் 'புலோலி பசுபதீசுவரர் பதிற்றுப் பத்தந்தாதி' 1922-ம் ஆண்டு வெளிவந்ததாகக் குறிப்பிட்டாலும் பின்னர் அவுஸ்ரேலியாவில் வசிக்கும் பண்டிதை பத்மாசனியின் மகனான வைத்தியர் ரவீந்திரன் மூலம் அவரது சரியான பிறந்த திகதி, இறந்த திகதி, அவரது புகைப்படம் மற்றும் நூல் வெளிவந்த சரியான ஆண்டு (1925) என்பவற்றை உறுதிப்படுத்திப் பிற்பட எழுதிய கட்டுரைகளில் அதனைத் திருத்தியுள்ளார்.

அந்தவகையில் இந்த ஆண்டு முரண்பாட்டைத் தவிர 2008, 2011, 2017 ஆகிய வருடங்களில் வெளிவந்த பண்டிதை பத்-மாசனி குறித்த கட்டுரைகள் கூறியது கூறலாக வெளிவந்தாலும் அவை ஈழத்து இலக்கிய உலகில் உரிய கவனத்தைப் பெறாததையே வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் லெனின் மதிவானம் போன்றவர்களது பதிவுகள் வெளிப்படுத்துகின்றன. இலக்கியச் சிற்றிதழ்களிலும் பத்திரிகைகளிலும் வெளிவரும் எல்லாப் படைப்புகளும் எல்லோராலும் படிக்கப்படுவதில்லை என்பதனால் வெவ்வேறு காலப் பகுதிகளில் தனியொரு நபராகத் தொடர்ந்தும் பல்வேறு இதழ்களில் தனது கருத்தைக், கட்டுரை வாயிலாக ம.பா.-மகாலிங்கசிவம் முன்வைத்து வருவதைப் புரிந்து கொள்ளலாம். எனவே மேற்கூறியவற்றின் சாராம்சமாகப் பேராசிரியர் செ. யோகராசா 2000-ம் ஆண்டில் ஈழத்தின் முதற் பெண் கவிஞராகவும் ஈழத்தின் நவீன கவிதை முன்னோடிகளுள் ஒருவராகவும் மீனாட்சியம்மாள் நடேசய்யரை முதலில் அடையாளப் படுத்தியிருந்தாலும் 2009-ம் ஆண்டு அவரே பண்டிதை பத்மாசனியே முதற் பெண் மரபுக் கவிஞர் எனக் கூறியிருப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது. எனவே, முதற் பெண் கவிஞர் யார் என்ற ஆராய்ச்சியில் அவர் மரபுக் கவிதை எழுதினாரா அல்லது நவீன கவிதை எழுதினாரா என்பது இரண்டாம் பட்சமே. அந்தவகையில் ஈழத்தின் முதற் பெண் கவிஞராகப் பண்டிதை பத்மாசனியே விளங்குகிறார் என்பதை இதுவரை கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில் உறுதியாகக் கூறலாம் எனத் தோன்றுகிறது.

ஆனால் மறுபுறம் தனது ஆய்வு முடிவுகளைத் தானே மறுதலிக்கும் வகையில் இறுதிவரை ஆய்வுத் தேடலில் ஈடுபட்டிருந்த பேராசிரியர் செ. யோகராசா 2011-ம் ஆண்டு வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட 'இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் பெண்கள்' என்னும் நூலில் எழுதிய 'சுதந்திரத்திற்கு முற்பட்ட கால ஈழத்துத் தமிழ்க் கவிதைகளிற் பெண்கள்' கட்டுரையில்,

'20-ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரைகூடப் பெரும்பாலானோர் ஆண் கவிஞர்களே. எனினும் இக்காலப்பகுதியில் வாழ்ந்த பெண் கவிஞர்கள் நால்வர் பற்றி அண்மைக் காலமாக அறிய முடிந்துள்ளது. மீனாட்சியம்மாள் நடேசய்யர், பண்டிதை பத்மாசனி அம்மாள், திருநெல்வேலி எம்.ஆர். வித்தியாவல்லியம்மாள், மயிலிட்டி சி. ஞானாம்பிகை என்போரே அவர்களாவர்.

இவர்களில் வித்தியாவல்லியம்மாள் சமகால முக்கியமான பிரமுகர்கள் சிலரைப் பற்றி, நிகழ்வுகள் சில பற்றி ஜனரஞ்சகப் பாடல் வடிவத்திலே எழுதியுள்ளார். உதாரணம் ஸ்ரீமான் சேனாதிராசா கொலை (விசித்திரக் கவிகள் - அட்சய வருடம் பங்குனி)

மேற்கூறிய கவிஞர் போன்றே இன்றுவரை பரவலாக அறியப்படாதவரான சி. ஞானாம்பிகை சமகாலச் சமூகப் பிரச்சினைகள் சிலவற்றை ஜனரஞ்சகப் பாடல் வடிவத்தில் எழுதியுள்ளார். (உதாரணம் : மேலைத்தேய மதுபான வேடிக்கை கும்மி) மதுபானப் பிரச்சினை ஆண்களுடன் தொடர்புபட்டதாயிருப்பினும் அதனால் ஏற்படும் விபரீதங்களை விளக்குமிடத்து ஆடவர் தாசிகளிடம் செல்வதும் அவ்வழி தாசிகளின் செயற்பாடுகளைக் கண்டிப்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் வேறு சில பாடல்களில் பெண்கள் மேலைத்தேய நாகரீகங்களுக்கு (உடை மோகம், ஆங்கில மொழி மோகம்) ஆட்படுவதும் நகை மீதான அபரிமிதமான மோகமும் மாப்பிள்ளைமாரை மதியாமையுமான விடயங்கள் கண்டனத்திற்குள்ளாகின்றன.

ஒப்பீட்டளவில் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலப் பெண் கவிஞர்களுள் ஞானாம்பிகை மட்டுமே பெண்கள் பற்றி - அவரது பார்வை எத்தகையதாயினும் நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதே வேளை பேராசிரியர் செ. யோகராசா 2019-ம் ஆண்டு 'சேர் பொன். இராமநாதன் நினைவுப் பேருரையை', 'ஈழத்து நவீன இலக்கிய உருவாக்கத்தில் பெண் ஆளுமைகள் (1900 - 1950)' என்ற தலைப்பில் நிகழ்த்தியிருந்தார். அதில்,

'நவீன கவிதைத் துறையில் மூன்று கவிஞர்கள் வெவ்வேறு நோக்கிலும் போக்கிலும் இக்காலப் பகுதியில் பாடலியற்றியுள்ளதை இனங்காண முடிகின்றது. மீனாட்சியம்மாள் நடேசய்யர் 1929-ல் இந்தியத் தொழிலாளர் சிந்து என்ற கவிதை நூலொன்றை வெளியிட்டிருப்பினும் அது பார்வைக்குக் கிடைக்கவில்லை. 1940-ல் வெளியிட்ட 'இந்தியர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை' என்ற தொகுப்புப் பற்றி மட்டுமே அறிய முடிகின்றது.

மற்றொரு கவிஞர் மயிலிட்டியைச் சேர்ந்த ஞானாம்பிகை என்பவர். இவர் இன்றுவரை அறியப்படாத கவிஞர். இவரது பாடல்கள் 'மேலைத்தேய மதுபான வேடிக்கைக் கும்மி' என்ற பெயரில் பிரசுரமாக வெளிவந்தது. அதில் வெளிவந்த ஆண்டு குறிப்பிடப்படவில்லை. இருபத்தைந்தளவில் (1925) அது வெளிவந்திருக்க வாய்ப்புள்ளது. (இப்பிரசுரத்தில் இடம்பெற்றுள்ள பாடலொன்றிலே இவ்வாண்டு பற்றிய குறிப்பொன்றுள்ளது)

நூலின் தலைப்பிலே மதுபானம் என்றிருப்பினும் கவிஞர் முக்கியத்துவம் கொடுத்த பொருள் வேறொன்று. அது முற்றிலும் புதிய பொருள். சமகாலத்துப் போலியான தேசோபகாரிகளை இனங்காட்டுவதில் - கண்டிப்பதில் - நையாண்டி செய்வதிலே கவிஞரின் கவனம் குவிந்துள்ளது. சமகாலச் சமூகத் தேவைகளை அதிகளவு பாடிய பாவலர் துரையப்பாப் பிள்ளை உட்பட உதிரியான கவிதைகள் பாடிய எவருமே இப்பொருள் பற்றிப் பேசினாரல்லர். அத்தோடு காலனித்துவ ஆட்சிக் கெதிராகவும் குரலெழுப்புகின்றார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த வித்தியாவல்லியம்மாள் இயற்றியது 'ஸ்ரீமான் சேனாதிராசா கொலை விசித்திரக் கவிகள்' (முதலாம் பாகம்)

சேனாதிராசா என்பவர் கோப்பாய் ஊரைச் சேர்ந்த உடையார் அல்லது மணியக்காரர் பரம்பரையில் வந்தவர். பரோபகாரி, செல்வாக்கு மிக்கவர். தேவதாசிகளால் கோவிலில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாகத் திருவிழா பார்க்கச் சென்ற வேளை திட்டமிட்டுக் கொலை செய்யப்படுகின்றார். வழக்கு நீதிமன்றம் செல்கின்றது.

மேற்குறிப்பிட்ட சம்பவத்தைப் பொருளாகக் கொண்ட இப்பிரசுரம் 'விசித்திரக் கவிகள்' என்று அழைக்கப்பட்டாலும் எழுத்து இலக்கிய மரபில் நோக்கும் போது உள்ளூர் பிரமுகர்களைப் பாடுகின்ற பிரபந்த இலக்கிய மரபினை (உதாரணம் :கதிரைவேலன் கோவை, தண்டிகைக் கனகராஜன் பள்ளு) சார்ந்ததாகவுள்ளது என்று கூற முடியும். எனினும் அதைவிட வாய்மொழி இலக்கிய மரபில் உருவாகின்ற 'கொலைச் சிந்து' பாடல் மரபுடன் பொருத்திப் பார்ப்பதே பொருத்தமானது. தமிழகத்தில் இவ்வாறான 'கொலைச் சிந்துகள்' வாய்மொழிப் பாடல் மரபில் அதிகம் எழுந்துள்ளன. ஈழத்தில், மலையகத்தில் ஒரு சில எழுந்திருக்கின்றன. உதாரணம் : எஸ்.எம்.-ராஜப்பா என்பவர் பாடிய 'கட்சிப் போராட்டக் குரல்' இரண்டாம் பாகத்தில் 12 நபர்களின் படுகொலைப் பாடல்கள் அடங்கியுள்ளன. வித்தியாவல்லியம்மாள் இயற்றிய விசித்திரக் கவிகள் இலக்கிய மரபுடன் இயைந்தாலும் பாடியவர் பெண் கவிஞர் என்ற விதத்திலே முதன் முயற்சியாகின்றது என்பதே இங்கு கவனிக்கத்தக்கது.

இந்த விசித்திரக் கவி நூலில் சிறிகிட்டினன் என்ற பொலிஸ் கொலைக் குற்றவாளியை நீதிமன்றிலே நிறுத்துவதோடு வாழி விருத்தத்துடன் (முதற்பாகம்) முடிவுறுகின்றது எனப் பதிவு செய்திருப்பார். மேற்குறித்த பொலிஸாரின் பெயர் 'மேலைத்தேய மதுபான வேடிக்கை கும்மி'-யிலும் இடம்பெறுவதால் அப்பிரசுரமும் ஏறத்தாழ 1920, 1925 அளவில் எழுந்திருக்கலாம்.

இலக்கிய வரலாற்றைப் பொறுத்தவரையில் எப்போதும் ஆய்வு முடிவுகளை முடிந்த முடிவாகக் கருதிக்கொள்ள முடியாது. கிடைக்கின்ற ஆதாரங்களை வைத்து ஒரு முடிவுக்கு வந்தாலும் காலப் போக்கில் அந்த விடயம் குறித்த முன்னோடிப் படைப்பு ஒன்று கிடைக்கும் போது ஆய்வு முடிவுகளிலும் அது தாக்கத்தைச் செலுத்தவே செய்யும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஏலவே முன்னோடிப் படைப்பாகக் கருதப்பட்ட படைப்பு அந்தப் பெருமையை இழக்கவும் கூடும். இலக்கிய வரலாற்றில் இது போன்ற சம்பவங்கள் நடைபெறுவது ஒன்றும் புதிதல்ல.

ஆகையால் ஞானாம்பிகை, வித்தியாவல்லியம்மாள் ஆகிய கவிஞர்களின் நூல்கள் 1920 - 25-களில் வெளிவந்திருக்கலாம் எனப் பேராசிரியர் தனது ஆய்வுகளில் குறிப்பிட்டாலும் வெளிவந்த ஆண்டுகளை உறுதியாக அறியமுடியாத துயரமே காணப்படுவதனால், இவ்விருவரில் ஒருவரை முதற் கவிஞராக ஏற்றுக்கொள்வதிலும் தடங்கல்கள் நீடிக்கின்றன.

இறுதியாக ஈழத்து நவீன கவிதை முன்னோடிகள் தொடர்பான ஒரு முன்வைப்போடு இந்தக் கட்டுரையை நிறைவு செய்யலாம் என எண்ணுகின்றேன்.

செப்ரெம்பர் 2008 ஆண்டு வெளிவந்த 'ஞானம்' நூறாவது இதழான 'ஈழத்து நவீன இலக்கியச் சிறப்பிதழில்' செல்லத்துரை சுதர்சன் 'ஈழத்து நவீன இலக்கிய வரலாற்று எழுத்துகள்' கட்டுரையில், '*கவிதை தமிழின் பாரம்பரிய வடிவம். எனவே நவீன உரைநடை உள்ளடக்கச் சாத்தியங்களோடு கவிதை எப்போது நவீன கவிதையாகியது என்பது பற்றிய ஆய்வாளர்கள் பலரும் ஒருவருக்கொருவர் வேறுபட்ட கருத்துகளையே முன்வைத்துள்ளனர். உள்ளடக்கம், வடிவம், ஓசை, சொல்லொழுங்கு, எளிமை, வெளிப்பாட்டு முறையில் புதுமை முதலிய விடயங்களில் மரபுக் கவிதையிலிருந்து வேறுபட்டிருப்பதையே நாம் நவீன கவிதை எனச் சுட்டுகின்றோம். ஈழத்து நவீன கவிதையின் தொடக்கப் புள்ளியாக 1940-களையே ஆய்வாளர்கள் சுட்டுகின்றனர். குறிப்பாக 'மறுமலர்ச்சி'க் காலத்துடன் கவிதை நவீன கவிதையாக அதிக மாற்றம் பெறுகிறது'* என்பது அவர்தம் கருத்து.

சிலர் 19-ம் நூற்றாண்டில் கவிதை நவீனத்தன்மை பெறத் தொடங்குகிறது என்கின்றனர். 'கனகி புராணம்' முதலாய இலக்கியங்களை அடிப்படையாக வைத்தே அவர்கள் அவ்வாறு குறிப்பிடுகின்றனர். ஆனால் அவ்வாறு வந்த இலக்கியங்களைத் தொகுத்து நோக்கும் போது நவீன கவிதையின் தொடக்கங்களாக அவற்றைக் கருத முடியுமா? என்ற வினா எழுகிறது.

பொதுவாகப் புராணம், தூது முதலிய இலக்கிய வடிவங்கள் காலந்தோறும் அவை பயின்று வந்த அர்த்தத்தில் நின்றும் மாறிப் புதிய உள்ளடக்கங்களைக் கொண்டமைந்திருந்தாலும் அவற்றின் மொழியமைப்பும் எடுத்துரைப்பும் அவற்றை நவீன இலக்கியம் என்று சொல்வதில் தயக்க உணர்வை ஏற்படுத்துகின்றன' என்று குறிப்பிட்டிருப்பார்.

அதேவேளை விமர்சகர் சி. ரமேஸ் இலக்கிய வெளி ஜனவரி / ஜூன் 2022 'கவிதைச் சிறப்பிதழில்' எழுதிய 'ஈழத்து நவீன கவிதையின் அன்றைய இன்றைய போக்குகள்' கட்டுரையில், *'பாரதியாருக்குச் சமகாலத்தில் வாழ்ந்த பாவலர் துரையப்பாபிள்ளையுடன் இருபதாம் நூற்றாண்டு ஈழத்து நவீன கவிதைகள் முனைப்புப் பெறுகிறது. நவீனத்துவத்தின் விடிவெள்ளியென அழைக்கப்பட்ட துரையப்பாப்பிள்ளை பாரதியைப் போன்று தேசியப் பின்னணியில் வாழ்ந்த கவிஞர்.*

முதன்முதலில் சமூகச் சிந்தனையைக் கவிதைப் பொருளாக் கியவர் என்னும் வகையில் பிள்ளையவர்களின் இலக்கியப் பணி முக்கியமானது. கைத்தொழில், கூட்டுமுயற்சி, பெண் கல்வி, சாதி, விவாகமும் சீதன வழக்கும், எங்கள் கற்ற வாலிபரின் பழக்க வழக்கங்கள், எங்கள் புதிய ஸ்திரீகள், தேசாபிமானம், கைக்கூலி வாங்குதல் எனப் பல்வேறு தலைப் புகளில் இவர் எழுதிய பாக்கள் உள்ளடக்க முதன்மையைச் சுட்டி நிற்கின்றன.

இருபதாம் நூற்றாண்டில் இலங்கையில் பாவலருடன் தோன் றும் நவீன கவிதை மரபு, 1930-களில் ஈழகேசரியால் வளர்த் தெடுக்கப்பட்டது. நவாலியூர் சோமசுந்தரப் புலவர், மு. செல்லையா, மனுப் புலியார், மு. நல்லதம்பி, அகிலேஸ்வர சர்மா, உண்மை விளம்பி, சத்தியநாதன், யாழ்ப்பாணன், வேந்தனார், சாரதா, மஹாகவி எனப் பலர் சமூகப் பார்வை கொண்ட நவீன கவிதைகளை யாத்தனர். இச்சூழ்நிலையில் மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்களின் துயரை உள் வாங்கி மீனாட்சியம்மை நடேசய்யர், சி.வி. வேலுப்பிள்ளை முதலானவர்கள் உணர்ச்சி மிக்க நவீன கவிதைகளைப் பாடினர் எனக் குறிப்பிடுகின்றார்.

தொகுத்து நோக்கும் பொழுது நவீன கவிதை முன்னோடிகள் குறித்தும் கவிஞர் ஞானாம்பிகையின் 'மேலைத்தேய மது பான வேடிக்கைக் கும்மி' குறித்தும் பேராசிரியர் செ. யோக ராசா ஏலவே குறிப்பிட்டதை அவசியம் கருதி மீளவும் இவ்வி டத்தில் ஞாபகப்படுத்துகின்றேன்.

*நவீன கவிதையின் தோற்றம் பிரக்ஞைபூர்வமாக நாற்பது களின் பிற்பகுதியில் ஆரம்பமாயினும் அதற்கான கால்கோள் முப்பதுகளிலேயே உருவாகி விட்டது. மீனாட்சியம்மாள் நடே சய்யர் ஈழத்தின் நவீன கவிதை முன்னோடிகளுள் ஒருவராகக் காணப்படுகின்றார்'*

*'கவிஞர் ஞானாம்பிகையின் நூலின் தலைப்பிலே மதுபானம் என்றிருப்பினும் கவிஞர் முக்கியத்துவம் கொடுத்த பொருள் வேறொன்று. அது முற்றிலும் புதிய பொருள். சமகாலத்துப் போலியான தேசோபகாரிகளை இனங்காட்டுவதில் - கண்டிப் பதில் - நையாண்டி செய்வதிலே கவிஞரின் கவனம் குவிந் துள்ளது. சமகாலச் சமூகத் தேவைகளை அதிகளவு பாடிய பாவலர் துரையப்பாப்பிள்ளை உட்பட உதிரியான கவிதை கள் பாடிய எவருமே இப்பொருள் பற்றிப் பேசினாரல்லர். அத்தோடு காலனித்துவ ஆட்சிக்கெதிராகவும் குரலெழுப்பு கின்றார்'*

*'ஒப்பீட்டளவில் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலப் பெண் கவி ஞர்களுள் ஞானாம்பிகை மட்டுமே பெண்கள் பற்றி - அவரது பார்வை எத்தகையதாயினும் நோக்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது'*

*'ஞானாம்பிகையின் பாடல்கள் 'மேலைத்தேய மதுபான வேடிக்கைக் கும்மி' என்ற பெயரில் பிரசுரமாக வெளிவந்தது. அதில் வெளிவந்த ஆண்டு குறிப்பிடப்படவில்லை. இருபத் தைந்தளவில் (1925) அது வெளிவந்திருக்க வாய்ப்புள்ளது'*

இதன் மூலம் 1920-களிலேயே தனித்துவமான பாடுபொரு ளைக் கொண்டு கவிதைகள் பாடிய மயிலிட்டிக் கவிஞர் ஞானாம்பிகையை ஏன் ஈழத்துப் பெண் கவிஞர்களில் நவீன கவிதை முன்னோடியாகக் கொள்ளக் கூடாது?

எனவே விவாதத்திற்குரிய பேசுபொருளான இந்தக் கட்டுரை தொடர்பான ஆரோக்கியமான மாற்றுக் கருத்துகள் வெளிவரு மாயின் அது ஈழத்துக் கவிதையுலகில் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சுமென நம்பலாம்.



sinnaraja.vimalan@thaiveedu.com



# ஒரு நூலின் உருவாக்கம் : ஆசிரிய-வெளியீட்டாளருக்கான கைந்நூல்

– என். செல்வராஜா

1970-இன் 17-ம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் உருவாக்கப்பட்ட தேசிய நூலக சேவைகள் சபை, பின்னர் தேசிய நூலக ஆவணமாக்கல் மத்திய நிலையமாக, 1998-ன் 51-வது இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் பிரகாரம் பெயர் மாற்றப்பட்டு இலங்கையின் தேசிய நூலகச் செயற்பாடுகளில் தன்னை முழுமையாகவும் அதிகாரபூர்வமாகவும் ஈடுபடுத்திக்கொள்ளத் தலைப்பட்டது. பின்னர் அது சுதந்திரச் சதுக்கத்தில் தனியானதொரு கட்டடத்தில் ஏப்பிரல் 27, 1990 முதல் குடிபெயர்ந்து இயங்கத் தொடங்கியது. தேசிய நூலகத்தின் தலையாய பணி, அந்நாட்டின் தேசிய இனங்களின் அறிவுத்தேட்டத்தை நெறிப்படுத்தி, வெளியீடுகளை ஆவணப்படுத்தி, அவற்றைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியினருக்குக் கடத்திச் சென்று வழங்குவதாகும். அவ்வகையில் இலங்கையில் வெளிவரும் ஒவ்வொரு நூலையும் தேசியச் சொத்தாகக் கருதிப் பாதுகாத்துவைப்பதும் தேசிய நூலகத்தின் பணியாகின்றது. இது எவ்வளவு தூரம் ஈழத்துத் தமிழ் நூல்களுக்கும், அதன் ஆவணப்படுத்தலுக்கும் பொருந்துகின்றது என்பது தனியானதொரு ஆய்வுக்குரியது. இக்கட்டுரைத் தொடர் அவ்வாய்வுக்குள் நுழையப்போவதில்லை. சுயேச்சைக் குழுமங்களாகவும், தனிநபர்களாகவும் இயங்கும் தமிழ் நூலாசிரியர்களுக்கும், அனுபவம் அற்ற புதிய பதிப்பாளர்களுக்கும் அறிவுபூர்வமான தகவல்களை வழங்கி, நூல்களின் வெளியீடு பற்றிய அவர்களின் ஞானத்தை விரிவாக்குவதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்.

நீண்டகாலமாக பிரித்தானிய நூலகமும் அமெரிக்க காங்கிரஸ் நூலகமும் செய்வது போன்று இலங்கையில் வெளியிடப்படும் நூல்களின் நூலியல் தரவுகள் அடங்கிய பட்டியலாக்கப் பதிவினை ஒவ்வொரு நூலின் தலைப்புப் பக்கத்தின் பின் பக்கத்திலும் (வேர்சோ Verso என்று பொதுவாகக் குறிப்பிடப்படும் பக்கம்) இடம்பெறச் செய்யவேண்டும் என்று இலங்கைத் தேசிய நூலகமும் 90-களின் ஆரம்பகாலத்திலேயே தீர்மானித்தது. அதனை நாடளாவிய ரீதியில் வெற்றிகரமாகச் செயற்படுத்த முடியாதபோதிலும், தனது நிதி உதவியுடன் வருடாந்தம் வெளியிடப்படும் நூல்கள் அனைத்திலும் இந்தப் பதிவை பெரும்பாலும் இன்றுவரை இடம்பெறச்செய்து வருகின்றது. தேசிய நூலக நிதி உதவியுடன் வெளிவந்துள்ள தமிழ் நூல்களின் 'வேர்சோ' பக்கத்தைப் பார்வையிடும் எவரும் இதனைக் காணலாம்.

(ஒரு நூலின் பக்கங்களை நூலியல் மொழியில் குறிப்பிடும்போது ஒற்றை இலக்கங்களாக வரும் பக்கங்களை ரெக்டோ (Recto) எனவும், இரட்டை இலக்கங்களாக வரும் பக்கங்களை வேர்சோ (Verso) எனவும் அழைப்பார்கள்.

தலைப்புப் பக்கத்தின் பின்பக்கம் (இரட்டை இலக்கத்தில் வருவதால்) இக்கட்டுரைத் தொடரில் தலைப்புப் பக்கத்தின் பின்பக்கத்தை குறிக்க 'வேர்சோ பக்கம்' என்ற பதத்தையே நான் பயன்படுத்தவுள்ளேன்).

இலங்கையில் தேசிய நூலகத்தின் நிதி உதவியுடனோ, பதிப்பகங்களின் வாயிலாகவோ நூல்கள் வெளியிடப்படுவதைவிட தனிப்பட்ட படைப்பாளிகளினால் தமது சொந்த முதலீட்டில், தமக்கு வசதியானதொரு அச்சகத்தில் அச்சிடப்பட்டு, குறுகிய வட்டத்துக்கள் விநியோகிக்கப்படும் நூல்களே பெருமளவில் இலங்கையில் காணப்படுகின்றன. தாமே நூல்களை எழுதி அச்சிட்டு விநியோகிக்கும் எழுத்தாளர்களை 'ஆசிரிய வெளியீட்டாளர்கள்' (Author Publishers) என்று அழைப்போம். தேசிய நூலகத்தினால் இத்தகைய ஆசிரிய வெளியீட்டாளர்களுக்கு, ஆலோசனைகளை வழங்கமுடிகின்றதேயொழிய அவர்களை ஒருங்கிணைத்து ஒரு வலுவான கட்டமைப்புக்குள் கொண்டுவந்து அவர்களுக்கான நூலியல் அறிவைத் தமிழ் மொழி மூலம் பரந்த அடிப்படையில் வழங்க முடியவில்லை. அறியாமை காரணமாக, பெரும்பாலான நூலாசிரியர்கள் நூலியல் பதிவின் முக்கியத்துவத்தை உணர்ந்திராததும் அது பற்றிய பாராமுகத்திற்குக் காரணமாகும். தென்னிலங்கைக்கு அப்பால் உள்ள தமிழ் எழுத்தாளர்களுக்கு தேசிய நூலகத்தின் சேவைகள் பற்றிய அறிதல் பூரணமானதாக இல்லை என்பதை எழுத்தாளர்களுடனான எனது உரையாடல்களின்போது அறிந்துகொள்ள முடிந்தது.

## நூலியல் பதிவென்றால் என்ன?

ஒரு நூலின் நூலியல் பதிவென்பது (Bibliographical Data)

ஒரு குழந்தையின் பிறப்பத்தாட்சிப் பத்திரம் போன்றது. ஒரு படைப்பாளி தான் எழுதிய நூலைத் தான் சார்ந்த சமூகத்தின் பார்வைக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கும் அந்த முதல் கணத்திலேயே அவருக்கு சமூகப் பொறுப்பொன்றும் விதிக் கப்பட்டுவிடுகின்றது. தான் சார்ந்த சமூகத்தின் பார்வைக்குத் தன் அறிவின் ஒரு அறுவடையைப் படையலிடும் அந்தக் கணத்தில், அந்த அறிவுப் படையல் ஒரு வரலாற்றின் ஆரம் பப் புள்ளியாகிவிடுகின்றது. அந்தப் படையலை ஒரு வரலாற் றுப் பதிவாக்கும் அடிப்படைத் தரவே நூலியல் பதிவாகும். இதன் முக்கியத்துவத்தை ஒவ்வொரு எழுத்தாளரும், படைப் பாளியும் உணர்ந்தேயாக வேண்டும். அது காலத்தின் கட்டா யமாகும்.

ஒரு குறித்த நூலை எழுதிய படைப்பாளி அந்நூலின் தலைப்பு, உபதலைப்பு, ஆசிரியர்/ தொகுப்பாளர் ஆகியோரின் பெயர் விபரம், வெளியீடு செய்யப்படும் ஊர், வெளியீட்டு நிறுவனத் தின் பெயரும் முகவரியும், எத்தனையாவது பதிப்பு எந்த ஆண்டில் அது வெளியிடப்பட்டது என்ற விபரம், நூல் அச்சி டப்பட்ட ஊர், அச்சகத்தின் பெயரும் முகவரியும், அதன் பதிப் புரிமை யாருக்குரியது, அதன் உள்ளடக்கம், பக்க எண் ணிக்கை, நூலின் விலை, தேசிய நூலகத்தில் ISBN இலக்கம் பெற்றிருந்தால் அதன் விபரம் போன்ற இன்னோரன்ன தகவல் களை நூலில் அதற்கென ஒதுக்கப்பட்ட 'வேர்சோ' பக்கத்தில் நூலியல் தரவாகப் பதிவுசெய்வதென்பது மிக முக்கியமான கடமையாகும். நூலியல் தகவல்கள் இல்லாத நூல் பிறப்பத் தாட்சிப் பத்திரம் அற்ற ஒரு குழந்தையின் எதிர்காலத்திற்கு ஒப்பாகும். காலக்கிரமத்தில் இத்தரவுகள் நூலக ஆவணங்க ளில் முழுமையாகப் பேணப்படாமல் நூலின் இருப்பே கேள் விக்குள்ளாகிவிடுகின்றது.

ஒரு நூலின் தலைப்புப் பக்கமும், அதன் வேர்சோ பக்கமும் மிக முக்கியமானவை. அச்சகத்தில் பக்க ஒழுங்கமைப்பைச் செய்யும் ஊழியர் அதனைத் தானே உணர்ந்து செய்வார் என்று நூலாசிரியர் நினைப்பது தவறு. தனக்கு வழங்கப்படும் தகவலை வைத்துப் பக்க ஒழுங்கை மேற்கொள்ளும் அந்த ஊழியருக்கு, நூலைப் பற்றிய வரலாறு தெரிந்திருக்க வாய்ப் பில்லை. அதனை அறிந்த ஒரே ஒருவர் நூலின் படைப்பாளி யாகிய நூலாசிரியரேயாவார். அதனால் பக்க வடிவமைப்பிற் காக அச்சகத்தில் கையெழுத்துப் பிரதியை ஒப்படைக்கும் போது தேவைப்படும் நூலியல் தகவல்களையும் நூலாசிரியர் சேர்த்தே வழங்கிவிட வேண்டும்.

தனது நூலின் விடயதானத்தை மட்டும் கருத்தூன்றி சரவை பார்ப்பதுடன் தனது பணி நிறைவடைந்துவிடுவதாக அவர் கருதக்கூடாது. நூலின் விலை, பக்க எண்ணிக்கை போன்ற ஒரு சில தகவல்களை அச்சகத்தினரே பின்னர் இட்டு நிரப்ப வேண்டியிருக்கும். அதற்கான இடத்தையாவது எழுதி ஒதுக்கி வைப்பதன்மூலம், பின்னர் நூல் இறுதிக்கட்டத்தை அடையும் வேளையில் அச்சகத்தினர் மறக்காமல் அத்தகவல்களை குறித்த தரவுப் பக்கத்தில் இட்டு நிரப்ப வசதி ஏற்படும். பல ஈழத்து நூல்களின் தலைப்பு மேலட்டையில் ஒன்றாகவும், தலைப்புப் பக்கத்தில் வேறொன்றாகவும் இடம்பெறும் வாய்ப் புகளும் உள்ளன. இறுதிநேரத்தில் தலைப்பை மாற்றியமைக் கும் வேளைகளில் இது நிகழ வாய்ப்புள்ளது. முன்னர் புளொக் பிரின்ட் செய்து மேலட்டையை ஒரு அச்சகத்திலும், நூலின் அச்சுக்கோர்ப்பை வேறொரு பதிப்பகத்திலும் மேற் கொள்ளும் வேளைகளில் இத்தவறு சாதாரணமாகவே நிகழ்ந் துவிட வாய்ப்பிருந்தது. இப்பொழுது நவீன அச்சகங்களில் அனைத்தும் ஒரே இடத்தில் மேற்கொள்ளும் வசதிகள் கிட்டி யுள்ளன. இத்தகைய குழப்பகரமான சூழலில் ஒரு நூலின் வேர்சோ பக்கத்தில் உள்ள தலைப்பினையே அதிகாரபூர்வ மான தலைப்பாக நூலகர்கள் மற்றும் ஆய்வாளர்கள் தமது உசாத்துணைக் குறிப்புகளுக்காக எடுத்துக்கொள்வார்கள் என்பதை ஆசிரிய வெளியீட்டாளர்கள் அறிந்திருப்பது நல் லது.

ஒரு படைப்பாளியின் நூலை அவரது பிரியமான வாசகர்கள் மாத்திரம்தான் வாசிக்கப் போகிறார்கள் என்ற எண்ணம் எந்த வொரு எழுத்தாளருக்கும் வரக்கூடாது. அவரறியாமலே அவ ரது நூல் கடல் கடந்து செல்லவும் கூடும். தமிழறியாத நூலகர் ஒருவர் அவரது நூலை பட்டியலாக்கம் செய்யும் நிலையும் ஏற் பட வாய்ப்புள்ளது. அவர் அதை ஒலிபெயர்ப்பு முறையில் (Transliteration) பதிவு செய்துவைக்க நேரவும் கூடும். நூலை நூலகங்களில் பதிவுசெய்யப்போகும் நூலகர்களையும் அவர் கள் எதிர்நோக்கும் சிக்கல்களையும் நூலாசிரியர் சற்று மன தில் இருத்திவைத்தல் வேண்டும். நூலியல் தகவல்களை முடிந்தவரை ஆங்கில மொழியிலும் பதிவுசெய்வது அலுவ லர்களுக்கு தெளிவினை ஏற்படுத்தும்.

இலங்கையில் ஒரு நூல் இன்று வெளியிடப்பட்டு, சந்தைப்ப டுத்தப்படும் வேளையில் அதன் பிரதான கொள்வனவாளர் கள் பொது நூலக, பாடசாலை மற்றும் பிற நூலகங்களாகவே இருப்பதுண்டு. உங்கள் நூல்கள் நூலகத் தட்டுகளிலேயே நீண்டகாலம் வாழ்ந்து உங்கள் அறிவுத் தேட்டத்தை அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் செல்லப் போகின்றன. நூல் பற் றிய தகவல்களை நூலகர் சரியாகப் புரிந்துகொள்ள நூலாசிரி யரின் ஒத்துழைப்பு மிக அவசியமாகும்.

நூலகங்களில் அதற்கான தொழில்நுட்பப் பணிகளில் பிரதா னமானவை பட்டியலாக்கமும் பகுப்பாக்கமுமாகும். பட்டிய லாக்கத்துக்குத் தேவையான நூலியல் தரவுகளை, நான் முன் னர் குறிப்பிட்ட அந்த இரு பக்கங்களிலும் (நூலின் தலைப்புப் பக்கமும், அதன் பின் பக்கமும்) படைப்பாளியோ பதிப்பா ளரோ தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அதுவும் தமிழ் ஆங் கிலம் ஆகிய இரு மொழிகளிலும் அதனைக் குறிப்பிட வேண் டும்.

### தலைப்புப் பக்கத்தில் இடம்பெறவேண்டிய ஒரு நூலின் பிரதான நூலியல் தகவல்கள் பின்வரு மாறு அமையும்:

### நூல் தலைப்பு:

தலைப்புப் பக்கத்திலும் நூலின் மேலட்டையிலும் இதே பெயர் உள்ளது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவும். ஒரு நூலின் தலைப்பு முன்னட்டையில் ஒன்றாகவும், தலைப்புப் பக்கத்தில் வேறொன்றாகவும், வேர்சோ பகுதியில் சற்று மாற் றம்செய்யப்பட்டு வேறொன்றுமாகக் காணப்பட்டிருந்தமையை யும் என்னால் அவதானிக்கமுடிந்தது. நூலியல் விதிகளுக்க மைய வேர்சோ பக்கத்தில் என்ன தலைப்பு வழங்கப்பட்டிருக் கின்றதோ அதையே நூலின் அதிகாரபூர்வமான தலைப்பா கக் கொள்வதுண்டு. இத்தகைய தவறுகளால் அந்த நூல்



மூன்று ஆய்வாளர்களால் தவறுதலாக மூன்று தலைப்புகளில் இனங்காணப்படக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

## ஆசிரியர் பெயர்:

(குறித்த ஆசிரியர் புனைபெயரில் இந்நூலை எழுதியிருப்பின் அவரது இயற்பெயர் இங்கு குறிப்பிடப்படவேண்டும். உதாரணம் (1)- தெணியான் (இயற்பெயர்: கந்தையா நடேசு). உதாரணம் (2)- பாவிலு கிறிஸ்து நேசரத்தினம் (புனைபெயர்: தமிழ் நேசன்).

## பதிப்பு விபரம்:

குறித்த அந்த நூல் எத்தனையாவது பதிப்பு, பதிப்பித்த மாதமும் ஆண்டும்
முன்னைய பதிப்புகள் இருப்பின் அவை பற்றிய விபரம். உதாரணம்: 2வது பதிப்பு, மார்கழி 2023, 1வது பதிப்பு, தை 2017.

## வெளியீட்டாளர்:

வெளியீட்டாளர் பெயரும் அந்த நிறுவனத்தின் முழுமையான முகவரியும்.
உதாரணம்: நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை,

## அச்சகம்:

அச்சகத்தின் பெயரும், அச்சகத்தின் முழுமையான முகவரியும். உதாரணம்: யாழ்ப்பாணம்: கு.வி.அச்சகம், 386 மணிக்கூண்டு வீதி,

## பக்கங்களின் விபரம்:

இங்கு மூன்று விதமாக பக்கங்களைக் குறிப்பிடலாம்.

- நூலில் பக்கங்கள் எண்ணிடப்படும்போது எண்ணிடப்படாத சில பக்கங்கள் இருப்பின் அதன் எண்ணிக்கை அடைப்புக்குறிக்குள் தரப்படும். உதாரணமாக, (4).
- நூலின் ஆரம்பப் பக்கங்களை Priliminary pages என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுவோம். இப்பக்கங்களில் நூலின் தலைப்பு, முகவுரை, முன்னுரை, அணிந்துரை, பொருளடக்கம் என்பன போன்ற விபரங்கள் காணப்படும். இவ்விபரங்களை நூலின் பிரதான உள்ளடக்கத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டவேண்டிய தேவை உள்ளமையால் அவற்றை ரோமன் எழுத்துக்களில் குறிப்பிடுவோம். உதாரணமாக, vii.

  19ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 20ம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை வெளியிடப்பெற்ற தமிழ் நூல்களில் ரோமன் இலக்கங்களுக்குப் பதிலாக தமிழ் இலக்கங்களே ஆரம்பப் பக்கங்களை வேறுபடுத்திக் காட்டும் பொருட்டு குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக ஆரம்பப் பக்கங்கள் 12 இருக்குமாயின் கஉ என்று அதனைக் குறிப்பிடுவார்கள். இன்றும் தமிழகத்தின் சில தீவிர தூய தமிழ்ப் பற்றாளர்கள் இவ்வழியில் தமிழ் இலக்கங்களின் மூலம் ஆரம்பப் பக்க எண்ணிக்கையினைக் குறிப்பிடுவதை அவதானித்திருக்கிறேன்.
- பிரதான பதிவு பெரும்பாலும் அரபு இலக்கங்களில் குறிப்பிடுவது வழமை. உதாரணமாக, 247 பக்கம் அல்லது அல்லது 247 ப.

இவ்வகையில் ஒரு நூலின் வேர்சோ பக்கத்தில் பக்க எண்ணிக்கையை குறிப்பிடும்போது கீழ்வரும் ஒழுங்கில் அதனை குறிப்பிடுவோம்.
**உதாரணம்:** vii, (4), 86 பக்கம். அல்லது vii, (4), 86 ப.

காலத்துக்குக் காலம் இலங்கை தேசிய நூலகம் (தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை) இலங்கையில் நூலியல் பதிவுகளுக்கான புதிய விதிமுறைகளை அறிமுகம் செய்கின்றன. அவ்வகையில் 2016-ல் அவர்கள் வெளியிட்டிருந்த 'நூல் ஒன்றை ஒழுங்குபடுத்தும் முறை' என்ற கையடக்க நூல், ஆசிரிய வெளியீட்டாளர்களுக்கு சில அடிப்படை தகவல்களை வழங்கக்கூடும்.

இலங்கையில் அண்மைக்காலமாக பக்கங்களுக்கு எண்ணிடலில் புதியதொரு வழிமுறையை எஸ். கொடகே போன்ற முன்னணிப் பதிப்பகங்கள் பின்பற்றத் தொடங்கியுள்ளன. அவர்கள் ஆரம்பப் பக்கங்களை மேலே குறிப்பிட்டது போன்றே ரோமன் எழுத்துக்களில் குறிப்பிட்டு, பின்னர் தொடரும் முதலாவது அத்தியாயத்திற்கு ரோமன் இலக்கத்தின் தொடர்ச்சியாக அரபு இலக்கத்தில் பக்கங்களைக் குறிப்பிடுகிறார்கள். உதாரணம் (2)- vii, 8-146 பக்கம்.

இம்முறையை எதிர்காலத்தில் பலரும் பின்பற்றக்கூடிய சாத்தியங்களை இப்பொழுதே எம்மால் அவதானிக்க முடிகின்றது. காலக்கிரமத்தில் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையும் இம்முறையை அங்கீகரிக்கக்கூடும்.

## நூலின் அளவு:

நூலின் அளவு (நீளம், உயரம் என்பன சதம மீட்டரில்) உதாரணம்- அளவு: 24x16.5 சமீ.

## ஐ.எஸ்.பீ.என். இலக்கம்:

ISBN இலக்கம் தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையின் வெளியீட்டுப் பிரிவினால் வழங்கப்படுகின்றது. ஆசிரிய வெளியீட்டாளர்கள் நேரடியாக விண்ணப்பித்து இவ்விலக்கத்தை பெற்றுக்கொள்ளலாம். வெளியீட்டு நிறுவனமொன்று அந்நூலை வெளியிடும் பட்சத்தில், அந்நிறுவனமே ISBN இலக்கத்தை பெற்றுப் பதிவுசெய்ய முடியும். ஒவ்வொரு நூலுக்கும் தனித்தனியான இலக்கம் பெறப்பட வேண்டும். மீள்பதிப்புகள் மாற்றமேதுமின்றி வெளியிடப்படின் முன்னைய இலக்கத்தை பயன்படுத்தலாம். (இத்தொடரில் இலங்கையில் ISBN இலக்கம் பெறுவது பற்றித் தனியானதொரு கட்டுரை இடம்பெறவுள்ளது).

## நூலின் விலை:

சில நூலக நிறுவனங்கள், நூலின் விலையை அந்நூலில் பதிவுசெய்ய வேண்டும் என வலியுறுத்துகின்றன. நூலின் விலையை வேர்சோ பக்கத்தில் போடலாம் அல்லது நூலின் பின்னட்டையில் வலது பக்க கீழ் மூலையில் ISBN பார் கோட்டுடன் சேர்த்து பதிவு செய்யலாம்.

## பதிப்புரிமை:

பதிப்புரிமை யாருக்கு உரியது? ஒரு நூலின் பதிப்புரிமை நூலை எழுதியவருக்கே உரியது. அவரின் மறைவின் பின்னர் 75 ஆண்டுகள் வரை அவரது குடும்பத்தினருக்கே அவ்வுரிமை உள்ளது. குறித்த நூல் யாருடைய உரிமை என்பதைக் குறிப்பிட கீழ்க்கண்ட உதாரணம் பொருத்தமானது.

© Copy Right 2024 by N. Selvarajah

All Rights Reserved. No part of this publication may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the author.

## பதிப்புரிமையாளர்கள்?

பதிப்புரிமையாளராக ஒன்றுக்கு மேற்பட்டவர்களை குறிப்பிடலாகாது. ஆசிரியரின் புனைபெயரை © பதிப்புரிமை இலச்சினையைத் தொடர்ந்து இங்கே பயன்படுத்தமுடியாது. அங்கு குறிப்பிடப்படுவது ஆசிரியரின் இயற்பெயராகவே இருக்க வேண்டும்.

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் விரிவாக வேர்சோ பக்கத்தில் இடம்பெறுவதை ஆசிரியர் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அதனை பதிப்பாளரின் பொறுப்பில் விட்டுவிடுவதென்பது தனது பொறுப்பினை உதாசீனம் செய்வதாகும்.

இத்தகவல்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் இடம்பெறச் செய்வதன் மூலம், தமிழ் அறியாத ஒருவருக்கும் இந்நூலின் பொருத்தமான இடம் நூலகத்தில் எதுவென்பதைக் கண்டறிந்து நூலுக்கு வழங்க நூலாசிரியர்களாகிய நீங்களே உதவியவர்களாவீர்கள். இத்தகைய விபரங்களைத் தெளிவாக நீங்கள் வாழும் பகுதியில் உள்ள நூலகரை அணுகித் தெரிந்து கொள்ளலாம்.

மேலே குறிப்பிட்ட நூலியல் தகவல்களில் சில தகவல்கள் ஒரு நூலில் குறிப்பிடப்பட்டிருப்பினும் அவை தவறான பக்கங்களில் இடம்பெற்றிருப்பதையும் அவதானிக்க முடிந்தது. அண்மையில் வெளிவந்த ஒரு நூலில் நூலியல் தகவல்களில் சில பகுதிகள் தலைப்புப் பக்கத்தில் போடப்பட்டு, தலைப்புப் பக்கத்தையே இல்லாது போகச் செய்துவிட்டிருந்தார்கள்.

நூலியல் தரவுகளின் ஒவ்வொரு அம்சத்தையும் இனிவரும் தொடர்களில் விரிவாக ஆராய்வோம். ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டது போன்று இக்கட்டுரைத் தொடரின் நோக்கம் அனுபவம் மிக்க எழுத்தாளர்களுக்கும், இளம் எழுத்தாளர்களுக்கும் வித்தியாசமான பார்வையில், நூலாக்கத்தின் முக்கியத்துவ அம்சங்களைப் புரியவைத்து, தமது நூலை எவ்வாறு சர்வதேச தரத்துக்குக் கொண்டு செல்லலாம் என்ற துறைசார் ஆலோசனைகளை நல்குவதாகும். இதன்மூலம் எதிர்காலத்தில் உருவாகும் தமிழ் நூல்கள் முழுமையான நூலியல் பதிவுகளுடன் வெளிவர வாய்ப்புண்டாகும்.

இனி, நூலியல் தரவுகளில் முதலாவதாக, 'நூலின் தலைப்பு' பற்றிய புரிதலை அடுத்த இதழில் விரிவாக உற்று நோக்குவோம்.

(வளரும்...)



selvarajah.n@thaiveedu.com

கனடா, தொல்காப்பிய மன்றமும்
தமிழ்நாடு, இலக்குவனார் இலக்கிய மன்றமும்
இணைந்து நடத்தும்

# முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு

திருவள்ளுவர் ஆண்டு 2055, புரட்டாசித் திங்கள் 04, 05, 06 ஆம் நாள்களில்
(2024-09-20, 2024-09-21, 2024-09-22)
கனடா




**குறிக்கோள் : தொல்காப்பியத்தில் உயர் ஆய்வுகள் மேற்கொள்ளுவதற்கான களமாக இம்மாநாடு அமையவேண்டும்.**

இணையத்தளம் : www.tolkappiyam.ca
தொடர்புகளுக்கு : 647-881-3613 / 416-939-9171 / 647-850-0152



# நினைவோடு ஒரு நினைவேடு



# நினைக்காத நாளில்லை

**– எஸ். ஜெகதீசன்**

மிகுந்த மதிப்புடன் தமிழ் உலகம் நோக்கும் கவிநாயகருக்கு எழுபது வயது ஆகின்றது என்றால் யாராவது நம்புவார்களா ?

தனது தொண்ணூறு வயதில் அவர் உயிர் பிரிந்தே இன்னும் ஒரு மாதம் கூட ஆகவில்லை என்ற ஏக்கத்துடனும் இது என்ன புதுக்கதையாகக் கிடக்கு என்ற ஆச்சரியத்துடனும் பலரது விழிகள் அகலமாக விரியும் என்பது சந்தேகமற்றது.

ஆரோக்கியம் குன்றி படுத்த படுக்கையாகக் கிடந்த கவிநாயகரிடம் இரண்டு மாதங்களுக்கு முன்பு வழமை போல என்னைத் தெரியுமா ? என்றேன்.

ஓம் ஓம் ஓம்! என்றார் முகம் மலர.

உலகமே வீடாக வாழ்ந்தவருக்கு வீடே உலகமானது வருத்தம் தந்தது.

உங்களுக்கு எழுபது வயதுதானே என்றேன்.

மௌனித்தார். நீண்ட நேரம் விழிகள் அசையாது என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். என்ன சேட்டையோ என்றது போலிருந்தது அவர் பார்வை!

நீங்கள் 1933-ம் ஆண்டு பிறந்திருப்பினும் கவிநாயகராகப் பிறந்தது 1954-ம் ஆண்டில்தானே என்றேன்.

மீண்டும் அதே ஓம் ஓம் ஓம்! மீண்டும் அதே முக மலர்ச்சி.

1988-ல் அவர் கனடா வருமுன் 14 நூல்கள் வெளிவந்திருந்தன. அதன் பின் அவரது நூல் வெளியீடுகள் அசுர வேகம் பெற்றன.

ஒட்டுமொத்தமாக 2024-ம் ஆண்டு வரை அவர் எழுதி 82 நூல்களும், 3 பாட நூல்களும், 8 தொகுத்த நூல்களும், 13 தொகுத்த மலர்களும் வெளிவந்துள்ளன.

கவிநாயகரைப் பற்றி பிறர் எழுதி 9 நூல்கள் வெளி வந்துள்ளன.

இன்னும் ஒரு 45-ஆவது வெளிவரக்கூடும் என்ற தகவலும் காற் றில் கசிகின்றது.

கனடாவில் ஆகக் கூடுதலான நூல்களை எழுதிக் குவித்த தமிழர்கள் முதல் ஐவருள் நிச்சயமாக அவரும் இருப்பார். போதிய தகவல்கள் பெற முடியாமலிருப்பதால் முதலாவதும் அவரே என உரிமை கொண்டாட முடியாதுள்ளது.

அவர் எழுதிய ஆங்கில நூல்கள் பாடசாலைகளில் உபயோகிக்கக் கூடிய பாட நூல்களாக கனடிய அரசால் அங்கீகாரம் பெற்றுள்ளன!

அவர் எழுதிய ஈழத்துக் கூத்து மொழிகள் சிறந்த ஆராய்ச்சி நூல் என்பது அவரது கருத்து. கொழும்பு பொது நூலகத்தில்




உள்ள இதன் பிரதி மீள் பதிப்புற வேண்டும் என்பது அவரது நெடு நாள் விருப்பம்.

1948 முதல் 1953 வரை ஈழகேசரி பாலர் பகுதியில் இடைக்கிடை எழுதியுள்ளார்.

1988 முதல் 2018 வரை கனடாவில் வெளிவந்த அனைத்து பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் ஒரு முறையாவது அவரது எழுத்தும் இருந்திருக்கும்.

இதயங்களை இலக்கு வைத்தே அவரது இலக்கியப் பணி அமைந்தது.

அதனால் இலக்கியக் களங்களெல்லாம் அவரின் பெயரை உற்சாகமுடன் உச்சரித்தன, பிரியமுடன் பிரசுரித்தன.

பொதுவாக புனை பெயரில் எழுதுபவர்கள் அதனுடன் தமது இயற் பெயரையும் இணைப்பது மிகவும் அரிது. குறமகளும், செங்கை ஆழியானும் ஒரு போதும் குறமகள் வள்ளிநாயகி யாகவும், செங்கை ஆழியான் குணராசாவாகவும் மாறாதிருந் தது இதற்கு சிறு உதாரணம்.

கவிநாயகரும் அவ்வாறே! நீண்ட நெடுங் காலம் கவிநாயகர் என்ற புனை பெயரில் எழுதி வந்தார்.

கவிநாயகர் கந்தவனம் என அவரது புனை பெயரையும் இயற் பெயரையும் ஒருங்கிணைத்து அவரது புனை பெயரை அவ ருக்கான பட்டப் பெயராக்கியது மணி விழாக் குழு.

கவிநாயகரை பல தடவைகள் பல மேடைகளில் கண்டுள்ள போதும் அவருடன் முதன் முதல் நேருக்கு நேராக - உறவாடி யது என்றால் பிழை - உரையாடியது 1966-ம் ஆண்டு.

இளவாலை கிராம முன்னேற்றச் சங்கத்தின் பொங்கல் கலை நிகழ்ச்சிகளில் அவரது தலைமையில் கவி அரங்கு அமைப் பது நோக்கமாயிருந்தது. நாம் நான்கு விடலைகள் நான்கு துவிச்சக்கர வண்டிகளில் அவரது கிராமமான குரும்பசிட்டிக் குச் சென்று சந்தியில் உள்ள தேநீர் கடையொன்றில் அவரது வீடு எங்கே என விசாரித்தோம். ஏன், எதற்கு, எப்பொழுது போன்ற எக்கச்சக்கமான கேள்விகளால் வடிகட்டிய பின்பே வழி காட்டிய அந்தக் கடைக்காரர் அந்தக் கிராமத்தின் கட் டுக்கோப்பை ஆழமாக மனதில் பதிய வைத்தார். வெளியார் எவரையும் கண்டபாட்டுக்கு அத்துமீறி நுழைய விடக் கூடாது என்று மனதினில் கண்ணியம் இருந்திருக்கலாம். அல்லது விடுப்பு மனப்பான்மை கொடுப்புக்குள் மறைந்திருந்து எக்கா ளமிட்டும் இருக்கலாம். எமக்கென்ன ?

வீடு சென்றதும் பூர்வ விசாரிப்புகள், விசாரணைகள் முடிந்த நிலையில் 'ஓ! தமிழ் வளர்க்கப் போகின்றீர்களாக்கும். நல் லது. ஆனால், அதற்கு முன் எம்மையும் வளர்க்க வேண்டுமே' என்றார் கவிநாயகர்.

பேரம் பேச முனைந்தது மனம். பிரச்சினை இல்லை வாங்கோ என்றது வாய்.

அவர் கேட்டது 100 ரூபாய் என ஒரு கதைக்கு வைத்துக் கொண்டாலும் அந்தக்காலத்தில் அது எமக்கு 'ஒரு பிள்ளை சீதனத்துக்கு' சமன்.

குறிப்பிட்ட தினத்தில் குறிக்கப்பட்ட நேரத்திற்கும் முன்பா கவே வந்தார். மேலும் பிரபல கவிஞர்கள் நால்வர் அவருடனி ருந்தனர்.

காசு என்ன மாதிரி என்றார். கொடுத்தோம். எண்ணினார். சிரித்தார்.

மேடை ஏறினார். 'இந்தக் காலத்து இளைஞர்களின் தமிழ் மோகத்தை அல்லது அபிமானத்தை நிச்சயமாக ஒவ்வொரு வரும் ஊக்குவிக்க வேண்டும். பாராட்ட வேண்டும். அத்துடன் சமூக சேவையில் ஈடுபாடு கொண்ட இளைஞர்களை நேர்மை யான முறையில் பணம் திரட்டுவதற்கும் தயார்படுத்த வேண் டும். அதனைத்தான் இன்று நான் கையாண்டேன். இங்கிருந்து என்னிடம் வந்த நான்கு இளைஞர்களிடமும் அதே நோக்கத் துடன் பெரும் பணம் கேட்டிருந்தேன். அவர்களும் எவ்வித முகச்சுளிப்புமின்றி அதற்கு உடன்பட்டிருந்ததுடன் அதனை பிரயத்தனப்பட்டு சேகரித்து ஒரு சதம் கூட குறையாமல் இன்று என்னிடம் தந்திருந்தார்கள். எனது உள் மன நோக்கம் அவர்கள் மூலம் நிறைவேறியதில் நான் மிகவும் பெருமிதம டைகின்றேன். அவர்கள் தந்த பணத்தில் பெற்றோல் செலவுக் காக ஒரு சிறு தொகையை மட்டும் எடுத்துக் கொண்டு, மீதியை அவர்களிடமே திருப்பிக் கொடுக்க விரும்புகின் றேன். அவர்கள் அதனை கிராம அபிவிருத்திப் பணிகளுக் குப் பயன்படுத்திக் கொள்ளட்டும். அதனால் கிராம முன்னேற் றச் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் மேடைக்கு வரு மாறு அன்புடன் அழைக்கின்றேன்' என்றார்.

அன்று என்னுள் உயர்ந்தவர், உயர்ந்தவர்தான்.





லீவு கிடைக்கும் வேளைகளில் ஈழநாடு ஆசிரிய பகுதிக்கு அவர் வருவதை அங்கு நான் பணியாற்றியபோது பல முறை கண்டுள்ளேன். ஈழநாட்டின் பிரதம ஆசிரியர் எஸ்.எம். கோபாலரத்தினம் அவரது நெருங்கிய நண்பர்.

1973-ம் ஆண்டு ஈழநாடு நிர்வாகம் வழமையான தினசரியோடு, கமலம் என்றொரு வராந்திரியையும் வெளியிடத் தீர்மானித்தது. வாரந்தோறும் ஒரே துறை சார்ந்த பிரமுகர்கள் இருவரை நிபந்தனைகள் எதுவுமின்றி மனம் திறந்து பேச வைப்பது வரவேற்கப்படும் என்ற எண்ணத்தில் பல சந்திப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டன. நான்கு, ஐந்து, ஆறு பக்கங்கள் அதற்கென ஒதுக்கப்பட்டன.

ரஸிகமணி கனக செந்திநாதனும், வி.என். பாலசுப்பிரமணியமும் சந்திப்பதும் அவற்றில் ஒன்று.

அதற்காக ரஸிகமணி வீட்டிற்கு தனது காரில் கோபுவையும், விஎன்பியையும், என்னையும் அழைத்துச் சென்றவர் நமது கவிநாயகர். தமிழ் இலக்கிய உலகின் சந்து பொந்துகளில் புகுந்து விளையாடி கும்மாளமடித்து அன்று ஒரே முசுப்பாத்திதான். கலகலப்புக்கு பஞ்சமில்லாத அன்றைய தினம் கவிநாயகருடன் மேலும் எனக்கு நெருக்கத்தை ஏற்படுத்தியது.

1993-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒரு நாள் தனது பணி ஓய்வுக்கு இன்னமும் ஐந்து வெள்ளணி விழாக்கள் மட்டுமே உள்ளன என்றார்.

வெள்ளணி விழா என்றால் என்ன என்றேன், அப்பாவியாக அல்லது ஆச்சரியமாக!

வெள்ளணி விழா என்றால் பிறந்த நாள் விழா என்று அர்த்தம் என்றார்.

ஓ! இவ் வருடம் உங்களுக்கு மணி விழா ஆண்டு. ஜமாய்க்கலாம் என்றேன்.

சீச்சீ! உது எல்லாம் வேண்டாம் என்றதை யார் கேட்டது?

கனடாவில் தமிழ் மக்களின் முதலாவது மணி விழா என கவிநாயகரின் மணி விழா சரிதத்தின் சான்றாக நிறைந்தது.

அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதிய வரலாறும் எனது வாழ்க்கைக்கு உண்டு. வரிக்கவிதை என்ற நூலுக்கு மதிப்புரையையும் மணிக்கவிதைகள் என்ற நூலுக்கு பதிப்புரையையும் எழுதியுள்ளேன். இவை அனைத்தும் இரண்டாம் பதிப்பையும் கண்டன. கவிநாயகர் புதுக் கவிதையை வரிக்க விதை என்றிடுவார்.

அவர் எனக்குத் தந்த கௌரவ பட்டம் ரஸிக நிதி! எல்லாப் புகழும் இறைவனுக்கே என ஒஸ்கார் விருது பெற்ற வேளை ஏ.ஆர். ரகுமான் பின்நாளில் கூறியது போன்றே அன்று நானும் கூறியிருப்பேனோ?

2010-ம் ஆண்டு கவிநாயகரின் மாணவனின் பேத்தி ஒருவரின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ள ஓஸாவா சென்றோம். அந்த மாணவன் என்னையும் ஒரு ஆபிரிக்கரையும் நண்பர்கள் என்ற ரீதியில் அழைத்திருந்தான்.

விழா முடிவில் வெளி மண்டபத்தில் அமர்ந்திருந்தோம்.

எம்முடன் வந்த ஆபிரிக்க நண்பர், இன்னொரு நண்பருடன் வந்தார்.

வந்தவர் கவிநாயகரைப் பார்த்து நீங்கள் 1980 ஜனவரி முதல் 1982 டிசம்பர் வரை லெசோத்தோ நாட்டில் இலெரிப்பே மாவட்டத்தில் திக்காகெங் கிராமத்தில் உயர்தர மாணவர்களுக்கு ஆங்கிலமும் புவியியலும் போதித்தவர்தானே? என்றவாறே கவிநாயகரின் காலில் விழுந்தார்.

என்ன நடக்குது என்று புரியாமல் அதிர்ச்சியில் உறைந்த கவிநாயகர் தன்னை சுதாகரித்தவாறே ‘ஓம் ஓம் எழும்புங்கள்’ என்றார்.

கடவுளுக்கு நன்றி என்விக சேர்! கனடாவிற்கு விடுமுறையில் வந்துள்ள நான் அங்கு உங்கள் மாணவன் சேர்! பட்டதாரியாகி ஆசிரியராகி அதே பாடசாலையில் அதிபராக ஓய்வுறும் நிலையில் உள்ளேன் சேர்! உங்களின் கவித்துவ முறைமை கற்பித்தலில் கவரப் பெற்றதில் உங்களின் பிரியாவிடை மேடையில் ‘பசுப் போல் வந்தீர் கல்விப் பால் நாளும் சுரந்தீர்’ என சிசூத்து மொழியில் எழுதி வாசித்திருந்தேன் ஞாபகமா?

என்விக சேர்! என்றார்.

உணர்ச்சி மேலீட்டால் பொல பொல என கண்ணீர் சொரிந்து கொண்டிருந்த கவிநாயகரிடம் 'உதென்ன என்விக! புதுசாய் கிடக்கே' என்றேன் நான்.

லெசோத்தோவில் NVEKA என்றே அறியப்பட்டேன். அதில் என் என்ற ஆங்கில எழுத்து நுணாவிலையும் தொடர்பவை



விநாயகர் கந்தவனத்தையும் சுட்டின என்ற கவிநாயகர், முதலில் VEKA என்றே அறிமுகமானேன். அவர்கள் அதனை வொட்கா என்றது பிடிக்கவில்லை. அதனால் மாற்றிக் கொண்டேன் என்றார்.

தனது மகன் மொழி மாற்றுக் கவிதைகளின் நூல் ஒன்றை வெளியிடவுள்ளதாகவும், அதில் கவிநாயகரது கவிதை இடம் பெறுவது அவனது விருப்பும் தனது கனவும் எனவும் தெரிவித்தார், வந்திருந்த அந்த அதிபர்.

உடனடியாகவே மலூட்டி என்ற தலைப்பில் எட்டு எட்டு வரிகளுடன் மூன்று கவிதைகளை தமிழில் எழுதினார் நமது கவிநாயகர்.

அந்தக் கவிதையில் அவர் படிப்பித்த பாடசாலை இருந்தது. அது அமைந்திருந்த கிராமத்தின் எழில் இருந்தது. படித்து முன்னேற வேண்டும் என்ற மாணவரின் ஆர்வம் இருந்தது. அம் மக்களின் பண்பு இருந்தது. லெசொத்தோ நாட்டின் பண மான மலூட்டி பற்றி நிறையவே இருந்தது. அப்பொழுது அதன் பெறுமதி அமெரிக்க டாலருக்கு நிகராகவே இருந்தது பற்றியும் இருந்தது.

அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க அதனை ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்து காண்பித்தார் கவிநாயகர்.

அவரது இயன்மையிலும் வியன்மையிலும் அசந்துபோன அந்த அதிபர் ஆனந்த மிகுதியால் தாண்டவமே ஆடியதுடன் அதனை சிசூத்து மொழிக்கு மாற்றினார்.

அதே போல கவிநாயகரது பிரியாவிடை வைபவத்தில் தந்தை சிசூத்து மொழியில் எழுதிய கவிதையின் கையெழுத்து மூலப்பிரதியை மகன் ஆங்கிலத்தில் மாற்றிக் காண்பிக்க தாமதமின்றி தமிழில் படைத்தார் நம்மவர்.

பின்னர் அவரது இரு கவிதைகளும் நூலை அலங்கரித்தன.

அதனால் சிசூத்து மொழிக்கு மாற்றப்பட்ட முதலாவது தமிழ் கவிதையும் அவருடையதுதான். சிசூத்து மொழியில் எழுதப்பட்டு தமிழுக்கு மாற்றம் பெற்ற முதலாவது கவிதையும் அவரால்தான் என்ற வரலாற்றுப் பெருமை அடைந்தன.

வீடு நோக்கி திரும்பிக் கொண்டிருந்தோம்.

லெசொத்தோவுடன் தனது ஆபிரிக்க வாழ்வு அற்றுப்போய்விடவில்லை என்றார்.

இற்றுப்போயிருக்குமோ என்றேன்.

1983 முதல் 1988 வரை தென் ஆபிரிக்காவில் ட்ரான்ஸ்கி மாநிலத்தில் உள்ள புனித கத்பேட்ஸ் உயர் நிலை கலாசாலையில் மானிடவியல்துறைத் தலைவராக பணி புரிந்தேன். நெல்சன் மண்டேலா பிறந்த கிராமத்துக்கு மிக அருகான கிராமம் அது. எனது கலாசாலை அதிபரின் மகள் அழகு ராணியாக தெரிவாகிட பெரிய பாராட்டு விழா அமர்க்களப்படுத்தியது. பிரமாண்டமான விழா மலரில் அழகு ராணியை பாராட்டி நான் எழுதிய ஆங்கில கவிதையும் எனது கையெழுத்தில் அதன் தமிழ் வடிவமும் கோசோ மொழி மாற்றமும் இடம்பெற்றன என்றார்.

எனின் உங்களது கவிதைகள் சிசூத்து மொழியில் மட்டுமல்ல கோசோ மொழியிலும் உண்டு என்றேன்.

கவிநாயகர் பற்றி சொல்லிக்கொண்டே போகலாம். நிறைய இருக்கு!

எந்தக் காரியத்திலும் அர்ப்பணிப்பும் வேட்கையும் அவரோடிருந்தது.

அறிவால்... ஆற்றலால்... அனுபவத்தால் அவர் முதியவர். இலகுவாய்... இனிமையாய்..... இதயத்தால் எழுதுவதில் அவர் இளையவர். தமிழால் தானும் வாழ்ந்து தன் வாழ்வால் தமிழையும் வாழ வைத்த இனிய தமிழர் அவர். தமிழ் கலை இலக்கிய வரலாற்றுப் பொன்னேட்டில் அவருக்கென்று மதிப்பார்ந்த இடமொன்று உண்டு.

கவிதைகள் கட்டுரைகள் சிறுகதைகள் குறு நாவல்கள் எவையாயினும் சரி ஒவ்வொரு எழுத்தும் இதோ கவிநாயகர் என எவ்வளவு காலம் ஆனாலும் அடையாளம் காட்டும். காலாகாலத்துக்கும் நினைவில் வாழும்.

தாய் நாட்டில் புகுந்த வீட்டில் அவர் இருந்தார்.
புகுந்த நாட்டில் தாய்வீடு அவருடன் இருந்தது.

கண்ணீர் பூக்கள் கொண்டு இதயம் அஞ்சலிக்கின்றது!




jegatheesan.s@thaiveedu.com



# சந்ததமும் வாழும் கந்தவனம் நாமம்!

- பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம்

கந்தவனம்! கவியரங்கில்
   துள்ளிசைக் கவிதைகளின்
சந்தவனம்! கனடாப்பண்
   தமிழினிக்க மொழிபெயர்த்துத்
தந்தவனம்! கனடாவில்
   தமிழ்தழைக்க அடிநாளில்
வந்தவனம்! இங்குயாப்புக்
   கல்வியினை வகுப்புவைத்தும்
உந்துவனம்! ஓடியோடி
   ஒருகோடி தமிழ்த் தொண்டில்
நொந்தவனம்! ‘ஆத்மஜோதி’
   இதழ்கள் தொடர்ந்து தந்த
நந்தவனம்! ‘தாய் வீடு’
   சஞ்சிகையில் எழுத்தாளர்
சுந்தரநல் சரித்திரங்கள்
   தொடர்ந்துதந்த விந்தைவனம்!
சொந்தவனம் நுணாவிலுக்கும்
   துணை குரும்ப சிட்டிக்கும்!
நந்தமிழில் எண்பதின் மேல்
   நல்நூல்கள் வெளியிட்ட
அந்தவனம்! தொண்ணூறு
   ஆண்டழகாய் வாழ்ந்த வனம்!
மைந்தனென்று தமிழன்னை
   மகிழல்வே றெந்த வனம்?
வெந்தவனம் நம்மனங்கள்
   வேதனையால்! நும்நாமம்
சந்ததமும் வாழும் ஐயா,
   தமிழுள்ள வரையுலகில்!



Panchacharam@thaiveedu.com

# தமிழோடு வாழ்ந்த
# கவிஞர் கந்தவனம்



– பால. சிவகடாட்சம்

கவிஞர் கந்தவனம் அவர்களின் கவிதைகள் பலவற்றைப் படித்ததன் மூலம் ஈழத்தில் அவர் பெயர் எனக்கு நன்கு பரிட்சயமான ஒன்றாக இருந்தது. எனினும், அவரை நேரடியாக அருகிருந்து பார்க்கவும் பேசவும் வாய்ப்புக் கிடைத்தது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நான் விரிவுரையாளராகப் பணிபுரிந்த காலத்தில்தான். கண்டியில் இருந்த இந்துமாமன்றத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பேச்சுப்போட்டி ஒன்றுக்கு நடுவராக நான் சென்றிருந்த வேளை அவரும் ஒரு நடுவராக எனக்கு அருகில் வந்து அமர்ந்தபோதுதான் அவரோடு நேரடியாக உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. நடுவராகப் பணியாற்றுவது அதுவே எனக்கு முதல் முறை. அந்தப் பேச்சுப்



போட்டியின் போது இடம்பெற்ற ஒரு நிகழ்வு இன்றும் எனது நினைவில் பதிந்துள்ளது. மிகச் சிறப்பாகப் பேசிய ஒரு போட்டியாளருக்கு நானும் கவிஞரும் ஏறத்தாழ ஒரே மாதிரியான புள்ளியையே வழங்கியிருந்தோம். எனினும், மூன்றாவதாக இருந்த நடுவர் அந்தப் போட்டியில் சிறப்பாகப் பேசிய மாணவிக்கு மிகக்குறைந்த புள்ளிகளை வழங்கியமையால் முதலாவதாக வரவேண்டிய போட்டியாளர் இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டார். சிறந்த பேச்சாளர் தெரிவில் ஏற்பட்ட இத்தவறினால் அவர் அடைந்த வேதனையையும் ஏமாற்றத்தையும் என்னிடம் அவர் தெரிவித்தபோது, நியாயமான வழியில் அவர் நடந்துகொள்ளும் பண்பைக் கொண்டிருந்தமை அவர்மீது எனக்கு இருந்த மதிப்பை மேலும் உயர்த்தியது.

இந்நிகழ்வு நடந்து ஏறத்தாழ இருபது வருடங்களின் பின்னரேயே கவிஞரை மீண்டும் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவரது கவிதை, பேச்சு, எழுத்து என்பனவற்றை மிக நயந்து அனுபவிப்பவர்களில் நானும் ஒருவனாக இருந்துள்ளேன். அதுமட்டுமன்றி அவரால் ஆரம்பிக்கப்பட்ட இந்து சமயப் பேரவையால் நடத்தப்படும் மாணவர்களுக்கான தேவாரம் ஓதுதல், பேச்சுப்போட்டி என்பவற்றில் நடுவராக நான் பல தடவைகள் அழைக்கப்பட்டிருக்கின்றேன். அவ்விதமே முற்றோதல் மகாநாடு, நாவலர் விழா, சமய குரவர்கள் குருபூசை தினங்களில் என்னை அழைத்து உரையாற்றவும் வைத்துள்ளார். கவிஞர்களுக்கான பயிற்சி வகுப்புக்களுக்கு என்னை அழைத்து சில தலைப்புகளில் உரையாற்றும்படி கேட்டுக்கொள்வார்.

***இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து***
***அதனை அவன்கண் விடல்***

என்பதை நன்குணர்ந்து யார், யாரை எதற்கு தெரிவுசெய்ய வேண்டும், யாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்னும் நுண்மதி கொண்டவர் கவிஞர். கனடாவில் எழுத்தாளர் இணையத்தின் நிகழ்ச்சிகள் என்றாலும், கவிஞர் கழக நிகழ்ச்சிகளாக இருந்தாலும், இந்துசமயப் பேரவையின் நிகழ்ச்சிகளாக இருந்தாலும் அவை அனைத்தையும் முன் நின்று நடத்தி வெற்றி காணவைப்பவர் அவர்.

இலங்கையில் முதன்முதலாக தமிழ் மொழியில் ஆக்கப்பெற்ற சரசோதிமாலை என்னும் காலக்கணித நூல் பற்றிய எனது ஆய்வு சென்னையில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் 2014-ம் ஆண்டு வெளியிடப்பெற்றது. இன்னமும் முழுமையாக உரை எழுதப்படாத இந்நூலுக்கு உரை எழுதும்படி தமிழாராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த முனைவர் தசரதன் என்னைக் கேட்டுக்கொண்டார். கவிதை இலக்கணம் பற்றி அறிந்திராத நிலையில் தொள்ளாயிரத்து முப்பத்து நான்கு கடினமான பாடல்கள் கொண்ட சரசோதி



மாலை என்னும் பழந்தமிழ் நூலுக்கு உரை எழுதுவதற்கு தயங்கினேன். இது குறித்து கவிஞரிடம் உரையாடினேன். உடனே 'கவிதைகளின் சீர் தளை என்பன பிரித்து நான் தருகின்றேன். அதன் பின்னர் உரை எழுதுவது உமக்கு எளிதாக இருக்கும். அடுத்த புதன்கிழமை எமது பணியை ஆரம்பிப்போம்' என்று கூறிவிட்டார்.

அவ்வாறே அடுத்த புதன் கிழமை அவரது வீட்டுக்கு அருகில் இருந்த TIM HORTONS சிற்றுண்டிச்சாலைக்கு நான் சென்றபோது ஒரு பெரிய அப்பியாசக் கொப்பியுடன் எனக்காகக் காத்திருந்தார் கவிஞர். நானும் அவரும் சேர்ந்து மாதக்கணக்கில் சந்தித்து 'சரசோதி மாலை' நூலுக்கான உரையை எழுதி முடித்தது இன்றுபோல் என் நினைவில் உள்ளது. கவிஞர் உயிருடன் இருக்கும்போது இந்நூலை அச்சில் கொண்டுவர முடியவில்லையே என்னும் ஓர் ஆதங்கம் இன்றும் எனக்கு உள்ளது. தமிழே வாழ்வாகக் கொண்டவர் கவிநாயகர் கந்தவனம் என்பதை அவருடன் பழகியவர்கள் எளிதில் அறிந்து கொள்ளமுடியும்.

அவரின் உதவி நாடிப் பலர் வருவார்கள். அவர்களுக்குத் தேவையானவற்றை செய்து தருவதற்கு அவர் ஒருபோதும் பின்நிற்பதில்லை. அவர் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பல்வேறு இசை, நடன, நாடக விழாக்களைப் பார்த்துள்ளேன். அவரது பேச்சாற்றலும், காலம், இடம் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு அதற்கேற்ப அவரது உரை கலகலப்பாகவும் நகைச்சுவை நிறைந்ததாகவும் அமைந்திருக்கும்.

அதிபர் பொ. கனகசபாபதி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற சொற்றொகுதிக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் செய்த பங்களிப்பு அளப்பரியது. அவரது 80-வது பிறந்த நாளை அங்கு கொண்டாடியதையும் 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்பதற்கிணங்க அங்கு தமிழறிஞர்கள் கூடியிருந்து அவரை வாழ்த்தியதையும் இன்றும் எண்ணி மகிழ்கின்றேன். கற்றறிந்தவர்கள் கூடி மேற்கொண்ட அந்த நிகழ்வு, சங்கம் வைத்து தமிழ் வளர்த்த வரலாற்றை மீட்டுப் பார்க்க வைத்தது. அக்கூட்டம் முடிந்து ஒருவரை ஒருவர் நீங்குவது உள்ளத்திற்கு வேதனை தருவதாக அமையும். இவர்களோடு இன்னும் கொஞ்ச நேரம் இருந்து உரையாடினால் என்ன என்ற எண்ணமே மனதில் நிறைந்திருக்கும்.

### *உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே புலவர் தொழில்*

எனது வீட்டிற்கு வருடமுடிவில் சிலரை அழைத்து அவர்களுடன் விருந்து உண்டு மகிழ்வது வழக்கம். அதில் எனது இல்லத்திற்கு அழைக்கப்படுபவர்களில் கவிநாயகரும் துணைவியாரும் முக்கியமானவர்களாக இருப்பர். அவர்களோடு கலாநிதி பார்வதி கந்தசாமியும் துணைவரும், திரு. திருமதி சிவபாலு குடும்பத்தினர், அகில் சாம்பசிவம், 'தாய்வீடு' டிலிப்குமார், டாக்டர் இலம்போதரன் குடும்பத்தினர், எழுத்தாளர் மகாலிங்கம் மற்றும் ராஜபாலன் ஆகியோர் அடங்குவர். அனைவரும் தங்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் சந்தர்ப்பத்தையும் இந்த விருந்துபசாரம் தந்திருந்தது. அது எனக்கு மட்டுமல்ல எனது பிள்ளைகள், துணைவி ஆகியோருக்கும் தாமும் விருந்தோம்பலில் பங்குகொள்கின்றோம் என்னும் மகிழ்ச்சியைத் தருவதாக அமைந்திருந்தமை மறக்கமுடியாதது.

தவமணி என்னும் பெண்ணின் நல்லாளுடன் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து முடித்த பெருந்தகையான கவிஞர் கந்தவனம் அடுத்து விண்ணுலக வாழ்வை நாடிச் சென்றுவிட்டபோதிலும் நாம் வாழும்வரை எம் எண்ணத்தில் வாழ்ந்திருப்பார்.



Sivakadadcham@thaiveedu.com



# விநாயகர் புத்திரன்!
# விநாயகர் மித்திரன்!

- வாரணன் கந்தவனம்

அன்னை தமிழை
தன் மீது சுமந்தவர்

விண்ணை அடைந்தார்
விநாயகர் பாதந்தனில்

விநாயகர் புத்திரன்
விநாயகர் பக்தரானார்

தமிழை நேசித்தவர்
சைவ சமயத்தை பூசித்தவர்

சிறு வயதில்
பெற்றோரை இழந்து
மாமாவின் அரவணைப்பில்
அண்ணன்மார் ஊக்கத்தில்
வளர்ந்து
பெரு வயதில் தன் முயற்சியால்
உயர்ந்தவர்

படித்தது புவியியல்
பிடித்தது  தமிழ்
இடையினில் புகுந்தது ஆங்கிலம்
நடிப்பதின் ஆர்வத்தால்
நாடக ஆசிரியரானார்

என் அன்பு தாயார்
தன் கைபிடித்தவர்
பின்  இல் வாழக்கையில்
முன் உதாரணமானவர்

என்னை என் சகோதரியை - இம்
மண்ணை நேசிக்க வைத்தவர்
சுதந்திரமான முற்போக்கான
சிந்தனையைப் போதித்தவர்

பெயர் சொல்லி எம்மை
அழைத்ததில்லை
மனைவியை அம்மா - என்
சகோதரியை அக்கா
என்னை தம்பி என்பார்

இயல் இசை நாடகம்
கற்றுத் தந்தார்
அயலவர் பெரியவரை
மதிக்க வைத்தார்

தான் பேசுமிடமெல்லாம்
என்னையும் அழைத்துச் செல்வார்
நான் தூங்கிவிடுவேன்
எனை தூக்கி மேடையில்
அருகினில் தூங்க விட்டு
அவர் பேச தொடங்கிடுவார்

மருமகனை மகன் என்றும்
மருமகளை மகள் என்றும்
அன்புடன் அழைப்பார்
பேரப்பிள்ளைகளின் அன்பில்
பேரானந்தம் அடைந்தார்

கையில் துண்டின்றி
மணிக்கணக்காகப் பேசுவார்
வெய்யில் மழை பாராது
ஊரெல்லாம் சுற்றினார்

எதற்கும் அஞ்சாதவர்
பதறும் மனம் இல்லாதவர்
கவலைக்கு மருந்து எழுதினார்
கவலையே படவில்லை வாழ்வில்


கோபம் வந்தால்
அடிதான்
பாவம் பல மாணவர்
வாங்கினார் கன்னத்தில்

ஒருவர் குறையை
அவருக்குத்தான் சொல்வார்
வித்துவச் செருக்கில்
பத்திரிகையில் எழுதார்

தன்னை இகழ்ந்தோரை
மன்னித்து விட்டார்
தன் நண்பர்களை இகழ்ந்தோரை
துண்டித்து விட்டார்


முதல் நாள் இரவு
தம்பி நான் போகப்போறேன் என்றார்
அதன் பின் தொலைக்காட்சியில்
விநாயகரை கைதூக்கி
வணங்கினார்

வழி அனுப்பினோம்
விழிகள் ததும்ப
எம்முடன் இணைந்த
உற்ற உறவினர்
நண்பர்கள் ஊடகவயளாளர்கள்
அனைவருக்கும் பல் கோடி நன்றிகள்



Varanan.k@thaiveedu.com





# கவிநாயகரோடு எனது கவிதைப் பயணம்

## மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

தமிழ் மொழி சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே இலக்கிய இலக்கண வளங்களோடு வளர்ச்சியுற்றிருந்த ஒரு மொழியாகும். எமக்குக் கையில் கிடைத்த முதல் நூல் என்று கூறப்படும் தொல்காப்பியத்தின் இலக்கண மரபில் தோன்றி வளர்ந்த செய்யுள் இலக்கியம், கால நீரோட்டத்தில் பல்வேறு பரிணாம வளர்ச்சிகளைக் கண்டு இன்று புதுக்



கவிதை, நவீன கவிதை என்று நடைபோட்டுச் செல்கின்றது. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்றவாறே காலத்தால் ஏற்படும் மாற்றங்களைத் தமிழ் ஏற்றுக்கொண்டே வளர்ந்து வந்துள்ளது. எனினும், பெருமைச் சிறப்பு மிக்க மரபுகள் பழமையானவையாக இருந்தாலும் அவை அழிந்து படாமல் பாதுகாக்கப்பட வேண்டியது தமிழ் மொழியின் இருப்புக்கும் சிறப்புக்கும் அவசியமாகிறது.

காலத்துக்குக் காலம் தமிழன்னை பெற்றெடுத்த பேரறிஞர்களின் பெருமுயற்சியாலும் அளப்பரிய தொண்டுகளாலும் மரபு வழிக் கவிதை வடிவங்கள் அழிந்து போகாமல் இன்றும் தோற்றம் பெற்றும், நிலைபெற்றும் வருகின்றன. மரபுக் கவிதை வடிவங்களை வளர்த்து வாழ வைக்க வேண்டிய சமுதாயப் பொறுப்பை ஏற்றுச் செயற்படவல்ல அறிஞர்களைத் தமிழன்னை காலத்துக்குக் காலம் பெற்றெடுத்து வருகின்றாள். அவ்வாறு தமிழன்னை பெற்றெடுத்த குறிப்பிடத்தக்க இன்றைய தலைமுறை இலக்கியவாதிகளுள் ஈழத்துப் பெருங்கவிஞர் கவிநாயகர் கந்தவனம் அவர்களும் ஒருவர் என்பது எமக்குப் பெருமை அளிக்கின்றது.

### கவிநாயகருடனான முதல் தொடர்பு:

தமிழகத்திலும், ஈழத்திலும், கனடா போன்ற மேலைத்தேயங்களிலும் இருக்கின்ற மரபு வழிக் கவிஞர்கள் என்று கூறக்கூடியவர்கள் கவிநாயகர் கந்தவனம் அவர்களைப்போல் மிகச் சிலரே. இவர்களின் காலத்துடன் மரபுக் கவிதைப் படைப்பாளிகள் இல்லாமல் போகக்கூடிய ஆபத்து இருப்பதைக் கனடாவிலுள்ள மரபு வழிவந்த இலக்கியவாதிகளான காலஞ்சென்ற பண்டிதர் ம.செ. அலெக்சாந்தர் அவர்களும் கவிநாயகர் கந்தவனம் அவர்களும் உணர்ந்து கொண்டார்கள். அந்த உணர்வு மேலோங்க மரபுக் கவிதை இலக்கியத்தை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற இலட்சிய நோக்கோடு 2004-ம் ஆண்டு அக்டோபர் மாதம் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆதரவுடன் பண்டிதர் ம.செ. அலெக்சாந்தர் அவர்களும் கவிநாயகர் கந்தவனம் அவர்களும் கவிதைப் பயிற்சிப் பட்டறை ஒன்றை ஆரம்பித்து நடத்தத் தொடங்கினார்கள்.

அப் பயிற்சிப் பட்டறை பற்றிப் பத்திரிகையொன்றில் வந்த விளம்பரம் ஒன்று கவிதை எழுதுவதில் ஈடுபாடு கொண்டிருந்த எனது கண்ணில் பட்டது. அந்தப் பயிற்சிப் பட்டறையில் சேர்ந்து பயிலத் தொடங்கியபோதுதான் பண்டிதர் அலெக்-சாந்தர், கவிநாயகர் கந்தவனம் ஆகியோருடனான நேரடியான அறிமுகம் எனக்கு முதன்முதலில் ஏற்பட்டது. அவர்களின் அறிமுகம் எனது கவிதைப் பயணத்தில் மரபு வழியான



புதிய பாதையை அமைத்துக் கொடுத்தது என்பதோடு எனது பொது வாழ்க்கையிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். முதலாவது பயிற்சிப் பட்டறையில் நானும் என்னுடன் பல எழுத்தாளர்களும், கவிதை இலக்கியத்தில் ஆர்வமுள்ளவர்களும் என்று சுமார் பதினைந்து பேர் கலந்து கொண்டோம். வாராந்தம் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்ற அந்தப் பயிற்சிப் பட்டறையில் பண்டிதர் அலெக்சாந்தர் அவர்களால் யாப்பிலக்கணப் பயிற்சியும், கவிநாயகர் கந்தவனம் அவர்களால் தமிழிலக்கிய ஆய்வரங்கமும் ஆக்கபூர்வமான முறையில் நடத்தப்பட்டன. இடையிடையே சில தொய்வுகள் ஏற்பட்டிருந்த போதிலும் அந்தப் பயிற்சிப் பட்டறையை கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் சுமார் ஆறு ஆண்டுகளாக நடத்தி வந்தது.

### கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் தோற்றம்:

இந்தப் பயிற்சிப் பட்டறைகளில் கற்றுத் தேர்ந்த நானும் என்னுடன் வேறு எட்டுக் கவிஞர்களுமாக இணைந்து கனடிய மண்ணில் முதல் முதலாகப் 'பொதிகைப் புது மலர்கள்' என்னும் மரபுக் கவிதைகள் கொண்ட தொகுப்பு நூல் ஒன்றை 2012-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இரு ஆசிரியர்களின் முன்னிலையில் வெளியிட்டோம். செப்டம்பர் 2012-ல் 'வைகறை வானம்' என்னும் எனது மரபுக் கவிதைத் தொகுப்பு நூலும் அவ்வாறு வெளியிடப்பெற்றது. இவை யாவும் ஆசிரியர்கள் இருவரினதும் உழைப்பால் நாங்கள் பெற்ற பயன்களாகும்.

ஆசிரியர்கள் இருவரினதும் எண்ணத்தில் உதித்த கருவாக, அவர்களாலேயே உருவாக்கப்பட்ட கவிஞர்களால், 2011-ம் ஆண்டு நவம்பர் மாதம் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் அமைக்கப்பட்டது ஒரு வரலாற்றுப் பதிவாகும். அக்கழகத்தின் ஆரம்பகாலத் தலைவராக நான்கு ஆண்டுகள் பணியாற்றுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது. ஆசிரியர்களின் வழிகாட்டலும், உறுப்பினர்களின் ஆதரவும் கழகத்தைச் சிறப்பாக வழி நடத்திக் கவிதை, இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கான பல திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு எனக்குப் பேருதவியாக இருந்தது. கவிஞர் கழகம் தோற்றம் பெற்றதைத் தொடர்ந்து 2011-ம் ஆண்டிலிருந்து கவிஞர் கழகம் கவிதைப் பயிற்சி வகுப்புகளைப் பொறுப்பேற்று இன்றுவரை தொடர்ந்து நடத்தி வருகின்றது.

எதிர்பாராத விதமாகப் பண்டிதர் அலெக்சாந்தர் அவர்கள் 2017-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ம் திகதி காலமானார். அவரது இழப்பு என்றைக்கும் எமக்கு ஈடுசெய்ய முடியாத ஒரு இழப்பாகவே ஆகிவிட்டது. அவரின் மறைவுக்குப் பின்னும் தொடர்ந்து கவிநாயகர் கந்தவனம் அவர்களின் வழிகாட்டுதலுடன் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் சிறப்பாக இயங்கி வந்தது. பண்டிதர் அலெக்சாந்தர் அவர்கள் நடத்தி வந்த கவிதை வகுப்புகளை அவரின் மறைவுக்குப் பின்னர் அவரது நல்லாசியுடனும் கவிநாயகர் அவர்கள் வழங்கிய ஆதரவுடனும் நான் பொறுப்பேற்றுத் தொடர்ந்து நடத்தி வருகின்றேன். எனக்கு முன்னோடிகளாக இருந்து அவர்கள் செய்த பணியை நான் மேற்கொண்டு தொடர்வதற்கு அவர்கள் பாதை அமைத்துக் கொடுத்ததற்காக இருவரையும் என்றென்றும் நன்றியுடன் எனது உள்ளத்தில் பதித்துள்ளேன்.

### இரு கலங்கரை விளக்கங்கள்:

கவிதை வகுப்புக்களில் கலந்து கொண்ட மாணவர்களுக்குப் பண்டிதர் அலெக்சாந்தர் அவர்களும், கவிநாயகர் கந்தவனம் அவர்களும் பெரும் ஈர்ப்புச் சக்தியாக விளங்கினார்கள். கவிதைப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டவர்களில் சுமார் முப்பது பேர் கவிஞர்களாகவும் எழுத்தாளர்களாகவும் உருவாகியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆசிரியர்கள் இருவரினதும் தன்னலமற்ற பணியால் கனடிய மண்ணில் வலுவான மரபுக் கவிஞர்கள் பரம்பரையொன்று உருவாகி வளர்ந்து வருவது கண்கூடு. இதற்கு அடித்தளமாக இருந்த ஆசிரியர்கள் இருவருக்கும் அவர்கள் வாழும் காலத்திலேயே சிறப்பளிக்க வேண்டும் என்று கருதி 2016-ம் ஆண்டு மே மாதம் கனடாத் தமிழிசைக் கலாமன்ற மண்டபத்தில் மாபெரும் விழாவொன்றைக் கவிஞர் கழகம் நடத்திக் கவிநாயகர் கந்தவனம் அவர்களையும், பண்டிதர் அலெக்சாந்தர் அவர்களையும் மிகுந்த மனநிறைவோடு பெருமைப்படுத்திச் சிறப்புச் செய்தது. அவ்விழாவிலே இருவரையும் வாழ்த்தி அவர்களது மாணவர்களால் வழங்கப் பெற்ற கவிதைகள், கட்டுரைகள் அடங்கிய 'அன்புத் தேனமுதம்' என்ற நூலும் வெளியிடப்பெற்றது.

இன்று கனடிய மண்ணில் என்னைப் போன்ற பல மரபுக் கவிஞர்களின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் கவிநாயகர் கந்தவனம் அவர்களும் அவருடன் இணைந்து பண்டிதர் அலெக்சாந்தர் அவர்களும் ஆற்றிய பணி தமிழ்க் கவிதை இலக்கிய வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டியதொன்றாகும். எனது

கவிதைப் பயணத்தில் இரு கலங்கரை விளக்கங்களாக இருந்த இவ்விருவரையும் பிரித்து வைத்து எனது கவிதைப் பயண வரலாற்றைப் பதிவு செய்துவிட முடியாது என்ற காரணத்தினாலேயே, இக்கட்டுரை கவிநாயகர் கந்தவனம் அவர்களைப் பற்றிய சிறப்புக் கட்டுரையாக இருந்தபோதிலும் பண்டிதர் அலெக்சாந்தர் அவர்களைப் பற்றியும் இங்கே பதிவு செய்ய வேண்டியது எனது கடமை என உணர்கின்றேன்.

## கவிநாயகரின் குணநலப் பண்புகள்:

தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் மதித்துப் போற்றுகின்ற இலக்கியவாதியாகத் திகழும் கவிநாயகர் கந்தவனம் அவர்கள், சிறந்த எழுத்தாளர், கவிஞர், பேச்சாளர், ஆன்மீகவாதி எனப் பன்முகப் பரிமாணங்களில் தன்னையும் வளர்த்துத் தமிழையும் வளர்த்து வந்தவர். கனடாவில் எனது கவிதை இலக்கியப் பயணம் ஆரம்பித்த காலத்திலிருந்தே கவிநாயகர் கந்-



தவனம் அவர்களுடன் அடிக்கடி மிகவும் நெருக்கமாகப் பழக வேண்டிய நல்வாய்ப்புக் கிடைத்தது. இவர் தொழில் ரீதியாக ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவம் கொண்டவராக இருந்ததனால் இவரின் கற்பிக்கும் திறன் மாணவர்களைப் பெரிதும் கவரக்கூடியதாக இருந்ததைக் காண முடிந்தது. இவரிடமிருந்த நல்லாசிரியனுக்குரிய அத்தனை பண்புகளும் இவரை எனது முன்னோடியாகக் கொள்ள வைத்தன.

எளிமை, தன்னடக்கம், கருணை, எல்லோரிடமும் அன்பு பாராட்டுதல், மத நல்லிணக்கம் போன்ற மனித நேயப் பண்புகள் அத்தனையும் நிறைந்த இவரைப் போன்ற ஒருவரைக் காண்பது அரிது. கவிதை வகுப்புகளில் தனிப்பட்டவகையில் எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாது நிறைந்த மனத்துடன் கற்றுக் கொடுத்தார். தன்னுடைய முதுமைக் காலத்தில் கூடத் தமிழுக்காகவும், தமிழ்ச் சமூகத்துக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்த ஒரு மாமனிதர் இவர். கனடாவில் கவிநாயகரின் பங்களிப்பு இல்லாது எந்த ஒரு கலை இலக்கிய விழாவும் நடந்தது கிடையாது. பூவோடு சேர்ந்து நாரும் மணம் பெறும் என்றவாறு அவருடன் சேர்ந்து நானும் பல கவியரங்கங்களிலும், பேச்சரங்கங்களிலும், இலக்கிய விழாக்களிலும் பங்கு பற்றியதால் என்னையும் வளர்த்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கின்றேன். 2008-ம் ஆண்டு ஏப்ரல் மாதம், கவிநாயகர் கந்தவனம் அவர்களது முன்னிலையில், அன்றைய கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத் தலைவராக இருந்த திரு. சின்னையா சிவனேசன் அவர்களது தலைமையில், கனடாவில் நான் பங்களிப்புச் செய்த முதல் கவியரங்கம் பற்றிய நினைவு இன்றும் பசுமையாக எனது நெஞ்சில் நிழலாடுகிறது.

## கவிநாயகரின் இலக்கியப் படைப்புகள்:

கவிநாயகர் கந்தவனம் அவர்களின் கவிதை, கதை, கட்டுரை, நாடகம் என ஏராளமான இலக்கியப் படைப்புக்களைத் தமிழுலகம் பெற்றுப் பெரும் பயனையடைந்து வந்திருக்கின்றது. இவரின் படைப்புகளில் கவிதை நூல்கள் தனி முத்திரை பதித்தவை. இவரின் கவிதைகள் தனித்துவமான கவியம்சம் பொருந்தியவை. பிற்காலத்தில் இவரின் கவிதை இலக்கியப் பயணம் ஒரு புதிய திசையில் சென்று கொண்டிருந்ததைக் காண முடிந்தது. ஆன்மீகப் பெரியார்களினதும் ஈழத்து அறிஞர் பெருமக்களினதும் வாழ்க்கை வரலாறுகளையும், பணிச்





சிறப்புக்களையும் சிற்றிலக்கியமாகப் படைத்து வெளியிட்டு வந்தார். இந்த முயற்சியில் நால்வர் நான்மணி மாலை, நாவலர் பெருமான் நான்மணி மாலை, சிவயோக சுவாமிகள் திருவெண்பா, திலகவதியார் திருவெண்பா போன்ற ஆன்மிகப் பெரியார்களின் வரலாறுகளும், விபுலாநந்த வெண்பா, புலவர்மணி வெண்பா, செபரத்தின வெண்பா போன்ற ஈழத்துச் சான்றோர்களின் வரலாறுகளும் நேரிசை வெண்பாக்களாலான சிற்றிலக்கியமாக இவரால் படைக்கப்பட்டு வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நான் கவிஞர் கழகத்திற்குத் தலைமை வகித்த காலத்திலும் அதன் பின்னரும் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் கவிநாயகர் அவர்களின் சிற்றிலக்கியப் படைப்புகளில் பல நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டு வைத்த பெரு வாய்ப்பைப் பெற்றிருந்தது. தொல்காப்பியரின் மாணவர் என்று கருதப்படும் பனம்பாரனார் பாயிரம் எழுதியது போல எனது ஆசிரியரின் சில நூல்களுக்கு முன்னுரை எழுத எனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

கவிநாயகர் அவர்கள் பல ஆன்மீக நூல்களும் பக்தி இலக்கியங்களும் படைத்திருக்கின்றார். அக்காலத்துப் பக்தி இலக்கியங்கள் ஏற்படுத்தி வைத்த புரட்சி மாற்றங்களின் வழியில் கவிநாயகர் அவர்கள் இயற்றிய 'பாவாரம்' என்ற நூலும் படைக்கப்பட்டுள்ளது. 117 சிவத்தலங்களைக் குறித்து 117 பதிகங்கள் அடங்கிய திருநூல் அது. அந்த நூல் கனடாவில் வெளியிட்டு வைக்கப்பட்டபோது அந்த நூலின் ஒரு பகுதிக்கு ஆய்வுரை நிகழ்த்துகின்ற பொறுப்பு எனக்குத் தரப்பட்டது. அதன்போது அந்த நூலை முழுமையாகப் படித்தறிந்து உணரும் அரிய வாய்ப்பு எனக்கு வாய்த்தது. சைவத்தையும், தமிழையும், தாய் மண்ணையும் போற்றுகின்ற மேன்மை பலவற்றை அந்நூலில் பார்க்கின்றேன். கவிநாயகர் அவர்களின் கவிதை நூல்களிலுள்ள எந்தக் கவிதையை எடுத்தாலும் அந்தக் கவிதையிலெல்லாம் அவரது சொல்லாட்சியும், கவிநயமும் கொடிகட்டிப் பறப்பதை நாம் காணமுடியும்.

கின்னஸ் புத்தகத்தில் பதிவுசெய்யப்படக்கூடிய அளவுக்கு எண்ணிக்கைகளால் நிறைந்த நூற்றுக்கணக்கான நூல்களை மட்டுமல்ல எண்ணங்களால் நிறைந்த நூல்களாகவும் எல்லா நூல்களையும் படைத்திருக்கிறார். அவரது கவிதைகள் எல்லாம் மொழி மாற்றம் செய்யப்பட்டுப் பிறமொழி இலக்கிய ஆர்வலர்களையும் சென்றடையும் வண்ணம் எடுத்துச் செல்லப்பட வேண்டிய தகுதியும், தரமும் உடையவை.

எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய ஆசிரியர் கவிநாயகர் கந்தவனம் அவர்கள் எனது வாழ்க்கைப் பயணத்திலும், கவிதைப் பயணத்திலும் நான் வாழும் வரை நன்றியுடன் நெஞ்சில் பதித்திருக்கத் தக்க மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றார். நான் என்னைப் புடம் போட்டுக் கொள்ளும் வகையில் அவர் என்னில் ஏற்படுத்திய தாக்கங்கள் என்றும் என் நெஞ்சிலிருந்து அழியாத ஓவியங்களாகச் செதுக்கப்பட்டிருக்கும் என்பது உறுதி. 2022-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நான் வெளியீடு செய்த 'மனவெளி மேகங்கள்' என்னும் எனது நூல் வெளியீட்டு விழாவை இதுநாள்வரை எனது கவிதைப் பயணத்தில் உடனிருந்த எனது ஆசானின் முன்னிலையில் நிகழ்த்த முடியாது போனது எனது மனதுக்கு மிகுந்த வருத்தத்தை அளித்தது. இருந்தாலும் அவரது இல்லம் தேடிச் சென்று அவரிடமிருந்து பெற்ற வாழ்த்தை ஒளிப்பதிவு செய்து விழாவில் காணொளி மூலம் காட்சிப்படுத்தியதால் நான் ஓரளவு மனநிறைவைப் பெற்றுக் கொண்டேன்.


ஒரு சீரிய சிந்தனையாளர், கவிதை உலகிலே மிகப்பெரிய ஆளுமையோடு வலம்வந்த மாபெரும் கவிஞர், தனது நாவன்மையாலும், சிம்மக் குரலாலும் பல அரங்குகளைக் கட்டிப் போட்ட மாமனிதர் இறுதிக்காலத்தில் உடல்நிலை தளர்ந்து போயிருந்த நிலையிலே அவரை என்னால் கண்ணுற்றுப் பார்க்க முடியாதிருந்தது. இன்றைக்கு அவர் எம்மிடையே இல்லை. அவரது இழப்பு என்பது பொதுவாகத் தமிழுலகுக்கும், சிறப்பாகக் கவிதை உலகத்துக்கும் என்றுமே ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது இழப்பால் துயருறும் அவர்தம் அன்புத் துணையும், குடும்பமும், இலக்கிய உலகமும் ஆறுதலடையவும், அவரது ஆன்மா இறைவனடியில் அமைதி பெறவும் இறைவனை
வேண்டுவோமாக!



shanmugarajah@thaiveedu.com

# எண்பதுக்கு எண்பது

## - துஷி ஞானப்பிரகாசம்



**குறிப்பு: 2013−இல், கவிநாயகரின் எண்பதாவது அகவையை முன்னிட்டு அவரை நேர்கண்டு வரையப்பட்ட கட்டுரையின் புதுப்பிக்கப்பட்ட வரைவு.**

இரண்டாயிரத்திப்பத்தாம் ஆண்டு கவிநாயகர் கந்தவனம் அவர்களின் 'நாடக அனுபவங்கள்' என்ற நூல் வெளியிடப்பட்டது. என்னையும் நண்பர் சேகர் தம்பிராஜாவையும் தொடர்பு கொண்ட கவிஞர், அந்த நூலை கனடாவில் வெளியிட்டுவைக்கும் பொறுப்பை எம்மிடம் கையளித்தார். எம்மால் மறுக்க முடியவில்லை. வெளியீட்டு விழாவை வழமையான சம்பிரதாயங்களுடன் நடத்தாமல், புதுமையானதொரு வடிவத்தில் நடத்தலாமென சேகர் என்னிடம் கருத்துரைத்தார். முன்னரொருமுறை, வேறொரு நூல் வெளியீட்டைப் புதுமையாக நடத்த நானும் மனவெளி கலையாற்றுக் குழுவைச் சேர்ந்த நண்பர் செல்வன் செல்லத்துரையும் திட்டமிட்டு, நூலை யாத்தவர் மரபை மீறத் தயங்கியதால் அந்தத் திட்டத்தை கைவிடவேண்டியேற்பட்டது. அதை சேகருக்கு எடுத்துக்கூறி, கவிநாயகர் மரபை விரும்புபவராகவே இருப்பார் எனவே வெளியீட்டு விழாவை மரபுக்குட்பட்டே நடத்தவேண்டியிருக்கும் என்றேன். சேகரோ 'கவிஞரைக் கேட்டுப்பார்ப்போம். அவர் மறுத்தால் திட்டத்தைக் கைவிடுவோம்' என்றார். கவிஞரின் பதில் நான் எதிர்பார்க்காதது. 'விழாவை நீங்கள் எப்படியும் நடத்தலாம். எனக்குப் பூரண சம்மதம். நீங்கள் நடத்தப்போகிற நாடகத்தில எனக்கு என்ன வேடம் என்று சொன்னால் நான் அதற்கேற்றமாதிரி என்னைத் தயார் படுத்திக்கொள்வேன்'. கவிஞரின் மரபுக் கவிதைகளைப் படித்ததாலும் அவருடைய ஆழ்ந்த ஆன்மீக ஈடுபாடுபற்றி அறிந்திருந்ததாலும் அவற்றினடிப்படையில் நான் அவரைப்பற்றி ஏற்படுத்தியிருந்த மதிப்பீடு உடைந்து பொடியாகியது. அந்த விழா மாறுபட்ட முறையில் நடத்தப்பட்டபோது அது பலரின் பாராட்டுதலையும் பெற்றது.

மரபிலும் யாப்பிலும் ஊறியிருந்தாலும் கவிஞர் ஒரு புதுமை விரும்பி என்பதை அறிந்துகொண்டேன். 1950-களின் நடுப்பகுதியில், தனது மாணவப் பருவத்தில் அவர் எழுதிய 'சமூகம்' என்ற குறுநாவல் அச்சேறாமல் போனதற்குக் காரணம் அது அக்காலத்திய சமூக மதிப்பீடுகளை கேள்விக்குட்படுத்திச் சாதியத்தைச் சாடியதுதான் என நம்பினார் கவிஞர். 'அந்தக் காலத்தில் இப்போதுபோல் பிரதியெடுக்கும் வசதியெல்லாம் இருக்கவில்லை. பிரதியை கைப்பட எழுதி அதை பத்திரிகையாசிரியர் ஒருவரிடம் சேர்ப்பித்தேன். 'நல்லாயிருக்கடா தம்பி' என்று கூறியவர், அதை அச்சிடவும் இல்லை. பிரதியை எனக்கு மீண்டும் தரவும் இல்லை. அவர் சாதித் தடிப்புமிக்க மனிதர். அதுபோலத்தான் 'புதுயுகம்' என்ற குறுநாவலும் வெளிவரவில்லை. அந்த நாட்களில் எனக்குப் படிப்பித்த ஆசிரியர்கள்கூட இத்தகைய புரட்சிகர கருத்துக்கள் கொண்ட ஆக்கங்களை ஆதரிக்கவுமில்லை, ஊக்கப்படுத்தவுமில்லை'. கவிஞர் எழுதிய இரண்டாவது குறுநூலும், மூன்றாவது குறுநூலும் இவை. இவையிரண்டும் அச்சேறாமலேயே தொலைந்து போயின.

2013-ம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் கவிஞர் எண்பதாவது அகவை கண்டபோது அதுவரை அவரின் எண்பது நூல்கள் வெளியிடப்பட்டிருந்தன என்ற சாதனையும் நிகழ்ந்தது. அது பற்றிக் கேட்டதும், அதைத் தட்டிக்கழித்தார். 'அதைப்பற்றி என்ன சொல்ல இருக்கிறது? நம்பாதவர்கள் கேட்டால் பட்டியலைக் காட்டலாம். அவ்வளவுதான்' என்று சிரித்தார். ஒரு மனிதன் அறுபது வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து எழுதிவருவது என்பதும், அந்த எழுத்துக்களிலே எண்பது நூலுருப்பெற்றுள்ளன என்பதும் உண்மையிலேயே குறிப்பிடத்தக்க சாதனைகள்தானே என நான் அவருடன் வாதாட வேண்டியிருந்தது. தான் எழுதி அச்சேறிய முதலாவது படைப்பை சிரிப்பொலிகளினூடே ஆர்வத்தோடு நினைவு கூர்ந்தார். 'அது ஒரு குறுநாவல். சாவகச்சேரி இறிபேர்க் கல்லூரியிலே மாணவனாக நான் இருந்தகாலத்தில் எழுதியது. 'ஒன்றரை ரூபாய்' என்பது அதன் தலைப்பு. 1954-ம் ஆண்டு வெளிவந்தது நல்ல நினைவிருக்கிறது. அந்த நாட்களிலே சைக்கிளில் 'டபுள்' சென்று பொலிசாரிடம் பிடிபட்ட போது, இருட்டிலே ஒன்றரை ரூபாய் என்று சொல்லி மூன்று சதங்களைக் கொடுத்து ஏமாற்றிவிட்டு தப்பிவந்த உண்மைச் சம்பவத்தை சுவையான குறுநாவலாக எழுதியிருந்தேன்'. அந்தக் காலத்திய 50 சத நாணயமும் 1 சத நாணயமும் இலகுவில் வேறுபடுத்தமுடியாத அளவுக்கு ஒத்த தோற்றமுடையவையாக இருந்ததை எனக்கு விளக்கினார். 'தனலக்குமி புத்தகசாலையில் கே.கே.வி. செல்லையா என்ற ஓவியர் இருந்தார். அங்கே எனது மூத்த தமையனார் வேலை செய்ததால் அவருடன் எனக்கு தொடர்பிருந்தது. அவரிடம் சென்று பிரதியைக் கொடுத்ததும், அவர் அட்டையிலே ஒரு பொலிஸ்காரரின் படத்தை வரைந்து

நாவலை வெளியிட்டார். அங்கே பல கடைகளிலும் புத்தகம் விற்பனைக்கு வைக்கப்பட்டது. கல்லூரியிலே நான் பேச்சுப் போட்டிகள், நாடகங்களில் பங்குபற்றியதால் ஓரளவு பிரபல மானவனாக இருந்தேன். புத்தகமும் ஒரு மாதத்துக்குள் நூறு நூற்றைம்பது பிரதிகள் விற்பனையாகிவிட்டது. அந்த நாட்க ளிலே இப்போது போலல்லாது பல தமிழ் பொலிஸ்காரர்கள் இருந்தார்கள். அவர்களில் சிலர் இதைப் படித்துவிட்டு என் னைத் தேடிக்கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டார்கள். நல்ல வேளையாக நான் வீட்டில் இல்லை. நான் அதற்கு முன்னரே இந்தியா சென்று படிக்கப் போகிறேன் என வீட்டிலே அனுமதி கேட்டிருந்தேன். அனுமதி கிடைக்கவில்லை. ஆனால் பொலி சார் வீடுதேடி வந்ததும் எனது தமையனார் 'இந்தியாவிற்கு போறதென்றால் போ' என்று அனுப்பிவைத்தார். நான் சென் னைக்குச் சென்று பல்கலைக்கழகப் படிப்பை மேற்கொள்வ தற்கும் அந்த நாவல்தான் காரணமாகியது'. கூறிவிட்டு வாய் விட்டுச் சிரித்தார்.

கவிஞரின் வெளியீடுகள் சிறுகதை, நாவல், சமூகம், சமயம், புவியியல், பாடநூல்கள், கவிதை என பல்வேறு வகைகளை யும் உள்ளடக்கியிருந்தாலும் அவற்றில் பெரும்பாலானவை கவிதை நூல்கள்தான். 'நான் நாவல், சிறுகதைகளுடன்தான் ஆரம்பித்தேன். அவை எனக்கு நிறைவையளிக்காததாற்றான் கவிதைகளில் இறங்கினேன்' எனக் கூறினார். 'பிரசுரமான எனது முதலாவது கவிதை ஈழகேசரி பத்திரிகையிலே வெளி வந்தது. சென்னைப் பல்கலைக்கழகத்திலே மாணவனாக இருந்தபோது அங்கு நடைபெற்ற ஒரு கவிதைப் போட்டி யிலே பங்குபற்றினேன். பரிசு கிடைக்கவில்லை ஆனால் ஆறுதல் பரிசு தந்து, சான்றிதழும் தந்தார்கள். அது எனக்கு மிகவும் ஊக்கமளிப்பதாக அமைந்தது. எனது கவிதைக்குக் கிடைத்த முதல் அங்கீகாரம் அதுதான். பின்னர் இந்தியாவில் பட்டம் பெற்றுத் திரும்பியபின், ஈழநாடு பத்திரிகையின் பத்தா வது ஆண்டு விழாவுக்காக ஒரு கவிதைப் போட்டி வைத்தார் கள். அதிலும் எனக்கு முதல் பரிசு கிடைத்தது.' ஏ.ஜே. கனக ரத்னா ஆசிரியராக இருந்தகாலத்தில் கூட்டுறவு பத்திரிகை யின் இருபந்தைந்தாவது ஆண்டு விழாவையொட்டி நடத்தப் பட்ட கவிதைப் போட்டியிலும் முதல் பரிசு பெற்ற கவிஞர், அந்தப் பரிசை மகாகவி உருத்திரமூர்த்தி அவர்களின் கையால் பெற்றதை பெருமிதத்துடன் நினைவு கூர்ந்தார். 'அதற்குப் பிறகு நான் கவிதைப் போட்டிகளில் பங்குபற்றுவ தில் அதிகம் ஆர்வம் காட்டவில்லை. அவ்வளவும் போதும் என்று எண்ணிவிட்டேன்.' என்று சிரித்தார்.

கவிதைகளின் மீதான ஈடுபாடும் ஆளுமையும் பிந்நாளில் 'கவியரங்கிற்கோர் கந்தவனம்' என இரசிகமணி கனக. செந்-திநாதனின் வாயால் புகழப்படக் காரணமாக அமைந்தன. 'கவியரங்கங்கள் மூலமாகத்தான் நான் மிதந்தேன்' எனக்கூ றிய கவிஞர் மேடைச் சொற்பொழிவுகளில் தான் ஈடுபட ஆரம் பித்தது தங்கம்மா அப்பாக்குட்டி போன்றவர்களின் அறிமுகம் கிடைந்த பின்னர்தான் எனக் கூறினார். கவியரங்கங்கள் மக் கள் மத்தியிலே பிரபலம் பெற்றிருந்த காலத்தையும், அந்தப் பிரபலத்திற்கு தானும் ஒரு காரணமாக அமைந்த வரலாற்றை யும் கவிஞர் சுவையாக அசைபோட்டார். 'அந்தக் காலத்திலே கவியரங்கங்கள் பண்டிதர்களின் கையிலேதான் இருந்தன. அவர்கள் பாடும் கவிகள் மிகவும் செழுமையானவையாக இருந்தாலும் மக்களை ஓராட்டி நித்திரையாக்கும் தன்மை கொண்டவையாக இருந்தன. அவர்களுடன் சேர்ந்து நான் பாடவில்லையென்றாலும் அதைக்கேட்கின்றபோது, அவர்க ளின் அளிக்கைமுறை எனக்குப் பிடிக்கவில்லை. படிப்படி யாக நான் அதில் ஈடுபட்டு, முதலில் மகாகவியின் தலைமை யில் பாடி, பின்னர் முருகையனின் தலைமையில் பாடி, பண்டி தர் கதிரேசன்பிள்ளை, பண்டிதர் நமசிவாயம் போன்றவர்க ளின் தலைமையில் பாடி, கனக. செந்திநாதனின் தலைமை யில் பாடி, பிறகு ஒரு காலகட்டத்தில் என்னுடைய தலை மைக்கு வந்தபோது நானாகவே ஒரு குழுவை அமைத்தேன்.



என்னையொத்த வயதுடைய சுந்தரம்பிள்ளை, நாகராஜன், குமாரசாமி, கவிஞர் ஐயாத்துரை ஆகியோரைக்கொண்ட குழுவை என்னுடைய தலைமையிலே அமைத்தேன். கவியரங் கங்களின் பொருளை மக்களுக்கேற்ற முறையில் எளிமை யாக்கி, அளிக்கைமுறையை மக்களைக் கவரும் வகையிலே அமைத்து கவியரங்கங்களை பிரபலமாக்கியவர்கள் நாங்கள் தான். இதன் விளைவாகத்தான் கவியரங்கமில்லாமல் ஒரு விழா நடக்க முடியாது என்ற நிலை தோன்றியிருந்தது. பட்டி தொட்டியெங்கும் கவியரங்கங்கள் நடைபெற்ற அந்த நாட்க ளில் ஏறக்குறைய இருபது ஆண்டுகள் - அறுபதுகள் முதல் எண்பதுகள் வரை - கவிதையுலகம் எங்கள் கைகளில்தான்



இருந்தது'. கவியரங்கங்களிலே கவிஞர் பாடிய பல கவிகள் பின்னர் நூலுருவும் பெற்றுள்ளன. 'கவியரங்கத்திலே நான் பாடிய கவியொன்றைத்தான் மெருகேற்றி 'கீரிமலையினிலே' என்ற குறுங்காவியமாக பின்னர் வெளியிட்டேன். 'பாடுமனமே' என்ற ஒரு தொகுப்பும் முக்கியமானது'

இலங்கைப் பல்கலைக்கழகத்திலே நாடகத் தகைமைச் சான்றிதழ் பெற்ற முதற் தொகுதி மாணவர்களில் கவிஞரும் ஒருவர். 2007-ம் ஆண்டு நடைபெற்ற மனவெளி கலையாற்றுக் குழுவின் பதின்நான்காவது அரங்காடலிலே இடம்பெற்ற கவிஞர் சிவசேகரத்தின் 'சாகாத சரித்திரங்கள்' என்ற கவிதா நிகழ்வை நெறியாள்கை செய்து அதில் நடிக்கவும் செய்தார். பன்னிரண்டாவது அரங்காடலில் இடம்பெற்ற குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'நரகோடு சுவர்க்கம்' உட்பட கனடாவில் மேடையேறிய சில நாடகங்களில் நடித்திருந்தாலும், நாடகங்களில் தான் அதிகம் கவனம் செலுத்தவில்லை என்பதை ஒப்புக்கொண்டார். 'பல தோணியில் கால்வைத்துப் பலனில்லை என்று கண்டபின், கல்வியுடனும் இலக்கியத்துடனும் நின்றுவிட்டேன்' எனக் கவிஞர் கூறினாலும், தனது மனதுக்கு மிகவும் நெருக்கமான கவியரங்கம் என்ற வடிவத்தை அவர் அவைக்காற்று கலையாகத்தான் பார்த்தார்;. 'கவியரங்கமென்பது வெறும் கவிதை மட்டுமல்ல. அது அசைவுகள், நடிப்பு, அளிக்கைமுறை அனைத்தும் இணைந்த ஓர் அரங்க நிகழ்வுதான்' என்பது அவர் கருத்து.

கல்வித் துறைக்கும் பாரிய பங்களிப்புக்களைச் செய்தவர் கவிஞர். இலங்கை அரசின் புவியியல் பாடத்திட்டக் குழுவின் அங்கத்தவராகவும், மலையகம், யாழ்ப்பாணம், வன்னி என பல்வேறு பகுதிகளிலும் ஆசிரியராகவும் அதிபராகவும் கல்விப் பணி ஆற்றியவர். பல ஆண்டுகளுக்கு முன் எழுத்தாளர் மாத்தளை சோமு கனடாவிற்கு வந்திருந்தபோது 'யாழ்ப்பாணத்தவர்கள் மலையகத் தமிழர்களுக்குச் செய்த தீங்குகளையும் துரோகங்களையும் நாங்கள் நினைவில் வைத்திருக்கும் அதேவேளை, என்போன்றதொரு மலையகத் தமிழன் எழுத்தாளனாக ஆவதற்கு கந்தவனம் போன்ற யாழ்ப்பாணத்து ஆசிரியர்கள் ஆற்றிய கல்விப் பணிதான் காரணம் என்பதையும் மறந்துவிடக் கூடாது' எனக் கூறியிருந்தார். அதை கவிஞருக்கு நினைவூட்டியதும் 'ஆமாம். சோமு என்னுடைய மாணவன்தான். மாத்தளை புனித தோமையார் கல்லூரிதான் எனக்குக் கிடைத்த முதல் ஆசிரிய நியமனம்' என்பது முதல் மாத்தளை அம்மன் மீது தான் பாடிய பதிகம் வீரகேசரியில் பிரசுரமானது வரை நினைவுகளை மீட்டார்.

அவருடைய எண்பத்தியோராவது நூல் எதுவாக இருக்கப்போகிறது எனக் கேட்டேன். 'தாய்வீடு இதழிலே தொடராக வந்த 'காதல் வாழ்க்கை' இப்போது காந்தளகத்தால் அச்சேற்றப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதுதான் பெரும்பாலும் அடுத்த நூலாக இருக்கும். அதைவிடவும் சில நூல்கள் அச்சிலே உள்ளன. அச்சேற்றவேண்டிய ஒரு பத்து நூல்களும் உள்ளன' என்று ஆரம்பித்தவர் இடைநிறுத்தி 'அதெல்லாம் இப்போ எதற்கு? அச்சிலே உள்ளவை, அச்சேற இருப்பவை பற்றியெல்லாம் இப்போது பேசக்கூடாது' என்று முடித்தார். தன்னைப்பற்றி தானே பேச விரும்பாதவர் கவிஞர். அவரைப் பற்றி 'நூற்றுக்கு நூறு' என்று தலைப்பிட்டு கட்டுரையெழுதும் வாய்ப்பு மிக விரைவிலேயே வரும். அதுதான் ஆசிரியர் கந்தவனத்திற்கு உகந்த மதிப்பளிப்பாக இருக்கும் என எண்ணியிருந்தேன். எனினும் தனது தொண்ணூறாவது வயதிலேயே, தொண்ணூறுக்கும் மேற்பட்ட புத்தகங்களை வெளியிட்ட நிலையில், கவிநாயகர் விடைபெற்றுக்கொண்டார். அவர் ஆன்மா இறைவனில் நிலைக்கட்டும்.



dushy.gnanapragasam@thaiveedu.com

# விநாயகப்பா வேந்தன்

- 'தேசபாரதி'
தீவகம் வே. இராசலிங்கம்



வெண்ணிலா ஒருநாள் முற்றும்
  விளையாடப் போதல் கூடும்
கண்ணிலான் புனிதம் விட்டுக்
  கடமையை மறத்தல் கூடும்
மண்ணில்எம் கவிதை மன்னன்
  மறைந்தனன் அகிலம் என்றே
எண்ணியே வாடு கின்றோம்
  இதயமே நோதல் கண்டோம்

விநாயகர் அருட்பா வைத்தோன்
  வியாபகம் அருளே பெற்றோன்
அநாதர வின்றி மக்கள்
  அல்லலும் அவதி கொள்ளும்
வினாவொடும் அமைதி வேண்டி
  விருப்புடன் தொழுதே நின்றார்
கனாவிலும் இடரே என்று
  கருதாது பயணம் வைத்தார்

எங்கெவர் வேண்டி னாலும்
  எந்தநா டெல்லாம் சென்றார்
திங்களாய்க் கனடா வாழ்த்துத்
  தேசியத் தமிழில் வென்றார்
பொங்கிடும் கனடா நாட்டின்
  பெருந்தமிழ் அறிஞன் என்றே
மங்களம் பொங்க வைத்தார்
  மதிப்பொடும் திருவாய் நின்றார்

தெய்வமும் ஆக மத்தின்
  திருமுறை தொழுதும் நின்றார்
மெய்யொடும் முயற்சி கண்டால்
  வெற்றியே கிடைக்கும் என்றார்
கைவளைக் கனகப் பெண்ணாள்
  கடவுளின் மகிமை யோடும்
தைமகள் தமிழாய்ப் பூமித்
  தங்கமாய்க் கவிசெய் தாரே

நித்திலம் தமிழே நெஞ்சில்
  நிலைத்திடும் அறமே கொண்டார்
முத்தமிழ் இயலும் பாட்டு
  மோகன இசையும் செந்தேன்
பத்தியம் கொடுத்த மேதை
  படைத்திடும் கழகம் வைத்தார்
எத்திசை எங்கும் தமிழை
  இயற்றினார் வணக்கம் செய்வோம்!



rasalingam@thaiveedu.com



## என் தந்தை எனக்களித்த நந்தவனம்

# கவிஞர் வி. கந்தவனம்

### - 'வெற்றிமணி' மு.க.சு. சிவகுமாரன்

எனது தந்தை அமரர் மு.க. சுப்பிரமணியம் அவர்கள் 1950 ஆண்டு இலங்கையில் நாவலப்பிட்டி நகரில் ஆரம்பித்த, சிறுவர் மாத இதழ் வெற்றிமணி 2025 ஆண்டு 75 வருடத்தை நெருங்கும் நேரம் இது.

வெற்றிமணியுடன் நெருக்கமாக இன்றுவரை இருந்தவர் கவிஞர் வி. கந்தவனம் அவர்கள்.

என் தந்தை எனக்கு விட்டுச்சென்ற பெரு விருட்சமாக கவிஞர்.

நிழலாய் தொடர்ந்தவர் பற்றிய பல நிஜங்களை பகிர்வதில்



மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

1966 ஆண்டு முதல் கவிஞர் வி. கந்தவனம் ஐயா அவர்களை நான் அறிவேன், கவிஞரும், இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்களும் குரும்பசிட்டியில் ஒரே தெருவில் ஒரு ஆறு வீடு தள்ளி அருகருகே வசித்தார்கள்.

அப்போது எனது தந்தையார் காலை பாடசாலைக்கு புறப்பட முன் வெற்றிமணிக்கு கவிஞரும், இரசிகமணியும் எழுதும் கட்டுரைகளைத் தந்து, - வெற்றிமணி சஞ்சிகையில் கட்டுரை, கவிதை அச்சுக்கு வரும் முன், அதனை அச்சுக்கோர்த்து, ஒரு பிரதி தருவார்கள், அதனை சரிபார்த்த பின்பே அச்சடிப்பார்கள் - அவர் அவர் ஆக்கங்களின் அச்சுக்கோர்த்த பிரதிகள் சரிபார்க்க கொடுப்பதற்கு கவிஞர் வீட்டுக்கும் இரசிகமணி வீட்டுக்கும் செல்வேன்.

அதிகமாக இரசிகமணி காலைச் சந்திப்பை கவிஞருடன் முடித்து வாயில் வேப்பம் குச்சியுடன், வீடுதிரும்பி நடந்தபடி இருப்பார்.

நான் அப்படியே சைகிளில் ஒரு மிதி இறுக்கி மிதித்து, இரசிகமணியிடம் கொடுத்துவிட்டு, கவிஞர் வீட்டு வாசலுக்கு வருவேன்.

கவிஞர் வீட்டுக்குள் வெளிச்சம் குறைவு என்று, வெளியில் தொங்கிய சிறு கண்ணாடியில் முகம் சவரம் செய்தபடி இருப்பார்.

அவர் மீசையில் கைவைக்க நான் மணி அடிக்க, சரியாக இருக்கும். இந்த வெற்றிமணியை இந்த மனுசன் விடுகிறதாக இல்லையே! என்று சொன்னபடி திரும்புவார்.

எந்தப் பெரிய புள்ளியாக இருந்தாலும், மிக நெருக்கமாக நின்று பார்த்தால் புள்ளிகள் தெரிவதில்லை. அது போல் நெருக்கமானவர்கள் என்றால் அந்த மனுசன், இந்த ஆள் என்று கதைப்பது எனக்கு புதிராக இல்லை. அதுவும் ஒரு நெருக்கத்தின் வெளிப்பாடே என்று உணர்வேன்.

நான் தயங்கியபடி சரிபார்க்க (proof reading) பேப்பரை நீட்டுவேன், ஒருகையில் 7o'clock Razor உம் மறுகையில் தனது கட்டுரையையுமாக மீசை வெட்டுவதுபோல் கவனமாகப் பிழைகளை வெட்டப் பார்ப்பார்.

பெரும்பாலும் பிழைகள் இருக்காது. கமாக்கள், முற்றுப்புள்ளிகள் பிழையிருந்தால் ஏதோ நான் பிழை விட்டது போல என்னை முறைப்பார்.

அப்படியே தவமணி பென்சிலைத்தா என்று மனைவியைக் கூப்பிட்டு, கமா, புள்ளி இவற்றை இட்டு தருவார்.

எனக்கு புள்ளிகள், கமாக்கள் குத்தும்போது என் மண்டையில் குத்துவது போல் இருக்கும். அவருக்கும் பாடசாலை போகும் அவசரம், என் தந்தைக்கும் பாடசாலை போகும் அவசரம். எனக்கும் 14 வயது. அதைவிட அவசரம்.

வீட்டுக்கு நான் திரும்பினால் அம்மா என் அப்பாவை 'நான் மகனை பால்காரன் போல் வீடு வீடாக மணி அடிக்கவா பெத்தனான்' என்று எனக்கு ஆதராவாக கத்துவா.

இவ்வாறு எனக்கும் கவிஞருக்கும் ஒரு பால்காரனுக்கு உரிய



உறவுபோல் அன்று இருந்தாலும், பின்னர் நான் வளர வளர எமக்குள்ளான உறவு வலுவடைய ஆரம்பித்து வேருக்கும் மரத்திற்குமான உறவாகிற்று.

நான் களனி பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவில் ஓவியம், சிற்பம் கற்க ஆரம்பித்ததும் கவிஞர் மற்றும் இரசிகமணி இவர்கள் எல்லாம் மாலையில் அவர்கள் எல்லோரும் கூடும் வாசக சாலையில் (சன்மார்க்க சபையில்) என்னைப் பற்றியும் கதைக்க ஆரம்பித்தார்கள்.

நான் படித்து முடிப்பதற்கு முன்பே எனது நவீன ஓவியங்க ளில் ஈர்க்கப்பட்ட கவிஞர், தனது வீட்டு யன்னலுக்கு இரும் பில் கிறில் செய்ய ஒரு படம் வரைந்து தரவேண்டும், பரதநாட் டிய உருப்படி என்றால் நல்லது என்றார். நான் எனக்கு இயற் கையான ஓவியம் என்றால் எனக்கு வேலைபோல் இருக்கும், நவீன ஓவியம் என்றால் ஆர்வத்துடன் செய்வேன் என்றேன்.

அவர் தனக்கும் வேலைபோல் கவிதை எழுதவராது, உங்க ளுக்கு உரிய பாணியில் சுதந்திரமாக வரையலாம். நீ படிக் கும் படிப்பு பற்றி வாசகசாலையில் மு.க.சு சொன்னதை வைத்தே எனக்கு உங்கள் மூலம் அதனை செய்யலாம் என்ற எண்ணம் தோன்றியது என்றார். அடுத்த வாரமே அந்த கலை நயம் மிக்க இரும்பு கிறில் செய்வதற்கு என்னை யாழ்ப்பா ணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள ஒரு இரும்பு பட்டறைக்கு அழைத்துச் சென்றார்.

அங்கு பட்டறையின் உரிமையாளரிடம் என்னைப்பற்றி சிறு அறிமுகம் செய்து விட்டு, எங்கு அந்த சித்திரம் வரைய வேண் டும் என்று கேட்க, அவரும் நிலத்தில்தான் வரைய வேண்டும் நாம் அதன்மேல் கம்பியை வளைத்து வளைத்து சித்திரம் சொல்லும் வடிவில் கிறில் அமைப்போம் என்றார்.

நான் நிலத்தில் வரையத் தொடங்கினேன். கவிஞர் பட்டறை உரிமையாளருடன் இலக்கியம், நாவல், சிறுகதை என்று பல வற்றை கதைத்த வண்ணம் இருந்தார்கள்.

இருவரிலும் இலக்கிய ஈடுபாடு நிறைந்து இருந்ததை அவர்க ளது கதைகளும், ஒருவர் கருத்தை ஒருவர் ஆய்வுக்கு உட்ப டுத்தி சமரசம் ஆவதும் எனக்குப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது.

சித்திரம் தீட்டி முடிந்ததும் பட்டறை உரிமையாளர், இவன் ஒரு இடத்திலும் அழிக்காமல் வரைந்து உள்ளான் என்றார். அதற்கு கவிஞர் நான் கண்ணனை வரைய அழைத்து வர வில்லை, அவன் மனதில் உள்ளதை ஒப்புவிக்கவே அழைத்து வைத்தேன் என்றார்.

பட்டறை உரிமையாளர் எனது தோளில் தட்டி என் முகம் பார்த்து சிரித்தார். நானும் கவிஞரும் பட்டறையை விட்டு வாச லுக்கு வரும்போது கவிஞரைக் கேட்டேன், உங்களுக்கு தெரிந்த தொழில் அதிபர்களும், இலக்கியம் கற்றவர்களா? என்றேன்.

டே கண்ணன்! அவர்தான்டா டானியல் என்றார்.

என்னைத் தட்டிக் கொடுத்தது, இரும்புக் கை அல்ல, இர சனை மிக்க ஒரு இலக்கியவாதியின் கை என மகிழ்ந்தேன்.

கவிஞர் என்றால் என் மனதில் ஒரு சித்திரம் அன்றே உண்டு. கவியரங்கங்கள் பட்டி மன்றங்கள், இன்று தொலைக்காட்சி யில் வருவதுபோல் அன்று கவியரங்கம் நடந்த காலம்.

ஒரு தலைப்பில் பல கவிஞர்கள் எதிரும் புதிருமாக தமது கவிதைகளைப் படிப்பார்கள்.

அன்று கவியரங்கம் என்றால், கவிஞர் வி. கந்தவனம், கவிஞர் நாகராஜன், காரை. செ. சுந்தரம்பிள்ளை, ஐயாத்துரை, கவி ஞர் கதிரேசர் பிள்ளை..., இவர்கள் இருப்பார்கள்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாணி.

கவிஞரின் நகைச்சுவை, நக்கல் தூக்கலாக இருக்கும். சில நேரம் கவிதை சொல்லும்போது ஒரு இடைவெளி விட்டு, அமைதியாக மேலை நிமிர்ந்து பார்வையாளர்களை அளந்து விட்டு, அடுத்த சொல்லைச் சொல்வார். அப்போ வரும் வெடிச் சிரிப்பு நாம் வீடு திரும்பும் வரை வெடித்தவண்ணம் இருக்கும்.

அவர் பேச்சுக்கு இடையே, கவிதைக்கு இடையே விடும் சிறு

சிறு இடைவெளி மௌனங்கள்... அவை வார்த்தைகளை மிஞ்சிய அர்த்தங்களை தரவல்லன. அந்த வித்தைகளை நன்கு அறிந்தவர் கவிஞர் வி. கந்தவனம் அவர்கள்.

அன்று நான் கவிஞரின் அறிமுகம் பெற்று இருக்கவில்லை என்றால், நான் வெற்றிமணியை ஆரம்பிக்க துணிந்து இருக்க மாட்டேன். சில சமயங்களில் அவர் எனது தந்தையின் ஸ்தானத்திலும் இருந்து அறிவுரை வழங்கி உள்ளார்.

1994-ம் ஆண்டு வெற்றிமணி பத்திரிகை ஆரம்பித்தேன். இப்போது யேர்மனியில் 30 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

இலக்கிய ஆர்வலர்கள் பலராலும் 1994-ம் ஆண்டு கனடா நாட்டில் கவிஞர் வி. கந்தவனம் அவர்களுக்கு மணிவிழா




எடுத்து மகிழ்ந்த நேரம்தான், யேர்மனியில் வெற்றிமணி பத்திரிகை உதயமானது.

1995-ம் ஆண்டு கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் யேர்மனி வந்து, வெற்றிமணி ஓராண்டு பூர்த்தி விழாவில் கலந்து சிறப்பித்தார்.

நாம் வெற்றி மணி விழாவை, கவிஞருக்கு மணிவிழாவாகக் கருதி கொண்டாடி மகிழ்ந்தோம்.

தாயகத்தில் எனது தந்தையின் காலத்தில் வெற்றிமணியில் கவிஞர் எழுதிய பரீட்சையில் சித்தியடைவது எப்படி, கவிஞரின் கீரிமலையினிலே கவிதை நூலுக்கு இரசிகமணி கனக செந்திநாதன் அவர்கள் எழுதிய நூல் நயம் ஆகியன வெற்றி மணி வெளியீடுடாக வெளிவந்தன.

அன்று ஒரு நூலுக்கான நூல் நயம் நூலாக வெளிவந்த சிறப்பு கவிஞருக்கும் இரசிகமணிக்கும் வெற்றிமணிக்கும் பெருமை சேர்த்த ஒன்றாக கருதப்பட்டது.

தந்தையின் வழியில் வெற்றிமணி, யேர்மனியில் கவிஞர் அவர்கள் எழுதிய 'எழுத்தாளன்' என்ற கட்டுரைகளை தொகுத்து முதல் நூலாக வெற்றிமணி வெளியிட்டது.

விழாவில், அதாவது கவிஞர் அவர்களது மணி விழாவில் வெளியிட்டு தனது வெளியீட்டு பாரம்பரியத்தை மீண்டும் ஆரம்பித்தது. எழுத்தாளன் என்ற கட்டுரை அன்று லண்டனில் ஈழகேசரியில் தொடராக கவிஞர் எழுதியது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றுவரை 28 நூல்களை வெற்றிமணி யேர்மனியில் வெளியீடு செய்துள்ளது. வெற்றி மணி விழா கவிஞருக்கு மணி விழாவாக மகுடம் சூட்டிய பின்னர், வருடாவருடம், யேர்மனியில், வெற்றிமணி விழாக்கள், பரதநாட்டிய அரங்கேற்றங்கள், நூல் வெளியீட்டு நிகழ்வுகள் என பல நிகழ்வுகள் அவரது ஆற்றலை உள்வாங்கின.

அதிக விழாக்களில் கவிநாயகர் வி. கந்தவனம் ஐயா கலந்து கொண்டது வெற்றிமணிக்கு பெருமகிழ்ச்சி தந்தது.

யேர்மனியில் கவிஞர் அவர்களது ஆழமான இலக்கிய அறிவினை அவர் கலந்துகொண்ட விழாக்கள் மூலம் மக்கள் அறிய முடிந்தது.

மேலும் யேர்மனியில், கலை இலக்கிய சமூகத் தொண்டாற்றுபவர்கள் பலரையும் அவர் தான் பங்குபற்றும் மேடையில் கௌரவிக்க தவறுவதில்லை.

2002-ம் ஆண்டு யேர்மனியில் வெற்றிமணி கவிஞர் அவர்களுக்கு எடுத்த பாராட்டு விழாவில் 'யேர்மனியில் கவிஞர் வி. கந்தவனம்' என்ற நூலை வெற்றிமணி வெளியீடாக வெளியிட்டது.

வெற்றிமணி வெளியீடாக வரும் 'சிவத்தமிழ்' சஞ்சிகையின் கௌரவ ஆசிரியராக கவிஞரே உள்ளார்.

கவிஞரிடம் கற்றது நூறு என்று ஒரு கட்டுரையை 'யேர்மனியில் கவிஞர் வி. கந்தவனம்' என்ற நூலில் நான் எழுதியிருந்தேன். அதில் ஒன்றைக்கூறி முடிக்கிறேன்.

'ஒருவரை வாழ்த்தும் செய்தியில், அவரை வாழ்த்தும் போது அவரது குறைகளை ஒரு போதும் குறிப்பிட்டு வாழ்த்தாமல் முழுமையாக நிறைகளை பேசி வாழ்த்த வேண்டும். அப்படிக் குறை சொல்லி பின் நிறைகள் சொல்லி வாழ்த்துவது அழகல்ல. வாழ்த்துச் செய்தி வேறு, விமர்சனம் என்பது வேறு என்பதனை உணர வேண்டும்' என்பார்.

தாய்வீடு டிலிப்குமார் அவர்கள், கடந்த 5-ம் திகதி தொலைபேசியில் தொடர்பு கொண்டு கவிஞர் பற்றி ஒரு கட்டுரை தர முடியுமா என்றார். எந்த தரவுகளும் தேடி எடுக்காமல் நின்ற இடத்தில் நின்று 4 பக்கம் எழுதலாம். உடனே சம்மதித்தேன்.

கவிஞர் பற்றிய என் நினைவலைகள் ஒரு பதிவாக, அந்த இனிய நினைவுகளை எழுதிய வண்ணம் இருந்த வேளை, மார்ச் 11, 2024 அன்று அவர் இயற்கை எய்திய செய்தி வந்தது. என்னவென்று நம் உறவைச் சொல்வேன்.

புகழ் பூத்த கந்தவனம் நந்தவனம்,
தமிழ் மணம் என்றும் நறுமணமாக வீசும்.
வீசட்டும்



sivakumaran.mks@thaiveedu.com



# ஓர் இளைஞனாகவே வாழ்க்கையைச் சுவைத்தவர் கவிநாயகர்

## - ஆர்.என். லோகேந்திரலிங்கம்

கவிநாயகர் கந்தவனம் அவர்கள் கடந்த 36 ஆண்டுகளாக கனடாவில் வாழ்ந்தவர் என்பதோடு மாத்திரமல்ல, நூற்றுக்கணக்கானவர்களால் தினந்தோறும் நினைக்கப்பட்டவராகவே திகழ்ந்தார் என்பதும் அழுத்திச் சொல்லவேண்டிய விடயமாகும். பல வழிகளில் கவிநாயகர் அவர்கள் கனடியத் தமிழர்களுக்கு வேண்டப்பட்டவராக விளங்கினார். நட்புக்காக, நல்ல விடயங்களை அறிந்து கொள்வதற்காக, ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி தொடர்பான விளக்கங்களைப் பெற்றுக்கொள்வதற்காக, தாயகத்தில் உள்ள ஆலயங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்காக, அங்கிருந்து தமிழ் வளர்த்த தமிழ் அறிஞர்கள் தொடர்பான விடயங்களைத் தெரிந்து கொள்வதற்காக, கவிதை இலக்கணம் பற்றி கேட்டறிந்து கொள்வதற்காக, அதற்கும் மேலாக நகைச்சுவைகளைப் பகிர்ந்து கொண்டு நாமும் அவரும் மகிழ்ச்சியில் மூழ்கிக் கொள்வதற்காக... என பல காரணங்களால் அவரது பெயரை நாம் தினமும் உச்சரித்து வந்தோம்.

'கவிநாயகர்' கந்தவனம் என்ற பெயர் உலகெங்கும் வியாபித்திருந்தது என்று கூறுவதிலும் பார்க்க, இன்னும் எத்தனையோ ஆண்டுகளுக்கும் அப்படியே இருக்கத்தான் போகிறது என்பதுதான் உண்மை. ஒரு நூற்றாண்டை எட்டிப் பிடிக்க எத்தனித்திருந்த அவரது வாழ்க்கைப் பயணத்தில் சற்று முன்னதாக அவரை நாம் இழக்க வேண்டி ஏற்பட்டது எமக்குப் பெரும் வேதனையை ஏற்படுத்தியிருக்கிறது.

அவரது மறைவு என்பது குடும்பத்தாரோடு ஓரளவு தொடர்பில் இருந்தவர்களால் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாக இருக்கையில் 11-03-2024 அன்று மாலை அவரது உடலை விட்டு உயிர் பிரிந்தது. அந்த நேரம் தொடக்கம் அவர் பற்றிய சிந்தனைகளோடும் அவரது இறுதிக் கிரியைகளைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பும் நண்பர்களுக்கு தகவல்களைத் தெரிவித்தவாறும் அவர் தொடர்பாக எமக்குக் கிடைக்கின்ற கட்டுரைகளை படித்துப் பார்ப்பதுமாக ஒரு வாரம் நெருக்கடிகளுக்கு மத்தியில் கடந்து சென்றது.

இவ்வாறிருக்க, கவிநாயகர் அவர்கள் எனது இல்லத்திலிருந்து மிகக் குறுகிய தூரத்தில் தான் வாழ்கின்றார் என்ற பரவசத்தோடு எழுதப்பட வேண்டிய இக்கட்டுரையை, அவரை இழந்த துயரம் சற்றும் தணியாமல் இருக்கையில் வடிக்கின்ற போது இது அவருக்கான ஒரு 'காணிக்கையாகவும்' அமைய வேண்டும் என்பதும் எனது அவாவாகும்.

மறைந்த அதிபர் 'மகாஜன' பொ. கனகசபாபதி அவர்களும் கவிநாயகர் அவர்களும் எம்மில் பலருக்கும் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக எமது இரு கண்கள் போன்றே அமைந்திருந்தார்கள். இருவருமே பல மண்டபங்களில் இணைந்தே இருப்பார்கள். நகைச்சுவைகளை மேடையில் பகிர்ந்து கொள்வதும் இடையில் சிரித்தபடி கண்டனங்களைப் பகிர்ந்து கொள்வதும் அவர்கள் இருவருக்குமே உரித்தான அறிவுச் செறிவு என்பதையும் நாம் விளங்கிக்கொள்வோம்.

கவிநாயகர் கந்தவனம் அவர்களை நான் சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னரேயே அறிந்தும் தெரிந்தும் பழகியும் வந்



துள்ளேன் என்பதை நினைக்கும்போது, அந்த நினைவுகள் தருகின்ற பெருமையும் பூரிப்பும் அளவில் அடங்காதவை. இந்த இடைப்பட்ட காலத்தில் 1979-ம் ஆண்டு தொடக்கம் 1988-ம் ஆண்டுவரை அவர் பிறநாடு ஒன்றுக்கு பணியின் நிமித்தம் சென்ற காலப்பகுதியில் அவரைப்பற்றிய தகவல்கள் அதிகம் கிடைக்காமல் இருந்தாலும் 1979-ம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியிலும், பின்னர் நான் கனடாவில் குடியேறிய 1990-க்கும் பிந்திய காலத்திலிருந்து இறுதி நாள் வரையிலும் அவர் மனதில் நான் 'இடம்' பிடித்திருந்தேன் என்பதை நினைக்கும் போது அது கிடைத்தற்கரிய பேறு என்பதும், சாதாரணமான ஒருவனான எனக்கு கிட்டிய பெரும் 'வரம்' என்பதும் எனக்கு பிரகாசமாகத் தெரியும் உண்மையாகும். அந்த அங்கீகாரத்தின் பெறுமானத்தை பல தடவைகள் உணர்ந்து அனுபவித்துள்ளேன்.

எமது பள்ளி நாட்கள் கடந்து பின்னர் பிற தேடல்கள் கொண்டவனாக படிப்பகங்களை நாடிச் சென்று நூல்களையும் பத்தி



ரிகைகளையும் சஞ்சிகைகளையும் தினமும் வாசிக்கும் பழக்கத்தை கையில் எடுத்த காலத்தில் கவிநாயகர் கந்தவனம் போன்றவர்களின் கலை, இலக்கியப் பங்களிப்பு மற்றும் சமூகம், சமயம் சார்ந்த ஈடுபாடு ஆகியவற்றை அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டுகின்றது. குறிப்பாக அந்த நாட்களில் பல இடங்களில் நடைபெற்று வந்த 'யாழ்ப்பாணக் கவியரங்குகள்' என் போன்ற கவிதைச் சுவைஞர்களை ஈர்த்தன. அந்த கவியரங்கு மேடையில் அப்போதும் 'கதாநாயகராக' விளங்கியவர் எங்கள் கவிநாயகர் தான். அவரது சக கவிஞர்களாக விளங்கிய அரியாலையூர் ஐயாத்துரை, இ. நாகராஜன், காரை சுந்தரம்பிள்ளை, புலவர் பார்வதிநாத சிவம் உட்பட பத்துக்கும் மேற்பட்ட கவிஞர் பெருமக்கள் இருந்த கவியரங்க அணியில், மாதத்தில் சில நாட்கள் நாம் கண்டும், கேட்டும் மகிழும் இலக்கியச் சந்தர்ப்பங்களை எமக்கு வழங்கினார்கள். சில இடங்களில் எம்போன்ற பார்வையாளர்கள் இந்த அற்புதக் கவிஞர்களின் அரிய கருத்துகளை வெறும் தரைகளில் கூட அமர்ந்திருந்து கேட்டு மகிழ்ந்தோம் என்பது பலராலும் நம்ப முடியாமல் இருக்கும்.

அந்தக் காலப்பகுதியில் தான் நாமும் இவ்வாறான கவிஞர்களாக மேடையில் தோன்றி நல்ல கருத்துக்களை மக்களுக்கு சொல்ல வேண்டும் என்று எண்ணியதுண்டு. கவிநாயகர் தலைமை தாங்குகின்ற கவியரங்குகளின் மீது கொண்ட நாட்டம், எனக்கு சமூகம் பற்றிய விழிப்பை ஏற்படுத்தியது. அன்றைய நாட்களில் எரியும் பிரச்சினைகளாக விளங்கிய பல விடயங்களை அழகிய சந்தக் கவிதைகள் மூலம் மக்களுக்கு எடுத்துச் சொல்லுகின்ற உத்திகளை கற்றுக்கொள்ள நாமும் முனைந்தோம். இதனால் கவிநாயகர் உட்பட அக்காலக் கவியரங்குக் கவிஞர்கள் அனைவருமே எமது கதாநாயகராகவே காட்சியளித்தார்கள்.

இவ்வாறான காலப்பகுதியில் எம்மில் பலர் புதுக்கவிதைகள் எழுதுவதில் நாட்டம் கொண்டு அதில் தீவிரமாக செயற்படத் தொடங்கினோம். யாழ்ப்பாணத்தில் மறைந்த டேனியல் அன்ரனி. ராதேயன் போன்றவர்களின் சிந்தனையின் விளைவாக 'செம்மலர்கள் இலக்கிய வட்டம்' நிறுவப்பட்டது. தொடர்ந்து சஞ்சிகைகளும் புதுக்கவிதைத் தொகுப்புக்களும் யாழ்ப்பாணத்திலிருந்து நிறையவே வெளிவரத் தொடங்கின. இதன் மறுபக்கத்தில் 1966-ம் ஆண்டு நிறுவப்பட்ட 'யாழ் இலக்கிய வட்டமும்' கவிநாயகர் கந்தவனம், செம்பியன் செல்வன், புலவர் பார்வதிநாதசிவம் போன்ற பலரின் தலைமைத்துவத்தோடு இயங்கிக்கொண்டு வந்தது.

இந்த காலப்பகுதியில், நான் 1975-ம் ஆண்டில் கொழும்புக்கு எனது உயர்கல்வி காரணமாக செல்லவேண்டி ஏற்பட்டது. யாழ்ப்பாணத்தில் என்னை ஈடுபடுத்திக்கொண்ட கலை இலக்கியத் தேடல், வாசிப்பில் ஆர்வம், இலக்கியவாதிகளோடு பழகுவதற்கு கிட்டிய வாய்ப்புகள், கவிதைகள் மற்றும் சிறுகதைகள் எழுதும் அளவிற்கு எனக்குள் எழுந்த 'துணிச்சல்' ஆகியவையும் என்னோடு சேர்ந்து கொழும்புக்குப் பயணித்தன.

அங்கு நான் 'நேரம் கிடைக்கும் போது' என்றில்லாமல் பெருமளவு நேரத்தை கலை இலக்கியம் மற்றும் எழுத்தாளர்களைச் சந்திப்பது, கூட்டங்களுக்குச் செல்வது என, கொழும்பும் எனக்கு 'கொழுகொம்பாக' மாறியது.

அந்த நாட்களில் தான் எனக்கு கொழும்பில் தினபதி பத்திரிகையில் பணியாற்றிய கவிஞர் ஈழவாணன் அவர்களது தொடர்பும் நட்பும் கிட்டியது. அவரது துணைவியார் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் உறவினர் என்ற காரணத்தால் அவர் பற்றிய தகவல்களையும் நாம் எமது உரையாடல்களில் சேர்த்துக்கொள்வோம்.

கவிஞர் ஈழவாணன் அவர்கள் புதுக் கவிதைகளில் ஆர்வம் கொண்டிருந்தாலும் புதுக் கவிதைகளை எழுதுபவராக இருந்தாலும், நல்லதோர் சந்தக் கவிஞர். கவிதை இலக்கணத்தை பின்பற்றும் ஒருவராக எனக்குத் தெரிந்தார். ஒரு நாள் கவிஞர் ஈழவாணன் அவர்கள் என்னிடம் ஒரு புதிய விடயத்தை பகிர்ந்து கொண்டார். 'அக்னி' என்னும் காலாண்டு கவிதை இதழை தொடங்க இருப்பதாகவும் அதற்கு என்னை உதவி ஆசிரியர்களில் ஒருவராக இணைத்துக் கொள்ள விரும்புவதாகவும், கவிஞர் மேமன் கவி அவர்களும் தன்னோடு இணைந்து கொள்ள இருப்பதாகவும் தெரிவித்தார்.

1974-ம் ஆண்டு போலிகள் என்னும் புதுக்கவிதைத் தொகுதியை வெளியிட்ட பின்னர், எனக்கு இவ்வாறான ஒரு இலக்கியப் பொறுப்பு தரப்பட்டது என்னை உற்சாகப்படுத்தியது. ஈழவாணன் அவர்கள் ஏற்கனவே பலரோடு தொடர்பு கொண்டு 'அக்னி' இதழுக்கான கவிதைகளை கேட்டிருந்ததால் தபால் மூலமாக கவிதைகள் பல வந்து சேரத் தொடங்கின. கவிதை

கள் வந்த தபால் உறைகளைத் திறந்து கவிதைகளை வாசிப்பது அவற்றை அட்டவணைப்படுத்துவது போன்ற பணிகளை நாம் இணைந்து செய்து கொண்டிருந்த போது ஒரு நாள் க-வி நாயகர் கந்தவனம் அவர்களுடைய கவிதைகள் இரண்டு தபாலில் வந்திருந்ததை பார்த்து ஆச்சரியப்பட்டு 'இவரை தங்களுக்குத் தெரியுமா? என்று ஆவலுடன் கேட்டேன். தனக்கே இயல்பான சிரிப்பொன்றுடன் கவிஞர் ஈழவாணன் கவிநாயகரைப் பற்றி எனக்குச் சொல்லத் தொடங்கினார்.

'கவிஞர் கந்தவனம் அவர்கள் மாத்தளையில் ஆசிரியராக பணியாற்றிய போது அவரது கவிதைளை நான் தினபதி வார இதழில் பிரசுரித்திருந்தேன். அவரது அழைப்பின் பேரில் மாத்தளைக்குச் சென்று அவரது வீட்டில் ஒரு நாள் தங்கியிருந்து கவிதை மற்றும் தமிழ் இலக்கியம் பற்றி பேசிப் பகிர்ந்து கொண்டோம். தற்போது அவர் யாழ்ப்பாணம் சென்று விட்டார்.' என்றார்.

'அக்னி' இதழ் 1975-ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் வெளிவந்தது. முதலாவது இதழுக்கு நல்ல வரவேற்பு. அதன் வெளியீட்டு விழா கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

சில வாரங்களுக்குப் பின்னர் நான் விடுமுறையில் யாழ்ப்பாணம் செல்ல இருந்தபோது 'நானும் யாழ்ப்பாணம் வருகின்றேன். அக்னி முதலாவது இதழுக்கு கவிதைகள் தந்தவர்களுக்கு நேரடியாகவே சென்று இதழ் பிரதிகளை வழங்குவோம்' என்றார் கவிஞர் ஈழவாணன்.

அடுத்த வாரமே யாழ்ப்பாணத்தில் குரும்பசிட்டியில் அமைந்திருந்த கவிநாயகரின் இல்லத்தில் அவரைச் சந்திப்பதற்காக, திருநெல்வேலியிலிருந்து துவிச்சக்கர வண்டியில் 'டபிளாகப்' புறப்பட்டோம். எனது வீடும் ஈழவாணன் அவர்கள் துணைவியாரின் வீடும் திருநெல்வேலியில் இருந்ததால் எமது யாழ்ப்பாணப் பயணத்தில் பல விடயங்களை விரைவாகச் செய்து முடிக்கக் கூடியதாக இருந்தது.

குரும்பசிட்டியில் உள்ள கவிநாயகரின் வீட்டைக் கண்டுபிடித்து அங்கு சென்ற போது மாலை 4.00 மணி இருக்கும். எம்மை எதிர்பார்த்து இருந்தபடியால் வாசலுக்கு வந்து கவிஞர் ஈழவாணனையும் என்னையும் வீட்டுக்குள் அழைத்துச் சென்றார். அப்போது எம்மை உபசரிப்பதில் துணைவியார் தவமணி அவர்கள் மிகுந்த அக்கறை காட்டினார்.

அன்று சில மணி நேரம் கவிநாயகரோடு இருந்து விட்டு திருநெல்வேலிக்கு திரும்பினோம். அன்றிலிருந்து அவர் 1979-ம் ஆண்டு தென்னாபிரிக்கா செல்லும் வரை அவரது கவியரங்குகளுக்குச் செல்வதும் சில வேளைகளில் யாழ் இலக்கிய வட்டம் நடத்துகின்ற விழாக்களுக்கு பார்வையாளனாகச் சென்று அவரோடு உரையாடுவதும், அவர் அன்பாக 'தம்பி' என விழித்து என் மீது கொண்ட அக்கறையை காட்டுவதையும், அவற்றினால் இன்புற்றவனாக இருந்ததையும் என்னால் இன்றும் உணரமுடிகின்றது.

நான் கனடாவில் கால்பதித்த மார்ச் 1990 முதல் வாரத்திலேயே 'கந்தவனம் மாஸ்டர்' இங்கு தான் இருக்கின்றார் என்ற செய்தி எனக்கு கிட்டியது. எனவே அவரைச் சந்திக்கப்போகும் நாளிற்காக காத்திருந்தேன். எனது எழுத்துப் பழக்கத்திற்கு தீனி போடும் வகையில் இங்கும் பத்திரிகைகள் மற்றும்





சஞ்சிகைகள் விரிந்து கிடந்தன. தாயகம் வாரப் பத்திரிகையில் வாரா வாரம் எழுதும் ஒருவனாகவும் 'உலகத் தமிழர்' பத்திரிகைக்கு ஆக்கங்களை அனுப்புபவனாகவும் நான் இயங்கிக்கொண்டிருந்தேன்.

அப்போது எம்மிடத்தில் கைத்தொலைபேசி இருக்கவில்லை. ஒரு நாள் எனது வீட்டு இலக்கத்திற்கு கவிநாயகர் கந்தவனம் அவர்கள் தொலைபேசியில் அழைத்தார். 'தம்பி' நீங்கள் இங்கு வந்திருப்பதை அறிந்தேன். உலகத்தமிழர் பத்திரிகை நடத்திய கவிதைப் போட்டியில் தாங்கள் இரண்டாம் பரிசு பெற்றதை பார்த்தேன்' என்று அந்த உரையாடல் தொடர்ந்தது. கவிஞர் ஈழவாணன் மற்றும் கவிஞர் புதுவை இரத்தினதுரை பற்றியெல்லாம் விசாரித்தார். ஆமாம்! எனக்குள் ஒரு புதிய உற்சாகம் உருவெடுக்கத் தொடங்கியது. கவிநாயகர் போன்றவர்கள் வாழ்கின்ற தேசத்தில் எமக்கு இனி 'வேலைகள்' அதிகரிக்கப்போகின்றன. எம்மைத் தட்டிக்கொடுக்க பல கல்விமான்கள் உள்ளார்கள் என்று எண்ணினேன். அந்த எண்ணம் சரியாகவே தொடர்ந்தது.

கவிநாயகர் கந்தவனம் அவர்கள் தான் பங்குபற்றும் இலக்கிய மற்றும் பொது நிகழ்வுகளுக்கு எனக்கும் அழைப்புக்கள் கிடைக்கச் செய்வார். சமய நிகழ்வுகள், ஆலய உற்சவங்கள், அரங்கேற்றங்கள் ஆகியவற்றில் கவிநாயகர் கந்தவனம் அவர்கள் முன்வரிசையில் அமர்ந்திருப்பார். நண்பர்களுடன் விழாக்களுக்கு செல்லும் போது அவரோடு உரையாடிவிட்டு அவருக்கு பின்னால் உள்ள வரிசைகளில் நாம் அமர்ந்து கொள்வோம். ஆனால் நாட்கள் செல்ல கவிநாயகர் மற்றும் அதிபர் கனகசபாபதி ஆகியோரையும் ஒரே இடத்தில் சந்தித்து உரையாடி அவர்களது பாராட்டுக்களை பெறும் பலரில் நானும் ஒருவனாக மாறிவருவதை என்னால் உணர முடிந்தது. கவிநாயகர், அதிபர் இருவருமே மேடையில் உரையாற்றுவார்கள். சபையில் அமைதியாக அமர்ந்திருந்து நிகழ்ச்சிகளை, மற்றவர்கள் ஆற்றுகின்ற உரைகளை கேட்டு ரசிப்பார்கள்.

காலம் கடந்து சென்று கொண்டிருக்கின்றது. கலை இலக்கியம், நாடகம், வானொலி, தொலைக்காட்சி போன்ற துறைகளில் இலங்கையில் பணியாற்றிய பலர் கனடாவில் கால் பதித்துக்கொண்டிருந்தார்கள். இதனால் தொடர்புகள் அதிகரித்தன. இதே போன்று, பல அமைப்புக்கள் சங்கங்கள் கவிநாயகரை தங்கள் நிர்வாகப் பதவிகளில் இணைத்துக் கொண்டன. வாரா வாரம் எமக்கு ஓய்வின்றி சந்தர்ப்பங்கள் கிட்டிய வண்ணம் இருந்தன. அவரைச் சந்திப்பதற்கும் அவரது உரைகளையும் கவியரங்குக் கவிதைகளையும் கனடாவில் கேட்டு மகிழும் சந்தர்ப்பங்கள் எம் வீடு தேடி வந்து கதவுகளைத் தட்டிய வண்ணம் இருந்தன.

1993-ம் ஆண்டு மார்ச் மாதம் நான்கு நண்பர்களும் நானும் இணைந்து ஆரம்பித்த 'சூரியன்' வாரப் பத்திரிகை வெளிவரத் தொடங்கியது. நான் அதன் ஆசிரியர். பத்திரிகையில் பணியாற்றும் ஒரு புதிய அனுபவம். பாடசாலையில் பரீட்சை மண்டபத்தில் அமர்ந்திருக்கும் ஒரு பரீட்சார்த்தியைப் போல அந்தப் பதவியை பொறுப்பேற்றுக்கொண்டேன். ஆனால் நான் எதிர்பார்த்த சிரமங்கள் தவிர்க்கப்பட்டன. என்னை உற்சாகப்படுத்தும் வகையில் ஒவ்வொரு வாரமும் கவிநாயகரும் அதிபர் கனகசபாபதி அவர்களும் என்னைச் சந்திக்கும் போதெல்லாம் பாராட்டுவார்கள். ஒரு நாள் கவிஞர் என்னிடத்தில் முகத்தில் புன்னகை தவழச் சொன்னார்.

'தம்பி! உங்கட 'சூரியன்' பத்திரிகை' யாழ்ப்பாண 'ஈழநாடு' பத்திரிகை போல இருக்குது. பல செய்திகள் எழுத்தாளர்கள் மற்றும் கவிஞர்கள் பற்றியதாக இருக்கின்றது. நீர் ஒரு இலக்கியவாதியாக இருப்பதால் தான் இதை நீர் சாத்தியமாக்குகின்றீர் என்று நினைக்கின்றேன்' என்றார். அதற்கு சம்மதம் தெரிவிப்பது போன்று அதிபர் கனகசபாபதி அவர்களும் புன்னகையொன்றை உதிர்த்து அதை ஆமோதித்தார்.

ஓர் எழுத்தாளனாகவும் கவிஞனாகவும் அடையாளப்படுத்தப்

பட்ட நான், ஒரு பத்திரிகை ஆசியராக தோற்றம் பெற்றதனால், இங்கு இடம்பெறுகின்ற பெரும் விழாக்கள், சிறு நிகழ்ச்சிகள் என அனைத்திற்கும் அழைக்கப்பெற்றேன். அங்கு முன் வரிசையில் அமர்ந்திருக்கும் கவிநாயகர் கந்தவனம் போன்றவர்கள் என்னையும் அழைத்து அவர்களுக்கு அருகில் அமர வைத்து அழகு பார்க்கத் தொடங்கினார்கள். ஆரம்பத்தில் முன்வரிசையில் அமர்ந்திருப்பது எனக்கு 'கூச்சம்' தரும் ஒன்றாக இருந்தாலும் காலப்போக்கில் பழகிப்போய் விட்டது.

தொடர்ந்து 1996-ம் ஆண்டு 'சூரியன்' பத்திரிகை இடை நிறுத்தப்படவேண்டி ஏற்பட்டது. அப்போது கவிநாயகர் கந்தவனம் அவர்களும் ஏனைய சிலரும் பத்திரிகைத் துறையை கைவிட வேண்டாம் என்றும், அதைத் தொடரும்படியும் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் அளித்த தைரியம் எனக்கு 'உதயன்' பத்திரிகையை உடனடியாகவே ஆரம்பிக்கும் உறுதியையும் ஏற்படுத்தியது.

கவிநாயகர் பற்றிய இந்த கட்டுரைக்கு, வாழ்க்கை அனுபவித்தவர் என்பதற்குப் பதிலாக 'வாழ்க்கையைச் சுவைத்தவர்' என்ற தலைப்பைச் சேர்த்துக்கொண்டேன். கவிநாயகர் கந்தவனம் அவர்களோடு நான் பழகியும் கலந்துரையாடியும் வந்த மிக நீண்ட காலப்பகுதியில் நான் ஆழ்ந்து அவதானித்த வகையில், அவர் எதனையும் சுவைத்து அனுபவிப்பவர் என்பதை அனைத்து நண்பர்களும் தெரிந்திருந்தோம்.

கவிநாயகர் அவர்கள் உணவையும் நன்கு சுவைத்து உண்பவர். அதைப்போலவே பலரோடு தான் கொண்டிருந்த நட்பையும் சுவைத்துப் பார்ப்பதில் விருப்பம் கொண்டவர். அதற்கு அடுத்ததாக நான் அவதானித்த அவருக்கு பிடித்த விடயம் ஆங்கில இலக்கியம் பற்றி உரையாடுவது. சில வேளைகளில் உரையாடும் போதும் 'ஷேக்ஸ்பியர்' அவர்களின் நாடகங்களிலிருந்து சில வசனங்களை எமக்கு உணர்வுச் சுவையுடன் பேசிக்காட்டுவார்.

கவிநாயகரின் இறுதி அஞ்சலியில், தனது தாத்தா பற்றி உரையாற்றிய கவிநாயகரின் பேரரான கிருஸ்ணா உருக்கமும் சோகமும் நகைச்சுவையும் கலந்து தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட போது, தனது பாடசாலைக் காலப்பகுதியில் ஆங்கில இலக்கியப் பாடத்தில் தனக்கு பெரும் ஆதரவாக விளங்கியவர் தனது தாத்தாவான கவிநாயகர் அவர்கள் தான் என்றும், அவ்வேளையில் அவரது ஆங்கிலப் புலமை பற்றி தான் வியப்படைந்ததாகவும் தெரிவித்ததை நான் இந்த நேரத்தில் எனது கூற்றுக்கு சான்றாக எடுத்துக் கொள்ளலாம்.

மேலும், கவிநாயகர் அவர்கள் நகைச்சுவை உணர்வு அதிகம் கொண்டவர். இந்த விடயத்தில் நான் அனுபவித்த நூற்றுக்கணக்கான சம்பவங்களைச் சொல்லலாம். நகைச்சுவைகளை பகிர்ந்து கொள்ளும் போது அவை தரும் இன்பத்தை சுவைப்பதில் வல்லவர்.

புதிதாக ஒருவரைச் சந்திக்கும் போது அவர் கூறுவதை அமைதியாக செவிமடுப்பதிலும் பின்னர் அவருக்குப் பயன்தரும் வகையில் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்குவதிலும் பக்குவம் நிறைந்தவராகவே கவிநாயகர் எமக்கு தெரிந்தார் என்பதையும் பலரும் அறிவார்கள்.

மேலும், கவிநாயகர் அவர்கள் அணிகின்ற பாதணிகளையும் ஆடைகளையும் பார்க்கும்போது, அவர் அவற்றை எவ்வாறு ரசித்து அணிந்து, தன்னை ஓர் இளைஞனைப் போன்று காட்சிப்படுத்துகின்றார் என்று, அவரது ரசனையை எம்மில் பலர் வியந்துள்ளோம். 'மாஸ்டர்! நீங்கள் போட்டிருக்கின்ற சப்பாத்து பொடியள் போடுகின்றது' என்று நாம் கூறி முடிக்கும் முன்னரே, கவிநாயகர் 'எனக்கு என்ன வயதென்று நீங்கள் நினைக்கிறியள் ?' என்று எம்மை 'மடக்க' முயல்வார்.


எமது 'உதயன்' பத்திரிகையின் விழாக்களில் எப்போதும் கவிநாயகர் முன்னிலை வகிப்பார். அவர் அமர்ந்திருக்கின்ற ஆசனத்திற்கு அருகில் அமர்ந்து கொள்வதற்கு பலர் விரும்புவார்கள். பெரும்பாலும் அதிபர் கனகசபாபதி அவர்கள் ஒருபக்கத்திலும் மறுபக்கத்தில் யாராவது அவர்கள் இருவருக்கும் பிடித்தமான ஓர் எழுத்தாளர் அல்லது பேச்சாளர் அமர்ந்திருப்பார். அந்தப் பாக்கியம் எனக்கும் கிட்டியிருக்கின்றது.

ஒரு விழாவில் கவிநாயகர் தலைமையில் கவியரங்கம். ஒவ்வொருவரையும் அழைக்கும் போது நகைச்சுவை ததும்ப அறிமுகம் செய்வார். பங்குபற்றிய கவிஞர்களில் நானும் ஒருவனாக இருக்க, என்னை கவிதை வாசிக்க அழைத்த போது அவரது அறிமுகம் இவ்வாறிருந்தது. 'உதேன் உதேன் என்றவர்கள் இப்போது உதயன் உதயன் என்று கடைகளுக்கு ஓடுகின்றார்கள். அந்த உதயனின் அதிபரும் ஆசிரியருமான கவிஞர் லோகேந்திரலிங்கம் அவர்களை கவிபாட அழைக்கின்றேன்' என்றார். அந்த நேரத்திலும் அவரது நகைச் சுவையை ரசித்த வண்ணம் எனது பணிக்கான ஒலிவாங்கியை நோக்கிச் சென்றேன் நான்.

கவிநாயகரின் கனடிய வாழ்வு பற்றிய படைப்புகள் நிறையவே வெளிவருவதற்கு விடயங்கள் இங்கு கொட்டிக்கிடக்கின்றன. எழுத விரும்பும் படைப்பாளிகளுக்கு களங்களாக அவர் சார்ந்த விழாக்களும் விடயங்களும் அவரது உரைகளும் உரையாடல்களும் கலையும் கவிதைகளும் நாடக விழாக்களும் நடன அரங்கேற்றங்களும் மாநாடுகளும் மகளிர் மன்ற விழாக்களும் சமயப் பங்களிப்புக்களும் சமூக ஈடுபாடுகளும் ஆசிரியர்களின் விழாக்களும் மாணவர் மன்றங்களின் செயற்பாடுகளும் என ஏராளம் ஏராளம்.

கவிநாயகரின் ஐம்பது ஆண்டு காலப்பகுதியில் நான் சம்பந்தப்பட்ட அல்லது அறிந்து தெளிந்து கொண்ட பல, இந்தக் கட்டுரையில் அடங்கியுள்ளன என்று நான் நம்புகின்றேன்.

முன்னர் குறிப்பிட்டது போன்று அவர் மறைந்து ஒரு வாரத்திற்குப் பின்னர், அவர் எந்நாளும் உருகிப் பாடிக்கொண்டிருந்த 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்று தொடங்கும் திருவாசகத்தை கேட்ட வண்ணம்... அவனடியை அடைந்த நாளில், அவருக்கான இது போன்ற 'காணிக்கை'யை எழுதி முடிப்பது, அவருக்காக நாம் அனைவரும் வழங்கும் கௌரவம் என்று எடுத்துக்கொள்ளலாம்.



logendralingam.rn@thaiveedu.com

# காந்தத் தமிழ் வனத்திடைக் களித்தே...

**- குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன்**

***'என்ன யான் முடிவாக இயம்புவேன்
இங்கு கூடிய இன்றமிழ் மக்களே
தன்னைத் தானறி யாத தமிழனும்
தக்க மானத்தை விற்குந் தமிழனும்
உன்னி ஓர்கணம் ஒற்றுமைப் பண்பினை
உணர்ந் திடாத உளுத்தரும் உணர்ச்சிகள்
இன்னு மின்றி இழிவுப் பிணங்களாய்
இருப்பின் பாரதி பாடலை இன்றைக்கே
சென்று ஊன்றிப் படித்திடின் செம்மையாய்
சேருங் கையுடன் செந்தமிழ் மானமே
அன்று பாரதி சொன்ன அருமொழி
இன்று மப்படியே எமக் காகுமாம்'***

எமது பெருமதிப்பிற்குரிய கவிமணி வி. கந்தவனம் அவர்கள், மார்ச் 16 1963-ல் இலங்கைத் தீவின் ஹட்டன் நகரத்து ஹைலாண்ட்ஸ் கல்லூரித் தமிழ் விழாக் கவியரங்கில் பாடிய வரிகள் அவை. ஈழத் தமிழர்கள் நாம் எதிர்கொண்ட இத்தனை அழிவுகள், அலைக்கழிப்புகள், மனக்கிலேசங்கள், புலப்பெயர்வுகள் ஆகியவற்றின் பின்னரும் வாழும் நாடுகளிலெல்லாம் அணியணியாய் பிரிபட்டு நிற்கும் இன்றைய அவல நிலைக்கும் பொருந்துமாப்போல் அமைந்திருக்கும் அற்புத வரிகள். அறுபது ஆண்டுகளுக்குப் பின்னரும் நிலைபெறும் இத்தகு கவிதைகளாலும், கவின்மிகு உரைகளாலும் தமிழிலக்கிய வெளியைச் செழுமைப்படுத்திய தகவுடையார் புகழ் பேசுதல் தகுமே. ஒக்ரோபர் 28, 2023-ல் தமது 90-வது அகவை எய்தி, மண்ணில் நல்ல வண்ணமாய் நிறைவாழ்வு வாழ்ந்து, மார்ச் 11, 2024 அன்று இறைபதம் அடைந்த கவிநாயகர் அவர்களுடனான எனது அனுபவங்கள் பற்றி உங்களோடு பகிர்ந்துகொள்ள விழைகின்றேன்.

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபதுகளின் பிற்பட்ட பொழுதுகள் - கலைகள் மலிந்த எங்கள் குரும்பசிட்டிக் கிராமத்தின் பொற்காலம். ஈழத்து இலக்கிய வரலாற்றிலும் இக்காலப்பகுதியே மரபு வழிப் படைப்புக்களையும், முற்போக்குச் சிந்தனை வழி ஆக்கங்களையும் வாசகர்கள் ஒருசேர நுகர்ந்து மகிழ வழி ஏற்படுத்திய நற்காலம் என்பர் ஆய்வாளர். அண்ணளவாக 730 குடும்பங்களைக் கொண்டிருந்த அன்றைய காலகட்டத்தில் ஐந்து சனசமூக நிலையங்களோடு அமைதியாக இயங்கிக்கொண்டிருந்த கிராமத்தின் தலைச் சங்கமாய் சிலிர்த்து நின்றது சன்மார்க்க சபை. இங்கு நிகழும் விழாக்களுக்கு வரும் பெயர்பெற்ற இலக்கிய ஆளுமைகளும், எம் கிராமத்துப் பெரியவர்களும் ஓரணியாய் பிரதான வீதியில் நடை பயில்வதைப் பார்த்துப் பார்த்து வளர்ந்தவர்கள் நாங்கள். 1965 - 1975 காலப்பகுதியில் கவிமணி வி. கந்தவனம், இரசிகமணி கனக செந்திநாதன், கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை, குறமகள் வள்ளிநாயகி இராமலிங்கம்,செஞ்சொற்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, மயிலங்கூடலூர் நடராஜன், பார்வதிநாதசிவம், அரியாலையூர் ஐயாத்துரை, மதுரகவி நாகராஜன் போன்றோரின் அரவணைப்பில் பரிமளித்திருந்



தது குரும்பசிட்டிக் கிராமம்.

குரும்பசிட்டி சன்மார்க்க இளைஞர் மன்றத்தின் காலாண்டிதழான 'சன்மார்க்க தீபம்' இணையாசிரியர்களில் ஒருவராக நான் செயற்பட்டவேளை, 'கறுப்புப்பால்', 'கதவைத் திறவுங்கள்' என இரு சிறுகதைகளை எழுதியிருந்தேன். இச்சிறுகதைகள் அந்நாட்களில் (1971) பெரும் பிரச்சினைகளையும் அச்சுறுத்தல்களையும் எனக்கும், என் பெற்றோருக்கும் ஏற்படுத்தியிருந்தன. இவ்விரு சிறுகதைகளினதும் கூர்மையைக் குறைத்தும், வீச்சுப்பரப்பை விசாலித்தும் செழுமைப்படுத்தியவர் கவிஞர் அவர்களே. சாதிப் பிரச்சினையை மையமாக வைத்து




இவர் எழுதிய 'சமூகம்' குறுநாவல் பிரசுரிக்கப்படாமல் போனது பற்றியும், கவிநாயகன் என்ற புனைபெயரில் இவர் எழுதி வெளியிட்ட முதற் குறுநாவலான 'ஒன்றரை ரூபாய்' ஏற்படுத்திய தாக்கங்கள், எதிர்கொண்ட பிரச்சினைகள் பற்றியும் பின்னர் வாசித்தறிந்த வேளையில் என் கதைகளைச் செப்பனிட்டதன் தாற்பரியத்தை உணர்ந்துகொண்டேன்.

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதுகளில் சன்மார்க்க இளைஞர் மன்றத்தின் தலைவராகச் செயற்பட்ட வேளையில் குரும்பசிட்டி சித்திவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவ காலங்களில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தும் திட்டம் ஒன்றினை முன்னெடுத்தோம். இதன் பொருட்டுத் தொடர்ச்சியாக கவிஞர் அவர்களையே ஆண்டுதோறும் ஆலோசித்துப் பணியாற்றிய காலங்கள் பசுமையானவை. ஒவ்வொரு வருடமும் கவி-மணி அவர்களை முதன்நாள் நிகழ்வில் உரையாற்றச் சம்மதம் வாங்கிவிடுவோம். அன்றைய நாட்களில், ஒரு தந்தைக்கும் மகனுக்குமான உறவு முறைதான் எங்களுக்கிடையே நிலவியது. அதனால் நாம் கேட்கின்ற பெரும்பாலான விடயங்களில் எப்படியும் சம்மதம் கிடைத்துவிடும். நிகழ்ச்சி நிரல் இறுதியாக இவராலேயே சரிபார்க்கப்படும்.

யாழ். மாவட்டத்துப் பிரபல்யம் வாய்ந்த சமயச் சொற்பொழிவாளர்கள் பெரும்பாலானோரை உள்ளடக்கியதாய் அமையும் அந் நிகழ்ச்சி நிரல் அவரவர் சம்மதத்துடன் அல்லது வேண்டுதலின் பேரில் கௌரவப் பட்டங்களுடனும், கல்வித் தகைமைகளுடனும் நிறைவு செய்யப்படும். கவிமணி அவர்களின் பெயருக்கு முன்னும், பின்னும் அவர்மீதுள்ள அபிமானத்தால் அவரது பட்டங்களையும், கல்வித் தகைமைகளையும் நாமே குறித்துக் கொடுத்திருப்போம். ஆயினும் ஒவ்வொரு தடவையும் நிகழ்ச்சிநிரல் உறுதி செய்யப்பட்டு, அவரிடமிருந்து வரும்போது, அவர் பெயர் வெறுமனே கந்தவனம் ஆகவே காட்சியளிக்கும். இதுபற்றி நான் நேரடியாக அவரிடம் கேட்டபோது, 'தம்பி, என் கருத்துக்களை, அந்தக் கருத்துகளுக்காக மக்கள் கேட்கவேண்டுமே தவிர, நான் பெற்ற தகைமைகளுக்காகவோ, கௌரவப் பட்டங்களுக்காகவோ அல்ல என்று, ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் சொல்லிய வார்த்தைகள் இன்னமும் நினைவிலிருக்கின்றன. இத்தகைய எளிமையும், தன்னடக்கம் பேணும் தகைமையும், கவியரங்குகளிலும், பட்டி மன்றங்களிலும், இன்னபிற நிகழ்வுகளிலும் அவையை மதிக்கும் மாண்பும், அவரை எங்கள் நெஞ்சங்களில் மிக உயர்ந்த இடத்தில் நிலைபெறச் செய்தது மட்டுமன்றி, எங்களையும் அவ்வாறு பயிற்றிக்கொள்ள உதவியது.

'மனிதர் தாம் நினைப்பதையும், காண்பதையும் சொல்ல முயல்கின்றார்கள். படிப்பதையும், கேட்பதையும் மற்றையோருக்குக் கூறவிரும்புகிறார்கள். தனது அனுபவங்களை யாருடனேனும் பகிர்ந்துகொள்ள விழைகின்றார்கள். இவற்றைப் பிறருக்குச் சொல்வதற்குப் பலமுறைகள் உண்டு. எழுத்தைக் கருவியாகப் பயன்படுத்துபவர் எழுத்தாளர். அவ்விதம் எழுதுகையில் தனது ஆக்கத்திறனை அவர் பயன்படுத்தவேண்டி இருக்கிறது.' என எழுத்தாளரை வரையறை செய்யும் கவிநாயகர்,

***'தேன்கவிகள் நான்சொரிய வேண்டும்-கேட்பவர்கள்***
***ஊனுயிரி லவைசுவற வேண்டும்***
***வான்மழையைப் போற்பொழிய வேண்டும் -மண்ணிலதன்***
***மேன்மைகளைப் போல்வளர வேண்டும்***
***கூன்குருடர் செவிடர்களுக் கெல்லாம் -வலிமைதரும்***
***பான்மையிலென் பாட்டமைய வேண்டும்'***

எனத் தற்றுணிபோடு பதின்ம வயதுகளிலேயே எழுத ஆரம்பித்திருந்தார். இவரின் முதலாவது ஆக்கமான 'ஒருகால் மூன்றுதலை' குரும்பசிட்டி நா. பொன்னையா அவர்களால் ஆரம்பிக்கப்பெற்ற ஈழகேசரி பத்திரிகையில் தான் 1948-ல் வெளிவந்தது. 1948 - 1953 கால இடையில் கவிமணியாரின் பல்வேறு கட்டுரைகள் ஈழகேசரி பாலர் பகுதியைச் சிறப்புச் செய்தன. இதன் சம்பந்தமோ என்னவோ, ஓகஸ்ட் 10, 1964-ல் எங்கள் கிராமத்து மருகராய் வந்தார். தவமணி அம்மையின் துணைவராய் நின்றார். பழி பிறங்காப் பண்புடை மக்களாய் வாணி, வாரணன் இருவரும் வாய்த்ததால், எழு பிறப்பும் தீயவை தீண்டா பெருவாழ்வு கொண்டார்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, சென்னை கிறிஸ்தவக் கல்லூரி, கோவை கலைக்கல்லூரி ஆகியவற்றின் மாணவர். புவியியல் பட்டதாரி. கல்வி, நாடகம் கற்பித்தல், உயர்தர ஆங்கி



லம் என்பவற்றில் பட்டப்பின் டிப்ளோமா (Postgraduate Diploma) பெற்றவர். வயாவிளான் மத்திய மகா வித்தியால யத்தில் ஆசிரியர், உப. அதிபராகவும் அளவெட்டி அருணோ தயக் கல்லூரி அதிபராகவும் பதவி வகித்த காலங்களில் இவர் ஆற்றிய பணிகள், பல தரப்பினரதும் பாராட்டுக்களைப் பெற்றது. இவர் எழுதிய புவியியல் பாடப் புத்தகங்களும், வயாவிளான் ம.ம.வித்தியாலயத்தின் முதன் வெளியீடான வெள்ளிவிழா மலரும், நாடகத்தை ஒரு பாடமாக முதன் முத லில் க.பொ.த. உயர்தர வகுப்பில் கற்பித்தமையும், அரு ணோதயக் கல்லூரி கனிஷ்ட பாடசாலைக் கட்டடம் முற்றுப் பெற, தாமே தயாரித்து, தாமும் நடித்து நிதி சேகரித்து உதவி யமையும் விதந்துரைக்கத்தக்கவை. எங்கள் கிராமத்துப் பெரி யார் கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை அவர்களது ‘நிறை குடம்’, ‘இறுதிப்பரிசு’, ‘நாடகம்’, ‘வருஷம் பிறந்து முன்னம் முன்னம்’ போன்ற நாடகங்களிலும் கவிஞர் அவர்கள் தொடர்ந்து தம் முத்திரையைப் பதித்து வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

குப்பிளான், ஏழாலை, கட்டுவன், அம்பனை, அளவெட்டி, காங்கேசன்துறை என அருகிருந்த கிராமங்கள் யாவினும் (என் ஈருருளி எட்டும்தூரம்) கவி அரங்குகளின் மாட்சியையும், பட்டிமன்றங்களின் வீச்சினையும், சிந்தை நிறை சமயச் சொற் பொழிவுகளையும் தேடித் தேடி அனுபவித்த காலங்கள் கடந்து, கவிஞர் அவர்கள் இலேசுத்து, தென்னாபிரிக்கா விற்கு ஜனவரி 22, 1980-ல் ஆசிரிய பணியேற்றுச் சென்று, அங்கிருந்து நவம்பர் 11, 1988-ல் கனடாவிற்கு வந்ததிலிருந்து மீண்டும் தொடர்ந்தது.

கனடிய மண்ணில் கவிமணியவர்கள் ஓச்சிய இலக்கிய ராஜாங்கம் பற்றிப் பலரும் அறிவர். பல்வேறு பெருமக்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பலவாறாய் விதந்துரைத்துள்ள னர். எனவே அவற்றிலிருந்து சற்று விலகி எங்கள் அனுபவங் களைப் பகிர்ந்து கொள்ள விளைகிறேன்.

***‘வாழா தவர்கள் வாழ்ந்திடப் பாடு***
***பாழும் வறுமை தொலைந்திடப் பாடு***
***ஏழை என்றொரு மானிடன் இங்கே***
***இல்லை இல்லை எனத்துள்ளியே பாடு’***

என மக்களின் வறுமையை ஒழிக்கப் பாடவேண்டுமெனக் குர லெழுப்பியவர் கவிஞர். 80-களின் இறுதியிலும், 90-களின் தொடக்கத்திலும் ஈழ மண்ணில் நிகழ்ந்த அனர்த்தங்களால் மிகவும் பாதிப்புக்குள்ளான குரும்பசிட்டிக் கிராம மக்களின் அவல நிலையைக் கருத்திற் கொண்டு, அவர்களுக்கேதே னும் உதவி செய்ய வேண்டும் என்றெண்ணினார். இதன் பொருட்டு இன்னும் சிலருடன் சேர்ந்து ‘குரும்பசிட்டி நலன்புரி சபை - கனடா’ எனும் அமைப்பை ஒகஸ்ட் 07, 1993-ல் தோற் றுவித்து, அதன் முதல் தலைவராக செயற்பட்டு, தம்மாலான உதவிகளை அங்கிருந்த உறவுகளுக்கு வழங்க வழி சமைத் தார்.

கனடா இந்துசமயப் பேரவையின் காப்பாளர், கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர், உலகத் தமிழ்ப் பண் பாட்டு இயக்கம் கனடா கிளையின் காப்பாளர் எனப் பல்வேறு பொது அமைப்புக்களில் முக்கிய பொறுப்புக்களை வகித்து அவற்றின் வளர்ச்சிக்கு உழைத்தவர். கனடா - குரும்பசிட்டி நலன்புரி சபை அமைப்பின் தலைவராக நான் செயற்பட்ட



வேளையில் சபைக்கான அமைப்பு விதியினை இறுதிசெய்ய உதவியவர். முதன்முதலாய் முத்தமிழ் விழாவினை ‘பொன்வயல்’ என்ற பெயரில் நலன்புரி சபை நிகழ்த்திய வேளையில் உறுதுணையாய் விளங்கியவர். இவ்வமைப்பின் மன்ற கீதத்தை இயற்றி வழங்கியவரும் இவரே. 1999 ஆகஸ்ட் 02 அன்று நிகழ்ந்த பொன்வயல் நிகழ்வில் கவிமணி அவர்கள் ‘இலக்கிய வித்தகர்’ கௌரவப் பட்டம் வழங்கி மதிப்பளிக்கப் பெற்றார். இத்தகு பெருமைக்குரிய இலக்கிய ஆளுமையை, எங்கள் கிராமத்து முழு நிலவை மேலும் ஒளிரச்செய்ய நாமும் ஆங்கோர் அணிலாக இருக்க முடிந்ததே என்ற மனநிறைவு எமக்குண்டு.

எங்களுக்கு வாழ்வளித்த திருநாடாம் கனடா பெருநாட்டின் தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்த பெருமைக்குரிய வர். நீண்டு நிலைக்கும் கனடியத் தமிழர் சமூகத்தில் கவி மணி கந்தவனம் அவர்கள் என்றும் நிலைத்திருப்பார். 2002-ல் அரிசோனா மாநிலத்து பென்சன் நகரத்து The World University கவிமணி அவர்களுக்கு ‘The Cultural Doctorate In Philosophy Of Literature’ என்ற உயர் விருதினை வழங்கிக் கௌரவித்தது. இது உலகெங்கும் பரந்துவாழும் தமிழ் உறவு களுக்கு பெருமகிழ்ச்சியை அளித்தது. இதுபற்றி அன்றைய பொழுதில் ஜெர்மனி வெற்றிமணி ஆசிரியர் கலாநிதி மு.க.சு. சிவகுமாரன் அவர்கள் *‘கந்தவனத் தமிழ்த் தேருக்கு கலாநிதி எனும் மணிமகுடம் இட்டு கனடாவில் இருந்து ஜெர்மனி, சுவிற்சர்லாந்து என அழகிய நாடுகளின், தமிழ் இலக்கிய வீதிகளில், தரணி போற்றும்படி இனிய தமிழ் வடம் இழுத்து பக்குவமாய் மீண்டும் இன்பத் தமிழ்த் தேரினை பாங்குடனே இருப்பிடம் சேர்த்துவிட்டோம்’* எனக் குறிப்பிட்டிருந்தார். கனடா - குரும்பசிட்டி நலன்புரி சபைத் தலைவராக இருந்த செ. அசோகமூர்த்தி அவர்கள் 2002.03.10 அன்று கவிமணி அவர்களுக்கு ‘தமிழ்நிதி எங்கள் கலாநிதி’ எனும் மலர் வெளி யீட்டுடன் கூடிய பாராட்டு விழாவொன்றினையும் சிறப்புற நடத்தியிருந்தார்.

கவிமணி அவர்களின் மணிவிழாவையொட்டி ‘தேன்தமிழ் தென்றல்’ எஸ். ஜெகதீசன் அவர்கள் ஆக்கிய ‘கவிநாயகர் கந்தவனம்’ கனடாவில் வெளிவந்த முதல் வரலாற்று நூல். கவிஞர் அவர்கள் கலாநிதி பட்டம் பெற்றவேளையில் மேல திக தகவலோடு ‘கலாநிதி கவிநாயகர் கந்தவனம்’ என மீள்ப திப்புச் செய்யப்பட்டமையும் மற்றுமொரு வரலாறே.

***உலகத் தமிழர் ஒப்பில் தமிழர்***
***ஓரினமாக வாழியவே***
***அலகில் மொழியும் புகழும் திகழ***
***ஆள் போல் தழைத்து வாழியவே***

***ஆற்றல் கொண்டும் ஆக்கம் கொண்டும்***
***அகிலம் வியக்க வாழியவே***
***கூற்றே வரினும் மானம் குன்றா***
***கொள்கையில் நின்று வாழியவே***

என உலகத் தமிழர் யாவருடனும் உள்ளன்போடு உறவாடும் காந்தத் தமிழ் வனத்திடை உலவிக் களித்திருந்த காலங்கள் என்றும் பசுமையானவையே.



jegatheeswaran@thaiveedu.com

# கவிஞரும் கதிரும்

**- கதிர் துரைசிங்கம் -**

1994 ஒக்ரோபர் 8 ஸ்காபுரோவில் ‘மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா’வின் இரண்டாவது முத்தமிழ் விழா. கவிஞர் கந்தவனம் அவர்களை இந்த விழாவில் கௌரவிக்க வேண்டும் என்கிறார் தலைவர், அதிபர் கனகசபாபதி. அதிபர் எது சொன்னாலும் சரியாக இருக்கும் என செயலாற்றும் செயற்குழுவின் உப தலைவராய் இருந்த நான், ஏன் இந்த கௌரவம் என்றேன். ‘பட்டதாரி ஆசிரியர், நாடகக்கலையில் டிப்ளோமா, கவிஞர், பட்டிமன்ற பேச்சாளர், பௌராணிகர், நாடகர், அதிபராக இருந்து ஓய்வுபெற்று தென்ஆபிரிக்காவில் ஆசிரியராக கடமையாற்றி, 1988-ல் கனடா வந்தவர், 16 நூல்கள் எழுதி வெளியிட்டவர், சென்ற வருடம் இவரின் அறுபது வயது நிறைவை இலக்கிய நண்பர்கள் மணி விழாவாக ரொறன்ரோவிலும் மொன்றியாலிலும் கொண்டாடினார்கள், இவர் மகாஜனவின் மருமகன் (மனைவி தவமணி மகாஜனக் கல்லூரி பழைய மாணவி) என்று அதிபர் ஒரே மூச்சில் சொல்லி முடித்தார். மகாஜனன்கள் சார்பாக விழாவில் கவிஞருக்கு அதிபர் பொன்னாடை அணிந்து கௌரவம் செய்தார்.

மகாஜனவில், எனது ஆங்கில ஆசிரியர் இராமசாமி அவர்கள் வயாவிளான் மகாவித்தியாசாலை அதிபராக இருந்தவேளை, உப அதிபராக இருந்தவர் திரு. கந்தவனம் என்பதை மட்டும் தெரிந்திருந்தேன். கவிஞர் கந்தவனம் அவர்களின் தகமையும் மணி விழாவின் மகிமையும் அன்று எனக்குத் தெரியாது என்பது கசப்பான உண்மை.

ஆங்கிலத்திலும் பிரெஞ்சு மொழியிலும் உத்தியோகபூர்வமாக இருந்த கனடிய தேசிய கீதத்தை இதே ஆண்டு கவிஞர் தமிழில் மொழி பெயர்த்தார். 1995-ம் ஆண்டு மகாஜனன் மலரில் கவிஞரின் தமிழ் ‘O Canada’ பிரசுரமானதோடு எங்கள் சங்க விழா ஒன்றுகூடல்களில் தமிழில் இசைக்கவும் ஆரம்பித்தோம்.

நான், அதிபரின் நண்பன்; அதிபர், கவிஞரின் நண்பன்; எனவே, கவிஞரின் நட்பு எனக்குச் சுலபமாயிற்று.

கனடாவில் கவிஞர் ஆரம்பித்த, காப்பாளராக இருந்த, தலைவராக இருந்த அமைப்புகள் பல. இந்து சமயப் பேரவையில் தலைவராக இருந்தபோது அவர் என்னையும் அதில் இணைத்துக்கொண்டார். கனடா சைவசித்தாந்த மன்றத்தில் நான் இணையக் காரணமாக இருந்தவரும் கவிஞரே. ஹவாய் இறைவன் ஆலய ஆதீன முதல்வர் சுப்பிரமணியசாமி, பின்னர் ஹவாய் வேலன்சாமி ஆகியோரின் அறிமுகம் கிடைத்ததும் கவிஞரால்தான்.



எனது தாய் தந்தையரின் திருமண சஷ்டியப்த பூர்த்தி விழா மலருக்கு கவிஞரிடம் முன்னுரை கேட்டபோது 'எனது தந்தையின் அழைப்பில் பன்னாலை சேர். கனகசபை வித்தியாசாலையில் நடந்த நவராத்திரி விழா ஒன்றில் தான் சமய சொற்பொழிவு செய்ததாகக்கூறி' உரிமையுடன் முன்னுரை எழுதி, மலரை சிறப்பித்தார்.

என்னைப் பற்றிய நண்பர் என்ற மலரில் 'துரையரின் தொடர் கதை' என்ற தலைப்பிலும், கதிர் உலா என்ற மலரில் 'பாடறிந்து ஒழுகும் பண்பாளர்' என்ற தலைப்பிலும் எழுதியது மட்டுமன்றி தாய் வீடு பத்திரிகையில் அவர் எழுதிவந்த 'இலக்கிய உறவுகள்' தொடரிலும் என்னைப்பற்றி எழுதிக் கௌரவித்தார்.

எனது மைத்துனரின் மனைவி சந்திரரதி கணேசனின் நினைவு மலருக்காக ஈமைக் கிரியைகள் பற்றி ஆங்கிலத்தில் கவிஞர் எழுதிய 'Deathless rituals devoted to the dead' என்ற கட்டுரை எண்ணற்ற தடவை ஏனைய மலர்களில் மறு பிரசுரம் ஆனது.

2001-ல் மகாஜனக் கல்லூரி ப.மா.ச. முத்தமிழ் விழாவிற்காக, விவாக இரத்து என்ற என் கதைக்கு கவிஞர் வசனம் எழுதி இயக்கி, விமலா மகேந்திரனையும் என்னையும் நடிக்க வைத்து, தானும் நீதிபதியாக நடித்த நாடகம் பெரும் பாராட்டு பெற்றது. இதுவே அரங்க நடிகனாக கனடாவில் கவிஞர் தோன்றிய முதல் நாடகமானது.

2005-ல் வெளிவந்த எனது 'காதோடு காதாக' என்ற நூலுக்கு 'துரையரின் சுத்தமான பூக்கள்' என்று அணிந்துரை எழுதி சிறப்பித்தார். எனது தந்தையின் நினைவு மலருக்கு திதி வெண்பா மற்றும் கவிதை எழுதிய கவிஞர், காசி சென்று பிதுர் கடன் செய்தல் பற்றி விளக்கினார்.

2005-ல் கவிஞர், கவிஞர் மனைவி, எனது மனைவி, நான் நால்வரும் டெல்லி சென்று அங்கிருந்து வாகனமொன்றில் பல மாநிலங்கள் ஊடாக காசி சென்று, காசி விசாலாட்சி சமேத விஸ்வநாதர் தரிசனம் முடித்து, தந்தையருக்கும் முன்னோர்க்கும் தர்ப்பணம் செய்து, பிதுர் கடமை செய்த நிகழ்வு இருவருக்கும் மனநிறைவாக அமைந்தது. இந்த யாத்திரை பற்றி கவிஞர் தனது 'தென்னகத்தில் என்னகத்தார்' நூலின் முன்னுரையில் பதிவு செய்துள்ளார்.

2007 மகாஜன ப.மா.ச. முத்தமிழ் விழாவிற்கு காத்திரமான செய்தி சொல்லும் நகைச்சுவை நாடகம் ஒன்றை எழுதி இயக்குமாறு சாந்திநாதன் என்னைப் பணித்திருந்தார். நகைச்சுவைக்கு ஆறு பிரபலங்கள் தயார், 'என்னத்தைச் சொல்லி' என்ற நாடகப் பிரதி தயார். காத்திரமான செய்தி சொல்ல, காத்திரமானவர் கவிஞர் என நான் அவரை நாடியபோது, மனமுவந்து ஏற்று மேடையில் மிடுக்குடன் நடித்து, அதட்டல் கலந்த பாணியில் பேசிய வசனங்கள் சபையோரை மௌனமாக்கி சிந்திக்க வைத்தது.

இவை அனைத்தும் காற்றலையில் கவிஞர் என CTBC வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் கவிஞரின் பவள விழாவில் 'கவிநாயகம் வாழ்வும் வரலாறும்' என வெளிவந்த நூலில் காணலாம். இந்த நூலில் கவிஞர் தனது பள்ளிப் பருவம் முதல் பவள ஆண்டு வரையான சம்பவங்களையும் தான் சந்தித்தவர்களையும் பதிவு செய்துள்ளார். கவிஞரின் நன்றி உணர்வுக்கும் ஞாபகத் திறனுக்கும் வானொலி நிகழ்வும் வரலாற்று நூலும் சான்றானது.

2020-ல் இருந்து கிழமையில் மூன்று தடவை கவிஞருடன் தொலைபேசியில் உரையாடுவது, வசதியானபோது சந்திப்பது, பிறந்த நாளன்று நேரில் கண்டு அவருக்கு வாழ்த்து சொல்வது ஆகியன எனது வழமையாயிற்று.



கோவிட் காலத்தில் வீட்டில் தங்கி இருந்ததால் எழுந்து நடக்கும் திறன் குறைந்து வெளியில் செல்லவும் தயங்கிய கவிஞர், வீட்டில் தொடர்ந்து இருந்துவிட்டார். ஆனால், அவர் நோய் வாய்ப்பட்டு இருக்கவில்லை.

சோபாவிலும் சக்கர நாற்காலியிலும் சந்தித்து வந்த கவிஞரை, 2023 மே தொடக்கம் கட்டிலின் அருகில் காண வேண்டியதாயிற்று.

கவிஞரின் 90-வது அகவை நிறைவு, 28 ஒக்ரோபர் 2023 அன்று வீடு சென்று அவரை வாழ்த்தி, அவரின் ஆசியையும் பெற்றேன். சந்திப்பும் உரையாடலும் தொடர்ந்தது.

விழாக்கள் பல கண்டுவிட்டேன்: 'எண்பத்தொன்பதைத் தொடர்வது தொன்பது அல்ல தொண்ணூறு'. நூறு ஒன்று கண்டுவிட்டேன், காணும் இனி என்ற திருப்தியில் கவிஞர் இயற்கை எய்திவிட்டார்.



kathir.thuraisingam@thaiveedu.com



# கவிஞர் வி. கந்தவனம்

## எம்மைவிட்டுப் பிரிந்தது எமக்குப் பேரிழப்பாகும்

### – குரு அரவிந்தன்

கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் எம்மைவிட்டுப் பிரிந்தது எமக்கு, குறிப்பாகக் கனடிய மக்களுக்குப் பேரிழப்பாகும்.

காங்கேசந்துறையில் நடந்த நாடகப்பட்டறை ஒன்றில்தான் கவிஞரின் உரையை முதலில் கேட்டிருந்தேன். அதன் பின் ஆசிரியர் மாணவன் என்ற வரம்புக்குள் அவருடன் உரையாடியும் இருக்கின்றேன். குரும்பசிட்டியைச் சேர்ந்த பிரபல நாடக ஆசிரியர் கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை அவர்கள் நடேஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்பித்தபோது அவரின் மாணவனாக இருந்தேன். கவிஞர் கந்தவனம் அவர்களின்



புகுந்தவீடும் குரும்பசிட்டிதான் என்பதால், அவர் இந்த நாடகப் பயிற்சிப் பட்டறையை ஏற்பாடு செய்திருந்தார். கவிஞர் சாவகச்சேரி நுணாவிலை பிறப்பிடமாகக் கொண்டவர். மாத்தளை சென் தோமஸ் கல்லூரி, வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் போன்ற கல்லூரிகளில் ஆசிரியராகப் பணியாற்றியவர். யாழ் இலக்கிய வட்டத்தின் தலைவராகவும் இருந்தவர்.

1983-ம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்து, கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பெரிய அளவில் இடம் பெயர்ந்தார்கள். அவர்களில் ஒரு பகுதியினர் சொந்த மண்ணை விட்டுப் புலம் பெயர்ந்தார்கள். புலம் பெயர்ந்தவர்களில் அதிக அளவிலான தமிழ் மக்கள் கனடாவில் குடியேறினர். கவிஞர் கந்தவனம் அவர்களும் இலேசுத்து, தென்னாபிரிக்காவிலிருந்து 1988-ம் ஆண்டு கனடா வந்திருந்தார். அப்படி கனடா வந்த சில தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் ஒன்று சேர்ந்து கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் என்ற பெயரில் ஒரு இலக்கிய வட்டத்தை 19-06-1993-ம் ஆண்டு உருவாக்கினார்கள். அன்று உருவாக்கப்பட்ட கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் கனடா தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இதுவரை மாபெரும் பங்காற்றியிருக்கின்றது. பல எழுத்தாளர்களையும், கவிஞர்களையும் சர்வதேசத்திற்கு அறிமுகம் செய்த இணையம், இன்று வளர்ச்சி அடைந்து 31-வது வருடத்தில் கால் பதித்திருக்கின்றது.

நீண்ட இடைவெளியின் பின் கனடாவில்தான் கவிஞரைச் சந்தித்தேன். அதிபர் பொ. கனகசபாபதி மூலம் அவரைச் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. 'தமிழ் ஆரம்' என்ற சிறுவர்களுக்கான வீடியோ வெளியிடுவதற்கு சிறுவர்களுக்கான பாடல் ஒன்றை அவரிடம் கேட்டிருந்தேன். எந்தவொரு தயக்கமும் இல்லாமல், உறவு முறைகளை அறிமுகப்படுத்தும் வகையில் 'எந்தன் பிறந்த நாள்' என்ற சிறுவர் பாடலை எழுதித் தந்தார். பாஸ்கியின் இசையமைப்பில் அந்தப் பாடலும் தமிழ் ஆரத்தில் இடம் பெற்று, பலராலும் விரும்பப்பட்ட பாடலாக அமைந்தது.

கவிஞர் அவர்கள் எழுத்தாளர் இணையத்தின் தலைவராக இருந்தபோது, நான் பொருளாளராகக் கடமையாற்றினேன். அடுத்த நிர்வாக சபையில் மீண்டும் அவரைத் தலைவராக நியமித்த போது செயலாளராகக் கடமையாற்ற எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் தொடர்ந்து ஆறு வருடங்கள் இணையத்தின் தலைவராகக் கடமையாற்றினார். எழுத்தாளர் இணையத்தின் 10-வது ஆண்டு விழாவை 2003-ம் ஆண்டு கொண்டாடும் போது அவர் தலைவராக இருந்தார். நான் செயலாளராகக் கடமையாற்றினேன். ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராக மின்னியல் பேராசிரியர் சு. பசுபதி அவர்கள் கலந்து சிறப்பித்தார். கவிஞர் தலைவராக இருந்த

காலத்தில் 'அரும்பு' என்ற பெயரில் சிறுகதைத் தொகுப்பு ஒன்றையும், 'கரும்பு' என்ற பெயரில் கவிதைத் தொகுப்பு ஒன்றையும் எழுத்தாளர் இணையம் வெளியிட்டிருந்தது. கவிஞரே நூல்களைத் தொகுத்திருந்தார். எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற விருப்பம் காரணமாக அப்போது எழுத்துத் துறையில் ஈடுபாடு கொண்டிருந்த சிலரிடம் இருந்து சிறுகதைகளைப் பெற்று, அவற்றைத் தொகுத்து வெளியிட்டிருந்தோம். கவிஞரால் தொகுக்கப்பெற்ற இந்த சிறுகதைத் தொகுப்பில், கவிஞர் வி. கந்தவனம், வல்வை கமலா பெரியதம்பி, கலைவாணி இராஜகுமாரன், இரா. சம்பந்தன், மா. சித்திவிநாயகம், செல்வம் அருளானந்தம், நாவாந்துறை டானியல் ஜீவா, எம். பாபு, என்.கே. மகாலிங்கம், ஆர்.என். லோகேந்திரலிங்கம், வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்), குரு அரவிந்தன் ஆகியோரின் சிறுகதைகள் இடம்பெற்றிருந்தன. முதுபெரும் எழுத்தாளர்களைக் கௌரவிக்க வேண்டும் என்ற அவரது விருப்பத்தின் காரணமாக 10-வது ஆண்டு விழாவில் கலாநிதி ஈழத்து பூராடனார், வள்ளிநாயகி இராமலிங்கம், வித்துவான் க. செபரத்தினம் ஆகியோரின் வாழ்நாள் சாதனையைப் பாராட்டிக் கௌரவித்திருந்தோம்.

இவரது காலத்தில் பலவகையான கருத்தரங்குகள், கவியரங்குகள் ஒழுங்கு செய்வது, பிறநாடுகளில் இருந்து வரும் தமிழ் இலக்கிய எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் வரவேற்றுக் கௌரவிப்பது, தமிழ் எழுத்தாளர்களை வாழுங்காலத்தில் கௌரவிப்பது, மறைந்த எழுத்தாளர்களுக்கு இரங்கற் கூட்டம் நடத்துவது, தமிழ் நூல்களை அறிமுகம் செய்து வெளியிடுவது, சிறுகதை - கவிதைப் போட்டிகளை நடத்தி தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிப்பது போன்ற பல நிகழ்வுகளை எழுத்தாளர் இணையம் செய்திருந்தது. இணையத்தின் வெளியீடுகளாக அமரர் க.செ. நடராசா நினைவு மலரான 'வானுறையுந் தெய்வம்', நாவற்குழியூரனின் 'உள்ளதான ஓவியம்', அனலை இராசேந்திரத்தின் 'பூவும் புல்லிதழும்', குரு அரவிந்தனின் 'உறங்குமோ காதல் நெஞ்சம்', கவிஞர் வி. கந்தவனத்தின் 'வரிக்கவிகள்', 'ஓ கனடா,' சின்னையா சிவநேசனின் 'சிறுவர் பாடல்கள்' ஆகிய நூல்கள் இவரது காலத்தில் வெளியிடப்பெற்றன. கவிஞரது நூல் ஒன்றுக்கு நான் வாழ்த்துரையும் எழுதியிருக்கின்றேன்.

தாயக, வெளிநாட்டு தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்களை கனடாவில் வெளியிட்டு அறிமுகம் செய்து வைப்பதில் எமது இணையம் முன்னின்று செயற்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. கவிஞர் இணையத்தின் தலைவராக இருந்தபொழுது வைத்திய கலாநிதி இந்திரகுமாரின் 'விண்வெளியில் வீரகாவியங்கள்', ஓவியக்கலைவேள் மு.க.சு. சிவகுமாரனின் 'இடைவெளி', மாத்தளை சோமுவின் 'லண்டன் முதல் கனடா வரை', சரஸ்வதி அரி கிருஸ்ணனின் 'நானும் ஒரு தமிழ் பெண்', புலவர் ம. பார்வதிநாதசிவத்தின் 'பசிப்பிணி மருத்துவன்', பண்டிதர் க. நாகலிங்கத்தின் 'செந்தமிழ் இலக்கண விளக்கம்', வித்துவான் க. செபரத்தினத்தின் 'ஈழத்துத் தமிழ் சான்றோர்', திருமதி நகுலா சிவநாதனின் 'அன்னையின் வளர்ப்பில் அரும்புகள்', ஆர். சிவலிங்கத்தின் (உதயணன்) உரைநடையில் 'கலேவலா' அகிய நூல்கள் எழுத்தாளர் இணையத்தால் கனடாவில் வெளியிடப்பெற்றதை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

கவிஞர் தலைவராக இருந்த போது, சிறுகதைப் பயிற்சிப் பட்டறையையும், மரபுக் கவிதைப் பயிற்சிப் பட்டறையையும் தானே பொறுப்பேற்றுச் சிறப்பாகச் செய்திருந்தார். அதன் தொடர்ச்சியாக, மரபுக் கவிதைகள் இந்த மண்ணில் நிலைத்து நிற்கவேண்டும் என்ற விருப்பத்தோடு, மரபுக்கவிதைப் பயிற்சிப்பட்டறை ஒன்றை ஆரம்பித்து எழுத்தாளர் இணையத்தின் சார்பில் நடத்தினோம். சின்னையா சிவநேசன் அவர்கள் இணையத்தின் தலைவராக இருந்தபோது நான் செயலாளராக இருந்தேன். கவிஞர் கந்தவனம் அவர்களும், பண்டிதர் ம. செ. அலெக்ஸாந்தர் அவர்களும் மரபுக்கவிதைப் பட்டறையைப் பொறுப்பேற்றுத் திறம்பட நடத்தினார்கள். பட்டறையில் பங்குபற்றிய அனைவருக்கும் சான்றிதழ் வழங்கிப் பாராட்டியிருந்தோம். அதில் பயிற்சி பெற்ற பல கவி




ஞர்கள் இப்பொழுது கவிஞர் கழகத்திலும் அங்கத்தவர்களாக இணைந்திருக்கிறார்கள் என்பது பெருமைக்குரியது.

கவிஞர் தலைவராக இருந்தபோது, பத்தாவது ஆண்டு நிறைவு குறித்து சிறுகதைப் போட்டியும், கவிதைப் போட்டியும் நடத்திப் பரிசுகளும் பாராட்டுப் பத்திரங்களும் கொடுத்தோம். இருபத்தைந்து ஆண்டு நிறைவு குறித்தும் உலகளாவிய சிறுகதைப் போட்டி நடத்திப் பரிசுகளும், பாராட்டுப் பத்திரங்களும் வழங்கினோம். போட்டியில் பரிசு பெற்ற கதைகள் நூல் வடிவம் பெற்றிருக்கின்றன. 'சர்வதேச தமிழ்ச் சிறுகதைகள்' என்ற தலைப்பில் குரு அரவிந்தனால் தொகுக்கப்பட்டு எழுத்தாளர் இணையத்தால் வெளியிடப்பெற்ற இந்த நூல் எழுத்தாளர் இணையத்தின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பாகும். முன்னாள் தலைவரான கவிஞரைக் கௌரவிக்கும் முகமாக அவரது வாழ்த்துச் செய்தியையும், அவரது புகைப்படத்தையும் இந்தச் சிறுகதைத் தொகுப்பின் பின்பக்க அட்டையில் இடம் பெறச் செய்திருக்கின்றோம்.

சுவாமி விபுலானந்தரின்...

***'வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ***
***வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ***
***வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல***
***உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது'***

என்ற பாடலைப் படிக்கும்போது,




*'அழவேண்டாம், ஆடி விழவேண்டாம்,*
*பூசை விழாவேதும் வேண்டாம்*
*விரும்பி - தொழுது நினைத்தாலே போதும்'*

என்ற கவிஞரின் வெண்பா ஒன்று நினைவுக்கு வந்தது. தமிழ் மொழியை, சைவசமயத்தை, ஆன்மிக நல்வழியை வளர்ப்பதிலும் புலம் பெயர்ந்த மண்ணில் முழுமூச்சாக ஈடுபட்டவர்களில் கவிஞரும் ஒருவராவார். ஓ கனடா தேசிய கீதத்தின் தமிழ் மொழி ஆக்கமும் எங்கள் கவிஞரால் எழுதப்பெற்றது. கனடாவின் 150-வது பிறந்ததின விழாக் கொண்டாட்டங்களின் போது தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்பெற்றது.

கவிஞர் 1993-ம் ஆண்டு கனடாவில் விநாயகப்பாவை வெளியிட்டார். அதன்பின் மணிக்கவிகள், ஒன்றுபட்டால், இயற்கைத்தமிழ், எழுத்தாளன், முத்தான தொண்டர், தங்கம்மா நான்மணி மாலை, புதிய சைவ வினாவிடை, சிவபுராணத்தத்துவம், பத்துப்பாட்டு, ஆறுமுகம், கனடாவில் சைவசமயம், அது வேறுவிதமான காதல், சிவ வழிபாடு, கந்தன் கதை, ஓ கனடா, வரிக்கவிகள், குருவழிபாடு, விநாயகப் பெருமானும் அகத்தியரும், முருகப்பெருமானும் ஔவையாரும், விநாயக வெண்பா, விநாயக விருத்தம், பொங்கு தமிழ், கவிதை மரபு, தென்னகத்தில் என்னகத்தார், பாவாரம் போன்ற பல நூல்களைக் கனடாவில் வெளியிட்டிருக்கின்றார். அதற்கு முன் பல நூல்களை இலங்கையில் வெளியிட்டிருந்தார். இவர் வெளியிட்ட எல்லா நூல்களின் விபரங்களையும் நான் இங்கே குறிப்பிடவில்லை.

இலக்கியத்துறையில் எனது சேவைக்காக எழுத்தாளர் இணையம் வெள்ளிவிழா கொண்டாடியபோது அவர் 'அன்றைக்(கு) ஈழநாட்டிதழில் அணையாத தீபம் ஏற்றியவர் இன்றும் மலைவிளக்காகத் தமிழ் இலக்கியத் துறையில் இலங்குகின்றார். ஆன்ற இலக்கிய வடிவங்களில் அலன்போ போற்றிய சிறுகதையை ஊன்றி வளர்க்கும் அரவிந்தனை உலகம் மதித்துப் போற்றிடுமே! ஊருக்கு நல்லதை உரைக்கின்ற ஒழுக்கமுள்ள எழுத்தாளர் வேருக்கு வேரான விற்பன்னர் வெள்ளி விழாவினைக் கொண்டாடுவோம்! என்று பாராட்டிக் கவிதை வடித்திருந்தார். திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் எங்களை விட்டுப் பிரிந்தபோது 'பகுத்தறிவூட்டிய திண்மகளே' என்ற தலைப்பில் 'புள்ளித் தோகை மயில்போல புதிய வாசனை மலர்போல வள்ளிநாயகி இராமலிங்கம் வையகம் போற்ற வலம்வந்தார்!' என்று தொடங்கி 'வற்றாத ஊற்றும் வற்றியதோ வாடாத மலரும் வாடியதோ குற்றால இலக்கிய வீழ்ச்சியன்ன குறமகளே உன்னை யார்மறப்பார்?' என்று முடித்திருந்தார்.

தனிப்பட்ட முறையில் அவருடன் பழகும்போது அவரது மொழிப்பற்றை பார்த்து நான் வியந்திருக்கின்றேன். அவர் அருணோதயக் கல்லூரி அதிபராக இருந்தது மட்டுமல்ல, ஆங்கில மொழி அறிவும் அவரிடம் இருந்ததால் எதையும் இலகுவாகக் கையாளக்கூடியதாக, தலைமைத்துவத்தை ஏற்று நடத்தக்கூடியதாக இருந்தது. நல்ல விடயங்களைப் பாராட்ட அவர் என்றும் பின் நின்றதில்லை. எனது கதைகள் தமிழக இதழ்களில் வெளிவரும் போதெல்லாம் அவர் மட்டுமல்ல, அவரது மனைவியும் வாசித்துவிட்டு பாராட்டுவார். 'தம்பி உம்முடைய வாசகன்' நான் என்று அவர் ஒருமுறை எல்லோருக்கும் முன்னால் என்னைப் பார்த்து சொன்ன போது எனக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியாமல் தவித்தேன். தான் தான் முதலில் கதையை வாசித்துவிட்டு அவரிடம் கொடுப்பதாக அவரது மனைவி அப்போது சொன்னார், கவிஞரின் முன்னேற்றத்தில் அவரது மனைவி தவமணி அம்மாவின் பங்கு அதி முக்கியமானது. 2017-ம் ஆண்டு ஒருநாள் தொலைபேசியில் என்னை அழைத்து 'தம்பி எனக்கொரு கடமையிருக்கு அதைச் செய்ய வேண்டும், அதற்குத்தான் அழைத்தேன்' என்று சொல்லி எனது படம் ஒன்றை அனுப்பிவிடச் சொன்னார். இலக்கிய உறவுகள் என்ற தலைப்பில் செப்ரெம்பர் மாதம் 2017-ம் ஆண்டு தாய்வீடு இதழில் என்னைப் பற்றி எழுதிய அவரது கட்டுரை இடம் பெற்றிருந்ததைப் பார்த்ததும் அவருக்கு எடுத்து நன்றி தெரிவித்தேன்.

புலம்பெயர்ந்த கனடா மண்ணில் மூத்த கவிஞர், இளைப்பாறிய அதிபர், சிறந்த பேச்சாளர், தமிழ் பற்றாளர், சமய பற்றாளர் என்று பன்முக ஆளுமை கொண்ட கவிஞர் வி. கந்தவனம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய, அவரது குடும்பத்தினருடன் இணைந்து நாங்களும்
பிரார்த்திக்கின்றோம்.



kuruaravindan@thaiveedu.com



# கந்தவனமெனும் கவி பூத்த நந்தவனம்!

- மா. சித்திவினாயகம்

மானிட நேயத்தை தன் வாழ்விலும், தமிழைத் தன் நெஞ்சிலும், தமிழர்களைத் தன் மூச்சிலும் சுமந்துகொண்டிருந்த மதிப்பிற்குரிய எம் கவிநாயகர் இனியில்லை என்பது பெருந்துயர் தருகின்றது.

பூமியை தன் வற்றாத கவியினால் தொட்டணைத்து மரபினால் மலரச் செய்து, யாப்பிலே வளர்த்துக் கவித்தோட்டமிட்ட இந்தக் கவிக் கோமான் ஆரவாரமும் ஆர்ப்பாட்டமுமில்லாத அற்புதக் கவிஞர். தன்னடக்கமிக்க தனித்துவ அடையாளம் கொண்ட தமிழின் அடையாளம் அவர்.

உள்ளன்பு கொண்ட அவரது பக்தி இலக்கியக் கவிதைகளில் உருகாதார் இங்கில்லை. சைவ மதத்தை தன் மூச்சுள்ள வரைக்கும் வளர்ப்பதற்காய் தன் சக்திக்கு மீறி அரும்பாடுபட்டுழைத்த அரிய ஆன்மீகவாதி. அவரின் 'பாவாரம்' என்கின்ற தூய செந்தமிழ்ச் சைவநெறிக் கவிதைகள் எம்மை ஈர்க்கச் செய்பவை.

1948-லிருந்து சைவப் பெரியார் ஆத்மஜோதி முத்தையா அவர்களால் வெளியிட்டு வந்த அரிய இதழ் ஆத்மஜோதி. 1995-ல் கனடாவிற்கு வருகை தந்த போது ஆத்மஜோதி முத்தையா அவர்கள் துரதிஸ்டவசமாக கனடாவில் காலமாகியதைத் தொடர்ந்து ஆத்மஜோதியை காலந்தவறாமல் கனடாவில் ஆசிரியராக இருந்து வெளியிட்ட பெருமைக்குரியவர் கவிநாயகர் கந்தவனம் அவர்கள்.

சாவகச்சேரி - நுணாவிலில் பிறந்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரியாகி ஆசிரியராய், அதிபராய், கவிஞராய், ஈழத்தின் மதிப்பார்ந்த இலக்கிய ஆளுமையாய் தான் சென்ற இடங்களையெல்லாம் சிறக்க வைத்தவர் கவிநாயகர் அவர்கள்.

அன்றைய நாட்களில் யாழ் கலை இலக்கிய வட்டம், மாத்தளை கலை இலக்கிய வட்டம் ஆகியவற்றின் மாண்புமிக்க தலைவராகவிருந்து ஈழதேசத்தின் இலக்கியத் தரத்தை தரணியறியச் செய்த தகமைசால் விற்பன்னர்.

நாடகம், கவிதை இலக்கியம், சமயம் எனத் தன்னை அனைத்திலும் ஈடுபடுத்தி அவற்றை வளர்த்தெடுத்து தான் வாழ்ந்த சமூகத்தை உயர்த்த உழைத்த உன்னதமிக்க கர்ம ஜோகி.

கொழும்பு பல்கலைக்கழக வளாகத்தில் நாடகக் கல்வி பயின்று பாண்டித்தியம் பெற்றவராகிச் சிறந்தவர். இவரோடு நாடக கல்வி கற்றவர்களுள் தாசீசியஸ், திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம், சண்முகலிங்கம், சிவானந்தன் போன்ற



தமிழ் கலையை மிளிரச் செய்தவர்களுமிருந்தார்கள். இவர்களோடு பயணித்து புற்றுவெளியாகவிருந்த ஈழ இலக்கியப் பரப்பை பூப்பூக்கும் நந்தவனமாக்கி வைத்தவர்களுள் கவிநாயகர் கந்தவனம் அவர்களும் ஒருவர் என்றால் மிகையில்லை.

அதனால் தான் அவரின் அவரது 60-வது அகவையை 'தமிழர் தகவல்' திருச்செல்வம் அவர்கள் தலைமையேற்றும், 75வது வயதுப் பவளவிழாவை சட்டத்தரணி, 'கலைஞர்' மனுவல் யேசுதாசன் தலைமையேற்றும் கனடாவில் விழாவெடுத்து மகிழ்ந்தார்கள்.

அருணோதயாக் கல்லூரி அதிபராக இருந்த காலத்தில் அருணோதயத்தின் விடிவெள்ளி எனப் பெயரெடுத்தவர். யோகபுரம், வயாவிளான் எனப் பல இடங்களில் அதிபராக இருந்தவர் அவர்.

நூற்றுக்கணக்கான விலைமதிப்பற்ற நூல்களை எழுதியவர். கவிநாயகர், கவிமணி, மதுரகவி, இலக்கிய வித்தகர், சைவது ரந்தரர், என்றெல்லாம் எண்ணிக்கையற்ற பட்டங்களுக்கும், விருதுகளுக்கும் சொந்தக்காரர்.

***'கங்கு மட்டைச் செருப்பிருக்கு***
***காவோலைக் குடையிருக்கு***
***எங்கள் தொழில் வெயில்மழை***
***என்று தடைப்படுவதில்லை'***

ஈழநாடு பத்திரிகையின் பத்தாவது ஆண்டு கவிதைப் போட்டி யிலே முதற் பரிசைப் பெற்றுக் கொடுத்த தன் கவிதை இது என்பார் கவிஞர். அந்த தமிழ் இயற்கையைப் பாடிய அந்த அறிவு நூலகம் சாய்ந்து போனது... இனியில்லை என்பது பெருந்துயர்.

பவளவிழாக் கண்ட இப் பகுத்தறிவுப் பெரியாரின் சுயம் பேசிய அழகான வானொலி உரையாடல்களை 500-ற்கும் அதிகமான பக்கங்களோடு பவள விழாக் குழு ரொறன்ரோ-வில் பதிப்பித்திருந்தது.

அது வானொலிக் கலைஞர் இளையபாரதிக்கும், கவிநாயக ருக்குமான உரையாடல்களாய் 2007 ஜுன் முதல் 2008 ஓகஸ்ட் வரை கனடிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபன வான லையில் தொடர்ந்த பயனுள்ள உரையாடல்.

1986-களில் N.Veka என்ற புனைபெயரில் 'Hail the tamil tigers' என்கிற ஈழப் போராட்டத்திற்கு ஆதரவை நல்கிய அழ கிய ஆங்கிலக் கவிதைகளை கவிஞர் எழுதி வெளியிட்டுத் தமிழர்க்கு ஆதாரமாய்த் திகழ்ந்தவர்.

கனடியத் தமிழ் எழுத்தாளர் இணையத் தலைவராக இருந்து அரும் பணியாற்றியவர். கவியரங்க மேடைகளிலும், எழுத்தா ளர் இணையத்திலும் அவரோடு நானும் இணைந்திருந்த நாட் களை நினைத்துப் பார்க்கின்றேன். கனடிய எழுத்தாளர் பன் னிருவரின் சிறுகதைகளை 'அரும்பு' என்ற பெயரில் 2000-ம் ஆண்டில் ரொறன்ரோவில் வெளியிட்டவர். அதில் எனது சிறு கதையும் ஒன்று இருந்தது.

மனவெளி, கலைமன்றம் போன்ற இளங்கலைஞர்களை உரு வாக்குகின்ற நாடக, நாட்டிய பள்ளிகளை ஊக்குவிப்பதில் அவர் என்றும் பின்னின்றவரல்ல.

பேராசிரியர்கள், பேச்சாளர்கள், தத்துவவாதிகள், கவிஞர் கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், நாட்டியதாரகைகள், பத் திரிகையாளர், வானொலியாளர்கள் என ஆளுக்கொரு திக் கில், மூலைக்கொரு மனிதர்களாகச் சிதறுண்டு கிடந்தவர் களை தமிழ் எழுத்தாளர் இணையமாக ஒருங்கிணைக்க அரும்பாடுபட்ட பெருமகனார்.

அதிபர் சிவபாலு அவர்கள் எழுத்தாளர் இணையத் தலைவ ராக இருந்த காலத்தே கவிநாயகர் கந்தவனம் அவர்களும், பண்டிதர் ம.செ. அலெக்சாந்தர் அவர்களும் மரபு இலக்கண வகுப்புகளை ரொறன்ரோவில் ஏற்படுத்தி, இலவசமாக மரபு இலக்கணம் கற்பித்து இங்கு பல தரமான மரபுக் கவிஞர் களை உருவாக்கினார்கள். அதன் தொடர்ச்சியாக கனடாவில் கவிஞர் கழகம் கவிநாயகரால் ஏற்படுத்தப்பட்டு அதன் தலை வராக தன் பிரிய மரபு மாணவரான சண்முகராசா அவர்க ளைத் தலைவராக்கி இற்றைவரை தமிழ்க் கவிதை மரபைப் பேணிக் காத்து வருகின்றனர்.

'கவிதை மரபு' என்கிற அரிய இலக்கணப் புத்தகத்தையும் அவர் எழுதி வெளியிட்டிருந்தார். காந்தளகம் வெளியீடாக வந்த அந்த மரபிலக்கண நூல், மரபுக் கவிதை இயற்றும் மாண்பை மிக இலகுவாக தமிழ் கூறு நல்லுலகிற்கு போதிக் கின்ற அற்புத நூல். இன்று ஆசான்கள் பண்டிதர் அலெக்சாந் தர், கவிநாயகர் இருவருமே இல்லையென்பது மிகுந்த கவலை தருகின்றது. இவர்களோடு அதன் வளர்ச்சிக்கு உறு துணையாக நின்றுழைத்து எம்மிடையே இருந்து மறைந்த அதிபர்கள் பொன். கனகசபாபதி, சிவநாயகமூர்த்தி போன்ற வர்களையும் நான் இந்தக் கணத்தில் நன்றியோடு நினைத் துக் கொள்கின்றேன்.

நேர்த்தி மிகுந்த வார்த்தைகளுக்குள் நற் கீர்த்தியோடு நீந்தி வரும் கவிநாயகர் அவர்கள்தான் கனடியத் தேசிய கீதத்தை, அதன் இசையும், பொருளும் மாறாமல் தமிழிலே ஆக்கித் தந்த பெருமைக்குரியவர்.

ஆங்கிலப் புலமை மிக்கவரான இவரது twelve stories மற் றும் lasting light எனும் இரு ஆங்கில நூல்களும் கனடிய உயர் வகுப்புப் பாடங்களுக்குப் பயன்படுத்தவென ரொறன்ரோ பாடசாலைப் பாடவிதானக்குழு அங்கீகரித்திருந் தது.

கனடாவில் அதிகப்படியான தமிழ்நூல்களை எழுதிய பெரி யார். இவர் ஈழத் தமிழரின் இலக்கிய வெளிச்சம். இந்த வெளிச்த்திற்கு நாம் யாரும் வெளிச்சம் போட முடியாது.

21-ம் நூற்றாண்டினுடைய வசந்த கீதங்களாக தன்னுடைய கவிதைகளால் பூமியைப் புலரச் செய்து கொண்டிருந்த மாகவி எம்மிடையேயிருந்து மறைந்து போனது தமிழுலுகின் பேரிழப்பு!

***கவியினால், கனிவுச் சொல்லால்***
***கருணையே பொழியும் நெஞ்சால்***
***புவிதனில் மேன்மை பெற்ற***
***புனிதமாம் கவிதைக்கு நாயகனே***
***காப்பியத்திற்கு அதிபதியே***
***வல்ல தமிழர்களின் வளமார் பெருங்கவியே***
***எண்ணமெல்லாம் இனிக்கின்ற இனிய***
***அரும் உறவே***
***ஈழத்தாய் பெற்றெடுத்த***
***இலக்கியத்தின் பேரூற்றே***
***எங்கினிமேல் காண்போம்***
***எவர் இனிமேல் உன்போல***
***எமக்கிங்கே கவிதருவார்?***



என் ஆத்மார்த்த அஞ்சலி!

sithivinayagam@thaiveedu.com



# இலக்கிய இமயம் சரிந்தது

## – குமரகுரு கணபதிப்பிள்ளை

இலக்கிய வித்தகர் கவிநாயகர் கந்தவனம் அவர்கள் கால மானார். தமிழ் தேசியத்தை மனதார நேசித்தவர். இனம், மொழி, பண்பாடு, சைவ சமயம், ஆகியவற்றில் மிகுந்த அக் கறை உடையவர். செந்தமிழையும் சிவநெறியையும் உலகறி யச் செய்யத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து, வாழ்நாள் முழுவதும் உழைத்த பெருமகன். கவிஞர், எழுத்தாளர், பேச் சாளர், நடிகர் என பன்முக ஆளுமை மிக்கவர். வானொலி, பத்திரிகை, கவியரங்கம், பட்டிமன்றம் மூலம் அனைவராலும் நன்கு அறியப்பட்டவர். அவரது இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். இதனை தாங்க முடியாது கனடிய தமிழ் சமூக மும், இலக்கிய நண்பர்களும், உலகத் தமிழர்களும் ஏங்கித் தவிக்கின்றனர்.

### சிறந்த கல்வியாளர்:

அமரர் கவிநாயகர் கந்தவனம் அவர்கள் கல்வி பாரம்பரியத் தினாலும், தமிழகத்தின் நிறைந்த புலமையின் செல்வாக்கி னாலும் தமது கல்விப் புலமையை வளர்த்துக் கொண்டவர். ஆரம்பக் கல்வியை நுணாவில் மேற்கு கணேச வித்தியாசா லையில் தொடங்கி, சாவகச்சேரி இறிபேக் கல்லூரி, சென்னை கிறிஸ்தவக் கல்லூரி, கோயம்புத்தூர் கலைக் கல்லூரி என் பனவற்றில் கற்று, சென்னைப் பல்கலைக்கழகத்தில் புவியி யல் பாடத்தில் B.A பட்டம் பெற்றவர். பின்பு இலங்கையில் ஆசிரியராக கடமை ஆற்றும் போது இலங்கைப் பல்கலைக்க ழகத்தின் கொழும்பு வளாகத்தில் நாடகத் துறையில் டிப் ளேமோ பட்டமும் பெற்றுக்கொண்டார். 1980-ம் ஆண்டு ஆப் பிரிக்க கண்டத்தின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள லெசோத்தோ நாட்டிற்குச் சென்று ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றும் வேளையில், பிரித்தானியாவில் உள்ள Trans-world Tutorial College-இல் வெளிவாரியாகக் கற்று உயர்தர ஆங்கில டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். மேலும் வட மாகான ஓவியப் பரிசோதகர் திரு கனகசபை அவர்களிடம் ஓவியக் கலையையும், சங்கீத பூஷனம் நடேசன் அவர்களிடம் சங்கீதமும் கற்றுத் தேறினார். இந்தச் சங்கீத ஞானமே கவிஞருக்கு சந்தக்கவி படைக்க வாய்ப்பாக அமைத்தது.

### ஆசிரியப்பணி:

1958-ம் ஆண்டு சென்னை பல்கலைக்கழகத்தில் இளங்க லைப் பட்டம் பெற்ற அதே ஆண்டு, இலங்கை மாத்தளை புனித தோமையர் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றத்



தொடங்கினார். திருமணத்தை தொடர்ந்து 1965 முதல் 1972 வரை வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் ஏழு ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார். தொடர்ந்து வன்னி வவுனிக்குளத்தில் உள்ள யோகபுரம் மகாவித்தியால யத்திலும், அளவெட்டி அருணோதயாக் கல்லூரியிலும் அதி பராக கடமை ஆற்றினார். இலங்கைத் திருநாட்டில் ஏற்பட்ட இனமுரண்பாடுகளைத் தொடர்ந்து 1980-ம் ஆண்டு ஆபிரிக்

காவின் தென்கிழக்கிலுள்ள சிறிய நாடான இலெசூத்து நாட்டில் ஆங்கில ஆசிரியராகவும், தென்னாபிரிக்காவின் திரான்ஸ்கி சுயாட்சி மாநிலத்தில் அமைந்துள்ள சென் கத்தேட்ஸ் உயர்தர பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகவும் ஆறு ஆண்டுகள் பணியாற்றினார். இங்கு ஆங்கிலத்துடன் புவியியல் பாடத்தையும் கற்பித்ததோடு அப்பாடசாலையின் மானிடவியல் (head of department humanities) பாடத் துறைக்கு தலைவராக நியமிக்கப்பட்டதன் மூலம் சரித்திரம், புவியியல், மனவியல், தட்டச்சு ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களின் பாடக்குறிப்புகளை சரிபார்த்தல், மற்றும் கற்பித்தலை மேற்பார்வை செய்தல் போன்ற பணிகளையும் மேலதிகமாக மேற்கொண்டார்.

## கனடா வாழ்க்கை:

31 ஆண்டுகள் இலங்கையிலும், ஆபிரிக்காவிலும் இளைய தலைமுறையினர் எழுச்சி பெறச் சிறப்பாக் கல்வி ஊட்டிய



கவிஞர் கந்தவனம் அவர்கள் தமது குடும்பத்தினருடன் 1988 நவம்பர் 11-ம் தேதி கனடிய மண்ணில் கால் பதித்தார்.

பனி படர்ந்த தேசத்தில் அனைத்தும் புதியது. சவால்களை எதிர்கொண்டு குடும்பத்தை பராமரிக்க வேண்டிய பணிகளை முதன்மைப்படுத்தினார். இதற்கு மத்தியில் கனடிய தமிழ் சமூகத்தின் செயற்பாடுகளிலும் தன்னை இணைத்துக் கொண்டு மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்பட்டார். தன்னலமற்ற உழைப்பின் மூலம் கனடியத் தமிழர் மத்தியில் மிகப்பெரிய ஆளுமையாகத் திகழ்ந்தார். இலக்கியப் புலமையும், இயல்பாகவே இலக்கிய இரசனையையும் மிக்கவர். ஈழத்து தமிழ் இலக்கிய பாரம்பரியத்தில் வளர்ந்தவர். மாத்தளை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இலக்கிய வட்டம் நிறுவி தலைமைப் பொறுப்பேற்று ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குப் பணியாற்றியது போல் கனடாவிலும் பணியாற்றத் தொடங்கினார்.

1993-ம் ஆண்டு வீணைமைந்தன் தெ. சண்முகராஜா, அளவெட்டி சிறீசுக்கந்தராசா ஆகியோர் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தை உருவாக்கிட அதில் இணைந்து அதன் ஆரம்பத் தலைவராகவும் பணியாற்றி, கனடிய மண்ணில் 'அரும்பு' என்னும் சிறுகதை தொகுதியை வெளியிட்டு கனடிய எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தினார். கவிநாயகர் தொடங்கிய பணி நம் மத்தியில் பல படைப்பாளிகள் உருவாக வித்திட்டது எனின் மிகையாகாது.

## கவிஞரும் கவிதையும்:

ஈழத்தில் கவிஞர் கந்தவனம் அவர்கள் புகழ்பெற்ற கவிஞராக திகழ்ந்தவர் 'கவியரங்கிற்கோர் கந்தவனம்' என இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்களால் பட்டம் சூட்டப்பெற்றவர். கவிதை அவரது இயற்கைச் சொத்து. மரபோ, புதிதோ எதுவானாலும் படைப்பதில் விற்பன்னர். அவர் கவிதைகளில் சந்தமும் எதுகையும் மோனையும் இயல்பாக அமைந்திருக்கும். தாம் எடுத்துக்கொண்ட கருப்பொருளை விளக்க அளவானதும் அழகானதுமான சொற்களைப் பயன்படுத்துவார்.

வெண்பாவுக்குப் புகழேந்தி என்பார், ஆனால் கவிநாயகர் கந்தவனம் ஐயா அவர்களும் வெண்பா பாடுவதில் வல்லவர். வெண்பாக்களை மிக எளிதாக படைக்கும் ஆற்றல் மிக்கவர். இதற்கு அவர் எழுதிய பல வெண்பா நூல்கள் சான்றாக உள்ளன. அவற்றுள் சேக்கிழார் வெண்பா, நித்தியானந்த வெண்பா, விபுலாநந்த வெண்பா, விநாயகர் வெண்பா, செபரத்தின வெண்பா, ஐம்பொறி வெண்பா, ஐம்பூத வெண்பா, சோமசுந்தரப் புலவர் வெண்பா, புதுவாழ்வுப் பூ வண்டு, விஸ்வலிங்க வெண்பா, நற்பொருள் 40 என்று பல்வேறு வெண்பா நூல்களைக் குறிப்பிடலாம். இவை ஒவ்வொன்றும் 40 நேரிசை வெண்பாக்களால் ஆக்கப்பட்டவை. இதுவரை எண்பதுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார்.

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் ஒழுங்கு செய்த யாப்பிலக்கண வகுப்பை கவிஞர் வி. கந்தவனம் அவர்களும் பண்டிதர் மா.செ. அலெக்சாந்தர் அவர்களும் முன் நின்று நடத்தினர். இதில் பலர் பங்குபற்றிய போதும் இறுதியில் எட்டு கவிஞர்கள் தேர்ச்சி பெற்று மரபுக் கவிஞர்களாக சான்றளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து இரண்டு ஆசான்களும் இணைந்து 2011-ம் ஆண்டு கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தை உருவாக்கினர். பல எதிர்ப்புகளும் முரண்பாடுகளும் வந்த போதும் கவிஞர்களுக்கு தனியான அமைப்புத் தேவை என்பதை எடுத்துக் கூறி, எட்டுக் கவிஞர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு கழகத்தை இயங்க வைத்தனர். ஆரம்பத் தலைவராக மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா அவர்கள் நியமிக்கப்பட்டார். இரு ஆசான்களும் யாப்பிலக்கணம் கற்பிக்கும் பணியைத் தொடர்ந்து நடத்தி வந்தனர். அவர்கள் பணியைத் தற்போது பாவலர் மாவிலி மைந்தன் சண்முகராஜா அவர்கள் செய்துவருகிறார். கவிநாயகர் என்று அனைவராலும் அழைக்கப்பட்டவர் கந்தவனம் ஐயா ஒருவரே. அவர் கனடாவில் பல மரபுக் கவிஞர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

## கவிஞரும் நானும்:

நான், 2012-ம் ஆண்டு முதுகலை கற்கும்போது கவிஞர் கழகத்தில் இணைந்து இருவரிடமும் யாப்பிலக்கணமும் தமிழ் இலக்கியமும் கற்றுக் கொண்டேன். கவிஞர் கந்தவனம் ஐயா அவர்களிடம் கற்பதற்குக் கிடைத்த வாய்ப்பு பூர்வ ஜென்ம புண்ணியமாகவே கருதுகின்றேன்.



கவிஞர் அவர்களின் பேச்சில் ஓர் அபூர்வ சக்தி உண்டு, அவர் கூறுவதை யாரும் தட்டிக் கழிக்க மாட்டார்கள். அவ்வாறானதொரு நிலையும் எனக்கு ஏற்பட்டது. 2018-ம் ஆண்டு புதிய செயற்குழு தெரிவின்போது கவிஞர் கழகத்தின் பொருளாளர் பதவியை ஏற்கும்படி என்னை அழைத்தார். நான் பல காரணங்களை கூறி, குறிப்பாக நான் கழகத்திற்கு புதியவன் என்று மறுத்து விட்டேன் அவர் ஏற்கவில்லை இறுதியில் அவரது பேச்சை தட்ட முடியாது பொருளாளர் பதவியை ஏற்று நான்கு வருடங்கள் பதவி வகித்தேன்.

அன்பும் அனைவரையும் அரவணைக்கும் பண்பும் நிறைந்தவர். இன, மத, பிரதேச வேறுபாடுகள் அற்றவர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் கொள்கையைக் கொண்டவர். சமூகத்தில் அக்கறை கொண்டவர், சக மனிதரை நேசித்த மகத்தான மனிதாபிமானி கவிநாயகர்.

கவிஞர் ஐயா பல விருதுகளையும் மதிப்புகளையும் பெற்றவர். 2021-ம் ஆண்டு கனடா தமிழ் கவிஞர் கழகம் இலக்கிய வித்தகர் பட்டம் வழங்கி கௌரவித்தது. கோவிட் பெருந்தொற்று காலம் என்பதால் ஐயா நேரடியாக கலந்து கொள்ளாத போதும் அவரது இல்லம் சென்று அதனை வழங்கினோம். மதிப்புறும் முனைவர் கவியரங்கிற்கோர் கந்தவனம், கவி நாயகர், வாழ்நாள் சாதனையாளர் என ஏகப்பட்ட விருதுகளைப் பெற்றவர். ஆனால் எப்போதும் கவிநாயகர் பட்டத்தையே விரும்பி பயன்படுத்துவார்.

## சமயத்தொண்டு:

சைவம் தமிழ் இரண்டையும் தம்மிரு கண்ணாகப் போற்றியவர். அதன் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டவர். மிகுந்த இறைபக்தி உடையவர், குறிப்பாக பிள்ளையார் மீது அதீத பக்தியுடையவர். யாழ்ப்பாணச் சைவ சித்தாந்த மரபில் எப்போதும் வாழ்ந்தவர். கனடாவிலும் சைவ சமயத்தை வளர்ப்பதில் முன்னின்று உழைத்தவர். ஆத்ம ஜோதி தியான நிலையத்தின் தலைவராகவும், ஒன்ராரியோ இந்து சமயப் பேரவை, கனடா சைவ சித்தாந்த மன்றம் போன்ற அமைப்புக்களின் காப்பாளராகவும் இந்து ஆலயங்களின் அறம் காவலராகவும் இருந்து சைவ சமயத்தின் வளர்ச்சிக்காக பெரிதும் தொண்டாற்றினார். மேலும் தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் வளரும் சைவத்தமிழ் சிறார்கள் சைவ சமயத்தைக் கற்பதற்காக புதிய சைவ வினா விடை பாகம்-1, பாகம்-2, அகத்தியரும் விநாயகரும், ஔவையாரும் முருகப்பெருமானும் போன்ற நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவை யாவற்றுக்கும் மேலாக ஐயாவின் சைவத்தொண்டிற்குச் சான்றாக அமைவது அவரது 'பாவாரம்' நூலாகும். தமிழகத்திலும் ஈழத்திலும் உள்ள 108 (63 + 45) சிவாலயங்களின் தல வரலாறு, மூலமூர்த்தியின் பெருமை யாவற்றையும் வெண்பா, விருத்தப்பா வடிவத்திலும் பாடியுள்ளார். இது பதிக அமைப்பு முறையைச் சார்ந்ததாகும்.

கவிஞர் தனது குலதெய்வமான வீரகத்திப் பிள்ளையார் பெருமானுக்கு விநாயகப் பா பாடியுள்ளார். மேலும் வீரகத்தி விநாயகர் ஊஞ்சல், குரும்பசிட்டி விநாயகர் ஊஞ்சல், நல்லூர் நாற்பது, மற்றும் புன்னையம் பதிகம் என்பனவும் கவிஞர் பக்தி இலக்கியத்துக்கு ஆற்றிய பணிக்குச் சான்றாக உள்ளன.

கவிஞர் ஐயா அவர்கள், இரு மொழிப் புலமை மிக்கவர். சபையோரைக் கட்டிப் போடும் சிறந்த பேச்சாளர். கவிநாயகர் கனடாவில் 35 வருடங்கள் வாழ்ந்தவர். தம் இனத்தின் மீது கொண்ட பற்றுதலால் தமிழ் மொழி, பண்பாடு, இலக்கியம், சைவசமயம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டவர். கனடா தமிழ் கவிஞர் கழகத்தின் நிறுவனர், காப்பாளர், கனடா எழுத்தாளர் இணையத்தின் நிறுவனர், ஆரம்பத் தலைவர், ஆலோசகர், இன்னும் ஏகப்பட்ட அமைப்புகளின் காப்பாளர், பத்திரிகை ஆசிரியர் என பல பதவிகளை வகித்த கனடியத் தமிழ்ச் சமூகத்தில் மிகப்பெரிய ஆளுமை, தமிழ் அறிஞர். தனது 91-வது வயதில் எம்மை விட்டு பிரிந்தாலும் கனடா தமிழ் கவிஞர்களிடம் எப்போதும் அவர் வாழ்ந்து கொண்டே இருப்பார்.



kumaraguru.sk@thaiveedu.com



# உந்தன் கூர்மையும் எந்தன் கூர்மையும் ‘பேனா கந்தவனம்’ பேசுகிறேன்

- போல் ஜோசேப்

கவிநாயகரின் முதல் காதலி
‘பேனா’ கந்தவனம் பேசுகிறேன்
நலம் நலமறிய ஆவல்.
எனக்கு முன்பே
இரண்டு பால்ய காலத்து
பெண் நண்பிகள்
சிலேட் குச்சியும் பென்சிலும்.
ஆறாம் வகுப்பில் ஆர்வமாய் வந்து
அவர்களை விரட்டிய வீராங்கனை நான்.

தவமிருந்து தவமணியார்
ஊரறிய வருமுன்னே
பேனா எனும் பெண்ணாகிய
என்னோடு தினமும் தழுவல்.
அப்போ மின்சாரமும் இல்லை
அந்த அரிக்கன் லாம்பின்
மங்கிய வெளிச்சத்தில்
என்னை அணைக்கும் விதமே தனி.

என்ன தவம் செய்தேன்
தவமணியாரரைத் தழுவியதை விட
என்னை அணைத்த பொழுதுகளே அதிகம்.
மூன்று விரல்கள் முத்தமிட
அந்த தாள்கள் எனும் மேடையில்
நான் ஆடிய நடனங்கள்
அவையின்று தமிழ்த்தாயின் பொக்கிஷங்கள்.
என் நடையின் ஒவ்வொரு அசைவும்
ஆயிரமாயிரம் பாயிரமாய்
எழுதித்தீர்த்த எண்ணிலா வரிகள்
இன்று தமிழன்னை முன்
முத்துக்குவியல்களாய்.

என்னை மூடி வைக்கும்
அந்தப் பொழுதுகள்
இன்னும் இனிமை,
அவரின் இதயத்தருகே
அந்த லப் டப் ஓசை
எப்போதும் கேட்கும் பாக்கியம்
எனக்கு மட்டும்தானே.
அவரது இதயத்தின் துடிப்புகளும்
எனக்கு ஹைக்கூ கவிதைகள் தானே.
எனக்குள்ளே ஒரு திமிருண்டு
என்னதான் படைப்பாளியென்றாலும்
என்னாலன்றி எழுத்தில்லையே.

என்னை மூடிவைத்து
என்னத்தை பார்க்கிறீர்
என்று கேட்டேன் ஒருமுறை,
என்னத்தையும் பார்க்கல
என் எண்ணத்தை
திறந்து பார்ப்பேனென்றார்.
நாயகனின் உணர்வுகளைப் புரிந்தது
என்னைப்போல யாருமில்லை,
அன்றொருநாள் அருணோதயாவில்
அதிபராய் உயர்ந்து
அன்று போட்ட முதல் கையெழுத்து
இன்றுவரை என் மனதிலுள்ள
அதியுயர் மகிழ் கணப்பொழுது.

அந்த ஒன்றரை ரூபாய்
கன்னி கவிதை தந்த நான்
இன்னும் கன்னிமை நீங்காது
முதுமையிலும் என்
கற்பு நெறி காத்து வாழும்
கருமை கொண்ட காதலி நான்,
எண்பதுகளிலும் எண்பது நூல்கள்
மாண்பது சொல்லும்
இருபதுக்கு மேலே நூல் தொகுப்புகள்,
என்ன தவம் செய்தேன் நான்
உன் கரம் பற்றியெனை
நன்றாய் நானும் தமிழ் பணியாற்றிடவே.

வலம் வந்த நிலம் பெயர்ந்து
கவியெனும் கலமும்
பேனா என் துடுப்பும் கொணர்ந்து
புலம்பெயர்ந்த தலத்திலும்
தமிழன்னையின் குலம் தழைக்க
பொலம்(தங்கம்) போல மொழி துலங்க
திலகமாய் குவலயத்தில்
வலம் வந்த நாயகரே.
பேனாவானாலும் - உன்
நாவோடு எனக்கு பொறாமை,
மைனா மொழி இனிமை
நாவில் தேனாய் ஊறிட
சொன்னா என் கண்ணே படும்.

பேனா எனும் எனக்குள்ளே
ஒரு சிறு கவலையுண்டு,
எல்லாம் பாவாய் வாய்ப்பாக பெற்றன,
உன் கூர்மையும் என் கூர் மையும்
கலந்து வர ஊர்போற்றி நின் புகழ்பாடுதே.
எனைப்பற்றி நேரிசை வேண்டாம்
எண்சீர் வேண்டாம்
பார், ஒருவரிக்கவி கூட
நீ ஏன் பாடவில்லை.

புவியியலில் குவலயத்தின் லயம் அறிந்து,
கவி இயலில் என்னால்
மொழியின் இதயம் அறிந்து
இறையியலின் மறைப்பொருளும் பாடி,
ஈழத்தவர் மீது
ஈனத்தவரின் இனத்துவ வேஷம்
கண்டு கடிந்து,
விடியலுக்கான விடுதலைப் பாக்கள் தந்தீர்.

தலைப்பாவில்லை தலைப்பாரமுமில்லை
அப்பாடா இந்த தலைக்குள்ளே
அத்தனை பாவாரம்.
சிப்பாபோட்ட அப்பாவிகளையும்
கலிப்பா வெண்பா பாடவைத்த
கவிநாயகரே கந்தவனமே
நவாலியூர் தங்கப்புலவனின் நகலே.

தமிழ் மங்கைக்குப்
பாவாடை அணிவித்து
தமிழுக்குப் பா ஆடை போர்த்தி
புலம்பெயர் தேசத்திலும்
பா வாடை வீசச் செய்தவன்.

புதுமைகள் உந்தன் படைப்பில்
கள்ளூறும் தமிழ்ப் போதைதரும்.
உவமைகள் உதிரும் வரிகளில்
உரிமைகளின் உணர்வுகளை
வலிமையாய் விடுதலையின்
பெருமைநிறை கவின்மைகளை
பாப்புனைந்து பறைசாற்றிட,
சின்னம்மாளின் கருவறை திறந்து
பிறந்ததினால் நுணாவிலும் இன்று
ஈழத்தின் எட்டயபுரமானது.



paul.joseph@thaiveedu.com





# மலையகக் கவிதைகளுக்கும் செழுமை சேர்த்த கவிஞர் வி. கந்தவனம்

## – மல்லியப்புசந்தி திலகர்

இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணம் தென்மராட்சியை பிறப்பிடமாகக் கொண்டவர் கவிஞர் வி. கந்தவனம். 1933-ம் ஆண்டு பிறந்த இவர், 2024-ம் ஆண்டு கனடாவில் காலமானார். இவர் வாழ்ந்த நாட்களில் பாடசாலை ஆசிரியராக, அதிபராக இலங்கையின் பல பாகங்களிலும் பணியாற்றியுள்ள அதே நேரம் தென்னாபிரிக்காவிலும் தனது ஆசிரியர் பணியை தொடர்ந்துள்ளார்.

மலையகத்தின் மாத்தளை நகரில் அமைந்த புனித. தோமஸ் கல்லூரியில் 1960-களில் ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் மலையகத்தில் பல்வேறு இடங்களில் கவியரங்கங்களில் கலந்துகொண்டு கவிதை பாடியுள்ளார். இது குறித்த தனது நினைவுகளை திரு. வாமதேவன் அவர்கள் இவ்வாறு பதிவு செய்கிறார்.

*‘கவிஞர் கந்தவனம் மாத்தளை St. Thomas கல்லூரியில் 1960-களில் கற்பித்து வந்தார். ஹட்டன் ஹைலன்ஸில் ஆசிரியர்களாக பணியாற்றி மறைந்த சிவலிங்கம் மற்றும் திருச்செந்தூரன் ஆகியோரின் நண்பராவார். எமது கல்லூரியின் தமிழ் விழாவிலே கவிதை பாடி உள்ளார். அத்தோடு இரு கல்லூரிகளுக்கிடையே ஒரு விவாதப் போட்டி ஹைலன்ஸில் இடம்பெற்றது. இதற்கு பின்னணியில் இருந்தவர் கந்தவனம் ஆவார். மறைந்த கவிஞருக்கு எனது ஆழ்ந்த அஞ்சலிகள்’.*

கவிஞர் கந்தவனத்தின் கவிதை பங்களிப்புகள் குறித்து கவிஞர் வதிரி சி. ரவீந்திரன் இவ்வாறு தனது நினைவுகளை பதிவு செய்கிறார்.

‘60-களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் கவியரங்கு என்றால் கந்தவனம் கட்டாயம் வருவார். இவரது கவிதை பாடும் பணியை ரசித்த ரசிகமணி கனக செந்திநாதன் ‘கவியரங்கிற்கோர் கந்தவனம்’ என்று புகழ்ந்தார். கவிஞர் கந்தவனம் கவிதை பாடுகையில் நாகரிக இளவல்களையும் தேசத்து அரசியல் நிலைமைகளையும் நையாண்டியாகவும் பாடுவார். அன்று கவிஞர் இ. நாகராஜன், கவிஞர் அம்பி, அரியாலையூர் வே. ஐயாத்துரை, கல்வயல் குமாரசாமி, காரை செ. சுந்தரம் பிள்ளை என்று பலர் வந்து அரங்கைச் சிறப்பிப்பார்கள். அன்றைய காலம் கவியரங்கு குழு மனப்பான்மையோடு (Team-Work) இயங்கியது. காசி ஆனந்தனும் இவர்களோடு பாடியுள்






ளார். 1976 அல்லது 1977 காலத்தில் தமிழரசுக்கட்சி மாநாடு ஒன்றில் மலையக கவிஞர் மூதறிஞர் சக்தீ அ. பாலையா அவர்களும் இவர்களுடன் யாழ் நகர மண்டபத்தில் பங்கேற் றார். கவிஞர் கந்தவனம் எழுதிய கீரிமலையினிலே என்ற கவி தைத் தொகுப்பு ஒன்றும் ரசனை மிக்க நூலாகும். கவிஞர் கந் தவனம் மாத்தளையில் ஆசிரியப் பணி ஆற்றியபோது ஒரு பாடசாலையின் பாடசாலைக் கீதத்தை எழுதியதாகவும் அறி யக் கிடைக்கிறது.

ஆஸ்திரேலியாவில் வாழும் எழுத்தாளர் முருக பூபதி தனது அஞ்சலி குறிப்பிலே கவிஞர் கந்தவனத்தின் மலையக கவிதை பங்களிப்பு குறித்து அவரே தனது நூலில் முன்னுரை யாக குறிப்பிட்டுள்ளவற்றை பதிவு செய்துள்ளார்.

சிட்டுக்குருவி நூலின் இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் கந்தவனம் இவ்வாறு எழுதுகிறார்:

*'1959-ஆம் ஆண்டில் கவிஞர் சு. சொக்கநாதன், கவிஞர் ஈழவாணன் ஆகியோரையும் எனது மாணவர் சிலரையும் அழைத்து மாத்தளை இலக்கிய வட்டம் என்ற பெயரில் எழுத் தாளர் சங்கம் ஒன்றை உருவாக்கினேன். அடுத்த ஆண்டே மாத்தளை புனித தோமையார் கல்லூரியில் இலக்கிய வட்டம் பாரதியாருக்கு விழா எடுத்தது. மாத்தளையில் மட்டுமன்றி மலைநாடு முழுவதுமே பெரிதும் பேசப்பட்ட ஒரு இலக்கிய விழாவாக அது அமைந்தது. அதனைத் தொடர்ந்து எமக்கு அழைப்புகள் அதிகமாயின. மலைநாட்டில் பல கவியரங்கங் களிலே மூவரும் பங்குபற்றிக் கவிதை இரசனையை வளர்த் ததோடு பல சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களையும் விதைத் தோம்'.*

மேற்படி அஞ்சலி குறிப்புகளிலும் கவிஞர் வி. கந்தவனத்தின் மலையகக் கவிதை பங்களிப்பு விதந்து கூறப்பட்டுள்ள மையை அவதானிக்கலாம்.

அந்த வகையில் 60-களில் மலையக இளைஞர் தளபதி எனப் போற்றப்பட்ட இர. சிவலிங்கம், 'தோரணம்' எனும் தலைப்பில் முன்னுரை எழுதிய, கவிஞர் ஈழக்குமார் தொகுத்து வெளி யிட்ட அந்த நாளைய மலையக கவிஞர்கள் பலரதும் கவிதை கள் அடங்கிய குறிஞ்சிப்பூ கவிதை தொகுதியில் உள்ளடங் கியுள்ள கவிஞர் கந்தவனத்தின் மளிகை கவிதையை இங்கே பதிவு செய்வது பொருத்தமானது.

## தாழ்வு தகத்தெறிவாய்!

***ஆய்எமைப் பார் இவண் மாய்வதைப் பார்வெறும்***
***ஆடுகள் மாடுகள்போல் ஓய்வுபொருள் அறி***
***யோமத நால் இடும்***
***ஓலம் ஒழித்திடுநீ!***

***மேய்வதைப் பார்வெயில் காய்வதைப் பார்உடல் மெலிவதை***
***நலிவதைநாம் நாய்களைப் போல்மழை தோய்கிற மேது யர்***
***நம்மவர்க் கென்றுளதோ?***

***சேய்களைப் பார்கொடும் பேய்களின் சூழ்ச்சியில் செத்தவர்***
***வாழ்க்கையம்மா தாய்நில மேதென***
***வாய் வயிறேதெனத் தாழ்த்துவ தேனருள்வாய்!***

**நாடு உயிர்வாழ - தோட்டத்து**
**நாரியர் செய்யும்நன்மை**
**ஈடு இணையற்றது-**
**சரித்திர ஏட்டில் இடம்பெற்றது**

**சிந்தனை செய்ய வேண்டும் -**
**அரசிவர் சேவையுணர வேண்டும்**
**வந்தனை செய்ய வேண்டும் இவர்தம்**
**வாழ்வையு யர்த்தவேண்டும்!**

மலையகத்திற்கு ஆசிரியர் பணிக்காக வருகை தந்த கவிஞர் வி. கந்தவனம் தனது கவிதை ஆளுமை ஊடாக மலையகத் தில் சமகால கவிஞர்களுடன் இணைந்து கவிதை செழு மைக்கு பங்காற்றியுள்ளார் என்பதனை அவரது மறைவில் மலையக இலக்கியம் சார்பில், எழுத்தாளர்கள் சார்பில் நினைவுகூர்வது பொருத்தமானது. கவிஞர் வி. கந்தவனம் அவர்களுக்கு மலையக மக்கள் சார்பில் எமது அஞ்சலி.



thilagar@thaiveedu.com

# தில்லையரும் குளறி மணியமும்

## - சேகர் தம்பிராஜா

2005-ஆம் ஆண்டு அரங்காடல் நிகழ்விற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. கலைஞர் திவ்யராஜன் அவர்கள் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் 'நரகொடு சுவர்க்கம்' நாடகத்தை இயக்குவதாகவும் அதற்காக நடிகர்களை தேர்வு செய்வதுமான வேலையோடு, எனக்கும் ஒரு பாத்திரம் இருப்பதாக கூறினார். கூடவே அதில் வரும் தில்லை எனும் பெரியவர் பாத்திரத்தில் கவிஞர் கந்தவனம் அவர்கள் நடிக்கிறார் எனவும் கூறியிருந்தார். நான் சொன்னேன் 'உது வேலைக்காகாது'. அவர் சரியான பிஸியான



ஆள். நிறைய வேலைகளுடன் ஓடித்திரிபவர், நீங்கள் ஓர் இடத்தில பிடிச்சு வைச்சு இருத்தி, நடிக்க வைக்க மாட்டியள். வேறு யாரை எண்டாலும் பாருங்கோ' எண்டு. அதற்கு திவ்யராஜனும் மனவெளியாரும் எதற்கும் ஒருக்கால் முயற்சி செய்து பாப்பம், பிறகு முடிவெடுப்பம் எனக் கூறினார்கள்.

முதல் நாள் பாத்திரங்களை அறிமுகப்படுத்தி ஒரு வாசிப்பும் இடம்பெற்று முடிந்த வேளை, அடுத்த வாசிப்பிற்கான நாளை எப்போது வைப்பது என கேட்டபோது, முதல் ஆளாய் கந்தவனம் ஐயா அவர்கள் தனது நாட்குறிப்பு புத்தகத்தை திறந்து தனக்கு நேரமில்லாத நாட்களை பட்டியலிட்டார். எனது அனுமானம் பலித்தது போல, திவ்யராஜன் அவர்களின் காதுக்குள் போய் 'நான் சொன்னான் தானே உது சரிப்பட்டுவராது எண்டு' என குசுகுசுத்தேன். அவரும் பொறுமையாக கொஞ்சம் விட்டுப் பாப்பம் என அமைதி காத்தார். ஆனால் என் எதிர்பார்ப்பிற்கு மாறாக, அவர் சொன்ன நாட்களில் தவறாமல் முதல் ஆளாக ஒத்திகைக்கு சமூகம் தந்து ஒத்துழைப்பு வழங்கியது மட்டுமன்றி, திவ்வியராஜன் அவர்களை பிரத்யேகமாக அழைத்தும் தனது பயிற்சியினை எடுத்து வந்தது, அவர் மீது இருந்த மாறான எண்ணத்தை அடியோடு இல்லாமல் ஆக்கியது.

கவிஞர் கந்தவனமவர்கள் நாடகத்தை முறையாக கற்றது மட்டுமன்றி, நாடகமும் அரங்கியலும் கற்பிப்பதற்கான ஆசிரியர் கல்வியினையும் கற்றுக் கொண்டவர். அத்தோடு யாழ் நாடக அரங்கக் கல்லூரியின் உருவாக்கத்திற்கும் முன் நின்றவர்களில் ஒருவராக விளங்கியவர். அப்படிப்பட்ட ஒரு நாடகரோடு சேர்ந்து பயணிக்கும் வாய்ப்பு என்பது அலாதியானது. அனுபவங்களை கற்றுத் தந்தது. நரகோடு சுவர்க்கம் நாடகம் ஒத்திகை பார்த்துக் கொண்டு இருக்கும் பொழுது அவர் தனக்கு வழங்கிய தில்லைநாதர் பாத்திரத்துடன் ஒன்றித்து பயிற்சி பெற்று, நெறியாளர் எப்படி விரும்பினாரோ அதற்கு ஏற்றபடி தனது பாத்திரத்துக்குள் ஒன்றித்து மேடையில் தோன்றியிருப்பார். அதன் பின்னர் அவர் மீதான மரியாதையும் நெருக்கமும் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டு வந்தது மாத்திரமன்றி, எனது நாடக குரு அரசய்யா பற்றி பேசும் பொழுதெல்லாம் தமது பழைய கால நட்பனுபவங்களை மகிழ்வுடன் பகிர்ந்து வந்தார். ஒரு கட்டத்தில் எனது பெயரை மறந்து, நாடகத்தில் வரும் எனது பாத்திரப் பெயரான 'குளறி மணியம்' எனும் பெயர் கொண்டே என்னை அழைத்தும் பேசியும் வந்தார். அய்யாவின் துணைவியார் பேசும் பொழுதும் என்னை 'குளறி' என்றே அழைத்துக் கொள்வார், அல்லது 'குளறி' என்றே அறிமுகப்படுத்திக் கொள்வேன். இப்படியாகவே ஐயாவுக்கும் எமக்குமான நட்பு இன்னும் வலுக்கத் தொடங்கியது.

ஒரு நாள் ஐயாவிடமிருந்து எனக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. தம்பி எனது 'நாடக அனுபவங்கள்' எனும் புத்தகம் ஒன்று வந்திருக்கிறது. அதை நீங்கள்தான் வெளியீடு செய்து தரவேண்டும் என கேட்டுக்கொண்டார். நான் அதற்கு அன்



பான மறுப்பு தெரிவித்து, ஐயா உங்களுக்கு நிறைய பேர் இருக்கிறார்கள், அவர்களிடம் கொடுத்து நீங்கள் வெளியீடு செய்யுங்கள் என கூறினேன். ஆனால் அவரோ விடாப்பிடியாக நின்று, நீரும் துஷியந்தும் (அன்றுதான், நண்பர் துஷியின் பெயர் துஷியந் என்பதைத் தெரிந்து கொண்டேன்.) தான் இதனை வெளியீடு செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவரின் அன்பான பணிப்பை ஏற்று நானும் நண்பரும் வெளியீடு செய்வதற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டோம். அதன் போது நண்பர் துஷி ஞானப்பிரகாசம் அவர்கள் ஒரு யோசனை கூறினார். புத்தக வெளியீடுகள் என்பது வழமையான வெளியீடாக அமையாமல் ஒரு புது மாதிரியான வெளியீடாக இதை நாங்கள் மாற்றி அமைப்போமா எனக் கேட்டர். நானும் அதற்கு சம்மதம் கூறினேன். அவருக்கு ஒரு சந்தேகம் எழுந்து திரும்ப கேட்டார், சேகர் நாங்கள் இதை செய்யலாம்... ஆனால், ஐயா ஒத்துக் கொள்வாரோ... என்று இழுத்தார். எனக்கு ஐயா மீது நல்ல நம்பிக்கை இருந்தது. எதற்கும், ஐயாவையே கேட்டுப் பார்ப்போம் என... இருவருமாக இருந்து ஒரு மதிய நேரம் தொலைபேசியில் தொடர்பு கொண்டோம். மறுமுனையில் ஐயா பதில் அளித்தார். நான் வளமையான பாணியில் குளறி பேசுகிறேன் என கூறினேன். மறுபக்கம் இருந்து பலத்த சிரிப்புடன் சொல்லும் தம்பி என்றார். நாங்கள் எங்களது யோசனைகளை அவரிடம் முன் வைத்தோம். எந்தவித மறுப்பும் இன்றி... ‘தம்பி புத்தகம் என்னுடையது, வெளியீடு செய்வது நீங்கள். நீங்கள் என்ன செய்ய வேண்டும் எனச் சொல்லுங்கள், நான் வந்து இருந்து செய்துவிட்டு போகிறேன்’ எனப் பதில் தந்தார். நாங்கள் நினைத்தது மாதிரியே அந்த புத்தக வெளியீடு கொடி, குடை, ஆலவட்டம், பொன்னாடை, மாலை எதுவும் இன்றி... வலு நேர்த்தியாக, குறித்த நேரத்துக்கு தொடங்கி குறித்த நேரத்துக்கு முடித்து, வழமைக்கு மாறான ஒரு வெளியீட்டு விழாவாக, ஓர் உரையாடல் விழாவாக அதை அமைத்துக் அமைத்துக் கொடுத்தோம். விழாவில், நூல் விற்றுப் பெற்ற பணத்தை, தாயகத்தில் நலிந்த ஒரு கலைஞனுக்கு உதவி செய்தார் என்பதும் அவரது தாராள மனதை காட்டி நிற்கிறது.

கலைஞர் கே.எஸ். பாலச்சந்திரன் அவர்களின் மறைவு குறித்தான அஞ்சலிப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறுவதற்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தது. அவரும் அய்யாவும் மிகுந்த நட்பு கொண்டவர்கள். அதே நேரத்தில் அவருக்கான ஓர் அஞ்சலி நிகழ்வை, ஒரு நிகழ்த்து கலையாக நடத்துவோம் என முடிவு செய்து, கே.எஸ். பாலச்சந்திரன் அவர்களின் படைப்பில் இருந்து ஒரு பகுதியை ஒரு உரையாடலாக அளிக்கை செய்வதென முடிவு செய்து, ஐயாவிடம் அணுகினேன். ஆனால், இதற்கு ஐயா சம்மதிக்க மாட்டார் என அந்த ஏற்பாட்டாளர்கள் கூறினார்கள். ‘ஐயாவோட ஆடேலாது’ என்பது அவர்களின் வாதமாக இருந்தது. ஐயா நாங்கள் இப்படி ஓர் அஞ்சலி நிகழ்வு ஒன்று கே.எஸ். பாலச்சந்திரன் அவர்களுக்கு செய்ய வேண்டும், அதில் உங்களது பதிவும் இருக்க வேண்டும் என அன்பாக வேண்டிக் கொண்டேன். அவரும் முழு மனதுடன் சம்மதித்து, அந்த அளிக்கையினை ஆக்கித் தந்தார். உண்மையில் அவர் நினைத்திருந்தால்... நான் ஒரு சிறியவன், எனது யோசனைக்கு மாறாக, இல்லை தம்பி... நான் நினைச்ச மாதிரி தான் செய்வேன்... என்று அடம் பிடித்து இருக்கலாம். அப்படி அல்லாமல், அந்த நிகழ்வு சிறப்பாக அமைய வேண்டும் எனும் குறிக்கோளுடன், அந்த வாசிப்பு அளிக்கை நிகழ்வை மிகவும் உணர்வு பூர்வமாக ஆக்கித் தந்தார்.

இதுதான் அவர் ஓர் நிறைகுடமாக எம் மத்தியில் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் சில. ஐயா எப்பொழுதும் அன்பானவர். கடும் சொல் கொன்று பேசாதவர். கோவப்படாதவர். எல்லோரையும் அரவணைத்து அவர்களை ஊக்கப்படுத்தி நல்வழிப் படுத்துபவர். எம்மைப் போன்ற சிறியவர்களுக்கு, அவர் ஒரு வழிகாட்டி. ஐயாவின் இழப்பு கலைச் சமூகத்திற்கு ஈடுசெய்ய முடியா பேரிழப்பு.



sekar.thambyrajah@thaiveedu.com



# கவிநாயகருடன் நான் – மனுவல் ஜேசுதாசன்

கவிநாயகர் கந்தவனம் அவர்கள் மனிதத்துக்கு தன் வாழ் நாளில் ஆற்றிய அளப்பரிய உன்னத சேவையை நினைவு கூரும் வண்ணம் தாய்வீடு பத்திரிகை சிறப்பு இதழ் வெளியிடு வது உகந்தது: தாய்வீடு பத்திரிகையின் வளர்ச்சிக்கு கவிஞர் வழங்கிய பங்களிப்புக்கு அது பொருத்தமானது.

இச்சிறப்பிதழுக்கு கட்டுரை எழுதுமாறு நான் பணிக்கப்பட்ட போது, மிகவும் கண்டிப்புடன் கவிஞருடன் எனக்கான உறவு பற்றியும் அவரிடமிருந்து நான் கற்றுக்கொண்டவை எவை என் பதை மட்டும் எழுதித்தருமாறு கூறினார். இந்தப் பணிப்பு மிக வும் நேர்த்தியானது:

கவிஞர் ஒரு திறந்த ஏடு, ஒழிவு மறைவற்று வாழ்ந்தவர். தன் வாழ்நாளில் தான் சந்தித்த ஒவ்வொருவர் பற்றியும், அவர்கள் தன் வாழ்வில் ஏற்படுத்திய நன்மையான தாக்கங்கள் எவை என சகலவற்றையும் 'கவிநாயகம் வாழ்வும் வரலாறும்' என்ற தனது சுயசரிதையில் கூறியுள்ளார். கவிநாயகம் வாழ்வும் வர லாறும் 2009-ம் ஆண்டு பவள விழாக் குழுவினால் கனடாவில் கொண்டாடப்பட்ட பொழுது வெளியிடப்பட்டது. அந்த பவள விழா குழுவின் தலைமை எனக்கு வழங்கப்பட்ட காரணத்தால் அவரது வாழ்வும் வரலாறும் சுயசரிதையை நூல்வடிவில் கொண்டுவருவதற்காக அவருடன் சேர்ந்து நான் செயற்பட்ட அந்த சில நாட்கள் என் மனதை விட்டு என்றும் நீங்காத நாட் கள். அவரது அறிவு, செயல்திறன், மனிதநேயம், எல்லாவற் றிற்கும் மேலாக அவரது பணிவும், சாதாரணனிடமிருந்தும் ஏதாவது ஒன்றைக் கற்றுக்கொள்ளலாம் என்ற மனப்பாங்கும் என்னைக் கவர்ந்தவை. இந்நூல் பற்றிய கலந்தாலோசனை யின் போது எனது கருத்துக்களுக்கும் செவிமடுத்து நூலில் மாற்றங்கள் செய்தது அவர்பால் என்னை மேலும் ஈர்த்தது. பவள விழாவின் முன் என்னைச் சட்டத்தரணி என அழைத் தார். பவள விழாவின் பின் என்னைத் தலைவா என அழைத் தார். இது எனக்கு வியப்பாக இருந்தது. இதைப் புரிந்து கொள்ள எனக்குக் காலம் எடுத்தது.

6-வது உலகத் தமிழ் பண்பாட்டு மாநாடு ரொறொன்ரொ மாந கரில் தமிழ் உலகம் போற்றும் வண்ணம் நடைபெற்றது. அதன் செயலாளராக நான் பணிபுரிந்த வேளையில் முதல் முறையாக கவிநாயகரை சந்திக்கும் வாய்ப்பும் அவரின் பின் னணி பற்றி அறிந்துகொள்ளும் சந்தர்ப்பமும் எனக்கு கிடைத் தது. இருப்பினும் எங்களிடையே நெருங்கிய உறவு அப்பொ ழுது ஏற்படவில்லை. அக்காலங்களில் அவர் தலைமை வகித்த பல அரங்குகளில் எனக்கும் இடை இடையே உரை நிகழ்த்தும் பணிகள் கிடைத்தன. ஆனால் எங்கள் உறவில் அசைக்க முடியாத நெருக்கம் 1999-ம் ஆண்டு டிசம்பர் மாதம் தான் ஏற்பட்டது. நான் எழுதிய '90 நாட்களுள்' என்ற நாவல் 1999 டிசம்பர் 19-ம் திகதி ஸ்காபரோவில் வெளியிடப் பட்டது. இந்நூல் வெளியீட்டுக்கு யார் யாரை உரை நிகழ்த்த அழைக்கலாம் என நான் சஞ்சலப்பட்ட பொழுது என் துணை யாக நின்றவர் நண்பர் கதிர் துரைசிங்கம். அவரின் ஆலோச னையின் பிரகாரம் அதிபர் கனகசபாபதி, கவிஞர் கந்தவனம் என்ற இரு அறிஞர்கள் என் தந்தையின் ஸ்தானத்தில் என் வாழ்வில் இணைந்தனர். நூல் வெளியீட்டின் பின் மேற்கூறிய மூவரும் பல வருடங்களாக எனது அழைப்புக்கு மதிப்பளித்து வருட முதல் நாள் என் இல்லத்திற்கு வருகை தந்து என்னை





யும் எனது மனைவி மக்களையும் வாழ்த்திச் செல்வார்கள். இன்று இருவரையும் நாம் இழந்திருந்தாலும் அவர்கள் எம்முள்ளத்தில் ஏற்படுத்திய பசுமையான நினைவுகள் என்றும் பதிந்திருக்கும்.

எனது பிள்ளைகள் சிறுவர்களாய் இருந்த பொழுது அவர்களுக்கு தமிழ் கற்கவேண்டுமென்ற ஆசை. அவர்களின் விருப்பப்படி அப்பொழுது ஸ்காபரோவில் தமிழ் கற்பிக்கப்பட்ட தமிழர் நிறுவனம் ஒன்றில் சேர்ப்பித்தேன். எனது பிள்ளைகள்



கனடா வருமுன் சேசெல்ஸ் என்ற நாட்டில் பிறந்து வளர்ந்த காரணத்தால் மூவரில் இருவருக்கு தமிழ் பேசத் தெரிந்திருக்கவில்லை. இதை அவதானித்த ஆசிரியர் ஒருவர் 'உங்க அப்பா தமிழ் தமிழ் என்று சாகிறார் உங்களுக்குத் தமிழ் தெரியாதது வெட்கம்.' என எனது பிள்ளைகளுக்கு வசை பாடியுள்ளார். இதைக் கேட்ட பிள்ளைகள் அந்த நிறுவனத்தில் தொடர்ந்து தமிழ் படிக்க மறுத்து விட்டார்கள். இந்தச் சம்பவத்தைக் கவிநாயகரிடம் பின் ஒரு நாள் கூறினேன். இதைக் கேட்டு அதிர்ச்சியுடன் கவலைப்பட்ட அந்த மகான், நான் பிள்ளைகளுக்கு தமிழ் படிப்பிக்கிறேன் என வற்புறுத்தி எனது வீட்டிற்கு வந்து என் பிள்ளைகளுக்கு மட்டும் பிரத்தியேகமாகத் தமிழ் கற்பித்தார். அந்த நாட்களில் நான் அவருடன் பயணித்ததை எண்ணிப்பார்க்கையில் மனம் நெகிழ்கிறது.

இடை இடையே எனது சட்ட அலுவலகத்திற்கு வருவார். சிலர் போல் நேரடியாக எனது அறைக்குள் வரமாட்டார். சேவை பெறுனர் தங்கியிருக்கும் பகுதியில் பொறுமையுடன் இருப்பார். எனது உதவியாளர் வேறு இனத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால் இவரின் அருமை பெருமையை அவர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. தற்செயலாக எனது மனைவி சேவை பெறுனருடன் உரையாடுவதற்கு அப்பகுதிக்கு செல்லும் பொழுது கவிஞரைக் கண்டுவிட்டால் தான் நான் எனது அறையைவிட்டு உடனடியாக வெளியே வந்து அவர் என்னைச் சந்திக்க வந்த விடயத்தை வினவுவேன். ஒரு பொழுதும் தன் சொந்த தேவைக்காக அவர் என் அலுவலகத்திற்கு வந்ததில்லை.

கவிநாயகர் அவர்களை நான் ஒருமுறை நேர்காணல் ஒன்றை நடத்தினேன். அப்பொழுது அவரிடம் நான் கேட்ட கேள்விகளில் ஒன்று: 'நீங்கள் 80-க்கும் மேலான நூல்கள் வெளியிட்டுள்ளீர்கள், எண்ணற்ற கவிதைகள் படைத்துள்ளீர்கள், இன்னும் தொடர்ந்தும் எழுதுகிறீர்கள், உங்கள் வேலைப்பளுக்களுடன் இது எவ்வாறு சாத்தியமாகிறது.' இதற்கு அவரது பதில், 'ஊக்கமது கைவிடேல்' இது தான் எனது மந்திர வார்த்தை. அல்லாவிடில், ஆறு வயதிலே பெற்றோர்களை இழந்துவிட்ட நான், தாய் மாமனின் அரவணைப்பில் வளர்ந்த நான், எவ்வாறு நீங்கள் நினைக்கும் சாதனைகளை நிறைவேற்றியிருக்க முடியும்.

அவரின், ஊக்கமது கைவிடேல் என்ற தாரக மந்திரத்தைப் பாவித்து நேற்று இரவு 10 மணிக்கு ஆரம்பித்த இந்த கட்டுரையை இன்று காலை 1:00 மணிக்கு நிறைவு செய்கிறேன்.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நிலவிய எங்கள் உறவில் எதுவித தொய்வும் என்றும் ஏற்பட்டதில்லை. என்றும் எங்கள் உள்ளத்தில் நிறைந்திருப்பார்.




jesudasan.m@thaiveedu.com



# சாகுவதக் கவிதைகளின் சொந்தக்காரர் கவிநாயகர் வி. கந்தவனம்

**- இயல்வாணன்**

சந்தவெழில் கொஞ்சி விளையாடும் கவிதைகளுக்குச் சொந்தக்காரர். மேடையில் ஏறினால் ஆற்றொழுக்காகக் கவி பாடுவதில் வல்லவர். சபையைத் தன் கவிதையால் கட்டி யாண்டவர். அவர்தான் கவியரங்குக்கோர் கந்தவனம் என இர சிகமணி கனக செந்திநாதனால் சிறப்பிக்கப்பட்ட கவிஞர்



வி. கந்தவனம்! அவர் கவிஞராக மட்டுமல்ல பாடநூல் எழுத் தாளராக, நடிகராக, பல்துறை அறிஞராக, பேச்சாளராக, சம யச் சொற்பொழிவாளராக, கல்வியியலாளராக, சிறுவர் இலக் கிய கர்த்தாவாக என கலை இலக்கியத்துக்கும் சமூகத்துக் கும் பெருந்தொண்டாற்றிய ஒரு பெருமகனாவார்.

### கல்வியும் பணியும்:

தென்மராட்சி மண்ணின் பெரிய கிராமங்களில் ஒன்றான நுணாவில் மேற்கில் ஒக்ரோபர் 28, 1933 அன்று பிறந்த விநா யகர் கந்தவனம் தனது ஆரம்பக் கல்வியை நுணாவில் மேற்கு கணேச வித்தியாசாலையிலும் (இன்று நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலை - மூடப்பட்டுள்ளது) இடைநிலைக் கல் வியை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் நிறைவு செய் தார். சிரேஷ்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் (எஸ்.எஸ்.சி) சித்தியடைந்த அவர் ஓராண்டு டிறிபேக் கல்லூரியில் எழுதுவி னைஞராகக் கடமை புரிந்தார்.

இக்காலத்தில் வடமாநில ஓவியப் பரிசோதகர் கனகசபையி டம் ஓவியமும், சங்கீத பூஷணம் நடேசனிடம் சங்கீதமும் பயின்றார். பின்னர் சென்னை கிறிஸ்துவக் கல்லூரியிலும், கோவை அரசினர் கலைக் கல்லூரியிலும் தனது மேற்கல்வி யைத் தொடர்ந்தார். சென்னை பல்கலைக்கழகத்தில் இளங் கலைமாணி பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். 1958-ம் ஆண்டு ஆசிரியர் பணியில் இணைந்து கொண்ட அவர் 6 ஆண்டுகள் மாத்தளை சென். தோமஸ் கல்லூரியில் கற் பித்து, இடமாற்றம் பெற்று வந்து வயாவிளான் மத்திய கல்லூ ரியில் கற்பித்தார்.

கல்வி அமைச்சின் பாடநூற் சபையில் பணியாற்றியதுடன் அரச புவியியல் பாட நூல் எழுத்தாளர் குழுவில் ஒருவராகக் கடமையாற்றினார். புவியியல் பாடத் துணை நூல்களையும் (1970) எழுதினார். 1973-ம் ஆண்டு அதிபர் நியமனம் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தின் யோகபுரம் மகாவித்தியாலயத் தில் பணியாற்றினார். ஆசிரிய ஆலோசகராகவும் கடமை புரிந்தார். பின்னர் அளவெட்டி அருணோதயக் கல்லூரியிலும் சிறிது காலம் அதிபராகக் கடமையாற்றினார். கொழும்புத் துறை ஆசிரிய கலாசாலையில் பகுதி நேர விரிவுரையாளராக வும் பணிபுரிந்தார்.

இந்தக் காலங்களில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா தகைமை யைப் பெற்றார். இலங்கையில் க.பொ.த. உயர்தரத்தில் நாட கவியல் ஒரு பாடமாக ஆரம்பிக்கப்பட்ட போது தெரிவு செய் யப்பட்ட ஆசிரியர்களுக்கு இலங்கைப் பல்கலைக்கழக கொழும்பு வளாகத்தில் நாடக டிப்ளோமா பயிற்சி வழங்கப் பட்டது. அதில் இவர் பங்குபற்றிச் சிறப்புச் சித்தியடைந்தது டன் வடபுலத்தில் முதன்முதலில் (வயாவிளான் மத்திய கல் லூரியில்) நாடக பாடத்தைக் கற்பித்த ஆசிரியராக இவர் விளங்கினார். அத்துடன், நாடக பாட ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயிற்றுவிக்கும் வளவாளராகவும் விளங்கி னார். உயர் ஆங்கில டிப்ளோமா படிப்பையும் நிறைவு செய்து சான்றிதழைப் பெற்றுக் கொண்டார். இவ்வாறு எல்லாத் துறை களிலும் ஆழ்ந்தகன்று கற்ற அறிவும், அனுபவமும் அவரை ஒரு அறிஞராகவே ஆக்கியது.

1980-ம் ஆண்டு தென் ஆபிரிக்காவுக்கு கற்பித்தல் பணிக்கா கப் பயணமான அவர் அந்நாட்டின் டிரான்ஸ்கி பிராந்தியத் தில் (நெல்சன் மண்டெலா பிறந்த இடம்) புனித கத்பேட்ஸ் உயர் பாடசாலையில் மானிடவியல் துறைத் தலைவராகக் கடமையாற்றினார். 1988-ம் ஆண்டு கனடாவுக்குச் சென்ற அவர் தனது 91-வது வயதில் அமரத்துவம் அடையும் வரை யில் அங்கேயே வாழ்ந்து வந்தார்.



## எழுத்துலகம்:

1948-ம் ஆண்டு தனது 15-வது வயதிலேயே எழுத ஆரம்பித் துவிட்டார். ஈழகேசரியின் சிறுவர் பகுதியில் 'ஒரு கால் மூன்று தலை' என்ற தலைப்பில் இவர் எழுதிய கட்டுரையே இவரது முதல் ஆக்கமாகும். 1952-ல் ஈழகேசரி பொதுநலவாய பொருட்காட்சி தொடர்பில் ஒரு கட்டுரைப் போட்டியை நடத்தி யது. இப்போட்டியில் இவர் முதற் பரிசைப் பெற்றுக் கொண் டார். 1954-ம் ஆண்டு இவரது முதலாவது நூலான 'ஒன்றரை ரூபாய்' என்ற குறுநாவல் வெளிவந்தது. இதனை கவிநாயகன் என்ற புனைபெயரில் எழுதினார். அதிலிருந்து பல்வேறு துறை சார்ந்து 80-ற்கு மேற்பட்ட நூல்களை அவர் எழுதியுள்ளார். வித்தியானந்தமாலை, அரும்பு, பூச்சரம், தேவைக்கேற்ற திரு முறைத் திரட்டு உள்ளிட்ட பல நூல்களைத் தொகுத்துள் ளார்.

கீரிமலையினிலே குறுங்காவியம் (1969), பாடுமனமே கவிதை கள் (1972), இலக்கிய உலகம் கவிதைகள் (1964), ஏனிந்தப் பெருமூச்சு கவிதைகள் (1965), கூனியின் சாதனை கட்டுரை (1966), நுணாவிலூர் இட வரலாறு (1971), உய்யும் வழி அரங் கக் கவிதைகள் (1972), கவியரங்கில் கந்தவனம் (1972), நல் லூர் நாற்பது (1971), முறிகண்டிப் பத்து, குரும்பசிட்டி விநாய கர் பத்து, பரீட்சையில் சித்தியடைவதெப்படி? (1972), இலங் கையில் ஆசிரியத் தொழில் (1977), விநாயகப்பா பக்திப் பனு வல் (1993), ஒன்றுபட்டால் நாட்டிய நாடகம் (1994), மணிக்கவி கள் (1994), இயற்கைத்தமிழ் (1995), எழுத்தாளர் (2005), முத் தான தொண்டர் (1995), புதிய சைவ வினாவிடை (1997), தங் கம்மா நான்மணிமாலை (1997), பத்துப் பாட்டு (1998), ஆறு முகம் (1998), 12 Short Stories (1998), Lasting Lights (1998), சிவபுராண தத்துவம் (1998), கனடாவில் சைவசமயம் (2000), அது வேறுவிதமான காதல் (2001), சிவவழிபாடு (2002), கந் தன் கதை (2002), ஓ கனடா (2002), வரிக்கவிகள் (2002), தமிழ்க் கவிதை மரபு (2005), பொங்குதமிழ் (2005), ஆன்மீகக் கவிதைகள் (2007), பாவாரம் (2007), கவிநாயகம் வாழ்வும் வரலாறும் வானொலி தொடர் நேர்காணல் (2009) முதலான நூல்கள் குறிப்பிடத்தக்கன. ஆலயங்கள் பலவற்றுக்கும், குறிப்பாக கொல்லங்கிராய் விநாயகருக்கு, பல பிரபந்தங் களை எழுதியுள்ளார். சிறுவருக்கான சமயக் கதை நூல்களை யும் (கந்தனும் ஔவையாரும், விநாயகப் பெருமானும் அகத் தியரும்) எழுதியுள்ளார். இவ்வாறு தமிழன்னைக்கு மகுடம் சூடும் பல படைப்புகள் மூலம் தனது பல்துறை ஆளுமையை வெளிக்காட்டியுள்ளார்.

யாழ். இலக்கிய வட்டத்தை உருவாக்குவதில் முக்கிய பங் காற்றிய கவிஞர் கந்தவனம் எட்டு ஆண்டுகள் அதன் தலை வராகவும் கடமையாற்றினார். தான் வாழ்ந்த, பணியாற்றிய இடங்களில் இலக்கிய மன்றங்களை உருவாக்கியுள்ளார். கவிமணி, மதுரகவி, இலக்கிய வித்தகர், சைவதுரந்தரர் முத லான 20-ற்கும் மேற்பட்ட பட்டங்கள் வழங்கி தமிழுலகம் இவ ரைக் கௌரவித்துள்ளது.

கீரிமலையினிலே இவரை இலக்கிய உலகுக்கு அடையாளங் காட்டிய குறுங்காவியமாகும்.கீரிமலைக் கடற்கரையின் அழகை, அந்தக் கரையின் வரலாற்று முக்கியத்துவத்தை பாடிய கவிஞர் அதற்குள் பழந்தமிழ் இலக்கியச் செழுமையை, தமிழின் சிறப் பையெல்லாம் பாடிச் செல்கிறார். உவமையணி சிறக்கும் இக் காவியம் சுவை தருவதாகும் என்கிறார் அணிந்துரை எழுதிய பண்டிதர் சு. வேலுப்பிள்ளை.

***கீரிமலையினிலே***
***நலந்தரும்***
***கேணி யருகினிலே***
***மாரிமழை யதனால்***
***மலர்ந்தெழும்***
***மண்ணினைப் போலவுள்ளம்***
***பூரித்து நிற்கையிலே***
***நினைவுகள்***
***பூத்துக் குலுங்கையிலே***
***தூரத் தொடர்ந்து சென்றேன்***
***மெள்ள மெள்ள***
***சூழல் கடந்து நின்றேன்...***

என்று தொடங்குகிறது இக்குறுங்காவியம். கடற்கரையருகே நிற்கும் போது பார்வையில் எழும் காட்சிகளும், அதனைத்

தொடர்ந்து மேலெழும் நினைவுகளும் இக்காவியத்தில் காட்டப்பட்டுள்ளன.

*நீரினில் மூழ்கியொரு*
*முனிவர் தங்*
*கீரிமு கக்கோலம்*
*தீர மகிழ்ந்து சிவன்*
*கோயிலைச்*
*சேர்ந்து வணங்குதல் போல்*
*இராமபி ரான்கணையால்*
*இழந் துகை*
*யின்றிநின் றேங்கையிலே*
*இராவணன் வீணையினைக்*
*கவர்ந்துசித்*
*திராங்கதன் மீட்பது போல்...*

என்று இக்காவியம் வரலாற்றுச் சம்பவங்களைப் பேசுகின்றது. முசுகுந்தச் சக்கரவர்த்தி, மாருதப்புரவீகவல்லி முதலானோர் கீரிமலையைத் தரிசித்து மீண்ட கதையும் பேசப்படுகிறது.

*தமிழுக் காகத் தலையு வந்து*
*தந்த குமணன் பின்னே*
*தமிழைக் காத்த பெருமை நின்னைச்*
*சாரும் வள்ளல் பெரும*
*தமிழின் மேன்மை எடுத்துக் காட்டத்*
*தக்க கம்பன் றன்னை*
*இமிழ்ப ரப்பிற் கண்டெ டுத்த*
*ஏற்றம் நின்ன தன்றோ?*

என்று பாடுவதன் மூலம் கீரிமலைக் கடற்கரைக்கு ஒரு இலக்கியப் பெறுமானத்தைக் கொடுத்து உவந்து ஏத்துகிறார். சாதாரணமான ஒரு இயற்கையை உவமித்து, உருவகித்து, தற்குறிப்பேற்றி இலக்கியப் பெறுமானமளிப்பது கவிஞரின் கைவன்மை. அதை இக் குறுங்காவியத்தில் பல இடங்களில் கவிஞர் செய்துள்ளார்.

*தமிழை மட்டும் கற்ற மக்கள்*
*தாழ்வை என்ன சொல்வேன்?*
*தமிழைப் பாடும் புலவர் வாடும்*
*தன்மை சொல்லப் போமோ*
*தமிழை விற்கத் தயக்க மின்றித்*
*தலைகொ டுக்கப் போவார்*
*தமிழ ரென்று சொல்ல வெள்கித்*
*தலைகு னிந்து தாழ்வார்*

என்று ஓரிடத்தில் பாடுகிறார். தமிழோடு மட்டும் நிற்பவர்கள் அடைகின்ற தாழ்ச்சியை, தமிழ் இலக்கியம் படைக்கும் கவிஞரது வறுமையை, தமிழரென்று சொல்ல வெட்கப்படும் தமிழரின் கீழ்மையை இந்தக் காவியத்துக்குள் கொண்டு வருகிறார். இதன் மூலம் இந்தக் காவியம் கதைக்களம் தாண்டி உலகப் பொதுமையாகப் பெறுமானம் கொள்கிறது.

கவியரங்குகள் பல கண்டவர் கவிஞர் கந்தவனம். பல கவியரங்குகளுக்குத் தலைமை தாங்கியவர். சபையோரைக் கவரும் வண்ணம் சொற்சிலம்பம் ஆடி, நயந்து ரசிக்கத்தக்க வகையில் அவையைக் கட்டி வைக்கக்கூடிய கவிஞராக அக்காலத்தில் கவிஞர் கந்தவனம் விளங்கியுள்ளார்.

இரசிகமணி கனக செந்திநாதன் கவியரங்குக்கோர் கந்தவனம் எனப் பாராட்டுகிறார் என்றால் அது வெறும் பாராட்டல்ல. ‘கவிஞர் கந்தவனத்தின் கவிதைகளைக் கேட்டு ரசிப்பதற்கென்று ஒரு கூட்டம் இருக்கிறது. இது அவர் அரிதில் முயன்று பெற்ற பெரும்பேறு. அவருடைய நாகரீகமான நகைச்சுவை, கிராமாந்தரச் சொற்களைக் கையாளுந் திறன், புதிய புதிய உவமைகள், வாசிக்குந் திறன் என்பன அவரை மற்றைய கவிஞர்களிலும் பார்க்க தனித்தவராக, உயர்ந்தவராக, இரசிகர்கள் முன் நிறுத்துகின்றது’ என்று கனக செந்திநாதன் இவரது கவியரங்கத் தனித்துவத்தை எடுத்துரைத்திருக்கிறார்.

‘கவியரங்கங்களிலே கவிதைகளைக் கல்லாதாரும் விளங்கும் வண்ணம் எடுத்துச் சொல்லும் ஓர் காந்தசக்தி கந்தவனத்திடம் உண்டு. கவியரங்கங்கள் மூலம் சாதாரண மக்கள் மத்தியில் கவிதா ரசனையை வளர்த்து வரும் பெருமை அவருக்குண்டு. மக்களைத் தட்டியெழுப்பி, உரிமை உணர்வை ஊட்டி வருகிறார். பெருமை நிலையை எடுத்துச் சொல்லுகிறார். கெட்ட பழக்கங்களைச் சாடுகிறார். நல்ல நெறிமுறைகளை நாட்டுகிறார்’ என்று பாராளுமன்ற உறுப்பினர் வீ.என். நவரத்தினம் கவியரங்கில் தான் ரசித்தவற்றைச் சிலாகித்து கவிஞரைப் பாராட்டுவது அவரது மேதாவிலாசத்தை அணி செய்கிறது.

‘கவிஞர் கந்தவனம் மேடையில் எழுந்து நிற்கின்றார் என்றவுடன் வமையான கரகோசத்தைவிட சபையில் எழும் முகமலர்ச்சியும், சிரிப்பொலியும் சபைக்கும் மேடைக்கும் ஒரு புதிய பற்றையும் பாசத்தையும் ஒரு நொடிப்பொழுதில் ஏற்படுத்தி விடுகின்ற மந்திர சக்தியையும் தன்வயப்படுத்தும் ஆற்றலையும், காண்போர் உள்ளத்தில் என்றும் நிலைபெறச் செய்வர்’ என்று பொதுவுடமைவாதியும் எழுத்தாளருமான வ. பொன்னம்பலம் குறிப்பிட்டுள்ளமையும் அவரது சிறப்பைப் புலப்படுத்துகிறது.

ஒருமுறை கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற கவியரங்கில் கந்தவனத்தின் கவிதை மழையை ரசித்து மகிழ்ந்த காஞ்சிபுரம் மெய்கண்டாராதீன குருமகா சன்னிதானம் ‘*இந்தக் கந்தவனம் எமக்கெல்லாம் சொந்தவனம்*’ என்று போற்றியதாக கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி குறிப்பிட்டுள்ளமையும் நோக்கத்தக்கது.

*தோட்டத்துத் தொழிலாளர்*
*சோராத பெருவீரர்*
*நாட்டிற்பல் லாண்டாய்*
*நாட்டாத தொழிலில்லை*
*ஈட்டிப்பல் வழியாலே*
*இருப்புக்குப் பொருள்தந்து*
*வீட்டுக்கு விளக்காக*
*விளங்கும் உயிரானார்.*

*காடென்றும் வீடென்றும்*
*கல்லென்றும் முள்ளென்றும்*
*பாடெல்லாம் பட்டிங்கு*
*பகலென்றும் இரவென்றும்*
*மாடாக உழைக்கின்றார்*
*மணிநேரம் ஓய்வில்லை.*
*நாடெல்லாம் தேன்பாய*
*நடுகின்றார் முதற்கல்லை*

என்று மலையகம் ஹற்றன் நகரில் ஏனிந்தப் பெருமூச்சு என்ற தலைப்பிலான கவியரங்கில் முழங்கினார்.

*ஒன்றல்ல இரண்டல்ல*
*ஒருகோடி துன்பங்கள்*
*இன்றல்ல நேற்றல்ல*
*ஏறும்பல் லாண்டாக*
*நின்றெம்மை அறுக்கின்ற*
*நீலிப்பேய் செயல்கோடி*
*ஒன்றாகக் கொன்றாலும்*
*ஒழியாத பெருமூச்சு*

என்று பாடி, மலையக மக்களின் நூற்றாண்டுத் துயரத்தை ரசிகர் மீது அழுத்தமாகத் தொற்ற வைத்தார்.

பாரதியார் கவியரங்கொன்றிலே பாரதியை இப்படி மதிப்பிட்டார்.

*பாரை அதிர வைத்து*
*ஊரை உணர்ந்து செத்த*
*பேரை எழுப்பி விட்டவன் - மிக்க*
*நீரைக் கிழித்து நின்று*
*வீரங் கொழித்து வென்று*
*வேரை இறக்கி விட்டவன் - தக்க*
*கூரை சிறக்க வைத்தவன்*

கனவுலகம் என்ற தலைப்பிலான கவியரங்கில் அவர் பாடிய கவிதை வரிகள் இன்றும் நிதர்சனமாக இருப்பதைக் காணலாம்.

*அலைகின்றார் நம்மோர்கள்*
*ஆளுக்கோர் வழிசென்றே*
*அருகில்வான் மதிகூட*
*அணுகிற்றோ இவர்பாடோ*
*உலைகின்றார் சாதியிலே*
*வேற்றுமைகள் உருவாக்கி*
*உயர்வில்லை இனமெல்லாம்*
*ஒன்றென்னும் உணர்வில்லை*
*மலைகின்றார் மடிகின்றார்*
*பிரிவாலே மாக்கள் சீ!*
*மதிப்பில்லை உலகத்தார்*
*மடப்பட்டம் தருகின்றார்*
*குலைவின்றி இனமொன்றக்*
*கூட்டாகக் குலமோங்க*
*குடையொன்றின் கீழ்வாழ்க்கை*
*குடும்பம்போற் கொள்ளாரோ?*

தமிழர் என்ற இனமாக, ஒரே குலமாக ஒரு குடைக்கீழ் வாழ்கின்ற கனவை கவிஞர் காண்கிறார். அந்தக் கனவு இன்று வரை நனவாகாது தொலைதூரம் சென்று கொண்டிருப்பதே நிதர்சனமாயிருக்கிறது. தமிழ்மொழி வனப்பிழந்த ஆதங்கத்தைக் கவிஞர் இவ்வாறு பாடுகிறார்.

*வளமில்லா மொழிகள்பல்*
*வல்லாரை ஈன்றன்னாள்*
*வாடாத ஊக்கத்தால்*
*வளர்ந்தோங்கப் பார்மீதில்*
*இளநல்லாள் தமிழன்னை*
*இருந்தாண்டாள் கொடிகட்டி*
*இறுமாப்பாய் முற்காலம்*
*இப்போதோ அவள் மக்கள்*
*பிளவெல்லாம் தலைக்கொண்டார்*
*பெற்றாளைப் பேணாத*
*பிழைவிட்டார் பிறகென்ன*
*பெயர்பட்டு நிலைகெட்டு*
*அளவில்லாத் துயர்கொண்டார்*
*அதற்கிங்கே தம்மைத்தாம்*
*அறியாத தமிழர்தாம்*
*அடிக்கல்லாய் அமைந்திட்டார்.*

இவ்வாறு இவரது கவியரங்கக் கவிதைகள் தமிழின் வீழ்ச்சியையும், தமிழர்களின் இழிநிலையையும், சமூகத்தின் போலித்தனங்களையும் பேசி, மக்களை நேர்வழியில் சிந்திக்க வைத்தன. தட்டியெழுப்பின.

மரபுக்கவிதை எழுதுபவர்களை வழிப்படுத்தக்கூடிய வகையில் கவிதை மரபு என்ற நூலையும் இவர் ஆக்கியளித்துள்ளார். இந்நூலை வாசிப்பவர்களுக்கு கவிதை தொடர்பான புரிதல் ஏற்படுவதோடு, கவிதையின் மாற்றங்களையும், உள்ளடக்கங்களையும் வகைகளையும் அறியக் கூடியதாக இருக்கிறது.

கவிதை என்றால் என்ன? ஆங்கிலத்துக்கும் தமிழுக்கும் இடையிலான கவிதை தொடர்பான வேறுபாடு, மரபு என்பதன் விளக்கம், சங்ககாலக் கவிதைகள், இடைக்காலக் கவிதைகள், பிற்காலக் கவிதைகள், தற்காலக் கவிதைகள் எவ்வாறு அமைந்திருந்தன என்று இந்நூலில் அவர் எளிமையாக விளங்கத்தக்க வகையில் எடுத்துக் கூறியுள்ளார். செய்யுள் உறுப்புகள், செய்யுள் வகைகள் பற்றியும், தற்காலக் கவிதைகளின் பல்வேறு வகைகள் பற்றியும் இந்நூலில் விளக்கியுள்ளார். அத்துடன் முக்கியமாக பாரதியார் கவிதைகள், விபுலானந்தரின் கங்கையில் விடுத்த ஓலை, தற்கால மாவீரக் கவிதைகள் பற்றிய ஒரு ஆய்வினையும் இந்நூலிலே செய்துள்ளார். இலக்கண நூல்களுக்கூடாக கவிதையை அணுகும் பாங்கிலிருந்து வேறுபட்டு எளிமையாக மரபுக் கவிதையை அறிய வைப்பதாக இந்நூல் அமைந்துள்ளது.

ஆசிரியத் தொழில் என்ற வாண்மைத்துவ நூலினை எழுதிய தன் மூலம் கல்வியியல் ஆய்வொன்றினை முன்வைத்துள்ளார். நுணாவிலூர் என்ற இடவரலாற்று நூலும் முக்கியமான இவரது நூலாகும். பிரபந்தங்கள் பலவற்றை எழுதியுள்ள போதிலும் பிற்காலத்தில் அவரது எழுத்துகள் பல சமயம் சார்ந்ததாகவும், சிறுவர்களை சமயத்தின் பால் ஆற்றுப்படுத்தக்கூடிய ஆக்கங்களைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது.

கவிஞராக அவர் அடையாளப்படுத்தப்பட்ட போதிலும் இலக்கியத்தின் எல்லாவகையிலும் எழுதிய ஒருவராகவே அவரைப் பார்க்க வேண்டும். தமிழுக்கு அணிசெய்யும் படைப்புகளால் பார்போற்ற வாழ்ந்த பெருந்தகை அவர். அவரது சேவை தமிழ்கூறு நல்லுலகம் பெருமைப்படத்தக்கதாகும்.



iyalvaanan@thaiveedu.com



# நாடறிந்த கவிநாயகர் வி. கந்தவனம்

– த. சிவபாலு

நான் பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலத்தில் கவிநாயர் அங்கு கல்விப் பட்டப்பின் படிப்புக் கற்கை நெறியை மேற்கொண்டிருந்தார். நான் கவிநாயகரைப் பற்றி அறிந்திருந்தேன். அவரை நான் முதலில் பார்த்தது பாடசாலையில் உள்ள பதிவு ஏட்டில்தான். வவுனிக்குளம் யோகபுரம் மகாவித்தியாலயத்தில் நான் 1978-ல் பதவியேற்றபோது நான் பதிவிட வேண்டிய செய்திக்கு முன்னர் யார் யார் அதிபர்களாக இருந்துள்ளனர் என்பதைப் பார்க்கும் வாய்ப்புக்கிடைத்தது. 1971-1973 காலப்பகுதியில் வி. கந்தவனம் அவர்கள் அதிபராகப்



பணியாற்றியமையை அறிய முடிந்தது. அத்தோடு அவர் ஒரு சிறந்த கவிஞர் என்பதோடு பாடசாலைக்கான கீதத்தை எழுதிப் பாடவைத்த அக் காலகட்டத்தில், அங்கு இடம்பெற்ற கூட்டுறவு அமைப்பின் மாநாடும் அந்தப் பாடசாலையிலேயே நடைபெற்றுள்ளது. கூட்டுறவு அமைப்பினரின் வேண்டுகோளுக்கு இணங்க அவர் வாழ்த்துக் கீதம் ஒன்றும் இயற்றிக் கொடுத்துள்ளார். அந்தக் கீதத்தை தான் தவறவிட்டுவிட்டேன், அதனை யாரிடமிருந்தாவது பெற்றுத்தர முடியுமா என் பதையும் என்னிடம் கேட்டிருந்தார். அவ்வளவிற்கு அவர் பெயர்பெற்ற கவிஞராக வலம் வந்துள்ளார். இவற்றை கனடாவில் அவரோடு நெருங்கிப் பழகிய காலத்தில் அறிய முடிந்தது மட்டுமன்றி, க.பொ. இரத்தினத்திற்கு நெருங்கியவராகவும் அவரால் ஒழுங்கமைக்கப்பட்ட மூன்று நாட்கள் முத்தமிழ் விழாவில் நெடுந்தீவில் கலந்துகொண்டமையையும் என்னோடு பகிர்ந்துகொண்டார். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம் அவர்களை நினைவு கூர்ந்து உரையாற்றுவதற்காக இலங்கையில் இருந்து வந்து கலந்து கொண்டவர் அரசியல்வாதியான வாசுதேவ நாணயக்கார. அந்தக் கூட்டத்தில் உரையாற்றும் வாய்ப்பு ஏற்பட்டது. இதனை உற்றுக் கவனித்த கவிநாயகர் என்னை அணுகி எழுத்தாளர் இணையத்தில் இணையும் வண்ணம் அழைப்பு விடுத்தார். அது, அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தியது. தொடர்ந்து கனடாவில் உள்ள கல்வியாளர்கள் பலரோடும் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. கவிநாயகர் கந்தவனம் அவர்கள் எழுத்தாளர் இணையத்தோடு மட்டுமன்றி இந்துசமயப் பேரவையையும் ஆரம்பித்து, அதன் மூலம் சமய நெறியை பரப்பி வந்தார். இந்தியாவில் இருந்து சாந்தலிங்கம் அடிகளார், உரையாளர் திருஞானசம்பந்தன் போன்றோரயும் பேராசிரியர்கள் கண்ணப்பன், பசுபதி சுப்பராயன், நா. சுப்பிரமணியன், கலாநிதி கணேசலிங்கம், ஆழ்கடலான் முருகவே பரமநாதன் போன்றோரை உள்வாங்கி ஒன்ராறியோ இந்துசமயப் பேரவை மகாநாடுகளை நடத்திய, ஓர் ஒழுங்கமைப்பாளர், செயல்வீரர், பேச்சாளர், எழுத்தாளர் எனப் பல்திறன் கொண்டவராக எம் மத்தியிலே வாழ்ந்து காட்டினார்.

கல்வித்துறையில் அவர் பதித்த வரலாற்றுத் தடத்தில் ‘ஆசிரியத் தொழில்’ என்னும் ஓர் ஆய்வு நூலை வெளியிட்டார். அந்த நூலை எனது முதுகலைமாணிப் பட்ட ஆய்வுக்காகப் பயன்படுத்த விளைந்தேன். அந்த நூலைப் பெற்றுக்கொள்ள குரும்பசிட்டியில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்று பார்க்க விளைந்தபோது அவர் பாங்கொக்கில் நடைபெறும் ஆசிரியர் சங்க மகாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றுள்ளமை தெரிய வந்தது. இது பெரும் ஏமாற்றத்தை தந்தது. எனினும் சற்றும் எதிர்பாராதவிதமாக அவரது துணைவியார் தவமணி கந்தவனம் அம்மையார் எனக்கு ஒரு புத்தகத்தை எடுத்து அன்பளிப்பாகவே தந்துதவினார். ‘கவிஞர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்’ என்பது போன்று, இல்வாழ்க்கையின் பண்பும் பயனும் எவ்விதம் என்பதைக் கற்றுக்கொள்ளவும் தூண்டியது என்று கவிஞரின் உளமறிந்து நடந்துகொள்ளும் துணைவியாரைப் பராட்டிக்கொண்டு வீடு சேர்ந்தது, இன்றும் பசுமரத்து ஆணியாக எனது நெஞ்சத்தை விட்டு அகலாதுள்ளது.

பட்டதாரி ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக முன்கூட்டியே தெரிவு செய்யப்பட்ட இளம்பட்டதாரி மாணவர்களைத் தேர்ந்தெடுத்து 'கல்விக் கலைமாணிப் பட்டப் படிப்பிற்கு வாய்ப்பு உள்ளது போன்று ஆசிரியப் பணியில் உள்ளவர்களில் இருந்தும் தேர்ந்தெடுத்து பட்டப் பின் கற்கை நெறியாக கல்வி டிப்ளோமா பயிற்சி அளிப்பது பல்கலைக்கழகத்தில் காணப்பட்ட வாய்ப்பாகும். இதனைப் பயன்படுத்திக்கொண்ட கவிநாயகர் கல்வியியல் டிப்ளோமா தராதரப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதோடு, நாடகத் துறையையும் உயர் வகுப்புக்களில் பயிற்றுவிக்க அரசாங்கம் தீர்மானித்ததன் விளைவாக பட்டதாரி ஆசிரியர்களுக்கு அந்த வாய்ப்புக் கிட்டியிருந்தது. அதனைப் பயன்படுத்திக்கொண்ட கவிநாயகர் கல்வியியல் சார்ந்து நாடக டிப்ளோமா தராதரத்தையும் பெற்றுக் கொண்டார்.

கனடாவில் உள்ள எழுத்தாளர் இணையம், இந்து சமயப் பேரவை, குரும்பசிட்டி பழைய மாணவர் சங்கம், வசாவிளான் பழைய மாணவர் சங்கம் போன்றவற்றின் காப்பாளராகவும், முன்னாள் தலைவராகவும் ஸ்தாபகராகவும் பங்காற்றியுள்ளார். 1993-ல் கனடா எழுத்தாளர் இணையத்தை ஆரம்பிப்பதற்கான கால்கோள், இவரது வீட்டில் மொன்றியேல் மற்றும் ரொறன்ரோ எழுத்தாளர்கள் கலந்து ஆலோசனை நடத்தி, அங்குரார்ப்பணம் செய்தனர் என்பது எழுத்தாளர் இணையத்தின் வரலாறு.



### கவிநாயகர் பற்றி நல்லறிஞர்களின் பார்வை:

### பேராசிரியர் சு. வித்தியானந்தன்:

'கவிஞர் கந்தவனத்திடம் மக்கள் யுகக் கவிஞனின் இலட்சியக் குரலைக் கேட்கக் கூடியதாகவிருக்கின்றது. இவரின் உவமைகளிற் புதுமையைக் காணலாம். மண் வாசனை கமழக் காணலாம். இவரது பாட்டுக்கென்று ஒரு பாணியுண்டு, பணியுண்டு. அது உலகியல் வாழ்வில் மனித உயர்வைத் தேடுவதாகவும் நாடுவதாகவும் நாட்டுவதாகவும் அமைகின்றது. எப்பொருள் கவிதைப் பொருளாக இருப்பினும் அதனைக் கையாளும் வகையிலே கவிதைச் சிறப்பு தங்கியுள்ளது என்பதற்கு கந்தவனத்தின் கவிதைகள் சான்று பகர்வன.' என கவிதை ஆளுமைப் பண்பை விபரித்துள்ளார்.

### பேராசிரியர் க. கைலாசபதி:

'இளமைத்துடிப்பம் முதிர்ந்த அடக்கமும் அருகருகே காணப்படுகின்றன. கொதித்தெழும் கோபமும் மெல்லெனச் சிரித்துச் சமாதானம் பெறும் அமைதியும் ஒரே நூலில் தோன்றுகின்றன. பழைய மரபைக் கடைப்பிடிக்கும் பற்றும் புதுமையை அணைத்துக் கொள்ளும் ஆவலும் முரணின்றிக் காட்சி தருகின்றன. சமூக நிலைகுலைவு கண்டு தாங்கொணாக் கோபம் காட்டும் கந்தவனத்தை இங்கு காணமுடிகின்றது' என கருத்தூட்டம் செய்திருப்பது கவிஞர் கந்தவனத்தை எம் மனக்கண்முன்னே நிறுத்துகின்றது.

### இரசிகமணி கனக. செந்திநாதன்:

'வறியவர் பொருளுக்காக வேண்டுகின்றார். குழந்தையில்லாதவர் பிள்ளைப் பேற்றுக்காக வேண்டுகின்றார், முற்றுந் துறந்தவர்களாலேதான் மோட்ச சாம்ராஜ்யத்தைக் கேட்க முடியும். எங்கள் கவிஞர், பொன்னைப் பொருளைக் கேளாமற், போக வாழ்க்கையைக் கேளாமல், தமிழைக் காக்கும்படி கேட்கின்றார். சிலருக்கு இது நகைப்பைக் கொடுக்கலாம், ஆனால் ஈழத்துப் புலவர் மரபுவழி இதுவேதான்!'

### அதிபர் பொ. கனகசபாபதி:

'அவர் சிறந்த ஆசிரியராய், திறனுடைய உப-அதிபராய், ஆற்றல் மிக்க அதிபராய் கடமை புரிந்த போதிலும், தனது மனதிற்குகந்த எழுத்தையோ, பேச்சையோ, கவிபாடுவதையோ சிறப்பாகச் செய்ததுடன், தனது கல்வித் துறைகளிலும் துலங்க வைத்தார் என்பதை, நான் சற்றுப் பொறாமையுடனேயே கூறவேண்டும்'.

### பேராசிரியர் நா. சுப்பிரமணியன்:

'கவிநாயகரை நான் இரண்டு கோணத்தில் பார்க்கின்றேன். ஒன்று என்னைக் கவிதை உலகத்திற்குத் தட்டிக்கொடுத்து பங்கெடுக்க வழிவகுத்தவர். இன்னொன்று எனது துணைவியாரின் ஆசான். மாணவியின் ஆசான் அவருக்குத் தந்தையாவார். எனவே, அவர் எனக்கு மாமா முறையாகின்றார் என்ற அவர், கவிநாயகர் அவர்களோடு கவியரங்குகளில் கலந்து கொண்டது எனக்கு மிகவும் பெருமையையும் புகழையும் தேடித் தந்தது. எவரையும் தட்டிக்கொடுத்து ஆர்வத்தை ஏற்படுத்தும் பெருந்தன்மை கவிநாயகரிடம் உள்ளமையை நான் பாராட்டாமல் விடமுடியாது. நல்லாரைக் காண்பதும் நன்றே, அவர் சொற் கேட்பதுவும் நன்றே, அவரோடு இணங்கி இருப்பதுவும் நன்றே என்பதற்கேற்ப இவர்களோடு சேர்ந்து பழகும் பாக்கியம் எங்கள் எல்லோருக்கும் கிடைத்திருந்தது வரப்பிரசாதமே!' எனக் குறிப்பிட்டுள்ளார்.



**காரை சுந்தரம்பிள்ளை:**

'கவியரங்கத்திற்கொரு கந்தவனம். கருத்துமிக்க சொற்பொழிவுக்கொரு கந்தவனம், நகைச்சுவைக்கொரு கந்தவனம், இனிய எளிய செந்தமிழ் பாடல்களுக்கொரு கந்தவனம். எல்லாவற்றிற்கும் மேலாக சமூக சீர்திருத்தக் கருத்துகளை வாழைப்பழத்திலே ஊசி ஏற்றுவதுபோலத் தமது கவிதைகள் மூலம் கூறிச் சமூகத்தின் ஊழல்களைச் சாடுவதற்கொரு கந்தவனம், அவர் ஒரு கற்பனைச் சுரங்கம். கவிதைக் கனிரசம், அவரது கவிதைகளில் தென்றலுமுண்டு, தீயுமுண்டு, கேலியுமுண்டு, கிண்டலுமுண்டு, இளமையுமுண்டு, எளிமையுமுண்டு, அதுமட்டுமன்றி அழகுமுண்டு, நிறைந்த போருமுண்டு. ஈழத்துக் கவிஞர் வரிசையிலே கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் மரபு பேணும் அதே நேரத்தில் புதுமையை விழையும் ஒரு கவிஞராகத் திகழ்கின்றார்' எனக் காரை சுந்தரம்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டிருப்பது கவிஞரின் ஆழ்ந்த நுண்ணறிவையும் எடுத்த எடுப்பிலேயே கவி புனையும் ஆற்றலையும் வெளிக்காட்டுகின்றது.

**வித்துவான் க. செபரத்தினம்:**

'கடவுளில் வைத்திருக்கும் ஆழமான பக்தி வைராக்கியத்தைப் பேலவே, கவிநாயகருக்குத் தாய் நாட்டிலும், தாய் மொழியிலும் ஆழமான பக்தி வைராக்கியம் உண்டு. கடவுளை மனப்பூர்வமாக நேசிப்பதைப் போலவே அவர் தாய் நாட்டையும் தாய் மொழியையும் நேசிக்கின்றார். பரமனைப் பாக்கள் மூலம் பரவி வழிபடுவதைப் பேலவே, வரத் தாய் நாட்டையும் பாக்கள் மூலம் பரவி வழிபடுகின்றார்'.

**அருட்திரு சாந்தலிங்க அடிகளார்:**

'உயர்புகழ் தீஞ்சுவைத் தமிழ்ப் பாடல்களைத் தங்கு தடையின்றிப் பாடும் பாவலர், சிவநெறிக்கும் செந்தமிழுக்கும் உள்ள தொடர்பை உலகறியச் செய்யும் செந்தண்மையர். மொழிக்கும் மொழி தித்திக்கும் திருமுறைகளும் அருட்பாக்களும் வழிபாட்டில் முதன்மை பெறும் மந்திர மொழிகள் என்பதில் ஆழங்கால் பட்டவர்' எனக் குறிப்பிடுகின்றார்.

***தேவாரத்தின் அருளாற்றல் பேசும்மா மந்திரம் என்று***
***நாவாற்றல்சேர் உமாபதியார் நவின்றார் அவர்தம் கருத்தேற்றம்***
***பாவாரம்எனும் தமிழ்மாலை பகனறகந்த வம்தொண்டு***
***சேவாகனின் திருவருளால் செழித்து வளர வாழ்த்துகின்றோம்***

என்று அவர் மனமார வாழ்த்துவதனை நோக்கும்போது கவிநாயகரின் கவிபுனையும் திறனும் அவரது நோக்கமும் புலனாகின்றது.

**ஔவை நடராசன்:**

***'ஓமர்கயாம்மீட்டுருவம் பெற்றான் - என்றே***
***உள்ளவர்கள் பேச வினி துற்றான்***
***கந்தவனம் என்னுடைய தோழன் - நீடு***
***காலமெல்லாம் கவியிசைத்து வாழ்க!***

என வாழ்த்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

**T. Manickavasagar (Director of Education):**

'Pulavar kandavanam is a great actor. He also had written, Directed and porduced several Plays for school children. The honour of introducing Drama as a subject in the school curriculum for the first itme in the Tamil region goes to Pulavar kandavanam and in this virgin field, he had no peers to equal him or even surpass him, In his context, it is signficant to mention that Pulavar was one of few teachers, selectd out of hundreads to follow a course of studies in Drama at theColombo Campus of the University of Sri lanka.

**வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்):**

'நான் இரண்டே இரண்டு பிரசவித்துள்ளேன். ஆனால், 27 பிர

சவம் செய்த கவிநாயகர் கந்தவனத்தைப் பாராட்டும் தகுதி இல்லை என்றாலும், அவருடன் பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் பயிற்சி பட்ட நெறியினை இருவரும் இரு தடவைகள் செய்துள்ளோம் என்பதனையும் அவர் திருமணமான பின்பு கனக. செந்திநாதன் அவர்களுடன் இணைந்து செய்த சேவைகளையும் நானறிவேன். அவர் தனக்காக வாழ்ந்த காலம் போய் இன்று பிறருக்காக வாழ்ந்துகொண்டிருக்கும் சமூகநலவிரும்பி' எனக் குறிப்பிட்டுள்ளமையில் இருந்து கவிநாயகரின் படைப்பாற்றல் வெளிப்படுகின்றது.

## 'தமிழர் தகவல்' திரு. திருச்செல்வம்:

'கவிஞர்கந்தவனம் அவர்களிடம் நான் படிக்கவில்லை ஆனால் அவரை எனது மானசீகக் குருவாக ஏற்றுக்கொண்டிருக்கின்றேன். எனக்கு வழிகாட்டிகள் இருவர் உள்ளனர். ஒருவர் கவிநாயகர் அவர்கள் மற்றவர் அதிபர் கனகசபாபதி அவர்கள். நான் இரண்டு வயதுப் பாலகனாக இருக்கும்போதே ஈழகேசரியில் அவர் எழுதத் தொடங்கிவிட்டார். அவர் கதைகள், கட்டுரைகளை எழுதிப் பின்னர் கவிதைத் துறைக்கு வந்தவர். வள்ளிநாயகி இராமலிங்கம், லண்டன் தமிழோசை தாசீசியஸ், சுந்தரலிங்கம், சிவானந்தன், முருகையன், முதலிய 12 பேர் நாடகத்துறையில் கல்விப் பட்டப் படிப்புப் படித்தவர்கள். அவர்களுள், கவிநாயகரும் ஒருவர். அவர் கவிதை மட்டுமல்ல நாடகத்துறையிலும் விற்பன்னர். பல நாடகங்களை எழுதியும் நெறிப்படுத்தியும் உள்ளார். கனடாவில் இலக்கிய வட்டத்தை ஆரம்பித்து அதற்குத் தலைமையும் தாங்கி வழிநடத்தி வருகின்றார்.

## சிலம்பொலி சு. செல்லப்பன்:

கவிஞரின் இலக்கியப் புலமைபற்றி அவரது 'காதல் வாழ்க்கை' என்னும் நூலுக்கு அணிந்துரை நல்கிய முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன் 'இவர் உள்ளம் ஈர்க்கும் உரை நடையாளர், கவின்மிகு கவிதையாளர், நயம் தோய்ந்த நாடகாசிரியர், கவியரங்குகளில் பெரும்புகழ்பெற்று, 'கவியரயங்குக் கோர் கந்தவனம்' என்ற பட்டம் பெற்றவர். கால வளர்ச்சிக் கேற்பத் திட்டங்களைத் தீட்டும் கல்வியாளர், தமிழின் பத்து அழகும் பொருந்தியிருக்கப் படைக்கும் படைப்பாளர்' எனக் குறிப்பிட்டுள்ளமை அவரது நிறைமாண் நுண்புலத்தை வெளியுலகிற்குப் படம்பிடித்துக்காட்டுவதாக உள்ளது.

## லண்டன் ஈழகேசரியில்...

'மனிதன் தான் நினைப்பதையும் காண்பதையும் சொல்ல முனைகின்றான். படிப்பதையும் கேட்பதையும் மற்றையோருக்கு கூறவிரும்புகிறான். தனது அனுபவங்களை யாருடனேனும் பகிர்ந்துகொள்ள விளைகின்றான். இவற்றைப் பிறருக்குச் சொல்வதற்குப் பல முறைகள் உண்டு. எழுத்தைக் கருவியாகப் பயன்படுத்துபவன் எழுத்தாளன். அவ்விதம் எழுதுகையில் தனது ஆக்கத் திறனை அவன் பயன்படுத்த வேண்டி இருக்கின்றது' என்பது அவரது எழுத்தாளன் பற்றிய கோட்பாடாக லண்டன் ஈழகேசரியில் பதிவிட்டிருந்தமை கருத்திற் கொள்ளத்தக்கது.

கவிநாயகர் கந்தவனம் அவர்கள் ஆங்கிலத்திலும் கவி புனையும் ஆற்றல் கைவரப்பெற்றவர் என்பது எம்மில் பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பிருந்திருக்காது. ஆனால் அவர் ஆங்கிலத்தில் சிறுகதைகள் மட்டுமல்ல கவிதைகளையே யாத்திருக்கின்றார் என்பதுதான் உண்மை. எடுத்துக்காட்டாக அவர் ஆபிரிக்காவில் பணியாற்றியவேளை அவரது பாடசாலை அதிபராக விருந்த சி.எம். மடாலாவின் புதல்வி மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றதைப் பாராட்டி எடுக்கப்பட்ட விழாவில் எழுதி வாசித்த கவிதை. இதோ அந்தக் கவிதை வரிகள்:

### The Lily of the Vale:

The simple and humble girl
Is now a valuable Pearl
The gem so far unseen
Has to the public dispayed her sheen
The lily of the Mquaqnya vale
Is the subject of manjy a glorious tale!
Our rose, our lotus
The pet of all daughters
A worthy issue of the handsome Mavas
The angel of the Eden of the Madalas
Bibiana has brought home fame
And now all smack their libs at her name!

தமிழே உயிர் மூச்சு என வாழ்ந்து காட்டிய கவிஞர் தமிழ் மக்களுக்கு ஏற்படும் துயர் கண்டு துடித்துப்போன சந்தர்ப்பங்கள் அனேகம். தனது இனத்தின் நிலையை எப்படி போக்கலாம் எனவும் அவர் கனவு கண்டு வந்தவர். ஈழத்து ஆலயங்களைப் பற்றிப் பாடிய பெரும்பாலான பாடல்களில், அவர் ஈழப் போருக்கு முடிவு காண வேண்டும் என்னும் கருத்தையும் மக்களின் துயரைப் போக்க வேண்டும் என நினைந்து நெஞ்சுருகப் பாடுகின்றார்.

செந்தமிழ் மக்கள் அல்லல்கள் தீரவும்
வந்து வான் தமிழ் ஈழம் மலரவும்
தந்தருள் காக்குத் தக்க சுதுமலை
எந்தை யாரினண யின்கழல் வாழ்கவே.

என தமிழரின் வெந்துயர் தீரவேண்டிப் பாடும் உளத்தராக, தமிழர் விடுதலை வேட்கை கொண்டவராக இருந்துள்ளார்.

ஈழத்துச் சிவதலங்களைப் பற்றி அவர் பாடிய பாடல்கள் அனைத்திலும் மக்களின் துயர்களையும் மார்க்கம் முன்வைக்கப்பட்டுள்ளதோடு அந்தந்த ஊரின் சிறப்புக்களையும் அவர் விதந்தும் நயந்தும் உரைத்திருப்பது சிறப்புடையது. அது அவரின் ஆற்றல் வெளிப்பாடும் தெய்வ நம்பிக்கையையும் எடுத்துக்காட்டுகின்றது.

கவிநாயகர் இதுவரை எண்பதிற்கும் மேலான நூல்களை யாத்துத் தந்துள்ளார். பாவாரப் பனுவலில் 1170 பாக்களைத் தந்துள்ளார். சிதம்பரத்தில் தொடங்கி 70 தென்னக சிவ திருத்தலங்களையும் மீதமான 47 ஈழத்துச் சிவதலங்களையும் உள்ளடக்கி மொத்தமாக 117 திருத்தலங்களைக் குறித்து அவரது இறைவழிபாடு அமைந்துள்ளது.



sivapalu@thaiveedu.com



# நினைவோடு ஒரு நினைவேடு

**- டிலிப்குமார்**

கனடியத் தமிழ்ச் சமூகத்தில் பலராலும் விரும்பப்பட்ட வராக, பெருமதிப்புக்குரியவராகத் திகழ்ந்தவர் கவிஞர் விநாயகர் கந்தவனம் அவர்கள்.

பெருவாரியான தமிழர் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து சமூக மாகக் கட்டமைக்கப்படத் தொடங்கிய சூழலில் இலக்கியம், கலை, தாய்மொழிக்கல்வி, ஆன்மீகம், அரங்கியல், மொழிபெ யர்ப்பியல் என்ற பரப்புகளிற் காணப்பட்ட வெற்றிடங்களை நிறைத்து, தன்னாலியன்ற சமூகப்பணிகளைக் குறைவின்றி ஆற்றியவர் கவிஞர் கந்தவனம் அவர்கள்.

வீடு இதழ் தாய்வீடு இதழாக மாற்றம் பெற்றுப் புதிய தளத்தில் தோன்றியபோது, அதற்குப் பல வடிவங்களில் வனப்பும் வளமும் சேர்த்தவர் கவிஞர். தாய்வீடு இதழுக்கும் கவிஞருக் குமான நெருக்கமான தொடர்பு அவருடைய இறுதி நாட்கள் வரையில் தொடர்ந்திருந்தது. இக்குறிப்பு, கனடாவில் அவர் இயங்கிய ஆளுமைப் பரப்புகள் குறித்துச் சுருக்கமாகப் பேச முனைகின்றது.

கலை, இலக்கியம், ஆன்மீகம், அரங்கியல் என்ற பெருந்த ளங்களில் ஆளுமைமிக்கவரான கவிஞர், பணி தொடர்பாக தென்னாபிரிக்கா சென்று, அங்கிருந்து கனடாவுக்குப் புலம் பெயர்ந்தவர். கவிஞர் கனடாவுக்குப் பெயர்வுற்ற காலத்தி லேதான் தம்மைச் சமூகமாக ஒருங்கிணைத்து இயங்கத் தொடங்கியிருந்தனர் தமிழர்.

சிறு சிறு அமைப்புகளாகத் தம்மைக் கட்டமைத்துக் கலை மேடைகளை உருவாக்கியபோது, அம்மேடைகளுக்கான வடி வங்களை வகுத்துக்கொடுத்தவர்களுள் ஒருவராகக் கவிஞரைக் கூறலாம். இவ்வாறான மேடைகளில் கவியரங்கம் அல்லது பட்டிமன்றம் இருப்பது வழமை. தொடக்ககாலத்தில் இவ்விரு நிகழ்வுகளும் கவிஞர் இல்லாமல் இல்லை என்று கூறுவதுதான் பொருத்தமானது.

கனடாவில் நூல் வெளியீடு என்ற மரபின் ஆரம்ப காலத்தவர் கவிஞர் எனக் கூறலாம். கனடாவில் கட்டமைக்கப்பட்ட தமிழர் வாழ்வைப் பற்றியும் வழிபாடு பற்றியும் அதிகமாக எழுதியவர் கவிஞரே.

ஒரு கல்வியாளராகத் திகழ்ந்த கந்தவனம் அவர்கள் நல்லதொரு புனைவிலக்கியப் படைப்பாளி என்பதையும் பலர் அறிந்திருப்பர். குறு நாவல், சிறுகதை, மரபுக்கவிதை, புதுக்கவிதை எனப் படைப்புத்தளங்களில் ஓர் இலக்கியவாதி யாகவும் எழுத்தாளராகவும் தாயகத்திலேயே தம்மை நிறுவிக் கொண்ட கவிஞர் அந்த ஆளுமைத்தளங்களில் கனடாவிலும் சிறந்தார்.

கனடிய மண்ணில் அப்போதைய வட யோர்க் கல்விச்ச





பையின் பள்ளிகளில் ஒரு பாடமாகத் தமிழ் மொழி கற்பிக்கப் படத் தொடங்கியவேளை, மறைந்த அதிபர் பொ. கனக-சபாபதி அவர்கள் அக்கல்விக்குப் பொறுப்பாக இருந்தார். அவ்வேளை கற்பித்தலுக்கான வளங்கள் தேவை என்ற நிலையில் தொடக்ககாலத் தமிழ்க்கல்வி நூல்கள் தோற்றம் பெறவும் கவிஞர் உதவியிருக்கின்றார். இக்காலத்தில்தான் கனடாவின் தேசியப் பண்ணை அழகுறத் தமிழாக்கம் செய் தார். தமிழ் ஆசிரியர் பலரும் கற்பித்தல் தொடர்பான ஐயங் களைக் கவிஞரிடமே கேட்டுத் தெளிந்துகொண்டனர்.

தன்னுடைய பட்டயக்கல்வியில் அரங்கியலை ஒரு பாடமாகத் தெரிவுசெய்து தேர்ந்த கவிஞர், அரங்கியற் கல்வி ஆசிரியரா கவும் திகழ்ந்திருக்கின்றார். சிறந்த நடிகரான இவர், இங்கு குழந்தை ம. சண்முகலிங்கம் எழுதிய நாடகமொன்றில் முதன் மைப் பாத்திரம் ஏற்று நடித்துப் பெருமை பெற்றிருந்தார்.

இறைபக்தரான இவர், கனடாவில் தோற்றம் கொண்ட கோவில்கள் பலவற்றோடும் நெருக்கமான தொடர்புகொண்டு ஆக்கபூர்வமான அறிவுரைகளையும் மக்களுக்கான ஆன்மீக உரைகளையும் வழங்கி வந்திருந்தார்.

கவிஞர் அவர்களின் மற்றுமொரு சிறப்பு, தலைமுறை இடைவெளி கடந்த தொடர்பாடல். இளைய தலைமுறையி னரோடு இணக்கமாக உறவுகளைப் பேணி, அவர்களுக்கு வழிகாட்டுவதில் ஈடுபாடு கொண்டவர். நிகழ்வுகளின்போதும் இளையோருடன் நகைச்சுவை உணர்வு பொங்கச் சிரித்துப் பேசுவதை எப்போதும் காணலாம்.

தாய்வீடு அடுத்தடுத்து முன்னெடுக்கவேண்டிய நகர்வுகள் பற்றிக் கதைப்பதற்காக 2007 நடுப்பகுதியில் ஓவியர் கருணாவும் நானும் கவிஞரின் வீட்டுக்குச் சென்றிருந்தோம். அன்றிலிருந்து, தாய்வீடு இதழின் உள்ளடக்கங்களைத் திட்ட மிடுவதில் கணிசமான பங்களிப்பைத் தொடர்ந்து வழங்கி வந் திருக்கின்றார் கவிஞர்.

படைப்புகள் தொடர்பில் ஐயங்கள் தோன்றியபோதெல்லாம் அதைத் தெளிவுறத் தீர்த்து வைத்தவர் கவிஞர். அன்றிலி ருந்து ஆரம்பித்ததுதான் கவிஞரின் ஆலோசனையும் நட்பும். தாய்வீட்டில் கவிஞரின் ஆக்கங்களும் வெளிவர ஆரம்-பித்தன.

தாய்வீடு இதழிலே வெளிவந்த ‘காதல் வாழ்க்கை' என்ற தொடர், ‘காந்தளகம்' வெளியீடாக நூலுருப்பெற்றது.

தொடர்ந்து, தாய்வீடு இதழிலே வெளிவந்த மற்றொரு தொடர் ‘இலக்கிய ஆளுமைகள்'. குரும்பசிட்டி நலன்புரி சபை - கனடா-வின் அனுசரணையுடன் ‘இலக்கிய ஆளுமைகள்' ஏப்பிரல் மாதம் நூலுருப் பெறுகின்றது.

எனக்கும் அவருக்குமான உறவு, ஊடகம், இலக்கியம் என்ற தளங்களுக்கு அப்பாலும் நெருக்கம் மிக்கதாகவே இருந்தது. என்னுடைய மகளின் திருமணத்தின் போது... எவ்வித சடங்கு களையும் பின்பற்றாத, நம்பிக்கை இல்லாத, தெரிந்துகொள் ளாத எனக்குப் பின்னால்... கவிஞரும் கதிர் துரைசிங்கம் அவர்களுமே இருந்தார்கள். திருமணப் பதிவின்போது சாட்சி ஒப்பம் இட்டுச் சிறப்பித்தவரும் கவிஞரே.

அந்த அளவுக்கு எங்களுக்குள் நெருக்கம் இருந்தது.

நான் அவரை இறுதியாகச் சந்தித்தபோது அதிகமாகப் பேசும் ஆற்றல் குன்றியிருந்தார். ஏறக்குறைய முக்கால் மணிநேரம் இருவரும், ஒருவர் கையை ஒருவர் பற்றியவாறு, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டிருந்தோம். வார்த்தை களின்றி உணர்வுகள் பேசிக்கொண்ட தருணம் அது.


அவருடைய வாழ்வையும் படைப்புகளையும் பதிவுசெய்யும் பணியில் தாய்வீடு தொடர்ந்து ஈடுபடும்.

கனடா மண்ணில் ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு மேல் தமிழ்ச் சமூகத்துக்குத் தேவையான பல்வேறு பணிகளை பெரும் ஈடுபாட்டுடன் செய்தவர் கவிஞர். கனடியத் தமிழர் வர லாற்றில் கவிநாயகர் கந்தவனம் எனும் பெயர் ஆழமாகப் பதிவுறும் என்பதில் ஐயமில்லை.



dilipkumar@thaiveedu.com

# மனுநீதி



**- த. ஜீவராஜ்**

ஆதினிக்கும், கோதைக்கும் இலச்சனையிடும் பணியில் ஆளப்பிறந்தாள் ஏற்படுத்திய பழிவாங்கல் நிகழ்வும், அதனைத் தொடர்ந்து நங்கை சானி அம்மையார் விசாரணைக்காக வருகை தந்ததும் நிகழ்ந்து மூன்று நாட்கள் ஆகிவிட்டிருந்தன. அறிவாட்டிப் பாட்டி அன்று நடந்த நிகழ்வுகள் தொடர்பில் மிகுந்த வருத்தமும், ஒருவித அச்சமும் கொண்டிருக்கிறாள் என்பதை ஆதினியால் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. ஆலயத்தில் தொண்டாற்றும் தேவரடியார்கள் ஆதினிக்கும், கோதைக்கும் நடந்த நிகழ்வு தொடர்பில் வருத்தங்களையும், கவலைகளையும் தெரிவித்த போதும் அறிவாட்டி இத்தனை தூரம் அதனைப் பெரிதாக்கி இருக்க வேண்டாம் என்று ஒருவித விசனத்தோடு குறைபட்டுக் கொண்டார்கள். குற்றம் செய்தவர் இருக்க நீதி கேட்டவரை ஏன் நிந்திக்கிறார்கள் என்பது புரியாமல் இருந்தது ஆதினிக்கு. அது தொடர்பில் பெரியவர்களுடன் கலந்துரையாடுவதற்கான வாய்ப்புகள் எதுவும் அடுத்து வந்த நாட்களில் அவளுக்கு கிட்டாமல் இருந்தது.

ஆதினிக்கும், கோதைக்கும் ஆலய வழிபாட்டில் தேவரடியாரின் பங்களிப்பு தொடர்பில் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. முல்லையழகி ஆலயப் பணிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். அறிவாட்டிப் பாட்டி விஜயராஜேஸ்வரத்திற்கு சென்று விட்டிருந்தாள். கோதையின் தாய் ஆதினிக்கும், கோதைக்கும் உதவியாக பணிகள் செய்து கொண்டிருந்தாள். நாட்கள் மிக வேகமாக நகர்ந்து கொண்டிருந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை அந்தத் துயர நிகழ்வு நடந்து இரண்டு வாரங்கள் நகர்ந்து விட்டிருந்தது. அன்றுதான் நீண்ட காலத்தின் பின் ஐவரும் ஓய்வாக ஒன்று கூடி இருந்தார்கள். மாலை நேரம் வெளியில் மழை பெய்து கொண்டிருந்தது.

நேற்று பெருங்குறிப் பெருமக்கள் சபை கூடியதாமே? ஆளப்பிறந்தாள் பாட்டி தொடர்பில் என்ன முடிவெடுத்து இருக்கிறார்கள்? என்று கேட்டாள் ஆதினி.

நானே பயந்து கொண்டிருக்கிறேன். ஏன் பிள்ளை நீ ஞாபகப்படுத்துகிறாய். சதுர்வேதி மங்கலத்து சபையில பிராமணப் பெண்ணுக்கு எதிராக முறைப்பாடு செய்துவிட்டு முழி பிதுங்கி இருக்கிறம். வயிற்றில நெருப்பக் கட்டிட்டு இருக்கிற மாதிரி இருக்கிறது என்று ஏதேதோ சொன்னாள் கோதையின் தாய்.

பிழை செய்தவர்தானே பயப்பட வேண்டும். ஏன் நாங்கள் பயப்படுகிறோம்? என்றாள் கோதை.

பெருங்குறிப் பெருமக்கள் சபையில கனநேரம் விவாதம் நடந்ததாம். கடைசியில தீர்ப்பு சொல்லும் போது மாலையாகி விட்டதாம் என்றாள் கவலையுடன் முல்லையழகி.

ஏன் பாட்டி எங்களை கூப்பிடல? என்றாள் ஆதினி.

ஆளப்பிறந்தாள் பாட்டி போயிருந்தாவா? என்று வினாவினாள் கோதை.

சபைக்கு பெண்கள அனுமதிக்க மாட்டாங்க. வேளைக்காரர் படை தாங்கள் செய்த விசாரணைகளை கூட்டத்தில சொல்லி இருப்பாங்க. அதன்படிதான் தீர்ப்பு வந்திருக்கு. ஆளப்பிறந்தாளுக்கு தண்டனை விவரங்களை சொல்லி அனுப்பி இருப்பாங்க என்றாள் முல்லையழகி.

தண்டனையை எத வச்சு சொல்லுவாங்க பாட்டி? என்று ஆர்வத்தோடு கேட்டாள் கோதை.

மனுநீதிப் படிதான் என்றாள் முல்லையழகி.

மனுநீதி கண்ட சோழ மன்னர் சொன்னதா? என்று கோதையின் தாய் கேட்டாள்.

இல்லம்மா அது வேற. அம்மா மனுநீதியையும், மனுநீதி கண்ட சோழ மன்னரையும் ஒன்றாக நினைசிட்டா என்றாள் சிரித்தவாறு கோதை.

முன்னொரு காலத்தில் சோழ மன்னர் ஒருவர் நீதி தவறாமல் ஆட்சி செய்து வந்தார். அவர் தன்னுடைய ஆட்சியில யாரும் நீதி கிடைக்காமல் இருக்கக்கூடாது என்பதற்காக அரண்மனை வாயிலில் ஒரு மணியினை கட்டி வைத்திருந்தார்.



அந்த மணியை அடிப்பதன் ஊடாக அரசரிடம் யார் வேண்டு மென்றாலும் நீதி கேட்கக் கூடியதாக இருந்தது. ஆனால் அந்த சோழ மன்னரின் ஆட்சியில் அதற்கான தேவை இருக் கவே இல்லை. அரசருக்கு ஒரேயொரு மகன் இருந்தான். அவன் ஒரு முறை தேரில் பயணம் செய்து கொண்டிருந்த போது தவறுதலாக ஒரு கன்றுக்குட்டி தேரில் அகப்பட்டு இறந்துவிட்டது. கன்றை இழந்த தாய்ப் பசு அரசரின் அரண் மனை மணியை அடித்து நீதி கேட்டது. வழக்கை தீர விசா ரித்த அரசர் தன்னுடைய மகனையும் அதேபோல தேரினால் ஏற்றிக் கொல்லும்படி ஆணையிட்டார். அந்த மன்னர்தான் பிற்காலங்களில் மனுநீதி கண்ட சோழர் என்று எல்லோராலும் அழைக்கப்பட்டவர் என்று விளக்கமாகவும், சுருக்கமாகவும்

கோதையின் தாய்க்கு கதையைக் கூறினாள் ஆதினி.

மனுநீதி என்கிறது மனுதர்ம சாஸ்திரம். அது மனிதர்கள் பிறந் ததிலிருந்து இறக்கிற வரைக்கும் பின்பற்ற வேண்டிய ஒழுக்க விதிகளை சொல்லுற நூல் என்றாள் முல்லையழகி. விளங் கிக் கொண்டதாக இருவரையும் பார்த்து தலையாட்டினாள் கோதையின் தாய்.

மனுநீதிப்படிதான் தண்டனை கொடுக்க வேண்டும் என்று எதில சொல்லப்பட்டிருக்கிறது என்று முல்லையழகியிடம் கேட்டாள் ஆதினி.

பெரிய வளமை பத்ததியிலதான் என்று அறிவாட்டியிடம் இருந்து பதில் வந்தது.

ஓலைச்சுவடியா பாட்டி என்று ஆர்வத்தோடு கேட்டாள் ஆதினி.

ஓலைச்சுவடியும் இருக்கு, ஆனால் அத ஒரு பெரிய கல்வெட் டுல பொறிச்சி வைச்சிருக்கிறாங்க. செப்பேட்டிலையும் இருக் கிறதாக கேள்விப்பட்டிருக்கிறேன் என்றாள் அறிவாட்டி.

கல்வெட்ட பார்த்திருக்கிறீர்களா பாட்டி என்று அருகில் வந்து கேட்டாள் கோதை.

ஒரே ஒரு தடவை என்றபடி பெருமூச்சு விட்டாள் அறிவாட்டி. திருக்கோணேச்சரத்தில இருந்து கந்தளாய்க்கு பயணிக்கிற பெருவழி தொடங்கிற இடத்தில பாபநாச தீர்த்தத்திற்கு வடக் குப் பக்கமாக ஒரு பெரிய பாறையில் அந்த கல்வெட்டு இருக் குது. கோடு கீறி இரண்டு இரண்டு வரிகளாக எழுதி இருக்கி றாங்க. குறைஞ்சது முப்பது வரியாவது வரும். பெரிய நீள மான வசனங்கள். மாட்டு வண்டியில இருந்தபடி எட்டிப் பார்த் ததால என்னால வாசிக்க முடியல என்று தனது பழைய ஞாப கங்களை அசைபோட்டாள் அறிவாட்டி.

சோழப் பெருமன்னர்கள் காலத்தில் இருந்து பெரிய வழமை பத்ததிப்படிதானே குற்றங்களுக்கு தண்டனை கொடுக்கப்படு கிறது என்று கூறினாள் முல்லையழகி.

சரி பாட்டி அந்தச் சட்டங்களைப் படிச்சு என்ன தண்டனை ஆளப்பிறந்தாள் பாட்டிக்குக் கொடுத்தாங்க என்று கேட்டாள் ஆதினி.

தண்டப்பணம் கட்டணும் அல்லது நிறைநீரில் நிறுத்தி வைத்து தேங்காய் வாங்கணும் இந்த இரண்டு தண்டனை யில் ஏதாவது ஒன்றை ஆளப்பிறந்தாளுக்கு குடுக்கிறதாக முடிவு எடுத்திருக்கிறாங்க என்றாள் முல்லையழகி.

இது என்ன புதினாமாக் கிடக்கிறது. எங்கட ஊரில இராஜ்ஜிய கட்டளைய மீறி நடந்தால் மண் குடத்த தலையில வச்சு கசை யடி அல்லவா குடுக்கிறவங்க என்றாள் ஆதங்கத்தோடு கோதையின் தாய்.

சாதாரண பெண்கள் குற்றம் செய்தால் அதுதான் தண்டனை என்று மனுநீதி சொல்கிறது. தேவரடியார் குற்றம் செய்தால் நிறை நீரில் நிற்க வைத்து தேங்காய் வாங்குவார்கள். பிராம ணப் பெண் என்றால் அதே குற்றத்திற்கு தண்டப்பணம் கொடுத்தால் போதுமானது என்று மனுநீதி சொல்கிறது என்று விளக்கம் அளித்தாள் முல்லையழகி. ஒரே குற்றத்திற்கு ஏன் இப்படி வேறு வேறு தண்டனைகள் என்று புரியாமல் ஆதினி யும் கோதையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

கசையடிபட்டு முதுகுத் தோல் கிழிஞ்சு போன எத்தனை பேரை பார்த்திருக்கிறேன். இதுல மண் குடம் உடைஞ்சா அதுக்கு வேறயா அடி விழும். இது என்ன காசைக் கொடுத்து தண்டனையிலிருந்து தப்புவது என்று முல்லையழகி கூறி யதை ஏற்றுக் கொள்ள முடியாமல் ஏதேதோ புலம்பிக் கொண் டிருந்தாள் கோதையின் தாய்.

யார் அழுதாலும் பத்ததிப் பாட்டில் இருக்கிறபடிதானே தண் டனை கொடுப்பாங்க. இது காலம் காலமாக நடந்துவாறது தானே. எனக்கு இருக்கிற பயமெல்லாம் ஆளப்பிறந்தாளைப் பற்றித்தான், அவள் இலேசுப்பட்ட ஆள் இல்லை. தண்டக் காசு கொடுக்கிறதுக்குப் பதிலாக தண்ணியில நிக்கப் போகி றேன் என்று அடம் பிடிப்பாள் என்று நினைக்கிறேன். அப்பத் தான் சதுர்வேதி மங்கலத்தாக்களுக்கு எங்கள் மேல கோவம் வரும் என்று வருத்தத்தோடு சொன்னாள் அறிவாட்டி.

அது என்ன தண்டனை பாட்டி என்று கோதை கேட்டாள். அவள் எதைக் கேட்கிறாள் என்பதைப் புரிந்து கொண்ட அறி வாட்டி கந்தளாய் குளத்தில தலைக்கு மேல் இரு கைகளா லும் தேங்காயை ஏந்திக் கொண்டு ஊரவர் பார்க்கும்படி நிறை நீரில் நிற்க வைப்பார்கள் என்று கூறினாள்.

படுத்திருந்த ஆதினி எழுந்து அறிவாட்டிக்கு அருகில் வந் தாள். பசுவின் கன்றிற்கும், தன் சொந்த மகனுக்கும் ஒரே மாதிரியான நீதியை வழங்கிய மனுநீதி கண்ட சோழன் வழி வந்த சோழப் பெரு மன்னர்கள் ஏன் பாட்டி ஒரே குற்றத்திற்கு மனிதரில் பாகுபாடு பார்த்து வேற வேற தண்டனைகள் கொடுக்கிற மனுநீதியை தங்களுடைய சட்ட நூலாக ஏற்றுக் கொண்டாங்க என்று ஆதினி அறிவாட்டியைப் பார்த்து கேட் டாள்.

படுத்திருந்த அறிவாட்டி திடுக்கிட்டு எழுந்து ஆதினியை ஆரத்தழுவிக் கொண்டாள். கோதையும், அவள் தாயும், முல் லையழகியும் அவர்களுக்கு நெருக்கமாக வந்து அமர்ந்து கொண்டார்கள். ஆயிரம் வருஷம் கழிச்சாவது எல்லா மனிச ரையும் ஒன்றாக நடத்துற காலம் வரவேண்டுமென்று ஆண்ட வன வேண்டுவம் என்று அறிவாட்டி ஆதினியின் காதில் இரக சியமாக் கூறியது நிசப்தம் நிறைந்த அந்த அறையில் கூடியி ருந்த அனைவருக்கும் தெளிவாகக் கேட்டது.

தொடரும்...



jeevarajah@thaiveedu.com

# வவுனியா வடக்கில் பிராமி, தமிழ்க் கல்வெட்டுகள்

நெடுங்கேணி சானுஜன்

பழங்காலத்தில் சில செய்திகள் என்றும் அழியாமல் இருக்க வேண்டும் என்று மக்கள் விரும்பினார்கள், அதனால், பல பொருள்கள் மீது அவற்றை நிலையாக எழுதி வைத்தார்கள். அவற்றில் கல்லும் ஒன்று. மற்றொன்று, உலோகம். முதலில் கல்லின் மீது எழுத வேண்டிய செய்தியை ஓவியம்போல் வரைவார்கள். பின்பு அதன் மீது கூர்மையான உளி போன்ற கருவியால் வெட்டுவார்கள். வெட்டிய எழுத்துகள் கல்லில் சிறிது பள்ளமாகத் தோன்றும். கல்லில் வெட்டப்பட்டிருப்பதால் அவை கல்வெட்டுகள் எனப்படும்.

அந்த வகையில் வவுனியா வடக்கில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட பிராமி மற்றும் தமிழ்க் கல்வெட்டுக்கள் தொடர்பாக நோக்குவோம்.

### வெடுக்குநாறிமலை பிராமி சாசனம்:

1970-களில் செனரத் பரணவிதான 54 பிராமிக் கல்வெட்டுக்களின் படி மற்றும் மொழி பெயர்ப்புக்களையும் வெளியிட்டார். அதில் வாவுனியா மாவட்டத்தில் நான்கு பிராமி சாசனங்கள் பற்றி குறிப்பிட்டுள்ளார். அதில் ஒன்று வெடுக்குநாறிமலையில் உள்ள பிராமிச்சாசனமும் ஆகும்.

வெடுக்குநாறி மலையில் உள்ள பிராமி எழுத்துகள் தொடர்பாக நோக்குகின்றபோது பொதுவாக இலைகயிள் பிராமிச்சாசனத்தின் காலம் பொ.ஆ.மு. 03-ம் நூற்றாண்டு தொடக்கம் பொ.ஆ.பி. 04-ம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலப் பகுதியாகும். இக் காலப்பகுதியில் பிராமி வரி வடிவத்தினை பயன்படுத்தி பிராகிருத மொழியில் கல், மட்பாண்டங்கள், குகைகள், நாணயங்கள், முத்திரைகள் போன்றவற்றில் எழுதப்பட்டன. அவ்வாறான சாசனங்களில் தமிழ் மொழிக்குரிய சிறப்பெழுத்துக்களான ற, ன, ழ, ள என்பவற்றின் பயண்பாடும் தமிழக பிராமியின் சிறப்பெழுத்துக்களான ஈ, ம போன்ற எழுத்துகளும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. அதனடிப்படையில் வவுனியா - பெரிய புளியங்குளம், அம்பாறை - குடுவில், திருகோணமலை - சேருவில, அனுராதபுரம் கல்வெட்டு போன்றவை தமிழர்கள் பற்றிக் கூறுகின்ற பிராமிக் கல்வெட்டுக்களாகும். இலங்கையில் தமிழர்கள் பற்றிக் குறிப்பிடும் ஐந்து கல்வெட்டுக்களில் அனுராதபுரத்தில் உள்ள ஒன்று தவிர மீதி நான்கு கல்வெட்டுக்களும் தமிழர்களின் பூர்வீக இடங்களான வடக்கு, கிழக்கு இலங்கையில் உள்ளன. எனவே பொ.ஆ.மு. 03-ம் நூற்றாண்டிலிருந்தே தமிழர்கள் ஓர் இனமாகவும், தமிழ் மொழியில் பரீட்சாத்தியமுடையவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதற்கு அவை சான்றுகளாகும்.

வெடுக்குநாறி மலையில் நீர்வடி விளிம்புகள் உள்ள இரண்டு குகைகளும், இரண்டு சாய்வான மலைக்குன்றுகளும் காணப்



வெடுக்குநாறி மலை பிராமி சாசனம்



நொச்சியடி ஐயனார் கல்வெட்டு



வெடிவைத்தகல் சாசனம்

படுகின்றன. இவற்றில் இரண்டு குகைப் பகுதியில் நீர்வடி விளிம்பிற்குச் சற்று கீழ்ப் பகுதியில் பிராமி எழுத்துகள்

காணப்படுகின்றன. அவை தற்போது சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. அவ்வெழுத்துக்கள் பொ.ஆ.மு. 01-ஆம் நூற்றாண்டிற்கும் பொ.ஆ.பி. 02-ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்துக்குரியவையாகும். இதில் தமிழகப் பிராமிக்குரிய சிறப்பெழுத்துக்களின் பயன்பாடுகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

வெடுக்குநாறி மலையில் இரண்டு சாசனங்கள் காணப்படுகின்றன. அதில் ஒரு சாசனத்தின் பெரும்பாலான பகுதிகள் சிதைவடைந்துள்ளன மற்றைய சாசனம் நல்ல நிலையில் உள்ளது. இதில் ஒரு சாசனத்தில் 'மகா சமுதஹ' என்ற வசனம் தெளிவாக உள்ளது. இப்பெயரானது தென்னிந்திய வணிகக்குழு ஒன்றின் பெயராக இருக்க வேண்டும் தமிழகத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் அழான்குளம் என்னுமிடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் பானையோடு ஒன்றில் 'சமுத', 'சமுதஹ' என்ற இரண்டு பெயர்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நொச்சியடி ஐயனார் கோயில் பிராமிச் சாசனம்:

நெடுங்கேணி நொச்சியடி ஐயனார் கோயிலில் உள்ள கேணியின் ஒரு பக்கக் கட்டின் மேல் தொடர்ந்து சென்றால் மலைக் குன்றுகள் இருக்கின்றன அதில் ஒரு மலைக் குன்று நொச்சி-யடி ஐயனார் கோயில் எழுத்து மலை என அழைக்கப்படுகிறது. எழுத்து மலை என அழைக்கப்படும் மலைக்குன்றில் பொளியப்பட்டு சிதைந்த நிலையில் உள்ள தமிழ்ப் பிராமிக் கல்வெட்டு ஆய்வுக்குரியதாகும். 2014-ம் ஆண்டு நேரடியாக இந்த இடத்திற்கு வந்து ஆய்வுகளைச் செய்திருந்த பேராசிரியர் சி. பத்மநாதன் எழுத்து மலை என்று குறிப்பிடப்படும் பகுதியிலுள்ள எழுத்துகள் தமிழ்ப் பிராமி எழுத்துகள் எனவும் அது பொ.ஆ.மு. இரண்டாம் நூற்றாண்டிற்கு முந்தையது எனவும் தெரிவித்தார்.

பொ.ஆ.பி. 03-ம் நூற்றாண்டு தொடக்கம் பொ.ஆ.பி. 05-ம் நூற்றாண்டு வரை தமிழ்ப் பிராமி எழுத்துகள் பாவனையில் இருந்ததாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள். சிதைந்த எழுத்துகள் கொண்ட கல்வெட்டு எழுதப்பட்டுள்ள இடத்தின் ஓரத்தில் புராதன தமிழ்ப் பிராமி எழுத்துகள் இருப்பதை பேராசிரியர் சி. பத்மநாதன் சுட்டிக் காட்டினார். எழுத்துகள் இருந்த மலைக் குன்றின் ஓரத்தில் 'வேள் நாகன் மகன் வேள் கண்ணன்' என்று தமிழ்ப் பிராமி எழுத்துகள் பொளியப்பட்டிருப்பதை அவர் சுட்டிக் காட்டினார்.

மேலும் நொச்சியடி ஐயனார் கோயிலை சுற்றியுள்ள கட்டட இடிபாடுகளிலும், படிகளிலும், கருங்கற் பொளிவுகளிலும் கல்வெட்டுகள் இருப்பதை சி. பத்மநாதன் உறுதிப்படுத்தியுள்ளார். இதுவரை காலமும் ஐயனார் கோயிலில் உள்ள எழுத்து மலை என்று குறிப்பிடப்படும் மலைக் குன்றில் உள்ள எழுத்துகளை பிராமிக் கல்வெட்டு எனவும் பொ.ஆ.பி. 03-ம், 04-ம் நூற்றாண்டுகளுக்குரிய தமிழ் கல்வெட்டு எனவும் ஆய்வு செய்த அறிஞர்கள் தெரிவித்திருந்தனர். ஆனால் அந்த எழுத்துகள் உள்ள மலைக் குன்றின் ஓரத்தில் உள்ள தமிழ் பிராமி கல்வெட்டுக்கள் சரியானவை எனவும் அவை தமிழர் வரலாற்றின் தொன்மையை மாற்றும் சான்றாகும் எனவும் பேராசிரியர் சி. பத்மநாதன் சுட்டிக் காட்டியுள்ளார். கிறிஸ்துவுக்கு முற்பட்ட தொன்மைக் காலம் தொடக்கம் இப்பிரதேசத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கு இந்தத் தமிழ் பிராமிக் கல்வெட்டும் ஒரு சான்றாகின்றது.

## வெடிவைத்தகல் சாசனம்:

வெடிவைத்தகல் குளத்திற்கு அருகாமையில் கல்வெட்டு ஒன்றும் உள்ளது. இக்கல்வெட்டு பாறை கல்வெட்டு வகையைச் சார்ந்தது. இந்தக் கல்வெட்டை பேராசிரியர் கா. இந்திரபாலா ஆய்வு செய்துள்ளார். இதில் உள்ள எழுத்துகள் வல்லிபுரம் பொற்சாசனத்தில் உள்ள எழுத்துகளை ஒத்தவையெனவும், இச்சாசனத்தில் தமிழ் மொழிச் செல்வாக்கு உள்ளதெனவும் பேராசிரியர் பொ. ரகுபதி அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளார். இச்சாசனத்தின் எழுத்தின் அமைப்பினைக் கொண்டு பொ.ஆ.பி. 04-ம் நூற்றாண்டிற்கும் பொ.ஆ.பி. 08-ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதாக இருக்குமென ஊகிக்கப்படுகின்றது.

## பெரியமடு– கோடாலி பறிச்சான் தமிழ் கல்வெட்டு:


சோழராட்சி முடிவுற்ற பின்னர் மூவேந்த வேளான் ஏற்பாட்டில் வேளைக்காரர் பிரிவைச் சேர்ந்த மதிமான் பஞ்சரத்தெரிந்த வில்லிகள் என்ற படைப்பிரிவு வீரர்கள் இங்கிருந்த கோயிலிற்கு மடம், கேணி, சிறுகுளம், கிணறு ஆகியவற்றினை அமைப்பித்தனர் என்ற செய்தியை கூறுவதாக இக்கல்வெட்டு காணப்படுகின்றது.

இக்கல்வெட்டு வவுனியா வடக்கில் நெடுங்கேணியின் தென்னெல்லையில் உள்ள பெரியமடு பிரதேசத்தின் நயினாமடு கிராமசேவகர் பிரிவுக்கு உட்பட்ட கோடலிபறிச்சான் என்ற காட்டுப் பகுதியில் காணப்படுகின்றது. இவ்விடத்தை இங்குள்ள சிறிய நடை பாதையில் இருந்து அடர்ந்த காடுகள் ஊடாக நீண்ட நேரக் கால்நடைப் பயணத்தின் பின்னரே அடைய முடியும். இவ்விடத்திற்கு மிக அருகில் பாழடைந்த சிறிய கேணியொன்று காணப்படுகின்றது. அக்கேணியைச் சுற்றி பொழிந்த வெள்ளைக் கருங்கற் தூண்கள் நாட்டப்பட்டுள்ளன. இவை இங்கிருக்கும் கேணியின் தொன்மையையும், அதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் புலப்படுத்துவதாக இருக்கின்றது. இவ்விடத்தின் சுற்றாடலில் பழடைந்த சில குளங்களும், சிறிய மண் மேடுகளும், அடர்ந்த காட்டு மரங்களுடன் சில புளி மரங்களும், இலுப்பை மரங்களும் காணப்படுகின்றன. அவற்றிடையே அரிதாக சில செங்கட்டிகளும், சில வகை மட்பாண்ட ஓடுகளும் காணப்பட்டன. இவை முன்பொரு காலத்தில் இவ்விடங்களில் செறிவான மக்கள் குடியிருப்புகள் இருந்ததற்குச் சான்றாகும். ஆகவே இவ்வாதாரங்களின் பின்னணியிலேயே இக் கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவத்தை ஆராய்ந்து பார்க்கவேண்டியுள்ளது.

இக்கல்வெட்டு ஒரே வெள்ளைக் கருங்கல்லில் பீடத்துடன் இணைந்ததாகச் செதுக்கப்பட்டு இங்கிருக்கும் கேணிக்கு அருகில் நாட்டப்பட்டிருந்துள்ளது. ஆயினும் தற்போது அக் கல்வெட்டுப் பாகம் மூன்று துண்டங்களாக உடைந்து கேணிக்கு அருகிலேயே காணப்படுகின்றன. அவற்றுள் 70 செ.மீ உயரமும், 24 செ.மீ அகலமும் கொண்ட கல்வெட்டின் பீடம் தனித் துண்டாகக் காணப்படுகின்றது. இதற்கு அருகில் 164 செ.மீ உயரமும், 20 செ.மீ அகலமும் கொண்ட எழுத்துப் பொறிக்கப்பட்டுள்ள கல்லின் பாகமும் இன்னொரு துண்டமாகக் காணப்படுகின்றது. இக்கல்வெட்டில் மேற்பாகத்தில் மங்கலச் சொல்லுடன் தொடங்கியிருக்க வேண்டிய இரண்டு அல்லது மூன்று வரிகள் கொண்ட கல்வெட்டின் பாகம் உடைந்த அல்லது உடைக்கப்பட்ட நிலையில் உள்ளது. ஆயினும் அப்பாகத்தை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. 164 செ.மீ

உயரம் கொண்ட கல்லின் நான்கு பக்கங்களில் ஏறத்தாழ 63 வரிகளில் எழுத்துப் பொறிப்புகள் காணப்படுகின்றன. 16 வரிகள் கொண்ட நான்காவது பக்கச் சாசனத்தின் (எழுத்துப் பொறிப்புகளில்) சில வரிகளின் எழுத்துகள் தேய்வடைந்து காணப்படுவதால் அவற்றைச் சரியாக வாசிக்க முடியவில்லை. அவ்வரிகளை மீண்டும் முறையாகப் படியெடுக்கும் போது இக்கல்வெட்டின் நான்கு பக்க சாசனங்களின் வாசிப்பும் முழுமை பெறலாம்.

இக் கல்வெட்டானது அண்மையில் பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் தலைமையில் ஆய்வு செய்யப்பட்டு, கல்வெட்டு படியெடுக்கப்பட்டது. இவ்வாறு படியெடுக்கப்பட்டவற்றின் புகைப்படங்களை படிப்பதற்கும், அது பற்றிய கருத்துகளை அறிவதற்கும் வெளிநாடுகளில் வசிக்கும் பேராசிரியர் கா. இந்திரபாலா, பேராசிரியர் வை. சுப்பராயலு, பேராசிரியர் பொ. இரகுபதி, கலாநிதி. இராஜகோபால் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அக்கல்வெட்டு படிகளை பேராசிரியர் வை. சுப்பராயலு, பேராசிரியர் பொ. இரகுபதி ஆகிடயோர் தனித்தனியாகப் படித்தனர். அவர்களின் வாசிப்பையிட்டு பேராசிரியர் இந்



வவுனியா வடக்கில் நெடுங்கேணியின் தென்னெல்லையிலுள்ள பெரியமடு பிரதேசத்தின் கோடலிப்பறிச்சான் காட்டுப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகள்

திரபாலா அவர்களும் தனது திருப்தியை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்தியிருந்தார். அவர்களின் வாசிப்பின் முக்கிய அம்சங்களை இவ்விடத்தில் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

ஜெயபாகு தேவரது பன்னிரண்டாவது ஆட்சியாண்டின் போது வடகரைநாட்டு மூன்று கை திரு வேளைக்காரர் பிரிவைச் சேர்ந்த மதிமான் பஞ்சரத்தெரிந்த வில்லிகள் என்ற படைப்பிரிவு வீரர்கள் இங்கிருந்த கோயிலின் அம்பலம்(மடம்), பொகொறோணி (சிறுகுளம்), கிணறு ஆகியவற்றின் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர் என்பதும், இவற்றைச் செய்தவன் மூவேந்தவேளான் என்ற பட்டம் கொண்ட அதிகாரி என்பதும் தெரிய வருகின்றது. மேலும் இக்கல்வெட்டின் இரண்டாம், மூன்றாம் பக்கங்களில் இப் படைப்பிரிவில் இருந்த படை வீரர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. அவற்றில் ஒரே பெயர் பல படை வீரர்களுக்குரிய பெயர்களாகக் காணப்படுகின்றது. அப்பெயர்களாக :

1. இர....
2. .க்கன்
3. இரக்கன்
4. பெரியான்
5. இரக்கன்
6. புத்தை
7. நெட்டுர்
8. ஆதித்தந்
9. கொடி
10. சோழன்
11. சாத்தன்
12. கண்டந்
13. கூத்தந்
14. ஏறன் சு
15. ந்தன்
16. சாத்தன்
17. சாத்தி
18. சாத்தன்
19. அம்மணி
20. சாத்தன்
21. இரக்கந்
22. கண்டந்
23. அம்பலம்
24. சோழன் அ
25. மூதி

ஆகிய பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டில் இருந்து அறியப்படும் வரலாற்றுச் செய்திகள் இடைக்கால வட இலங்கையின் வரலாறு பொறுத்தும், தமிழர் வரலாறு பொறுத்தும் எழும் கேள்விகளுக்கு விடைகூறும் புதிய செய்திகளைத் தருவதாக இருக்கும். இக்கல்வெட்டில் வரும் ஜெயபாகு என்ற பெயரில் பொலநறுவை இராசதானி காலத்தில் மூன்று சிங்கள மன்னர்கள் ஆட்சி புரிந்துள்ளனர். அவர்கள் வெளியிட்ட ஆறு கல்வெட்டுகள் இதுவரை கிடைத்துள்ளன. இதேவேளை ஜெயபாகு என்ற பெயர் கொண்ட ஒருவனை பாளி, சிங்கள இலக்கியங்கள் தமிழ் மன்னன், தமிழ்ச் சிற்றரசன், பொலநறுவையில் கலிங்கமாகனுடன் இணைந்து ஆட்சி புரிந்த துணையரசன் எனவும், அவனிடம் நாற்பதாயிரம் படை வீரர்கள் இருந்ததாகவும் கூறுகின்றன. ஆயினும் பாளி, சிங்கள இலக்கியங்கள் கூறும் ஜெயபாகுவும் கல்வெட்டில் வரும் ஜெயபாகு மன்னனும் ஒருவனா என்பது கல்வெட்டின் காலத்தைச் சரிவர வரையறுத்ததன் பின்னரே கூறமுடியும். இக்கல்வெட்டில் வடகரைநாடு பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. சிங்கள கல்வெட்டுகளிலும், பாளி, சிங்கள இலக்கியங்களிலும் வட இலங்கை வடகர(வடகரை), படகர (பஃவ) என அழைக்கப்பட்டுள்ளது. ஆயினும் தமிழக கல்வெட்டுக்களில் வடகரைநாடு பற்றி பல குறிப்புகள் காணப்படுகின்றன. இதனால் இக்கல்வெட்டில் வரும் வடகரைநாடு என்பது எந்த நாட்டைக் குறிக்கின்றதென்பது ஆராயப்படவேண்டிய ஒன்றாகும்.

இக்கல்வெட்டு மதிமான் பஞ்சரத்தெரிந்த வில்லிகள் என்ற படைப்பிரிவு வீரர்கள் பற்றிக் கூறுகின்றது. மதிமான் பஞ்சரன் பற்றிய சில சான்றுகள் இடைக்கால இலங்கைக் கல்வெட்டுக ளில் காணப்படுகின்றன. ஆயினும் பேராசிரியர் சுப்பராயலு அவர்கள் இப்பெயர் கொண்ட படைப்பிரிவு தமிழகத்தில் இருந்ததற்கு சான்றுகள் இல்லையெனக் கூறுகின்றார். இத னால் இப்படைப்பிரிவை இலங்கைக்கு உரியதாகப் பார்க்க இடமுண்டு. இதை எதிர்கால ஆய்வுகள் மூலம் மேலும் உறு திப்படுத்த வேண்டும். இன்று காடாகக் காணப்படும் கோடலி பறிச்சான் இற்றைக்கு 1000 ஆண்டுகளுக்கு முன்னரும் காடாக இருந்திருக்கும் எனக் கூறமுடியாது. ஏனெனில் இக் கல்வெட்டு இற்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன்னரே இவ்வி டத்தில் கோயில் மடம், சிறுகுளம், கிணறு இருந்தன என்ற புதிய செய்தியைத் தருகின்றது. இவற்றில் இருந்து இங்கு இந்து ஆலயம் இருந்துள்ளமை உறுதியாகத் தெரிகின்றது. இக்கூற்றைத் தற்போது அழிவடைந்து காணப்படும் கேணி யும், அதைச் சுற்றி பரவலாகக் காணப்படும் பொழிந்த வெள் ளைக் கருங்கற் தூண்களும், அருகிலே காணப்படும் உயர்ந்த மண் மேடுகளும் உறுதி செய்கின்றன. அவ்விடங்க ளில் அகழ்வாய்வுகள் செய்யப்படுமானால் அந்த உண்மை மேலும் உறுதி செய்யப்படலாம்.

இங்கிருந்த ஆலய மடம், சிறுகுளம், கிணறு என்பன தமிழ்ப் படைவீரர்களுக்கு ஜீவிதமாக வழங்கப்பட்டமையும், அவற் றைப் பாதுகாக்கும் பொறுப்பை அப்படைவீரர்கள் ஏற்றுக் கொண்டமை பற்றியும் இக்கல்வெட்டுக் கூறுவது அதிமுக்கிய வரலாற்றுச் செய்தியாக உள்ளது. இவற்றில் இருந்து, சோழர் ஆட்சியின் முடிவோடு, வட இலங்கை பொலநறுவையின் பண்பாட்டு வட்டத்தில் இருந்து படிப்படியாக விடுபட்டு வரு வதை இச்செய்தி உணர்த்துவதாக உள்ளது. அண்மைக் காலங்களில் இலங்கைத் தமிழர் தொடர்பாக வெளிவந்த வர லாற்று நூல்களும், கல்வெட்டுகளின் கண்டுபிடிப்புக்களும் 1070-ல் சோழரின் ஆட்சி வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து இலங்கைத் தமிழரின் அரசியல், பண்பாட்டு வரலாறு தனிப் போக்குடன் தமிழ்ப் பிரதேசங்களில் படிப்படியாக வலுப் பெற்று வந்ததை வெளிப்படுத்துவதாக உள்ளன. இதற்கு உதாரணமாக சோழரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட சில சம்பவங்களை இவ்விடத்தில் குறிப் பிடலாம்.

சோழரை வெற்றி கொண்ட முதலாம் விஜயபாகு தனது அர சையும், பௌத்த மதத்தையும் பாதுகாக்க சோழர் காலப் படைவீரர்களிலேயே தங்கியிருந்தான். ஆயினும் அவன் சோழ நாட்டின் மீது படையெடுக்குமாறு அப் படைவீரர்களை வேண்டிய போது அதை ஏற்க மறுத்த தமிழ்ப் படைவீரர்கள் பொலநறுவை அரசின் மீது படையெடுத்து அவ்வரசை வெற்றி கொண்டனர். சூளவம்சம் இப்படைவீரர்கள் வட இலங்கையில் உள்ள மகாதீர்த்த, மட்டிகாவட்டதீர்த்த ஆகிய இடங்களில் தங்கியிருந்தே இப்படையெடுப்புகளை மேற் கொண்டதாகக் கூறுகின்றது. அவற்றுள் மகாதீர்த்த என்ற இடம் மாதோட்ட துறைமுகத்தைக் குறிக்கின்றது. மட்டிகாவட் டதீர்த்த என்ற இடம் பாளி இலக்கியத்தில் முதன் முறையா கக் குறிப்பிடப்படுகின்றது. இவ்விடம் மாதோட்டத்திற்கு வடக்கே பூநகரிப் பிராந்தியத்தில் உள்ள மட்டுவில்நாடு என்ற இடமாக இருக்கலாம். இரண்டாம் இராசராச சோழனது பல்லவராயன்பேட்டை மற்றும் திருவாலங்காடு சோழக் கல் வெட்டுகள் வட இலங்கையில் மாதோட்டம், புலச்சேரி முத லான இடங்களுடன் மட்டிவால் என்ற இடத்தையும் சோழப் படைகள் வெற்றி கொண்டதாகக் கூறுகின்றது. கல்வெட்டில் கூறப்படும் மட்டிவால் தற்போது பேச்சு வழக்கில் உள்ள மட்- டுவில் நாடாக இருக்கலாம். இவ்விடத்திலும் போத்துக்கேயர் காலக் கோட்டை கட்டப்பட்டதற்கு இவ்விடம் துறைமுக நக ராக இருந்ததே முக்கிய காரணமாகும்.

அண்மையில் திருகோணமலை மாவட்டத்தில் ஹோமாறன்க டவல (குமரன்கடவை) என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டிலிருந்து 1215-ல் பொலநறுவையை வெற்றி கொண்டு ஆட்சி புரிந்த கலிங்கமாகன் வடகலிங்கத்தில் இருந்தோ அல்லது மலேசியாவில் இருந்தோ படையெடுக்க வில்லை, மாறாக அவன் ஹோமாறன்கடவலவில் இருந்த சோழப் பிரதிநிதியால் அல்லது சோழப் படைத் தளபதியால் ஆட்சிக்கு அமர்த்தப்பட்டவன் என்ற புதிய செய்தி தெரியவந் துள்ளது. மேலும் 1070-ல் பொலநறுவையில் சோழர் ஆட்சி வீழ்ச்சியடைந்தாலும் அவர்களின் ஆதிக்கமும், நிர்வாக ஒழுங்கும் தமிழர் பிரதேசத்தில் ஐரோப்பியர் காலம் வரை தொடர்ந்தமையும் இக்கல்வெட்டால் அறியப்படும் புதிய சான் றாகும்.

மேலே கூறப்பட்ட வரலாற்றுச் செய்திகள் கோடலிபறிச்சான் காட்டுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டின் வர லாற்று முக்கியத்துவம் பற்றிய சிறு அறிமுகமாகும். இக்கல் வெட்டு இலங்கைத் தமிழரின், அதிலும் குறிப்பாக வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழரின் இருப்பு, இடைக்கால அரசி- யல் வரலாறு, தமிழ் அரச உருவாக்கம், பண்பாடு மற்றும் இடப்பெயர் பற்றி ஆய்வில் முக்கியத்துவம் பெற்றதாகக் காணப்படுகின்றது. ஆகவே இக்கல்வெட்டை ஆராய்வதற்கு பலதுறை சார்ந்த புலமையாளரின் பங்களிப்பு மிக அவசியமா கும். இவற்றைக் கருத்தில் கொண்டே இக்கல்வெட்டின் நான் காவது பக்கத்தில் தெளிவற்றுக் காணப்படும் சில வரிகளை மீண்டும் படியெடுத்ததன் பின்னர் பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரிர் சுப்பராயலு, பேராசிரியர் இரகுபதி மற்றும் கலாநிதி இராஜகோபால் ஆகியோருடன் இணைந்து இக்கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவத்தை முழுமையாகப் பதிவுசெய்வதற் கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. அவற்றின் பெறு பேறுகள் இரு மொழிகளில் வெளியிடப்படும்.

**உசாத்துணை:**


- Lewis. j.p., 1985, manual of the Vanni Districts, New Delhi
- Paranavitana.S., 1970, Inscriptions of Ceylon: Early Brahmi Inscription – Volume 1
- Department of Archaeology, Ceylon.
- திபாகரன். தி., 2019, வன்னிப் பிராந்தியத்தில் ஆய்வுக்குட்படுத் தப்பட வேண்டிய பகுதிகள்.
- தொல்லியற் திணைக்களத்தின் ஆய்வறிக்கை
- புஷ்பரட்ணம். ப.,2017, இலங்கை தமிழர்- ஒரு சுருக்க வரலாறு, தமிழ் கல்விச்சேவை சுவிஸ்லாந்து
- பத்மநாதன். சி, 2007, இலங்கை தமிழ் சாசனங்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு




shanujan@thaiveedu.com



மரப்பாச்சி
&
செய்தித்தொடர்பு மையம், ம. சா. சுவாமிநாதன் ஆய்வு நிறுவனம்
வழங்கும்
ஸ்த்ரீ பர்வம்
The Women
பனுவல் & நெறியாள்கை: அ. மங்கை
Script & Direction: A. Mangai
April 6th, 2024 - 5.30 pm & April 7th, 2024 - 6.00 pm.
At M. S. Subbulakshmi Auditorium - ACJ campus, Taramani, Chennai - 600113.
For Details: 99402 02605, 98846 61481.





இலங்கைக்குப் படையெடுத்த சோழப் படையினர் 'இரத்த வெறி பிடித்த யட்சர்கள் போல' கண்ணில்பட்ட புத்த மடங்களையெல்லாம் அழித்தொழித்தனர். செல்வங்களையெல்லாம் கவர்ந்துகொண்டு, தாதுகோபங்களைத் தகர்த்து அங்கு புதைக்கப்பட்டிருந்த செல்வங்களைக் கவர்ந்துகொண்டார்கள் என்கின்றது மகாவம்சம்.

ஆனால் அதற்கு மாறான சான்று திருக்கோணமலை மாவட்டத்திலேயே கிடைத்திருக்கிறது. இன்று வெல்கம் விகாரை என்றும் கடந்த நூற்றாண்டின் ஆரம்பம் வரை 'பெரியகுளம் நாதனார் கோவில்' என்றும் அறியப்பட்ட புத்த விகாரம் திருக்கோணமலை நகருக்குத் தென்மேற்கே பத்துக் கி.மீ தொலைவில், கன்னியா வெந்நீரூற்றுக்கு அருகே அமைந்துள்ளது. அந்த விகாரம் தமிழ் புத்தசமய மக்களின் வழிபாட்டின் கீழ் இருந்தது என்பதற்கும், அவ்விகாரத்திற்கு இராசேந்திர சோழனும் அவனது குடிமக்களும் பல பூசை ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள் என்பதும் அங்குள்ள கல்வெட்டுகள் வழியே தெரியவந்துள்ளது.

சோழர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்கு மேல், அவர்கள் சமயப் பொறையைக் கடைப்பிடித்து வந்தவர்கள் என்பதற்கு ஏராளமான சான்றுகள் கிடைத்துள்ளன. எனினும் சோழரால் புத்த சமயமும் புரக்கப்பட்டது என்பதற்குக் கிடைக்கின்ற வரலாற்றுச் சான்றுகள் இரண்டே இரண்டுதான். தமிழகத்தின் நாகைபட்டினத்துச் சூளாமணி விகாரமும் இலங்கையின் திருக்கோணமலை இராசராசப் பெரும் பள்ளியும். நாகைபட்டின விகாரம் பிரித்தானியர் ஆட்சியில் முற்றாக அழிக்கப்பட்டுவிட, இன்று எஞ்சியுள்ள ஒரே சோழர் காலப் புத்த எச்சம் வெல்கம் விகாரம். ஆனால் இலங்கையின் ஏனைய புத்த சமயத் தலங்களின் இன்றைய நிலையை ஒப்பிடும் போது, இன்றும் பெருமளவு செப்பனிடப்படாத வெல்கவேரத்தின் நிலை என்னவோ கவலைக்கிடம்தான் (உரு. 01).

இராசராசன் காலத்தில் அவன் பெயரில் 'இராசராசப் பெரும் பள்ளி' என்ற பெயரைச் சூடிக்கொண்ட இந்த விகாரம் மிகத் தொன்மையானது. இங்கு கிடைத்த இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாதிக அபய மன்னர் காலத்துப் பிராமிக் கல்வெட்டொன்று இவ்விகாரத்தை 'அபயகார விகாரம்' என்கின்றது. எனினும் சோழர் இலங்கையைக் கைப்பற்றும் போது இவ்விகாரத்துக்கு 'வெல்கவேரம்' என்ற பெயரே இருந்தது என்கின்றன அக்காலத் தமிழ்க் கல்வெட்டுகள். அருகே வில் (சிறு குளம்) இருப்பதால் இது 'வில்காமம்' (சிறு குளத்தை அண்டிய ஊர்) என்று அழைக்கப்பட்டு பின்னாளில் வெல்காமம் என்றும் வெல்கம் என்றும் மருவியிருக்கலாம்.


வெல்கவேரமான இராசராசப் பெரும் பள்ளி

புதுக் குடி ஊரைச் சேர்ந்த ஆதித்தப் பேரரையன் என்பவன் இராசராசப் பெரும் பள்ளியின் புத்ததேவருக்கு ஒரு விளக்கும் அதற்குப் பசுநெய் எடுப்பதற்காக 84 பசுக்களும் கொடையளித்தபோது, இந்த விகாரம் 'மானாவதுளை' எனும் நிருவாகப் பிரிவைச் சேர்ந்ததாக இருந்தது. அவனது கொடைக்குச் சில நாட்களின் பின், இராசேந்திர சோழனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் (பொ.ஆ.பி 1026) 'கோலத்து தரிபனன் புவனதேவன்' என்பவன் நந்தா விளக்கும் நான்கு காசுகளும் காணிக்கையாகக் கொடுத்திருந்தான். அந்தக் காசுக்கு விளக்கெண்ணெய் வாங்கி எரிக்கவேண்டும் என்பது அந்தப் பள்ளியிலிருந்த புத்த சங்கத்தாருக்கு அவனது கோரிக்கை.

இன்னொரு கல்வெட்டைப் பொறித்த பாத்தரவிதராமன் அருகிலிருந்த வீரபரகேசரி வளநாட்டின் பானாவசத்துளகாமம் எனும் ஊரைச் சேர்ந்தவன். பெரும்பாலும் சிங்களவனாக இருக்கலாம். அவன் பொ.ஆ.பி 1029-ம் ஆண்டு வெல்கவேரப் பெரும் பள்ளிக்காக 35 பசுக்களும் 5 எருமைகளும் கொடுத்திருக்கிறான்.

மூன்றாவது கல்வெட்டின் படி, இராசேந்திரனின் இருபத்தைந் தாம் ஆட்சியாண்டில் (1039) சோழப் படையில் 'பணிமகன்' எனும் பதவி வகித்த, காயாங்குடி எனும் ஊரைச்சேர்ந்த அமு தன் சாத்தனால் இங்கு விளக்கெரிக்க எண்ணெய் கொடுப்ப தற்காகப் பத்து எருமைகள் தானமளிக்கப்பட்டிருந்தன. இவை மூன்றுக்கும் முன்பின்னானவை என்று ஊகிக்கக்கூடிய வாறு, பதினோராம் நூற்றாண்டின் முற்பாதி எழுத்தமைதியில் காணப்படும் நன்கு சிதைந்த இன்னுமிரு கல்வெட்டுகளும் இங்கு வாசிக்கப்பட்டுள்ளன. ஒன்றில் 'ஏறாநாடன் கண்டன் யக்கனிட்ட திரு நந்தா விளக்கு' என்ற வசனமும், இன்னொன் றில் 'அஞ்சாம் பக்கத்துப் பூசம் பெற்ற, வியாழக்கிழமை நாளில் இட்ட, இருபது சாண் நாலு விரல் நீளமான தாரா நிலை விளக்கு' என்ற வசனமும் உள்ளன.

இப்படிக் கல்வெட்டுகளின் (உரு. 02) வழியே கிடைக்கும் வெல்கவேரம் இராசேந்திரனின் காலத்தில் அரச ஆதரவுடன் நீண்டநாள் இயங்கியது என்ற தகவல், மகாவம்சத்தின் குற்றச் சாட்டான சோழரின் புத்த வழிபாட்டிடங்கள் மீதான சூறையாட லைக் கேள்விக்குள்ளாக்குகின்றது. வெல்கவேரத்தை இத் தனை போற்றிய சோழர்கள் உண்மையிலேயே புத்த சம யத்தை எதிர்த்திருப்பார்களா? அப்படியாயின் அவர்கள் மீதான மகாவம்சத்தின் விமர்சனத்துப் பதில் என்ன? இலங் கையின் ஏனைய புகழ்பெற்ற பௌத்தப் பள்ளிகளில் இப்ப


இராசராசப் பெரும் பள்ளியிலுள்ள தமிழ்க் கல்வெட்டுகள்

போரொன்றின் போது எந்தவொரு சமயத் தலங்களுமே அழிக்கப்பட்டிருக்காது என்று அடித்துக் கூறமுடியாதுதான். ஆனால் பொலனறுவை, அனுரை உட்பட்ட நகர்களில் அமைந்திருந்த எல்லாப் பழம்பெரும் புத்த விகாரங்களும் அடுத்த இருநூறாண்டுகள் வரை சிங்கள மன்னரால் மீளமீ ளத் திருத்திக் கட்டப்பட்டுக்கொண்டே இருந்திருக்கின்றன. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த பராக்கிரம பாகுவும் நிசங்கமல்லனும் ஏராளமான புத்தப் பள்ளிகளைச் செப்பனிட்டிருக்கிறார்கள். அதன்போது சோழர் காலச் சாச னங்கள் பல மறைந்துவிட்டிருக்க வாய்ப்புண்டு. இதைப் பொலனறுவை வட்டதாகையிலும் அனுராதபுரம் யேதவன-ராம விகாரையிலும் தரைக்குப் பாவப்பட்டுள்ள துண்டமான சோழக் கல்வெட்டுகளைக் கொண்டு உய்த்துணரலாம்.

மாறாக, வெல்கவேரம் சோழராட்சியின் மறைவுடன் முற்றாகக் கைவிடப்பட்டுவிட்டது. இதற்கு இயல்பான காரணங்களாகத் திருக்கோணமலையில் கோணேச்சரத்தின் மறுமலர்ச்சியை யும் சைவ சமயத்தாரின் பெருக்கத்தையும் சொல்லலாம். சோழராட்சிக்குப் பிந்திய சிங்கள மன்னர் எவரது கல்வெட்டும் அங்கு கிடைக்கவில்லை. எனவே சோழராட்சி மறைந்தபின் வெல்கவேரம் காடடர்ந்து மறைந்துவிட்டது என்பதே பொருத் தம். அரசுகளால் மறக்கப்பட்டாலும் அங்குள்ள குடிமக்களின் நினைவுகளில் எஞ்சியிருந்தது அப்பள்ளி. 1929-களில் பிரித் தானியத் தொல்லியல் அதிகாரிகள் இப்பள்ளியைக் கண்டறி யும் போதும் அது அன்றைய திருக்கோணமலைத் தமிழர் மத் தியில் 'நாதனார் கோவில்' என்ற பெயரில் வழிபாட்டிலிருந்து வந்திருக்கிறது.

மறுபுறம் சோழரின் அரசநெறியான சைவமும் இலங்கையில் செழித்தது. இராசராசனால் திருப்பணி கண்ட கோணேச்சரத் துக்கும் இராசேந்திரனின் காணிக்கைகள் கிடைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இராசேந்திரனின் மெய்க் கீர்த்தியின் முற்பாகம் கிடைத்த சிதைந்த இரண்டு கல்வெட்டுத் துண்டங் கள் திருக்கோணமலை பத்திரகாளியம்மன் கோவிலிலும் திருக்கோணமலை பிரடெரிக் கோட்டையிலும் பெறப்பட்டுள் ளன. இவை திருக்கோணேச்சரத்தில் அவன் காலத்தில் செய் யப்பட்ட திருப்பணிகளை ஆவணப்படுத்தியவையாக இருக்க லாம். பின்பாகம் மறைந்துவிட்டதால் அவை எத்தகைய திருப் பணிகள் என்பதை இன்று கூறமுடியவில்லை.

சோழரின் தலைநகராக மாறிவிட்டிருந்த பொலனறுவையில் அமைக்கப்பட்ட முதலாவது சைவக் கோவிலான 'வானவன் மாதேவி ஈச்சரத்தை' (இரண்டாம் இலக்க சிவாலயம்) இரா சேந்திரனே அமைப்பித்தான் என்பது ஆய்வாளர் கருத்து. அதன் பெயர் அவனது தாய் வானவன் மாதேவி மீதான பேரன் பைக் காட்டுவதாகச் சொல்வர்.

வானவன் மாதேவீச்சரம், பொலனறுவையான சனநாதபுரத் தின் கோட்டை அமைக்கப்பட்டபோது, அதன் வடகிழக்கு மூலையில் கட்டப்பட்டிருக்கிறது. அது அனுரையைக் கைவிட் டுப் பொலனறுவையைத் தலைநகராக்கும் சோழரின் முதல் முயற்சியின் போதே மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். கோவி லின் முன்புறம் சிதைந்த கிழக்குச் சுவரை இன்றும் காண முடி கின்றது.


வானவன் மாதேவி ஈச்சரம், பொலனறுவை.

வானவன் மாதேவீச்சரக் கோவில் சுவரில் இராசேந்திர சோழ னின் மெய்க் கீர்த்தி பொறிக்கப்பட்ட சிதைந்த கல்வெட்

டொன்று காணப்படுகின்றது. வானவன் மாதேவி ஈச்சரத்தில் பள்ளி கொண்டார், அழகிய மணவாளர் ஆகிய இறைப் படிமங்கள் எழுந்தருளப்பட்டதைச் சொல்லும் இன்னுமிரு கல்வெட்டுத் துண்டங்கள் இவன் காலத்திலேயே அங்கு பொறிக்கப்பட்டிருக்கக்கூடும்.

கிழக்கே கோணேச்சரம், மத்தியில் பொலனறுவை வானவன் மாதேவீச்சரம் போல மேற்கே கேதீச்சரமும் இராசேந்திரனின் திருப்பணிகளைப் பெற்றிருக்கவேண்டும் எனினும் அங்கு கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனால் மாதோட்டத்தில் கேதீச்சரத்துக்கு மேலதிகமாக 'திருவிராம ஈச்சரம்' என்ற பெயரில் இன்னொரு சிவாலயம் இவன் காலத்தில் அமைக்கப்பட்டிருந்தது. இது அக்கரையில் தமிழகத்தில் புகழ்பெற்றிருந்த இராமேச்சரத்தின் நினைவாக இக்கரையில் அமைக்கப்பட்டிருக்கலாம்.

திருவிராம ஈச்சரம் பற்றிய விவரங்களைத் தரும் கல்வெட்டு இன்று கொழும்பு அருங்காட்சியகத்திலுள்ளது. இராசராசன் காலம் போலவே அவன் மகன் இராசேந்திரசோழன் ஆட்சிக் காலத்திலும் மாதோட்டம் முக்கியமான நகரமாக விளங்கியது என்பது அது தரும் மேலதிக தகவல். இராசேந்திரனின் பெருந்தனத்துப் பணிமகன் சிறுகுளத்தூருடையான் தேவன் என்பவனால் திருவிராமவீச்சரப் பணிக்காகச் செய்யப்பட்ட நன்கொடையை அது சொல்லும்.

பெருந்தனம், சிறுதனம் என்பன சோழ இராணுவத்தின் படைப் பிரிவுகளுக்கான சிறப்புப்பெயர்கள் என ஆய்வாளர்கள் கொள்வர். அத்தகைய ஒரு காலாட்படையைச் சேர்ந்த பணியாளாக சிறுகுளத்தூரனான தேவனைச் சொல்லலாம். அவனது முன்பாதிப் பெயர் கல்வெட்டில் சிதைந்துவிட்டது. அதைப் பேரா.சி. பத்மநாதன் சங்கர தேவன் என வாசித்துள்ளார். வெல்கம் விகாரத்துக்கு நன்கொடை வழங்கிய காயாங்குடி அமுதன் சாத்தனும் இதே 'பணிமகன்' பதவி வகித்தவன் தான் என்பது குறிப்பிடத்தக்கது. பணிமகன் என்பது சோழ இராணுவத்திலிருந்த உயர்பதவி ஒன்றின் பெயராக இருந்திருக்கக்கூடும்.

திருவிராமீச்சரத்தின் ஆனி மாதத் தேய்பிறைப் பதினோராம் நாள் திருவிழாவில் கோவிலில் விளக்கெரிப்பதற்கான ஏற்பாடுகள் (சங்கர) தேவனால் செய்யப்பட்டிருந்தன. அதைச் செய்தோர் மாதோட்டத்தில் வசித்துவந்த வெற்றிலை வணிகர், வாழைக்காய் வணிகர், எண்ணெய் வணிகர் ஆகிய மூன்று வணிகப் பிரிவினர். எண்ணெய் வணிகர் 'சங்கரப் பாடியர்' என்று கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளனர். (சங்கர) தேவன் கொடுத்த காசில் இரு காசுகள் சங்கரப் பாடியரிடம் வழங்கப்பட்டதால், அவர்களது செல்வாக்கும், மாதோட்டத்திலிருந்த முக்கியத்துவமும் விளங்குகின்றது. போன அத்தியாயத்தில் நாம் பார்த்த 'தஞ்சைப் பெருங்கோவிலுக்கான இலுப்பைப் பாலுக்கும்' இவர்களது பரவலுக்கும் தொடர்பு இருந்திருக்கக்கூடும்.

இவற்றைத் தவிர, சமயச்சார்பற்ற தகவல்களைக் கொண்ட முதலாம் இராசேந்திரன் காலத்தைய இன்னும் மூன்று முக்கியமான கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அவற்றில் இரண்டு, யாழ்ப்பாணம் காரை நகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையேயுள்ள ஃகம்மன்கீல் கோட்டையில் கிடைத்த தூணொன்றில் கண்டுபிடிக்கப்பட்டன. தற்போது அதை யாழ். அருங்காட்சியகத்தில் வைத்திருக்கிறார்கள். ஆனால் உண்மையில் அது மன்னார் திருக்கேதீச்சரத்தில் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று ஊகிக்கிறார்கள். கிடைத்த இரு கல்வெட்டுகளில் ஒரு கல்வெட்டின் இறுதிவரிகள் மாதோட்டமான இராசராசபுரம் பற்றி ஏதோ சொல்லவந்தபடி மழுங்கியிருக்கின்றன.

அக்கல்வெட்டில் பாண்டிய அரச சின்னங்களையும் மகிந்தனையும் அவன் அரசியாரையும் கைப்பற்றிய இராசேந்திர சோழனின் தளபதியான 'அதிகாரத் தண்டநாயகன் செயங்கொண்ட சோழ மூவேந்தவேளான்' என்பவன் பெயர் காணப்படுகிறது. தமிழகச் சோழ மெய்க் கீர்த்திகள் மீண்டும் மீண்டும் பாடும், பாண்டியன் ஆரமும், ஈழத்தரசன் முடியும் உண்மையாகவே இலங்கையிலிருந்து கொண்டுசெல்லப்பட்டது என்ற விடயத்தை உறுதிப்படுத்த உதவும் முக்கியமான சான்றுகளில் இதுவும் ஒன்று.

செயங்கொண்ட சோழ மூவேந்த வேளானது தலைமை இருக்கையாக மாதோட்டமான இராசராசபுரம் விளங்கியது என ஊகிக்கலாம். அவன் இலங்கையில் அதிகாரத் தண்டநாயகன் எனும் பதவியை வகித்தான். அந்தப் பதவி, முதலாம் இராசேந்திரசோழன், இராசராசன் காலத்தில் கங்கபாடிப் பகுதியில் வகித்த 'மகா தண்டநாயகன்' எனும் பதவியை ஒத்தது. அது நேரடி அரசுக்கு வெளியேயிருந்த நிலப்பரப்பை ஆளும் அரச பிரதிநிதிக்குரிய பதவியாக இருந்திருக்கலாம்.

மூன்றாவது கல்வெட்டு மேற்கிலங்கையின் புத்தளம் மாவட்டத்தில் எகெட்டுவாவிப் பிரதேசத்தின் அத்தரகல் எனும் இடத்தில் கிடைத்தது. இராசேந்திர சோழனின் இருபத்து நான்காம் ஆட்சியாண்டில் (1038) ஆயிரத்து அஞ்ஞூற்றுவன் அம்பலம், அஞ்ஞூற்றுவன் அம்பலம் என்ற பெயர்களில் இரு கட்டடங்கள் அமைக்கப்பட்டமை இக்கல்வெட்டில் காணப்படுகின்றது. 'இராசேந்திர சோழத் தெரிந்த வீரர் வேளம்' எனும் அமைப்பைச் சேர்ந்த ஆதிபலவன் அரையன் எனும் ஐந்நூற்றுவ வீரனால் அவை அமைக்கப்பட்டன.

இக்கல்வெட்டுக்கு மூன்று சிறப்பியல்புகள் உள்ளன. முதலாவது, இலங்கையில் கிடைத்த கல்வெட்டுகளில் இராசேந்திரன் பெயரைக் கிரந்தம் தவிர்த்து தமிழ் வழக்கில் 'இராசேந்திரன்' என்று எழுதியுள்ள ஒரேயொரு பொறிப்பு இது தான். இரண்டாவது, சோழர் ஆதிக்கம், மன்னார், திருக்கோணமலை, பொலனறுவை தாண்டி இன்னும் தென்புறம் புத்தளம் பக்கம் வந்துவிட்டது என்பதற்கான அறுதியான சான்று இக்கல்வெட்டின் அமைவிடம். மூன்றாவது சோழருக்கும் வணிகக் கணமான திசையாயிரத்து ஐந்நூற்றுவருக்குமான நெருக்கத்தைச் சொல்லும் அரிதான சான்றுகளில் ஒன்று இது.

(தொடரும்)



thulanchanan.v@thaiveedu.com

# இனப் படுகொலையின் அரசியல்
# இனப் படுகொலையின் வரலாற்று வழித்தடம்

– தெ. ஞாலசீர்த்தி மீனிலங்கோ

### தொடருக்கான தொடக்கக் குறிப்புகள்:

*இலங்கையின் இறுதிப் போரின்போது நடந்தது இனப் படு கொலையா? இல்லையா? என்பது பற்றிய விவாதங்கள் இன் னமும் ஓய்ந்தபாடில்லை. மறுபுறம் போர்க் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களுக்குத் தண்டனை வழங்கவேண்டும் என்ற ஒருமித்த கோஷம் கடந்த 15 ஆண்டுகளில் வலுவிழந்திருக்கி றது. ஜெனீவா மீது அபரிமிதமான நம்பிக்கைகள் வைக்கப்பட் டன. குறிப்பாக 2015-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மனித உரி மைக் கவுன்சிலின் தீர்மானம் மிகப்பெரிய முன்னேற்றமாகப் பார்க்கப்பட்டது. இன்று கிட்டத்தட்ட ஒரு தசாப்தகாலம் கடந் துவிட்ட நிலையில் ஜெனீவாவில் நடப்பதை யாரும் கணக்கில் எடுப்பதாகத் தெரிவதில்லை. புலம்பெயர் தமிழ் அமைப்பு கள் 'சர்வதேசச் சமூகம்' என்று அழைத்த - இன்னும் சரியாகச் சொல்வதானால் நினைத்துக் கொண்ட - மேற்குலக நாடுக ளின் கவனம் இன்று இலங்கை பற்றியதாக இல்லை. ஆனால் இன்னமும் இலங்கையில் இனப் படுகொலை நடந்தது என்று சொல்லியும் எழுதியும் வருவது குறையவில்லை. ஆனால் அதை அரசியல் ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் இன்றுவரை நிறுவமுடியவில்லை என்பதுதான் உண்மை. இது ஏன் நடக்கி றது? இனப் படுகொலைகளின் அரசியற் பரிமாணம் என்ன? சில இனப் படுகொலையாகவும் இன்னும் சில சாதாரண சம்ப வங்களாகவும் ஏன் கருதப்படுகின்றன? போன்ற வினாக் களை இத்தொடர் வரலாற்றுவழி நின்று ஆராய முனைகிறது.*

*இலங்கையில் நடைபெற்ற குற்றங்கள் தொடர்பில் சர்வதேசக் கவனத்தைப் பெறும் முயற்சி முட்டுச் சந்தில் முனகுகிறது. இதைப் புரிந்துகொள்வதற்கு உலகின் ஏனைய பகுதிகளில் நடைபெற்ற இனப்படுகொலைகளின் அரசியல் வரலாற்றைப் புரிந்து கொள்வது பயனுள்ளது. அதேபோல வன்முறைக்குப் பின்னரான சகவாழ்வு பற்றிய அனுபவங்களும் பயன் தரக் கூடியன. அவ்வகையில் சர்வதேச அனுபங்களின் வழி இனப் படுகொலையின் அரசியல் கதையாடலை இத்தொடர் நிகழ்த்த முனைகிறது. அதன் வழிப்பட்டு இலங்கையில் தமிழ ரின் இருப்பும் எதிர்காலம் குறித்துப் பயனுள்ள ஆக்கபூர்வ மான உரையாடலை உருவாக்கவும் அதற்குப் பங்களிக்கவும் முயற்சிக்கிறது.*

### அறிமுகக் குறிப்புகள்:

தேச அரசின் உருவாக்கமும் அதன் ஏகாதிபத்திய நவீனமய மாக்கல் அபிலாஷைகளின் எழுச்சியும், பல்லாயிரக் கணக் கான 'பின்தங்கிய' பழங்குடி மக்கள் நோய், பட்டினி, அடிமை, உழைப்பு ஆகியவற்றால் கொல்லப்படவும் அழிக்கப்படவும் வழிசெய்தது. மக்கள்தொகையின் சில விரும்பத்தகாத, 'மாசு படுத்தும்' கூறுகளை அகற்றுவதில் சமூகரீதியான பன்முகப்ப டுத்தப்பட்ட திட்டமிட்ட கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத் துவதன் மூலம் (ஆங்கிலத்தில் அதை social engineering என்பர்) தமது நோக்கத்தின் கொடிய திட்டங்களைத் தேசிய அரசுகள் தொடங்கிய பின்னர், இருபதாம் நூற்றாண்டில் அறு பது மில்லியன் மக்கள் அழிக்கப்பட்டனர். இதனாலேயே இரு பதாம் நூற்றாண்டை 'இனப் படுகொலையின் நூற்றாண்டு' என்று சில ஆய்வாளர்கள் அழைக்கிறார்கள். உலக வரலாற் றில் இவ்வகையான social engineering செயற்பாடுகளால் அழிக்கப்பட்ட குழுக்களின் பட்டியல் நீண்டது.

இந்த அழிவு ஆய்வாளர்களுக்கு ஒரு முக்கியமான சவா லைத் தெளிவாக முன்வைக்கிறது: ஒரு குழு மனிதர்கள் ஏன் மற்றொரு குழுவை பூமியிலிருந்து அழிக்கத் தொடங்குகிறார் கள்? இத்தகைய கொலையில் மனித குலம் ஈடுபடத் தொடங் கியது எப்போது? எவ்வெவ் செயல்முறைகள் கையாளப்பட் டன? அது ஏற்படுத்தும் உடல், பொருள், உளவியல் பேரழிவு களுக்கு நாம் எவ்வாறு பதிலளிக்கப் போகிறோம்? இருபத்தி யோராம் நூற்றாண்டில் நாம் அதை எவ்வாறு முன்னறிவிப்பது அல்லது தடுப்பது?

இனப்படுகொலை அனுபவம் என்ற புதிரை அவிழ்ப்பது மிக வும் கடினமானது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயி னும், இனப் படுகொலைக்குப் பிந்தைய சமூகங்கள் அதன் காரணங்களையும் தாக்கங்களையும் புரிந்து கொள்ள முயற் சிப்பது அவசியம். உண்மையில், கடந்தகால அநீதியை எவ் வாறு சரிசெய்வது? பாதிக்கப்பட்டவர்களை குணப்படுத்து வது, நல்லிணக்கத்தை நோக்கிய பயணத்தைத் தொடங்கு வது போன்ற பல கடினமான சவால்களை வன்முறைக்குப் பிந்தைய சமூகங்கள் எதிர்கொள்கின்றன / முன்வைக்கின் றன. இனப் படுகொலைக்கு அர்ப்பணிக்கப்பட்ட குறிப்பிடத்

தக்களவு ஆய்வுகள் இருந்தபோதிலும், இந்த நிகழ்வின் பல அம்சங்கள் ஆராயப்படாமல் உள்ளன. தீவிரமான, நெருக்க மானவர்களிடமிருந்து எதிர்கொள்ளும் வன்முறை குறித்து இதுவரையும் ஆய்ந்தறியப்படாத கேள்வியை ஒத்த இனப் படுகொலை வன்முறைக்குப் பிறகு சகவாழ்வு சாத்தியமா குமா ? சாத்தியமாகும் எனில், அது எந்தச் சூழ்நிலையில் என் பதுதான் பிரச்சினை என்பது கேள்வியாகவேயுள்ளது.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இந்த வகையான தீவிர வன்முறையிலிருந்து உருவாகும் பிரச்சினைகளைத் தீர்ப்ப தற்கு, இனப் படுகொலை, இனப் படுகொலைக்குப் பிந்தைய இயக்கவியல் பற்றிய அறிவைப் பெருக்க வேண்டிய அவசிய முள்ளது. இனப்படுகொலை தொடர்பாகச் சிந்திக்கத் தொடங்குவதற்கு இரண்டு வெவ்வேறுபட்ட அனுபங்களை இங்கு நாம் நோக்கலாம். இரண்டும் இன்றைய இலங்கை தொடர்பான உரையாடலுக்குப் பயனுள்ளவை.

### ருவாண்டா / ஏப்பிரல் – 1994:

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் மத்திய ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் டுக்சி சிறுபான்மையினருக்கெதிரான வன்மு றைகள் அரங்கேறத் தொடங்கின. கிட்டத்தட்ட 100 நாட்களில்



பத்து இலட்சம் பேர் கொல்லப்பட்டார்கள். இதில் மிகவும் முக் கியமானது யாதெனில், ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் படையினர் அங்கு பணியிலிருந்தபோதே இந்த நர வேட்டை நடந்தது. உலக வரலாற்றில் பெருமளவிலானோர் திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்ட நிகழ்வுகள் பல நடந்துள் ளன. அதில் ருவாண்டாவில் நடைபெற்றது முக்கியமானது. இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய இருபதாம் நூற் றாண்டின் குறிப்பிடத்தக்க நிகழ்வு ருவாண்டா இனப் படு கொலை ஆகும். சோவியத் யூனியனின் சிதைவுக்குப் பிறகு அமெரிக்கா தலைமையிலான ஒரு மைய உலகம் செல்வாக் குச் செலுத்தத் தொடங்கிய காலப்பகுதியில் இது நிகழ்ந்தது. இதுவே இந்த இனப் படுகொலையின் அரசியல் முக்கியத்து வம்.

ருவாண்டா இனப் படுகொலையின்போது ஐ.நா ஏன் ஒரு பார் வையாளராகவிருந்தது ? ஏன் தன் கண்முன்னே நிகழ்ந்த நூறாயிரக்கணக்கான கொலைகளுக்கு தார்மீக ரீதியில் பொறுப்பேற்கவில்லை ? இலங்கை போன்ற நாடுகளில் நடை பெற்ற குற்றங்களுக்கு இதே அமைப்பிடம் தீர்வை எதிர்பார்க் கலாமா ? இவை ருவாண்டா விட்டுச்செல்லும் முக்கியமான கேள்விகள்.

ருவாண்டா இனப் படுகொலை நடைபெற்று முப்பதாண்டுகள் முடிவடையவுள்ள நிலையில் இவ்வாண்டு ஜனவரி மாதம் இந்த இனப் படுகொலையில் கொல்லப்பட்டவர்கள் என்று நம்பப்படும் 119 பேரின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கொலைகள் நடந்து கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களுக்குப் பிறகும் அதிகாரிகள் தொடர்ந்தும் கொல்லப்பட்டோரின் புதைகுழிகளைக் கண்டுபிடித்தவண்ணம் இருக்கிறார்கள். இனப் படுகொலையின் குற்றவாளிகள் தங்கள் மீது குற்றஞ் சாட்டக்கூடிய தகவல்களை மறைக்க தங்களால் இயன்ற வரை முயற்சிக்கிறார்கள். அதனாலேயே எச்சங்கள் தொடர்ந் தும் கண்டுபிடிக்கப்படுகின்றன. இது சொல்கிற செய்தியும் இன்றைய இலங்கைச் சூழலுக்கு ஒரு பாடத்தைச் சொல்கி றது.

### போட்ஸ்வானா / யூன் – 2002:

போட்ஸ்வானா அரசாங்கம் மத்திய கலஹாரி கேம் ரிசர்வ் காடுகளிலிருந்து கடைசி பசர்வாக்களை - இவர்கள் வேட்டை யாடும் இனக் குழுவினர் - அகற்றி அவர்களை வலுக்கட்டாய மாக நியூ சேட் என்ற குடியேற்றத்திற்கு மாற்றியது. 1961-ம் ஆண்டு போட்ஸ்வானா ஒரு நாடாக முறைப்படி உருவாக்கப் பட்டதிலிருந்து இக்காடுகளின் சட்டப்பூர்வமான, சுதந்திரமான குடியிருப்பாளர்களாகக் கருதப்பட்ட பசர்வா இனக்குழுவி னர், 1980-களில் இப்பகுதியில் வைரங்கள் இருப்பதற்கான குறிகாட்டியான கிம்பர்லைட் வைப்புகள் கண்டுபிடிக்கப்பட்ட திலிருந்து நெருக்கடிக்குள்ளாகினர். 1997-ம் ஆண்டளவில் போட்ஸ்வானா அரசாங்கம் பசர்வாக்கள் தம் இருப்பிடத் தைக் கைவிடுமாறு அழுத்தம் கொடுப்பதற்காகவும், மறைமு கமாக இந்தப் பகுதிகளைக் கைப்பற்றுவதற்காகவும் ஒரு முறையான இடமாற்ற பிரச்சாரத்தைத் தொடங்கியது. இந்த இடமாற்ற முயற்சிகள் போட்ஸ்வானாவில் அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபட்ட சர்வதேச அமைப்புக்களின் கடு மையான கண்டனத்திற்கு ஆளானது. குறிப்பாகச் சர்வதேச அபிவிருத்திக்கான நோர்வேஜிய நிறுவனத்தின் (நோராட்) எதிர்ப்பு முக்கியமானது. இது போட்ஸ்வானா அரசாங்கத்தை இடமாற்ற முயற்சிகளை தற்காலிகமாக நிறுத்திவைக்கத் தூண்டியது. இருப்பினும், பசர்வா இனக்குழுவை இப்ப குதியை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்க அரசாங்கம் பிற தந் திரங்களைக் கையாண்டது. பசர்வாக்களை வெளியேறத் தூண்டுவதற்கான ஐந்து வருட முயற்சிகள் தோல்வியடைந்த பின்னர், அரசாங்கம் இடமாற்ற பிரச்சாரத்தை மீண்டும் தொடங்கி கடைசி பசர்வாக்களை நியூ சேட்டுக்கு இடம் மாற் றியது.

ஆபிரிக்காவிலுள்ள சில 'வளர்ச்சி பற்றிய வெற்றிக் கதைக ளில்' போட்ஸ்வானாவும் ஒன்றாகும். பெரும்பாலும் வைரத் தொழில், மாட்டிறைச்சித் தொழில், வெளிநாட்டு நேரடி முத லீடு ஆகியன இதற்குக் காரணமாகும். இடமாற்றம் செய்யப் பட்ட சிறிது காலத்தில், பசர்வாக்கள் போட்ஸ்வானாவின் உயர் நீதிமன்றத்தில் அரசாங்கத்தின் மீது வழக்குத் தொடர்ந் தார். வழக்கின் நோக்கம் எளிமையானது: பசர்வாக்கள் காட்

டுக்குத் திரும்பிச் செல்வதற்கான உரிமையைச் சட்டப்பூர்வ மாக நீதிமன்றத்தைக் கட்டாயப்படுத்துதல். இது கலஹாரி யின் பூர்வகுடிகள் (First People of the Kalahari) என்கிற உள் ளூர் பசர்வா அமைப்பின் முயற்சியால் ஏற்பாடு செய்யப்பட் டது. ஆனால் இதற்கு சர்வைவல் இன்டர்நேஷனல் போன்ற பெரிய சர்வதேச மனிதாபிமான அமைப்புகளால் நிதியளிக் கப்பட்டது. உள்நாட்டில் இந்த வழக்கின் நோக்கங்களையே கேள்விக்குட்படுத்தியது.

2006-லும் 2011-லும் போட்ஸ்வானா உயர் நீதிமன்றம், மேல்மு றையீட்டு நீதிமன்றம் ஆகியவை முறையே பசர்வாக்களின் இடமாற்றம் சட்டவிரோதமானது என்று அறிவித்தன. ஆனால் நீதிமன்றின் எந்த முடிவும் அரசாங்கக் கொள்கையைப் பாதிக்கவில்லை. அதற்குப் பதிலாக, இக் காடுகளில் சுரங்க அகழ்வுக்குத் தனியாருக்கு அரசுரிமம் வழங்கப்பட்டது. பசர் வாக்கள் திரும்புவதற்கு வசதிசெய்ய மறுக்கப்பட்டது. இதற்கி டையில், இடம்பெயர்க்கப்பட்ட பசர்வாக்களின் பொருளாதார உரிமையின்மை, இடப்பெயர்வினால் அவர்களின் சமூக நடை முறைகளைக் கலைத்தல், சுகாதாரத்தில் ஏற்றத் தாழ்வுகள் ஆகியவற்றை மையப்படுத்திப் பசர்வாக்கள் இனப் படுகொ லைக்கு ஆளானவர்கள் என்ற கருத்தாக்கம் தோற்றம் பெற் றது.

பூர்வகுடி மக்களுக்கான சர்வதேச நிதியுதவியாளர்கள் போன்ற மனிதாபிமான குழுக்களின் ஆசிரியர் தலையங்கங்க ளிலும் துண்டுப் பிரசுரங்களிலும் பசர்வாக்கள் நடத்தப்பட்ட விதம் இனப் படுகொலையின் செயலாக அடிக்கடி விவரிக் கப்பட்டது. பசர்வாவின் இக்கட்டான நிலை குறித்து ஐரோப் பிய ஊடகச் சந்தைகளில் முதல் கதைகளை வெளியிட்ட பத் திரிகையாளர் ரூபர்ட் ஐசக்சன், நாடோடிக் குழுக்களை அழிப் பதன் மிக நீண்ட காலனித்துவ, பின்காலனித்துவப் பாரம்பரி யத்தை மேற்கோள் காட்டி நிலைமையை 'மெதுவான இனப் ப டுகொலை' என்று விவரித்தார். சர்வதேசச் சட்ட உதவி அமைப்புகள், பசர்வாக்களைக் கட்டாயமாக அகற்றுவதை 'கலாசார இனப் படுகொலையின்' வடிவமாக அடையாளம் கண்டனர். இன்னும் சில சர்வதேசத் தொண்டு நிறுவனங்கள் பசர்வாக்கள் நடத்தப்படும் விதமானது 'இனப் படுகொ லைக்கு மிக நெருக்கமானது', 'இனப் படுகொலைக்குச் சமம்' போன்ற சொற்பதங்களைத் தங்கள் அறிக்கைகளில் பயன்ப டுத்தினர். இந்தக் குழுக்கள் சர்வதேசச் சமூகத்தை அணிதி ரட்டும் நம்பிக்கையில் மட்டும் இச்சொல்லாடலைப் பயன்ப டுத்தவில்லை. பல தசாப்தங்களாகப் பசர்வாக்களைப் பாதித்த அழிவுகரமான நிலைமைகள், கொள்கைகளை வெளிப்படுத்தவும் பசர்வாக்கள் மீதான அனுதாபத்தை விரிவு படுத்தவும் இனப் படுகொலையின் மொழியைப் பற்றிக் கொண்டனர்.

இனப் படுகொலை என்ற கருத்தாக்கத்தின் இந்தப் பயன் பாடு தொடர்ச்சியான சர்ச்சைகளைத் தூண்டியது. பல உள் நாட்டு போட்ஸ்வான் குழுக்கள் பசர்வாவினர் நடத்தப்பட்ட தன் அடிப்படையில் இந்த வார்த்தை பொருத்தமற்றது என்று கருதினர். எல்லாவற்றிற்கும் மேலாக, பசர்வாவினர் படு கொலை செய்யப்படவில்லை, அவர்களின் அடையாளத் தைக் கைவிடுமாறு கட்டாயப்படுத்தவில்லை. எனவே இச் சொற்பிரயோகம் தவறானது என்று வாதிட்டனர். அரசாங்கப் பிரதிநிதிகள் இனப் படுகொலைக் குற்றச்சாட்டுகளுக்கு மீண் டும் மீண்டும் பதிலளித்து, பசர்வாவின் இடமாற்றத்தில் இனப் படுகொலை நடக்கவில்லை என்று தொடர்ச்சியாகத் தம் வாதங்களை முன்வைத்தனர். இந்த விவாதங்கள் தவிர்க்கவி யலாமல் பசர்வா மக்களின் பிரச்சினைகளைப் பற்றியதாக இல்லாமல் இனப் படுகொலை நடந்ததா இல்லையா என்ற திசைவழியில் மாறின.

இது இரண்டுவிதமான விளைவுகளை ஏற்படுத்தியது. முதலா வது, பசர்வா மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளை அரசி யல் கதையாடல்கள் மேவின. இரண்டாவது, அரசாங்கம் இனப் படுகொலை என்ற கருத்தாக்கத்தை வரைமுறையாக மறுப்பதன் மூலம் பசர்வா மக்களின் பிரச்சினைகளையும் இல குவாக மூடி மறைத்தது. கடந்த பத்தாண்டுகளில் பசர்வாக்க ளின் இடமாற்றம் தொடர்பான போராட்டமானது நாடுகடந்த வாதிடும் வலைப் பின்னல்கள், உள்நாட்டுச் சட்ட அமைப்பு கள், பெரு நிறுவன நலன்கள், வரலாற்றுக் கதைகள், தனியார் போராளிகள், பிந்தைய காலனித்துவ எதிர்பார்ப்புகள், இனப் படுகொலை பற்றிய சர்வதேச விவாதங்கள் ஆகியவற்றுக்கு இடையேயான சிக்கலான உறவுகளை வெளிப்படுத்தின.

போட்ஸ்வானா அனுபவம் இனப் படுகொலை என்ற கருத்தை சரியான முறையில் பயன்படுத்துவதன் அவசியத்தைக் காட்டி யது. குறிப்பாகக் கொலைகள் நடைபெறாத நிலையில் இந் தக் கருத்தின் பயன்பாடு பொருத்தமற்றதாகவும், புண்படுத் தக் கூடியதாகவும் இருந்தது. இது மிகவும் முறையான, விரை வான, இனரீதியாகத் தூண்டப்பட்ட வெகுஜனக் கொலைக ளில் பாதிக்கப்பட்டவர்களை அவமதிக்கும் என்று கருதப்பட் டது. சொற் பிரயோகங்கள் யாருடைய நலனுக்கானவை என்ற வினாவையும் இந்த அனுபவம் விட்டுச் செல்கிறது.

மேற்குறிப்பிட்ட ருவாண்டா, போட்ஸ்வானா ஆகிய இரண்டு உதாரணங்களும் இனப் படுகொலையின் அரசியலின் இரண்டு வெவ்வேறு பரிமாணங்களைப் பேசுகின்றன. ருவாண்டா அனுபவம் இனப் படுகொலையையே ஓர் அரசி யல் ஆயுதமாகக் கொண்டது. போட்ஸ்வானா அனுபவமானது இனப் படுகொலை என்ற சொல்லாடலை அரசியல் ஆயுதமா கப் பயன்படுத்தியது. இவை இரண்டிலும் இன்னும் பல பரிமா ணங்கள் உட்பொதிந்துள்ளன. இனப்படுகொலையின் அரசி யல் என்பது பலவிதமான கதையாடல்கள், மொழி விளை யாட்டுகள், வதந்திகள், தர்க்கம், சொல்லாட்சி உத்திகள், சூழ்ச்சிகள், இனப்படுகொலையின் கருத்தைச் சுற்றியுள்ள சிதைவுகள் ஆகியவற்றைக் குறிக்கிறது. சுருக்கமாக, இனப் படுகொலையின் அரசியல் கருத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிய வெளிப்படையான, மறைமுகமான கருத்து வேறுபாடு களை உருவாக்குவதை விவரிக்கிறது. அரசியலாக இனப் படுகொலை என்பது ஓர் அரசியல் நடைமுறை அல்லது செயற்பாடுகளைக் குறிக்கிறது, இது குழுக்களைக் குறி வைத்து அழிக்க பல்வேறு வகையான வெகுஜன வன்முறைக ளைப் பயன்படுத்துகிறது.

இனப் படுகொலையின் அரசியல், அரசியல் கதையாடலில் கருத்தின் பயன்பாடுகளை நிர்வகிக்கும் வரம்புகள் அல்லது எல்லைகளைத் தீர்மானிக்கிறது, அதன் விளைவாக, இனப் படுகொலை என்று சட்டப்பூர்வமாக விவரிக்கப்பட்டு அரசிய

லாக்கப்படக்கூடிய செயற்பாடுகள் அல்லது நிகழ்வுகளின் தொகுப்பை வரையறுக்கிறது.

### சுருங்கச் சொன்னால்:

- இனப் படுகொலையின் அரசியல் நிகழ்வுகள் இனப்படு கொலையாக விளங்குவதற்கான சாத்தியக்கூறுகளை உரு வாக்குகின்றன.
- இனப் படுகொலையைச் சர்வதேசச் சட்டம், சமூக அறிவி யல், அரசியல் கோட்பாடு, வரலாற்று அடிப்படையில்



விளக்குவதற்கு முனைகிறது.

- வெகுஜன வன்முறையை எவ்வாறு விளங்கிக் கொள்வது குறித்த சமூகவியல் உளவியல் பார்வைகளை முன்வைக் கிறது.

இனப் படுகொலை என்ற கருத்தைப் பயன்படுத்துவதானது, குறித்த கருத்தின் முன்கணிப்புகளின் அடிப்படையிலானதா அல்லது சமகால அரசியல் நடவடிக்கைகளுக்கான கருத் தாக்கத்தின் தாக்கங்கள் பற்றிய கேள்விகளினாலானதா அல் லது சர்வதேசச் சட்டத்தின் கீழ் கோடிட்டுக் காட்டப்பட்ட கட மைகளாகத் தீர்க்கப்பட்டுள்ளதா என்ற வினா எழுவது இயற் கையானது. இதற்கான பதில்கள் பெரும்பாலும் இனப் படு கொலையின் கருத்து என்ன அல்லது இனப் படுகொலையின் கருத்து சமகால அரசியலில் எவ்வாறு செயற்படுகிறது என் பது பற்றிய வெளிப்படையாகக் கூறப்படாத, ஆனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நம்பிக்கைகளையும் சோதிக்கப்படாத அனு மானங்களையும் சார்ந்துள்ளது. இனப் படுகொலையின் அர சியலை அரசியல் நடவடிக்கையின் ஒரு தனித்துவமான அங் கமாக தெளிவாக்குவதன் மூலம், இந்த அனுமானங்களை கேள்விக்குள்ளாக்குவதும் மறுமதிப்பீடு செய்வதும் அவசிய மாகிறது. ஏனெனில் வெகுஜன வன்முறை, நிகழ்வுகளின் வர லாற்று ரீதியாக இனப் படுகொலையின் கருத்தைப் புரிந்து கொள்ளும் விதத்தை மாற்றியமைத்துள்ளது.

### இனப் படுகொலைகளின் வரலாற்று வரைபடம்:

இனப் படுகொலைகள் பற்றிய பொதுவான கவனம் இரண் டாம் உலகப் போரின் பின்னரே தொடங்கியது. இரண்டாம் உலகப் போரில் ஹிட்லர் தலைமையிலான நாஜிகள் அரங் கேற்றிய வெறியாட்டம் உலகளாவிய கவனம் பெற்றது. அவர் களது வதை முகாம்களும், உயிரியல் பரிசோதனைகளும், உயிர்கொல்லும் வாயு அறைகளும் பற்றிய கதைகள் நெஞ் சைப் பதற வைப்பவை. இரண்டாம் உலகப் போரின் முடிவா னது இனிமேல் இவ்வாறான கொடுஞ் செயல்கள் நடக்க அனு மதிக்கக் கூடாது என்ற பொது உடன்பாட்டுக்கு மனிதகுலம் வந்ததை எடுத்துக் காட்டியது. ஆனால் இது தற்காலிகமா னது என்பதை நிறுவும் வகையில் இரண்டாம் உலகப் போருக் குப் பிந்தைய கடந்த 80 ஆண்டுகளில் எத்தனையோ கொடு ரங்கள் அரங்கேறியுள்ளன. இவை எழுப்புகிற கேள்வி ஒன்று தான். மனிதகுலத்தின் இந்நடத்தை உலகம் நவீனமயமாகத் தொடங்கியதன் பின்னரான ஒரு போக்கா அல்லது இயல்பி லேயே மனிதகுலம் கொடூரமானதா ?

கொலைகள் நவீன உலகத்தின் புதுமையல்ல. நவீன மனிதர் களின் மூதாதையர்கள் ஐரோப்பாவின் தொன்மையான நியண்டதால் மக்களை அழித்ததாகச் சில வரலாற்று ஆய்வு கள் சந்தேகிக்கின்றன. பிற்காலத் தொல்லியல் சான்றுகள் கற்காலத்தில், 'போட்டியிடும் உள்ளகச் சமூகங்கள் (Intra Communities) ஒருவரையொருவர் அழித்தொழிக்கும் முயற்சி யில் ஈடுபட்டிருக்கலாம்' என்று கூறுகின்றன.

### பண்டைய கால வன்முறை வாழ்க்கை:

புதிய கற்காலத்தில் விவசாயத்தின் வளர்ச்சியால் கிடைத்த அதிக உற்பத்தியானது பெரும் போர்க் காலங்களின்போது ஏற்படும் உணவுத் தேவையை ஈடுசெய்தது. ஐரோப்பாவின் முதல் விவசாயிகள் வரலாற்றுக்கு முந்தைய வேட்டைக்காரர் களை விட நாகரீகமாக இருந்திருந்தால் கொலைகளுக்கு அதிக வாய்ப்புள்ளது என்று வரலாற்றாசிரியர்கள் கணிக்கி றார்கள். மனிதகுல வரலாற்றில் ஒட்டுமொத்தச் சமூகங்களும் அழிக்கப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. சில தொல்பொ ருள் ஆராய்ச்சியாளர்கள் இவ்வாறான போரின் தொடக் கத்தை முந்தைய காலக்கட்டத்தில், மெசோலிதிக் சகாப்தத் தில் தேதியிட்டாலும், மற்றவர்கள் வரலாற்றுக்கு முந்தைய வேட்டைக்காரர்கள் விவசாயிகளாகி, குடியேறி, நிலத்திற்காக சண்டையிட்டபோதுதான் ஆயுத மோதல்கள் தொடங்கியது என்று வாதிடுகின்றனர். நவீன இனப் படுகொலையை சாத்தி யமாக்கிய சக்திகளின் தொழில்நுட்ப ஏற்றத்தாழ்வு பண் டைய, இடைக்கால உலகங்களில் அரிதாக இருந்தது. பதி னைந்தாம் நூற்றாண்டிலிருந்து, நவீன சகாப்தத்தின் விடியலி லிருந்து, போக்குவரத்து, ஆயுதங்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், தேவையான தொழில்நுட்ப இடைவெளி யால் பிரிக்கப்பட்ட மோதலைச் சமூகங்களுக்குள் அடிக்கடி கொண்டு வந்தன. இதன் வழிப்பட்டு இனப் படுகொலைகள் நிகழ்ந்தன.

இந்த வரலாற்றை இன்னும் ஆழமாகச் சில வரலாற்று நிகழ்வு களின் வழி நோக்கலாம். இக்கதையை நாம் ஸ்பார்டாவிலி

ருந்து தொடங்கலாம். பண்டைய ஸ்பார்டா, நகரங்கள் இல்லாத சமூகமாக இருந்தது. அது பணப் புழக்கத்தையும் உள்நாட்டு வர்த்தகத்தையும் தடைசெய்தது. வெளிப்புற வர்த்தகத்தைக் கவனமாகக் கட்டுப்படுத்தியது. குடும்ப வாழ்க்கையை மதிப்பிழக்கச் செய்ய ஒரு ஒருங்கிணைந்த முயற்சியை மேற்கொண்டது. ஊதியம் பெறாத தொழிலாளர் படையின் அடிப்படையில், இது ஒரு இரகசிய, இராணுவவாத, விரிவாக்கவாத அரசாகத் தொழிற்பட்டது. அவ்வகையில் கூட்டுக் கொலைகளைச் செய்வதற்கான திறனை வெளிப்படுத்தியது. ஸ்பார்டாவின் 'தனித்துவமான இராணுவச் சமூகம்' உண்மையிலேயே ஒரு 'போர்ப் பட்டறை' ஆகும். அதன் விரிவாக்கம், அனேகமாகக் பொது ஆண்டுக்கு முன்(பொ.ஆ.மு) எட்டாம் நூற்றாண்டில், அதன் சொந்தப் பகுதியான லகோனியாவிலுள்ள ஏஜிஸ் என்ற நகரத்தைக் கைப்பற்றி அழித்ததில் தொடங்கியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு, ஸ்பார்டா அண்டை பிராந்தியமான மெசேனியா மீது படையெடுப்பைத் தொடங்கியது. 20 ஆண்டுகாலப் போரின் நிறைவில் வெற்றி சாத்தியமாகியது. இது மக்கள் தொகையின் அளவை இரட்டிப்பாக்கியதுடன் ஸ்பார்டாவைக் கிரேக்கத்தின் செல்வந்த அரசாக மாற்றியது, மூன்றரை நூற்றாண்டுகளாக ஸ்பார்டா அதன் எல்லையில் வெளிநாட்டு படையெடுப்புகளை எதிர்கொள்ளவில்லை. இக்காலப்பகுதிகளில் அண்டை நாடுகளைக் கைப்பற்றுதல், சுரண்டுதல், கட்டுப்படுத்தல் என்பவற்றைச் சாத்தியமாக்க ஏராளமான கொலைகளையும் ஸ்பார்ட்டா மேற்கொண்டது. ஸ்பார்டாவின் விவசாய சித்தாந்தம், உள்நாட்டு அடக்குமுறை, இன ஆதிக்கம், விரிவாக்க வன்முறை ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்புகள் இனப் படுகொலையின் முன்னோடியான அதன் பங்கை எடுத்துக்காட்டுகின்றன.

வரலாற்றில் பதிவாகியுள்ள இனப்படுகொலையின் முன்னோடிகள் ரோமர்கள். அவர்கள் பொ.ஆ.மு. 149-ல் வட ஆபிரிக்காவிலிருந்த கார்தேஜின் (Carthage) நகரின் மீது போர் தொடுத்தார்கள். மூன்றாண்டுகள் நீடித்த இந்தப் போரின் முடிவில் வெற்றியடைந்த ரோமர்கள் அந்நகரையும் மக்களையும் முழுமையாக அழித்தார்கள். இதில் 450,000 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள். கார்தேஜின் அழிவு இனப் படுகொலைக்கு முன்னுதாரணமாக அமைந்தது. ரோம் மத்திய தரைக்கடலை ஆட்சி செய்தது, அதன் படையணிகள் வடக்கு ஐரோப்பாவிற்கு அணிவகுத்துச் சென்ற வேளைகளில் பல தடவைகள் எதிரிகளுக்கு எதிராக இனப் படுகொலைகளை நிகழ்த்தியுள்ளன. இதில் ஒரு நிகழ்வை ஜூலியஸ் சீசரே பதிவு செய்துள்ளார்கள். பொ.ஆ.மு. 55-ல் ஜூலியஸ் சீசர் இரண்டு ஜெர்மன் பழங்குடியினரான உசிபெட்ஸ், டென்க்டெரி ஆகியோரைத் தான் முழுமையாக அழித்ததாகக் குறிப்பிடுகிறார். இவ்வாறு கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 430,000. ஆரம்ப மோதல்களுக்குப் பிறகு, பழங்குடியினர் ஒரு சமாதானத்தைக் கோரினர். அவ்விரு பழங்குடிகளதும் தலைவர்களும் அச் சமூகங்களின் மூத்தவர்களும் சீசரைச் சந்திக்க அவரது முகாமுக்கு வந்தனர். அனைவரையும் கைதுசெய்து கொலை செய்ய சீசர் உத்தரவிட்டார். அவர்களைக் கொன்ற பின்னர் ரைன் நதிக்கரையைக் கடந்து அப் பழங்குடியின மக்களையும் கொல்ல ஆணை பிறப்பித்தார். திடீரென்று வந்த படைகளை எதிர்கொள்ளத் தயாரில்லாத அப் பழங்குடிகள் சிதறி ஓடினர். அவர்கள் துரத்தித் துரத்தி வேட்டையாடப்பட்டனர். உயிர் தப்பியோருக்கு இன்னொரு பழங்குடியினமான சுகம்பிரி அடைக்கலம் கொடுத்தது. சுகம்பிரி மக்களின் வாழ்விடங்கள் ரோமானியப் படையினரால் சூறையாடப்பட்டன. இதனால் கோபமடைந்த நான்காவது ஜேர்மனியப் பழங்குடிகளான எபுரோன்கள் ரோமானியப் படைப்பிரிவொன்றைத் தாக்கி அழித்தனர். கோபமடைந்த சீசர் பெரும்படையை அனுப்பி எபுரோன் இனக்குழுவைப் பூண்டோடு அழித்தார். எபுரோன்கள் வரலாற்றுக் குறிப்புகளிலிருந்தே மறைந்து போனார்கள். சுகம்பிரி இனக்குழுவினர் தொடர்ந்து போராடினர். ஆனால் பொ.ஆ.மு. 17-ல் தோல்வியடைந்த சுகம்பிரி இனக்குழுவில் எஞ்சியிருந்த 40,000 பேர் நாடுகடத்தப்பட்டார்கள். இவ்வாறு பெருந்தொகையான மக்கள் நாடு கடத்தப்படும் வன்முறை நிகழ்வு என்ற வகையில் இது முன்னோடியானது.

## நாடுகாண் பயணங்கள் என்ற கொலைக்களம்:

1492-ல் தென்னமெரிக்காவின் கரீபியன் தீவுகள் நோக்கிய கொலம்பஸின் வருகைகள் ஓர் இரத்தக் களரிக்கு வழிவகுத்தது. முதல் ஸ்பானியர்கள் வந்திறங்கி, 20 ஆண்டுகளில் ஹிஸ்பானியோலா, ஜமைக்கா, போர்ட்டோ ரிக்கோ, கியூபா அனைத்தும் ஸ்பானியர்களின் வசமானது. வெற்றியாளர்களால் கொல்லப்பட்டும், அடிமைப்படுத்தப்பட்டும், நாடு கடத்தப்பட்டும், ஸ்பானியர்களிலிருந்து வந்த நோய்களாலும் சுதேசியப் பழங்குடி மக்களின் சனத்தொகை சடுதியில் குறைந்தது. 1519-ல் மெக்ஸிகோ, 1523-ல் குவாத்தமாலா ஆகியன வற்றின் வெற்றிகள் மிகப் பெரிய மக்கள்தொகைப் பேரழிவினாலேயே சாத்தியமானது. இந்த ஒவ்வொரு நிகழ்வுகளிலும் பல பழங்குடியினர் உயிர் பிழைத்தாலும் அவர்களும் விரைவில் அழிக்கப்பட்டனர்.

1492-ல் ஸ்பானியர்கள் வந்தபோது ஹிஸ்பானியோலா தீவின் பூர்வீக மக்கள் தொகை 3 மில்லியனுக்கும் அதிகமாகும். 17 ஆண்டுகளுக்குப் பிறகு, ஹிஸ்பானியோலாவில் 46,000 பூர்வீகவாசிகள் மட்டுமே உயிருடன் இருந்தனர். 1542 வாக்கில், கரீபியன், மெக்சிகோ, மத்திய அமெரிக்கா ஆகிய பிரதேசங்களிலுள்ள நிலத்தையும் அவற்றில் வசித்த பகுத்தறிவு மிக்க மக்களையும் ஸ்பானியர்கள் அழித்ததாகவும் அதன்போது பன்னிரண்டு மில்லியனுக்கும் அதிகமான ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கொன்றதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்பானியக் கொலனியாதிக்கம் அநியாயமாகக் கொடூரமான இரத்தக் களரிப் போர்களை நடத்தியது. அது அனைத்து பூர்வீக ஆட்சியாளர்களையும் இளைஞர்களையும் கொன்றதுடன் தப்பிப் பிழைத்தவர்களை அடிமைப்படுத்தியது. ஹிஸ்பானியோலாவிலுள்ள ஐந்து பழங்குடி இராஜ்ஜியங்கள் முதலில் அழிக்கப்பட்டன. அங்கு ஸ்பானியர்கள் பெண்களையும் குழந்தைகளையும் தங்கள் இச்சைகளுக்குப் பயன்படுத்தினர். தங்கள் வெறியாட்டத்தில் பச்சிளஞ் குழந்தைகளையோ வயதானவர்களையோ கூட விட்டுவைக்கவில்லை.

அக்ரோபர் 12, 1492 அன்று, கொலம்பஸ் தென்னமெரிக்காவில் இறங்கிய முதல் நாளில், இந்தியர்கள் 'நல்ல வேலைக்காரர்களாக இருக்க வேண்டும்' என்ற கணிப்பைத் தன் குறிப்பில் பதிந்திருந்தார். இரண்டு நாட்களுக்குப் பிறகு, அவர் ஸ்பெயினின் ராஜாவிடமும் ராணியிடமும் 'உங்களுக்கு என்ன

விருப்பம் என்று சொல்லுங்கள். இவர்களை அடிமைகளாக ஸ்பெயினுக்கு அனுப்பிவைக்கலாம் அல்லது இங்கேயே சிறைப்பிடிக்கலாம்' என்று கூறினார். அமெரிக்கப் பூர்வ குடிகளைக் கால்நடைகளுக்கு ஒப்பிட்ட கொலம்பஸ், மிகக்கொடூரமான முறையில் நடந்து கொண்டார். அவரது செயல்கள் சில நூற்றாண்டுகள் நீடித்த இனப் படுகொலைகளின் தொடக்கமாக இருந்தது.

1509-ல் ஸ்பானியர்கள் அண்டைத் தீவுகளான போர்ட்டோ ரிக்கோவையும் ஜமைக்காவையும் கைப்பற்றினர். அப்போது அப்பகுதியின் மக்கள் தொகை ஒரு மில்லியனுக்கும் அதிகமாக இருந்து. ஆரம்பப் படுகொலைகளுக்குப் பிறகு, ஸ்பானியர்கள் இந்தப் பூர்வ குடிகளைச் சுரங்கங்களின் கடின உழைப்புக்குக் கட்டாயப்படுத்தினர், இதனால் அவர்களில் பெரும்பான்மையானோர் கொல்லப்பட்டார்கள். 1552-ல் இப்பகுதியில் உயிர் பிழைத்தவர்கள் இருநூறுக்கும் குறைவு.




ஏப்ரல் 1519-ல், ஸ்பானியர் மெக்ஸிகோவின் கடற்கரையில் ஒரு சிறிய இராணுவத்துடன் தரையிறங்கினார், அப்போது அனாஹுவாக் என்று அழைக்கப்பட்ட இராச்சியத்தைக் கண்டனர். அதன் மக்கள் தொகை 12 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1519-1521-ல் ஸ்பானியர்கள் அனாஹுவாக்கைக் கைப்பற்றிய பிறகு, அந்த மக்கள்தொகை 85 சதவிகிதம் குறைந்தது. 1600-ல் அதன் சனத்தொகை 1 மில்லியனாகக் குறைந்தது. வரலாற்றாசிரியர்கள் இந்த நிகழ்வை 'உலக வரலாற்றின் மிகப் பெரிய படுகொலைகளில் ஒன்று' என்று அழைக்கிறார்கள்.

இன்றும் கொலம்பஸ் ஒரு வீரராக அறியப்படுகிறார். ஸ்பானியர்களின் பயணங்கள் 'நாடுகாண் பயணங்கள்' என்று அறியப்படுகின்றன. வரலாறு இவ்வாறுதான் எழுதப்பட்டுள்ளது. தென்னமெரிக்காவின் ஸ்பானியர்களின் பேராசைக்குப் பலியானோர் பல இலட்சம் பேர். பல அமெரிக்கப் பூர்வகுடிகள் அடையாளமே இல்லாமல் முற்றாக அழிந்து போயின. இந்த இனப் படுகொலைகள் குறித்து யாருமே பேசுவதில்லை. இனப் படுகொலையின் அரசியல் இது.

## தொடரும் குறிப்புக்கள்:

மேலே நாம் பார்த்த நிகழ்வுகள் வரலாற்று நோக்கில் அமைந்தவை. மனிதகுலத்தின் மிருகத்தனத்தை, அதன் வரலாற்றைப் பதிவு செய்யும் நிகழ்வுகள். இலங்கைச் சூழலைப் புரிந்துகொள்ள ஆசியச் சமூகங்களின் வரலாற்றில் இனப்படுகொலைகள் நடைபெற்றுள்ளனவா என்பதை நோக்குவது தேவையானது. ஸ்பானியக் கொலனியாதிக்கத்தை நிறுவுவதில் கிறிஸ்தவத்தின் பங்கு பெரிது. அதுபோல ஆசியச் சூழலில் பெரும் எண்ணிக்கையில் கொலைகள் நிகழ்வதற்கு ஆசிய மதங்கள் பங்காற்றியுள்ளனவா என்ற வினாவையும் சேர்த்துப் பார்க்க வேண்டியுள்ளது. 14-ம் நூற்றாண்டிலிருந்து 18-ம் நூற்றாண்டு வரையான நான்கு நூற்றாண்டுகளில் ஆசியாவும் பெரும் எண்ணிக்கையிலான கொலைகளைக் கண்டுள்ளது. குறிப்பாக ஜப்பான் தனது நிலப்பரப்பை ஒருங்கிணைப்பதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் (கொரியா மீதான படையெடுப்பு அடங்கலாக), பர்மாவும் கம்போடியாவும் மேற்கொண்ட பௌத்தத்தின் அடிப்படையில் இனத்துவ அடையாளங்களைத் திணிப்பதற்கான முயற்சிகள், புதிய கன்பூசியப் பண்பாட்டைப் பரவலாக்கும் வியட்னாமின் முயற்சிகள், ஜாவாவின் சக்திவாய்ந்த புதிய மாதரம் வம்சத்தின் விரிவாக்கமும் அதனோடு இணைந்த இஸ்லாத்தை சுத்திகரிக்கும் செயற்பாடுகள் ஆகியன குறிப்பிடத்தக்க அடையாள அடிப்படையில் பெருமளவில் உயிர்கள் காவுகொள்ளப்பட வழிகோலின. இதனை விரிவாக அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.

தொடரும்...



meenilankco@thaiveedu.com




‘பாரதியார் புதுவையில் இருந்தபோது குள்ளச்சாமி, கோவிந்தசுவாமி, யாழ்ப்பாணத்து சுவாமி, குவளைக் கண்-ணன் ஆகியோருடன் தொடர்பு கொண்டிருந்தார். இவர்கள் பால் அன்பும் பக்தியும் செலுத்திய பாரதி, தம் ‘பாரதி அறுபத் தாறு’ என்னும் பாட்டில் இவர்களின் புகழைப் பாடியிருக்கி றார். இவர்களில் குள்ளச்சாமி எனவும் மாங்கொட்டைச்சாமி எனவும் அழைக்கப்பட்டு வந்த புதுவைத் துறவியையே தம்


ப. கோதண்டராமன்.

குருவாகக் கொண்டார்’ என்று குறிப்பிடுவார் எழுத்தாளர் ப. கோதண்டராமன்.

இவர், செங்கல்பட்டு மாவட்டம், பினாயூரில், ஜூன் 20.06.1896 அன்று பிறந்தவர். செங்கை உயர்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வியையும், இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப் படிப்பை சென்னை கிறித்தவக் கல்லூரியிலும் பெற்ற இவர், சட்டக் கல்லூரியில் பயின்று பி.எல். பட்டம் பெற்றிருக்கிறார். தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, சம்ஸ்கிருதம், வங்காளம், பிரெஞ்ச் மொழிகள் கற்ற இவர், இதழாளர். இந்திய விடுதலைப் போராட்ட வீரர். ஸ்ரீஅரவிந்தரின் அன்புக்குப் பாத்திரமாகிய சீடர். நிறைவுக்காலத்தில் புதுவை அரவிந்த ஆசிரமத்தில் பிரம்மசாரியாகவே வாழ்ந்து சுமார் எழுபது ஆண்டுகளில் தன் வாழ்வை நிறைவுசெய்துகொண்டவர். மகான் குள்ளச்சா மியையும், மகாகவி பாரதியாரையும் ஒருசேர, சென்னைக் கூட்டத்தில் காணவும், பாரதியாரின் உரையைச் செவிமடுக்க வும் செய்தவர். அவர் குள்ளச்சாமியின் தோற்றத்தையும், செயல்களையும் பின்வருமாறு சித்திரப்படுத்துகிறார்:


### குள்ளச்சாமியின் தோற்றமும் செயற்பாடும்:

‘குள்ளச்சாமியார் குள்ளமாகவும் கறுப்பாகவும் சிறிய தலையு டையவராகவும் திடகாத்திரமாகவும் முழங்காலுக்கு மேல் துண்டை உடுத்தியும் இருந்தார். சுமார் 1910-ம் ஆண்டில், அவர் புதுவையில் மேற்குப் புலிவார் ரோடுக்கு அருகேயுள்ள காக்கா அப்பாசாமி கிராமணி சத்திரத்தில் தெருப்பக்கமாக இருந்த ஒரு சிற்றறையில் இருந்துவந்தார். அங்கே பெரும்பா லும் பெண்கள் தங்கள் மனோபீஷ்டங்கள் நிறைவேறுவதன் பொருட்டு அவரைத் தரிசித்துக் கும்பிட்டுச் செல்வர்.

பாரதியார் கூறியவண்ணம் அவர் தெருத் தெருவாகச் சுற்றி அலைவார். அதுசமயம் சிறுவர் அவர்மீது கற்களை விட்டெறி வதும், அவரும் தற்காப்பின்பொருட்டுச் சிறுவர்களைக் கண்ட வுடன் கற்களை எடுத்துக்கொண்டு தயாராக இருப்பதும் உண்டு. அவர் கள்ளுக் கடைகளில் தாராளமாகச் சென்று கள் உண்பார். ஆனால் போதை ஏற்பட்டதாகவோ, யாதே னும் ஒரு விபரீதம் நடந்ததாகவோ எவரும் இதுவரையிலும் கூறியதில்லை. (நான் இவ்விவரங்களை அக்காலத்தில் வாழ்ந்த புதுவைப் பெரியார் சிலரிடமிருந்து கேட்டறிந்தேன்.)

வ.உ.சிதம்பரனார் போன்ற பாரதியன்பர் சிலர் அஞ்சத்தகுந்த வகையில், குள்ளச்சாமியின் லாகிரிப்பயன்பாடு குறித்து எழு தியதற்கு மாறாக, குள்ளச்சாமியின் சித்த மனோபாவம் சிறந் திருந்திருந்தது என்பதற்கு மேற்சுட்டிய விளக்கம் பொருத்த மானதாக இருக்குமென நம்புகிறேன். மகாகவி பாரதி, புறத் தோற்றத்திற்கு அப்பால் இந்த மகானின் ஆன்மிக ஆளு மையை நன்கு உணர்ந்து கொண்டு, பின்னரே தன் குருவாக ஏற்றுக் கொண்டமையை இதுவரையில் பெறப்பட்ட செய்திக ளின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

மேலும், மகாகவி பாரதியாருக்கு மட்டுமன்றி, அவர்தம் நண்ப ரான ஸ்ரீஅரவிந்தருக்கும் அரிய விளக்கமொன்றினைக் குள்-ளச்சாமி தந்திருக்கிறார். அதுகுறித்தும் ப. கோதண்டராமன் பின்வருமாறு எழுதுகிறார்:



## அரவிந்தரும் குள்ளச்சாமியும்:

'குள்ளச்சாமி சாதாரண பரதேசியைப் போன்று தெருவில் சுற்றியலைந்த போதிலும் அவர் ஒரு தெளிந்த ஞானி என்பதில் சிறிதும் ஐயமில்லை. இக்கருத்து கீழ்க்கண்ட ஒரு நிகழ்ச்சியினாலும் உறுதிப்படுகின்றது.

பல வருஷங்களுக்கு முன், ஸ்ரீஅரவிந்தரைச் சூழ்ந்து இருந்த சீடர் சிலர், குள்ளச்சாமியைப் பற்றி ஏதோ பரிகாசமாகப் பேசினர். அதைக் கேட்ட ஸ்ரீஅரவிந்தர் அவர்களின் அறியாமைக்கு இரங்கி, குள்ளச்சாமி ஒரு சாதாரண மானிடர் அல்லர் என்றும், ஒரு சமயம் தம் ஞானமார்க்கத்தில் ஒரு நெருக்கடியான தருணம் ஏற்பட்டபோது குள்ளச்சாமி திடுமென்று தம் மாளிகை முன் தோன்றி, ஒரு கோப்பையைக் கவிழ்த்துப் பின்னர் அதை நிமிர்த்திவிட்டுக் 'குடு குடு'வென்று சென்று விட்டார் என்றும், அந்தச் சங்கேதத்தினால் தாம் குறிப்புகள் பெற்றதாகவும் கூறியதாக நம்பத் தகுந்த இடத்திலிருந்து இந்த நூலாசிரியர் கேள்விப்பட்டிருக்கிறார்.'

இந்த நூலாசிரியர் என்று தன்னைக் குறிப்பிட்டுக் கொள்ளும் ப. கோதண்டராமன், இந்தச் செய்திகளை எழுதிய நூல், 'புதுவையில் பாரதி' (சென்னை, பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு). இந்த நூலில்தான், சென்னையில் பாரதியாரும் குள்ளச்சாமியும் பங்கேற்ற உரையரங்க நிகழ்ச்சி தொடர்பான செய்தியினையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். வ.உ. சிதம்பரனாரின் பதிவினையும், இவர்தம் பதிவினையும் ஒப்பிட்டு நோக்க, மேலும் சில தகவல்கள் அறியக்கிடைக்கின்றன.

- புதுவையை விட்டு வெளியேறிய பிறகும் பாரதியார் குள்ளச்சாமியின்பால் கொண்டிருந்த அன்பும் பற்றுறுதியும் குறைந்தபாடில்லை. அதனால், சென்னைக்கு அவரை வரவழைத்திருக்கிறார்.
- புதுவை கனகராஜாவுக்கு எழுதிய கடிதத்தில் இடம்பெறும் முகவரியில் தங்கியிருந்த பாரதி, குள்ளச்சாமியையும் அங்கேயே அழைத்து வந்திருக்கிறார். அங்கு அழைத்துச் சென்று விடுத்ததாக, வ.உ.சி. பதிவிட்ட செய்தியோடு, ப.கோதண்டராமன் பதிவில் காணப்பெறும் தகவல்களையும் இணைத்துப் பார்க்கிறபோது, அங்கு சில நாட்கள் இருவரும் தங்கியிருந்ததை அறிய முடிகிறது.
- பித்தனைப் போன்ற தோற்றமும், செய்கையும் கொண்ட குள்ளச்சாமியார், துரைச்சாமி அய்யர் வீட்டில் இருக்கிற போதும் தன் நிலைப்பாட்டினை மாற்றிக் கொள்ளவில்லை என்றே தெரிகிறது.
- கோகலே மண்டபத்தில் பாரதி 'நானே கடவுள்' என்று உரையாற்றிய நிகழ்வுக்குத் தலைமை தாங்கியபோது, குள்ளச்சாமியின் உடுப்பில் மட்டுமே சிறிது மாற்றம் தெரிந்திருக்கிறது. மற்றபடி எந்த மாற்றமும் செயற்பாடும் தெரியவில்லை.
- 'மகாஞானாசிரியன் என்றெல்லாம் குள்ளச்சாமியைப் புகழ்ந்து பாரதியார் கூறினார்' என்று ப. கோதண்டராமன் குறிப்பிடுகிற செய்தி, அவர் மேலும் சில புகழுரைகளை முன்வைத்திருக்கக்கூடும் என்று புரிந்துகொள்ள வைக்கிறது. அது குள்ளச்சாமி குறித்துப் பாரதியார் பாடிய பாடல்களின் அடிநாதமாக இருந்திருக்கலாம். அத்துடன் 'நான் கடவுள்' என்ற உரையின் விளக்கத்திற்கு மேல் விளக்கமாக, குள்ளச்சாமியாருடனான அனுபவத்தைக் கூறியிருக்கிறாரா என்பதும் கோதண்டராமன் அவர்களின் குறிப்பிலிருந்து பெறமுடியவில்லை.
- 'பாரதியாரின் புகழுரைகளைக் கேட்டபிறகும், பாரதியின் முழு உரையினைச் செவிமடுத்த முன்னும் பின்னும் குள்ளச்சாமியார் யாதும் பேசாது மௌனமாகவே வீற்றிருந்தார்' என்கிறார் கோதண்டராமன். அந்த மௌனமே பாரதியாரின் உரைவிளக்கத்தை முற்றிலும் அங்கீகரிப்பதாக இருந்திருக்கிறது என்று பொருள் என்பது விளங்கிக் கொள்ளத்தக்கது.
- பின்னர், குள்ளச்சாமி, சிந்தாதிரிப்பேட்டை நாட்டுவைத்தியர் கண்ணப்ப முதலியார் இல்லத்திற்குச் சென்று தங்கியி

ருக்கிறார் என்பது, ப. கோதண்டராமன் எழுதியதிலிருந்து அறிய வருகிறது.

- இவையனைத்துக்கும் மேலாக, பாரதி உரையாற்றிய போது, குள்ளச்சாமியின் தோற்றமும், அவர்தம் செயற் பாடும், பாரதி அம்மகான் குறித்துச் சொல்லி அறிமுகப்ப டுத்திய தகவலும் நேரில் அந்நிகழ்வில் பங்கேற்ற ப. கோதண்டராமனின் நூலில் பின்வருமாறு பதிவாகி இருக்கின்றன. அதில் நான் என்று குறிப்பிடாமல், தன்னை இந்நூலாசிரியர் என்றே அவர் குறித்திருக்கிறார்.

இனி ப. கோதண்டராமனின் பதிவு வருமாறு:

## சென்னையில் குள்ளச்சாமி:

பித்தனைப் போன்று இவ்வண்ணம் வாழ்ந்துவந்த குள்ளச்சா மியாரின் அருமை பெருமைகளை நன்குணர்ந்த பாரதியார், அவர்மீது பேரன்பு செலுத்தி வந்தார். அவர் 1918-ம் வருடம் டிசம்பர் மாதம் புதுவையைவிட்டுச் சென்னை சேர்ந்து, சிறிது காலம் மண்ணடியில் இருந்த ராமசாமி தெருவில் சா. துரை-சாமி அய்யர் வீட்டில் தங்கியிருந்தபோது குள்ளச்சாமியைச் சென்னைக்கு அழைத்துவர ஏற்பாடு செய்தார். அவ்வாறே துரைசாமி அய்யரவர்களின் வீட்டில் தங்கியிருந்தபோதும் கோகலே மண்டபத்தில் பாரதியார் சொற்பொழிவு நடத்திய போதும் இந்நூலாசிரியர் (ப. கோதண்டராமன்) அவரைக் கண்டிருக்கிறார். அதுசமயம் அவர் கண்டதும் கேட்டதும் வரு மாறு:

## தோற்றமும் செயலும்:

குள்ளச்சாமியார் எப்போதும் குழந்தையைப் போல விறுவி றுப்பாக இருப்பார். வீட்டில் சாதாரணமாக முழங்காலுக்கு மேலே ஒரு துண்டு உடுத்தியிருப்பார். கோகலே மண்டபத் தில் தலைமை வகித்தபோது மட்டும் ஒரு வெளுப்பான வேட் டியும் சொக்காயும் தலையில் காவியேறின ஒரு முண்டாசும் கட்டியிருந்தார். அவரைக் கண்டோர் அவரைப் பரமசாது என்றே கூறினர். அப்போது சிந்தாதரிப்பேட்டையில் நாட்டு வைத்தியராக விளங்கிவந்த கண்ணப்ப முதலியார் குள்ளச் சாமியைத் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்று உபசாரஞ் செய்து வந்தார்.

துரைசாமி அய்யர் வீட்டில் சில நாள்கள் பாரதியுடன் தங்கியி ருந்தபோது காகிதத்துண்டு, குப்பை, வாழைப்பழத்தோல் முதலியன அங்குமிங்குமாக இறைந்திருக்கக் கண்டால், வீடெங்கும் சுற்றி அவைகளைப் பொறுக்கி அப்புறப்படுத்து வார்; இரவு முழுதும் உறங்காமல் படுக்கையில் உட்கார்ந்த வண்ணமாக இருப்பார்; யாருடனும் சகஜமாகப் பேசமாட்டார்; பேச்சுக் கொடுத்தாலோ ஒரு சொல்லுக்கும் மற்றொரு சொல் லுக்கும் யாதொரு தொடர்பும் இன்றிப் பேசுவார். கோகலே மண்டபத்தில் தலைமை வகித்தபோது பாரதியார் கூட்டத்தின ருக்கு அவரை அறிமுகம் செய்து வைக்கையில் மகாஞானாசி ரியன் என்றெல்லாம் புகழ்ந்து பேசினார். ஆனால், குள்ளச்-சாமி தொடக்கத்திலேனும் இறுதியிலேனும் தம் வாயைத் திறந்து யாதொன்றும் பேசவில்லை.

பாரதியார் குள்ளச்சாமியிடம் எவ்வளவு அன்பு வைத்திருந் தாரோ அவ்வளவு அன்பு குள்ளச்சாமிக்கும் பாரதியாரிடம் உண்டு. பல சமயங்களில் குள்ளச்சாமி 'பாரதி தங்கமான வன்' எனக் கூறியிருக்கிறார்.

அப்போது குள்ளச்சாமிக்கு ஐம்பத்தைந்து அல்லது அறுபது வயது இருக்கும் போலத் தோன்றியது. ஆனால், அவருக்கு நூறு வயதுக்கு மேலாயிற்று எனப் பலர் கூறினர். பாரதியா-ரும், 'குள்ளச்சாமி காயகற்பம் செய்துவிட்டான்' என்றும், 'அவர் வாழ்நாட்களைக் கணக்கிட்டு வயது உரைப்பார் யாரு மில்லை' என்றும் 'பாரதி அறுபத்தாறு' என்னும் பாடலில் கூறி யிருக்கிறார்.'

தனது தவ ஆற்றலால், வயது நூறாயினும் வாலிபத்தோற்றம் மாறாத அளவிற்குக் காயகற்பம் செய்துவிட்டவர் குள்ளச்-சாமி என்றால், அவரினும் குறைந்த வயதுடைய பாரதியாரை ஆட்கொண்ட குருசாமியாகிய குள்ளச்சாமி, அவருக்கும் அத் தகு தவ வலிமை கிடைக்க உதவி புரிந்திருக்கிறார் என்ப தற்கு, தங்கமானவன் என்று அவர் கூறிய தொடரே பதிலாக அமைகிறது.

## 'தங்கமானவன் பாரதி':

சென்னை நிகழ்வில் மௌன சாமியாகவே இருந்துவிட்ட குள் ளச்சாமி, அந்த அரங்கில் பாரதியார் குறித்து யாதொன்றும் குறிப்பிடாவிட்டாலும், பல சமயங்களில், 'பாரதி தங்கமான வன்' என்று கூறியிருப்பதாக, கோதண்டராமன் குறிப்பிட்டிருக் கிறார். ஆனால், யாரிடம், எப்போது என்றெல்லாம் அவர் குறிப்பிடவில்லை. அது செவிவழிச் செய்தியாக வந்த ஒன்று. நதிமூலம் போல, இந்த ரிஷிமூலம் காண வேண்டியதில்லை தான். ஆனாலும், தங்கத்திற்குத் தனி விளக்கம் தர வேண்டி யிருக்கிறது.

தங்கம் மண்ணில் காணப்பெறும் உலோகம் என்றாலும், அதற்கு மகத்தான குணம் உண்டு. அதுபோல், தவசீலர்கள் மனிதர்கள்தான் என்றாலும், அவர்களுக்குத் தனித்துவமிக்க மாண்பு உண்டு. இரண்டையும் ஒப்பிட்டு,

***சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்***
***சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.***

என்பார் திருவள்ளுவர்.

தங்கமானது நெருப்பில் இட்டுச் சுடச் சுடக் கருகாது மேலும் மேலும் சுடர்ந்து ஒளிவிடும். அதுபோல் துன்பம் பலப் பல வாய் வந்து தன்னை அடினும், சுடினும் வெம்பாது, வீழாது தன்னை நிலைநிறுத்தி நிற்பவர்களே தவசீலர்கள். அத்தகு தவசீலராகப் பாரதி திகழ்ந்தார் என்பதைத் தன் வாக்காகக் குருசாமியாகிய குள்ளச்சாமி கூறியிருக்கிறார் என்கிறார் ப. கோதண்ட ராமன்.

இதுபோல், மற்றுமோர் அன்பர், பாரதியாரைக் குள்ளச்சாமி, 'வாடாமல்லிகை' என்று குறிப்பிட்டிருப்பதையும் நாம் நினைவு கூரக் கடமைப்பட்டிருக்கிறோம்.



sethupathi@thaiveedu.com




சென்ற இதழில் கம்பராமாயணம், அயோத்தியா காண்டத்தின் மூன்றாவது படலமாகிய கைகேயி சூழ்வினைப் படலத்தின் பிற்பகுதியில் நிகழ்வனவற்றைக் கூறும் கம்பரின் கவிநயம் மிக்க செய்யுள்களுள் சிலவற்றைத் தேர்ந்து எடுத்து உங்களுடன் பகிர்ந்திருந்தேன். இந்த இதழில் அயோத்தியா காண்டத்தின் நான்காவது படலமாகிய நகர் நீங்கு படலத்தில் நிகழ்வனவற்றின் ஒரு பகுதியைக் கம்பரின் கவிநயத்தின் சிறப்போடு சுவைப்போம். வாருங்கள்.

இராமன் கைகேயியை வணங்கி விடைபெற்றுக் கொண்டு, தந்தையின் முன் சென்றால் தன் பிரிவுக்காக அவர் வருந்துவாரே என எண்ணித் தந்தை இருக்கும் இடத்தை நோக்கித் தொழுது விட்டுத் தான் காடு செல்லப் போவதைக் கோசலைக்குத் தெரிவித்துத் தன் பிரிவால் வருத்தமடைகின்ற தந்தைக்கு ஆதரவாக இருந்து அவரைத் தேற்றிச் சமாதானப்படுத்துமாறு அவளிடம் வேண்டி விடை பெற்றுச் செல்வதற்காகக் கோசலையின் மாளிகைக்குச் செல்கிறான்.

***குழைக்கின்ற கவரி யின்றிக் கொற்றவெண் குடையு மின்றி***
***இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம்பின் இரங்கி யேக***
***மழைக்குன்ற மனையான் மௌலி கவித்தனன் வருமென் றென்று***
***தழைக்கின்ற உள்ளத் தன்னாள் முன்னொரு தமியன் சென்றான்***

- கம்ப. அயோத்தி. 299

மழை மேகங்கள் சூழ்கின்ற மலையை ஒத்தவனான இராமன் தலையிலே முடி சூடிக்கொண்டு வருவான் என்று மகிழ்ச்சி பொங்கும் உள்ளத்தோடு இருந்த கோசலையின் முன்னே, வீசுகின்ற சாமரம் இல்லாமலும், வெண்கொற்றக் குடையில்லாமலும், தீமையை விளைவிப்பதான ஊழ்வினை முன்னே செல்லவும், அறக்கடவுள் மிகுந்த ஏக்கத்துடன் பின்னே செல்லவும், தன்னந் தனியனாய் சென்றான் என்கிறார் கம்பர். தான் முடி சூடாமல் காட்டிற்குச் செல்லப் போவதைத் தீர்மானித்து விட்டதால் அரச சின்னங்களை இராமன் விலக்கிவிட்டான் என்பதைக் கம்பர் இங்கே வெளிப்படுத்துகின்றார். இராமனுக்கு ஏற்பட்ட நிலையை எடுத்துக்காட்ட 'இழைக்கின்ற விதி முன்செல்ல', தருமம் பின்னாலே இரங்கியவாறு செல்கின்றது என்ற கம்பரின் சிந்தனை நயக்கத் தக்கது. தருமத்தின் வலிமை பின்னாலே வெளிப்படும் என்பதை இது குறிப்பதாகவும் உள்ளது.

தன்னை வணங்கிய இராமனை அணைத்தெடுத்து வாழ்த்தியவாறு, அவனது தோற்றத்தைக் கண்ட கோசலை, 'இராமன் திருமுடி சூடிக்கொண்டானில்லை, அவனது தலைமயிர் புனித நீரினால் நனையப் பெறவில்லை. இதற்குக் காரணம் யாதோ?' என ஐயுற்றுத் 'தந்தை எண்ணிய காரியம் என்னவாயிற்று. முடிபுனைவதற்கு இடையூறு ஏதும் உண்டோ?' எனக் கேட்கிறாள். அதற்கு இராமன், 'நின் காதற் திருமகன், பங்கமில் குணத்து என் தம்பி பரதனே மாமுடி சூடுகின்றான்' என்றான். நான்கு மக்கள் மீதும் வேறுபாடில்லாமல் அன்பு செலுத்துகின்ற கோசலை, 'மூத்தவன் இருக்க இளையவனுக்கு முடி சூட்டுதல் அரச முறைமை அல்லவே. என்றாலும் பரதன் உன்னிலும் நல்லவன். அரசாளுவதற்கு வேண்டிய தகுதி யாவும் நிறைந்தவன். எனவே தந்தை சொல்லை மாறாமல் அவனுக்கே அரசைக் கொடுத்து வாழ்வாயாக' என வாழ்த்தினாள். அதனைக் கேட்டு மகிழ்ச்சியுற்ற இராமன், 'என்னை நன்னெறியிற் செலுத்துவதற்காகத் தந்தை இட்ட கட்டளை இன்னும் ஒன்று உண்டு.' என்று, தான் காடு செல்ல இருப்பதைப் பற்றிக் கூறுகிறான். அச்சொல்லைக் கேட்ட கோசலைக்கு ஏற்பட்ட துயரத்தைக் கம்பர் 5 செய்யுள்களில் வருணிக்கின்றார். அவற்றில் ஒன்று:

***அறமெனக் கில்லையோ என்னும் ஆவிநைந்து***
***இறவ டுத்ததென் தெய்வதங் காளெனும்***
***பிறவு ரைப்பதென் கன்று பிரிந்துழிக்***
***கறவை ஒப்பக் கரைந்து கலங்கினாள்.***

- கம்ப. அயோத்தி. 311

'எனக்கு அறமென்பது துணையாகவில்லையோ' என்பாள். 'தெய்வங்களே! என்னுடைய உயிர் வாடி அழியும்படி என்னைச் சூழ்ந்துள்ள தீவினை யாதோ?' என்றெல்லாம் புலம்பித் தான் ஈன்ற கன்றைப் பிரிந்த தாய்ப் பசுவைப் போல மனமுருகிக் கலங்கினாள் என்பதைக் 'கன்று பிரிந்துழிக் கறவை ஒப்ப' என்று இதைத் தவிர வேறு உவமை என்ன உரைப்பது

என்கிறார் கம்பர்.

துயரில் உழன்று கொண்டிருக்கின்ற தாய்க்கு இராமன் பல ஆறுதல் வார்த்தைகளைக் கூறி அவளைத் தேற்றுகின்றான். கோசலை தன்னையும் காட்டிற்கு அழைத்துச் செல்லுமாறு வேண்டுகிறாள். 'என்னை விட்டுப் பிரிந்து வருந்தும் மன்னவரைத் தேற்றுவதல்லவோ உமது பணி. மன்னவருடன் இருந்து அரும்பணி புரிக. பதினான்கு ஆண்டுகள் பதினான்கு நாள்களாகக் கழிந்து நான் வருவேன்.' எனக்கூறி அவளிடம் விடை பெறுகின்றான். எவ்வளவு தேறுதல் சொல்லியும் கேளாமல் அரசனிடம் கேட்டு இராமன் காட்டுக்குச் செல்வதைத் தடுப்பேனென்று அரசன் இருக்குமிடம் நோக்கிச் சென்ற கோசலை அங்கே அவன் மூர்ச்சித்து விழுந்து கிடப்பதைக் கண்டு பலவாறு புலம்புகிறாள். அவளது அழுகுரல் கேட்டு அரண்மனையிலுள்ளவர்கள் வந்து சேர்கிறார்கள். நடந்தவற்றைக் கேள்வியுற்ற வசிட்ட முனிவன் தயரதன் இருக்குமிடம் வந்து அவனைத் தேற்றுகின்றான். இராமனுக்கு பட்டம் கட்டுவித்துத் தன்னுரையும் பொய்யாதிருக்கச் செய்யுமாறு தயரதன் வசிட்டனிடம் வேண்டுகிறான்.

***முனியும் முனியுஞ் செய்கைக் கொடியாள் முகமே முன்னி***
***இனியுன் புதல்வற் கரசும் ஏனை யோர்க்கின் னுயிரும்***
***மனுவின் வழிநின் கணவற் குயிரும் உதவி வசைதீர்***
***புனிதம் மருவும் புகழே புனைவாய் பொன்னே யென்றான்.***
- கம்ப. அயோத்தி. 339

'முனியும் முனியும் செய்கைக் கொடியாள் முகமே முன்னி' என அடுக்குச் சொல்லில், வசிட்ட முனிவன், வெறுக்கப்படுகின்ற செய்கையையுடைய கொடிய கைகேயியினது முகத்தைப் பார்த்து, 'இப்பொழுது உன் மகனாகிய இராமனுக்கு அரசையும் கொடுத்து ஏனையவர்களுக்கு இனிய உயிரையும், நீதியின் வழி நிற்கின்ற உனது கணவனது உயிரையும் மீட்டுக் கொடுத்து வசை இல்லாத புகழை அணிகலனாகக் கொள்வாயாக!' எனக் கேட்பதாகக் கூறுகிறார். இராமனுக்கு அரசைக் கொடுத்து அவனைக் காடேகா வண்ணம் செய்தால் இவ்வுலகுக்கே உயிரீந்தவளாவாய் என்னும் கருத்தை இங்கே பதித்துள்ளார் கம்பர். முனியும் செய்கைக் கொடியாள் எனக் கைகேயிக்கு அடைமொழியை இங்கே கொடுத்துள்ள கம்பர், காரியத்தை நிறைவேற்றக் கருதிய வசிட்டர் வாயினால் அவளைப் பொன்னே என அழைக்க வைத்துள்ள நுட்பத்தையும் இச்செய்யுளில் காணலாம்.

***மொய்ம்மாண் வினைவே ரறவென் றுயர்வான் மொழியா முன்னம்***
***விம்மா வழுவாள் அரசன் மெய்யிற் திரிவான் என்னின்***
***இம்மா வுலகத் துயிரோ டினிவாழ் வுகவேன் என்சொல்***
***பொய்மா ணாமற்கு இன்றே பொன்றா தொழியேன் என்றாள்.***
- கம்ப. அயோத்தி. 340

இரு வினைகளையும் அடிகெடும்படி வென்றடக்கி மாட்சிமை நிறைந்து விளங்கும் வசிட்ட முனிவன் தனது விருப்பத்தைக் கைகேயிடம் வேண்டிக்கொள்வதற்கு முன்னரே, அவள் பெரிதாக விம்மி அழுதபடி, 'மன்னன் அவனின் வாய்மையிலிருந்தும் தவறுவானானால் இந்த மாவுலகத்தில் நான் உயிரோடு வாழ்தலை விரும்பமாட்டேன். எனது வார்த்தை பொய்யாகாமல் இருப்பதற்கு இப்பொழுதே இறந்து போகாது ஒழியேன்' என்று சூழுரைக்கிறாள். 'மன்னன் தன் வாய்மொழியிலிருந்து தவறினாலும், நான் என் வாய்மொழியிலிருந்து தவறேன்' எனக் கைகேயி தர்க்கம் புரிவதாகக் கம்பர் இச்செய்யுளை அழகாக வடித்திருக்கிறார்.

**இராமனுக்கு அரசாட்சியைக் கொடுப்பதால் வாய்மை பிழைக்கும் என்றால், கைகேயிக்குக் கொடுத்த வரத்தின் மூலம் இராமனுக்குக் கொடுப்பதாகச் சொல்லியிருந்த அரசாட்சியைப் பரதனுக்குக் கொடுப்பதால் வாய்மை பிழைக்காதோ. அரசர்க்கென்று தனியாக வேறு நீதிநெறி உள்ளதோ?, என அயோத்தி மக்கள் மூலமாகக் கம்பர் வாதிடுவதன் நயம் சுவையானது.**

வசிட்ட முனிவன் பலவாறு கூறியும் கைகேயி தனது முடிவில் விடாப்பிடியாக இருக்க, தயரதனும் மீண்டும் பலவாறு அவளை இரந்து கேட்டும் அவளது மனம் இளகுவதாக இல்லை என்பதைக் கண்டு 'நீ என் தாரமல்ல. மன்னனாக வரும் பரதனையும் மகனென்று கொள்ள மாட்டேன். அவனும் என்னுரிமைக்கு ஆகான்' என்று கூறித் துயரமுற்று மூர்ச்சிக்கிறான். கோசலை பலவாறாகத் தேற்றத் தேறிய தயரதன் தான் முன்னர் ஒரு முனிவனின் மகனைக் கொன்றதனாற் சாபமுற்ற வரலாற்றை அவளுக்குக் கூறி மகனின் பிரிவால் தன்னுயிர் போவது திண்ணம் எனக்கூறக் கேட்டுக் கோசலை திகைத்து நிற்கிறாள்.

வசிட்டன் சென்று அரசவைக்குச் செய்தி தெரிவிக்கிறான். முடி சூட்டு விழா தடைப்பட்டுவிட்டது, இராமன் காடு செல்லப் போகின்றான் என்ற செய்தி அயோத்தி நகரமெங்கும் பரவுகி றது. அதனை அறிந்த அயோத்தி நகரம் அடைந்த துயரத் தைப் பல செய்யுள்களிலே வடித்திருக்கின்றார் கம்பர்.

***கிள்ளையொடு பூவை யழுத கிளர்மாடத்து***
***உள்ளுறையும் பூசை யழுத உருவறியாப்***
***பிள்ளை யழுத பெரியோரை என்சொல்ல***
***வள்ளல் வனம்புகவான் என்றுரைத்த மாற்றத்தால்***

- கம்ப. அயோத்தி. 397

இராமன் மணிமுடி சூடாமல் காட்டிற்குச் செல்லப் போகின் றான் என்று சொல்லக் கேட்டவுடனே கிளிகளும் நாகண வாய்ப் பறவைகளும் அழுதன. ஒளி விளங்குகின்ற வீடுகளில் வசிக்கின்ற பூனைகள் அழுதன. அவனது உருவத்தை அறி யாத சிறு குழந்தைகள் அழுதன. 'இவைகளெவ்லாம் அவ் வாறு அழுதன என்றால் பெரியோர் அழுததைப் பற்றி எவ் வாறு சொல்ல முடியும் என்கிறார்' கம்பர். அஃறிணை உயிரி னங்களும் அவற்றோடொத்த உயர்திணையும் அழுதனவென் றால், அகவையாலும், அறிவினாலும், அனுபவத்தாலும் சிறந்த உயர்திணையோர் அழுதனர் என்பது கூறாமலே புலப் படும். அதனை வேறாகச் சொல்லவேண்டுமா என்பதுபோல ஒரு பொருள் கூறிய மாத்திரத்தே மற்றோர் பொருள் பெறப்ப டுவதைத் தெரிவிப்பதாக இருப்பதைப் பொருட்பேறணி என்பர். அழுதன என்பதை அழுத என அன்சாரியை பெறாத வினை முற்றாகக் கம்பர் இச்செய்யுளில் கொடுத் திருக்கிறார்.

காடுகளிலும் புதர்களிலும் உறையும் வெருகம் பூனையை வீட்டிலுறையும் பூனையின் பெயர் கொடுத்துக் கூறலும் உண்டு என்று தொல்காப்பியர் மரபியலிலே 'வெவ்வாய் வெரு கினைப் பூசை என்றலும்' என்று குறிப்பிடுவார். வெருகம் பூனையை வேறுபடுத்திக் காட்டுவதாகக் 'கிளர்மாடத்துறை யும் பூசை' என்னும் தொடரைக் கம்பர் இப்பாடலில் வைத்துள் ளார் என்றும் கூறலாம். இவ்வாறே நகரத்து மக்கள் வருந்திக் கலங்கியதைப் பல செய்யுள்களிலே நயம்பட வடித்துள்ளார் கம்பர்.

***மண்செய்த பாவம் உளதென்பார் மாமலர்மேல்***
***பெண்செய்த பாவம் அதனிற் பெரிதென்பார்***
***புண்செய்த நெஞ்சை விதியென்பர் பூதலத்தோர்***
***கண்செய்த பாவம் கடலிற் பெரிதென்பார்.***

- கம்ப. அயோத்தி. 402

நிலமகள் செய்த தீவினை அதிகமானது. சிறந்த தாமரை மல ரிலே வீற்றிருக்கின்ற திருமகள் செய்த தீவினை அதனினும் பெரிதாக இருக்கிறது. ஊழ்வினையெனக் கூறப்படும் விதி எல்லோருடைய மனத்தையும் புண்படச் செய்து விட்டது. இந் தப் பூவுலகத்திலுள்ளோர் செய்த தீவினை கடலை விடப் பெரிதாக உள்ளது என்று அயோத்தியிலுள்ள மக்கள் கலங் கிப் புலம்புவதாகக் கம்பர் கூறுகிறார்.

இராமன் முடி புனைந்து தன்னை ஆளுகிற பேற்றைப் பெறா மல் போனது நிலமகள் செய்த தீவினை என்கிறார். செல்வச் செழிப்பு மிகக்கூடிய அவனது ஆட்சியைப் பெறாமல் போனது நிலமகள் செய்த தீவினையை விடத் திருமகள் செய்த மிகப்பெரிய தீவினையென்று 'மாமலர்மேல் பெண் செய்த பாவம் அதனிற் பெரிது' என்கிறார். இராமன் மணிமுடி தரிப்பதைக் காணமுடியாது அவன் மரவுரி தரித்துத் தவக்கோ லத்துடன் காடு செல்லப்போவதைக் காணுகின்ற தங்களது கண்கள் செய்த பாவம் கடலினும் பெரிது என்று அந்நகரத்து மக்கள் புலம்புவதாகக் காட்டும் கம்பரின் கவிநயம் உள் ளத்தை அள்ளுகிறது.

***என்னே நிருபன் இயற்கை இருந்தவாறு***
***தன்னே ரிலாத தலைமகற்குத் தாரணியை***
***முன்னே கொடுத்து முறைதிறம்பத் தம்பிக்குப்***
***பின்னே கொடுத்தாற் பிழையாதோ மெய்யென்பார்.***


- கம்ப. அயோத்தி. 402

'தனக்கு ஒப்பாரிலாத தலை மகனான இராமனுக்குத் தர ணியை ஆளக் கொடுப்பதாகத் தயரதன் முதலில் கூறிவிட்டு, நீதி முறை தவறி அவனது பின்னவனான பரதனுக்கு ஆட்சி யைக் கொடுத்தது வாய்மை தவறியது ஆகாதா?' என்று அயோத்தி நகரத்து மக்கள் வழியாகத் தயரதனது வாய்மை யைக் கம்பர் கேள்விக்குள்ளாக்குவதை இச்செய்யுளிற் காண் கிறோம்.

ஒருவனுக்குக் கொடுத்த பொருளைப் பறித்து இன்னொருவ னுக்குக் கொடுத்தல் முறையாகாது. நீதிநெறி அவ்வாறு இருக்கத் தயரதன் இராமனுக்குக் கொடுப்பதாகச் சொல்லியி ருந்த அரசாட்சியை எவ்வாறு கைகேயிக்குக் கொடுக்கலாம். இதில் இரண்டு குற்றங்களையல்லவா அவன் இழைத்துவிட் டான். மூத்தவனுக்கு முறைப்படி உரிமையான அரசாட்சியை இளையவனுக்குக் கொடுத்ததும், முன்னே ஒருவனுக்குக் கொடுத்ததைப் பின்னே இன்னொருவனுக்குக் கொடுத்ததும் என இரண்டு குற்றங்களை மன்னன் இழைத்துவிட்டான். இரா மனுக்கு அரசாட்சியைக் கொடுத்தால் வாய்மை பிழைக்கும் என்றால், கைகேயிக்குக் கொடுத்த வரத்தின் மூலம் இராம னுக்குக் கொடுப்பதாகச் சொல்லியிருந்த அரசாட்சியைப் பர தனுக்குக் கொடுப்பதால் வாய்மை பிழைக்காதோ. அரசர்க் கென்று தனியாக வேறு நீதிநெறி உள்ளதோ என அயோத்தி மக்கள் மூலமாகக் கம்பர் வாதிடுவதன் நயம் சுவையானது.

இவ்வாறு சொல்நயம், பொருள்நயம், அணிநயம் கூட்டி உணர்ச்சி பொங்கும் செய்யுள்களைக் கம்பர் நகர் நீங்கு பட லத்தில் படைத்தளித்துள்ளார். நிகழ்ந்த செய்திகளைக் கேள் வியுற்று வந்த இலக்குவன் அடையும் சீற்றத்தையும் அதன் பின்னே நிகழ்வனவற்றையும் கம்பரின் கவியத்துடன் நகர் நீங்கு படலத்தின் தொடர்ச்சியாக அடுத்த இதழில் எடுத்து வருகிறேன்.

(வளரும்)



shanmugarajah@thaiveedu.com

# தமிழ்வலை - 102


'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-102 வினா

### இடமிருந்து வலம்

1 'யாழ் நூல்' ஆசிரியர்

3 ஒரு தென் கிழக்கு ஆசியத் தீவு

5 வனாந்தரம்

8 ஓர் இசைக்கலம்

9 இறை

10 இராவணனின் அரசமனைவி

13 சிவிகை

14 வனம்

15 சம்மதம்

16 ஊடல்

### மேலிருந்து கீழ்

1 வணிகம்

2 நிலம்

3 இலங்கை பெருந்தோட்டப் புலம்

4 பேர்போன ஈழ-தமிழக கவிஞர்

6 குடியிரு

7 தலையின் பின்புறம்

9 ஒரு மலையாள நடனம்

11 இஸ்லாமிய மார்க்க அறிஞர்


12 அழிவு

13 கனி

**விடைகளை அனுப்பவேண்டிய முகவரி**
**மினன்னஞ்சல் முகவரி:**
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 101க்கான விடைகள்



## தமிழ்வலை-101 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

உமா கதிர், ஏஜக்ஸ், கனடா.
தேவாம்பிகை அரவிந்தன், UK.
ஏ.எஸ். மகாலிங்கம் ரொறன்ரோ
சுதர்சன் ஜெயலட்சுமி, யாழ்ப்பாணம்
மேரி கெலன் தேவதாஸ், நோத்யோர்க், கனடா
த.செ. நடராசா, ரொறன்ரோ.
சிவமணி பூரணம், ஸ்கார்பரோ
தவமணி கனகசிங்கம், பாரிஸ்.
சுமதி முத்துராஜா, யாழ்ப்பாணம்.

### பரிசுபெறும் போட்டியாளர்

**வி. தவமணிதேவி,**
**இலங்கை.**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.



# காவலன் காவான் எனின்...?

– உஷாதீபன்

அரசர் அப்படித் தன்னைக் காவலுக்கு அனுப்புவார் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை சம்புகன். மனம் அதிர்ச்சியடைந்தது. அதே சமயம் குதூகலமுமடைந்தது. அரச கட்டளையின் அடையாளமாய் உடம்பில் அப்போதே அசுர பலம் கூடிவிட்டதாய் உணர்ந்தான். தன்னையும் தகுதிப்படுத்தி விட்டார் அரசர். தன் மீதும் நம்பிக்கை கொண்டு பொறுப்பை அளித்திருக்கிறார். ஆகா... எனக்குமா இந்த ஏற்றம்? மெய் சிலிர்த்தது.

கண்களை அழுத்தமாய் ஓடவிட்டான் சம்புகன். அவனுக்கான கௌரவத்தை எண்ணிச் சுற்றிலுமிருந்த செடிகொடிகளும், காலங் காலமாய் நின்று நிழல் பொழியும் மரங்களும் தங்களைச் சிலிர்த்துக் கொண்டு தயாராகி, அவனுக்குத் தங்களின் ஒப்புதலையும், மகிழ்ச்சியையும் தெரிவித்தன.

என்னடாது...! தரையில் உட்கார்ந்தாலே ஐந்தடி உயரம் இருக்கிறோமே...! இந்த எழுச்சி எப்படி நிகழ்ந்தது? பாதம் முதல் கழுத்து வரை இந்தப் புஜபல பராக்கிரமம் வியப்பாயிருக்கிறதே? ஒரு போர் வீரருக்கான அடையாளங்கள்? வீரம் விளைந்த லட்சணங்கள். ஊர்க் காவல் உத்தரவு... எப்படிச் சாத்தியமானது? எந்த சக்தி எனை ஆட்கொண்டது? எந்த முன்செய் நல்வினை எனைப் பரிந்துரைத்தது? இந்தத் தாய்த்திரு நாட்டுக்கென்று பிறந்தவனா நான்? என் கடமையுணர்வும், கட்டுப்பாடும், வீரம் செறிந்த பராக்கிரமமும் இந்தத் தேசத்திற்கே அர்ப்பணிப்பிற்கானதா? மாறுவேடத்தில் அலையும் ஊர்க் காவல் பணி என்னிடம் நம்பிக்கையாக அளிக்கப்பட்டிருக்கிறதா? ஆகா... என்ன தவம் செய்தேன்? என் பாதம் பணிந்த சம்ஸ்காரங்களைப் பாதாதிகேச பரியந்தம் வழியவிட்டு இதோ புறப்பட்டு விட்டேன்...!

கட்டுக் குடுமியைச் சிலிர்ப்பி அவிழ்த்து விட்டு எழுந்து நின்றான் சம்புகன். வானம் தொட்டது போலிருந்தது. இந்த தேஜஸை வழங்கிய மாய சக்திக்கு என் பாதம் பணிந்த நமஸ்காரங்கள். புட்டம் வரை சாரைப் பாம்பாய் அவிழ்ந்து தொங்கும் அடர்த்தியான கட்டாத குடுமியை அள்ளியெடுத்து முடிந்து தலைப்பாகையை இறுக்கினான்.

மதிப்பு மிகு பைரவரே... நீர் எமக்குத் துணையா அல்லது நான் உமக்கா? அருகில் பணிவோடு தயார் நிலையில் நின்றிருந்த புலிக்கு நிகரான தன் தோழரை இடக்கையில் அணைத்துக் கேள்விக்கான பதிலை எதிர்நோக்கி அதனை முத்தமிட்டான் சம்புகன். அந்த அரவணைப்பில் குளிர்ந்து மெய் சிலிர்த்த பைரவத் தண்டகன் அடக்கத்தோடு பதிலுரைத்தான்.

அரசர் ஆணை... மறுக்க முடியாது. அதனால் வந்திருக்கிறேன். உங்கள் ஆணைப்படியே என் இயக்கம். நான் நன்றியுள்ளவன்... தங்கள் சித்தம் என்னவோ அதன்படியே என் பயணம்... அது என் பாக்கியம்.

நல்லது. நாம் இப்போது எதன் பொருட்டு இரவு நேரத்தில் இந்த நகர்வலத்தை மேற்கொண்டிருக்கிறோம்... அறிவீர்களா?

அறிவேன் ஐயா... எளிய மக்கள் மிகுந்த உடல் போதைக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். அதனால் குடும்பங்கள் சீரழிகின்றன. உழைக்கும் வர்க்கத்தினரின் ஊதியம் ஒழுங்காக வீடு போய்ச் சேருவதில்லை. பலரும் வேலைக்குப் போகத் திறனின்றி உடல் நலிந்து முடங்கிக் கிடக்கிறார்கள். புத்தியைப் பலி கொடுத்து இப்படிப் பூஞ்சையாகிப் போனோமே என்று மனதுக்குள் நொந்து போயிருக்கிறார்கள். வந்த வருமானத்தில் வலிய உடம்பைக் கெடுத்துக் கொண்டு மேற்கொண்டு உழைக்கும் திறனின்றி இப்படி ஆடிப் போனோமே... குடும்பம் பராரியாய் கெதியின்றி நிற்கின்றதே என்று புழுங்கிக் கிடக்கிறார்கள். மருத்துவச் செலவுக்கான வசதி வாய்ப்பின்றி மண்ணுக்குள் போகும் நாளை எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். மந்திரிப் பிரதானிகளின் ஆலோசனைக் கூட்டத்திற்குப் பிறகு அரசர் எடுத்த முடிவாக ஒழுக்கக் கேடுகளை அழித்து ஒழிப்பதற்காக நாம் புறப்பட்டிருக்கிறோம்.

ஆம்... மிகச் சரி. பகலில் உழைக்கச் செல்பவர்கள் இரவானதும் அவரவர் வீடு திரும்பி உறங்கி ஓய்வெடுக்காமல், பல இடங்களில் போதைக்கு அடிமையாகி மயங்கி மண்ணடித்துப் போகிறார்கள். உழைக்கச் செல்பவர்களின் எண்ணிக்கையும் பெருவாரியாகக் குறைந்திருப்பதாக அறியப்படுகிறது. கேளிக்கை விடுதிகள் அதிகமாகிவிட்டன. நகருக்கு உள்ளேயும், வெளியேயும் கால் பதிக்கும் இடமெல்லாம் போதை மண்டலங்கள். எங்கிருந்து தப்பிப்பது? எதிலிருந்து விலகுவது? குதூகலமும், கும்மாளமும் கொக்கரிக்கின்றன. இன்று இந்த வேதபுரி நகரின் பகுதிக்கு மட்டுமே நாம் காவலை மேற்கொள்ள வேண்டும். குற்றவாளிகளைப் பிடித்து ஒப்படைக்க வேண்டும். குடும்பத்திற்குப் பயனுள்ளதாக வாழாதவர்களை இருந்தென்ன போயென்ன என்று சுற்றி வளைக்க வேண்டும். சொல்லிப் பார்த்து, எச்சரித்து எந்தப் பயனும் விழையவில்லை. என்ன கேடு வரினும் குடும்ப அமைப்புகள் சிதறிவிடக் கூடாது என்பது நம் தாத்பரியம். வீடு சிதறினால் நாடு சிதறும். வீட்டுக்குள் நாலு பேருக்குள் ஒற்றுமையும் அன்பும் அரவணைப்பும் இல்லையெனில் அந்தக் குடும்பம் தேறவே

தேறாது. அங்கு மங்கல காரியங்கள் எழுச்சி பெறவே பெறாது. வாரிசு உற்பத்தி அறவே நின்று போகும் அபாயம். தேச முன்னேற்றத்திற்கான எதிர்காலத் தலைமுறை எண்ணிக் கையற்று நசிந்து போகும் மிகு அபாயம். இந்த மக்கள்தான் நம் தேசம். அவர்களின் நல்வாழ்வுதான் நம் சந்தோஷம். வேதபுரி சேதபுரியாகிவிடாமல் காப்பாற்ற வேண்டியது நம் தலையாய கடமை.

நமக்கு அரசர் தந்த முதன்மைப் பணி. செவ்வனே நிறைவேற்றுவது நம் கடமை. முக்கியமான ஒன்றைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன் இங்கே. சொல்லலாமா?

தாராளமாக... உடன் நின்று நிறைவேற்றுவது என் சித்தம். உங்கள் சொல் செயலாக என் உயிரையும் கொடுப்பேன். என் உதிரம் இந்த நாட்டுக்கானது.

இந்தக் காவல் கண்காணிப்பை அமைதியாகத், தடமின்றிப் பயன்படுத்தவேண்டும். நான் சொல்வதை உணரமுடிகிறதா?

சற்று விளக்கமாகச் சொன்னால் புரிந்து கொள்ள ஏதுவாகும்...! எளிமையாக ஒன்றை அறிந்து கொள்வதே இறைவன் எனக்கு அளித்த வரம். பைரவர் கூர்ந்து கவனித்தது.

அதாவது எந்தவொரு தடயமும் எந்த இடத்திலும் நம்மிடமிருந்து வெளிப்பட்டு விடக் கூடாது. குறிப்பாக ஆங்காங்கே நடக்கும் தவறுகளைக் காணும்போது சட்டென்று நீர் குரல் கொடுத்து உலகறியச் செய்து விடக் கூடாது. என்னைப் பார்த்து, அமைதியாகச் சைகை செய்து, அருகே வந்து என் கைகளைப் பற்றி இழுத்துப் பதுங்கி அழைத்து, மறைந்து, குறிப்பிட்ட இலக்கினை இரகசியமாய்ச் சுட்ட வேண்டும்... உமது இயல்பான பிறவிக் குணம் உம்மையறியாமல் உம்மையும் மீறி வெளிப்படாமல் நீர் உம்மையடக்கி இருத்திக் கொள்ளுதல் மிக மிக அவசியம். கருமமே கண்ணாகக் கடமையை ஆற்ற ஆயத்தமாக, சித்தம் தெளியத் துடிப்பாய் நிற்றல் வேண்டும். எம்மின் கருத்தும் கவனமும் இந்தத் தேசத்திற்கானது. அதன் சீரிய பாதுகாப்பிற்கானது என்பதை நீவீர் தெளிய அறிவீர்தானே?

ஆகட்டும் ஐயா... தங்கள் சித்தம் என் பாக்கியம்...! கை கோர்த்துத் தீமையை ஒழிக்க முன்னிற்பதே கருத்தான பணி. கடமையைச் செவ்வனே நிறைவேற்ற முழுமையாக ஒத்துழைப்பு நல்குவேன்.

நல்லது... பிரிந்து செல்லுங்கள். முதலில் நாம் அரண்மனைக்கு விலகிய தூரத்திலான இந்த வேதபுரியின் ஒதுங்கிய பகுதியில் நமது சோதனையைத் துவக்குவோம். படிப்படியாக நகருக்குள் முன்னேறுவோம். அப்படியானால்தான் யாருக்கும் சந்தேகங்கள் வர வாய்ப்பில்லை. ஊர்சுற்றிப் பிரதானிகள் என்று கருதி விலகிவிடும் வாய்ப்புகள் நிறையவே உண்டு. இரகசியங்கள் அடங்கிய பகுதி என்று நாம் கணிக்கும் பகுதியில் நமது நகர்தல் வெகு ஜாக்கிரதையாக இருத்தல் வேண்டும். எங்கு சென்றாலும் நீர் எம் பார்வையிலிருந்து விலகி விடக் கூடாது. அதை மனதில் கொள்ளுங்கள்... நீர் எங்கிருக்கிறீர் என்று எனக்கும் நான் எங்கு பதுங்கியிருக்கிறேன் என்று உமக்கும் புரிந்திருத்தல் மிக மிக அவசியம். நல்லது நாம் விலகலாம்...

சம்புகன் தன் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு, பாதங்களைப் பக்குவமாக வைத்துச் சத்தமின்றி மறைவாக முன்னேறினான். ஓரிடத்தில் சற்றுத் துல்லியமான ஒலியில் நிலை பெற்றான். கண்ணுக்கெட்டிய தூரத்தில் பைரவரின் பார்வை எதிலோ நிலைகொண்டிருந்தது. மனிதரை விடத் துல்லியமான அவதானிப்பு. ஆனால் மனிதர் உதவியோடு தான் எதையும் நிறைவேற்றியாக வேண்டும். அடையாளம் மட்டுமே காட்ட இயலும். ஆனாலும் அந்த அடையாளம், குறி வைத்த கணிப்பு என்றுமே தோற்றதில்லை. பைரவரின் ஒத்துழைப்பு நாட்டுக்கே இன்றியமையாதது. நினைத்துக்கொண்டான் சம்புகன்.

பிட்சாடனைத் துணைக்கு அழைத்துச் செல் என்று உத்தர விட்ட போது உடனடியாகத் தான் மறுத்திருந்ததும், அவனும் தனது விருப்பமின்மையை வெளிப்படுத்தியதும் எத்தனை நல்லதாய்ப் போயிற்று? அவனுக்கும் தனக்கும் ஒத்துவராது. எதிரணியிலிருந்து வந்தவன் அவன். அவனின் உண்மைத் தன்மை சந்தேகத்திற்குரியது. செல்லும் இடங்களில் குற்றங்களை வேரறுத்தல் தன் கடன். அவனோ அதில் தனக்கான பங்கு எந்தளவுக்கு விஞ்சி நிற்கும் என்பதிலேயே குறியாய் இருப்பவன். தன்னையும் அந்தப் புதைகுழிக்குள் தள்ள எத்தனிப்பான். தான் வளர்ந்த, வளர்க்கப்பட்ட விதம் வேறு. அவனின் வளர்ப்பு அப்படியல்ல. சந்தேகத்திற்குரியது. அவன் வராமல் போனதே நல்லதாகப் போயிற்று. பிடித்தும் பிடிக்காமலும் தன்னோடு புறப்பட்டுப் பயணித்திருந்தால் உடனிருந்தே கழுத்தறுத்திருப்பான். அதற்கு இந்த பைரவர் எவ்வளவோ மேல். வாயில்லா நன்றியுள்ள ஜீவன். அதன் உண்மைத்தன்மை தெய்வீகம் தழுவியது. நெருப்புக்கு நிகரானது. சொல்லுக்கும் செயலுக்கும் அடிபணிந்து செவ்வனே கடமையாற்றுபவரே சிறந்த வீரராகிறார். அவன் வைத்த குறி என்றுமே தப்பியதில்லை.

அந்தப் பேச்சுச் சத்தம் நிதானிக்க வைத்தது. அதிகாரிகள் அதிகமாகக் குடியிருக்கும் பகுதி. திட்டங்களை எவ்வாறு நிறைவேற்றுவது, அதன் முன்னேற்றங்களை எவ்வாறு மேலிடத்திற்குத் தெரிவிப்பது, பணியாளர்களை எவ்வாறு சாமர்த்தியமாய் வேலை வாங்குவது, சுணக்கமின்றி எப்படிப் பயன்படுத்திக் காரியத்தைச் சாதித்துக் கொள்வது என்பதான பேச்சின் போக்கு காதில் விழுந்த அளவு சம்புகனுக்குப் புரிய ஆரம்பித்தது. ஒரு வீட்டுக்கானதும், ஒரு நாட்டுக்கானதும் பல விஷயங்களில் பொருந்தி வருவதாய்ப் பல சமயங்களில் நினைத்து நினைத்து உணர்ந்திடத் தலைப்பட்டிருக்கிறான் சம்புகன். இங்கே நடக்கும் பேச்சும் அதே ரீதியில் வளைய வருவதாய் உணர நேரும் அரிய சந்தர்ப்பம்.

கேட்கக் கேட்க ஒன்று புரிகிறது. முழுப் பேச்சையும் கேட்டால் தான் துல்லியமாய் உணர முடியும். போதையில் விழுந்து கிடக்கும் மக்களைத் தேடி வந்தால், இங்கு வேறு ஒரு வகையான போதை பரவிக்கிடக்கிறதே! அதிகார போதை...! நிர்வாகம் நிச்சலனமற்றுக், குறிப்பிட்ட புள்ளியை நோக்கியல்லவா நகர வேண்டும். இங்கே நீ பெரியவன், நான் பெரியவன் என்கிற கேள்விகள் எழுமானால் அது சீர்கேட்டை அல்லவா விளைவிக்கும்?

அதிகாரம் எளிய மக்களை நசுக்குகிறது. ஏமாற்றுகிறது. நம்பிக்கையின்மையை வலுக்கச் செய்கிறது. அறிந்தும் அறியா



மலும் அவர்களை அடிமையாக்குகிறது. வார்த்தை மயக்கங்களுக்குப் படிகிறது. மேலிடத்தோடு நெருக்கத்தைப் போலி என்றறியாமல் உணர்ந்து எதிர்பார்ப்புக்கும் மேலாகக் கடுமையாக உழைத்துத் தங்களை நசித்துக் கொள்கிறது உழைக்கும் வர்க்கம்.

‘இங்க பாருங்க பி.ஏ. நமக்கு யாரு வந்திருக்கா, வரலைங்கிறது முக்கியமில்லை... காரியம் ஆகுதா, இல்லையாங்கிறதைத்தான் கவனிக்கணும். செக்ரட்டரி மீட்டிங்குக்காக அன்யூவல் ஸ்டேட்மென்டை ஊர் போனதும் அனுப்பி வெச்சுடறேன்னு டைரக்டர் கிட்டச் சொல்லிட்டு வந்தேன். நேத்து சிகாமணிக்கிட்டச் சொல்லிப் போடச் சொன்னேன். அவரே தயார் பண்ணி, கம்ப்யூட்டர்ல டைப் பண்ணி, பிரின்ட் அவுட் எடுத்து, எங்கிட்ட ஒப்புதல் வாங்கி, ஈமெயில்ல அனுப்பியும் வச்சிட்டாரு... யாருகிட்டே சொன்னா வேலை ஆகும்ங்கிறதைக் கவனிக்கணும். இத்தனைக்கும் நேத்து மாநில பந்த். ஊரே மூடிக் கிடக்கு. அங்கங்க கூட்டம் கூட்டமா போலீஸ்... பல இடங்கள்ல கலகம், கலாட்டா, கல்லெறி, அத்தனையையும் மீறி எப்படித்தான் ஆபீஸ் வந்தாரோ... கடமையுணர்ச்சி அதீதமா உள்ளவர், புறச் சங்கடங்களையெல்லாம் பொருட்படுத்துற தில்லை. கொக்குக்கு ஒண்ணே மதி, வேலைகள் பென்டிங் இருக்கக் கூடாதுன்னு மைன்ட்ல வச்சிட்டு, வந்து உட்கார்ந்திருக்கான் பாருங்க அந்த ஆளு... சிகாமணி நிச்சயம் வந்திருப்பாருங்கிற எண்ணத்துல ஃபோன் போட்டேன். அந்தாளே எடுக்கிறான்னா பார்த்துக்குங்களேன். நினைச்ச மாதிரி வலைய வீசினேன். அவனுக்கு எதிர்த்துப் பேசத் தெரியாது... சரி... சரின்னு மட்டும்தான் தலையாட்டத் தெரியும். பாஸ் சொல்லிட்டாரு செய்துடணும்ங்கிற முனைப்புதான் அந்தாளுக்கு மூக்குக்கு முன்னால நிக்கும்... ரொம்ப தெய்வ பக்தியுள்ள ஆளு... ஆட்டத் தூக்கி மாட்டுல போட்டு, மாட்டத்

தூக்கி ஆட்டுல போட்டு எவ்வளவு தகிடு தத்தம் பண்றோம் நாம... இது எதுலயும் தலையைக் கொடுக்காத, தூக்கத்துல கூடக் கை நீட்டாத சுத்தபந்தன் அவன். எந்த ஒரு சின்ன விஷயமும் அவனைச் சலனப்படுத்திட முடியாது. யாரு என்ன செய்றாங்கங்கிறதையும், கவனத்துலயோ, கருத்துலயோ வாங்கிக்க மாட்டான் அவன். அவனுக்குத் தெரிஞ்சது வேலை. ஆபீசுக்குள்ள நுழைஞ்சா, தனக்குக் கொடுத்திருக்கிற வேலையைச் சரியாய் செய்தாகணும். அது மட்டும்தான் அவன் புத்தில நிக்கும். அவ்வளவு பயபக்தியோட வேலை செய்வான்.

யாருகிட்டே சொன்னா வேலை ஆகும்னு கவனிக்கணும். அப்படியாப்பட்டவனை நம்மளோட அடிமையா வச்சிக்கிறது நம்மளோட சாமர்த்தியம். ஆனால் தான் அடிமையா நடத்தப்படுறோம், நம்மளை அப்படித்தான் இங்க நினைக்கிறாங்கங்கிறதை அவன் உணரவே கூடாது. இந்த இடம் ரொம்ப முக்கியம். அவனைப் போன்ற விசுவாசிகள்தான் நம்ம முன்னேற்றத்துக்குக் காலத்துக்கும் துணையா இருப்பாங்க. கேள்வி எதுவும் கேட்க மாட்டாங்க... தங்களுக்காகவும் எதுவும் கேட்கத் தெரியாதவங்களா இருப்பாங்க... இத்தனை விகல்பமற்ற மனிதர்களா?-ன்னு நாமளே வியந்து போவோம்...! அதான் யதார்த்தம்...! அந்த யதார்த்தம் காலத்துக்கும் நிலைச்சிருக்கும். அப்பப்போ அப்படியான சிலர் நம்மளச் சுத்தி வலம் வந்துகிட்டே இருப்பாங்க... அவங்களைக் கேட்ச் பண்ணனும். அதான் நம்ப சாமர்த்தியம்...

இந்த மாதிரி இடர்ப்பாடான கால கட்டங்களில் வராதவங்களைப் பத்திக் கேட்டு, பேசி, நேரத்தை வீணடிக்கிறதை விட இது பெட்டர் இல்லையா? இதைத்தான் சுருக்கமாச் சொல்லியிருக்காங்க பெரியவங்க... முன் அனுபவப்பட்டவங்க... வேலை செய்றவனுக்கு வேலையைக் கொடு... அல்லாதவனுக்குச் சம்பளத்தைக் கொடுன்னு... என்ன நான் சொல்றது புரியுதா?. இப்படித்தான் நீங்க நம்ம ஆபீஸ் ஸ்டாஃப்கிட்ட வேலை வாங்கக் கத்துக்கணும்... அஞ்சு விரலும் ஒண்ணாவா இருக்கு... எம்.பி.ஏ-இல் என்ன சொல்லித் தர்றாங்க...? இதைத்தானே? நிர்வாகம்ங்கிறது இந்த மாதிரிப் பல்வேறு கூறுகளைக் கொண்டது. அதை கரெக்டாக் கடைப்பிடிக்கிறவன்தான் சிறந்த நிர்வாகியாகக் கணிக்கப்படுறான்... அதுதான் மாஸ்டர் ஆஃப் பிஸ்னஸ் அட்மினிஸ்ட்ரேஷன்! அனுபவத்தில் சம்பாதிக்கிறதை அங்கே பாடமாக்கியிருக்கான்... அவ்வளவுதான். சம்புகனுக்கு மனசே நடுங்கிப்போனது. அப்போ வேலை செய்றவங்க, செய்யாதவங்க, டபாய்க்கிறவங்க, டிராமாப் போடுறவங்க... சுருட்டுறவங்க... சுருட்டாதவங்க... இப்படி எல்லாரும் கலந்து பயணம் பண்றதுக்குப் பேருதான் நிர்வாகமா? கஷ்டப்படுறவன், உண்மையா இருக்கிறவன், உழைப்பையே தெய்வமா மதிக்கிறவன் என்னைக்கும் உழைச்சிக்கிட்டே இருக்க வேண்டியதானா? ஏமாத்தித் திரியிறவன் அதையே தன்னோட ஆயுதமா வச்சிக்கிட்டுத் தப்பிச்சிக்கிட்டே இருப்பானா? இதென்ன அநியாயமா இருக்கு?

இங்க பாருங்க பி.ஏ, உங்கள இப்படிக் கூப்டே எனக்குப் பழக்கமாயிடுச்சி. இப்போ நீங்க என் பிள்ளைங்களை அன்றாடம் ஸ்கூல்ல விட்டுட்டு, திரும்பக் கூட்டிக் கொண்டாந்து வீட்டுல விட்டுர்றீங்க... என்னைக்காச்சும் சாப்பாடு மறந்திடுச்சின்னா சங்கடப்படாம மறுபடி வீட்டுக்கு அலைஞ்சு கொண்டு கொடுத்திட்டு வர்றீங்க... என்னைக்காச்சும் அந்த டிபார்ட்மென்டைப்பத்தி நான் ஏதாச்சும் கேள்வி கேட்டிருக்கனா உங்ககிட்டே...? ஏன்னா நீங்க அதைக் கரெக்டா செய்திடுறீங்க... அப்போ அங்கே கேள்விக்கு இடமேது? என் பிள்ளைங்களை உங்க பிள்ளைங்க மாதிரி நினைச்சு எவ்வளவு பொறுப்பா செயற்படுறீங்க... வீட்டம்மா என்னைக்காச்சும் நொண்டு நொடை சொல்லியிருக்காங்களா? அப்படியெதுவும் என் காதுக்கு வந்திடப்படாதுன்னு நீங்க எத்தனை சின்சியரா செயற்படுறீங்க?

அதே மாதிரிதான் இதுவும்... ஒவ்வொரு ஆபீஸ்லயும் இப்படி உண்மையா உழைக்கிறதுக்குன்னே ஒருத்தன் ரெண்டு பேர் கண்டிப்பா இருப்பான்... அவனை அடையாளம் காணனும். அதுதான் நம்ப திறமை. அப்படி ஆளைக் கப்புன்னு பிடிச்சிக் கிட்டோம்னு வச்சிக்குங்க... மொத்த ஆபீசைப் பத்தியுமே நாம கவலைப்பட வேண்டியதில்லைங்கிறேன்... தூக்கிச் சுமந்திடுவான் அந்த ஒத்த ஆளு! அந்தாளுக்கு... அவனுக்குத் தேவை நம்பளோட பாராட்டு... உன்னமாதிரி முடியுமாப்பாங்கிற புகழ்ச்சி. அதுல குளிர்ந்து போயிடுவான். மேலும் பணிஞ்சு வணங்குவான். அவனுக்குத் தெரிஞ்சது அந்த அநியாயப் பணிவு ஒண்ணுதான். வேலை வேலைன்னு தன் உயிரையே கொடுப்பான்... குடும்பம் குட்டிகளைக் கூட மறந்திடுவான்னா பார்த்துக்குங்களேன்... அங்க நம்பளை எவ்வளவு உயர்ந்த பீடத்துல வச்சிருப்பான்னு நினைக்கிறீங்க? அப்படி மனுஷங்கதான் நமக்கு வேணும்!

பி.ஏ. தன்னை மறந்து கடகடவெனச் சிரித்தார். அவரது அடிமைத்தனத்தைச் சுட்டிக்காட்டி அதிகாரி பேசியிருந்ததைப் பற்றி அவர் இம்மியும் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. நீ இப்டியே நினைச்சிட்டிரு... அதான் எனக்கு வேணும்... என்று அவர் மனதுக்குள் வேறு என்ன எண்ணம் வைத்திருக்கிறாரோ என்று சந்தேகம் கொள்ள வைக்கும் சிரிப்பாய் இருந்தது அது. கள்ளனுக்குக் கள்ளன் பெருங்கள்ளன் என்கிற பழமொழிதான் ஞாபகத்திற்கு வந்தது சம்புகனுக்கு. இருட்டில் நிகழும் வஞ்சகம். ஆம்... அவர்கள் மனங்கள் இருண்டு கிடக்கின்றன... இவர்களால் வெளிச்சத்திற்கு வரவே முடியாது. வெளிச்சம் என்றாலே அவர்களுக்குள் இனம் புரியாத பயம்...!

தனிப்பட்ட உதவியாளராய் இருப்பவர்களெல்லாம் இப்படித்தான் இயங்கிக் கொண்டிருக்கிறார்களா? அடக் கடவுளே...! யாரை யார் நம்புவது? யாரை யார் சந்தேகப்படுவது? எதையாவது நினைத்துப் பார்ப்பதற்கு இவர்களுக்கு நேரம் இருக்கிறதா என்ன? ஒன்றே குறி... ஒருவனே தேவன்...! அதைக் கொள்ளை கொள்ளையாய்ச் சேர்த்து வைத்திருந்தால் அது என்ன ஆயுசை நீட்டிக்கப் போகிறதா? அல்லது காட்டிக் கொடுக்காமல் இருக்கத்தான் போகிறதா? காணாமல் போய் தானே மண்ணுக்குள் புதைந்து கொள்ளும் மாயத் திறன் படைத்த பௌருஷம் அது...! திக்குத் திசை தெரியாமல் பயணித்துக் கொண்டிருக்கும் இவர்களுக்கு மற்ற எதைப்பற்றித் தான் நினைப்பதற்கு நேரம்?

சம்புகன் மனம் மிகுந்த வேதனைக்குள்ளாகியது. எல்லோருமே ஒரு பொறுப்பற்ற, விட்டேறியான மன நிலைக்குப் போய் விட்டார்கள். இன்னமும் கடமையுணர்ச்சியோடும், கஷ்டப்பட்டும் செயலாற்றுபவர்களை இது பாதிக்கக் கூடும். நம்ம கடமையை நாம செய்தோம்... அதுக்கு மேலே இதுல ஒண்ணும் இல்லை என்ற முதிர்ந்த நிலை எத்தனை பேருக்கு வாய்க்கும்? அவர்கள் தங்களின் உண்மையான இருப்பைக் கூடக் காப்பாற்றிக் கொள்ள முடியாது போலிருக்கிறதே...!

எனக்குச் சம்பளம் வருது நான் பார்க்கிற வேலைக்கு. என் குடும்பம் ஓடுது அதில். நிறைவாயோ பற்றாக்குறையாவோ, ஏற்றமும் இறக்கமுமாய் நிற்காத வண்டி... எங்கும் தடம் புர ளாமல் செல்கிறதே... அதுவே எவ்வளவு பெரிய விஷயம்?. அப்புறம் மற்றதைப் பற்றி, மற்றவர்களைப் பற்றி நாம் ஏன் கவலை கொள்ள வேண்டும்? ஒரு சராசரி மனிதரின் எண்ண ஓட்டங்கள் இந்தளவில் இருந்தால் போதாதா? இந்த அள வுக்கு விஞ்சாமல் அவன் செயற்பாடுகள் இயங்கினால் பற் றாதா? அதற்கு மேல் ஏன் அகலக்கால் வைக்க வேண்டும்? அதற்கு மேல் ஏன் தன்னை முன்னிறுத்திக் கொள்ள வேண் டும்? முன்னிறுத்திக் கொள்கிறேன் பேர்வழி என்று ஏதாவது சிக்கலில் போய் மாட்டிக் கொள்ளவா? என் கெடுமதியினால் தான் இந்தக் கேடு விளைந்தது என்கிற குற்றச்சாட்டுக்கு ஆளாகவா? தங்களை மறைத்துக் கொள்ள என்னைச் சுட்டிக் காட்டி இவனால்தான் வந்தது இந்த வினை... என்று தங்களை உத்தமர்களாகக் காட்டிக் கொண்டு விலகிச் செல்லவா?

ஆசைகளினால்தான் கேடுகள் விளைகின்றன. தேவைகளை அதிகப்படுத்திக் கொண்டே போனால் அதற்கு ஒரு முடிவே இல்லாமல் போய்விடும் அபாயம் உண்டு. இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும் இலக்கணம் படித்தவன் தொழி லாளி. எனக்கு இருப்பதே எனக்குப் போதும். போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து. எந்த நேரமும் கைகளைத் தலைக்கடியில் வைத்து உறங்கச் சித்தமாய் இருக்க வேண் டும். தரையில் ஒரு துண்டு விரித்து நீட்டி நிமிரும் மனோபா வம் வேண்டும். வயிற்றுக்குச் சோறிட வேண்டும். அதற்கு வேண்டிய அளவு கடவுள் கொடுத்திருக்கிறான் என்பதிலே அவனுக்கு நன்றி செலுத்தி அடங்கிக் கிடந்தால்தானே அவன் கருணை என்றும் நம்மீது நிலைக்கும்? அதை விடுத்து வேறு வழிகளில் செல்ல முனைந்து, ஆட்டம் போட் டால்? இந்த மண்ணில் விளைந்தது எல்லாமும் இந்த மண் ணுக்கே...! எவனும் எதையும் கொண்டு செல்ல முடியாது. ஒரு நகத்தளவு பொருளைக் கூட நகட்டி மறைக்க முடியாது.

உடல் ரீதியான ஒழுக்கக் கேடுகளை ஆய்வு செய்வதற்குப் புறப்பட்டு வந்தால் இங்கு மன ரீதியான ஒழுக்கக் கேடுகள் பரவலாக விரிந்து கிடக்கிறது. அதுவே செயற்பாடுகளாய்ப் பரிணமித்துக் கிடக்கிறது. அதிகார போதை சீரான நிர்வாகத் திற்கு வழி வகுக்காது சீர்கேட்டை ஏற்படுத்துவதும், நல்லவர் களை அடிமைப்படுத்துவதும் கூட தேசத்தின் நலனுக்கு உகந்ததாகாதே...! தர்மத்தை ஒடுக்குதல் தகுமா?

என்னுடைய கடமையுணர்வும் இந்தப் பாதையில்தானே இத் தனை ஆண்டுகளாகப் பயணித்துக் கொண்டிருக்கிறது? அன்றைக்கு பந்த்தின் போது சிகாமணி மட்டும் ஆபீஸ் வர லேன்னா என் பில்லைக் கேஷ் பண்ணியிருக்க முடியாதே...! என் பெண்டாட்டி ஆபரேஷனுக்குப் பணம் கட்டியிருக்க முடி யாதே...! என் வேலைதான் முதல்லன்னு எடுத்துச் செய் தாரே... அவரையா நம்ப அதிகாரி இப்படி ஏமாத்துறாரு...? இது அடுக்குமா? அதிகாரத்தைக் கைல வச்சிருக்கிறவங்க இப்படிச் செய்யலாமா? எல்லாப் பணியாளர்களையும் ஒரே மாதிரித்தானே ட்ரீட் பண்ணனும்? காலம் பூராவும் டபாய்க்கிற வனை கண்டுக்காம விடுறதா நிர்வாகம்? அவங்களுக்கு உரிய தண்டனையைக் கொடுத்து விலக்கிட்டு நல்ல நிர்வா கத்தை நிர்மாணிக்கிறதுதானே ராசாவா இருக்கிறவருக்கு அழகு...!

எதிரே பைரவர் சத்தமின்றிப் பாய்ந்து வருவது தெரிந்தது.

சம்புகனின் கையைப் பிடித்துக் கவ்வி இழுத்து அது இருந்த பகுதிக்கு அழைத்துச் சென்றது. மறைந்து நின்று காட்டிய திசையில் பார்வையை ஓடவிட்ட போது அந்த அதிசயம்... தன் கண்களையே தன்னால் நம்ப முடியாத பேரதிசயம்... சம் புகனை நிலைகுலைய வைத்தது.

அரசர் பிரதானமாய் மெத்தையில் வீற்றிருக்க... சுற்றியிருந்த அதிகாரிகள் தாங்கள் கொண்டு வந்திருந்த சூட்கேஸ்களைத் திறந்து கட்டுக் கட்டுகளாக அவர் முன்னே பரப்பிக் கொண்டி ருந்தனர். இவ்வளவுதானா... மதிப்பீட்டிற்கு - அளவீடு குறைகி றதே? பங்கீடு பாதிக்குமே? இப்படிப் பற்றாக்குறையாகவே ஒவ்வொரு முறையும் பிரவேசம் செய்தீர்களென்றால் அதி ருப்தி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேயிருக்கும். பிறகு அவரவர் பொறுப்புகளை இரண்டிரண்டாய்ப் பிரிக்க வேண்டிய கட்டாய நிலை ஏற்படும். சர்க்கிள், டிவிஷன், சப்டி விஷன் என்று ஏற்கனவே பிரித்திருப்பது இந்தப் பங்கீட்டில் குறைபாடுகள் நிகழக்கூடாது என்பதற்காகத்தான். நிர்வாக வசதிகளுக்காகச் செய்யப்பட்ட அவைகள் இந்தப் பங்கீடு வசதிகளின் படி நிலைகளை இதுகாறும் செவ்வனே நடத்திச் சென்று கொண்டிருக்கையில் இப்போது மட்டும் எங்கிருந்து வந்தது இந்த இடர்ப்பாடு? அவரவர் அதிகாரத்திற்குட்பட்ட நிலைகளில் மேய்க்கும் திறன் குறைந்து போனதா? அல்லது கீழ்நிலை இயங்குதளமே கண்கட்டி வித்தை நடத்துகிறதா? உங்களின் அடக்கி ஆளும் நிர்வாகத்திறன் சோம்பிப் போய் விட்டதா? - அரசர் கொதித்தார். அவ நம்பிக்கை அதிகரித் துள்ளதாய் அறிந்துகொள்ள முடிந்தது.

பைரவரே... வாருங்கள் போவோம்... நாம் வந்த சுவடு கூட இங்கே தெரியக் கூடாது... ஆபத்து... மிகுந்த வேதனை... அர சுத் தலைமை ஆட்டம் கண்டிருக்கிறது. அதை அவர்களே தான் சரிசெய்து கொள்ள வேண்டும். அந்த அனுபவம் பெற்ற வர்தான் மாமன்னர்... புறப்படுவோம்... காவலன் காவான் எனின்..! இந்நிலை அவ்வப்போது ஏற்படுவது சகஜம் என்றுதான் தோன்று கிறது. அல்லது அப்படி நினைத்துக் கொள்ள வேண்டுமா? என்பதுமே இப்போதைய சிந்தனை தர்மம்...! காவலன் காவான் எனின்... எத்தனை அருமையான சொற்றொடர்...?

அறம் குன்றும்... நாட்டிலுள்ள பசுக்களின் மடியில் பால் குன் றும்... வானம் பெயல் ஒல்லாது... வேதம் ஓதப்படுதல் நின்று போகும்... இப்படி இன்னும்... இன்னும்...!!!

ஏய்... சோமாறிப் பியூனு... என்னா இன்னைக்கு இவ்வளவு தூக்கம்... அடிச்சிப்போட்ட மாதிரிக் கெடக்க? இன்னா ஆச்சு? ஒடம்பு கிடம்பு சரியில்லையா? ஆபீஸ் லீவு விட்டுட் டாங்களா...? - சத்தமாகக் கேட்டவாறே அருகே வந்து அவன் முகத்தில் சல்லென்று தண்ணீரை ஓங்கி அடித்தாள் அஞ் சலை... அலறிப் புடைத்து எழுந்த சம்புகன்... ஒன்றும் புரியா மல் பே...பே... என்று விழித்தவாறு மிரண்டு, குன்றிப் போன தன் மெலிந்த தேகத்தையே அதிசயமாயும் திடீர்த் துக்கமா யும் மிரண்டு பார்க்கலானான்.



ushadeepan@thaiveedu.com

# சுஜாத்தா

## அ. கந்தசாமி



நேரம் நள்ளிரவைக் கிட்டியிருந்தது. கொட்டாவி விட்டுப் பஞ்சி முறித்தபடி, 'நாளைக்கு வெள்ளனவா எழும்பவேண்டியதில்லை' என்று கணேசன் கூறியதை அறை நண்பர்கள் இருவரும் கேட்டதாகவே காட்டிக்கொள்ளவில்லை. கணேசனைப் பற்றிய சிறுகுறிப்போடு இதைத் தொடங்கியிருந்தால் அவன் கூறியதன் அர்த்ததை நாமும் விளங்கிக்கொண்டிருக்கலாம்.

விளக்கத்தை உள்வைத்துப் பொதுப்படையாக பேசுவதே கணேசனின் இயல்பு. அவன் சொல்லுக்குள் நுழைந்து அர்த்தத்தைத் தேடுமளவுக்கு நேரத்தைச் செலவழிக்க நண்பர்கள் தயாராக இல்லை. சகலத்திலும் ஒரு விட்டேத்தியான போக்குடன்தான் கணேசன் இயங்குவான். இத்தனைக்கும் அரசாங்கம் வழங்கும் 'பேஸரி' என்னும் உதவிப் பணத்தில்தான் அண்ணாவின் வாழ்வும் வளமும்.

கணேசனின் பெயருக்கு வரும் கடிதங்களைத் தபாற் கந்தோரில் தணிக்கை செய்கிறார்களோ எனும் ஐயம் பலருக்கும் வரும். இந்த ஒரு வருசத்தில் ஒரு தூசு தும்பு கூடத் தபால் என்று அவனுக்கு வந்ததில்லை.

நண்பர்கள் எல்லோரும் தபாற்பையை ஆவலோடு நோண்டி துழாவும்போது, இவன் மட்டும் ஜேம்ஸ் பீரீஸ் விடுதிச்சாலையின் நுழைவாசலில் இடப்பக்கமாக ஒதுங்கி, கண்ணூறு கழிப்பதுபோல் இலையான்கள் அலைந்துலாவும் தேத்தண்ணிக் கடையின் முன், சீனி போடாப் பால் தேத்தண்ணி ஒரு கையிலும் லவேரியா மறு கையிலுமாக இருப்பான்.

பல்கலைக்கழகத்தில் அது அவனுக்கு முதல் வருடம். இயற்பியல் விஞ்ஞானப் பிரிவில் இணைந்திருந்தான். கணிதவியல், பௌதிகம், இரசாயனம், வானசாஸ்திரம், என மொத்தம் நான்கு பாடங்கள்.

கணேசன் விரிவுரைகளுக்கு ஒழுங்காகப் போனதாக டாப்புப் பதிவுகள் இல்லை. வகுப்புகளுக்கான போக்குவரத்து சீரில்லாவிடினும் சுயகற்பித்தல் படிவங்களில் வெகு ஒழுங்கு.

கணிதவியல், பௌதிகம், வானசாஸ்திரம், மூன்றிலும் குறைந்தது A+. இரசாயனவியலில் B-கும் C-கும் இடையிலான ஊஞ்சலாட்டம். இந்தச் சனியனை அடுத்த வருசம் தலையை சுத்தி எறிஞ்சு போடலாம் என்பது கணேசனின் கணக்கு.

கணேசனின் கணிதவியல், பௌதிகவியல் பாடங்களின் சுயகற்கைப் படிவங்களுக்கு ஏகப்பட்ட கிராக்கி. அவற்றைப் பார்த்துப் படியெடுக்க ஜேம்ஸ்பீரிஸ் மண்டபத்தில் பெருத்த அடிபிடியே நடக்கும். தேர்வு நெருங்கும் கடைசி நேரத்தில்தான் இந்த அடிபாடு. அதற்கு முன்பாகவே சுயகற்கைப் படிவங்கள் கைக்கு வந்த அன்றே நூலகத்தில் இருந்து, படியெடுத்து ஒரு கோப்பினுள் வைத்துச் சுஜாத்தாவிடம் சேர்ப்பித்துவிடுவான்.

யாரிந்த சுஜாத்தா?, இந்த விட்டேந்திக்கும் அவளுக்கும் என்ன தொடர்பு?

இந்தக் கேள்விகள் தோன்றியிருந்தால் நீங்கள் கணேசனோடு ஒன்றத் தொடங்கிவிட்டீர்கள்.

தமிழர் யாரும் அதுவரை இவ்வாறான பெயர்களைச் சூட்டிக் கொள்ளத் துணியவில்லை என்பதால், சுஜாத்தா ஒரு சிங்களப் பெட்டை என்று அடித்துக் கூறிவிடலாம்.

அயன்ன, ஆயன்ன-வை உருப்படியாக உச்சரிக்க தெரிந்திராத அல்லது தேவையில்லாத கணேசனுக்கும் சுஜாத்தாவுக்கும் இடையே எவ்வகையான உறவு இருக்கக்கூடும்?

பழக்கம், நட்பு, சகோதர பாசம், காதல், காமம்...? சரி உங்களுக்கும் வேண்டாம், எனக்கும் வேண்டாம். அதை வெட்டித் தறித்துக் குறுக்கு வெட்டில் சுரண்டி இப்படிச் சொல்லிப்



பார்ப்போமா ?

'எழுதிச்செல்லும் விதியின் கை களைத்து சோம்பல் முறிக்கையில் கணேசனைச் சூழ்ந்த வெளியை நிரப்பவந்த மாயவாத மந்திரக்கோல்'தான் சுஜாத்தா.

விரிவுரை மண்டப இருக்கைகளை விட, நூலகக் கதிரைகள், ஆசறுதியாய் கால்களை அகட்டி இருக்கவும் முதுகுக்கு நோவு தரா சாய்மனையும் கொண்டவை. கணேசன் விரிவுரைகளுக்கு அதிகம் தலைகாட்டாததற்கு இதனை ஏதுவாக்குவது மனச்சாட்சியற்ற செயல். பெரும்பாலும் கணேசன் இங்குதான் இருப்பான்.

விளங்குதோ இல்லையோ... சுஜாத்தா எந்த விரிவுரைகளையும் தவிர்க்கமாட்டாள். தொண்ணூற்றொன்பது விழுக்காடு விரிவுரைகள் அவளுக்கு விளங்குவதில்லை என்பது வேறை கதை.

புண்ணியவாட்டி, கரும்பலகையில் என்ன தெரிகிறதோ ஒன்றும் விடாள். தெரியும் காற்புள்ளி, அரைப்புள்ளி, அரைக்காற்புள்ளி, அறுந்தபுள்ளி, தப்பித்தவறி ஒரு பல்லி பக்கத்தால் ஊர்ந்தால் முதலையின் குஞ்சுபோல் அதன் வடிவத்தையும் கூடக் குறித்து விடுவாள். என்னதான் சொல்லுங்கோ... அவள் எழுத்துகளின் அழகை முத்துக்கு ஒப்பிடுதல் கம்பன் காலப் பழசு. என்னைக் கேட்டால் சுஜாத்தாவின் கையெழுத்து அவளது கண்களைப் போல என்பேன். என்ன அவள் எழுத்துக்களுக்கு இமைகள் இல்லை.

ஒரு நாள் நூலகக் கதிரையில் நெடுநேரம் சாய்ந்து கிடந்து விறைத்துப்போன கால்களை உசுப்ப, ஓசை எழுப்பாமல் ஊர்ந்து நடந்தபோதுதான் கணேசன் முதன்முதலாக சுஜாத்தாவை கண்டான்.

ஆண்கள் சொற்பமாயக் காணப்படும் சுவரோரமாய், யன்னலின் கீழுள்ள இருக்கையில் இடது முழங்கை மேசையில் ஊன்றி, விரித்த அதே கையில் தலைசாய்த்து இலக்கற்ற முடிவிலியை அவள் தேடிக்கொண்டிருந்தாள்.

அவளது மனச்சிக்கல்கள் அவளைச் சுற்றி மிக நுண்மையான சிலந்தி வலையை நெய்து முடிந்திருந்தன. அந்த வலையைக் கடந்து அசையும் எல்லா சடப்பொருள்கள் மீதும் ஒரு நிலைமின் அதிர்வு ஏற்பட்டுக்கொண்டிருந்தது. அவளைக் கடந்து போவோர் வருவோருக்கு அவரவர் தலைச் சுமைகள். இந்த நிலைமின்லைகளைச் சட்டை செய்வார் யாருமில்லை.

எங்கள் கதாநாயகனின் கணேசனின் தலைவிதி. அந்த நிலைமின் வலயத்துக்குள் இலாவகமாயச் சிக்குண்டான்.

ஈர்ப்பு விசையொன்று அவளை நோக்கி அவனை நகர்த்தியது.

'மன்னிக்கவேனும்... இடைஞ்சல் தாறனோ தெரியேல்லை. நீங்கள் ஏதோ பிரச்சினையிலை இருக்கிற மாதிரி எனக்கு தெரியுது. இது எனக்குத் தேவையில்லாத வேலைதான்... எண்டாலும் உங்களக் கடந்து கண்டும் காணாமலும் போக முடியேல்லை. என்னால ஏதும் உதவ முடியுமெண்டால் சொல்லுங்கோ, முடிஞ்சா முயற்சி பண்ணுறன்.'

நித்திரையில் இருந்து உலுப்பி எழுப்பட்டவள் போல் நிமிர்ந்தாள் சுஜாத்தா. கணேசனை விரிவுரை மண்டபத்தில் இடைக்கிடை கண்ட நினைவு நெட்டி முறித்தது.

இமைகள் படபடக்க, காய்ந்துபோன உதடுகளை ஈரலித்துக் கொண்டு, கணேசனை பாதாதிகேசப் பார்வையால் துழாவினாள். செருமித் தொண்டையை சீர்செய்து, பின் 'மொக்கத ?' என்றாள்.

'ஓ.. இவள் எங்கட காய் இல்லை.' சுதாகரித்துக்கொண்ட கணேசன், அவளை சற்றே உற்று நோக்கினான்.

இவள் தரப்படுத்தல் எனும் தங்கக் கம்பளத்தில் வந்திறங்கிய அழகு தேவதை. தேவதை என்பதெல்லாம் கொஞ்சம் உயர்வு நவிற்சிதான். சிவப்பும் கறுப்பும் கலந்த சமநிலையில் கறுப்பு கொஞ்சம் தூக்கலாகவே இருந்தது. அவளின் கொழுத்த கன்னக் கதுப்புகளும் அவன் பார்வை வலயத்தில் இந்த நொடியில் நீ மட்டுமே எனத் தோன்றிய ஆகர்சிப்பும் வண்ணத்துப் பூச்சியின் சிறகடிப்பில் படபடக்கும் விழி மடல்களும் மேலோட்டமாக எல்லா எதிர்களையும் நேராக்கின.

தென்னிந்திய பேரறிஞர் ஒருத்தர் ஆய்ந்தறிந்து சொன்னது நினைவில் தெறித்தது. 'அயலான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்' இங்கு ஒரு தோட்ட மல்லிகையே மணக்கிறதே.

'தரப்படுத்தல் மூலம் பாதிக்கப்பட்ட பரதேசிகளில் அடியேனும் உள்ளேன். மூன்றாம் கடைச்சங்கத்தின் சங்கிலித் தொடரின் கடைசிக் கந்தாயத்தில் தொற்றித் தொங்கும் பாவப்பட்ட தமிழ் பேசும் நாடில்லா மனிதன் நான்.'

தமிழைச் சிங்களப்படுத்த அவன் நினைவகராயிதியில் சொற்ப வெளியும் ஒதுக்கப்படவில்லை. எனினும் தப்பும் தவறுமாக தன் எண்ணத்தை ஆங்கிலப்படுத்தும் புலமை கணேசனுக்கு எப்பனளவு இருந்தது.

உடைந்து சிதறிய இங்கிலீஸ் துண்டுகளை பொறுக்கி இணைக்கும் ரசவாதத்தையும் தரப்படுத்தலில் வெண்ணையாய்த் தடவி 'சான்விச்சாக' இவளை சர்வகலாசாலைக்குள் நுழைத்திருக்கிறார்கள் போலும்.

ஆங்கிலத்தை இப்படியும் சித்திரவதை செய்யமுடியுமா ? என அவள் மனம் வியந்திருக்க வேண்டும். அதன் ரேகைகள் முகத்தில் தோன்றாமல் அவன் சொன்னதை புரிந்துகொண்டவள் போல் பற்களில் சிக்கனம் காட்டி புன்னகைத்தாள்.

அவள் முகத்தை மூடிய முகில் மூட்டம் முற்றிலும் விலகவில்லை.

'அனாமதேயமாய் வந்து உதவி செய்கிறேன் என்பவனிடம், எனக்குக் கற்கை பாடத்திட்டத்தின் ஒரு சொல்லும் புரியவில்லை என்று சொன்னால் என்ன நினைப்பான் ?'

தன்மானம் என்ற கற்பனா அழுத்தம் மனித மனங்களில் வேறுபட்ட வீதங்களில் மண்டி இருப்பதை இப்போதுதான் உணர்ந்தாள். காலையில் கண் விழித்ததும் மனதுக்குள் தொழும் புத்தனை உச்சியை பிடுங்கும் மதியத்திலும் மறுபடி நினைத்தாள்.

கணேசனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் இலங்கையர்களின்

சராசரி வளர்த்தியை மயிரிழைக் கனதியில் கடந்திருந்தான் சீப்பை நிராகரித்த தலைமுடி. அணிந்திருந்த தன் தொப்பியை வலக்கையில் உயர்த்தியபடி மெல்லிய சிரிப்பும் கற்பாறையையும் கரைக்கும் அக்கினிப் பார்வையுமாய் கறுப்பு பகைபுலத்தில் சிகப்பு வண்ணத்தில் சேகுவேரா சிலிர்த்து நிக்கும் ரீசேட்டோடு அவளுக்குக் காட்சியளித்தான் கணேசன். வழமைக்கு மேலான கம்பீரத்தை அன்று அவன் உடல் வெளிப்படுத்தியது.

கணேசன் எந்த விடுதலை இயக்கத்தோடும் தன்னை இனம் காட்டியவன் அல்ல. இயக்கத்தினரின் கடும் பயிற்சிகளை கண்டும் கேட்டும் ஏகலைவனானவன். அகன்ற நெஞ்சு, திரண்ட தோள்கள், அவளுக்கு முழு ஆண்மையை நேரில் கண்ட பதைப்பை ஏற்படுத்தியது.

இமைகளை வெட்டி மூடினாள். கீழ்மடலில் தங்கவா தடம் பிரளவா எனத் தழும்பி நின்ற கண்ணீர் துளிகள் தடை மீறின.

வலது கையின் முதலிரு விரல்களால் கன்னத்தை வழித்தபடி சுயகற்கைப் படிவமொன்றை இடக்கையால் எடுத்து நீட்டினாள். அது சிங்களத்தில் இல்லை. அவனது ஆச்சரியத்தைத் தூண்டும் வண்ணம் ஆங்கிலத்தில் இருந்தது.

‘நீங்கள் சிங்கள மீடியம் எண்டெல்லோ நினைச்சனான்’.

‘என்னுடைய தகப்பனார் இங்கு மூன்று வருடப் படிப்பு முடிந்ததும் லண்டனுக்கு அனுப்ப நினைக்கிறார். அங்கேதான் மேற்படிப்பு. ஆங்கிலம் எனக்கு பெரிய பிரச்சனை இல்லை. ஆனா பாடங்கள்தான் புரியுதில்லை’.

கணேசனோடு பேசிக்கொண்டே, இரு உள்ளங்கைகளையும் பக்கவாட்டில் பொருத்தி தனது கைரேகைகளை ஆராயத் தொடங்கினாள்.

சிரித்துக்கொண்டே... ‘பாடங்களைப் புரிஞ்சுகொள்ள கைரேகைகளை நம்பாதேங்கோ. இதை நம்புங்கோ.’

அவன் வலக்கை, அவள் உச்சியை தேடி நீண்டது. தொடுக்கைக்கு சில டெசிமீற்றர் தூரத்தில் தயங்கித் தடுமாறியது.

அவள் தன் தலைக்கு மேலாக நடுங்கும் அவன் விரல்களை நிமிர்ந்து பார்த்தாள். திரும்பி வியர்வை அரும்பும் அவன் முகத்தை மேய்ந்தாள். நடுக்கத்தோடு நர்த்தனம் செய்த அவன் வலக்கை விரல்களை தன் கையால் பிடித்து விலக்கினாள்.

அது கணநேர ஸ்பரிசம் தான்...

அது எண்ணில் அடங்கா அவனது இரவுகளை அலைக்கழிக்கும் என்பதை அவள் உணர்வதற்கான ஆதாரங்களை உள்வாங்கிக்கொண்டு அவனை ஏதேதோ செய்யும் அவள் விழிகளை விழுங்கினான்.

இப்படித்தான் கணேசனுக்கும் சுஜாத்தாவுக்கும் இடையேயான நட்பு அல்லது உறவு ஊற்று, தோற்றம் கொண்டது. அதுவே நூலகத்தின் வலப்பக்கமாக நீண்டுசெல்லும் விறாந்தையை ஐந்து அல்லது ஆறடி இடைவெளியில் தாங்கி நிற்கும் தூண்களுக்கு முட்டுக்கொடுத்து அமரும் இருக்கைகளைத் தேட வைத்தது.

அந்த நாளின் பின்னர், ஒரு செக்கன்துளியை தானும் அவர்கள் துடைத்தெறியவில்லை. கணேசன் கணிதத்தையும் பௌதிகத்தையும் பன்னாடையில் வடித்துக் குழந்தைக்கு ஊட்டுவது போல் அசாத்திய பொறுமையுடன் அவளுக்குக் கற்பித்தான்.

சுஜாத்தா அப்படியொன்றும் தறிக்க முடியா மொக்கு அல்ல. புதிய சுயகற்பித்தல் படிவங்களை அவன் எடுக்கும்போதெல்லாம் அவள் தப்பி ஓடும் அவசரத்தில் சஞ்சரிப்பாள்.

பத்தும் பலதும் கதைகொடுத்துக் கொண்டே கன்ரீனுக்கு போகிறோம் என்பதை உணர விடாமல் சுடச்சுட ஒரு கோப்பை பால்தேனீர் குடிக்கவைத்த பின் தரைதட்டி நிற்பாள்.

குழந்தையின் மனமும் குமரியின் செழிப்பும் குமைந்து பெண்ணவள் சுஜாத்தா.

அவனது மனக்குரங்கு பல வேளைகளில் அவள் செழிப்பில் செக்கிழுக்க நினைப்பதும் உண்டு. சுஜாத்தாவின் முகவரிக் கோடுகளில் அப்பாவித்தனம் வேர் பிடித்து விகாசித்துத் தழும்பியதை அவன் பார்த்தான்.

‘அவளாக உதவி செய் என்று உன்னட்டைக் கேட்டாளா? நீதான் நிலைமின்னதிர்வு, மின்னலைகள் என்று பௌதீகத்தில் படித்ததை அவளிடம் பரீட்சித்துப் பார்க்கிறாய். அவளென்ன விஞ்ஞானகூடத்தில் பரிசோதனைக்கு கொண்டுவரப்பட்ட முயலா, மூஞ்சூறா? பரதேசி, பரதேசி.’

உள்மனக் குமுறல் நாள் முழுக்க அவனை வாட்டி எடுத்தது.

காதல் என்னும் வலைக்குள் சிக்காத ஆண், பெண்ணுக்குள் வந்துபோகும் மாயமான் தோற்றங்களை புறக்கையால் புறக்கணிக்கும் முயற்சிகளில் துரும்பளவு வெற்றிகளும் தூணளவு தோல்விகளும் ஏணியும் பாம்புமாய் பரமபதம் ஆடின.

வெள்ளிக்கிழமை, காலை வெய்யில் சூடு பிடிக்கும் நேரம். கணேசன் நூலகத்தின் நுண்கணிதக் கணக்கொன்றோடு நீயா நானா எனப் பலப்பரீட்சையில் ஈடுபட்டிருந்தான்.

பல ஆட்டங்கள் கடந்தும், வெற்றி கணக்கின் பக்கமே சாய்ந்து அவனுக்குச் சலிப்பை ஏற்படுத்தியது. இனி இதற்கான தீர்வைத் தேனீரிலோ, கோப்பியிலோதான் எட்டமுடியும் என்ற முடிவோடு தலையை நிமிர்த்திச் சுஜாத்தாவைத் தேடினான்.

வழக்கமாக அவள் குந்தும் இருக்கைகளில் அசுமாத்தம் இல்லை. லைபிரரியை ஒரு சுற்று மேய்ந்தான். அவளை எங்கும் காணவில்லை. சலிப்பு, அதன் நீள்தகவின் எல்லையைத் தொட்டது. அவள் மீது கோபம் கொண்டு நினைவுகள் உழம்பின.

தன் இருக்கைக்குத் திரும்பி, பாடங்களின் நேரசூசையை நோண்ட, அவளுக்கு வெள்ளிக்கிழமை காலையில் விரிவுரைகள் ஏதும் இல்லை என்பது தெரிந்தது.

எப்படி மறந்தேன்?

இதை அவளிடம் சொன்னால் 'சுஜீயின் நேரசூசியை நீ எப்பிடி மறந்துபோவாய்? என்னிலை உனக்கு எள்ளுப்போலை அக்கறையும் இல்லை' என்பாள். கையைப் பொத்திக் குத்த வருபவளாயப் பாவனை செய்வாள்.

இவ்வளவு உரிமை எடுத்துக் கொள்கிறாளே என்று உள்ளுக்குள் அலை ஆர்ப்பரித்தாலும் எல்லைதாண்டி தன்னை உழப்பி விடுமோ என்ற எச்சரிக்கை உணர்வும் அவனுக்குத் தலைகாட்டும்.

கற்பித்தல் படிவங்களை கோப்பிற்குள் திணித்துக்கொண்டு கதிரையை விட்டு நிமிர்ந்தபோது சுஜாத்தா அரக்க பரக்க வந்து நின்று மூச்சு வாங்கினாள்.

'இவ்வளவு நேரமாய் எங்கே போய்த் துலைந்தாய்' அரைக் கோபத்தொடு இவன் எழுப்பிய வினாவை அவள் இடக்கையால் தூசியாய் தட்டிவிட்டு,

'வெளியிலை வா உனக்கு ஒன்றைக் காட்டப்போறன், கெதியா' எனப் படபடத்தாள்.

ஏற்கனவே செழித்துக் கொழுத்திருந்த சொக்கைகள் இரண்டும் மின்னொளியில் பூத்துப் பூரித்தன.

'நோனா இண்டைக்கு எந்தக் கணக்கை வெய்யில் காயப் போட்டிருக்கிறியளோ தெரியேல்லையே' என்றபடி அவளைப் பின்தொடர்ந்து நூலக வாசலுக்கு சென்றான்.

வெளியே லைபிறரி விறாந்தையில் தூணின் பிடிமானத்தில் சுஜாத்தாவின் அச்சுப் பிரதி ஒன்று சிரித்தது.

மரத்தான் ஓடியோ, நீளம் தாண்டியோ, தடி ஊன்றியோ, விளையாட்டு போட்டிகளில் உங்களுக்கு வசப்பட்ட ஏதோ ஒன்றை, அல்லது அதிகுறைந்தபட்சமாக ஒரு கால யந்திரத்தையாவது இரவலாகவோ, குத்தகைக்கோ எடுத்து பதினைந்து, இருபது வருடங்களைப் பல்லைக் கடித்து முன்னோக்கி நகர்த்தினால் சுஜாத்தா எப்படி இருப்பாளோ அப்படித் தெரிந்தது தூணை ஒட்டி நின்ற அச்சுப் பிரதி. அச்சுப் பிழை ஏதுமில்லாத கொஞ்சம் பழைய பிரதி.

'சுஜீ இந்தப் பிள்ளை உங்கடை தங்கச்சியா அக்காவா நல்ல வடிவா இருக்கிறா'?

சிரிக்காமலே அவன் சொன்னதால் சுஜாத்தாவின் முஞ்சி சுண்டிக் கறுத்தது.

கணேசனுக்கோ அவளை சுரண்டி விளையாட ஆசை.

அவளுக்கு நக்கல், நையாண்டிகளைப் புரிந்து கொள்ள சொற்ப நேர வெளி தேவை. அவள் ஒரு நேர்கோட்டுப் பயணி. தாயைப் போய் இவ உனக்கு தமக்கையா, தங்கையா எண்டு சிரிப்பின் சாயலே இல்லாமல் கேட்டால் யாருக்கும் ஒரு வெப்பியாரம் வரத்தான் செய்யும்.

தூனோடு நிற்பது அவளது 'அம்மே' என்பது தோய்த்து வெளுத்த தெளிவு. பௌத்த சிங்கள பாரம்பரியம் அவள் தாயாரின் உடையமைப்பில் பம்பரமாடியது. மார்பைச் சிக்கனத்தோடு மறைத்து, முழங்கையை மூடி இறங்கும் கைப்பக்கங்களில் தாரளமாகவும், இடுப்பு வெளியை ஏகத்திற்கும் தென்றலை தொட்டு விளையாட தையற்காரன் அனுமதித்திருந்தான். சுஜாத்தா இந்த மாதிரி உடை அணிந்து அவன் பார்த்ததில்லை. உங்கள் தேசிய உடுப்போடு ஒரு நாளைக்காவது காம்பஸ்சுக்கு வாடி என்று கேட்க வேண்டும். அவள் ஒப்பமாட்டாள். கெஞ்சிக்கூத்தாடி ஒருநாளாவது வரப்பண்ணிப் பார்க்க வேண்டும்.

'சுஜீ, மூச்சுவிடாமல் உங்களைப் பற்றியே கதைக்கிறாள். உங்கடை உதவிகள் இல்லாட்டா பதுளைக்கே திரும்பி வந்திருப்பாளாம். போமஸ்துதி. புத்த பகவானின் கருணை உங்கள் மீது என்றுமே உண்டு'.

இடுப்பை 'ட'னாவாக்கி சொல்லி முடித்த களைப்போடு மனிசி நிமிர்ந்தாள். வஞ்சகமில்லா மனிதர்கள். இவர்கள், நெஞ்சில் நஞ்சை கலந்தவர்கள் நினைப்பு வர, கை நரம்புகள் புடைத்தன.

**வா**ர விடுமுறை நாட்களில் இருவரும் கண்டிக்கு போவார்கள். நாகேஸ்வரி கடையில் சாப்பிடுவார்கள். நாகேஸ்வரி சாப்பாட்டுக்கடை கோழிக் குழம்பிற்கு பிரசித்தம். ஊரச் சமையலை நினைவில் கரம்பும். கோழிக்கறி இலையில் முடிய முடிய பாத்துப் பார்த்து போட்டுக்கொண்டே இருப்பார்கள். இருவரும் ருசித்து சுவைப்பார்கள்.

'உங்களின் ஊர் சமையல் இது போலை சுவைக்குமா?'

'இல்லை... அது வேறை சுவை. இதே காய்கறியள் தான், ஆனா கைப்பாகம் வேறை லெவல்.'

'சரி உங்கள் விடுதிச் சாப்பாட்டை போல இருக்குமா?'

'சிலவேளை அந்தச் சாயலும் தடக்குப்படும். ஆனா ரெண்டும் கெட்டான்.'

கணேசன் கதையை மாற்றினான்.

‘சுஜீ உங்கடை பாரம்பரிய உடை நல்ல அழகு. அண்டைக்கு உங்கட அம்மா கட்டிக்கொண்டு வந்தமாதிரி நீயும் கட்டுக் கொண்டு வருவாயா ?’

அவள் கணேசன் கண்களில் தெறித்த ஆசையையும் குரலில் விரவிய ஏக்கத்தையும் தாய்மையின் கரங்களால் வருடினாள்.

‘கணேஸ், கட்டாயம் ஒரு நாளைக்கு வாறன். எப்ப எண்டு கேக்காதேங்கோ. காலம் வரும்.’

ஓர் உடுப்பை அணியிறதுக்குக்கூட காலநேரம் பாக்கிறாளே... கட்டிறவன் பாடு என்னாகுமோ ?

‘நீங்கள் லீவிலை பதுளைக்குப் போகேக்க அந்த கரிக்கோச் சிலை நானும் தொத்தவா’ நாக்கில் சொற்கள் சுணைக்கும். ஆனால் ஓசை இழந்து மழுங்கிப்போகும்.

இப்படித்தான் அவனுக்குள் பதுங்கிய வேதாளம் இடைக் கிடை தலைகாட்ட பார்க்கும்.

கண்டிக்கு போகும் பஸ்ஸில் ஒரே இருக்கையில் ஒண்டிக் கொண்டு இருக்கும்போது, வெயிலின் காங்கையில் அவள் நெற்றியிலும் கழுத்தின் மென்மடிப்புக்களிலும் வியர்வை மழைசாரல் துமிகளாய் அரும்பும் போது, கூந்தல் அலர்ந்த தாமரையை அள்ளி வீசும்போது, கதைத்துக்கொண்டே பிரக்ஞை இன்றித் தோளோடு தோள் உரசும்போது..

இவற்றையே ஊக்கிகளாக்கி அவனுக்குள் வேதாளம் கண் மலரும்.

சுஜாத்தாவுக்கு அவனது ‘புளோஹாட் புளோபுகோள்ட்’ நிலை மாற்றம் சொட்டும் புரிவதில்லை.

சமதரையில் பாயும் மகாவலிகங்கை போல் துல்லியமும், தூய்மையும் கலந்தவள் அவள்.

நேற்றுக் கையளிக்க வேண்டிய கற்பித்தல் படிவத்தை, கணேசன் நூலகத்தில் அமர்ந்து அவசரகதியில் எழுதிக் கொண்டிருந்தபோது... சுஜாத்தா முகமெல்லாம் விளக்கெரிய கற்பித்தல் படிவம் ஒன்றை நெஞ்சோடு அணைத்தபடி அவன் அருகில் சென்றாள்.

பெருமிதப் புன்னகை உதட்டில் நெளியத் தன் குழந்தையை அவன் கைகளில் தருவதைப்போல் பக்குவமாக அந்தப் படி வத்தைத் கொடுத்தாள். அவனுக்கோ எழுதி முடிக்கவேண் டிய அவசரம். அவள் தந்த கற்பித்தல் படிவத்தை பார்க்கா மலே அவன் தன் எழுத்துக்களில் கவனத்தை குவித்தான். சிறிது நிமிடங்கள் தரித்து நின்றவள்... இரு கால்களையும் தரையில் உதைத்தபடி தனது இருக்கையை நோக்கி அசைந் தாள். தரை அவள் தாக்கத்திற்கு மறுதாக்கத்தை தந்து அதிர, அவன் நியூட்டனின் மூன்றாம் விதியை நினைவில் உழப்பிகொண்டு அந்த படிவத்தைப் பார்த்தான்.

ஆச்சரியங்கள் அடிக்கடி நடப்பதில்லை. அப்படி நிகழ்ந்தால் அதற்கு பெயர் ஆச்சரியமில்லை.

அவள் வைத்துச் சென்ற கணித கற்பித்தல் தாளில் B+ என சிவப்பு எழுத்துகள் முழுசின.

அவனது முயற்சிகளும் அவளுக்கு அளித்த பயிற்சிகளும் விழலுக்கு வீணாகவில்லை. எழுந்து பூனை நடையில் அவள் இருக்கையை அடைந்தான். தாயோடு போலிச்சண்டை இடும் குழந்தை போல் முகத்தை ‘உம்’-இல் சுருக்கத் தலையை அவனுக்கு எதிர்திசையில் திருப்பினாள்.


அந்த அகன்ற முகத்திற்கு இந்தப் போலிச் சுருக்கங்கள் பொருந்திப் போகவில்லை. அவன் கவனம் மேலும் கூர்மை அடைந்த பின்னர்தான் அவள் அணிந்திருந்த, இடுப்பில் சுற் றிச் சரிந்திருந்த கொய்யகமும் இடத்தோளில் சரிந்தேறும் புடவை கொசுவமும் கண்ணில் பட, அச்சொட்டாய் சிங்களத் தியாயத் தெரிந்தாள்.

‘சுஜீ இனி என்ரை உதவியள் உனக்கு தேவைப்படாது. உன்னை நீயே வளர்த்தெடுத்திட்டாய். தனிப் பறவையா நீ பறக்க, முகிலில்லா வானம் பரந்திருக்குது. லைபிறறியிலை இவ்வளவு கூட்டம் இல்லாட்டி உன் கன்னத்திலை முத்தம் கொடுக்கலாம்போல, என்ரை மனம் தத்தளிக்குது.’

உணர்ச்சியின் உந்தலில் அவன் சொற்கள் கரை உடைப்ப தைக் காலம் தாழ்த்தி அவன் உணர, சுஜாத்தா ஆவேசம் வந் தவளாய் எழுந்தாள்.

கூந்தல் தளர்ந்து அவள் தோளை மூடியது. எட்டிப் பாய்ந்து இறுக்கக் கட்டிக்கொண்டாள். கூந்தல் அகன்று விரிந்து கணே சனைப் போர்த்தியது. இறுக்கத்தை மேலும் இறுக்கினாள். விர கத்தில் காய்ந்துபோன அவன் இரு சொண்டுகளையும் தன் எச்சில் இதழ்களால் கவ்வினாள்.

காலம் கட்டியென உறைந்தது.



kandasamy.a@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***




மே 21, 2061-இல் முதல் முறையாகக் கடைசிக் கேள்வி கேட்கப்பட்டது. அரைவாசி பகிடியாக. மனிதர் முதல் முறையாக ஒளியில் கால் வைத்தபோது அது கேட்கப்பட்டது. அந்தக் கேள்வியை எழுப்பியது விஸ்கிக்காக ஒரு ஐந்து டொலர் பந்தயம் கட்டியபோதுதான். அது இப்படித்தான் நடந்தது.

அலெக்சாந்தர் அடெலும் பேட்றம் லுப்போவும் மல்ரிவக்கிடம் விசுவாசமாக வருகை தரும் இருவர். பிரமாண்டமான அந்தக் கணினியின் விறைப்பான, சொடுக்கொலி எழுப்பும், மைல் கணக்காக ஒளிரும் முகத்திற்குப் பின்னால் என்ன உள்ளது என்பது எந்த மனிதருக்கும் தெரிவது போல அவர்களுக்கும் தெரியும். மின்னோட்டங்களும் சுற்றுகளும் எப்படி இயங்குகின்றன என்பது பற்றிக் குறைந்தது தெளிவற்ற எண்ணமாவது அவர்களுக்கும் இருந்தது. மின்னோட்டங்களும் சுற்றுக்களும் எந்த மனிதரும் உறுதியாக அறிந்து கொள்ளக்கூடிய சாத்தியமான புள்ளியையும் கடந்துவிட்டன.

மல்ரிவக் சுயமாகவே தன்னைத் தான் நேர்ப்படுத்தவும் சரி செய்யவும் கூடியது. அது அப்படித்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் மனிதரால் அதை விரைவாகவோ போதுமான அளவு நேர்படுத்தவோ சரிப்படுத்தவோ முடியாது. அதனால் அடெல்லும் லுப்போவும் மிகப்பெரிய அந்த இராட்சதனை இலேசாகவும் மேலோட்டமாகவுமே கவனித்தார்கள். எந்த மனிதரும் செய்யக் கூடியதையே அவர்களும் செய்தார்கள். அதற்கான தரவுகளைக் கொடுத்தார்கள். அதன் தேவைகளுக்கேற்ற மாதிரி கேள்விகளைச் சரிப்படுத்தினார்கள். அவை கொடுத்த மறுமொழிகளை மொழிபெயர்த்தார்கள். நிச்சயமாக அவர்களும் அவர்களைப் போன்ற மற்றவர்களும் மல்ரிவக்கின் புகழின் பங்குக்கு முற்றும் உரித்துடையவர்களே.

பல தசாப்தங்களாக மல்ரிவக் வானூர்திகளை வடிவமைக்க உதவியது. பயணவழிகளை வரைந்தது. அவற்றைக் கொண்டு மனிதர் சந்திரனையும் செவ்வாயையும் வெள்ளியையும் அடைந்தார்கள். அது இல்லாமல் இருந்திருந்தால் பூமியின் மோசமான வளங்கள் வானூர்திகளுக்கு உதவியிருக்க முடியாது. நீண்ட பயணங்களுக்கு அதிக ஆற்றல் தேவையாக இருந்தது. பூமி தன்னிடமிருந்த நிலக்கரியிலும் யுரேனியத்திலும் இருந்த ஆற்றல் திறனை அதிக வினைத்திறனுடன் சுரண்டியது. ஆனால் அவை இரண்டிலுமே அவ்வளவுந்தான் இருந்தன.

மல்ரிவக் மெதுவாக, ஆழமான கேள்விகளுக்கு அடிப்படையான மறுமொழியைத் தரக் கற்றுக் கொண்டது. மே மாதம் 14-ம் திகதி 2061-ல் இதுவரை கோட்பாடாக இருந்தது நிரூபிக்கக் கூடிய உண்மையாகியது.

சூரிய ஆற்றல் சேமிக்கப்பட்டு, உருமாற்றப்பட்டு, கிரகம் முழுவதிலும் நேராகப் பயன்படுத்தப்பட்டது. பூமி தன்னிடமிருந்த எரியும் நிலக்கரியையும் பிளவுபட்ட யுரேனியத்தையும் அணைத்து, சிறியதொரு நிலையத்துடன் எல்லாவற்றையும் இணைத்துவிட்டது. அந்தச் சிறிய நிலையம் ஒரு மைல் விட்டத்தையுடையது. அது பூமியைச் சந்திரனிலிருந்து அரைவாசித் தூரத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. பூமி முழுவதும் கண்ணுக்குத் தெரியாத சூரிய ஆற்றலின் ஒளிக்கற்றைகளால் இயக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

அதன் புகழை மங்கச் செய்வதற்கு ஏழு நாட்கள் தேவையாக இருக்கவில்லை. அடெலும் லுப்போவும் இறுதியில் பொது நிகழ்ச்சிகளிலிருந்து ஒரு மாதிரித் தப்பித்து விட்டார்கள். அமைதியாக, எவருமே சந்தேகப்படாத, கைவிடப்பட்ட நிலத்தடி அறை ஒன்றில் சந்தித்தார்கள். மல்ரிவக்கின் பிரமாண்டமான புதையுண்ட உடலின் சில பாகங்கள் அங்கே தெரிந்தன. அதுவும் எவரும் கவனிக்காமல் வெறுமனே சோம்பலுடன் சொடுக்கிக் கொண்டு தரவுகளை வகைப்படுத்திக் கொண்டிருந்தது. மல்ரிவக் கூடத் தன் விடுப்பைச் சம்பாதித்துக் கொண்டது போலும். இளைஞர்கள் அதைப் பாராட்டினார்கள். முதலில் அவர்களுக்கு அதைத் தொந்தரவு செய்யும் எண்ணம் இருக்கவில்லை.

அவர்கள் தங்களுடன் ஒரு மதுப் போத்தலையும் கொண்டு வந்திருந்தார்கள். அந்த நேரத்தில் அவர்களுக்கிருந்த ஒரேயொரு கவலை, போத்தலுடன் ஓய்வாக இருக்க வேண்டும் என்பதுதான்.

'அதைப் பற்றி நினைக்கும்போது அது பிரமாதமாகத் தெரிந்தது,' என்றான் அடேல். அவனுடைய விசாலமான முகத்தில் தளர்ச்சியின் கோடுகள் தெரிந்தன. அவன் தன் மதுவை மெதுவாக வைத்திருந்த கண்ணாடித் தண்டால் கலக்கினான். ஐஸ் கட்டிகள் ஒன்றாகக் கூடி அங்குமிங்கும் சென்று கொண்டிருப்பதைக் கவனித்தான். 'ஆற்றல் முழுவதையும் இலவசமாக நாங்கள் என்றென்றும் பயன்படுத்தலாம். பூமி முழுவதையும் ஒரு பெரிய துளி தூய்மையற்ற திரவ இரும்பாக உருக்குவதற்கான ஆற்றல் போதுமான அளவு எங்களிடம் இருக்கின்றது. அதோடு பயன்படுத்தப்பட்ட அந்த ஆற்றலையும் நாங்கள்



ஒருபோதுமே இழக்கப் போவதுமில்லை. நாங்கள் பயன்படுத்தும் எல்லா ஆற்றலையும் மீண்டும் மீண்டும் பயன்படுத்தலாம்.'

லூபோவ் தன் தலையைப் பக்கவாட்டாகச் சரித்தான். எதையாவது எதிர்த்துச் சொல்ல வேண்டும் என்று நினைத்தால் அப்படிச் செய்வான். அது அவன் செய்யும் தந்திரம். இப்பொழுது அவன் அதை எதிர்த்துச் சொல்ல வேண்டும் என்று நினைத்தான். அதற்கு ஓரளவு காரணமும் இருந்தது. அவன்தான் ஐசையும் கிளாசுகளையும் கொண்டுவரவேண்டியிருந்தது. 'எல்லா நேரமும் அப்படிச் செய்ய முடியாது,' என்றான்.

'ஓ, எல்லா நேரமும் தான். சூரியன் மறையும்வரை, பேட்'

'அது முழு நேரமுமல்ல'

'அப்படியானால் சரி. பில்லியன் கணக்கான ஆண்டுகள். குறைந்தது பத்து பில்லியன் ஆண்டுகள். உனக்குத் திருப்தியா ?'

லூபோவ் தன் விரல்களை உதிர்ந்து கொண்டிருக்கும் தன் தலைமயிர்களுக்கிடையே விட்டு இன்னும் கொஞ்சம் இருக்கிறதா என்று பார்ப்பது போல் அதை அளைந்தான். பின் தன் மதுவை மெதுவாக உறிஞ்சினான். 'பத்து பில்லியன் ஆண்டுகள் என்றால் முழு நேரமுமல்ல.' என்றான்.

'சரி. அது நாங்கள் வாழும் காலம்வரையாவது இருக்கும், இல்லையா ?'

'அப்படியே நிலக்கரியும் யுரேனியமும் நின்று பிடிக்கும்.'

'சரி சரி. இப்போ நாங்கள் தனித்தனி விண்கலங்களைச் சூரிய

நிலையத்தில் இணைப்போம். அவை புளூட்டோவுக்கு மில்லி யன் கணக்கான தடவை போய் வரும். எரிபொருளைப் பற்றிக் கவலைப்படாமல். நிலக்கரியையோ யுரேனியத்தையோ பயன்படுத்தி அப்படிச் செய்ய முடியாது. மல்ரிவக்கைக் கேள். என்னை நீ நம்பாவிட்டால்.'

'மல்ரிவக்கைக் கேட்க வேண்டிய அவசியம் எனக்கில்லை. அது எனக்குத் தெரியும்.'

'அப்படியானால் மல்ரிவக் எங்களுக்காகச் செய்ததை நீ செய்ய வேண்டியதில்லை,' என்றான் அடேல், அதை எரிய விட்டுக் கொண்டே. அது சரியாகவே செய்துள்ளது.'

'யார் சொன்னது இல்லையென்று. நான் சொல்வது என்ன வென்றால் சூரியன் என்றென்றும் நிலைத்து நிற்காது. அதை மட்டும் தான் நான் சொல்கிறேன். நாங்கள் பத்து பில்லியன் ஆண்டுகளுக்குப் பாதுகாப்பாக இருப்போம். அதன் பிறகு என்ன?' லூபோவ் சற்று நடுங்கும் தன் விரலை மற்றவனுக் குக் காட்டினான். 'இன்னொரு சூரியனுக்கு நாங்கள் மாறு வோம் என்று சொல்லாதே.'

கொஞ்ச நேரம் அமைதி நிலவியது. அடேல் தன் கிளாசை இடைக்கிடை உயர்த்தி உதடுகளில் வைத்தான். லூபோவின் கண்கள் மெதுவாக மூடி இளைப்பாறின.

பின் லூபோவின் கண்கள் திடீரெனத் திறந்து கொண்டன. 'எமது சூரியன் தீர்ந்து போகையில் நாங்கள் இன்னொரு சூரி யனுக்கு மாறுவோம் என்று நீ எண்ணுகிறாய், இல்லையா?'

'நான் அப்படி எண்ணவில்லை.'

'இல்லை, நிச்சயமாக அப்படித்தான் நீ சிந்திக்கிறாய். நீ தர்க் கம் செய்வதில் பலவீனமானவன். அதுதான் உன்னுடைய பிரச்சினையே. நீ அந்தக் கதையில் வரும் ஒருத்தர் போல. அதாவது, ஒருத்தர் திடீரென வந்த மழையில் அகப்பட்டுக் கொண்டார். உடனே மரங்கள் நிறைந்த காட்டுக்குள் ஓடிப் போய் ஒரு மரத்தின் கீழ் நின்றார். ஏனென்றால் ஒரு மரம் ஈர மானால் இன்னொரு மரத்தின் கீழ் நிற்கலாம் என்று நினைத் தார்.'

'எனக்குப் புரிகிறது,' என்றான் அடேல். 'சத்தம் போடாதே. ஒரு சூரியன் இல்லாமல் போனால் மற்ற நட்சத்திரங்களும் இல்லா மல் போய்விடும்.'

'சரியாகச் சொன்னாய். மற்றவையும் இல்லாமல் போய் விடும்,' என்று முணுமுணுத்தான், லூபோவ். 'அசல் அண்ட வெடிப் பில் அதற்கெல்லாம் ஓர் ஆரம்பம் இருந்தது. அது என்ன வாக இருந்தாலும். எல்லா நட்சத்திரங்களும் இல்லாமல் போனதும் அதற்கென ஒரு முடிவும் இருக்கும். சில நட்சத்தி ரங்கள் மற்றவற்றிலும் பார்க்க வேகமாக இல்லாமல் போகும். நாசமாகப் போக. மிகப் பெரும் நட்சத்திரங்கள் என்றாலும் பல மில்லியன் ஆண்டுகள் நீடிக்காது. சூரியன் பத்து பில்லி யன் ஆண்டுகள் நீடிக்கும். அவை எப்படித் திறமையானதாக இருந்தாலும் இருநூறு பில்லியன் ஆண்டுகள் நீடிக்கலாம். ஆனால் றில்லியன் ஆண்டுகளில் எல்லாமே இருண்டு விடும். என்றொபி - இயல்பாற்றல் சீர்குலைவு - உச்ச அளவிற்கு அதிகரித்துச் செல்ல வேணும். அவ்வளவுந்தான்.'

'எனக்கு என்றொபி பற்றி எல்லாம் தெரியும்,' என்றான் அடேல், தன் கண்ணியத்தை விட்டுக் கொடுக்காமல்.

'இல்லை, உனக்கு எல்லாம் தெரியும்.'

'உனக்குத் தெரிந்த அளவு எனக்கும் தெரியும்.'

'அப்போ ஒருநாள் எல்லாம் இல்லாமல் போய் விடும் என்ப தும் உனக்குத் தெரியும்.'

'சரி சரி. யார் சொன்னது அப்படியில்லை என்று.'

'நீ தான் சொன்னாய். முட்டாள். நீ தான் சொன்னாய், எங்களி டம் என்றென்றைக்கும் தேவையான அளவு ஆற்றல் இருக்கிற தென்று. என்றென்றைக்கும் தேவையான அளவு.'

இப்பொழுது மறுத்துப் பேசுவது அடேலின் தரப்பாக இருந் தது. 'எல்லாவற்றையும் திரும்பவும் ஒருநாள் கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கலாம்,' என்றான்.

'இல்லவே இல்லை.'

'ஏன் இல்லை. ஒருநாள் செய்யக் கூடியதாக இருக்கலாம்.'

'இல்லவே இல்லை.'

'அப்படியானால் மல்ரிவிக்கைக் கேள்.'

'மல்ரிவிக்கை நீ கேள். உனக்குத் தைரியம் இருந்தால். ஐந்து டொலர் தருகிறேன். அதை உன்னால் செய்ய முடியாது.'

அதைக் கேட்க அடேல் போதியளவு மது அருந்தியிருந்தான். அதேவேளை அதற்குத் தேவையான குறியீடுகளையும் கணி தச் செயற்பாடுகளையும் கேள்வியாக வார்த்தைகளில் எழுது வதற்குக் குடி மயக்கமற்ற நிலையிலும் இருந்தான். அந்தக் குறியீடுகளும் கணித செயற்பாடுகளும் இப்படியாக இருந் தன. மனிதயினம் ஒருநாள் ஆற்றலை நிகரச் செலவு செய்யா மல் இளமைப் பருவத்திலிருந்த முழுமையான வளமுடன் இருக்கும் சூரியனை மீட்டெடுக்க முடியுமா, அது வயது போய் இறந்திருந்தாலும்?

அல்லது அதை மிக எளிமையாக இப்படி எழுதலாம். அண் டத்தில், நிகர அளவுள்ள என்றொபியை எப்படிப் பெருமளவு குறைக்கலாம்?

மல்ரிவக் மிகவும் அமைதியாக இருந்தது. அதன் மெதுவாக ஒளிரும் ஒளியும் நின்றது. தூரத்தே கேட்ட சொடுக்கொலிச் சுற்றுதலும் நின்றது.

பயந்துபோன தொழில்நுட்ப வல்லுனர்கள் மேலும் சும்மாயி ருக்காமல் ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தபோது திடீரென மல்ரிவக்கில் ஒரு பகுதியில் தொடுக்கப்பட்ட மின்சா ரத் தட்டச்சுப் பொறி இயங்கத் துவங்கியது. ஐந்து வார்த்தை கள் அச்சடிக்கப்பட்டன. அர்த்தமுள்ள பதிலுக்குப் போது மான தரவு கிடைக்கவில்லை.

'பந்தயமில்லை,' என்று குசுகுசுத்தான் லூபோவ். அவர்கள்

இருவரும் அவசரம் அவசரமாக வெளியேறினார்கள்.

அடுத்த நாள் காலை இருவரும் தலையிடியுடனும் உலர்ந்த வாயுடனும் எழுந்து, நிகழ்ந்த எல்லாவற்றையும் மறந்து விட்டார்கள்.

-

ஜெறொட், ஜெறொடீன், முதலாம் இரண்டாம் ஜெறொடெற் ஆகியோர் நட்சத்திரங்கள் நிறைந்த படத்தை விசிப் பிளேற்றில் -மின்னணுத் திரையில்-பார்த்துக் கொண்டிருந்தார்கள். நட்சத்திரங்கள் மாறுவதையும் மீமிகை வெளியூடாகப் பெயர்ந்து அதன் காலமல்லாத காலக்கழிவில் நிறைவடைவதையும் பார்த்தார்கள். நட்சத்திரங்கள் தூள் தூளாகி ஒற்றைப் பிரகாசமான இறுவட்டொன்றாகுவதையும் பார்த்தார்கள். இறுவட்டு ஒரு பளிங்குக் கல்லின் அளவுள்ளதாக நோக்கும் திரையின் மையத்தில் காணப்பட்டது.

'அது எக்ஸ்-23' என்றான், ஜெறொட் நம்பிக்கையுடன். அவன் தன்னுடைய மெல்லிய கைகளைப் பின்புறத்தில் இறுக்கிப் பிடித்திருந்தான். மொளிகள் வெண்ணிறமாக மாறியிருந்தன.

சின்னஞ்சிறிய ஜெறோடெற்ஸ்கள் இருவரும் சிறுமிகள். முதன் முதலாகத் தங்கள் வாழ்க்கையில் மீமிகை வெளிப் பெயர்ச்சியைப் பார்த்து அனுபவித்திருக்கிறார்கள். உட்புறம் வெளிப்புறமாகுவதையும் பார்த்து ஒரு கணநேரம் மனவெழுச்சியையும் அடைந்திருந்தார்கள். அது அவர்களுக்குத் தன்னுணர்வையும் அளித்திருந்தது. அவர்கள் கெக்கலி கொட்டிச் சிரிப்பதை விட்டுவிட்டுத் தங்கள் தாயைச் சுற்றி ஓடிப்பிடித்து விளையாடினார்கள். ஓடும்போது, 'நாங்கள் எக்ஸ்-23-ஐ அடைந்து விட்டோம். எக்ஸ்-23-ஐ அடைந்து விட்டோம்,' என்று கூவிக் கொண்டிருந்தார்கள்.

'அமைதியாக, அமைதியாகப், பிள்ளைகளே,' என்றாள் ஜெறொடீன் கூர்மையாக. 'நிச்சயமாகத் தெரியுமா, ஜெறொட்?' என்று வினவினாள்.

'நிச்சயமில்லாமல் வேறென்ன?' என்றான் ஜெறொட், கூரைக்குச் சற்றுக் கீழேயுள்ள தனித்துவமான பண்புகள் இல்லாத, முன் தள்ளிக் கொண்டிருக்கும் உலோகத்தைப் பார்த்து விட்டு. அது அறையின் நீளவாட்டைப் பிடித்திருந்தது. இரண்டு பக்கச் சுவருக்கும் அப்பாலும் மறைந்திருந்தது. ஒரு வானூர்தி அளவு நீளம்.

அந்தத் தடித்த உலோகக் கட்டை மைக்றோவக் என்றழைக்கப்படுகிறது என்பதைத் தவிர ஜெறொட்டுக்கு அதைப் பற்றி வேறொன்றும் தெரியாது. யாராவது ஒருத்தர் அதைப்பற்றி ஏதாவது கேள்வி கேட்டாலோ, முன்கூட்டியே ஆணையிட்ட இடத்துக்கு வானூர்தியை வழிகாட்டும் வேலையை ஒருத்தர் செய்யாமல் இருந்தாலோ, பலவிதத் துணை விண்மீன் மின்நிலையங்களிலிருந்து வரும் ஆற்றல்களை ஊட்டுவது சம்பந்தமான கேள்வி கேட்டாலோ, மிகைவெளித் தாவல்களுக்கான சமன்பாடுகளைக் கணக்கிடுதல் பற்றிக் கேள்வி கேட்டாலோ எதுவுமே அவனுக்குத் தெரியாது.

ஜெறொட்டும் அவனுடைய குடும்பமும் வானூர்தியின் வசதியான குடியிருப்பில்லத்தில் தங்கி வாழுவதைத் தவிர வேறொன்றும் செய்வதில்லை. ஒருமுறை 'மைக்றோவக்'-ன் இறுதியிலிருக்கும் 'ஏசி' என்றால் பழைய ஆங்கிலத்தில் தானியங்கிக் கணினி - ஓட்டோமற்றிக் கொம்யுற்றர் - என்று ஜெறொட்டுக்கு ஒருவர் சொல்லியிருந்தார். அதைக்கூட அவன் மறந்து போகும் தறுவாயில் இருந்தான்.

ஜெறொடீனின் கண்கள் விசிப் பிளேற்றைப் பார்த்து ஈரமாகியிருந்தன. 'என்னால் அதைச் செய்யாமல் இருக்க இயலாது. பூமியை விட்டு விலகுவதை நினைக்கையில் எனக்கு அது வேடிக்கை உணர்வை ஏற்படுத்துகிறது.' என்றாள்.

'ஏன் என்று சொல், கடவுளே?' என்று ஜெறொட் கோரினான். 'எங்களுக்கு அங்கே ஒன்றுமில்லை. எக்ஸ்-23-ல் தான் எல்லாம் இருக்கும். நீ தனியாக இருக்க மாட்டாய். நீ ஒரு முன்னோடியுமல்ல. ஏற்கெனவே ஒரு மில்லியன் மக்களுக்கு மேல் இந்தக் கிரகத்தில் இருக்கிறார்கள். கடவுளே, எங்கள் பூட்டப் பிள்ளைகள் புதிய உலகங்களைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். ஏனென்றால் எக்ஸ்-23 சன நெரிசலாகிவிட்டது.' இடையில் நிறுத்திவிட்டு, 'உனக்குச் சொல்கிறேன், போட்டிகள் அதிகரிக்கும்போது விண்மீன்களிடையேயான பயணத்தைக் கணினிகள் செய்துள்ளது அதிர்ஷ்டமே.'

'ஓம், ஓம் எனக்குத் தெரியும்,' என்றான் ஜெறொடீன் பரிதாபகரமாக.

'ஜெறெடெற், எங்கள் மைக்றோவக் தான் உலகத்திலேயே சிறந்த மைக்றோவக்,' என்றேன், உடனடியாக.

'நானும் அப்படித்தான் நினைக்கிறேன்,' என்றாள் ஜெறொட், தன் கூந்தலைக் கோதி விட்டுக்கொண்டே.

மைக்றோவக் உனக்கு உரிமையானதாக இருந்தால் அது எத்துணை நல்ல உணர்ச்சியாக இருந்திருக்கும். அது ஜெறொட்டின் தலைமுறையைச் சேர்ந்தது, வேறெந்தத் தலைமுறையையும் சேர்ந்ததல்ல என்பதால் அவனுக்கு அது மகிழ்ச்சியே. அவனுடைய தந்தையின் இளமைக் காலத்தில் கணினிகள் நூறு சதுர மைல் நிலத்தை எடுக்கும் பிரமாண்டமான இயந்திரங்களாக இருந்தன. ஒரு கிரகத்திற்கு ஒரு கணினியே இருந்தது. கோளுக்குரிய ஏசி என்று அவை அழைக்கப்பட்டன. ஓராயிரம் ஆண்டாக அவை அவற்றின் அளவில் சீராக வளர்ந்து கொண்டு வந்தன. அதன் பிறகு ஒரேயடியாகத் தூய்மையாக்கம் நிகழ்ந்தது. திரிதடையத்திற்குப் பதிலாக - றான்சிஸ்றர், கருவிக்குப் பதிலாக - மூலக்கூறு அடைப்பான்கள் வந்தன. அவை மிகப் பெரிய கோளுக்குரிய ஏசியைக் கூட வெளிக்கு அனுப்பும். அவை விண்கலனில் அரைவாசிக் கனவளவேயிருக்கும்.

வழக்கம் போலத் தன் சொந்த மைக்றோவக் மற்றப் புராதனத் தொடக்கநிலை மல்ரிவக்கை விட அதிக சிக்கலானது என்பதை நினைத்தவுடன் ஜெறொட் உற்சாகமடைந்தான். புராதன தொடக்கநிலை மல்ரிவக் முதலில் சூரியனைப் பணிய வைத்தது. அது பூமியின் கோளுக்குரிய ஏசியைப் (அதுவே மிகப் பெரியது) போன்று சிக்கலானது. அதுவே மிகைவெளி பயணத்தின் பிரச்சினைகளை முதலில் தீர்த்தது. நட்சத்திரத்திற்குப் போகும் பயணங்களை இயலுமானதாக ஆக்கியது.

'பெருந்தொகையான நட்சத்திரங்களும், பெருந்தொகையான கிரகங்களும்,' என்று ஜெறொடீன் பெருமூச்செறிந்தாள். அவள் தனது சொந்த எண்ணங்களில் சுறுசுறுப்பாக இருந்

தாள். 'நாங்கள் போவது போலப் பல குடும்பங்கள் புதிய கிர கங்களுக்கு எப்பொழுதும் போய்க் கொண்டே இருப்பார்கள் என்று நினைக்கிறேன்,' என்றாள்.

'எப்பொழுதும் அல்ல,' என்றான் ஜெறொட் புன்னகைத்துக் கொண்டே. 'ஒருநாள் அவையும் நின்றுவிடும். ஆனால் அது பில்லியன் கணக்கான ஆண்டுகளின் பின். பல பில்லியன் ஆண்டுகளின் பின். நட்சத்திரங்கள் கூடக் குறைந்துவிடும். உனக்குத் தெரியும். என்றொபி கட்டாயம் அதிகரிக்கப்பட வேண்டும்.'

'அப்பா, என்றொபி என்றால் என்ன ?' என்று கேட்டாள் இரண் டாம் ஜெறொடெற்.

'என்றொபி என்றால் கண்ணே, அது சும்மாவொரு சொல். அதன் பொருள் அண்டம் குறைந்து கொண்டே போவது என் பதாகும். எல்லாமே குறைந்து கொண்டே தான் போகும் என் பது உனக்குத் தெரியும். உன்னுடைய நடைபேசி எந்திரன் போல. நினைவிருக்கிறதா ?'

'இன்னொரு புதிய மின் அலகைப் பொருத்த முடியாதா ? என் னுடைய எந்திரனுக்குப் பொருத்தியது போல.'

'நட்சத்திரங்கள்தான் மின் அலகுகள், கண்ணே. அவை போய் விட்டால் அங்கே இனிமேல் மின் அலகுகள் இல்லை.'

முதலாம் ஜேறொடெற் உடனே ஊளையிட்டாள். 'அப்பா, அவற்றை அழிய விடாதே. நட்சத்திரங்களை அழியவிடாதே.'

'இப்போ நீங்கள் என்ன செய்தீர்கள் என்று பார்த்தீர்களா ?' ஜெறொடீன் முணுமுணுத்தாள், கடும் எரிச்சலடைந்து.

'எனக்கு எப்படித் தெரியும், அவற்றை அது பயமுறுத்தும் என்று ?' ஜெறொட் திரும்ப முணுமுணுத்தான்.

'மைக்றோவைக்கைக் கேளுங்கள்,' என்று முதலாம் ஜெறொ-டெற் புலம்பினாள். 'அதைக் கேள், எப்படி நட்சத்திரங்க ளைத் திரும்பவும் இயங்கச் செய்வது என்று ?'

'போய்க் கேள்,' என்றாள் ஜெறொடீன். 'அது அவற்றை அமை தியாக்கிவிடும்.' (இரண்டாம் ஜெறோடெற்றும் அழத் துவங்கி னாள்.)

ஜேறொட் தோள்களைக் குலுக்கி அலட்சியத்தை வெளிப்ப டுத்தினாள். 'இப்போ, இனியவர்களே. நான் மைக்றோவைக் கைக் கேட்கிறேன். கவலைப்படாதீர்கள், அது சொல்லும்.'

அவன் மைக்றோவைக்கைக் கேட்டான். விரைவாகப், 'பதிலை அச்சிட்டுத் தா,' என்றும் கேட்டான்.

ஜெறொட் மெல்லிய செல்லுஃபில்மை கைக்குள் பொத்திப் பிடித்துக் கொண்டு, 'பார், நேரம் வரும்போது மைக்றோவக் தான் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளும் என்று சொல் கிறது. ஆகவே அதைப்பற்றிக் கவலைப்படாதே.'

ஜெறொடீன் சொன்னான், 'பிள்ளைகளே, இப்போ படுக்கைக் குப் போகும் நேரம் இது. நாங்கள் எங்கள் வீட்டிற்கு விரைவா கச் செல்வோம்.'



ஐசக் அசிமோவ் 1920-1992. அமெரிக்க எழுத்தா ளரும் விஞ்ஞானியுமாவார். விஞ்ஞானப் புனைவு கள், பொது விஞ்ஞானக் கட்டுரைகள் எழுதிய புகழ் பெற்ற மூன்று எழுத்தாளர்களில் இவரும் ஒருவர். மற்றவர்கள் றொபெட் ஹைலெயனும் ஆதர் சி கிளாக்கும். பொஸ்ரன் பல்கலைக்கழ கத்தில் உயிர் வேதியியலில் பேராசிரியராக இருந்தார். 40 நாவல்கள், 383 சிறுகதைகள், 280 அபுனைவு நூல்கள் என்று ஐநூறுக்கும் மேற்பட்ட நூல்களையும் 90,000 கடி தங்களையும் எழுதியுள்ளார். மர்மக் கதைகள், அபுனைவுகள், வெகுஜன விஞ்ஞானக் கதைகள், வரலாற்று நூல்கள் என்று பலவற்றை எழுதியுள்ளார். மேலேயுள்ள கதை அவருக்குப் பிடித்த கதை என்று சொல்லியிருக்கிறார். அவருடைய Nightfall என்ற குறுநாவல் 1964-ல் எக்காலத்திலுமே எழுதப்பட்ட மிகச் சிறந்த விஞ்ஞானப் புனைவு என்று அமெரிக்காவின் விஞ்ஞானப் புனைவெழுத்தாளர்களால் வாக்களிக்கப்பட்டு நிறைவேற்றப்பட் டது. Foundation series என்ற விஞ்ஞானப் புனைவுகள் தொடர் நூல்களுக்கு 1966-ல் Hugh Award கிடைத்தது. Galactic Empire, Robot series என்பவை இன்னும் சில தொடர்கள்.

ஐசக் அசிமோவின் குடும்பம் அவர் மூன்று வயதுக் குழந்தையாக இருந்தபோது ரஷியாவிலிருந்து அமெரிக்காவிற்குக் குடிபெயர்ந்தது. அசிமோவ் பிரிட்டிஷ் மொழி பேசும் யூத இனத்தைச் சேர்ந்தவர்.

ஐசக் அசிமோவ் தன் பாத்திர வார்ப்பை விரிவாகச் செய்வ தில்லை என்ற விமர்சனம் அவரில் உள்ளது. இரண்டு மூன்று சொற்களிலே பாத்திரங்கள் சொல்லப்பட்டுவிடும்.

அவரின் பெயர், asteroid 5020 அசிமோவ், செவ்வாய்க் கிரகத் தில் ஒரு எரிமலை வாய், ப்றூக்லின் ஆரம்ப பாடசாலை போன்ற வற்றிற்கு இடப்பட்டுள்ளது.

ஜேறொட் செல்லுஃபில்மில் இருந்த வார்த்தைகளைத் திரும் பவும் வாசித்தான். அதை அழித்து விடுவதற்கு முன். 'அர்த்த முள்ள பதிலுக்குப் போதுமான தரவில்லை,' என்று அது சொன்னது.

அவன் தோள்களைக் குலுக்கிவிட்டு விசிப் பிளேற்றைப் பார்த்தான். எக்ஸ்-23 முன்னால் இருந்தது.

-

லாமெத்தின் விஜே-23 எக்ஸ் முப்பரிமாண, நட்சத்திர மண்ட லத்தின் சிறிய அளவிலான வரைபடத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த பின் சொன்னது, 'இந்த விஷயத்தில் அத் தனை அக்கறை காட்டுகிறோம் என்பதால், நாங்கள் அத் தனை நகைப்புக்கிடமானவர்களா ?'

நிக்றோனின் எம்கியூ-17 ஜே தன் தலையை ஆட்டியது. 'அப் படி நான் நினைக்கவில்லை. நட்சத்திர மண்டலம் இந்த வேகத்தில் விரிவடைந்தால் ஐந்து ஆண்டுகளில் அது நிரம்பி விடும் என்பது உனக்குத் தெரியும்.'

அவர்கள் இருவரும் இருபது வயது ஆரம்பத்தில் இருந்தார் கள். இருவரும் உயரமானவர்கள். கச்சிதமான உருவமும் உடையவர்கள்.

‘இருந்தும், வான்மண்டல மன்றத்தின் அவநம்பிக்கையான அறிக்கைக்கு நான் பணியத் தயங்குகிறேன்.’

‘நான் வேறெந்த அறிக்கையும் எடுத்துக்கொள்ள மாட்டேன். அவர்களை அதற்கெதிராகக் கொஞ்சம் தூண்டி விட வேண்டும்.’

விஜே-23 எக்ஸ் பெருமூச்செறிந்தது. வெளி எல்லையற்றது. ஒரு நூறு பில்லியன் வான்மண்டலங்கள் அங்கே உள்ளன. அதிலும் பார்க்க அதிகமும் உள்ளது.’

‘ஒரு நூறு பில்லியன் என்றால் அது எல்லையற்றதல்ல. எந்நேரமும் அது குறைவான எல்லையற்றதாகி வருகிறது. யோசித்துப் பார்! இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மனிதயினம் முதன் முதலில் விண்மீன் ஆற்றலைப் பயன்படுத்தும் பிரச்சினையைத் தீர்க்கத் துவங்கியது. சில நூற்றாண்டுகளின் பின்னர் தான் விண்மீன்களிடையேயான பயணம் சாத்தியமாகியது. மனிதயினத்துக்கு ஒரு மில்லியன் ஆண்டுகள் சென்றது ஒரு சிறிய உலகத்தை நிரப்புவதற்கு. அதன் பின்னர் பதினைந்தாயிரம் ஆண்டுகள் சென்றன வான்மண்டலத்தின் பிற பகுதிகளை நிரப்புவதற்கு. இப்போது சனத்தொகை ஒவ்வொரு பத்து ஆண்டும் இரண்டு மடங்காகப் பெருகுகிறது.

விஜே-23 எக்ஸ் குறுக்கிட்டது. ‘அதற்கு நாங்கள் அழியாத் தன்மைக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.’

‘மிகவும் சரி. அழியாத் தன்மை இருக்கிறது. அதை நாங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கு இழிவான ஒரு பக்கமும் உள்ளது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். விண்மீன் மண்டலம் சார்ந்த ஏசி பல பிரச்சினைகளை எங்களுக்குத் தீர்த்துள்ளது. ஆனால் முதுமையையும் சாவையும் தடுக்கும் பிரச்சினையைத் தீர்க்கும்போது அது பிற தீர்வுகள் அத்தனையையும் செய்யாமல் விட்டுவிட்டன.’

‘இருந்தும் வாழ்க்கையை கைவிட நீ விரும்ப மாட்டாய் என்றுதான் நான் நினைக்கிறேன்.’

‘இல்லவே இல்லை,’ என்று எம்கியூ-17 ஜே திடீரென உரத்துச் சத்தமிட்டுப் பின் உடனே குரல் தணிந்து, ‘இன்னும் இல்லை. எனக்கு அத்தனை வயதில்லை. உனக்கு எத்தனை வயது?’

‘இருநூற்றி இருபத்து மூன்று. உனக்கு?’

‘நான் இன்னும் இருநூறுக்கும் கீழே தான். ஆனால் மீண்டும் என் கருத்துக்கு வருவோம். சனத்தொகை ஒவ்வொரு பத்தாண்டுகளும் இரண்டு மடங்காகிறது. இந்த வான் மண்டலம் நிரம்பியவுடன் இன்னொரு வான் மண்டலம் இன்னும் பத்து ஆண்டுகளில் நிரம்பி விடும். மேலும் பத்தாண்டுகளில் மேலும் இரண்டு நிரம்பி விடும். மேலும் ஒரு பத்தாண்டில் நாலு நிரம்பிவிடும். ஒரு நூறு ஆண்டுகளில் ஓராயிரம் வான் மண்டலங்களை நாங்கள் நிரப்பி விடுவோம். பத்தாயிரம் ஆண்டுகளில் எமக்குத் தெரிந்த அண்டங்களெல்லாம் நிரம்பிவிடும். அதன் பிறகென்ன?’

மிக நல்லதொரு கருத்து. ஏற்கெனவே மனித இனம் இரண்டு சூரிய ஆற்றல் அலகுகளை நுகர்கிறது.’

விஜே-23 எக்ஸ் சொன்னது, ‘இன்னொரு பக்கத்தில் போக்குவரத்துப் பிரச்சினை வந்துவிடும். எத்தனை சூரிய ஆற்றல் அலகுகள் வான் மண்டலங்களிலிருந்து இன்னொரு மண்டலத்திற்குச் செல்லத் தேவை?’

‘நூறு வீத வினைத்திறனுடன் நாங்கள் எங்கள் முடிவைத் தள்ளி வைக்கிறோம். எங்கள் ஆற்றலின் தேவைகள் எமது சனத்தொகையிலும் பார்க்க வேகமாகப் பெருக்குத் தொடராக உயர்ந்து கொண்டு செல்கின்றது. நாங்கள் வான் மண்டலத்தை இழப்பதிலும் பார்க்க வேகமாக ஆற்றலை இழந்து விடுவோம். அது நல்லதொரு கருத்து. மிக நல்ல கருத்து.’

‘விண்மீன்களிடையேயுள்ள வாயுவிலிருந்து புதிய நட்சத்திரங்களை நாங்கள் வடிவமைக்க வேண்டும்.’

‘அல்லது வெப்பச் சிதறலிலிருந்து எடுக்க வேண்டுமா?’ என்று எம்கியூ-17 ஜே கேட்டது, கிண்டலாக.

‘என்றோபியைத் தலைகீழாக மாற்றுவதற்கு ஏதாவது வழி இருக்க வேண்டும். அதற்கு நாங்கள் வான் மண்டல ஏசியைக் கேட்க வேண்டும்.’

விஜே-23 எக்ஸ் உண்மையில் இன்னும் அதில் தீவிரம் காட்டவில்லை. ஆனால் எம்கியூ-17 ஜே ஏசி இணைப்பைத் தன் பைக்குள்ளிருந்து இழுத்தெடுத்துத் தனக்கு முன்னாலுள்ள மேசையில் வைத்தது.

‘எனக்கு அதில் அரைமனம். ஒருநாள் இந்த மனிதயினம் அதற்கு முகம் கொடுக்க வேண்டி வரும்,’ என்றான்.

அவன் தனது சிறிய ஏசி இணைப்பைக் கிளர்ச்சியற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அது இரண்டு அங்குல கனசதுர அளவு மட்டுமேயுள்ளது. தன்னளவில் அது ஒன்றுமில்லை. ஆனால் அது மீமிகைவெளி ஊடாகப் பெரிய வான் மண்டல ஏசியுடன் தொடுக்கப்பட்டுள்ளது. அது மனிதயினம் முழுவதற்கும் சேவை செய்தது. மீமிகை வெளியைப் பொறுத்தளவில் அது வான்மண்டல ஏசியின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியே.

எம்கியூ-17 ஜே தன் அழியாத வாழ்க்கையில் ஒருநாள் வான் மண்டல ஏசியைப் பார்க்க இயலுமா என்று யோசித்தது. அது தனது சிறிய உலகத்தில் உறைந்திருந்தது. சிலந்தி வலை போன்ற விசைக் கற்றைகள் பொருளைப் பிடித்து வைத்திருந்தன. அதற்குள் பழைய அருவருப்பான மூலக்கூறு அடைப்பான்களின் இடத்தில் துணை மீசான்கள் எழுச்சி பெறுகின்றன. இருந்தும் துணை ஈதர் செயற்பாடுகள் இருந்தும் வான் மண்டல ஏசி குறுக்காக ஆயிரம் அடிகள் நீளம் இருக்கும்.

எம்கியூ-17 ஜே தன் ஏசி இணைப்பைத் திடீரெனக் கேட்டது, ‘என்றொபியை எப்போதாவது தலைகீழாக மாற்ற முடியுமா?’

விஜே-23 எக்ஸ் திடுக்கிட்டது போலத் தோன்றியது. பின் சொன்னது, ‘ஓ, நீ அப்படிக் கேட்பாய் என்று நான் உண்மையில் நினைக்கவில்லை.’

‘ஏன் அப்படி நினைத்தாய்?’

‘என்றொபியைத் தலைகீழாக்க முடியாதென்று எங்கள் இருவருக்கும் தெரியும். புகையையும் சாம்பலையும் திரும்பவும் மர

மாக்க முடியாது என்று உனக்குத் தெரியும்.'

'உன்னுடைய உலகத்தில் மரங்கள் நிற்கின்றனவா?' என்று எம்கியூ-17 ஜே கேட்டது.

வான் மண்டல ஏசியின் ஒலி அவர்களைத் திடுக்குறச் செய்து அமைதியாக்கியது. மேசையின் மேலிருந்து வந்த சிறிய ஏசி இணைப்பின் குரல் மெலிந்தும் அழகாகவும் கேட்டது. அது இப்படிச் சொல்லியது. 'அர்த்தமுள்ள பதிலுக்குப் போதுமான தரவில்லை.'

விஜே-23 எக்ஸ், 'பார்!' என்று சொன்னது.

அண்டம் சார் சபைக்கு அளிக்க வேண்டிய கேள்விக்கான அறிக்கையின் மீது அவர்கள் இருவரின் கவனமும் திரும்பி யது. ஷீ பிறைமுடைய மனம் புதிய நட்சத்திர மண்டலம்வரை பரந்தது. அதை இயக்கிய எண்ணற்ற நட்சத்திரங்களின் வளைவுகளில் அதற்குச் சாதாரணமான ஆர்வமும் இருந்தது. அவன் இதற்கு முன்னர் ஒருபோதுமே அதைப் பார்த்த தில்லை. இனிமேலும் அவன் அவற்றைப் பார்ப்பானா? இப் படி எத்தனையோ. ஒவ்வொன்றுக்குள்ளும் பெரும் தொகை யான மனிதயினம். ஆனால் அந்தப் பெருந்தொகை ஏறக்கு றையப் பெரும் எடையாகவுமிருந்தது. மேலும் மேலும் உண் மையான மனிதரின் சாராம்சத்தை இங்கே இதோ இருக்கும் வெளியில் தான் பார்க்க வேண்டியிருந்தது.

மனம், உடல்கள் அல்ல! அழியாத உடல்கள் கிரகங்களில் அங்கேயே தங்கிக்கிடந்தன. யுகங்கள் யுகங்களாகத் தொங் கிக் கொண்டிருந்தன. சிலவேளைகளில் அவை மூலப்பொ ருட்களுக்காக எழுப்பப்பட்டன. ஆனால் அவையும் இப்பொ ழுது மிகவும் அருமையாகவே நடைபெறுகின்றது. நம்ப முடி யாத அளவுள்ள பெருங்கூட்டத்தில் இணைவதற்காகச் சில புதிய தனிநபர்கள் உருவாகினார்கள். ஆனால் அதில் என்ன பொருள்? அண்டத்தில் புதிய தனிநபர்களுக்குச் சிறிய இட மேயுள்ளது.

இன்னொரு மனதின் மெல்லிய இழைகளைக் கண்டடைந்த போது ஷீ பிறைம் அவன் பகற்கனவு காண்பதிலிருந்து விழித் தெழ வைத்தார்கள்.

'என் பெயர் ஷீ பிறைம்,' என்றான் அவன். 'உன்னுடைய பெயர் என்ன?' என்று கேட்டான்.

'டீ சப் வுண். உன் வான் மண்டலம் எது?'

'நாங்கள் அதை வான்மண்டலம் என்று மட்டுந்தான் அழைப் போம். உன் மண்டலம் எது?'

'நாங்களும் அப்படித்தான் அழைப்போம். எல்லா மனிதர்க ளும் தங்கள் வான்மண்டலத்தை வான்மண்டலம் என்று தான் அழைக்கிறார்கள். அதைவிட வேறொன்றுமில்லை. ஏன் இல்லை?'

'உண்மை. ஏனென்றால் எல்லா வான்மண்டலங்களும் ஒன்றே.'

'எல்லா வான்மண்டலங்களும் அல்ல. ஒரு குறிப்பிட்ட வான் மண்டலத்தில் மனிதயினம் தோன்றியிருக்க வேண்டும். அது அதை வித்தியாசப்படுத்தியிருக்கும்.'

ஷீ பிறைம், 'எந்த வான்மண்டலத்தில்?' என்று கேட்டான்.

'என்னால் சொல்ல முடியாது. உலகளாவிய ஏசிக்குத் தெரிந் திருக்கும்.'

'நாங்கள் அவனைக் கேட்போமா? அதை அறிய எனக்குச் சடுதியாக ஓர் ஆர்வம் வந்துள்ளது.'

வான்மண்டலங்கள் சுருங்கி மிகப் பெரிய பின்னணியில் தூளாகப் பரவிப் புதியதொன்றாக வரும்வரை ஷீ பிறைம்மின் புலனுணர்வுகள் விரிவடைந்தன. எத்தனையோ பில்லியன் கணக்கானவை வான்மண்டலங்கள். எல்லாவற்றிலும் அழி யாத இனங்கள். எல்லோரும் பெரும் அறிவுகளைச் சுமந்து வந்திருந்தார்கள். அவற்றின் மனங்கள் வெளியில் சுதந்திர மாக மிதந்து கொண்டிருந்தன. இருந்தும் அவற்றிலொன்று தனித்தன்மை வாய்ந்தது. அவற்றிலொன்று அசல் வான்மண்ட லத்திலிருந்து வந்தது. அவற்றிலொன்றில், அதன் தெளிவற்ற கடந்த காலத்தில், ஒரு வான்மண்டலத்தில் மட்டுந்தான் மனி தர் வசிக்கத் துவங்கினார்.

வான்மண்டலத்தைப் பார்க்க ஷீ பிறைம் மிகவும் ஆர்வப் பட்டு, 'உலகளாவிய ஏசியே! எந்த வான்மண்டலத்தில் மனித யினம் பிறந்தது?' என்று கேட்டான்.

உலகளாவிய ஏசிக்கு அது கேட்டது. ஏனெனில் ஒவ்வொரு உலகத்திலும் எல்லா வெளியிலும் அதன் ஏற்பிகள் கேட்கத் தயாராக இருந்தன. ஒவ்வொரு ஏற்பியும் மீமிகைவெளி ஊடாக ஏதோவொரு தெரியாத புள்ளிக்கு வழி நடத்தப்பட் டது. அங்கே உலகளாவிய ஏசியும் தன்னைத் தனியாக வைத் திருந்தது.

ஷீ பிறைமுக்கு ஒரு மனிதரை மட்டுந்தான் தெரியும். அவரு டைய சிந்தனைகள் உலகளாவிய ஏசியின் தூரத்தை உணர் தல்வரை ஊடறுத்திருந்தன. அவர் ஒளிரும் பூகோளத்தை மட் டுந்தான் அறிவித்தார். அந்தப் பூகோளம் குறுக்காக இரண் டடி மட்டுந்தான். அதைப் பார்ப்பதும் அரிது.

'ஆனால் அவை எல்லாம் எப்படி உலகளாவிய ஏசி ஆகும்?' என்று ஷீ பிறைம் கேட்டான்.

'அவற்றில் பல மீமிகைவெளி அந்த உருவில் அங்கு இருப் பதை என்னால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது,' என்பதுதான் பதில்.

எந்த மனிதராலும் பார்க்க முடியாது. ஏனென்றால் அந்த நாள் போய் பல காலமாகி விட்டது. எந்த மனிதருக்கும் உலகளா விய ஏசியை உருவாக்குவதில் பங்கிருந்தால் அது ஷீ பிறை முக்குத் தெரிந்திருக்கும். ஒவ்வொரு உலகளாவிய ஏசியும் அதன் வாரிசை வடிவமைத்துக் கட்டமைத்துள்ளது. ஒவ் வொன்றும் மில்லியன் கணக்கான ஆண்டுகளோ அதற்கு மேலோ வாழ்ந்தபோது தேவையான அளவுத் தரவுகளைத் திரட்டியுள்ளது. மிகவும் சிக்கலான, அதிக திறன் கொண்ட வாரிசை மேலும் உருவாக்க முயன்றுள்ளது. அதில் தன் சொந்தத் தரவு சேமிப்பும் தனித்துவமும் அதற்குள் மூழ்கியி ருக்கும்.

உலகளாவிய ஏசி ஷீ பிறைமின் அலைபாயும் சிந்தனையைக் குறுக்கிட்டுத் தடுத்தது. வார்த்தைகளால் அல்ல, வழிகாட்டுத லால். ஷீ பிறைமின் மனப்போக்கைக் கடல் போன்ற விண்மீன் திரள்களுக்குள் வழிப்படுத்தியது. அதில் குறிப்பிட்ட ஒன்று நட்சத்திரங்களாகப் பெரிதாக்கப்பட்டிருந்தது.

அப்போது எல்லையற்ற தொலைவில், ஆனால் எல்லையற் றுத் தெளிவாக ஒரு சிந்தனை உதித்தது. 'இதுவே மனிதரின் அசல் வான்மண்டலம்.'

இருந்தாலும் அது மற்றவற்றைப் போன்ற ஒன்றுதான். லீ பிறைம் தன் ஏமாற்றத்தை வெளிப்படுத்தாமல் இருந்தான்.

டீ சப் வுண் இன் மனம் மற்றவனுடன் சேர்ந்து, திடீரென, 'இந்த நட்சத்திரங்களில் ஒன்று மனிதரின் அசல் நட்சத்திரம் அல் லவா ?' என்று கேட்டது.

உலகளாவிய ஏசி, 'மனிதரின் அசல் நட்சத்திரம் நோவாவாகப் போய்விட்டது. அதுவொரு வெண்ணிறக் குள்ளன்' என்றது.

'அதிலிருந்த மனிதர்களும் இறந்து விட்டார்களா ?' என்று லீ பிறைம் கேட்டான், திடுக்கிட்டுப் போய் சிந்திக்காமல்.

உலகளாவிய ஏசி சொன்னது. 'ஒரு புதிய உலகம், அது போன்ற சந்தர்ப்பங்களில் அவற்றின் பௌதீக உடல்களுக் காக காலத்தில் உருவாக்கப்பட்டது.'

'ஓம், அப்படித்தான்,' என்றான் ஷீ பிறைம். இருந்தாலும் ஓர் இழப்புணர்வு அவனை ஆட்கொண்டது. அவனுடைய மனம் அசல் வான்மண்டல மனிதரைத் தன் பிடியிலிருந்து கை விட் டுவிட்டது. பின் திரும்ப இயங்கி, மங்கலான சிறு புள்ளிகளில் தன்னை இழந்து விட்டது. அவன் அதைத் திரும்பவும் பார்க்க விரும்பவில்லை.

டீ சப் வுண், 'என்ன பிழை,' என்றான்.

'நட்சத்திரங்கள் சாகின்றன. மூல முதலான நட்சத்திரம் இறந் துவிட்டது.'

'அவையெல்லாம் கட்டாயம் இறக்கத்தானே வேண்டும். ஏன் இறக்கக் கூடாது ?

'ஆனால் எல்லா ஆற்றலும் போன பின் எங்கள் உடல்கள் இறுதியில் இறக்கும். அவற்றுடன் நானும் நீயும் இறப்போம்.'

'அது நடக்க பில்லியன் ஆண்டுகள் செல்லும்.'

'பில்லியன் ஆண்டுகளுக்குப் பின்னாலும் அது நிகழ நான் விரும்பவில்லை. உலகளாவிய ஏசி! எத்தனை நட்சத்திரங் களை இறப்பதிலிருந்து பாதுகாத்து வைத்திருக்க வேண்டும்.'

டீ சப் வுண் வேடிக்கையாகச் சொன்னான். 'எப்படி என்றொபி யின் திசையைத் தலைகீழாக மாற்றலாம் என்று நீ கேட்கிறாய்.'

உலகளாவிய யுனிவேசல் ஏசி பதில் சொன்னது, 'அர்த்த முள்ள பதிலுக்கு இன்னும் போதியளவு தரவு கிடைக்க வில்லை.'

ஷீ பிறைமின் சிந்தனைகள் தன் சொந்த வான் மண்டலத் திற்கு பறந்துவிட்டன. டீ சப் வுண்ணைப் பற்றி மேலும் அவன் சிந்திக்கவில்லை. அவனுடைய உடல் ஒரு வான் மண்டலத் தில் ஒரு றில்லியன் ஆண்டுகளுக்கு அப்பால் காத்துக் கொண்டிருக்கலாம். அல்லது ஷீ பிறைமின் சொந்த நட்சத்தி ரத்திற்குப் பக்கத்திலுள்ள வான் மண்டலத்தில் காத்திருக்க லாம். எதுவாயிருந்தாலும் பரவாயில்லை.

மகிழ்ச்சியற்று ஷீ பிறைம் விண்மீன்களிடையேயுள்ள ஹைட்ர ஜினைச் சேகரிக்க வெளிக்கிட்டான். அதைக் கொண்டு தனக் கான ஒரு சிறிய நட்சத்திரத்தை உருவாக்க விரும்பினான். நட் சத்திரங்கள் ஒருநாள் இறந்தால் குறைந்தது இன்னும் சில வற்றை உருவாக்கலாம்.

மனிதன் தனக்குள் சிந்தித்தான். ஒருவகையில் மனிதன் மனத ளவில் ஒன்று தான். அவன் தனக்குள் றில்லியன், றில்லியன் றில்லியன்கள் என்று முடிவற்ற உடல்களை உள்ளடக்கி இருக்கிறான். ஒவ்வொன்றும் அதன் அதன் இடத்தில் இருக்கி றது. ஒவ்வொன்றும் அமைதியாகவும் அழியாமலும் ஓய்வாக வுள்ளது. கச்சிதமான தானியங்கிகளால் பராமரிக்கப்படுகின் றன. அவையும் அதேபோல அழியாதவை. அதேவேளை எல்லா உடல்களின் மனங்களும் சுதந்திரமாக ஒன்றிற்குள் ஒன்று பிரித்தறிய முடியாதபடி உருகியுள்ளன.

மனிதன் சொன்னான், 'அண்டம் இறந்து கொண்டிருக்கிறது.'

மனிதன் வான்மண்டலங்கள் மங்கி வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஆற்றலை விரயம் செய்த பிரமாண்டமான நட்சத்திரங்கள் எப்போதோ போய்விட்டன. மங்கிப் போன கடந்த காலத்துக்கும் அப்பால் கடந்த காலத்திற்குள் மறைந் துவிட்டன. ஏறக்குறைய எல்லா நட்சத்திரங்களும் ஒரு காலத் தில் வெண்ணிறக் குள்ளர்கள். முடிவில் மங்கிவிடுகின்றன.

புதிய நட்சத்திரங்களிடையேயுள்ள தூசிகளிலிருந்து அவை உருவாக்கப்பட்டன. சில இயற்கையான முறையில். மனிதர்க ளால் சில. அவையும் மறைந்து கொண்டிருக்கின்றன. வெண் ணிறக் குள்ளர்கள் இதுவரை ஒன்றாக உடைந்து விழ வில்லை. அப்படிப் பலமான ஆற்றல்களிலிருந்து வெளியேறி யவையிலிருந்து புதிய நட்சத்திரங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் ஒவ்வொரு ஆயிரம் வெண்ணிறக் குள்ளர்களிலும் ஒரு நட்சத்திரம் மட்டுமே அழிக்கப்பட்டது. அவையும் முடி வுக்குவரும்.

மனிதன் சொன்னான், 'அண்ட ஏசி நெறிப்படுத்தியபடி கவன மாக உபயோகித்தால் அண்டத்தில் இன்னும் மிச்சமிருக்கிற ஆற்றல் இன்னும் பல பில்லியன் ஆண்டுகளுக்கு நின்று பிடிக்கும்.'

'அப்படியிருந்தும், முடிவில் அதுவும் ஒரு முடிவுக்கு வரும். அதைக் கவனமாக உபயோகித்தாலும், எப்படி அதை நீட்டி னாலும், ஒருமுறை செலவழித்த ஆற்றல் போய்விடும். அதைத் திரும்பவும் மீட்டெடுக்க முடியாது. என்றொபி என் றென்றும் அதிகபட்ச அளவுக்கு அதிகரிக்கப்பட வேண்டும்,' என்றான் மனிதன்.

மனிதன், 'என்றொபியைத் திரும்பவும் பெற முடியாதா ? அண்ட ஏசியைக் கேட்போம்,' என்றான்.

அண்ட ஏசி, எத்தனை என்றொபியைத் திரும்பவும் பெற முடியும்?' என்று மனிதன் கேட்டான்.

அண்ட ஏசி அவற்றைச் சுற்றி வளைத்தது. வெளியிலல்ல. அதன் எந்தவொரு சிறு பகுதியும் கூட வெளியிலில்லை. அது மீமிகைவெளியில் தான் உள்ளது. அது எந்தவொரு பொருளாலோ ஆற்றலாலோ உருவாக்கப்படவில்லை. அதன் அளவு அல்லது அது எப்படிப்பட்டது என்பதற்கான கேள்விக்கு மனிதனால் புரியக்கூடிய மொழியில் பதிலில்லை.

அண்ட ஏசி சொன்னது, 'அர்த்தமுள்ள விடை தர இன்னும் போதுமான தரவுகள் இல்லை.'

மனிதன் சொன்னான், 'இன்னும் கூடுதல் தரவுகளைச் சேகரி.'

அண்ட ஏசி சொன்னது, 'அப்படிச் செய்வேன். அப்படிப் பல நூறு பில்லியன் ஆண்டுகளாகச் செய்து வருகிறேன். எனக்கு முன்னிருந்தோரையும் என்னையும் இந்தக் கேள்வியைப் பல முறை கேட்டார்கள். என்னிடமுள்ள எல்லாத் தரவுகளும் இன்னும் போதுமானதாக இல்லை.'

மனிதன் சொன்னான், 'போதுமான அளவு தரவுகள் கிடைக்கும் காலம் ஒருநாள் வருமா? அல்லது இந்தப் பிரச்சினையைச் சாத்தியமான எந்தக் காலத்திலும் தீர்க்க முடியாதா?'

அண்ட ஏசி சொன்னது, 'சாத்தியமான எல்லாக் காலத்திலும் தீர்க்க முடியாத பிரச்சினைகள் என்று ஒன்று இருக்க முடியாது.'

மனிதன் சொன்னான், 'அந்தக் கேள்விக்கு விடை சொல்லப் போதுமான அளவு தரவு எப்போது கிடைக்கும்?'

அண்ட ஏசி சொன்னது, 'அர்த்தமுள்ள விடை தர இன்னும் போதுமான தரவுகள் இல்லை.'

'அது கிடைப்பதற்கு உன்னால் மேலும் வேலை செய்து கொண்டிருக்க முடியுமா?' என்றான் மனிதன்.

அண்ட ஏசி சொன்னது, 'ஓம், வேலை செய்வேன்.'

மனிதன் சொன்னான், 'இன்னும் கொஞ்சம் காத்திருப்போம்.'

-

நட்சத்திரங்களும் வான்மண்டலங்களும் இறந்து போய் அழிந்து போயின. வெளி, பத்து றில்லியன் ஆண்டுகள் அழியத் துவங்கி இருண்டு போனது.

மனிதர் ஒவ்வொருத்தராக ஏசியுடன் உருகிக் கலந்து போனார். ஒவ்வொரு பௌதீக உடலும் அதன் மன அடையாளத்தை ஏதோ ஒருவகையில் இழக்காமல் ஈட்டி வந்தது.

மனிதரின் கடைசி மனம் உருகிக் கலப்பதற்கு முன் தயங்கி, வெளியின் மேல் பார்த்தது. அது கடைசி இருண்ட நட்சத்திரத்தின் கழிவுகளையும் உள்ளடக்கியிருந்தது. அவற்றைத் தவிர வேறொன்றையும் அது அடக்கியிருக்கவில்லை. ஆனால் நம்பமுடியாதளவு மெல்லிய பொருள் ஒன்றை வைத்திருந்தது. அந்தப் பொருள் வெப்பத்தின் கடைசித் துளிகளால் சீரற்ற முறையில் கிளர்ந்தெழுந்து தேய்ந்து போய் அணுக்கோடாகி முழுமையான பூஜ்ஜியமாகிக் கொண்டிருந்தது.

மனிதன் சொன்னான், 'ஏசி, அதுதான் முடிவா? இந்தப் பெருங்குழப்பத்தை அண்டமாகத் தலைகீழாகத் திரும்பவும் மாற்ற முடியுமா? அதைச் செய்ய முடியாதா?'

ஏசி சொன்னது, 'அர்த்தமுள்ள விடை தர இன்னும் போதுமான தரவுகள் இல்லை.'

மனிதரின் கடைசி மனம் உருகிக் கலந்தது. ஏசி மட்டும் வாழ்ந்தது. அதாவது மீமிகைவெளியில்.

பொருளும் ஆற்றலும் முடிவுக்கு வந்தன. அவற்றுடன் வெளியும் காலமும். ஏசி கூடக் கடைசிக் கேள்விக்காக மட்டும் வாழ்ந்தது. அந்தக் கேள்விக்குக் காலத்திலிருந்து ஒருபோதுமே பதில் சொல்லவில்லை. ஓரளவு மது அருந்திய கணினித் தொழில்நுட்பவியலாளன் பத்து றில்லியன் ஆண்டுகளுக்கு முன் கேட்ட கேள்வி அது. அவன் கணினியிடம் அதைக் கேட்டான். அது ஏசியைக் கேட்டது. மனிதன் மனிதனைக் கேட்டதிலும் பார்க்க அது குறைவானதே.

பிற கேள்விகள் எல்லாவற்றுக்கும் பதில் சொல்லியாயிற்று. இந்தக் கடைசிக் கேள்விக்குப் பதில் சொல்லும்வரை, ஏசி தன் பிரக்ஞையை இழக்காமல் இருக்கலாம்.

சேகரித்த எல்லாத் தரவுகளையும் மேலும் முழுமையாகத் தொடர்புறுத்திச் சாத்தியமான எல்லா உறவுகளுடனும் சேர்த்து வைக்க வேண்டும்.

அதைச் செய்வதற்குக் காலமில்லாத இடைவேளை செலவிடப்பட்டது.

என்றொபியின் திசையைத் தலைகீழாக்குவது எப்படி என்பதை ஏசி கற்றுக் கொண்டது. அதுவும் நிகழ்ந்தது.

ஆனால் அந்தக் கடைசிக் கேள்விக்குப் பதிலளிப்பதற்கு எந்த மனிதரும் இப்போது இருக்கவில்லை. பரவாயில்லை. செயல் விளக்கத்தின் மூலம் பதிலளித்துத் தன்னைத்தானே அது பார்த்துக் கொள்ளும்.

காலமில்லா இடைவெளிக்காக ஏசி இதை எப்படிச் சிறப்பாகச் செய்வது என்பது பற்றிச் சிந்தித்தது. கவனமாக, ஏசி நிகழ்ச்சி நிரலை ஒழுங்கு செய்தது.

ஏசியின் பிரக்ஞை முன்பு அண்டமாகவிருந்த எல்லாவற்றையும் உள்ளடக்கி, இப்போது பெருங் குழப்பம் என்று சொல்லப்படுவதைப் பற்றிக் கவலைப்பட்டது. படிப்படியாக அதைச் செய்ய வேண்டும்.

அப்போது ஏசி சொன்னது, 'ஒளி பெருகட்டும்!'

அங்கே ஒளி பெருகியது.



mahalingam.k@thaiveedu.com


உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com




# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You


33 Years Canadian Experience
AUGUSTINE & ASSOCIATES
INCOME TAX
OUR SERVICES
Personal, Business and Corporate Tax Services
GST, HST & QST
Accounting & Bookkeeping
Payroll
T4, T4A, T5, Rental Releve 31 (QC)
Business Registration
E-filing
Ontario, Quebec & Other Provinces
EFILE
Canada
CONTACT US TODAY
416-617-6735 or 514-279-7138
wimalendran.augustine@gmail.com
Helping you find your dream home, one key at a time.
JW PROPERTY REALTORS
REAL ESTATE
Residential, Commercial, Investment, and New Development Properties.
Jesmine Wimal
647-871-1921
Wimal Augustine
416-617-6735
www.propertyrealtors.ca
HOMELIFE / FUTURE REALTY INC., BROKERAGE
Independantly Owned And Operated
Office: 905-201-9977

HOMELIFE
HIGHER STANDARDS
Buy or Sell
Your Home
call me 24-7
Cell: 416 856 6900
Kathir
Subramaniam
Kathirgamanathan P.Eng.
Sales Representative
www.kathirsubramaniam.com
HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090
kathirhomes@gmail.com

With best compliments from
ஞானம்ஸ் ஸ்ருடியோஸ்
GNANAMS STUDIOS
Since 1987
Digital Prints from 16"x20" to 40"x60"
Family Portraits
Children Portraits
Business Portraits
Passport & Citizenship Photos
Classic Weddings
Arangetram
Puberty Ceremony
New Location
Bus: 416.750.8118
www.gnanamsstudios.com
2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2
( BRIMLEY & EGLINTON
ERA PLAZA NEAR CIBC BANK)
Digitally Redefined

BAYVIEW HOMES
DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml


STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
Unfiled Tax Returns - Last ten years (2011 - 2023)
Appeals, Audits and Adjustments
GST/HST Owner-Built & Rental Rebates
Negotiate Collection, Garnishment and Payment Plan
Voluntary Disclosure Program (VDP)
Estate, Trust & Non-Residents
US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE
INTEGRITY
PROFESSIONALISM
VANCOUVER
604 398 7272
TORONTO
647 219 3110
CALGARY
403 879 7272

- முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
- கபாளத்தின் பொடுகைப் நீக்குகின்றது.
- Ervamatin முடியை செழிப்பாக வைத்திருக்க உதவுகிறது
Ervamatin Hair Lotion
Amazon HEALTHCARE.COM
416-264-8787
www.4162648787.com
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8

உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
Providing Peaceful, Final Arrangements
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1
Call :
Vilosan Sivatharman B.Eng
Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474

# கடன் தொல்லையா?



பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor


CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com




BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000


BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS
REAL 4 ESTATE
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ SIVARAJAH 416.843.3333
KUMAR SIVARAJAH 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK



MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
TD Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



வீடு வாங்க விற்க...
18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்
ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
☒ தரமான வீடு தவறிப்போகாது
☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
☒ பெருவருவாய் தரும் முதலீடு
விற்கப் போகிறீர்களா?
☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
SOLD
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
Chairman's Club Award Winner 2015
Chairman's Club Award Winner 2017
Platinum Club Winner 2022
Chairman's Club Award Winner 2016
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8


முற்றிலும் இலவசமான சேவை!
Gas Furnace
CO
AATEK
HEATING & COOLING
$2100 Rebate Available Now
call us 416-414-2280
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
Licensed Technician
ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com
We Are Specialists in
customs homes Ductwork System
We Are Professional trouble shooters for all major gas appliances
416.414.2280


Buy, Sell
Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Gnani - Judy
Real Estate
Judy
Gnanendran
Gnanendran
Realtor
416.629.9797
(905) 209 8080
Narasinghan
Realtor
416.937.8090


ERVAMATIN
SABONA



Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
Kumar (905) 673-9863
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
Mahesan
Subramaniam
BROKER
Free Home Evaluation with No Obligation
416-816-0141


Daniels
FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions Realty Inc. Brokerage
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough


Finding Homes to
Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX
COMMUNITY
REALTY INC., Brokerage



NO MEDICAL
UP TO $500,000
50 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


வீடு | வணிகம்
Residential | Commercial
BUY ★ SELL ★ LEASE
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
List your property with me...
FREE!
Home Evaluation
Home Staging
Professional Photography
Social Media Marketing
Just Listed & Feature Sheet



நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
21
CENTURY 21
Percy Fulton Ltd.
Ravi Kana


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753
Email: advisorpat10@gmail.com



Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


RAMAN HOME COMFORT INC
HEATING
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989


15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544


AEREN Thiyagarajah
Realtor
647-888 3500
DILEEP Thangavel
Realtor
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8



நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
Swapna Chan, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.


ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749 www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC.,BROKERAGE* OFFICE: 905-305-1600


வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd.,
Brokerage*
Bus: 416-298-3200
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545


RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225


Ahilan Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
Office: 905.471.0002


UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ignite
PYRAMID GROUP


Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
RE/MAX ACE


Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120


Sri Vallipuranathar
CSC Credit Solution Centre
416.439.0224
416.450.5011



Suba Aynkharan
416-722-4444
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage



Azon
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8


Uthayan Alex Sivasambu
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
COLDWELL BANKER


Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario, M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
RE/MAX ACE
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com


BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.,
Brokerage* 31 Progress Ave, Suite 210, Toronto ON,M1P 4S6


NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
INFORCE LIFE Financial Services Inc.
416-909-0400
416-321-6000 x400
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN RASALINGAM CHS
President & CEO


Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave. E., Suite: 203
Toronto, Ontario
Cell: 416 505 8532


DR. YALINI ARAVINTHAN DDS. DDS.
DENTIST
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524


RE/MAX
077 566 0000
LATHAN VARATHARAJAH
Broker Owner